# அரசு கட்டில்

## கௌரிராஜன்

(கௌரிராஜன் அவர்களின் ‘அரசு கட்டில்’ என்ற இந்த அரிய வரலாற்றுப் புதினத்தை அரும்பாடுபட்டு தேடிக் கண்டுபிடித்து, தட்டச்சு செய்து எமக்கு அளித்து வெளியிடச் செய்த திரு.கி.சுந்தர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். - கோ.சந்திரசேகரன்)

## என்னுரை

பிற்காலச் சோழர் வரலாற்றில், ஒரு திருப்புமுனையாயமைந்தது, குலோத்துங்கன் என்ற பட்டப் பெயருடன் வேங்கி இளவரசனாயிருந்த இராசேந்திரன் அரசுகட்டில் ஏறியது! இந்த அரசகுமாரன் தந்தை வழியில் கீழைச் சாளுக்கிய மரபைச் சேர்ந்தவன்; தாய் வழியில் கங்கைகொண்ட சோழன் மகளான அம்மங்கை தேவியின் வயிற்றில் பிறந்தவன். இளமையில் இவன் சோழநாட்டிலேயே வளர்ந்து, தமிழையே தாய்மொழியாகப் பயின்று, தமிழ் மக்களின் வழக்க ஒழுக்கங்களை மேற்கொண்டமையால், இவன் தன்னைச் சோழ அரசகுமாரனாகவே கருதிவிட்டான். அது இவன் உள்ளத்தில் பலமாய் வேரூன்றியும்விட்டது.

இவன் மாமன் வீரராசேந்திரன் இறந்த பிறகு அவரின் மகனான அதிராசேந்திரன், பரகேசரி என்ற பட்டப்பெயருடன் சோழ அரியணையேறினான். அவனுக்குப் புத்திரப்பேறு இல்லாததால், திடீரென நாட்டில் ஏற்பட்ட கலகத்தில் கொல்லப்பட்டான். அதன் பின் சோழப் பேரரசுக்கு அரசகுமாரர்கள் இல்லாததால், தாய் வழியிற் சோழ மரபைச் சேர்ந்தவனான இவன் இராசகேசரி என்ற பட்டத்துடன், குலோத்துங்கன் என்ற சிறப்புப் பெயரோடு சோழ அரசுகட்டிலில் அமர்ந்தான். மேற்கூறிய நிகழ்ச்சிகளையே இந்நாவல் கூறுகின்றது.

பிற்காலச் சோழ வரலாற்றுக்குத் திருப்புமுனையாய் அமையக் காரணமாயிருந்தது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். அது அதிராசேந்திரன் ஆட்சி காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகமே! இந்தக் கலகம் தோன்றுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது சோழர் படையில் வலங்கை இடங்கை என்ற பிரிவு ஏற்பட்டமையே! வலங்கை என்பது சோழர் படையின் நிலையான படைப்பிரிவு. இடங்கை என்பது வணிகர்களின் படைப் பிரிவு - இதில் வணிகம் செய்வோர், தச்சர்,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கருமார் போன்ற தொழிலாளர்கள் இருந்தனர். (தென்னிந்திய கோயிற் சாசனங்கள், இரண்டாம் வால்யூம், முன்னுரை, பக்கம் 9).

இந்த இரு வகுப்பாரும் ஒற்றுமையாயிருந்தனர். காலப் போக்கில் அவர்களிடையே கருத்து வேற்றுமை தோன்றி அதுவே விரோதமாய் மாறிவிட்டது. இந்த இருவகைப் பிரிவினரைப் பற்றி நன்கு ஆராய்ந்ததில், இடங்கைப் பிரிவினர் கச்யப முனிவரின் யாகத்தை ஸம்ரஷிப்பதற்காக அக்னி குண்டத்தில் தோன்றியவர்களென்றும், அரிந்தம சக்கரவர்த்தியின் காலத்தில் சோழ நாட்டிற்கு அந்தர் வேதி பூமியிலிருந்து (கங்கை யமுனைப் பிரதேசம்) வந்தவர்களென்றும் தெரிகிறது. இவர்களுக்கு ஐந்து கிராமங்களில் நிலம் அளிக்கப்பட்டுள்ளது. ஐந்து கிராமம் திருச்சி மாவட்டத்தில் உள்ளது. (சாசன இலாகா 1913ஆம் ஆண்டு அறிக்கை பாரா 39).

வலங்கைப் பிரிவென்பது சோழ மாமன்னனான முதலாம் இராஜராஜனுடைய காலத்திலிருந்து தோன்றியது. வலங்கைப் பழம்படைகளிலார், பெருந்தனத்து வலங்கைப் பழம்படைகள், அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காரப் படைகள், இராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காரர் என்பன இவர்களின் பிரிவுகள்-அத்துடன் இவர்கள் அரச சேவைக்கு நிரந்தரமாகவும், எந்தச் சமயத்திலும் சேவைக்குத் தயாராகவும் இருந்தனர்.

இவர்களிடையே மூண்ட கலகத்தினால், சோழச் சக்கரவர்த்தி கொல்லப்பட்டார் என்று மேலைச்சாளுக்கிய வேந்தன் ஆறாம் விக்கிரமாதித்தனின் வரலாற்றை (விக்கிரமாங்க தேவ சரிதம் என்னும் பெயரில்) எழுதிய வடமொழிப் புலவரான பில்ஹணர் கூறுகின்றார். இந்தக் கருத்தை மறுத்துக் கூறுகிறார் பிற்காலச் சோழர் வரலாறு எழுதிய திரு. சதாசிவப் பண்டாரத்தார். நான் பில்ஹணர் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்நாவலை இயற்றியிருக்கின்றேன்.

அதிராசேந்திரன் இறந்த பிறகு, பூசநாளிற் பிறந்தவனான வேங்கி இளவரசனாயிருந்த இராசேந்திரன், குலோத்துங்கன் என்ற சிறப்புப் பெயரோடு அரசு கட்டிலில் ஏறினான் என்ற உண்மையையே, இந்நாவலின் மையக்கருத்தாய் அமைத்திருக்கின்றேன்.

உண்மைப் பாத்திரங்களுடன், கற்பனைப் பாத்திரங்களையும் உலவவிட்டு என்னுடைய பணியைச் சிறப்பாகவே செய்திருக்கின்றேன்.

பாத்திரங்களை அந்தந்தச் சூழ்நிலையில் விட்டுவிட்டுக் கதையை முடிக்கும் உத்தியை நான் இதில் கையாண்டு இருக்கின்றேன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இந்நாவல் உருவாக எனக்குப் பல சரித்திர சான்றுகள் கிடைக்க, கீழே குறிப்பிட்ட நூல்கள் பேருதவியாயிருந்தன.

1. பிற்காலச் சோழர் வரலாறு - தி.வை. சதாசிவ பண்டாரத்தார்.
2. பாண்டியர் வரலாறு - தி.வை. சதாசிவ பண்டாரத்தார்.
3. மதுரைமூதூர் - பண்டித சு.வே. நடராசன் எம்.ஏ., பி.ஓ.எல்.,
4. கொங்கு நாட்டு வரலாறு - மயிலை சீனி வேங்கிடசாமி
5. கலிங்கத்துப்பரணி
6. வரலாற்றுப்போக்கில் பழையறை மாநகர் - வே. மகாதேவன் வி.கி.
7. விக்கிரம சோழனுலா
8. தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள் - வித்துவான் வ. தங்கைய நாடார்
9. Gangaikonda Cholapuram - R.Nagaswamy
10. Medieval paNdiyas (AD 1000-1200) -N. Sethuraman

இந்நூல்களை உருவக்கிய ஆசிரியர்களின் பணி மிகச் சிறப்பு வாய்ந்தது. அத்தகையவர்களுக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

இதை வெளியிட முன்வந்த முருகன் பதிப்பகத்தினருக்கும் அச்சிட்ட ஸாதனா ஆர்ட் பிரிண்டர்ஸ்க்கும், மற்றும் புத்தகத்தை உருவாக்கிய அனைத்துத் தொழிலாளருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு,
கௌரிராஜன்

சென்னை
07.12.1984.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அரசு அதிகாரிகள்

- திருமந்திர ஓலை: அரசனின் வாய்மொழி உத்தரவுகளை ஓலையில் எழுதும் அதிகாரி.
- திருமந்திர ஓலைநாயகம்: எழுதப்பட்ட உத்தரவைப் படித்துப் பார்த்து மேற்பார்வை செய்து அதில் கையப்பம் இடும் அதிகாரி. இன்னின்ன காலத்தில் இன்னின்ன கருமங்கள் நிகழ்த்தல் வேண்டும் என்ற நிகழ்ச்சிக் குறிப்பினை அரசருக்கு நினைவூட்டி அவற்றைத் தவறாமல் நிறைவேற்றி வைப்பவன் இவனே!
- விடையில் அதிகாரி: அரசனுடைய திருமுகங்களை உரியவர்களுக்குப் பணிமக்கள் மூலம் சேர்ப்பித்தலும், விடையளித்தலும் ஆகிய கடமைகளைச் செய்பவன்.
- நாடு காவல் அதிகாரி: உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் அதிகாரி.

## சில முக்கியக் குறிப்புகள்

- சோழர் ஆட்சியில் அமைச்சர் குழுவும், முதன்மந்திரியும் இருந்து சக்கரவர்த்திக்கு ஆலோசனை கூறி வந்துள்ளார்கள்.
- கி.பி.1603-1070-ல் வரை ஆட்சி புரிந்த வீரராசேந்திர சோழன், திருவரங்கத்திற்குக் கிழக்கே பத்துமைல் தூரத்தில் உள்ள கோயிலடிக்கு அருகில் காவிரியாற்றில் கல்லணை அமைத்துள்ளான்.
- அதிகாரிகளுக்குத் திங்கள்தோறும் ஊதியம் கொடுக்கப்படவில்லை. அவர்களின் சேவைக்காகச் சீவிதமாக (வாழ் நாள் வரை) நிலங்கள் வழங்கப் பெற்றன.
- வீரசோழியம் என்ற இலக்கண நூல் வீரராசேந்திர சோழன் காலத்தில் இயற்றப்பட்டது.
- சோழ மன்னர்கள் தம் மூத்த புதல்வருக்கே அரசுரிமை வழங்கியுள்ளனர். அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே அரசுப் பேற்றுக்குரிய முதல் மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி அரசியல் முறைகளில் பயிற்சியும் தந்து வந்தனர்.

## இந்நாவல் நடைபெறும் காலத்திற்கு முன்பிருந்த சோழப் பேரரசின் நிலை

தமிழகத்தின் கீழ்ப்பகுதியாகிய சோழ மண்டலத்தை தொன்று தொட்டு ஆட்சி புரிந்து வந்த மரபினரே சோழர் எனப்பட்டனர். மகத நாட்டில் செங்கோல் செலுத்திய அசோகரின் கல்வெட்டுக்களில் இவர்களைப் பற்றிய செய்திகள் உள்ளன.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மதுரை மாநகரிலிருந்த கடைச்சங்கத்திற்குப் பிறகு (கி.பி இரண்டாம் நூற்றாண்டின் இறுதி) ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் தஞ்சை மாநகரைக் கைப்பற்றியாண்ட விசயாலய சோழன் வரை, இவர்களைப் பற்றிய தெளிவான வரலாறு இல்லை. கி.பி. நான்கு, ஐந்து நூற்றாண்டுகளில் தமிழகம் முழுவதும் களப்பிரர் என்ற வகுப்பாரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. சோழருக்குரிய பகுதியைக் களப்பிரர்களிடமிருந்து கைப்பற்றிய பல்லவர்களின் கீழ் குறுநில மன்னர்களாய் சோழர்கள் இருந்தனர். கி.பி.846-ல், பழையாறையிலிருந்த விசயாலய சோழன், பல்லவருக்கு அடங்கி தஞ்சையை ஆண்டு வந்த முத்தரையரிடமிருந்து அதைக் கைப்பற்றிச் சோழச் பேரரசுக்கு அடிகோலினான். அவன் மகனான முதல் ஆதித்த சோழன் கி.பி.891-ல் அபராஜிதவர்மனை வென்று தொண்டை மண்டலம் முழுமையும் சோழ அரசுக்கு உட்படுத்தினான். அத்துடன் நில்லாது, கொங்கு மண்டலத்தின் மீது படையெடுத்துச் சென்று அதனையும் வென்று, அங்கிருந்து கிடைத்த பொன்னால், திருச்சிற்றம்பல முகட்டை வேய்ந்தான் என தெரிகிறது. காவிரியின் இருமருங்கிலும் பல சிவாலயங்களைக் கற்றளியாக எடுத்தவனும் இம்மன்னனேயாவன்!

அவனுக்குப் பிறகு அவன் மகனாகிய முதற்பராந்தக சோழன், கி.பி.919-ல் பாண்டிய நாட்டை ஆண்ட இராசசிம்மனை வென்று, மதுரை நகரைக் கைப்பற்றினான். தோல்வியடைந்த பாண்டியன் முன்னோர்களிடமிருந்து தனக்குக் கிடைத்த சுந்தர முடியையும், பிற அரசச் சின்னங்களையும் எடுத்துக் கொண்டு ஈழம் சென்றுவிட்டான். முதற் பராந்தகன் மதுரையில் முடிசூட்டுவிழா நடத்துவதற்கு முயன்ற போது பாண்டியருக்குரிய முடியும், பிற அரசச் சின்னங்களும் இல்லாததைக் கண்டு, ஈழத்திலிருந்த அப்பொருட்களைத் தரும்படி, ஈழ வேந்தனுக்குத் தூது அனுப்பினான். அதற்குள் பாண்டியன் தன் தாய் வானவன் மாதேவி பிறந்த சேரநாட்டிற்கு வந்துவிட்டான். அச்சமயம் இலங்கையை ஆண்டு வந்த நான்காம் உதயன் என்பவன் தூதர்களிடம் அச்சின்னங்களைத் தர மறுத்துவிட்டான். அதனால் கோபமுற்ற பராந்தகன் ஈழத்தைத் தாக்கி, பாண்டியனுடைய முடியையும், பிற அரசச் சின்னங்களையும் கொண்டு வருவதற்குப் பெரும்படையை அனுப்பினான். போரில் சோழர் படை வெற்றி பெற்றாலும், முடியைக் கைப்பற்ற முடியாமல் வெறுங்கையோடு தமிழகம் திரும்பிவிட்டது.

கி.பி.949 ஆம் ஆண்டில் இராஷ்டிரகூட மன்னனாகிய மூன்றாம் கிருஷ்ண தேவன், கங்க மன்னனாகிய இரண்டாம் பூதுகனோடு சேர்ந்து கொண்டு, சோழரை அரக்கோணத்திற்குத் தென்கிழக்கே ஆறு கல் தொலைவிலுள்ள தக்கோலம்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என்னுமிடத்தில் எதிர்த்தான். இரு தரப்புப் படைகளும் ஆக்ரோஷத்துடன் போரிட்டன. இறுதியில் பூதுகன் விடுத்த அம்பினால், யானை மேலிருந்து போர் புரிந்தபடியிருந்த பராந்தகன் மகனாகிய இராசாதித்தன் உயிர் துறத்தான். அந்நிகழ்ச்சியால் நிலைகுலைந்த சோழர் படை நான்கு பக்கமும் சிதறி ஓட, அதைப் பயன்படுத்தி மூன்றாம் கிருஷ்ணன் வெற்றியடைந்தான். இது சோழர்களுக்குக் கிடைத்த வீழ்ச்சி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பராந்தகனின் இரண்டாம் புதல்வனாகிய கண்டராதித்த சோழன் சோழ அரசின் பொறுப்பை ஏற்ற போது, தொண்டை நாடும், திருமுனைப்பாடி நாடும் இராஷ்டிரகூட மன்னன் வசமிருந்தது. இதுவரை சோழர்க்கு அடங்கியிருந்த பாண்டியனும் சுயேச்சை எய்தி, பாண்டிய நாட்டை ஆளத் தொடங்கினான். சிவபக்தியும், தமிழ்ப் புலமையும் எய்திய இவன், இறைவன் மீது பல பதிகங்கள் பாடியிருக்கின்றான். அவை அழிந்து, ‘கோயிற் பதிகம்’ ஒன்றே இந்நாளில் நமக்குக் கிடைக்கின்றது.

இவ்வேந்தனுக்குப் பின், இவனின் தம்பியாகிய அரிஞ்சயன் முடிசூட்டப்பெற்றான். பட்டம் ஏற்றவுடனேயே இராஷ்டிரகூட மன்னன் வசமிருக்கும் தொண்டை நாட்டையும், திருமுனைப்பாடி நாட்டையும் மீட்க முயன்றான். அம்முயற்சி வெற்றி பெறாமல், போரில் இவன் இறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அரிஞ்சயனுக்குப் பின், அவன் மகனான இரண்டாம் பராந்தகன் அரியணையேறினான். பேரழகுடன் இருந்தமையால், சுந்தரசோழன் என்ற மற்றொரு பெயரும் இவனுக்கு உண்டு. இவ்வேந்தன் காலத்தில்தான் மதுரை நாடும், சோழ நாட்டின் வடபகுதியாயிருந்த தொண்டை நாடும், திருமுனைப்பாடி நாடும் சோழ ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. இம்மன்னனது ஆட்சியின் இறுதிக் காலத்தில், இவன் முதல் மகனான ஆதித்த கரிகாலனை இராசத் துரோகிகள் கொலை செய்துவிட்டனர். அக்கொடுஞ் செயலினால் மனமுடைந்த இவ்வேந்தன் கொலை நடந்த இரண்டொரு திங்களில் இறக்கும்படியாகிவிட்டது.

முதல் கண்டராதித்த சோழனுடைய புதல்வனான உத்தம சோழனுடைய புதல்வனான உத்தம சோழன் சிறு குழந்தையாயிருந்ததால், அவன் தம்பி அரிஞ்சயனும் அவனுக்குப் பின் அவன் மகனான சுந்தரசோழனும் ஆட்சி புரிந்து வந்தனர். மக்கள் சுந்தரசோழன் மகனான இராசராச சோழன் ஆட்சி பீடம் ஏற வேண்டுமென்று விரும்பினர். ஆனால் இராசராசன் தன் பெரிய பாட்டன் புதல்வனும், தனக்குச் சிறிய



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தந்தையும் ஆகிய உத்தம சோழனது விருப்பத்தை மதித்து, ஆட்சியுரிமையை விட்டுக் கொடுத்துவிட்டான்.

உத்தம சோழனுக்குக்குப் பிறகு, இராசராசனே சோழ பேரரசின் சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பெற்றான். ஆதித்தனைக் கொலை செய்துவிட்ட துரோகிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தக்க தண்டனையும் தந்தான். தம் ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்றுண்மைகளை, இனிய தமிழ்மொழியில் அகவற்பாவில் அமைத்த பெருவேந்தன் இவனேயாவன். திக்விசயம் செய்து பல நாடுகளை வென்று சோழநாட்டுடன் சேர்த்துக் கொண்டான். இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் சோழ நாடு பெருகி நின்றது. ஈழநாட்டையும் வென்று அதைத் தன் ஆட்சிக்கு உட்படுத்தினான். சோழ அரசு முழுமையும் அளந்தது, இவன் ஆட்சியில் நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். அக்காரணம் பற்றியே இவனுக்கு 'உலகளந்தான்' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. அத்துடன் சோழ அரசிலுள்ள ஒவ்வொரு மண்டலத்தையும் பல வளநாடுகளாகப் பிரித்து, எங்கும் ஆட்சி அமைதியாய் நடக்கும்படி செய்தான்.

இராசராச சோழனுக்குப் பிறகு, இராசேந்திர சோழன் சோழச் சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பெற்றான். இவ்வேந்தன் கங்கைகொண்ட சோழபுரம் என்னும் புதிய நகரை உருவாக்கி, அதில் தஞ்சைப் பெரிய கோவிலைப் போன்று ஒரு கோவிலைக் கட்டினான். வடபுலத்தில் வெற்றியும் கண்ட இவன் தோற்ற மன்னர்களின் தலைகளில் கங்கை நீரைக் கொண்டு வந்து நகரைத் தூய்மையாக்கினான்.

இம்மன்னர் பெருமானுக்குப் பிறகு முதல் இராசாதிராச சோழனும், அவனுக்குப் பின் அவன் தம்பியாகிய இரண்டாம் இராசேந்திர சோழனும் அதற்குப் பின் கங்கைகொண்ட சோழனுடைய புதல்வனாகிய வீரராசேந்திர சோழனும் சோழப் பேரரசை ஆண்டனர். இவர்கள் காலத்தில்தான் மேலைச் சாளுக்கியருக்கும், சோழருக்கும் தீராத பகையாயிருந்தது. அதை நீக்க வேண்டி, வீரராசேந்திர சோழன் தன் மகளான இராஜசுந்தரியை, மேலைச்சாளுக்கிய வேந்தனான விக்கிரமாதித்தனுக்கு மணம் செய்வித்தான். வீரராசேந்திர சோழன் மகனான அதிராசேந்திர சோழன் ஆட்சிபீடம் ஏறியதும், சோழநாட்டில் பெருங்கலகம் தோன்றியது. அதன் விளைவாய் அதிராசேந்திரன் கொல்லப்பட்டான். அவனுக்குச் சந்ததியில்லாததால், தந்தை வழியில் கீழைச் சாளுக்கிய மரபையும், தாய் வழியில் சோழர் மரபையும் சேர்ந்திருந்த இராசேந்திரன், குலோத்துங்கன் என்ற பட்டப் பெயரோடு சோழ அரியணை ஏறினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

# அரசு கட்டில்

## கௌரிராஜன்

## அத்தியாயம் - 1

**உ**லகெங்கும் தன் ஒளிக்கற்றைகளால் இருளைப் போக்கி, இவ்வுலக உயிர்கட்கு வாழ்வும், வளமும் தந்துதவும் சூரியன், கீழைக் கடலில் உதயமாகிக் கொண்டிருந்தான். கோடிக்கணக்கான மாணிக்கக் கற்களைக் கடலில் பரப்பினால் எப்படியிருக்குமோ, அப்படி கதிரவன் ஒளிபட்ட நீர்ப் பரப்பு முழுவதும் இரத்தச் சிவப்பாய்ச் சிவந்து ஜொலிக்கத் தொடங்கியது.

திடீரென்று இவ்விதம் கடல் சிவந்து போவதைக் காணப்பொறாத வாயுபகவான், எப்படியும் அதைப் பழைய நிலைமைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்துடன், தன் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி, கடலில் பெரிய, பெரிய அலைகளை உண்டுபண்ணி, இங்குமங்கும் அதைப் புரட்ட, மாணிக்கக் கற்கள் உருண்டு புரண்டு ஓடினால் எப்படி அழகாய்த் தோன்றுமோ, அப்படிப்பட்ட அழகுதான் அங்கு நிகழ்ந்ததேயன்றி, வாயுபகவான் நினைத்தது போல வேறெதுவும் நடக்காததால், முயற்சி தோற்றுவிட்ட ஆத்திரத்தில் கரை ஓரம் நங்கூரமிட்டிருந்த சோழநாட்டுப் போர்க் கப்பல்களை, ஒரு அசைப்பு அசைத்துவிட்டு வெகு தூரம் சென்றோடி மறைந்தான்.

அதைப் பார்த்த கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களில், இன்னும் அதிக வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கடலை மேலும் சிவப்பாக்கி, 'கடார வெற்றியீட்ட சோணாட்டு வீரர்கள் சிந்திய இரத்தச் சிவப்பின் பிரதிபலிப்பு இது! அதனால், இதை மாற்ற வாயுவே நீர் முயற்சி செய்ய வேண்டாம்' என்று, அந்தக் காலை நேரத்தில், மேல் நோக்கி எழுந்து, நாகைத் துறைமுக வாயிலில் கூடி இருந்த மக்கட் கூட்டத்தின் மீது தன் வெளிச்சத்தை நன்கு பரப்பினான்.

அதிகாலை வருவதற்கு முன்பே அங்கே குழுமியிருந்த மக்கள், வெளிச்சம் வந்த உற்சாகத்தில், நாகையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரம் நோக்கிச் செல்லும் பெருவழியில் வைத்த விழி வாங்காமல், யார் வரவையோ எதிர்ப்பார்த்து நின்று கொண்டிருந்தனர்.

பத்து முழத்திற்கு ஒருவர் வீதம், மக்களைப் பெருவழி ஓரமாகவே இருக்கும்படிப் பார்த்துக் கொண்டு, வேல் வீரர்கள் வேல்களுடன் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தனர்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மக்களின் வரிசை பிரிந்து போகாமல் இருக்க, இங்கும் அங்கும் புரவியைச் செலுத்தியவாறு, புரவி வீரர்களும் கூட்டத்தைக் கண்காணித்து வர, எல்லா பாதுகாப்பு ஏற்பாடுகளும் சரிவர நடைபெறுகின்றனவா என்று துறைமுக வாயிலையொட்டி அமைந்த பெரிய மேடையில் நின்றவாறு இடுப்பில் கைகளை ஊன்றியபடி ஓர் இளைஞன் இவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

நேரம் ஆக ஆக மக்கட் கூட்டம் அதிகமாகியது. கூட்ட நெரிசலைத் தாங்க மாட்டாமல் களைப்படைந்த முதியவர் ஒருவர் தம் பக்கத்தில் இருந்தவனிடம், "எப்போது அப்பனே, அரசர் வருவார்?" என்று கேட்டார்.

"உங்களைப் போலத்தான் நானும் நிற்கிறேன்! எனக்கு எப்படித் தெரியும்?" என்று பெரியவர் பக்கம் திரும்பினான் அவன்.

முகத்தில் குறுந்தாடியும், இரு கண்களில் ஒன்று ஊனப்பட்ட நிலையிலும், மூக்கில் பொன் வளையமும் அணிந்திருந்த அவன், பார்ப்பதற்குக் கொடூரமாக இருந்தான்.

அரச விவகாரங்களில் சம்பந்தப்பட்டவன் போல் முதியவருக்குத் தோன்றவே, 'ஒற்றனாக இருப்பானோ? அப்படியிருந்தால் நம் சோழ நாட்டு ஒற்றனா? அல்லது வேற்று நாட்டானா?' என்று குழப்பத்துடனே, "ஐயா தாங்கள் எந்த ஊர்? பெயர் யாதோ?" என்று அவனிடம் வினவினார்.

"என் பெயர் காளிங்கராயன். ஊர்..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, எக்காளம் முழங்க ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து, "வந்துவிட்டார்! வந்துவிட்டார்!" என்று குரல்கள் ஒலித்தன.

"யார் அரசரா?" என்று முதியவர் கூட்டத்தை விலக்கிப் பார்க்கலானார்.

"மகாராசாதிராசர், சகல புவனாசிரியர், ஸ்ரீமேதினி வல்லவர், பரமேசுவரர், பாண்டியர்களையும் சாளுக்கியர்களையும் புறங்கண்ட சோழ நாட்டுச் சக்கரவர்த்தியின் திருக்குமாரரான அதிராசேந்திரர்" என்று கட்டியங்காரன் சொன்னதும், தொடர்ந்து "வாழ்க! வாழ்க!" என்ற குரல்கள் வானைப் பிளந்தன.

வீதியோரங்களிலும், மாடமாளிகைகளின் முன்றில்களிலும், கூடகோபுரங்களின் முகப்புகளிலும், நின்று கொண்டிருந்த மக்கள் இளவரசர் அதிராசேந்திரர் மீது மலர்களைச் சொரிந்தனர். அதே சமயம் துந்துபி முழங்கியது. சங்கு எக்களாக் கருவிகள் ஒலித்தன.

கூட்டத்தைப் பார்த்துக் கையை அசைத்தபடி புரவியிலிருந்து இறங்கிய சோழ நாட்டு இளவரசனான அதிராசேந்திரன், நாகைத் துறைமுகத்தின் வாயிலில் நுழைந்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதுவரையில் மேடையில் நின்று கொண்டிருந்த திருவரங்கன் என்ற அந்த இளைஞன், விரைந்து அதிராசேந்திரன் அருகில் சென்று வணங்கி வரவேற்றான்.

“அதோ அமைச்சர்!” என்று மக்கட் கூட்டம் குதூகலத்துடன் சொல்ல, அமைச்சர் பிரம்மாதிராசர் தேரிலிருந்து இறங்கி அவர்களின் உற்சாக வரவேற்பை ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக புன்முறுவலுடன் தலைவணங்கி உள்ளே புகுந்தார்.

“அமைச்சர் முகத்தில் தெம்பேயில்லை.. கவனித்தீர்களா?” என்று முதியவரிடம் கேட்டான் காளிங்கராயன் என்ற பெயருடைய அந்த ஒற்றைக் கண்ணன்.

பெரியவர் அவனை மேலும் கீழும் பார்த்தார்.

“என்ன… எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறான் என்று பார்க்கிறீர்களா? அதோ பாருங்கள். பட்டத்தரசியும் இளைய ராணியும் வருகிறார்கள்!” என்றான்.

அவன் சொல்லி முடிப்பதற்கும், அன்ன முகப்புடைய அரச மகளிர் வரும் அலங்காரத் தேரில் இருந்து இரு அரச குல மகளிர்கள் இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

பட்டத்தரசி என்று சோழ நாட்டு மக்களால் அன்புடன் அழைக்கப்படும் சோழச் சக்கரவர்த்தியின் தேவியான உலகமுழுதுடையாளும், அதே பெயருடைய இளவரசர் அதிராசேந்திரனின் மனைவியும், புன்முறுவலுடன் மக்களை நோக்கி வணங்கிவிட்டுத் துறைமுகத்திற்குள் புகுந்தனர்.

ஆஹா! ஏறக்குறைய நாற்பது வயதை நெருங்கிவிட்டாலும் அந்தப் பட்டத்தரசியின் முகத்தில்தான் எத்தனை பொலிவு! திருமகளே இறங்கி வந்தாற் போன்றல்லவா சர்வ லஷ்ணங்களும் பொருந்தி தெய்வீக அம்சமாய்த் திகழ்கின்றார்கள்!

அவரைப் பின் தொடர்ந்து செல்லும் இளவரசர் அதிராசேந்திரனின் மனைவியாருக்கு மட்டும் என்ன குறைச்சல்? அவர்களும் ரதி அம்சமாய்த்தான் பரிமளிக்கின்றார்கள்!

இவ்விதம் மக்கட் கூட்டம் அரச தரிசனம் கிடைத்தது என்ற மகிழ்வுடன் பேசிக் கொண்டிருக்க, காளிங்கராயன் முதியவரிடம், “அரசர் ஏன் வரவில்லை என்று தெரியுமா?” என்றான்.

“எனக்கு எப்படி அப்பனே தெரியும்? அரச தரிசனம் வேண்டி பத்துக்கல் தொலைவிலிருந்து வந்திருக்கிறேன். அவர் இல்லாமல் போனாலும் அவரின் பட்டத்தரசியையும், இளவரசரையும் தரிசித்துவிட்டேன். அதுவே போதும்!” என்றார்.

காளிங்கராயனுக்கு அப்பதில் எரிச்சலைத்தான் கொடுத்தது. சரியான மௌடீகம் என்று மனத்திற்குள் நினைத்தபடி “அரசருக்கு உடல் நலமில்லை; அத்துடன் மனக்கவலை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வேறு! அதனால்தான் கடாரம் சென்று மாபெரும் வெற்றியீட்டி திரும்பியிருக்கும் வேங்கி நாட்டு இளவரசனும், கங்கை கொண்ட சோழரின் திருக்குமாரத்தியுமான அம்மங்கைதேவியின் மகனான இராசேந்திரனை வரவேற்க இங்கே வரவில்லை” என்றான்.

“கொஞ்ச நாள் வரை நன்றாகத்தானே அரசர் இருந்தார். கூடல் சங்கமத்துப் போரில் மேலைச் சாளுக்கிய மன்னனான ஆகவமல்லனையும் அவன் புதல்வர்களையும் வென்று கைப்பற்றிய நாடாகிய இரட்டபாடியில் உள்ள சேராம் என்னும் ஊரை மூன்று பிராமணர்களுக்கு உத்தராயண சங்கராந்தி நாளில் பிரம்மதேயமாக சிறிது நாட்களுக்கு முன்புதானே அளித்தார்!”

“அதெல்லாம் பழைய கதை. இப்போது...? அமைச்சர் பிரம்மாதிராசர் முகத்தைப் பார்த்தீர்களா? அசைக்க முடியாத மலை போல் மன உறுதி படைத்த அவர் முகத்தில் கவலைக் குறி தோன்றிவிட்டது!”

“அப்படியா செய்தி?” என்று இன்னொருவன் வந்து சேர்ந்தான் அப்போது.

‘இது யார் புதிதாக..?’ என்று காளிங்கராயன் அவனை முறைக்க, மழுங்க தலையை மொட்டையடித்து, நெற்றியில் திருநீறு விளங்க, கழுத்தில் உத்திராட்சமாலையும், இடையில் நான்கு முழத்துண்டுமாக “சிவசிவ” என்று சொல்லியபடி ஒரு சிவ பக்தனாக அவன் இருந்தான்.

காளிங்கராயன் ஐயத்துடனேயே அவனை ஏற இறங்கப் பார்க்க...

“என்ன அப்பனே அப்படிப் பார்க்கிறாய்? ஏதோ சொல்ல வந்தாய். அதைக் கேட்கவே தூரத்திலிருந்த நானும் அருகில் வந்தேன்!” என்றான் அம்மையப்பன் என்ற பெயருடைய அந்தச் சிவபக்தன்.

“ஒன்றுமில்லை.. நாங்கள் பொழுது போவதற்காக பேசிக் கொண்டிருக்கிறோம். ஈசர் ஒன்றே என்று சிந்தனையுடன் இருக்கும் தங்களுக்கு ஏன் எங்கள் பேச்சில் அக்கறை?” என்றான் காளிங்கராயன் கடுப்புடன்.

அம்மையப்பன் கலீரென்று நகைத்தான்.

“அவனின்றி ஓரணுவும் அசையாது. நீங்கள் பேசும் இந்தப் பேச்சிலும் ஈசன் இருக்கிறான்! இதைப் புரிந்து கொள் அப்பனே” என்றான்.

இவன் உண்மையான சிவபக்தன்தானா? அல்லது பொய்யனா? எதுவாக இருந்தாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று காளிங்கராயன் மனத்திற்குள் முடிவு பண்ணி, முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சிறிது நேரம் அமைதி நிலவியது. “கடாரம் சென்று திரும்பியிருக்கும் வீரர்கள் கப்பலைவிட்டு வர இன்னும் நேரமாகும். அது வரைக்கும் நாம் வெறும் வயிற்றோடு இருக்க முடியாது. ஏதாவது சாப்பிடலாம் வருகின்றீர்களா?” என்றான் காளிங்கராயன் பெரியவரிடம்.

“ஆமாம்! ஆமாம்! நீங்கள் சொல்வதும் சரிதான்” என்று பெரியவர் சுற்றுமுற்றும் பார்த்தார்.

தூரத்தில் இளநீர்க் குலைகள் குவிக்கப்பட்டிருந்தன. அதற்குப் பக்கத்தில் தென்னை ஓலையால் வேயப்பட்ட தண்ணீர்ப் பந்தல் ஒன்று இருந்தது.

“நான் கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள்..?” என்று காளிங்கராயனைக் கேட்டார் முதியவர்.

“தேன்குழல்.. அப்பம் இப்படி வாங்கித் தின்றுவிட்டு தண்ணீர்ப் பந்தலில், கொஞ்சம் மோர் வாங்கி வயிற்றை நிரப்பிக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன்” என்றான்.

“சரியான ஆளப்பா நீ! உன் வயதில் நான் என்ன மாதிரி சாப்பிட்டிருக்கிறேன் தெரியுமா? இது மாதிரி ஏதாவது நடக்கும் என்று தெரிந்துதான் ஓர் ஆள் கூட சாப்பிடும் அளவுக்கு சாப்பாடு வைக்கச் சொன்னேன் என் மருமகளிடம். வா! அந்தப் பக்கம் போய் சாப்பிடலாம்!” என்று முதியவர் தண்ணீர்ப் பந்தலை நோக்கி நடக்கலானார்.

காளிங்கராயன் தன் பக்கம் இருந்த அம்மையப்பனுக்காகத் திரும்பினான். இப்போது அவனைக் காணவில்லை.

நினைத்தது சரியாய்ப் போய்விட்டது. நிச்சயம் போலிச் சிவப்பழமாகத்தான் இருப்பான் என்று நினைத்துக் கொண்டு முதியவரைப் பின் தொடர்ந்தான்.

இருவரும் தண்ணீர்ப் பந்தலைக் கடந்து பெரிய ஆலமரத்தின் கீழ் அமர்ந்தனர்.

தாமரை இலையில் புளியோதரையை வைத்து “சாப்பிடு அப்பனே!” என்று காளிங்கராயனிடம் நீட்டினார் முதியவர். அச்சமயம் இவர்களை நோக்கி யாரோ நடந்து வரும் சப்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

முறுக்கிய மீசையும் வலது பக்க நெற்றியில் பெரிய வெட்டுக்காயத்துடனும், திண்ணிய உடலோடு ஒருவன் மிடுக்காக இவர்களை நெருங்கிக் கொண்டிருந்தான்.

“வாப்பா தென்னா! புளியோதரையில் கொஞ்சம் எடுத்துக் கொள்” என்று வந்தவனிடம் நீட்டினான் காளிங்கராயன்.

“நீ சாப்பிடப்பா! நான் தருகிறேன்!” என்று இன்னொரு இலையில் புளியோதரையை வைத்து அவனிடம் கொடுத்தார் முதியவர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“பரவாயில்லை இன்று நமக்கு யோகந்தான்” என்று வாங்கிக் கொண்ட தென்னன், காளிங்கராயன் பக்கம் திரும்பி “கடவுளைக் கூட பார்த்துவிடலாம் போலிருக்கு. உன்னைப் பார்ப்பது கடினமாக இருக்கிறதே” என்றான்.

“என்னப்பா இது அதிசயம்? உன்னைத் தேடித்தானே நானும் இங்கே அலைகிறேன்!” என்றான் காளிங்கராயன் பதிலுக்கு.

“நல்ல வேடிக்கைதான்! நீ வேலை செய்யும் நாகை ஜோதிடரிடம் கூடப் போய்க் கேட்டேன். அவர்தான் நீ அரசரைப் பார்க்க விரும்பி, இங்கே போய்விட்டதாகச் சொன்னார். இல்லையென்றால் இந்நேரம் நான் கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்திருப்பேன்” என்றான் தென்னன்.

அப்பொழுது...

அந்தப் பகுதியையே கதிகலங்க வைப்பது போல எக்காள ஒலி முழங்கியது.

சாப்பிட்டுக் கொண்டிருந்த மூவரும் நிமிர்ந்தனர்.

“கடாரம் சென்ற வீரர்கள் கப்பலிலிருந்து இறங்கிவிட்டார்கள் போலிருக்கிறது” என்றான் தென்னன்.

“நான் பார்க்க வேண்டுமே!” என்று பெரியவர் பரபரப்புடன் சோற்றுக் கவளத்தை விழுங்கலானார்.

“கடார வெற்றி ஈட்டி வந்திருக்கும் இராசேந்திரனை வரவேற்கும் சாக்கில், சோதிடரைப் பார்ப்பதற்காகத்தான் பட்டத்தரசியும் வந்திருக்கின்றார்” என்று மெதுவாய்க் காளிங்கராயனுக்கு மட்டும் கேட்கும் குரலில் சொன்னான் தென்னன்.

“என்ன விஷயமோ?”

“பிறகு சொல்கிறேன்” என்றான்.

பெரியவர் சோற்றை மூடிவிட்டு எழுந்துவிட்டார்.

“என்ன பெரியவரே, ஏன் எழுந்துவிட்டீர்?”

“இதையெல்லாம் பார்க்கத்தானே பத்துகல் தூரத்திலிருந்து வந்திருக்கின்றேன்!”

“அப்படி என்றால் நீங்கள் போங்கள். நாங்கள் சாப்பாட்டை முடித்துவிட்டு வருகின்றோம்” என்றான் காளிங்கராயன்.

பெரியவர் கைகளைச் சுத்தம் செய்து கொண்டு, கூட்டத்தை நோக்கி நடக்கலானார்.

அவர் போவதையே கவனித்த தென்னன், “அரண்மனையிலிருந்து செய்திகள் கொண்டு வந்திருக்கிறேன்” என்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

காளிங்கராயன் சுற்றும் முற்றும் பார்த்தான்...

கூப்பிடு தூரத்தில் சிறிய மண்டபம் ஒன்று தென்பட்டது.

'அதுதான் சரியான இடம்!' என்று இருவரும் மண்டபத்தை நோக்கி நடக்கலானார்கள்.

இதுவரை தண்ணீர்ப் பந்தலின் அருகில் மறைவாக நின்று இவர்களைக் கவனித்து வந்த அம்மையப்பன், வேறு வழியாக மண்டபத்திற்குள் சென்று ஒளிந்து கொண்டான்.

## அத்தியாயம் - 2

**சோ**ழ வீரர்கள் ஏறக்குறைய ஒன்பது திங்களுக்கு மேல் தங்கள் தாய்நாட்டைவிட்டுப் புறப்பட்டவர்களானதால், கரைக்குத் திரும்புகின்றோம் என்கிற உற்சாகத்துடன் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக் கொண்டு கலங்களின் அருகிலிருக்கும் நாவாய்களில் இறங்கிக் கொண்டிருந்தனர்.

படைக்குத் துணைத்தலைமையாகச் சென்றவரும், சோழ சாம்ராஜ்ய சேனைக்கு உபதளபதியும் ஆன வீரராசேந்திர தன்மபாலன் கைகளைக் கட்டியபடி இவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

சுமார் நூறு படகுகள், கப்பல்களிலிருந்த வீரர்களைத் துறைமுகக் கரையில் சேர்க்கும் பணியில் மும்முரமாய் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

வீரர்களைத் துறைமுகக் கரையில் சேர்க்கும் படகை ஓட்டுபவர்கள் மூலம் தன்னையும், இராசேந்திரனையும் வரவேற்க அரசர் வரவில்லை என்ற செய்தியை அறிந்து கொண்டதன் விளைவாக வெற்றிப் பெருமிதத்தில் திளைக்க வேண்டிய சோணாட்டுத் துணைத்தளபதியின் முகம் தற்போது வாடிப் போயிருந்தது.

"நீங்கள் வெற்றி ஈட்டி வாருங்கள்! நானே நாகைக் துறைமுகம் வந்து வரவேற்கின்றேன் என்றல்லவா வழியனுப்பும் போது சொன்னார் மன்னர்! இப்போது வரவில்லை என்றால்? அதற்கு என்ன காரணமாக இருக்கும்?" என்று யோசித்த சோணாட்டு உபதளபதி எல்லாப் படைவீரர்களும் இறங்கிவிட்டார்களா என்று கப்பலின் கீழ்தளத்தைப் பார்த்தார்.

இறங்க வேண்டியவர்கள் இன்னும் நூற்றுக்கணக்கில்தான் இருக்கின்றார்கள் என்று தெரிந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

புறப்பட ஆயத்தம் செய்ய வேண்டுமென்று வேங்கி இளவரசர் இராசேந்திரர் எங்கே இருக்கின்றார் என்று அறிய சுற்றும் முற்றும் நோக்கினார்.

இன்னொரு முலையில் பாய்மரக் கயிற்றைப் பிடித்தபடி இராசேந்திரன் கடலைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆஹா! அந்த முகத்தில்தான் என்ன கம்பீரம்? என்ன அழகு..? சுந்தர புருஷன் என்றால் இவன் போன்ற இளைஞனுக்குத்தான் தகும் போலிருக்கிறதே!

சூரியப் பிரகாசம் போல் சுடர்விடும் அம்முகத்தில் சகல வீரலட்சணங்களும் பொருந்தித் தவழ, அந்த அரசகுமாரன் உண்மையிலேயே, பல ஆண்டுகள் தவமிருந்து பெற்ற பிள்ளையாகத்தான் இருக்க வேண்டும்!

கலத்தின் கயிற்றைப் பிடித்தபடி ஆர்ப்பரிக்கும் கடலை அவன் பார்க்கும் விதமே தனி அழகாயிருக்கின்றதே!

அவன் ஒரு வேங்கி நாட்டு இளவரசன்; எப்படிச் சோழ நாட்டிற்கே வந்து சோழ அரசகுமாரர்களில் ஒருவன் போல சோழப் படைக்குத் தலைமை தாங்கி கடாரத்துக்குச் செல்ல முடிந்தது?

நினைக்கும் போது அவனுக்கே வியப்பாகத்தான் இருக்கிறது.

வேங்கி அரசரான இராசராச நரேந்திரன் மகனாய் கங்கைகொண்ட சோழபுரத்திலேயே இவன் பிறந்தான்.

தாய்ப்பாட்டனான கங்கைகொண்ட சோழனைப் போல் (இப்போதைய அரசரின் தந்தை) தோற்றத்தில் இருந்ததால் இவ்விளைஞனுக்கு அவர் பெயரையே சூட்டிவிட்டார்கள். அது முதல் சோழ மாளிகையிலேயே இவன் வளர்ந்து வந்திருக்கிறான். போர்ப் பயிற்சி, அரசருக்குரிய கல்வி எல்லாம் இங்கேயே கற்றுத் தரப்பட்டுவிட்டது.

இவனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கும் போது இராசராச நரேந்திரன் வேங்கி நாட்டின் இளவரசனுக்கு, 'விஷ்ணுவர்த்தனன்' என்ற அபிடேகப் பெயருடன், முடிசூட்டி வைத்தார். ஆனால் முடிசூட்டிய சில ஆண்டுகள் கழித்து அவர் இறந்துவிட, உடனே அவனின் சிறிய தந்தையான 'விசயாதித்தன்' வேங்கி அரசனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு ஆட்சி பீடத்தையும் கைப்பற்றிக் கொண்டான்.

இப்போது கூட அந்த நிகழ்ச்சி அவனுக்கு நினைவு வருகிறது.

நியாயப்படி இவனுக்குச் சேர வேண்டிய அவ்வுரிமையை பிள்ளைப் பருவத்தைக் கங்கைகொண்ட சோழபுரத்திலேயே கழித்துவிட்டதால் மிக எளிதாகச் சிறிய தந்தை, அரசு அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு கைப்பற்றிவிட்டார்.


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதனால் என்ன ஆகுமோ என்று பதறிய அம்மங்கை தேவி, இவனை அழைத்துக் கொண்டு கங்கைகொண்ட சோழபுரம் வர, அப்போதிருந்த அவன் மாமன் இரண்டாம் ராசேந்திரன் (இப்போது ஆட்சி புரியும் சோழ அரசருக்கு மூத்தவர்) மேலைச்சாளுக்கியருடன் போர் நிகழ்த்திக் கொண்டிருந்தமையால் இந்த விஷயத்தில் கவனம் செலுத்த முடியாமல் இருந்துவிட்டார்.

அவனுக்கு உரிமையுள்ள கீழைச்சாளுக்கிய நாடான வேங்கி நாட்டில் இராசேந்திரனுக்கு ஆதரவாய் இப்போது ஏதாவது மாற்றம் செய்யும்படிப் படைகளை அனுப்பினால் அதன் காரணமாக மேலைச்சாளுக்கியரின் மீது படை எடுத்திருக்கும் தன் படையெடுப்பு பாதிக்கும் என்று கூறி அமைதியாயிருக்கும்படி அம்மங்கைதேவியிடம் சொல்லிவிட்டார். சொன்னதோடு நிற்காது "இராசேந்திரன் ஒன்றும் நாடு இல்லாத நாடோடி அல்ல! நான் இருக்கும் வரையில் இதைப் பற்றிக் கவலை வேண்டாம்" என்று ஆறுதலும் கூறினார்.

போரில் அவர் இறந்துவிட, தற்போதைய சக்கரவர்த்தி தொடர்ந்து மேலைச்சாளுக்கியரின் மீது படையெடுப்பு நடத்த வேண்டியது அவசியமாகப் போயிற்று.

அச்சமயம் மேலைச்சாளுக்கிய மன்னனான ஆகவமல்லன், கீழைச்சாளுக்கியருக்கும் சோழருக்கும் மணஉறவு இருப்பதால்தான், சோழரை வெல்ல முடியவில்லை என்பதை உணர்ந்து, கீழைச்சாளுக்கிய நாட்டில் ஆட்சி செய்து வந்த இராசேந்திரனின் சிறிய தந்தையான விசயாதித்தனை வென்று ஒரே சாளுக்கிய நாடாக ஆக்கினால், சோழரை அடக்கிவிடலாம் என்ற நப்பாசையுடன் அதன் மீது படை எடுத்தான்.

இதையறிந்த சோழ அரசரான வீரராசேந்திரர் உடனே படையெடுத்துச் சென்று ஆகவமல்லனின் எண்ணத்தை முறியடித்து இராசேந்திரனின் சிறிய தந்தையையே நாட்டை ஆளும்படிச் செய்துவிட்டார்.

அதற்குப் பிறகு அவரே ஆளட்டும்; அவரும் என் சிறிய தந்தைதானே? என்ற எண்ணத்திலேயே இவனும் நிரந்தரமாக இங்கேயே தங்கிவிட்டான்.

அப்படித் தங்கின இவனுக்குத்தான் கடாரப்படையெடுப்பைத் தலைமையேற்று நடத்தும் பொறுப்பை மன்னர் ஒப்படைத்தார்.

இவ்விதம் பழைய எண்ணங்களை எண்ணியவாறு இராசேந்திரன் கடலைப் பார்த்துக் கொண்டிருந்தான்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கடற்காற்று பலமாக வீசியது. சீறி எழுந்த அலை ஒன்று, கலத்தின் மீது மோத, அதனால் தெறித்த நீர்த்துளிகள் கடலில் சிதறி விழுந்தன.

ஒவ்வொரு முறையும் அலை மரக்கலத்தின் மீது மோதுவதும், அதனால் சிதறிய நீர்த்துளிகள் கதிரொளியில் முத்துக்களாய்ப் பரிமளித்து இமைப்பொழுதுக்குள் கடலுக்குள் விழுந்து மறைந்து விடுவதுமாயிருந்தன.

அதை இரசித்தபடி நின்று கொண்டிருந்த இராசேந்திரனின் செவிகளில் காலடி ஓசை விழவே, திரும்பிப் பார்த்தான்.

சோழ நாட்டுத் துணைத்தளபதி சிறிய தன்மபாலர்தான் வந்து கொண்டிருந்தார்.

“என்ன உபதளபதி?” என்றான் கம்பீரமான புன்னகையோடு.

“கப்பல் வாழ்க்கையை முடித்துக் கொண்டு கரைக்குப் போக வேண்டிய நேரம் வந்துவிட்டது தளபதி.”

“படை வீரர்கள் எல்லோரும் கரை சேர்ந்துவிட்டார்களா?”

“சேர்ந்துவிட்டார்கள்! இப்போது நாம் இருவர்தான் பாக்கி!”

“ஒன்பது திங்கள் இக்கடலுடன் நமக்கு ஏற்பட்ட தொடர்பை அவ்வளவு விரைவாகத் துண்டித்துக் கொண்டு போக எனக்கு மனம் வரவில்லையே உபதளபதி!” என்று கடல் பக்கம் திரும்பி, “அதோ பாருங்கள் ஆர்ப்பரிக்கும் கடலை! எவ்வளவு அற்புதமாய் இந்தச் சூரிய ஒளியில் ஜொலிக்கின்றது!” என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினான்.

உடனே துணைத்தளபதி, “நாம் கலைஞர்கள் அல்ல தளபதி! வாள் பிடிக்கும் வீரர்கள். வாருங்கள். கரையில் நம்மை வரவேற்க பட்டத்தரசியார் வந்து ஒரு நாழிகைக்கு மேல் ஆகிவிட்டதாம்!” என்றார்.

“ஏன், அரசர் வரவில்லையா?”

“இல்லை… இளவரசர் அதிராசேந்திரர் வந்திருக்கின்றார்!”

“அப்படியென்றால் சீக்கிரம் புறப்பட வேண்டியதுதான்!” என்று நூலேணியின் அருகில் சென்றான். அரசர் ஏன் வரவில்லை? என்று கேள்வி எழுந்தது அவன் மனதில். அதனால் சிறிது குழப்பமும் அடைந்தான்.

அந்த மனநிலையுடன் கப்பலையும் கடலையும் பிரிகின்றோமே என்ற பிரிவுணர்ச்சியோடு கலத்தின் தலைவனிடம் விடைபெற்றுக் கொண்டு நூலேணி வழியாக இறங்க ஆரம்பித்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வலுவான காற்று ஏணியை வீழ்த்திவிடுவது போல அதன் மேல் பலமாக மோதியது. மறுபக்கம் புரண்டுவிடுவது போல் அது இப்படியும் அப்படியுமாக பலமாக ஆட இராசேந்திரன் ஒருவன் மட்டுமே அப்போது இருந்ததால் அடுத்தபடியில் அவன் கால் வைக்கும் போது பலமான ஆட்டத்தினாலும், மனதிலிருந்த குழப்பத்தினாலும், சரியாகக் கால் பதியாமல் காற்றின் வேகத்தில் ‘தடக்’ என்று கால் வழுகிவிட்டது. உடனே இராசேந்திரன் அந்தரத்தில் தொங்க ஆரம்பித்தான்.

காற்றின் வேகம் அதிகமாகி, அவன் கைப்பிடியைப் பறித்துவிடுவது போல, அப்படியும் இப்படியும் நூல் ஏணியை மீண்டும் பலமாக ஆட்டியது.

நிலைமை அபாய நிலையில் இருப்பதை உணர்ந்து தன் முழுப்பலத்தையும் கைகளில் செலுத்தி பிடியை இறுக்கினான் இராசேந்திரன்.

துணைத்தளபதி சிறிய தன்மபாலர் எந்தவித அசம்பாவிதம் ஏற்பட்டுவிடக் கூடாதென்று கலத்தின் மேல் தளத்திலிருந்து பதட்டத்துடன் இவனைக் கவனிக்கலானார்.

அலைக்கழித்த பேய்க்காற்றின் வேகம் சிறிது குறைய ஆரம்பிக்கவே, அதுதான் தக்க நேரம் என்று, எவ்விதப் பிடிப்பும் இல்லாமல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்த இராசேந்திரன் தன் கால்களை முழு வேகத்துடன் படியில் பதிய வைத்து, ஏணியையும் பலமாகப் பிடித்துக் கொண்டான்.

தன்மபாலனுக்கு பெருமூச்சு வந்தது.

கப்பல் தலைவன் எந்தவித அசம்பாவிதமும் நிகழவில்லையென்பதை உணர்ந்து நிம்மதிப் பெருமூச்சுவிட்டான்.

படகில் இறங்கியதும் காற்றுடன் போராடிய அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்காக, மூச்சை நிதானப்படுத்தி கண்களை மூடி “அப்பாடா!” என்றான்.

அவன் பின்னால் இறங்கிய சிறிய தன்மபாலனும் “கொஞ்ச நேரம் எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது” என்றார்.

“சற்று முன் கடலைப் புகழ்ந்தேன் அல்லவா? ‘என்னையா புகழ்கின்றாய்? உனக்கு இதோ, என் பாராட்டுதல்கள்’ என்று ஒரேடியாய் என்னைப் பாராட்டிவிட்டது” என்று இராசேந்திரன் கடகடவென சிரிக்கலானான்.

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நாகையிலிருந்து இரு காததூரம் தள்ளி, அடர்ந்த காடு போல் ஓங்கி வளர்ந்திருந்த தென்னை மரங்கள் அடங்கிய தோப்பு ஒன்று. அந்நேரத்தில் மிக முக்கியத்துவம் பெற்ற ஒன்றாய் ஆகிவிட்டது.

மிகமிக நெருக்கமாய் அமைந்து காண்போர்க்கு அச்சத்தை விளைவிப்பது மாதிரி, அக்காலை நேரத்திலும் சூரிய ஒளி உள்ளே ஊடுருவாது, இருண்ட கானகம் போல் தென்பட்ட அப்பகுதி, சில கொடியவர்கள் தங்கும் கூடாரமாகவே அமைந்திருந்தது.

கடலிலிருந்து தோன்றிய அலைகளால், மணற்பரப்பில் பெரும் பள்ளம் ஒன்று தோன்றி, ஏரி போல் நீர்ப் பகுதி ஒன்று அங்கு ஏற்பட்டு, துறைமுகத்தையும், தோப்பையும் பிரித்துக் கொண்டிருந்தது.

அலைகளால் கரைக்குத் தள்ளப்பட்ட மீன்கள் அங்கே இடம் தேடி மறைந்து கொள்ள, அவற்றைப் பிடித்து உண்பதற்காக, கடல் நாரைகள் எழும்பியும், பறந்தும், நீரில் உட்கார்ந்தும், இப்படிக் கூட்டம் கூட்டமாய் அந்த இடத்தில் இருப்பது, உண்மையிலேயே அழகாகத்தான் இருந்தது.

அடிக்கடி வீசிய புயற்காற்றால் பெரும் மணற் குன்றுகள் தோன்றி, அந்நீர்ப் பகுதிக்கு வலுவான கரையாய் அமைந்து, அத்துடன் தோப்பையும் பாதி அளவு மறைத்துக் கொண்டு இருந்தது.

வஞ்சகர்களுக்கு இதைவிட ஒரு மறைவான இடம் இருக்க முடியுமா?

இப்படி ஒரு இடத்தை அமைத்த இயற்கையை நாம் மனத்திற்குள் ஏசினாலும், தோப்பும், தோப்பையொட்டியமைந்த தடாகமும், தடாகத்தையொட்டி இருக்கும் மணல் மேடுகளின் உயரமும், மனதிற்கு எவ்வளவு ஆனந்தத்தைத் தருகின்றன!

அதோ...

கடலிலிருந்து சிறிய படகு ஒன்று அலைகளுக்கிடையே புகுந்து தடாகத்தின் முன்பகுதியில் நிற்க, அதிலிருந்து துள்ளிக் குதித்துக் கீழே இறங்கிய படகை ஓட்டி வந்தவன், கடல் அலைகளால் இழுத்துச் செல்லாதபடி படகிலிருந்த கயிற்றை நன்கு இழுத்துப் பிடித்துக் கொண்டு நின்றான்.

படகில் மூன்று பேர் இருந்தனர்.

அவர்களில் பெண்ணும் ஒருத்தி இருந்தாள்.

அலைகளால் இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டிருந்த படகிலிருந்து, அனாவசியமாய் அவள் கீழே இறங்கினாள். வயது இருபதுக்கு மேல் இருக்காது. கரிய குழல்கள் நன்கு சீவி முடிக்கப்பட்டிருந்தாலும், நெடுந்தூரம் கடல் பயணம் செய்ததின்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அடையாளமாக, அது கலைந்து, அவளின் சந்திர முகத்தின் முன்னால் விழுந்து, தனி சோபையைத் தந்தது.

மின்னும் சுடர்போல் ஒளிவிட்ட அவளின் விழிகளில் மாந்தரைப் படைக்கும் பிரமன், மனிதரை மயக்கும் ஜாலத்தை வைத்துவிட்டான் என்பது, அந்த விழிகளில் அசையும் ஒவ்வொரு அசைவிலும் தெரிந்தது.

செவ்விய இதழ்களில் மென்மை குடிகொண்டிருந்தாலும், ஆண்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வந்த சக்தி ஒன்று அதில் ஒளிந்திருப்பது, அனுபவப்பட்டவர்கள் உணரும் அனுபவமாக இருந்தது.

நேர்த்தியாய் அமைந்த சங்குக் கழுத்தும், கீழே சரிந்த பளபளப்புத் தோள்களும், அதையட்டி சற்றுப் பருத்து நின்ற இளமை குடிகொண்ட முன் அழகும், அதன் சிறப்பை உணர்த்துவது போல், அவற்றை மறைத்து நின்ற மார்புக்கச்சையின் எடுப்பும், கச்சைக்குள் அடங்கியும் அடங்காமலும், எந்த நிமிடத்திலும் சிதிலமடைந்துவிடுமோ என்பது போல், பார்ப்பவருக்குப் பிரமையூட்டும் விதத்தில் அமைந்த முன் அழகுகளின் கூர்மை எழிலும், அதற்குக் கீழே சற்றுச் சரிந்தவாறு இருந்த அழகிய மணி வயிறும், அதன் நடுநாயகமாய் செப்பமுற காணப்பட்ட உந்திச் சுழியும், அதையொட்டி கருங்கோடு போன்று கீழே கோடிட்டு இறங்கிய மெல்லிய உரோமக் கீற்றும், ஆகா! அந்த இடம்...?

வளமான பூமியில் நன்கு செழித்து வளர்ந்த கனமான செவ்வாழை மரத் தண்டு போன்றிருந்த, வழுவழுப்பான அழகிய இரு தொடைகளும்... தொடைகளைத் தாங்கிக் கொண்டிருந்த கெண்டை மீன் போல் தென்பட்ட கணுக்கால்களும்... அதற்கு ஏற்றபடி அமைந்த பாதமும், அதையொட்டியிருந்த இலவம் பஞ்சுவிரல்களும்...

மொத்தத்தில், அவள், இந்திரலோக அரம்பையைத் தோற்கடிக்க, பூமியில் தோன்றிய மானிடப்பெண் என்பதை, அவளைக் காணும் யாவரும் ஒப்புக் கொள்ளவே செய்வர்.

அத்தனைக் கவர்ச்சியுடனிருந்த அவளின் இடையில் கூர்மையான குறுவாள் ஒன்று இருந்தது.

அது...

அவளின் அழகுக்குப் பொறுத்தமற்றுக் காணப்பட்டாலும், உள்ளத்தில் எத்தகைய கொடூரம் மறைந்திருக்கிறது என்பதைப் புலப்படுத்தவே செய்தது. படகிலிருந்து இறங்கிய அவள், “சீக்கிரம் சாமந்தா!” என்று பரபரப்புக் கலந்த குரலில் கட்டளையிட்டாள் அந்த அழகி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அந்தக் குரலில்தான் எத்தனை இனிமை? கடும்சொற்கள் கூட, சிலர் வாயிலிருந்து வெளிப்பட்டால், தேனாகவே இனிக்கும் போலிருக்கிறது!

"ஆகட்டும் இளவரசி!" என்று பணிவோடு படகிலிருந்து இறங்கினான் ஒருவன். சிவந்த நிற தேகமும், மெல்லிய மீசையுடன், உரம் படைத்த உடலும் கொண்டிருந்தான்.

இருவர் பேசிய மொழியும், தமிழாக இல்லாமல் வேற்றுப் பாஷையாக இருந்தது. தோற்றமும், நிறமும் கூட வேற்று நாட்டினர் என்பதையே உணர்த்தியது.

அவனைத் தொடர்ந்து கரிய நிறத்துடன், தடித்த ஆகிருதியோடு காணப்பட்ட ஒருவன் இறங்க...

அச்சமயம்...

வீரர்களை வரவேற்பதற்காக, துந்துபி முழங்கிய முழக்க ஓசை, துறைமுகத்திலிருந்து இவர்களுக்குக் கேட்டது.

"சீக்கிரம் இளவரசி, அவர்கள் துறைமுகத்தைவிட்டுப் போவதற்குள் நாம் அங்கே போய்விட வேண்டும்!" என்று அவசரப்பட்டான் கரிய நிறத்தினன். தமிழ் உச்சரிப்பிலிருந்தும், உடல் நிறத்திலிருந்தும் அவன் தமிழ்நாட்டைச் சேர்ந்தான் என்பது தெரிந்தது.

படகை ஓட்டியவனிடம் பொன் முடிப்பைக் கொடுத்த அழகி, கரிய நிறத்தவன் பக்கம் திரும்பி, "புறப்படலாமா தூமகேது!" என்றாள்.

"கடார இளவரசியார் கடல் கடந்து புனித செயலுக்காக இங்கே வந்திருக்கின்றார்கள்! அதை நிறைவேற்றுவது என்னுடைய கடமை!" என்ற தூமகேது படகோட்டியின் பக்கம் சென்று, "வேலா, நீ செய்த உதவிக்கு நன்றி! இப்போது நீ வீட்டுக்குப் போய், நாளை விடியற்காலை நான் பாண்டிய நாடு போக வேண்டியிருப்பதால், அதற்கான ஆயத்தம் செய்து வை!" என்றான்.

"ஆகட்டும் சாமி!" என்று தலையை ஆட்டினான் வேலன்.

அச்சமயம், அவர்கள் காது செவிடாவது போல, எக்காளம் பலமாக முழங்கியது.

கடார இளவரசி இரத்தினாதேவி என்ற பெயருடைய அவளின் முகம் கறுக்க, கண்களில் சினக்குறிப்பு தோன்றியது. இடையில் செருகியிருந்த குறுவாளின் மீது கை வைத்துப் பற்களைக் கடித்தாள்.

"அவசரப்படாதீர்கள்! எப்படியும் நீங்கள் அந்த இராசேந்திரனை நிச்சயம் பழிக்குப் பழி வாங்கத்தான் போகிறீர்கள்!" என்றான் தூமகேது. அவன் பாண்டிய நாட்டைச் சேர்த்தவன். சோழ வம்சத்தை நிர்மூலமாக்குவதற்காக, இரத்தப் பொட்டு வைத்து வீர



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சபதம் எடுத்துக் கொண்ட, நாடிழந்த பாண்டிய மன்னனின் மெய்க்காப்பாளர்களில் ஒருவன்.

"நல்ல சமயத்தில் நீ குறுக்கிட்டாய் தூமகேது! இல்லையென்றால் கடாரத்திலிருந்து பகைவனைத் (பகைவன் என்று கடார இளவரசி இரத்தினாதேவி குறிப்பிட்டது, கடாரம் சென்று வெற்றி ஈட்டித் திரும்பிய இராசேந்திரனை) தொடர்ந்து வந்த எனக்கு ஒரு வழியும் புலப்படாமல் போயிருக்கும். என் காரியம் நிறைவேறவில்லையென்றால் இத்தமிழ் நாட்டிலேயே நான், உயிரைப் போக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருப்பேன்" என்றாள் வருத்தத்துடன்.

"உங்களுக்குத் துணையாக கடார மன்னர் என்னை அனுப்பியிருக்கும் போது, நீங்கள் ஏன் அதைர்யம் கொள்ள வேண்டும்?" என்று இதுவரை மௌனமாகயிருந்த, சிவந்த நிறத்தினனான சாமந்தன் கூறினான்.

"அதைர்யம் கொள்ளவில்லை சாமந்தா. நாடு சோழருக்கு அடிமையாகிவிட்டது என்ற ஆத்திரத்தில், தோல்விக்குக் காரணமான இராசேந்திரனைத் தொலைத்துக் கட்ட, என் தந்தை தடுத்தும் கேளாது, புறப்பட்டுவிட்டேன்! இளம் பெண்ணான நான், கடல்கடந்து செல்வதற்குத் துணையாக எல்லா அனுபவமும் பெற்ற ஒற்றர் தலைவனான உன்னை என்னுடன் அரசர் அனுப்பியிருந்தாலும், புதிய இடமும், புதிய சூழலும், பேசும் மொழியும் என்னைத் திக்குமுக்காட வைத்துவிட்டன!" என்றாள் இரத்தினாதேவி.

"இலங்கைக் கடல் பகுதியில் உள்ள சிறிய தீவில் முதன் முதலில் உங்களை நான் சந்தித்த போது, மனதில் சந்தேகம் ஏற்பட்டாலும், நீங்களும் எங்களைப் போல சோழர்களை ஒழிக்க வந்திருக்கிறீர்கள் என்பதையறிந்து, உற்சாகத்துடன் உங்களுக்கு உதவ முனைந்தேன். நீங்கள் ஏறிவந்த வணிகக்கலம் கடலின் கொந்தளிப்பிற்கு உள்ளாகி, உடைந்து நீங்களும், சாமந்தனும் நான் தங்கியிருந்த தீவின் பக்கம் ஒதுங்கியது, கடவுளின் செயல்தான் என்று சொல்ல வேண்டும். அந்தத் தீவில் திங்களுக்கு ஒருமுறை பாண்டிய அரசனைச் சந்திக்க நான் வருவேன். அப்படித்தான் அன்றும் நான் வந்தேன். அச்சமயத்தில்தான் நாம் மூவரின் சந்திப்பும் நிகழ்ந்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது? இறைவன்கூட சோழரை வெறுக்கின்றார் என்பதே நமக்குப் புலப்படுகிறது!" என்றான் தூமகேது.

"உண்மை. நீ சொல்வது முற்றிலும் உண்மை!" என்று மகிழ்ச்சியுடன் உரக்கக் கூவினாள் இரத்தினாதேவி.

அந்தக் கூவலை அடக்குவது போல், எக்காள சப்தம் மீண்டும் முழங்க ஆரம்பித்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“நாம் இங்கே பேசிக் கொண்டிருந்தால் இராசேந்திரன் துறைமுகத்தைவிட்டுப் பயணமாகிவிடுவான்! அப்புறம் அவனைக் கொல்வது கடினமான காரியமாகிவிடும். கூட்டத்தோடு கூட்டமாக ‘அவனை’ வரவேற்கும் சாக்கில், குறுவாளை அவன் மார்பில் எறிந்துவிடுவது சுலபமானது. அதனால் சீக்கிரம் புறப்படுங்கள்!” என்று துரிதப்படுத்தினான் தூமகேது.

வாளை வீசும் பொறுப்பை இரத்தினாதேவி ஏற்றுக் கொண்டாள். எறிந்துவிட்டுக் கூட்டத்தோடு கூட்டமாய்க் கலந்து அங்கிருந்து தப்பிவிட வேண்டும் என்பது அவர்கள் திட்டம்!

அதன்படி மூவரும் நாகைத் துறைமுகம் நோக்கி வேகமாய்ப் பயணமாயினர்.

*****

**து**றைமுகக் கரையை இராசேந்திரனின் படகு நெருங்குவதற்கும் அதிர்வேட்டு அக்கடல் பகுதியையே அதிரவைப்பது போல் முழங்குவதற்கும் சரியாக இருந்தது.

இராசேந்திரனை சோழ நாட்டு இளவரசனான, அதிராசேநதிரன் மார்புறத்தழுவி மாலையிட்டு வரவேற்றான். துணைத்தளபதிக்கு, முதலமைச்சர் புன்முறுவலோடு மாலை போட்டு முதுகைத் தட்டிக் கொடுத்தார். பட்டத்தரசி இருவரையும் ஆசீர்வதித்தார்.

அதிராசேந்திரன் மனைவியான இளையராணி இருவருக்கும் ஆரத்தி எடுத்து, நெற்றியில் வெற்றித் திலகமிட்டாள்.

வரிசையாய் நின்று கொண்டிருந்த வேல் வீரர்கள் தங்கள் வேல்களை உயரத் தூக்கி, “கடாரம் கொண்ட இராசேந்திரன் வாழ்க! வாழ்க!” என்று முழக்கமிட்டனர்.

துந்தமம் ஒலித்தது; எக்காளம் முழங்கியது; வெற்றி முரசம் ஆர்த்தது.

வேற்படை வீரர்கள் முன்னே செல்ல, அதன்பின் வாள் வீரர்கள் வரிசையிட்டு நடக்க, நடுவே இராசேந்திரனும் சிறிய தன்மபாலரும் வீர நடை போட்டனர்.

துறைமுக வாயிலின் வெளியே… வெற்றி வீரர்களை வரவேற்பதற்காகக் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்த வேளை… இராசேந்திரனைக் கொல்வதற்காக கடாரத்திலிருந்து வந்த இளவரசி இரத்தினாதேவி, தனக்குத் துணையாயுள்ள சாமந்தனையும், பாண்டிய நாட்டைச் சேர்ந்த தூமகேதுவையும் பார்த்து, “கூட்டம் அதிகமாயுள்ளதே!” என்றாள்.

“ஆமாம்… ஆனால், காரியத்தை நிறைவேற்ற கூட்டம் அதிகமாயிருப்பது சாதகம்தான்” என்றான் தூமகேது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

துறைமுகத்திலிருந்து ஒருகாத தூரத்திற்கு மேல் மக்கள் கூட்டம் குழுமியிருந்தது.

சுமார் அரைகாதம் தள்ளி நின்றால்தான் உள்ளிருந்து வரும் இராசேந்திரன் மீது கத்தியைக் குறிதவறாமல் வீச முடியும்...

அதற்கு ஏற்ற இடம்...?

மூவரும் சுற்றுமுற்றும் பார்த்து, கூட்டம் நெருக்கமாயிருந்த ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்தனர்.

இதற்குள்...

தோற்றத்திலும், நிறத்திலும் சற்று வித்தியாசமாக இருந்த இளவரசி இரத்தினாதேவியை, அனைவரையும் கவர, எல்லோரும், 'யார் புதியதாய்!' என்பது போல அவளைத் திரும்பித் திரும்பிப் பார்க்க ஆரம்பித்தனர்.

தூமகேது அதைக் கவனித்தான். "அனைவர் கவனமும் நம் மேல் இருக்கின்றது; சீக்கிரம் காரியத்தை முடித்துக் கொண்டு தப்பிவிட வேண்டும்!" என்று பதட்டப்பட்டான்.

இராசேந்திரன் மீது பூச்சொரிவது போல நச்சுக் கத்தியை, அவன் மேல் வீசிவிட வேண்டுமென்று எண்ணிய இளவரசி, அதற்காக மலர்கள் வேண்டுமென்று தூமகேதுவிடம் கேட்டாள்.

அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். மூதாட்டி ஒருத்தி தண்ணீர்ப் பந்தலின் அருகில் பூக்கூடையில் மலர்களை வைத்து விற்றுக் கொண்டிருந்தாள்.

பாட்டியிடம் சென்று, நானாவிதப் புஷ்பங்களை ஒன்றாய் வாங்கிக் கொண்டு வந்து, இளவரசி இரத்தினாதேவியிடம் கொடுத்தான்.

மென்விரல்களில் அதைப் பெற்றுக் கொண்டு, நச்சுக் கத்தியை மலர்களின் நடுவில் வைத்து, ஏற்கனவே தேர்ந்தெடுத்து வைத்திருந்த, அந்த இடத்தை நோக்கி நடந்தாள் இரத்தினாதேவி.

'புப்பூழும்... புப்புழும்...' என்று துந்துபி முழங்க, குதிரை வீரன் ஒருவன், வேலைத் தூக்கிப் பிடித்து, "கடாரம் கொண்ட இராசேந்திரர்" என்று உரக்கக் கூற, "வாழ்க! வாழ்க!" என்று மக்கள் முழங்கினர்.

"வந்து கொண்டிருக்கிறார்கள்" என்றான் தூமகேது. அவன் இதயம் படபடத்தது.

கால்களை நன்கு தரையில் பதியவைத்து முன் கைக்கு அழுத்தம் கொடுத்து, இராசேந்திரன் மேல் கத்தியை வீசத் தயாரானாள் இரத்தினாதேவி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 3

**த**ண்ணீர்ப் பந்தலுக்குக் கூப்பிடு தூரத்திலிருந்த மண்டபத்தையடைந்த காளிங்கராயனும், தென்னனும் சுற்றுமுற்றும் பார்த்தனர்.

மக்களின் கூட்டம் அரசியாரை வரவேற்பதிலும், அது சம்பந்தமாக இங்கும் அங்கும் நடந்து செல்வதிலுமாக இருந்தார்களே தவிர, மண்டபத்தின் பக்கம் யாருடைய கவனமும் திரும்பவில்லை.

"நிம்மதியுடன் பேச, இதுவே ஏற்ற இடம்!" என்று காளிங்கராயன் மண்டபத்தரையின் புழுதியைத் தட்டிவிட்டு உட்கார்ந்து கொண்டான்.

அவர்களுக்கு முன்பே, குறுக்கு வழியில் சென்று, மண்டபத்தின் கடைசித் தூணின் மறைவில், உடலைக் குறுக்கிக் கொண்டு, உட்கார்ந்திருந்த அம்மையப்பனை அவர்கள் இருவரும் கண்டு கொள்ளவில்லை. அம்மையப்பன் தன் காதுகளைத் தீட்டிக் கொண்டான்.

தென்னன், காளிங்கராயனுக்குப் பக்கத்தில் அமர்ந்தான். இருவர் முதுகும் கற்றூணில் மறைந்திருக்கும் அம்மையப்பன் பக்கம் இருந்தன.

காளிங்கராயன் தொண்டையைக் கனைத்துப் பேச ஆரம்பித்தான்.

"உன்னைத் தேடியபடி நான் ஜோதிடர் வீட்டிலிருந்து வரும் போதே ஒரு திருட்டுச் 'சிவ பக்தன்' என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். நமக்குப் புளியோதரை கொடுத்த முதியவரிடம், நான் பேசிக் கொண்டிருக்கும் போது கூட, அந்தப் போலிச் சிவப்பழம் என் பக்கத்திலே வந்து, என்ன விஷயம் என்று கேட்டான். அதனால் அவன் மேலே எனக்கு ஐயமாக இருக்கிறது" என்று தன் பேச்சை நிறுத்தித் தென்னனைப் பார்த்தான்.

"சிவபக்தனா?" என்று வியப்புடன் வினவிய அவன், "இங்கேயும் வந்துவிட்டானா?" என்றான்.

உடனே காளிங்கராயன், "அவனைத் தெரியுமா உனக்கு?" என்று பரபரப்புடன் வினவினான்.

"தெரியுமாவா? ஆள் கொஞ்சம் குள்ளமாய் இடையிலே நாலு முழத்துண்டோடு, கக்கத்திலே ஓலைச்சுவடி எல்லாம் வைச்சுட்டு..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“அவனேதான்! அவனேதான்!” என்று உரத்தக் குரலில் இடைமறித்தான் காளிங்கராயன்.

“மெள்ளப் பேசுப்பா...! நாம் பேசப் போவதே ரகசியம். இதில் நீ ஊரையே கூட்டுவது போல் கத்துகிறாய்” என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, “அவன் யார் தெரியுமா?” என்று ரகசியமாகக் காளிங்கராயன் காதில் எதையோ கூறினான் தென்னன்.

“அப்படியா?” என்று வியப்பில் ஆழ்ந்த காளிங்கராயன், “அப்போதே நினைத்தேன். அந்தப் பயல் அம்மாதிரி ஆளாகத்தான் இருப்பான் என்று! இப்போது மட்டும் என் கையில் கிடைக்கட்டும்! குத்துவாளால் குடலை உருவிவிடுகிறேன்” என்று உறுமினான்.

தூண் மறைவிலிருந்த அம்மையப்பனின் இதயம் ‘தட் தட்’ என்று வேகமாய் அடித்துக் கொண்டது.

“அந்தப் பயல் விஷயம் இருக்கட்டும் அரண்மனையிலிருந்து என்ன புதிய செய்தி?” என்றான் தூமகேது.

“இருக்கிறது. அரசன் சீக்கிரம் இறந்துவிடும் நிலையில் இருக்கின்றான்” என்றான் தென்னன்.

“என்னது?” வியப்புடன் காளிங்கராயன் அவனைப் பார்க்க,

“உண்மைதானப்பா! வயதும் ஆகிவிட்டது. அத்துடன் மனக்கவலையும் சேர்ந்துவிட்டது. அதனால் நோய் முற்றி கடுமையாகிவிட்டது. இந்தச் சமயத்தில் மட்டும் நம் அரசர் முயன்றால் விரைவில் பாண்டியநாடு சோழனின் ஆட்சியிலிருந்து விடுபட்டுவிடும்” என்றான் தென்னன் மகிழ்ச்சியுடன்.

காளிங்கராயனுக்குச் சந்தோஷம் தாளவில்லை.

“உண்மையாகவா?” என்று கேட்டு உரக்கச் சிரிக்கலானான்.

“மூடத்தனமாக ஏன் சத்தம் போட்டுச் சிரிக்கிறாய்? நாம் பேசுவது இரகசியமா? இல்லை தெருக்கூத்து ஆடுகிறோமா?” என்று முறைக்க,

“இப்படித்தான் சில சமயங்களில் உணர்ச்சிவயப்பட்டுப் போகிறேன். என்ன செய்வது? பாண்டிய நாடு சோழர் ஆட்சியிலிருந்து விடுபடும் என்ற வார்த்தையைக் கேட்கும் போதே மகிழ்ச்சி தாளவில்லையப்பா!” என்றான் காளிங்கராயன்.

“இன்னொரு விஷயம்! பட்டத்தரசியார் உன்னுடைய எசமானனான மழவராய அடிகளிடம் இன்று ஜோதிடம் பார்க்கப் போகின்றார்!” என்றான் தென்னன்.

“என்ன விஷயமோ?”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"சரியாகத் தெரியவில்லை. ஒருவேளை அரசருக்குப் பின் யார் அரசு பொறுப்பிற்கு வருவது என்பதாக இருக்கலாம்!"

"அப்படியென்றால் இப்பொழுதே போகிறேன்! என்ன ஜோதிடம் பார்க்கப்படுகிறது என்ற விஷயத்தை உடனே நான் அறிய வேண்டும்" என்று வேகமாய் எழுந்து கொண்டான் காளிங்கராயன்.

"நானும் கங்கைகொண்ட சோழபுரம் போக வேண்டும். பத்து தினங்கள் கழிந்து நாம் இதே மண்டபத்திலேயே சந்திப்போம்" என்று தென்னனும், அவனைத் தொடர்ந்து எழுந்தான்.

இருவரும் அம்மண்டபத்தைவிட்டு வெளியேறியதும், கொஞ்ச நேரம் கழித்து, அம்மையப்பன் வெளியே வந்தான். அப்போது, 'சிவாயநம!' என்று அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டது.

அப்போது, அவன் கண்டது-

வெளி நாட்டவர் போன்று தென்பட்ட அழகிய இளம் பெண்ணும், அவளைத் தொடர்ந்து இருவரும், அந்த இருவரைப் பின்பற்றி, புளியோதரை முதியவரும் மண்டபத்தை நோக்கி வருவதைப் பார்த்து, இதில் ஏதோ விஷயம் இருக்கிறதென்று திரும்பவும் மண்டபத்திற்குள் ஒளிந்து கொண்டான் அம்மையப்பன்.

இளவரசி இரத்தினாதேவியின் முகம் களை இழந்திருந்தது.

*****

**தூ**ரத்தில், இராசேந்திரனை வரவேற்பதற்காகக் கூடியிருந்த கூட்டம், பட்டத்தரசியையும், சோழ இளவரசன் அதிராசேந்திரனையும், கடாரம் கொண்ட இராசேந்திரனையும் பார்த்த மகிழ்ச்சியில், அவர்களைப் பற்றி பேசிக் கொண்டே, மெல்ல கலைந்து கொண்டிருந்தனர்.

கடார வெற்றி வீரனைக் கங்கை கொண்ட சோழபுரம் அனுப்பிவிட்டுத் துறைமுக அறையில் தங்கிவிட்ட பட்டத்தரசியும், அதிராசேந்திரன் மனைவியான, இளையராணியும், நாகை ஜோதிடர் இல்லம் போவதற்குத் தயாராயினர். அவர்களுக்குத் துணையாக, இளைஞன் திருவரங்கன், முதலமைச்சரால் அமர்த்தப்பட்டிருந்தான்.

பட்டத்தரசி, திருவரங்கனைக் கூப்பிட்டு, "தேர் தயாராகிவிட்டதா?" என்றாள்.

'ஆகிவிட்டது' என்பதற்கு அடையாளமாகப் பணிவுடன் தலையாட்டினான்.

இருவரும் தேர் ஏற புறப்பட்டனர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சற்று முன்பு..

திருவிழாக் கோலம் பூண்டிருந்த அந்த இடம், தற்போது மிகவும் அமைதியுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

*****

**சோ**லையை இழந்த இளவரசி, இரத்தினாதேவி, தன் முயற்சி தோற்றுவிட்டதற்குக் காரணமான முதியவரை சுட்டெரிப்பது போல முறைத்தாள்.

பெரியவரோ...!

அதைப் பற்றிக் கவலைப்படாது ஆலமரத்தின் கீழ் அவரால் மறைவாக வைக்கப்பட்ட புளியோதரையைத் தேடிக் கொண்டிருந்தார்.

அதை அங்கே காணவில்லை. சிறிது தள்ளி...

அந்த மூட்டையை நாய்களும், காக்கைகளும் பங்கு போட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருந்தன.

"அடடா! மோசம் போய்விட்டதே. எத்தனை பக்குவமாய் நெய்விட்டுச் சமைக்கப்பட்டது. பசியோடிருக்கும் உங்களுக்குக் கொடுக்கலாம் என்று வந்தால் வீணாகிவிட்டதே!" என்று வருத்தப்பட்டார் பெரியவர்.

"பரவாயில்லை. நாங்கள் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டுக் கொள்கிறோம். நீங்கள் கவலைப்பட வேண்டாம்!" என்றாள் இரத்தினாதேவி.

அவள் பேசிய தமிழ் உச்சரிப்பு, ஒரு மாதிரியிருந்ததால், "அம்மணி! தாங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களோ?" என்று கேட்டார் முதியவர்.

"எங்கள் நாடு கடாரம். வணிகம் செய்ய வேண்டி இங்கே வந்திருக்கின்றோம். எங்களுக்கு வணிக முறையில், இங்கே உதவி செய்ய வாணிப நண்பர் ஒருவர் இருக்கின்றார்!" என்றாள்.

"நல்லது! உன் வியாபாரம் தழைத்து நீ பெரிய செல்வந்தனியாய் ஆக வேண்டும். இந்தச் சின்ன வயதில், அதுவும் பெண்ணான நீ கடல் கடந்து இங்கே வந்திருக்கும் துணிவை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்" என்றார் பெரியவர்.

"உங்கள் பாராட்டுதலுக்கு நன்றி!" எனக் கூறிய கடாரத்து இளவரசி, தூமகேதுவின் பக்கம் திரும்பி, "தண்ணீர்ப் பந்தலுக்குச் சென்று ஏதாவது சாப்பிட வாங்கி வாருங்களேன்!" என்று கண்ணால் சாடை காட்டினாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தூமகேது, அதைப் புரிந்து கொண்டு, ஒரு நொடியில் வருவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

“அவர் வரும் வரை நாம் மண்டபத்தில் உட்காரலாம் வாருங்கள்!” என்று முதியவரை அழைத்தாள் இரத்தினாதேவி.

மூவரும் அங்கே சென்று உட்கார்ந்தனர்.

கடார இளவரசி, இரத்தினாதேவியின் நெஞ்சம் கனலாக கொதித்துக் கொண்டிருந்தது.

‘அற்புதமான ஒரு சந்தர்ப்பத்தை இந்த அற்பக் கிழம் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிட்டதே!’ என்று பெரியவரைக் கோபத்துடன் பார்த்தாள்.

“என்ன இளவரசி? அப்படிப் பார்க்கின்றீர்கள்?” என்று முதியவர் வினவ,

“ஒன்றுமில்லை, பசியின் கொடுமை” என்று அதற்குப் பதிலளித்தாள்.

‘புஷ்பங்களின் நடுவில் நச்சுக் கத்தியை மறைத்து வைத்து இராசேந்திரன் மேல் எறிய ஆயத்தமாய் நின்று கொண்டிருந்த போது, பக்கத்திலிருந்த இந்தக் கிழத்திற்குக் கத்தியின் முனை எப்படியோ, தென்பட்டுவிட்டது. உடனே “அம்மணி!” என்று தன்னைக் கூப்பிட்டுப் புன்முறுவலுடனே, “கத்தி” என்று தன் பொக்கை வாயைத் திறந்து இளிக்க, விதிர்விதித்த நான் ‘ஓ’ என சமாளித்து, “இடுப்பில் செருக வேண்டியதை மறந்து, கைகளிலேயே வைத்துக் கொண்டிருந்துவிட்டேன். நல்லவேளை... நீங்கள் பார்க்கவில்லையென்றால் என்ன ஆவது? தெய்வம் போல் வந்தீர்கள்!” என்று சமாளிக்க அதற்குள் இராசேந்திரன், அந்த இடத்தைப் புரவி மூலம் கடந்துவிட்டான்.’

மேற்கொண்டு இவ்விஷயத்தை நான்கு பேருக்குச் சொல்லித் தொலைக்கப் போகின்றார் என்று, தந்திரமாய்ப் பெரியவரை நட்பு செய்து கொண்டு ஆலமரத்துக்கு அழைத்து வருவதற்குள் இரத்தினாதேவிக்குப் போதும், போதும் என்றாகிவிட்டது.

ஆனால், தன்னுடைய முயற்சிக்குப் பாதகமாகிவிட்ட, கிழவரை விட்டுவிட முடியுமா?

‘முடியாது’ என்று அழுத்தமாய், அவள் மனம் சொல்லியது. தேன்குழல், அப்பம், நீர் மோர் சகிதமாக வந்து சேர்ந்தான் தூமகேது.

“சாப்பிடுங்கள்!” என்று அவைகளைப் பெரியவரிடம் நீட்ட, “எனக்கு ஒன்றும் வேண்டாம். மோர் மட்டும் கொடுத்தால் போதும்” என்றார்.

“நல்லது!” என மட்கலத்திலிருக்கும் மோரைப் பெரியவரிடம் கொடுக்குமுன் தூமகேதுவைப் பார்த்தாள் இளவரசி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 4

ஜோதிடர் வீட்டைக் காளிங்கராயன் அடையும் போது ஏறக்குறைய பகற்பொழுது கழிந்துவிட்டிருந்தது. அன்ன முகப்புடை இரதமும், ஐம்பது புரவிகளும் ஒரு ஓரமாய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. புரவி வீரர்கள் வேற்களைப் பிடித்தபடி வாயிலில் வரிசையாக நின்று கொண்டு இருந்தனர். உள்ளே புகும் வழியில் கம்பீரமாய் கைகளைப் பின்னால் கட்டியபடி, திருவரங்கன் நின்று கொண்டிருந்தான்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் அட்டகாசமாய் இருப்பதை உணர்ந்த காளிங்கராயன், எப்படி உள்ளே போவதென்று ஒருகணம் தயங்கினான். பிறகு, எனக்கு எவன் தடை சொல்வதென்று விடுவிடென போக முயற்சித்தான்.

வேல் வீரர்கள் குறுக்கே வேற்கம்பை நீட்டி, அவனைப் போகவொட்டாமல் நிறுத்தினர்.

“யார் அப்பனே என்னைத் தடுப்பது? வழியைவிடும்!” என்றான் சிறிது உரக்கவே.

“இப்போது நீர் உள்ளே போக முடியாது. அரசியார் வந்த பிறகு போகலாம். அதுவரை பொறுமையாய், ஓரமாய் நில்லும்” என்றான் வேல் வீரன்.

“நான் யாம் தெரியுமா?” என்றான் காளிங்கராயன் அதட்டலாக.

“நீர் இந்திரலோகத்திலிருந்து வந்த இந்திரன் என்றே வைத்துக் கொள்ளும். அதற்காக, இப்போது உனக்கு வழியை விட்டுவிட முடியாது” என்றான் வேல் வீரன், உறுதியாக.

“என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்?” என்று கண்கள் சிவக்கக் காளிங்கராயன் கேட்க,

“சங்கம் வைத்து வளர்த்த இயற்றமிழில்தானப்பா சொன்னேன்” என்றான் வேல்வீரன் கிண்டலாக.

சிரிப்பு தாளமாட்டாமல் மற்றொரு வீரன் ‘பகபக’வென்று சிரித்துவிட்டான்.

காளிங்கராயனுக்கு கோபம் அதிகமாகியது.

“என்னை உள்ளேவிடப் போகின்றீர்களா இல்லையா?” என்று உரக்கக் கத்தினான்.

இதுவரை மௌனமாக இருவருக்கும் நடந்த உரையாடலைக் கவனித்துக் கொண்டு வந்த திருவரங்கன் அருகே வந்தான். “என்ன வேண்டும் உங்களுக்கு?” என்றான்.

“நான் ஜோதிடரின் சீடன். என் பெயர் காளிங்கராயன். என்னை உள்ளே விட மறுக்கிறார்கள் இவர்கள்” என்று உணர்ச்சிவயப்பட்டுக் கத்தினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“சோழநாட்டுப் பட்டத்து அரசியார் உள்ளே இருக்கிறார்கள்! உங்களை உள்ளேவிட வேண்டுமா? வேண்டாமா? என்று ஜோதிடரிடம் கேட்கக்கூட, நான் இப்போது உள்ளே போக முடியாது. அதனால் நீங்கள் பொறுமையுடன் அப்படி உட்காருங்கள். அரசியார் வந்ததும் அனுப்பி வைக்கின்றேன்” என்றான் திருவரங்கன் அமைதியாக.

‘மடத்தனம் பண்ணிவிட்டேன்! இவர்கள் வருவதற்கு முன் நான் இங்கே வந்திருக்க வேண்டும்’ என்று நொந்து கொண்ட காளிங்கராயன், வீட்டிற்கு வெளியிலிருந்த வேப்ப மரத்தின் கீழ் சென்று வருத்தமுடன் உட்கார்ந்தான்.

அதே சமயம்-

மழவராய அடிகள் ஒருபுறமும்... எதிரே அரச குடும்பத்தினர்க்கென்று தனியாய் அமைக்கப்பட்டிருந்த சிறிய ஆசனத்தில் பட்டத்தரசியும் இளையராணியும் அமர்ந்திருந்தனர்.

சில சுவடிகளைப் புரட்டிவிட்டு யோசனையில் ஆழ்ந்திருந்த ஜோதிடர் மெல்ல கண்களைத் திறந்தார்.

நீண்ட வெண்ணிறத்தாடி; மூன்றாம் பிறை வடிவில் நெற்றியில் சந்தனப் பொட்டு; ஏறக்குறைய அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருந்த அடிகள், இருபது வயது இளைஞனுக்குரிய மிடுக்குடன் காணப்பட்டார்.

கண்களைத் திறந்து மெல்லக் கனைத்துவிட்டு, “பட்டத்தரசியாரின் கேள்வி சிக்கலாகத்தான் இருக்கிறது!” என்று இருவரையும் பார்த்துப் புன்முறுவல் பூத்தார் மழவராய அடிகள்.

“இப்போது நாட்டின் நிலைமையும் சிக்கலாகத்தான் இருக்கிறது!” என்றார் பட்டத்தரசி.

“அப்படியே சில உண்மைகளைச் சொல்லக் கூடாதென்பது சோதிட சாத்திரத்தின் நியதி தாயே... அதற்கு நான் என்ன செய்வது? அரசரின் ஜாதகத்தை ஆராயும்படிச் சொன்னீர்கள். அதன்படி ஆராய்ந்ததில் நேரம் சரியில்லை என்றுதான் என்னால் சொல்ல முடியும். அத்துடன் அவர் உடல்நலத்தில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது” என்று நிறுத்தி,

“இதற்கு மேல் அரசரின் ஜாதகத்தைப் பற்றிக் கேட்காதிருப்பது நல்லது” என்றார்.

“சோழ நாட்டின் எதிர்காலம் எப்படியிருக்கும்?” என்று கவலையுடன் வினவினார் பட்டத்தரசி!



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“தாயே! இதற்கு என்னால் பதில் சொல்லத் தெரியவில்லை! அதனால் எல்லாம் வல்ல அம்பிகையிடமே கேட்டுப் பார்ப்போம்! வாருங்கள்” என்று எழுந்தார்.

“உங்கள் அம்பிகையிடம் கேட்க வேண்டும் என்றுதானே நானும் இவ்வளவு தொலைவு வந்திருக்கின்றேன்” என்று பட்டத்தரசியாகும் எழுந்து கொண்டார்.

அவருடன் இளையராணியும் எழ, மழவராய அடிகள் புன்முறுவலுடன், “நீங்கள் இங்கேயே இருங்கள்; பட்டத்தரசியார் மட்டும் அம்பிகையிடம் வரட்டும்” என்றார்.

“அதனால் என்ன? நான் இங்கேயே இருக்கின்றேன்” என்று உட்கார்ந்து கொண்டார் இளையராணி.

“இப்படி கூறியதற்காக என் மீது கோபம் கொள்ளக் கூடாது!” என்று அடிகள் புன்முறுவலுடன் இளையராணியைப் பார்க்க,

“ஏன் கோபம் கொள்ள வேண்டும்? நான் இருந்தால் என்ன? அரசியார் இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்!” என்று குறுநகையுடன் சொன்னாள் இளையராணி. மனதில் மட்டும் மெல்லிய கிலேசம் இருக்கத்தான் செய்தது.

பூசை அறைக்குள் போவதற்கு முன் அடிகளும் அரசியாரும் கை கால் சுத்தி செய்து கொண்டனர். மழவராயர் குரலில் தோத்திரப் பாடலைப் பாடியபடி, கதவைத் திறந்தார்.

நடுநாயகமாய்... ஒன்றறை முழ அளவுக்குப் பஞ்ச லோகத்தில் உருவமைக்கப்பெற்ற அம்பிகை, ஸ்வர்ண ரூபியாய்க் காட்சியளித்தபடி அமரும் நிலையில், கருணைக் கடலெனத் திகழ்ந்தாள். கதவைச் சாத்தி உட்பக்கம் தாழிட்டுக் கொண்டார்.

உலக நாயகியான அம்பிகையை இருவரும் கைகூப்பி வணங்கினர்.

சக்தி வடிவாய்த் திகழும் அம்பிகைக்குரிய மந்திரங்களை உணர்ச்சிப் பெருக்குடன் சொல்லலானார், மழவராய அடிகள்.

கால் நாழிகை கடந்தது.

அம்பிகையின் பாதத்தில் வைக்கப்பட்டிருந்த பொன் தட்டிலுள்ள மாங்கனியை எடுத்து, அவள் கைகளில் அழுத்தி வைத்துவிட்டுப் பட்டத்தரசியின் பக்கம் திரும்பினார்.

“நீங்கள் கேட்க வேண்டிய கேள்வி ஒரே கேள்வியாக இருக்க வேண்டும்! அந்தக் கேள்விக்கு விடை தரும்படி நான் அம்பிகையிடம் மனமுருகி நிற்பேன்! இன்னும் கால் நாழிகை நேரத்தில் அம்பிகையின் கையிலுள்ள மாங்கனி, சக்தி சொரூபியின் கருணையால் கீழே உருண்டு விழுந்தால், உங்கள் கேள்விக்கு நல்ல விடை கிடைத்துவிட்டது என்று பொருள் கொள்ள வேண்டும். இல்லை என்றால் பதில்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கிடைக்கவில்லை என்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்” என்று கண்களை மூடிக் கொண்டார்.

பட்டத்தரசியார் பக்தி சிரத்தையுடன் இருகரங்களையும் கூப்பி, “அம்பிகையே! இந்த உலகத்தை இரட்சிக்க வந்த தாயே! உன் மகளாகிய நான் கேட்கும் கேள்வி இதுதான் அம்மா. இந்தச் சோழ நாட்டிற்கு அடுத்துப் பட்டத்துக்கு வரும் அரசகுமாரன் என் மகனான அதிராசேந்திரனா? அல்லது என் கணவரின் தமக்கை மகனான இராசேந்திரனா? இருவரில் யார் என்று கூறம்மா?” என்று அவளது பதிலுக்காக நின்றார்.

அடிகள் கண்களைத் திறந்து “அதிராசேந்திரராய் இருந்தால் கையிலிருக்கும் மாங்கனி பொன் தட்டில் விழ வேண்டும். இல்லையென்றால் கையிலே இருக்க வேண்டும்” என்று கூறிவிட்டுக் கண்களை மூடிக் கொண்டார்.

சிறிது நேரம் சென்றது...

அம்பிகையின் கையிலிருந்த மாங்கனியையே பார்த்தபடி மனமுருகி நின்றார் பட்டத்தரசி.

பக்தி பரவசப்பட்ட மழவராய அடிகள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்து கொண்டிருந்தது.

கருணைக் கடலான அம்பிகை அக்கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறாள்?

*****

**பூ**சை அறையின் கதவு மெல்லத் திறக்கப்பட்டது. முதலில் மழவராய அடிகளும், அடுத்துப் பட்டத்தரசியும் வெளியே வந்தனர்.

கதவைச் சாத்திவிட்டு அரசியார் பக்கம் திரும்பிய அடிகள், “தாயே, சோழ நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பதில் இது! அதனால்..” என்று புன்முறுவலுடன் பார்த்தார்.

“இந்தப் பதிலைச் சோழச் சக்கரவர்த்தியின் காதில் தவிர, வேறு யாருக்கும் நான் சொல்லமாட்டேன்; கவலைப்படாதீர்கள்!”

“இளவரசர் ஜாதகத்தையும், வேங்கி இளவல் இராசேந்திரன் ஜாதகத்தையும் ஆராய்ந்து ஏழு தினங்களுக்குள் குறிப்பெடுத்து வைக்கிறேன். நம்பிக்கைக்குப் பாத்திரமான நபரிடம் ஓலை கொடுத்து அனுப்புங்கள். அவரிடம் குறிப்பைக் கொடுத்தனுப்புகின்றேன்!”

“ஆகட்டும்!” என்று கூறிய பட்டத்தரசியார் இளையராணியிடம் “போகலாமா?” என்றார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதுவரை பூசை அறையில் என்ன நடந்தது என்பதை அறியும் ஆவலோடு, நிலை கொள்ளாமல் உட்கார்ந்திருந்த அவள் குழப்பத்துடனே எழுந்து கொண்டாள்.

பட்டத்தரசியார் ஐந்நூறு பொற்காசுகள் அடங்கிய முடிப்பை அடிகளிடம் தருமாறு திருவரங்கனுக்கு உத்தரவிட்டுத் தேரில் ஏறிக் கொண்டார். 'அம்பிகையின் பதில் என்னவாக இருக்கும்...?' அந்தக் கேள்வியோடு, தேரில் கால் வைத்தாள் இளையராணி.

பொற்காசுகள் அடங்கிய முடிப்பை அடிகளிடம் தந்த திருவரங்கன், "தங்களின் சீடன் காளிங்கராயன் வெளியே காத்திருக்கின்றார். உள்ளே விடவில்லை என்று என் மீது கோபம்!" என்றான்.

"அவன் கிடக்கின்றான் மடையன்; உள்ளே வரச் சொல்லுங்க!" என்று பொன் முடிப்பை வைக்க உள் அறைக்குள் நுழைந்தார்.

இதுவரை மிகுந்த சலிப்புடன் வேப்பமரத்தின் அடியில் உட்கார்ந்திருந்த காளிங்கராயன், பொறுமையின்றி வேகமாக எழுந்தான்.

வெளியே வந்து கொண்டிருந்த திருவரங்கன் அருகில் வந்து, "இப்போதாவது நான் உள்ளே போகலாம் இல்லையா?" என்றான் கோபம் இழைந்த குரலில்.

"போகலாம்!" என்று அவனுக்கு அனுமதி தந்துவிட்டுப் புரவியில் ஏறினான் திருவரங்கன்.

அன்ன முகப்புடைய அலங்கார ரதம் நாகை அரண்மனை நோக்கிப் பறந்தது.

## அத்தியாயம் - 5

**பி**ற்காலச் சோழர் வரலாற்றில், ஒரு பொன்னேட்டைத் துவக்கி வைத்த மாவீரனும், அரசர்க்கரசனான இராஜராஜனின் புத்திரனான முதலாம் ராஜேந்திரன் தன் கங்கை வெற்றியைக் குறிக்கும் முகத்தான் உருவாக்கப்பட்ட பெருநகரமே கங்காபுரி என்றழைக்கப் பெறும் கங்கைகொண்ட சோழபுரம்.

திட்டமிட்டுப் பெரிய கட்டிட வல்லுநரைக் கொண்டு அமைக்கப்பட்ட அந்தப் பெரிய நகரமாகட்டும், அதற்குள்ளேயிருந்த உயர்ந்த மாடமாளிகைகளாகட்டும், அதற்கு நடுவே தஞ்சைச் தரணியிலிருக்கும் இராசராசேச்சுரம் போன்று கற்றளியால் உருவாக்கப்பட்ட கங்கைகொண்ட சோழேச்சுர திருக்கோயிலாகட்டும், மேற்குப்புறம் தெற்கு வடக்காகப் பதினாறு கல் நீளத்தில் கடலெனக் காட்சியளிக்கும் சோழ கங்கம் ஏரியாகட்டும்... எல்லாமே அந்தச் சோழ மாமன்னர்களின் பெருமையைப்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பறைசாற்றுவதைப் போல, அந்த முன்னிரவு நேரத்தின் நிலவொளியில் கம்பீரமாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

பரந்து விரிந்து நிற்கும் அந்த ஏரியின் கொள்ளை அழகை என்னவென்று சொல்வது? நிலவொளியில் அதன் நீர்ப் பரப்பைப் பார்த்தால், பெரிய கண்ணாடியைப் பூமியின் மீது பரப்பி வைத்தாற் போன்றல்லவா இருக்கின்றது!

கோட்டை அகழிக்கு ஏரியில் இருந்து நீர்ப்போகும் பெரிய கால்வாய் ஒன்று, பிரமாண்டமாக அமைக்கப்பட்டு, தற்போது நீரின் அளவு அகழியில் போதுமானதாய் இருந்ததால், அக்கால்வாயைப் பெரிய இரும்பு மதகு கொண்டல்லவா அடைத்திருக்கிறார்கள்!

'இராசேந்திரசோழன் மதில்' என்னும் பெயருடன் அமைக்கப்பட்டிருந்த கங்காபுரியின் கோட்டை மதிற்சுவர் சுமார் ஆறு முழத்திலிருந்து எட்டு முழ அளவுக்கு அகலமாயிருந்தது.

சுத்தம் செய்யப்பட்ட களிமண்ணால் உருவான பெரும் செங்கற்களைக் கொண்டு, கனமாய் இரு சுவர்களை வைத்து, அச்சுவர்களுக்கு இடையில் உள்ள வெற்றிடத்தை ஆற்று மணலால் நிரப்பி, மதிற்சுவரை எட்டு முழ அகலத்துக்கு உருவாக்கியிருக்கின்றனர் என்று அறியும் போது சோழ நாட்டுக் கட்டிட வல்லுநர்களின் கைத்திறமையைப் போற்றாமல் இருக்க முடியாது!

அதன் மீது...

ஒரு கையில் தீப்பந்தமும், மறு கையில் வேலும் இடையில் வாளுமாய்ச் சோழ வீரர்கள் கடமை உணர்வுடன் காவல் காத்து நின்றனர்.

கோட்டையின் உள்ளே பல்வேறு மக்களின் குடியிருப்புகளும், பலவித அங்காடிகளும், போர் வீரர்களின் பாசறைகளும் மற்றும் நன்செய் புன்செய் நிலங்களுமாக இருந்தன.

அதற்கு அப்பால்-

இன்னொரு உள் மதிற்சுவர் ஒன்று இருக்கிறது!

அதன் உள்ளேதான் அரசர், மற்றும் அவரின் குடும்பத்தினர், பெருஞ் செல்வந்தர்கள், அரசாங்கத்தில் முக்கிய பதவி வகிக்கும் அதிகாரிகளின் மாளிகைகள் இருந்தன.

இந்த உள்கோட்டை மதிற்சுவருக்குத்தான் 'உட்படைவிட்டு மதில்' என்று இன்னொரு பெயரும் வழங்கி வருகின்றது.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கீழைக்கோட்டை வாயில் வழியாக ‘இராசராசன் பெருவழி’ என்ற பெயருடன் ஒரு பெரிய வழி இக்கோட்டையிலிருந்து வெளியேயும் செல்ல...

அந்த வழியில்தான், மன்னன் மற்றும் அவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வசித்து வரும் மாளிகைகள் இருந்தன. அதோ! மூன்றடுக்குகளுடன் கம்பீரமாய் இருக்கும் மாளிகைதான் மாமன்னரின் அரண்மனை!

அரசரின் தந்தையின் பட்டப் பெயர்களில் ஒன்றான ‘சோழ கேரளன்’ என்ற பெயரே அதற்கு இடப்பட்டு இப்போது ‘சோழ கேரளன் திருமாளிகை’ என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

அந்த மாளிகையின் சாளர முகப்பில், ஒயிலாய் மெல்லிய பூங்கொடி ஒருத்தி, நின்றபடி தன் அகன்ற கரு விழிகளால் எதையோ பார்த்துக் கொண்டிருக்கின்றாள்!

அது எது என்று பார்த்தால், இதே போன்று எதிர்ப்புறத்தில் அமைந்த சாளர முகப்புத்தான்!

ஆனால், அந்த இடம் வெற்றிடமாய் அல்லவா இருக்கின்றது. இருந்தாலும் குமரியின் பார்வை அதைவிட்டு நகரவில்லையே!

அம்பிலும் கூரிய அவளின் கண்களின் கவர்ச்சிக்கு இந்த உலகத்தையே கொடுத்தாலும் ஈடாகாது போலிருக்கிறது!

அத்தகு சிறப்புப் பெற்ற பார்வைக்கு இலக்கான அந்த வெற்றிடம் உண்மையிலேயே கொடுத்துத்தான் வைத்திருக்க வேண்டும்!

கார்மேகம் போன்ற குமரியின் கூந்தல், அவளின் பின் பகுதி முழுமையும் மறைத்து நிற்க, புருவங்களின் கீழ் அமைந்த நாசியின் எடுப்பான அமைப்பு, பார்க்கும் ஆடவர்களின் மனதைச் சுண்ட, திருத்தமாய் அமைந்த செவ்விதழ்களின் சிவப்புக்கு எதை உதாரணம் சொல்வது என்று பார்ப்போர் மயங்க, மாங்கனி என அளவாய்ப் பருத்து வழு வழு என்றிருக்கும் கண்ணாடிக் கன்னங்களின் மினுமினுப்பைப் பளிச்சிடும் மின்னலுக்கு ஒப்பிட்டால்தான் என்னவென்று கவிஞன் சிந்தனை வயப்பட... இவ்விதச் சிறப்புகளுடன், அந்தச் சாளரத்தின் இருளைப் போக்க வந்த சூரியன் போல் ஜொலிக்கும் அவள் யார்?

தற்போதைய சக்கரவர்த்தி வீரராசேந்திரருக்கு முன்பு இந்நாட்டையாண்ட இரண்டாம் இராசேந்திரன் அருமைத் திருமகள் அவள். பெயர் மதுராந்தகி.

சாளரத்தை ஒட்டியிருந்த கதவின் பின்னிருந்து, “அரசகுமாரி, அரசகுமாரி!” என்று கூப்பிடும் குரல் அப்பொழுது கேட்டது.

மதுராந்தகி கதவைத் திறந்தாள்...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இவள் வயதையத்த இளமங்கை ஒருத்தி, காண்போர் கருத்தையழிக்கும் கவர்ச்சியைத் தன் மேனியெங்கும் கொண்டு, இளமை தளதளக்க நின்று கொண்டிருந்தாள்.

"ஏன் இந்நேரத்தில் வந்தாய்? உனக்குத் தூக்கம் வரவில்லையா?" என்று அவளை வினவினாள் மதுராந்தகி.

சோழ நாட்டுத் தளபதியின் மகளான மலர்விழி 'களுக்'கென்று சிரித்தாள்.

"நீங்கள் மட்டும் என்னவாம்! துயின்றதின் அடையாளம் உங்கள் முகத்தில் மட்டும் இருக்கிறதா?" என்று திருப்பிக் கேட்டாள்.

"கள்ளி. என்னையா திருப்பிக் கேட்கிறாய்?" என்று மதுராந்தகி அவளின் கன்னத்தைக் கிள்ள முயல, அதிலிருந்து தப்பிப்பதற்காகச் சற்று நகர்ந்து, "நீங்கள் கிள்ள வேண்டிய கன்னம் இதுவல்ல" என்றாள் கேலியுடன்.

"குறும்புத்தனம் கொண்ட பொல்லாத பெண்ணே! உன்னை என்ன செய்கின்றேன் பார்!" என்று அவள் மலர்விழியைத் துரத்த, நட்ட நிசியில் இருவரும் சிறிது நேரம் கண்ணாமூச்சி விளையாடி, கடைசியில் மதுராந்தகியிடம் சிக்கிய மலர்விழி...

"இந்தக் கைகளில் சிக்குண்டு அவர் என்ன பாடுபடுவாரோ" என்றாள்.

"வரவர உன் குறும்புக்கு எல்லையே இல்லாமல் போய்விட்டது. இனிமேல் நான் உன்னிடம் பேசப் போவதில்லை!" என்று பொய்க்கோபத்துடன் பஞ்சணையில் வீழ்ந்தாள் மதுராந்தகி.

அடுத்தகணமே...

அவளது எடுப்பான முன் அழகுகளால் தாக்குண்ட பஞ்சணை மெல்ல கிறீச்சிட்டது. தொடர்ந்து இவ்விதம் கிறீச்சிட்டால், அந்த முன் அழகுகளின் தாக்குதல் தனக்குக் கிடைக்காமற் போய்விடும் என்று அஞ்சி பஞ்சணை, சப்தமெழுப்புவதை நிறுத்திவிட்டு மகிழ்ச்சியுடன் அப்படியே அவளைத் தாங்கவும் செய்தது.

"மதுராந்தகி அவர்களே, கொஞ்சம் என்னைப் பார்க்க முடியுமா? இப்படிக் கேள்வி கேட்பது... சோழ நாட்டுத் தளபதியின் மகளான மலர்விழிதான் வேறு யாருமல்ல..." என்றாள் மெல்லிய சிரிப்புடன்.

"உன்னிடம் நான் பேசவே போவதில்லை" என்று அழுத்தமாய்க் கூறிய மதுராந்தகி, பஞ்சணையிலிருந்த மயில் தோகையை எடுத்து, அவள் மீது வீசிவிட்டு, சாளர முகப்பில் போய் நின்று கொண்டாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“எப்படி இருந்தாள் இளவரசி? எப்படி ஆகிவிட்டாள்! பார்க்கவே பரிதாபமாக இருக்கின்றது!” என்று சொல்லிக் கொண்டே பஞ்சணையில் சாய்ந்து கண்களை மூடினாள் மலர்விழி.

எதிர்புறத்திலிருந்த சாளர முகப்பு இன்னும் வெற்றிடமாகவே இருந்தது.

மதுராந்தகி தன் பார்வையை அங்கே செலுத்தி, ‘இன்னுமா அவருக்கு அரசாங்க அலுவல்கள்?’ என்று தன்னையே கேட்டுக் கொண்டாள் சலிப்புடன்.

அவள் எதிர்பார்க்கும் அரசகுமாரன்தான் யார்?

கடார வெற்றியீட்டிச் சோழ நாடு திரும்பி வந்திருக்கும் இராசேந்திரன்தான் அவன்! எதிர்புற சாளர அறை அவனுக்குரியதென்பது இங்கே குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

பார்க்கிறவர்கள் ஏன் இப்படி மெலிந்துவிட்டாய்? என்றல்லவா கேட்கின்றார்கள். இதோ தோளிலிருக்கும் இப்பொன்னணி அடிக்கடி கழன்று முன் கைகளில் வந்துவிடுகின்றது! இதைப் பார்த்தாவது அவர் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் என்று தெரிந்து கொள்ளக் கூடாதா?

சே! இந்த ஆண்கள் மனதே இப்படித்தான். ஆரம்ப சூரத்தனம் என்று சொல்வது போல்... முதலில் விழுந்து விழுந்து காதல் செய்வது? பிறகு...? பழகிப் போன பொருள் என்று அலட்சியம் செய்வது! அந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு பெண் கொஞ்சம் இளமையோடு பார்ப்பதற்குச் சற்று அழகாகவும் அவர்களின் காமக் கண்களுக்குத் தென்பட்டால் முன்பு காதலித்தவளை அடியோடு கைவிடுவது...

எத்தனை நேரம் நான் இந்த முகப்பில் கால் கடுக்க நிற்பது? நின்றது போதும், உள்ளே போ! என்றல்லவா என் கால்கள் சொல்கின்றன. ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அல்லவா இன்னும் நான் நின்று கொண்டிருக்கின்றேன்.

கல்லுக்குள் நீர் கசியும் என்பார்கள்! ஆனால், கொஞ்சம் கூட கனியாத இவர் மனதை எதற்கு ஒப்பிடுவது?

ஒருவேளை நான் இங்கே வந்து நிற்பது அவருக்குத் தெரியாதா?

இதென்ன கதை... இதைவிட வேறு வேடிக்கை இருக்க முடியுமா? இந்தச் சாளரமும் அதையொட்டிய இவ்வறையும் எனக்குச் சொந்தம் என்று அவருக்கு நன்றாகத் தெரியுமே! எத்தனையோ முறை நான் இந்தச் சாளர முகப்புக்கு வருவதற்கு முன்னே அவர் வந்து எனக்காக எதிர்ப்புறத்தில் காத்து நிற்பாரே!

இப்போது...?



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நான் அவரை மாலையில் வரவேற்கவில்லை என்ற கோபத்தில் இருக்கின்றாரா? நாளைக்கு மலர்விழியைத்தான் அவரிடம் அனுப்பிப் பார்க்க வேண்டும் என்ற முடிவுடன் இன்னும் கொஞ்சம் இருந்து பார்த்து விடுவோமே என்ற நப்பாசையோடு எதிர்புறத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள் மதுராந்தகி.

அதே சமயம்...

சோழ நாட்டுத் தளபதியான தன்மபாலனுடனும், தன்னுடன் கடாரம் வந்த உபதளபதியான சிறிய தன்மபாலனுடனும் மற்றும் முக்கிய தலைவர்களுடனும் உரையாடிவிட்டு உள்ளே வந்த சாளுக்கிய அரசகுமாரனான இராசேந்திரன் கதவைத் தாளிட்டான்.

இதுவரை அவன் உள் மனதில் அடைபட்டுக் கொண்டிருந்த மதுராந்தகியைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இப்போது தலை தூக்கியது.

கதவைத் திறந்தான்...

சில்லென்று குளிர் காற்று வீசியது...

கண்கள் எதிர்ப்புறத்தை நோக்கின.

நன்றாய் அகன்று சிவந்த அவளின் விழிகள் மலர இதழ்களில் முத்துப்போல் பற்கள் தெரிய அவனைப் பார்த்து மெல்ல முறுவலித்தாள்.

ஆனால்...

வலித்துக் கொண்டிருந்த அவளின் கால்கள் நீண்ட நேரமாய் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்ததை அச்சமயம் நினைவூட்டின. முறுவலித்த இதழ்கள் "நிரம்ப உதாசீனம்தான்" என்று முணுமுணுக்க அதன் விளைவாய் இப்போது அங்கே முனிவு குடிகொண்டது. சற்றும் யோசிக்காது மதுராந்தகி சரேலென உள்ளே திரும்பிவிட்டாள்.

அதிர்ச்சியுற்ற இராசேந்திரன் 'எதற்காக உள்ளே போய்விட்டாள்?' என்று ஒன்றும் புரியாமல் கொஞ்ச நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

அவனுக்கு மட்டும் கோபம் வராதா?

அவனும் திரும்பி உள்ளே போய்விட்டான்!

அன்று இரவு முழுவதும்...

உறக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்த இருவர் செவிகளிலும், கங்காபுரிக் கோட்டையை வலம் வந்து கொண்டிருந்த காவல் வீரர்களின் காலடி ஓசை நாராசம் போன்று விழுந்து கொண்டிருக்கத்தான் செய்தது.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 6

அதே நள்ளிரவு நேரம்...

சோதிடர் மழவராய அடிகள் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்த காளிங்கராயன் எழுந்து உட்கார்ந்தான். தோள்களை உயர்த்தி, கைகளை வளைத்து, பெரிய கொட்டாவிவிட்டுச் சோம்பலை முறித்துக் கொண்டான்.

உடல் சிலிர்க்க வீசிய நள்ளிரவின் குளிர்க்காற்று, அவன் பரந்த தேகத்தைத் தாக்க, மேல் போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு, தலையில் பெரிய தலைப்பாகையுடன் கிழக்கு நோக்கிச் செல்லும் சாலையில் நடக்க ஆரம்பித்தான்.

'இந்நேரம் கிழவன் உறக்கத்திலிருப்பானா? அல்லது 'அம்பிகையே!' என்று மனம் உருகித் தோத்திரம் செய்து கொண்டிருப்பானா?'

திடீரெனக் கதவைத் திறந்து என்னைத் தேடினால்...? நான் என்ன பதிலைச் சொல்வது கிழவனுக்கு?

'தூக்கம் வராததால் சற்று நேரம் காலாற நடந்து சென்றேன்!' என்று சொல்லிவிடலாம் என மனதிற்குச் சமாதானம் கூறிக் கொண்டு, வேகமாய்க் கடலை நோக்கிச் செல்லும் பாதைப் பக்கம் நடக்கலானான் காளிங்கராயன்.

அந்த அமைதியான நடுநிசியில், பௌர்ணமியின் பூரண ஒளியில், கடலின் ஆர்ப்பரிக்கும் ஓசை அப்பகுதியெங்கும் நிறைந்திருந்தது.

அவனுக்காகவே எதிர்பார்த்து இருப்பது போல, பாதைப் பக்கம் ஓரமாய் இருந்த மற்றொரு வீட்டுத் திண்ணையில் படுத்திருந்த அம்மையப்பனான சிவபக்தன் எழுந்து காளிங்கராயனைப் பின் தொடர ஆரம்பித்தான்.

கடல் வந்தது...

அலைக் கரங்கள் உயர்ந்து, உயர்ந்து, உயர்ந்த வேகத்திலேயே கடலுக்குள் அமிழ்ந்தும் மறைந்தும் போயின.

நாகைத் துறைமுகத்தின் கலங்கரை விளக்கின் ஒளி, இருகாத தூரம்வரை நன்கு பரவியிருந்தது.

நங்கூரமிட்டு நின்று கொண்டிருந்த வெளி நாட்டுக் கப்பல்களும் அந்த ஒளியில் நன்கு தெரிந்தன.

சற்றே அமைதி பெற்றிருக்கும் நாகைத் துறைமுகம் இன்னும் கொஞ்ச நேரத்தில் சுறுசுறுப்பு பெற்றுவிடும். கடலைக் காக்கும் காவல் வீரர்களும், கடற்கரையை வலம்வர



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆரம்பித்துவிடுவர் என்ற நினைவு காளிங்கராயனுக்கு வந்ததும், ‘காரியத்தை அதற்குள் கவனித்துவிட வேண்டும்’ என்று.

மேற்குப் பக்கமாய் கடலை ஒட்டி விரைந்து நடக்கத் துவங்கினான். அலைகள் வழக்கத்திற்கு விரோதமாய்க் கிளம்பி, கரை முழுவதையும் ஆக்கிரமிக்கும் போதெல்லாம் அவன் முழங்கால்களும் அலை நீரால் நனைந்தது. சில சமயம் முழங்காலுக்கு மேலிருந்த துணியும் ஈரமாகியது. இதைப் பற்றியெல்லாம் அவன் கவலைப்படவில்லை. வேகமாக நடக்க வேண்டும் என்ற முனைப்போடு, நடந்து கொண்டிருந்தான்.

இதுவரை காளிங்கராயனைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த அம்மையப்பன், அவன் மேற்குப் பக்கம் கடலையட்டி வேகமாய்ப் போவதையுணர்ந்து, அவன் பின்னே தானும் நடந்தால், யாராவது வருகிறார்களா என்று அவன் பின்பக்கம் திரும்பிப் பார்த்தால், எவ்வித மறைப்பின்றி, ஒரே மணல்வெளியாய் இருக்கும் அப்பகுதியில் தன்னுடைய வடிவம், அவன் கண்களுக்குப் புலப்பட்டுவிடும் என்று, மணற்பரப்பைத் தாண்டி, மேற்கு நோக்கிச் செல்லும் கடற்கரை வழியாக, மரங்களுக்கிடையில் மறைந்து மறைந்து அவனைப் பின் தொடரலானான்.

நாகைத் துறைமுகத்திலிருந்து இருகாத தூரம் வரை நடந்த காளிங்கராயன் சட்டென்று நின்றான்.

அவன் நின்ற இடத்தின் நேர் எதிரே தடாகமும், தடாகத்திற்கு அப்பால் தென்னைமரத் தோப்பும் தென்பட்டது.

தோப்பின் நடுவிலிருந்த மணற்பரப்பில் சிறு சிறு படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அங்கிருந்து கூப்பிடும் தூரத்தில் மீனவர் சேரி ஒன்றும் இருந்தது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகளின் நடுவில் கனமான போர்வையைத் தன் உடல் முழுவதும் போர்த்தியபடி இவனை எதிர்பார்த்து தூமகேது உட்கார்ந்திருந்தான். தடாகத்தின் ஆழமில்லாத பகுதியில் கால்வைத்து, அதைக் கடந்த காளிங்கராயன், தோப்பிற்குள் நுழைந்தான்.

படகின் முன் பக்கத்து மூலையில் உட்கார்ந்தவாறு காலைத் தொங்கவிட்டபடியிருந்த அவன், தன்னை நோக்கி வரும் காளிங்கராயனைப் பார்த்துப் போர்வையைச் சரி செய்தபடி தரையில் கால்களைப் பதித்து இறங்கி, “யார் காளிங்கராயன்தானே?” என்றான் உரக்க.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மிக வேகமாய் வந்து சேர்ந்ததில் ஏற்பட்ட படபடப்பு அடங்க, ஒரு இமைப்போது மௌனமான காளிங்கராயன் "தூமகேதுவா?" என்றான் திருப்பி.

"நான்தான்... ஏன் இவ்வளவு நேரம்?" என்றான் எரிச்சலுடன்.

"ஒரு வழியாகக் கிழவனைப் படுக்க வைத்துவிட்டு வருவதற்குள் நேரமாகிவிட்டதப்பா! பாண்டிய நாட்டிலிருந்து எப்போது வந்தாய்?"

"இன்று காலையில்தான் வந்தேன்! திங்கள்தோறும் பௌர்ணமியில்தான் நாம் இங்கே சந்திப்பதென்று ஏற்பாடாயிற்றே!" என்ற தூமகேது, "என்ன இது வழக்கத்திற்கு மாறாக இன்று கடல் அளவுக்கு மீறி அட்டகாசம் செய்கிறது" என்றான்.

"நான் கூட அதைப் பற்றிய சிந்தனையோடுதான் வந்தேன். என்னவென்றே தெரியவில்லை!" என்று நடுக்கடலில் பனைமர அளவுக்கு உயரவே கிளம்பி எழுந்த அலைகளைப் பார்த்தவாறு சொன்னான் காளிங்கராயன்.

"இப்போதுதான் எனக்கும் புரிகிறது காளிங்கராயா. இந்தக் கடல் அன்னையின் ஆசைக்குகந்த மகனான நம் பாண்டிய மன்னன் கொடூரச் சோழ அரசர்களின் கீழ், துரதிர்ஷ்ட வசத்தால் அடிமையாய் இருப்பதைப் பார்த்து மனம் வெதும்பி இவ்விதம் ஆர்ப்பரிக்கிறாளப்பா!" என்று கடலை நோக்கித் திரும்பி தன் இரு கைகளையும் உயர்த்தினான்.

"ஏ, கடல் தாயே! இன்னும் நன்றாகக் கொந்தளி! இச்சோழர் பட்டினத்தை அப்படியே உந்தன் அலைக்கரங்களால் மூடி, பூண்டோடு அழித்துவிடு. ஒரு பசும்புல் கூட இங்கே தலைகாட்டக் கூடாது!" என்று உரக்க 'ஹோ-ஹோ'வென தென்னந் தோப்பே அதிரும்படிப் பேய்ச்சிரிப்புச் சிரிக்கலானான்.

அச்சிரிப்புக்கு ஏற்றாற் போல நடுக்கடலில் பனைமர அளவு உயரத்துடன் எழும்பிக் கரையை நோக்கி ஆக்ரோஷத்துடன் வந்த அலைகளும், நாகைத் துறைமுகத்தின் அருகிலிருந்த சோழக் கடற்படையைச் சேர்ந்த கப்பல்களை அப்படியே மூழ்கடிப்பது போல மோதின.

கப்பலின் மேல்தளம் வரை வந்து விழுந்த கடல் நீரால் கவிழ்ந்துவிடுவது போல அவை இப்படியும் அப்படியும் பயங்கரமாக ஆடத் துவங்கின.

மேல்தளத்தின் மூலையில் வானைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த தலைவன், அலையின் கடுமையை உணர்ந்து, அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி, இன்னொரு பக்கம் பாய்மரத் துணியை விரிக்கும்படி உத்திரவிட்டான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இப்போது கப்பல்கள் அலைகளின் தாக்குதலைச் சமாளித்து நிலையாய் நின்றுவிட்டது.

சமுத்திரத்தையொட்டிச் சென்ற பெருவழியில் அவனைப் பின் தொடர்ந்து வந்த அம்மையப்பன், காளிங்கராயன் தென்னந்தோப்பிற்குள் நுழைவதைக் கவனித்து, அவனும் நுழைந்தான். ஒவ்வொரு மரமாய்க் கடந்து, காளிங்கராயனுக்கு நாற்பது முழ தூரம் இருக்கும் போது, மேற்கொண்டு முன்னே செல்வதை நிறுத்திவிட்டு, ஒரு மரத்தின் பின்னால், தன்னை நன்கு மறைத்துக் கொண்டான்.

அந்தச் சமயம் பார்த்துத்தான் தூமகேது, தன் கைகளை உயரத் தூக்கிக் கடலைப் பார்த்தபடி 'ஹோ-ஹோ'வென உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தான்.

அம்மையப்பனுக்குப் பயத்தினால் உரோமங்கள் சிலிர்த்து நின்றன.

'அரக்கனாக இருப்பானா? ஏன் இப்படிச் சிரிக்கிறான்?' என்று தன்னையே கேட்டுக் கொண்ட சிவபக்த சிரோமணி 'அவர்கள் பேசப் போகும் விஷயமும் அந்த மாதிரி தீவிரப்பட்டதாகத்தான் இருக்கும்' என்று காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டான்.

ஆனால் 'ஹோ' என ஆர்ப்பரிக்கும் அந்தக் கடல் எழுப்பும் சப்தத்தில், பேசுவது ஒன்றும் கேட்காமல் போகவே, இன்னும் கொஞ்சம் நெருங்கிச் சென்றால் நன்றாகக் கேட்கலாம் என்று சுற்றும் முற்றும் பார்த்தான்.

இருவரும் பேசிக் கொண்டிருந்த இடத்தில் நிறைய படகுகள் வரிசையாய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அதன் அடியில் சென்று படுத்துக் கொண்டால், எந்தவிதத் தடங்கலுமின்றி பேச்சைக் கேட்டுவிடலாம் என்று அவனுக்குப்பட்டது.

ஆனால்... படகுக்கு அடியில் எப்படிப் போய்ப் படுப்பது?

சிறிது நேரம் யோசித்த அம்மையப்பன் மூளைக்கு யுக்தி ஒன்று தோன்றியது. மறைந்திருந்த மரத்திலிருந்து வலப்புறமாக வரிசையாய் இருக்கும் தென்னை மரங்களிடையே, ஒளிந்து ஒளிந்து சென்றால், படகுக்கு அருகில் சென்றுவிடலாம் என்று மரமோடு மரமாக மறைந்து மறைத்து சென்றான். அதிலிருந்து படகுகள் இருந்த இடம் எட்டு முழ தூரம்தான் இருந்தது. ஆனால் அந்த இடைவெளியில் எந்தவித மரமோ, மறைந்து செல்வதற்கு ஏதுவான தடுப்போ இல்லாமல் ஒரே வெட்ட வெளியாய் இருந்ததால் என்ன செய்வதென்று யோசித்தான். எப்படியும் போய்த்தான் தீர வேண்டும் என்ற உறுதியுடன், 'சிவ சிவ' என்று நிலவைப் பார்த்தான். அது பால் போல் பளிச்சென்றிருந்தது. கொஞ்சம் பொறுமையுடன் ஏதாவது மேகம் வந்து மூடட்டும் என்று



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

காத்திருந்தான். அம்மையப்பனுக்குச் செவி சாய்த்தது போல பௌர்ணமி சந்திரனைப் பெரிய மேகம் வந்து மறைக்க, இதுதான் சந்தர்ப்பம் என்று மணல் தரையில் படுத்து உருண்டபடியே படகுக்கு அடியில் போய், நீளமாய் அதே நிலையில் படுத்துக் கொண்டான்.

"கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து தென்னன் ஏதாவது செய்தி கொண்டு வந்தானா?" என்று காளிங்கராயனைக் கேட்டான் தூமகேது.

"சாளுக்கிய அரசகுமாரன் கடாரத்தில் வெற்றியீட்டி கங்கைகொண்ட சோழபுரம் திரும்பிவிட்டான். சோழ அரசர் இன்றோ நாளையோ என்று நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றார்" என்ற காளிங்கராயனை தூமகேது இடைமறித்து, "என்ன சொன்னாய்!" என்றான் பரபரப்புடன்.

"அரசருக்கு அந்திமக் காலம் நெருங்கிவிட்டது!" என்றான் காளிங்கராயன் அழுத்தமாக.

தூமகேது இடிஇடியென்று கடல் ஓசையே அமுங்கிவிடுவது போல, பெரிதாய்ச் சிரித்தான்.

படகுக்கு அடியில் படுத்திருந்த அம்மையப்பனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இவன் மனிதன்தானா? அல்லது முற்பிறவியில் பேய்க்கணமாக இருந்திருப்பானோ? என்று எண்ணியவாறு படகோடு படகாக ஒட்டிப் படுத்துக் கொண்டு காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டான்.

"அரசருக்கு அந்திமக்காலம் நெருங்கிவிட்டது என்று நீ சொன்ன வார்த்தையைக் கேட்டு நான் நிரம்பவும் மகிழ்ந்து போனேன் காளிங்கராயா! இரு.. இன்னும் கொஞ்சம் சிரித்துவிட்டு வருகின்றேன்" என்று மறுபடியும் உரக்க நகைக்கலானான்.

அது அடங்க இருபது நொடிப் பொழுது ஆனது.

"அப்புறம்?" என்றான்.

"கிழவன் மழவராய அடிகளிடம் பட்டத்தரசி அரசாங்க விஷயமாக வந்து ஆலோசனை கேட்டார்."

"என்ன ஆலோசனை?"

"மன்னிக்க வேண்டும் தூமகேது; நான் தென்னனிடம் கங்கைகொண்ட சோழபுரச் செய்தியைத் தெரிந்து கொண்டு வர நாகைத் துறைமுகம் வரை போக வேண்டியதாகிவிட்டது. திரும்புவதற்குள் அரசியார் வந்துவிட்டார்கள். அதனால் வீரர்கள் என்ன உள்ளே விடாமல் தடுத்துவிட்டனர்!" என்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"நல்ல நேரத்தை நழுவவிட்டாயப்பா நீ...! என்ன காரியம் செய்தாய்?" என்று தொடையைத் தட்டி அவன் வருத்தப்பட, "அப்படியே நான் உள்ளே போய் இருந்தால் என்ன வெளியே அனுப்பிவிட்டுத்தான் அவர்கள் ஆலோசித்திருப்பார்கள்!" என்றான் காளிங்கராயன்.

"எப்படி அவ்வளவு உறுதியுடன் சொல்கின்றாய்?"

"வீரர்கள் என்னை உள்ளேவிடாதது பற்றிக் கிழவனிடம் நான் முறையிட்டதற்கு... 'அவர்கள் செய்தது சரி' என்று என்னிடமே கிழவன் சொன்னான்" என்றான் காளிங்கராயன் எரிச்சலோடு.

"ஜோதிடக் கிழக் கோட்டானா? சோழ அரசுக்கு விசுவாசமானவனாயிற்றே! அப்படித்தான் இருப்பான். இப்போதெல்லாம் உன் பேரில் அவன் ஐயம் கொள்ளாத வண்ணம் நீ நடந்து கொள்கிறாயல்லவா?" என்று வினவினான் தூமகேது.

"சரிதான்... ஒவ்வொரு நொடியும் என் பேரில் எந்தவிதச் சந்தேகமும் கொள்ளாதபடி நான் நடந்து கொள்வதற்கு படும்பாடு இருக்கே, கடவுளுக்குத்தான் தெரியும்" என்றான் காளிங்கராயன்.

தூமகேது படகிற்குள் கையைவிட்டு, இரு முடிப்புக்களை எடுத்துக் காளிங்கராயனிடம் கொடுத்தான்.

"ஒன்று நீ ஒற்று அறிந்ததற்குப் பாண்டிய மன்னர் மனமுவந்து அளித்த பொற்கிழி; இன்னொன்றைத் தென்னனுக்குக் கொடுத்துவிடு! நீங்கள் சோழ நாட்டில் வசிப்பவர்களாயிருந்தாலும், பாண்டிய மன்னன் மேல் இவ்வளவு விசுவாசம் வைப்பதற்கு, எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கின்றது!" என்றான் தூமகேது.

பொற்கிழிகளைப் பெற்றுக் கொண்ட காளிங்கராயன், "இந்நேரம் கிழவன் விழித்திருந்தாலும் விழித்திருப்பான். நான் புறப்படுகின்றேன்!" என்றான் அவசரத்தோடு.

"சரி... வேறு ஏதேனும் செய்தி..!" என்றதும், காளிங்கராயன் தலையைச் சொறிந்தவாறு, "அரசருக்குப் பின் யார் ஆட்சி பீடத்தில் ஏறுவது? என்பது பற்றிச் சோழ அரச குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய அவர்கள் குழப்பத்துடன் இருப்பதாகவும் செய்திகள் உலவுகின்றன. இந்நிலையைப் பாண்டிய மன்னர் பயன்படுத்திக் கொண்டால், இழந்த அரசை மீண்டும் மதுரையில் நிலை நாட்டலாம்!" என்றான்.

தூமகேதுவுக்கு நெற்றி சுருங்கியது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"சோழ நாட்டில் இப்போது இருக்கும் அரசரான வீரராசேந்திரருக்குப் பின் தற்போதைய இளவரசனான அதிராசேந்திரன்தானே ஆட்சி பீடம் ஏற வேண்டும்! இதில் என்ன போட்டி?" என்றான் புரியாமல்.

"கடாரம் சென்று வந்திருக்கும் சாளுக்கிய இளவரசனான இராசேந்திரனை அரசனாக்க சிலர் முயல்வதாகக் கேள்வி!"

"ஓ... அவனா? சிந்திக்க வேண்டிய விஷயம்தான். இப்போதே நான் போய் மன்னரைப் பார்க்கின்றேன்!" என்று புறப்படத் தயாரானான் தூமகேது.

அவனிடம் விடை பெற்ற காளிங்கராயன், பொன் முடிப்புகளோடு, நாகைத் துறைமுகத்தை நோக்கி நடக்கலானான்.

இன்று இரவு வேலன் வீட்டில் தங்கிவிட்டு அதிகாலையில் அவன் துணையோடு கடல் வழியாய்க் கொற்கையை அடைய வேண்டும். அங்கிருந்து அரசர் தங்கியிருக்கும் தீவுக்குப் போக வேண்டும் என்று மனதிற்குள் திட்டமிட்டபடி மீனவச் சேரியை நோக்கி நடக்கலானான் தூமகேது.

இதுவரை படகின் அடியில் படுத்திருந்த அம்மையப்பன், "அப்பாடா!" என்று எழுந்து, இடுப்பை இப்படியும் அப்படியும் நன்கு வளைத்துவிட்டு, 'பெரிய தொல்லைதான்!' என கைகளை உதறிக் கொண்டு தென்னந்தோப்பைவிட்டு வெளியே வந்தான்.

ஆனால், அவன் கால்கள் சடக்கென்று தென்னை மரத்தின் பின் தாவிவிட்டதே! ஆம்! இப்போது அவன் கண்கள் சிறிது தொலைவில் தோப்பைத் தள்ளி அமைந்திருந்த பாழ்மண்டபத்தைப் பார்க்கின்றன. அப்படி என்ன அந்த இடத்தில்? மண்டபத்தையட்டி தனிமரமாய் உயர நிற்கும் ஒரு தென்னை மரத்தின் கீழ் உட்கார்ந்து என்ன பண்ணுகின்றான் காளிங்கராயன்? மறைந்திருந்து கவனித்த அம்மையப்பன், காளிங்கராயன் அங்கிருந்து சென்றதும், விடுவிடென்று நடந்து போய் குனிந்து பார்த்தான்.

மணலைத் தோண்டி மூடிய அடையாளம் தெரிந்தது.

கிடுகிடு வென்று தோண்டிய அம்மையப்பன் கைகளுக்கு இரு பொற்கிழிகள் கிடைத்தன.

'சிவாய நம!' இன்று நல்ல முகத்தில்தான் விழித்தேன்! என்று புன்னகைத்தான்.

விஷயங்கள் நிறைய கிடைத்துவிட்டன. சீக்கிரம் போய்ப் பெரியவரைப் பார்க்க வேண்டும். அந்த நச்சுக்கன்னி கங்கைகொண்ட சோழபுரம் செல்வதற்குள் நாம் போய்விட



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வேண்டும். அவள் பல்லக்கில் போவதைப் பார்த்துவிட்டுத்தான் இங்கே வந்தேன். ஜாதிப் புரவியில் குறுக்கு வழியில் சென்றால் அவளுக்கு முன் போய்ச் சேர்ந்துவிடலாம். அதற்கு ஆயத்தம் பண்ண வேண்டும் என்று வேகத்துடன் நடக்கலானான் அம்மையப்பன்.

## அத்தியாயம் - 7

**நா**கையிலிருந்து தஞ்சைக்குச் சென்று பிறகுதான் கங்கைகொண்ட சோழபுரம் போக முடியும்.

அதனால் அவ்வழியாகப் பட்டத்தரசியார் தேர் போய்க் கொண்டிருந்தது.

முன்னரும் பின்னரும் வேற்பிடித்த வீரர்கள் புரவியுடன் வர, தேரையொட்டித் திருவரங்கன், அதன் வேகத்துக்கு ஈடு கொடுத்துப் புரவியைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

விடியற்கால நேரமாதலால், மரங்களிலிருந்து பறவைகள் ‘கீச் கீச்‘ என்று சப்தித்துக் கொண்டிருந்தன. வயல்வெளியை நோக்கிக் கலப்பையுடன் மாட்டை ஓட்டிச் சென்று கொண்டிருந்த உழவர்களை வேகமாய்ப் புரவியைவிட்டபடி வந்து கொண்டிருந்த வீரர்கள் வழிவிடும்படி எச்சரிக்க, பட்டத்தரசி வருவதை உணர்ந்த அவர்கள், கலப்பைகளைத் தோளிலிருந்து இறக்கிவிட்டு அரசியாரின் வரவுக்காகப் புன்முறுவலுடன் நின்றனர்.

புரவியின் குளம்பொலியும், அலங்காரத் தேரின் ஓசையும் ஒன்றாகி ஒலிக்க, அதனால் மிரட்சியடைந்த மாடுகள் இப்படியும் அப்படியும் ஓட முற்பட்டன.

பட்டத்தரசி வரும் போது ஏதாவது கோளாறு செய்துவிடப் போகிறதென்று, உழவர்கள் மாட்டின் மூக்குக் கயிற்றை தன் கைகளில் நன்கு இழுத்துப் பிடித்துக் கொண்டு, சிறிது ஒதுங்கி அவர் வரவுக்காகக் காத்து நின்றனர். அரசியின் இரதம் அவர்களை நெருங்கியது. இரதத்தின் முன்னாலிருந்த வீரன், “ஆகவமல்லனை...” என்று ஆரம்பித்துச் சட்டென்று நிறுத்தி, “மகாராசாதி ராச சோழச் சக்கரவர்த்தியின் திருத்தேவியார்” என்று குரல் கொடுத்தான்.

கூடியிருந்த மக்கள் “வாழ்க! வாழ்க!” என்று முழக்கமிட்டனர்.

அவர்களை நோக்கிப் புன்முறுவலுடன் கை கூப்பினார் அரசி. இரதம் அவ்விடத்தைக் கடந்ததும் மெல்லச் சிரிக்கலானார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஜோதிடர் வீட்டில் அம்பிகையிடம் என்ன கேட்டிருப்பார்? அதற்கு அம்பிகை என்ன பதில் கூறியிருப்பாள்? என்று சிந்தித்தபடியிருந்த இளையராணி பட்டத்தரசியின் சிரிப்பினால் சிந்தனை கலையப் பெற்று அவர் பக்கம் திரும்பினாள்.

"இந்நேரம் என் பக்கத்தில் நீ இல்லாமல் என் மகளான இராஜசுந்தரி இருந்திருந்தால் 'ஆகவமல்லனை' என்று முழக்கமிட்ட வீரன் மேல் சண்டைக்குப் போயிருப்பாள்!" என்றாள் பட்டத்தரசி.

'அதற்குக் காரணம் என்ன?' என்பது போல இளையராணி அரசியைப் பார்க்க, "மேலைச்சாளுக்கிய அரசனான ஆகவமல்லனை என் கணவர் ஐந்து முறை போரிட்டு வெற்றி கண்டார். சோழ நாட்டிற்கும் மேலைச்சாளுக்கிய அரசுக்கும் தலைமுறை தலைமுறையாகப் பெரிய பகையே இருந்து வந்தது. அதன் காரணமாக இரு நாடுகளும் போரிலே கவனம் செலுத்தி, ஆட்சி புரிய முடிந்ததே தவிர மக்களுக்கு எந்தவிதமான நன்மையையும் செய்ய முடியவில்லை. இதை நன்குணர்ந்த என் கணவர், பகையை நீக்குவதற்குப் போரிடுவது மட்டும் வழியில்லை என்றறிந்து ஆகவமல்லனின் மகனான விக்கிரமாதித்தனுக்கு இராஜசுந்தரியை மணம் செய்து கொடுத்தார். மண உறவு ஏற்பட்ட இரு நாடுகளும் அன்றைய தினத்திலிருந்து தங்கள் பகையை மறந்துவிட்டன. அதிலிருந்து 'ஆகவமல்லனை ஐயம் மடிவென் கண்ட இராசசேகரன்' என்ற சிறப்புப் பெயரைப் பொது இடங்களில் சொல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று மாமன்னர் உத்தரவிட்டுவிட்டார். பழக்கத் தோஷத்தால் வீரன் வாயில் 'ஆகவமல்லனை' என்ற தொடர் வந்துவிட்டது. உடனே தவறை உணர்ந்த அவ்வீரன், வேறு பெயரைச் சொல்லிச் சமாளித்துக் கொண்டான். அதை நினைக்கும் போதுதான் எனக்குச் சிரிப்பு வந்தது!" என்று தலையை வெளியே நீட்டித் திருவரங்கனை அருகில் அழைத்தார்.

உடனே தேர் நிறுத்தப்பட்டது.

நீண்ட நேரம் இரதத்திலேயே உட்கார்ந்துவிட்டதால் எங்கேயாவது இளைப்பாறிச் செல்லலாம் என்று பட்டத்தரசிரியார் அவனிடம் கூற, வழியில் சோலையோ, கோயிலோ தென்பட்டால், தேரை நிறுத்துவதாகக் கூறினான் திருவரங்கன்.

"அப்படியே செய்துவிடு!" என்று அரசி ஆமோதிக்க, தேர் தஞ்சையை நோக்கிச் செல்லத் தொடங்கியது.

தஞ்சையிலிருந்து சுமார் பத்துக் கல் தொலைவில், பசுமையாய் நிறைய மாமரங்கள் வளர்ந்து, பெருந் தோப்புப் போல் அந்த இடம் தென்பட்டது. அதற்கு நடுவே பெரிய தாமரைக் குளம் ஒன்றும் இருந்தது. அதையொட்டி விண்ணைத்தொடும் உயரத்தில்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அரசமரமும், அதன் கீழ் பெரிய மேடையும் அமைக்கப்பட்டிருந்தது. தங்குவதற்கு ஏற்ற இடமாக இருந்ததால், தேரை நிறுத்தும்படி இரத சாரதிக்கு உத்தரவிட்டான் திருவரங்கன்.

அனைவரும் இறங்கினர்.

அரசியும் இளையராணியும் குளத்தில் முகம், கைகால் கழுவிக் கொண்டு, அரசமரத்தின் கீழிருந்த மேடையில் இளைப்பாறுவதற்காக உட்கார்ந்தனர்.

நான்கு வீரர்கள் வேல்களைக் கையில் பிடித்தவாறு காவலுக்காக நிற்க, மற்ற வீரர்கள் நீர் வேட்கையைத் தனித்துக் கொள்ளக் குளத்தில் இறங்கினர்.

குளத்தின் மேல் படியில் நின்ற வண்ணம் திருவரங்கன் சுற்று முற்றும் கவனித்தான். மனித நடமாட்டமில்லாத இந்த இடத்தில் இப்படி ஒரு தாமரைக் குளம். எவ்விதச் சிதிலமும் அடையாமல் இருக்கிறது. அரசமரமும், அதன் கீழ் மேடையும் ஜனங்கள் வந்து புழங்குவதற்கு ஏற்றவாறு தூய்மையாக வைக்கப்பட்டிருந்தன. மாமரங்கள் வேறு வரிசையாய் ஒழுங்காக இருக்கின்றன. அப்படியென்றால் இங்கே யாராவது வசிக்கின்றார்களா? என்று தன் கண்களைச் சுற்றிலும் சுழலவிட, "அய்யோ!" என்று ஒரு குரல் கேட்டது.

என்னவென்று சப்தம் வந்த பக்கம் அவன் திரும்புவதற்குள் சுருக்குக் கயிறு ஒன்று அவன் தலைக்கு நேராய் விழுந்து தோளோடு சேர்த்து அப்படியே திருவரங்கனை இறுக்கிக் கொண்டது.

கைகளால் சுருக்கை அவிழ்க்கலாமென்று அவன் முயல்வதற்குள், முதுகில் கூர்மையான கத்தி அழுந்த, "அசையாதே" என்று கடுமையான குரல் பின்னாலிருந்து ஒலிக்கவும் செய்தது.

இதற்குள்...

காவலுக்கு நின்ற வீரர்களும் இவனைப் போன்றே கயிற்றால் பிணிக்கப்பட்டுவிட்டனர்.

அதற்குப் பதிலாக-

பட்டத்து அரசியையும், இளையராணியையும் சுற்றி இரு முரடர்கள் உருவிய வாளுடன் நின்று கொண்டனர்.

ஆலமரத்தின் கிளைகளிலிருந்து இன்னும் நான்கைந்து பேர் 'தொப் தொப்'பென்று கீழே குதிக்க, அவர்கள் கையில் வெட்டரிவாளும், வேலும் தென்பட்டன.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நொடிப் பொழுதிற்குள் கச்சிதமாக அம்முரடர்களால் பட்டத்தரசியும் தானும் கைதியாக்கப்பட்டதை உணர்ந்த திருவரங்கனுக்கு என்ன செய்வதென்றே புரியாமல், ஒருகணம் திகைத்துவிட்டான்.

குளத்தில் இறங்கிய வீரர்கள் ஆபத்தான நிலைமையை உணர்ந்து ஆயுதங்களுடன் ஓடி வர, "நெருங்காதே! நெருங்கினால் இருவரையும் பிணமாகத்தான் காண முடியும்!" என்று பட்டத்தரசியையும், இளையராணியையும் சுட்டிச் சொன்னான் முரடர்களில் ஒருவன்.

தடித்த உடலுடன், முறுக்கிய மீசை காதளவுவரை வளர்ந்து பார்ப்பதற்கு அரக்கன் போல் இருந்தான் அவன்.

ஓடி வந்த வீரர்கள் செயலற்று அப்படியே நின்று கொண்டு, திருவரங்கனைப் பரிதாபமாகப் பார்த்தனர்.

திருவரங்கன் சுற்றிலும் பார்வையை ஓட்டினான். முரடர்களைப் பார்த்தால் வழிப்பறி செய்யும் கூட்டத்தைச் சேர்ந்தவர் போல் இருந்தது.

எண்ணிப் பத்துப் பேர்களுக்கு மேல் இல்லை. அரசியிடம் இருவர். வேல் வீரர்கள் பக்கத்தில் நான்கு பேர். தன் முதுகின் பின்னே கத்தியுடன் ஒருவன். இன்னும் மூன்று பேர் எல்லோரையும் கண்காணித்தபடி நின்று கொண்டிருந்தனர். இவர்களில் பருமனான தேகம் படைத்தவன்தான் தலைவனாய் இருக்க வேண்டும்!

ஏறக்குறைய ஐம்பது வீரர்களுடன் இருக்கும் தன்னை, ஒரு நொடியில் மடக்கிவிட்டார்களே! இம்மாதிரி அதிரடித் தாக்குதலில் இவர்கள் கைதேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். நாம் இங்கு வருவதற்கு முன் இவர்கள் எங்கிருந்தனர்? ஓ... அரசமரக் கிளைகளில் கையில் சுருக்குக் கயிற்றுடன் கிளையோடு கிளையாக மறைந்திருக்க வேண்டும். இளைப்பாற வரும் வழிப்பிரயாணிகளைக் கொள்ளையடிப்பதற்கென்றே இவர்கள் இருக்கின்றார்கள் போலும்!

சரி, இவர்கள் நோக்கம் என்ன? வெறும் பொருளைக் கைப்பற்றிக் கொண்டு விட்டுவிடுவார்களா? அல்லது சோழ அரசுக்குப் பகைவர்களால் ஏவிவிடப்பட்டு, உயிரைப் போக்க வந்த காலன்களாயிருப்பார்களா? 'யார் இவர்கள்? பேசிப் பார்த்துவிடுவோம்' என்று பருமனாயிருந்த அவனைப் பார்த்து, "நாங்கள் யாரென்று தெரியுமல்லவா?" என்று கோபத்துடனேயே கேட்டான் திருவரங்கன்.

உடனே அவன் இடி முழக்கம் போல் உரக்கச் சிரித்து, "தெரியும் அப்பனே யார் என்று! நீங்கள் எல்லாரும் கையாலாகாத சோழப் படையைச் சேர்ந்தவர்கள். அதோ...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அரசமரத்து மேடையில் இருக்கும் பெண்மணிகளில் ஒருவர் இந் நாட்டின் பட்டத்தரசி. போதுமா என் விளக்கம்?” என்றான்.

திருவரங்கன் முரடர் தலைவன் சொன்ன பதிலைக் கேட்டுத் திகைத்துவிட்டான். அப்படியென்றால் இவர்கள் வழிப்பறிக் கள்ளர்கள் அல்ல. சோழ அரசவம்சத்தை நிர்மூலமாக்க, சபதம் எடுத்துக் கொண்ட பகை நாட்டுக்காரர்களாக இருக்கலாம். நிச்சயம் அனைவர் உயிரும் இவர்களின் வெட்டரிவாளுக்குப் பலியாகத்தான் போகின்றது. அதற்குள் நாம் ஏதாவது செய்தால்தான் உண்டு என்று ஒருமுறை சுற்றுச் சூழலை நோட்டம்விட்டான்.

ஒன்றும் செய்ய முடியாதபடி மார்பைச் சுற்றிக் கயிற்றுச் சுருக்கும், முதுகின் பின் கூர்மையான கத்தியும் இருக்கிறது! என்ன செய்வது? என் உயிர் போவது பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் பிற்காலத்தில் பட்டத்தரசியின் விலை மதிக்க முடியாத உயிர் என் திறமையின்மையால் பகையரசர்களின் ஒற்றர்களால் பறிக்கப்பட்டுவிட்டது என்றல்லவா சரித்திரம் கூறும். கறைபடிந்த அந்த வரலாற்றுடன் என் பெயருமல்லவா களங்கப்பட்டு நிற்கும்? ஒரு சுத்த வீரனான எனக்கு இப்படியொரு வரலாறு தேவைதானா? அதனால் எதையாவது செய்து அரசியின் உயிருக்குப் பாதகம் வராமல், அவர்களைத் தப்பிக்க வைக்க வேண்டும் என்ற உறுதியுடன் முரடர் தலைவனைப் பார்த்து,

“உங்களுக்குப் பொருள் வேண்டுமென்றால் எவ்வளவு வேண்டுமென்றாலும் தருகின்றோம். எங்களை விட்டுவிடு!” என்றான்.

அதற்கு முரடர் தலைவன் இடியோசை போல அப்பகுதியே அதிரும்படி நகைத்து, “சபாஷ். சுத்த வீரனின் பேச்சு இப்படித்தான் இருக்கும். அதுவும் சோழ வீரனான உனக்குச் சொல்லவே வேண்டாம்!” என்று அவனருகில் வந்து திருவரங்கனை ஏற இறங்கப் பார்த்தான்.

“பொருள் யாருக்கு வேண்டும் அப்பனே! பொருள்! நூறாண்டுகளுக்கு முன் எங்கள் முன்னோர் மாபெரும் பேரரசாக இந்தத் தஞ்சைத் தரணியை முத்தரையர் என்ற பெயரில் ஆண்டு வந்தனர். எங்களை அங்கிருந்து ஓட்டிவிட்டு இந்தச் சோழ நரிகள் அங்கே குடி புகுந்து கொண்டன. அதை மீட்கவே அவர்கள் வழிவந்த நாங்கள் உங்களை மடக்கியிருக்கிறோம்” என்றான்.

“முத்தரையர் வழி வந்தவர்கள்தான் எங்கள் சோழ அரசில் மிகப் பெரிய பொறுப்பு வகித்து, அரசுக்கு விசுவாசமாயிக்கிறார்களே! அப்படியிருக்க நீங்கள்...” என்ற



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

திருவரங்கனை மேற்கொண்டு பேசவிடாமல் முரடர் தலைவன் கோபத்துடன் இடைமறித்தான்.

"அவர்களெல்லாம் குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்புகள். நாங்கள்தான் உண்மையான முத்தரையர் வழி வந்தவர்கள். இப்போது நாடிழந்து கள்ளர்களாய் வழிப்பறி செய்து வருகின்றோம்; எங்கள் குலத்துக்கு ஏற்பட்ட மாசை அகற்றவே உங்களை இப்போது சிறை பிடித்து இருக்கின்றோம். பட்டத்தரசியார் எங்கள் பாதுகாப்பில்தான் இருப்பார். உங்களில் யாராவது ஒருவன் கங்கைகொண்ட சோழபுரம் சென்று, தஞ்சைத் தரணியை எங்களுக்குத் தந்துவிட்டதாக செப்பேடுகளில் அரசனிடம் சாசனம் வாங்கி வர வேண்டும். அது வந்தால்தான் பட்டத்தரசிக்கு விடுதலை" என்றான்.

அதைக் கேட்டுத் திருவரங்கன் திகைத்துப் போனான். இது நடக்கக் கூடிய காரியமா? என்ன வம்பாய்ப் போய்விட்டது! என்று குழம்பிய அவனுக்கு யோசனை ஒன்று தோன்றியது.

ஆகா! இது மட்டும் வெற்றிகரமாக நிறைவேறிவிட்டால் அனைவருக்கும் விடுதலைதான்! இந்தப் பொல்லாத கள்ளர்களும் அழிந்து போவார்கள்! என்று உற்சாகத்துடனே தலைவனைப் பார்த்து, "அப்படி என்றால் உன் கூற்றுப்படியே தஞ்சை போய் அரசரிடம் செப்பேட்டுச் சாசனம் பெற்று வருகின்றேன்! நான் போவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்" என்றான்.

முரடர் தலைவன் திருவரங்கன் அருகில் நெருங்கி வந்தான்.

"ஜாக்கிரதை. நீ வேறு மாதிரி நடந்து கொண்டால் அரசியின் உயிர் உடலில் இருக்காது! எங்கள் உயிரைப் பற்றியும் நாங்கள் கவலைப்படவில்லை என்பதையும் நீ உணர்ந்து கொள்ள வேண்டும்!" என்றான் அழுத்தமாக.

சம்மதத்திற்கு அடையாளமாகத் திருவரங்கன் தலையசைத்தான். முரடர் தலைவன் திருவரங்கன் இடையில் தொங்கிய வாளைக் கழற்றி, மற்றொருவனிடம் கொடுத்து, மார்பைப் பிணைத்திருந்த கயிற்றுச் சுருக்கைத் தளர்த்தி விடுவித்தான். ஆனால், முதுகில் பதித்தபடி குத்துவாளுடனிருந்த ஆள் இன்னும் அதைத் திருவரங்கன் முதுகிலிருந்து எடுக்கவில்லை.

"இது என்ன? முதுகில் இன்னும் கத்தி! எடுக்கச் சொல்லிக் கட்டளையிடுவதுதானே" என்று முரடர் தலைவனைப் பார்த்துக் கூறினான் திருவரங்கன்.

"நீ புரவி ஏறும் வரை இந்தக் கத்தி உன் முதுகை அழுத்திக் கொண்டுதான் இருக்கும். நீ ஏதோ பெரிய வீரன் என்பதற்காக, உனக்குப் பயந்து அம்மாதிரி



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

செய்துவிட்டதாக நினைத்துவிடாதே. எங்கள் தற்காப்புக்குத்தான் அப்படி ஒரு ஏற்பாடு!” என்றான் முரடர் தலைவன்.

குதிரையை நோக்கி மெல்ல நடந்தான் திருவரங்கன். தான் இருக்கும் இடத்திலிருந்து குதிரை நின்று கொண்டிருந்த இடம் ஏறக்குறைய இருபது முழ தூரத்தில் இருந்தது. அதற்குள் ஏதாவது செய்தால்தான் உண்டு. இல்லையென்றால்... சுற்றுமுற்றும் கவனித்த திருவரங்கனுக்குச் சட்டென்று ஒரு யோசனை உதித்தது.

‘கடவுளே! என் முயற்சி பலிக்க வேண்டும். அதன் மூலம் அரசியின் உயிர் பாதுகாக்கப்பட வேண்டும்’ என்று மனதிற்குள் இறைவனை வேண்டியபடி புரவியின் அருகில் சென்று,

“அரசியாரிடம் ஒரு ஓலை வாங்க வேண்டும்” என்றான் தலைவனைப் பார்த்து.

“யாருக்கு?”

“அரசருக்குத்தான். என் வாய் வார்த்தையை நம்பி எப்படி அரசர் செப்பேட்டுச் சாசனம் தருவார்? அதனால்...” என்ற அவனை மேலே பேசவொட்டாது, “எனக்குப் புரிகிறது. சீக்கிரம் ஓலை வாங்கிக் கொண்டு போ!” என்று அதட்டும் குரலில் கூறினான் முரடர் தலைவன்.

மிகுந்த எச்சரிக்கையுடன் இருபுறமும் பார்த்தவாறு திருவரங்கன் அரசியிடம் சென்றான்.

வாட்டத்தோடு மிகச் சோர்வுடன் காணப்பட்ட பட்டத்தரசி, சிறிது கோபத்துடனே திருவரங்கனைப் பார்த்தாள்.

அதன் அர்த்தம்?

உன்னுடைய திறமையின்மையால்தான் இவ்விதம் அகப்பட்டுக் கொண்டேன் என்று பொருளா?

கவலைப்படாதீர் அரசியாரே! இத்திருவரங்கன் பெருமையை என்னும் சிறிது நேரத்தில் உணரத்தான் போகிறீர்கள் என்னும் பொருள்பட அரசியை நோக்கிக் கண்ணைச் சிமிட்டினான்.

“இதோ இருக்கும் இவருக்குத் தஞ்சையை உரிமை செய்து தரும்படி மன்னருக்கு அரசியார் ஓலை தர வேண்டும்” என்று முரடர் தலைவனைச் சுட்டிச் சொன்னான்.

பட்டத்தரசியின் விழிகள் கலங்கின.

“ம்! சீக்கிரம்!” என்று அவரை அதட்டினான் முரடர் தலைவன்.

கலங்கிய விழிகள் அவன் பக்கம் திரும்பின!



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தஞ்சைத் தரணியின் மீது அப்படியென்ன இவனுக்கு ஆசை? தலைகுனிந்து கொண்டாள் பட்டத்தரசி.

“அரசியார் யோசிக்கிறது போல் தெரிகிறதப்பா. சீக்கிரம் ஓலை கொடுக்கச் சொல். இது என்ன அத்தாணி மண்டபம் என்று நினைத்துவிட்டாரா? அரசமரத்தடி. எந்நேரமும் எங்களுக்கு ஆபத்திருக்கிறது என்று நினைத்து அதன்படி செயல்படும் நிலையில் இருக்கிறோம் நாங்கள்!” என்றான் முரடர் தலைவன்.

பட்டத்தரசியின் கலங்கிய விழிகளிலிருந்து, நீர்த் துளிகள் திரண்டு, கன்னத்தில் உருண்டு, தரையில் இரண்டு, மூன்று சொட்டுக்கள் ‘பொட், பொட்’டென்று விழுந்தன.

அவ்வளவுதான் திருவரங்கனுக்கு ஆக்ரோஷம் பிறந்தது! தோள்கள் துடிக்க, முன் கைகள் முறுக்கேற, வலப்பக்கம் நின்ற தலைவன் பக்கம் திரும்பினான். அவன் வாளைக் கையில் வைத்தபடி அரசியைக் கோபத்துடன் முறைத்துக் கொண்டிருந்தான்.

இனிமேல் தாமதிக்க முடியாதென அரசமரத்தின் பக்கமாய்த் தன் விழிகளைத் திருப்பி, “ஐயோ! பெரும் கருநாகம்!” என்று தன் சக்தியெல்லாம் ஒன்று திரட்டிக் கூவினான் திருவரங்கன். அரசியினருகில் விறைப்பாய் நின்ற முரடர்கள் இருவரும் ‘எங்கே..?’ என்று சுற்றுமுற்றும் பதட்டத்தோடு கவனித்தனர்.

முதுகின் பின்னால் கத்தியை அழுத்திக் கொண்டிருந்தவனும் அந்தக் களேபரத்தில் அதைத் தளர்த்தினான். இதுதான் சமயமென்று சரேலென்று குனிந்து அவன் காலை வாரிவிட்டு, அதே வேகத்துடன் முரடர் தலைவன் மீது மின்னலெனப் பாய்ந்து கையிலிருந்த வாளைப் பறித்து, அவனையும் தாக்கி வீழ்த்தினான். அத்துடன் நிற்காது புலி போல் அரசியின் அருகிலிருந்த ஒருவன் மீது பாய்ந்து தன் கையிலிருந்த வாளால் அவன் தலையைத் துணித்தான்.

அதிலிருந்து சிதறித் தெறித்த குருதி பட்டத்தரசியின் நெற்றியின் மீது ‘பொட்’டென்று விழுந்தது.

கண நேரத்தில் இவ்வளவும் நிகழ்ந்துவிட்டதை உணர்ந்த இன்னொருவன் தன் வாளால் இளையராணியை வெட்டுவதற்கு ஆத்திரத்துடன் ஓங்க, இமைப்பொழுதில் தன் வாளினால் தடுத்து, அதே வேகத்திலேயே அவனை இளையராணியிடமிருந்து சிறிது விலகி விழும்விதத்தில் கால்களால் உதைத்தான்.

‘கேவலம்! இந்த அற்பப் பயல் இப்படிச் செய்துவிட்டானே!’ என்று கீழே விழுந்த முரடர் தலைவன் ஆத்திரத்துடன் எழுந்து திருவரங்கனை நோக்கி ஓடி வந்தான். காலை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வாரிவிடப்பட்டுக் கத்தியுடன் தரையிலிருந்த மற்றொரு முரடனும் சமாளித்து எழுந்து, கத்தியைத் திருவரங்கனைப் பார்த்து வீசினான்.

நிலைமை ஆபத்தாவதையுணர்ந்த திருவரங்கன் குளத்தின் மேற்கரையில் இதுவரை என்ன செய்வதென்று புரியாமல் நின்று கொண்டிருந்த வீரர்களை நோக்கி, "சீக்கிரம் வாருங்கள்... இதுதான் சமயம்!" என்று உரக்கக் கத்த, அதற்குள் மார்பை நோக்கி வந்த குறுங்கத்தி, சடக்கென்று அவன் அரசியையும், இளையராணியையும் பாதுகாக்கத் திரும்பியதால், குறி தவறி இடப்புற புஜத்தில் பாய்ந்தது.

உச்சியில் யாரோ அடித்துவிட்டாற் போன்று வலி! அதைப் பொருட்படுத்தினால் நிலைமை தலைகீழாகிவிடும் என்று உணர்ந்து, காயப்பட்ட இடத்திலிருந்து 'குபு குபு' என்று வந்த இரத்தத்தைப் பற்றிக் கவலைப்படாமல், இன்னும் ஆவேசம் மிகுந்து, அரசியின் அருகே சென்று நின்றான்.

சோழ வீரர்களும் சுறுசுறுப்புப் பெற்றுத் தங்கள் ஆயுதங்களுடன் முரடர்களை நோக்கி ஓடி வந்தனர். வீரர்களின் எண்ணிக்கை, அதிகமாக இருந்ததால், முரடர் கூட்டத்திலிருந்து சிலர் தப்பித்தால் போதும் என்று ஓட்டமெடுக்க, வீரர்களில் ஒருவன் வீசிய வேல் ஒன்று, முதுகில் பாய்ந்து ஒருவனை வீழ்த்தியது. அதைக் கண்டு மற்றவர்கள் 'தப்பித்தால் போதும்' என்று தலைதெறிக்க ஓடி மறைந்தனர்.

நிலைமையை அப்படியே மாற்றிவிட்ட திருவரங்கனைக் கொன்றே தீருவதென்ற ஆத்திரத்துடன், முரடர் தலைவன் வாளோடு அவன் மீது பாய்ந்தான். அவன் பாய்ச்சலைத் தன் வாளினால் தடுத்து நிறுத்தி, அதே வேகத்தில் வலப்புறத் தோளில் ஒரு காயத்தையும் உண்டுபண்ணினான் திருவரங்கன்.

இருவரும் ஆக்ரோஷத்துடன் போரிட்டனர். சில நொடிகள் வரை முரடர் தலைவனின் தாக்குதலையெல்லாம் வீணடித்த திருவரங்கன், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவன் மார்பில் வாளைப் பாய்ச்சினான்.

'ஹோ!'வென்ற பெருங்குரலுடன் கரிய மதயானை ஒன்று துடிந்து வீழ்ந்தது போல, முரடர் தலைவன் துள்ளிக் கீழே விழுந்தான். அவனைச் சுற்றி ஒரே இரத்தப் பிரவாகம். கண்கள் மேலே செருக, கைகள் விறைப்பாக, கால்கள் அசைந்து, அசைந்து இப்படியும் அப்படியுமாய்ப் புரண்டான். மண்ணையும், குருதியையும் ஒன்றாகப் பற்றிய அவன் கை, மெல்ல மெல்ல உயர்ந்து, கடைசியில் 'தொப்' என்று கீழே விழுந்தது. அதற்குள் சோழ வீரர்கள் மற்ற முரடர்களை வளைத்துவிட்டனர்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இனிமேல் பட்டத்தரசிக்கும், இளையராணிக்கும் ஆபத்தில்லை என்று உணர்ந்து, திருவரங்கன் நெற்றியில் அரும்பிய வியர்வையை வழித்துவிட்டுப் புன்னகையுடன் அரசியாரை நோக்கி வந்தான்.

"நல்ல நேரத்தில் துணிந்து செயல்பட்டு, எங்களைக் காப்பாற்றினாய் திருவரங்கா! உன்னைப் போன்ற மாவீரர்களால்தான் இச்சோழர் படைக்குப் பெருமை கிடைத்திருக்கிறது. வீரத்தை மெச்சினேன்!" என்று அவனைப் புகழ்ந்தார் பட்டத்தரசி.

தலைகுனிந்து அதை ஏற்றுக் கொண்ட திருவரங்கனுக்கு அப்போதுதான் தோளில் 'விண், விண்' என்று வலிப்பது தெரிந்தது. கை வைத்து "அம்மா!" என்று முனகினான். பட்டத்தரசியார் பதட்டத்துடன் எழுந்து, காயம்பட்ட இடத்தைக் கவனித்தார். குறுங்கத்தி ஆழமாகவே தோளில் பாய்ந்திருந்தது. அதிலிருந்து வழிந்த குருதியால் ஆடை முழுவதும் நனைந்து, சற்று நேரமாகிவிட்டதால் இலேசாய்க் காய்ந்தும் போயிருந்தது.

"தஞ்சைக்கு இன்னும் பத்துக்கல் தொலைவு இருக்கின்றது. விரைந்து சென்றால் அங்குள்ள வைத்தியரிடம் கட்டு போட்டுக் கொள்ளலாம்! சீக்கிரம் புறப்படுங்கள்" என்று அனைவருக்கும் கட்டளையிட்டு, புறப்பட்டார் பட்டத்தரசி.

சற்று முன்பு அமளிப்பட்ட அவ்விடம் இப்போது ஒன்றுமே நடக்காதது போல மிகவும் நிசப்தத்துடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

## அத்தியாயம் - 8

**நா**கையிலிருந்து, தஞ்சை செல்லும் காட்டுப் பகுதியில் பல்லக்கு ஒன்று வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

நிசப்தமான அந்தப் பகல் நேரத்தில் சூரிய ஒளி பல்லக்குத் தூக்கியவர்களை வருத்த, அதைத் தாங்கமாட்டாமல், வியர்வையை வழித்துவிட்டு, தாகசாந்தி செய்யவும், களைப்பாறவும் இடம் தேடினர்.

சலசலவென்று காட்டருவி சப்தித்து ஓடும் சப்தம், அவர்கள் செவியில் விழுந்தது.

நல்ல இடம் கிடைத்தது என்ற மகிழ்ச்சியில் வேகமாய் நடை போட்டனர்.

காட்டுப் பாதையின் குறுக்கே பத்து முழ அகலத்திற்கு சுழித்து ஓடும் அருவி, கண்ணுக்கு இரம்மியமாய்த் தெரிய, அதன் நீர் சூரிய ஒளியில் வெள்ளியை உருக்கி வார்த்தாற் போல் ஜொலித்துக் கொண்டிருந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சிறுது தள்ளி வேங்கை மரம் ஒன்று வான் முட்டும் உயரத்தில் வளர்ந்து, அப்பகுதியை மூடியபடி, அடர்ந்து பரவியிருந்தது.

களைப்பாறுவதற்கு அது ஏற்ற இடம் என்று தீர்மானித்துப் பல்லக்குத் தூக்கிகள், வேங்கைமர நிழலில் இறக்கினர்.

பல்லக்கின் திரையை விலக்கி, மஞ்சள் முகம் ஒன்று எட்டிப் பார்த்தது.

வசீகரமான களையுடன், காண்போரை மயக்கும் சூட்சுமம் கண்களில் மறைந்திருக்க, அந்த முகத்துக்கு உரியவளான இளவரசி இரத்தினாதேவி, "எதற்காக இங்கே இறக்கினீர்கள்?" என்று வினவினாள்.

"அம்மணி, விடியற்காலையிலிருந்து பல்லக்குச் சுமந்து வந்த களைப்பு நீங்கவே, இங்கே இறக்கினோம். அத்துடன் தாகம் வேறு எங்களை வாட்டி வதைக்கிறது" என்றான் அவர்களில் ஒருவன்.

பின்னால், இன்னொரு பல்லக்கில் வந்து கொண்டிருந்த சாமந்தன், பல்லக்கை நிறுத்தி இறங்கினான்.

அதைத் தூக்கி வந்தவர்களும், முன்னால் வந்தவர்களுடன் சேர்ந்து கொண்டு, தாகசாந்தி செய்ய அருவியை நோக்கி நடந்தனர்.

சாமந்தன் இரத்தினாதேவியின் அருகில் வந்தான்.

இருவரும் களைப்பாறலாம் என்று வேங்கை மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தனர்.

"இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?" என்று இரத்தினாதேவி வினவ, சாமந்தன் உதட்டைப் பிதுக்கி, "இவர்கள் போகும் வேகத்தைப் பார்த்தால்..." என்று சொல்லி கொண்டிருக்கும் போது, புரவியின் குளம்பொலி கேட்கத் துவங்கியது.

'இந்நேரத்தில் புரவி வர வேண்டிய அவசியம்..?' என்று ஒன்றும் புரியாமல் இளவரசி விழிக்க, சாமந்தன் இடையிலிருந்த வாளை 'சரக்'கென்று உருவி, எழுந்து கொண்டான்.

இரத்தினாதேவி, இடுப்பில் செருகியிருந்த குறுவாளின் மீது கை வைத்தாள்.

குளம்பொலி நெருக்கத்தில் கேட்க ஆரம்பித்தது. யாரோ வருகின்றார்கள்; எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று, பதட்டப்பட்ட சாமந்தன் பல்லக்குத் தூக்கிகளுக்குக் குரல் கொடுத்தான்.

"வருவது ஒரு குதிரைதான்! எதற்காக வீண் பதட்டம்?" என்ற கடார இளவரசி, சப்தம் வந்த பக்கம் உற்று நோக்கினாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

உயர் ஜாதிக் குதிரையில், மிகுந்த வேகத்தோடு, ஆனால் குதிரையைச் செலுத்தி வந்தவன் சாமியார் போன்று காணப்பட்டதால், உறையிலிருந்து உருவிய வாளை உள்ளே போட்டுக் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டான் சாமந்தன்.

புன்முறுவலுடன், கடார இளவரசியும், கத்தியின் மேலிருந்த கைகளை எடுத்து, “பரவாயில்லையே, சோழ நாட்டில் துறவிகள் கூட குதிரைவிடப் பயின்றிருக்கின்றார்களே!” என்றாள் வியப்புடன்.

அவள் சொல்லி முடிப்பதற்கும், அம்மையப்பன் புரவியை நிறுத்தி இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

‘என் கணக்குப்படி தஞ்சைக் காட்டுப்பகுதியிலே இவர்களைப் பிடித்துவிட்டேன். ஜாதிப் புரவியாக இருந்ததால் அப்படிச் செய்ய முடிந்தது!’ என்று தனக்குள் கூறிக் கொண்ட அம்மையப்பன், இரத்தினாதேவியைப் பார்த்து, “வணக்கம் அம்மணி! தங்களைப் பார்த்தால் வெளிநாட்டார் போலிருக்கிறதே! தங்கள் நாடு எதுவோ?” என்றான் பணிவுடன்.

சாமந்தன் இடைமறித்து, “முதலில் தங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம், இல்லையா?” என்றான்.

“தாராளமாக. நான் கங்கைகொண்ட சோழபுரத்தைச் சேர்ந்தவன். என் தொழில், சுங்கைகொண்ட சேரமேச்சுவரத்தில் ஓதுவாராக இருக்கின்றேன். அவசரமாக நாகையிலிருந்து என் உறவினரைப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறேன்” என்றான்.

“ஓதுவார்... என்றால்?” -புருவங்கள் நெறிய வினவினாள் இரத்தினாதேவி.

“பூசை நேரத்தில், கடவுள் மீது பாடல்கள் பாடுபவருக்கு ஓதுவார்கள் என்று பெயர்” என்றான் அம்மையப்பன்.

“எனக்கும் புரிகிறது. எங்கள் நாட்டில் கூட இப்படிப்பட்டவர்கள் இருக்கின்றார்கள்” என்றாள் இரத்தினாதேவி. மின்னும் அவள் விழிகளின் கூர்மை அம்மையப்பன் மனதை வருத்த பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, ‘இந்தப் பெண்மணியிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்’ என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

அதற்குள் நீர் குடிக்கச் சென்ற பல்லக்குத் தூக்கிகள் அங்கே வந்து சேர்ந்தனர். புதியதாக இருக்கும் அம்மையப்பனை ஒரு மாதிரிப் பார்க்க...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“கொஞ்ச நேரம் இளைப்பாறிச் செல்வோம். தள்ளி உட்கார்ந்திருங்கள். கூப்பிடும் போது வந்தால் போதும்” என்றான் சாமந்தன். அவன் சொன்னது போலவே சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டனர்.

“உங்களைப் பற்றி இன்னும் நான் தெரிந்து கொள்ளவில்லையே!” என்றான் அம்மையப்பன்.

“எங்கள் நாடு கடாரம். வணிகம் செய்ய வேண்டி இங்கு வந்திருக்கின்றேன்! அத்துடன் எனக்கு மருத்துவமும் தெரியும்” என்றாள் இரத்தினாதேவி.

இது உண்மையில்லையென்பது அம்மையப்பனுக்குத் தெரியும். அதனால், “நான் சொல்வதற்காக நீங்கள் வருத்தப்படக் கூடாது! உங்களைப் பார்த்தால் அரச குடும்பத்தினரைப் போல் தெரிகிறது” என்றான்.

கடார இளவரசியின் முகம் மாறியது. “அப்படியில்லை!” என்றாள் அழுத்தமாக.

“இப்போது கங்கைகொண்ட சோழபுரம் நோக்கி நீங்கள் போகும் காரணம் வணிகத்தை முன்னிட்டா?”

“ஆமாம்!” என்ற இரத்தினாதேவி, “இன்னும் எவ்வளவு தூரத்தில் அது இருக்கிறது?” என்று கேட்டாள்.

“தஞ்சையிலிருந்து கொஞ்ச தூரம்தான். ஆனால், தற்போது அங்கே குழப்பமாக அல்லவா இருக்கிறது. இந்த நேரத்தில் அங்கே போவது...” என்று நிறுத்தினான் அம்மையம்பன்.

இரத்தினாதேவி, “ஏன் போகக் கூடாது?” என்று அதிர்ச்சியுடன் வினவ, அவர்கள் போக்கில் சென்றுதான், அவர்கள் யார் என்பது பற்றியும், எந்த நோக்கத்துடன் தமிழகம் வந்திருக்கிறார்கள், எதற்காக இப்போது கங்கைகொண்ட சோழபுரம் போகிறார்கள் என்பதையும் அறிய முடியுமென, அம்மையப்பன் மனதில் முடிவு கட்டி,

“அம்மணி! அங்கே பெரிய குழப்பம் ஒன்று தோன்றப் போகிறது. சோழச் சக்கரவர்த்தி கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றார். அடுத்து ஆட்சிக்கு வருவது யார் என்பதில் போட்டியிருக்கிறது!” என்று அவளைப் பார்த்தான்.

“என்னது?” அவளின் புருவங்கள் நெரிந்தன.

“ஆமாம்! அடுத்து ஆட்சிக்கு வர இருக்கும் தற்போதைய இளவரசரைக் கீழே இறக்கச் சிலர் முனைகிறார்கள்!”

“யார் அந்தச் சிலர்கள்?” என்று மகிழ்ச்சியுடனே கேட்டாள் இரத்தினாதேவி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“அதுதான் தெரியாது. சாதாரண ஓதுவாராய் இருக்கும் எனக்கு அரச விவகாரங்கள் அவ்வளவு அத்துப்படியாகி விடவில்லை. வர, வர சோழர்களைக் கண்டால் எரிச்சலாக இருக்கிறது. அவர்கள் ஆட்சி முறையும்... அந்த மனிதர்களும்...” என்று அருவருப்புடன் கூறுவது போல நடித்த அம்மையப்பன், இரத்தினாதேவியின் முகத்தில் ஏதும் மாறுதல் தெரிகிறதா என ஆழ்ந்து நோக்கினான்.

அவன் நினைத்தது போலவே இந்தச் செய்தியினால், மிகுந்த சந்தோஷமுறுகிறாள் என்பதை அவள் முகம் காட்டியது.

‘வலையில் அகப்பட்டுவிடும் மீன்தான் அவள்’ என்று மனதிற்குள் கணக்குப் போட்ட அம்மையப்பன்,

“இப்போதிருக்கும் அரசர்தான், சதா போர், போர் என்று நாட்டுப் பொக்கிஷத்தையே காலியாக்கிக் கொண்டிருக்கிறாரே. அதனால் சோழ மக்களாகிய எங்களுக்கு, அவர் மேல் சலிப்புத்தான் ஏற்படுகிறது” என்றான்.

‘தூமகேதுவைப் போல இவனும் நம் ஆள்தான்’ என்று எண்ணிய இரத்தினாதேவி, சாமந்தனைப் பார்த்தாள்.

‘அவ்வளவு சீக்கிரம் இவனை நம்புவதில் எனக்கு உடன்பாடில்லை’ என்று கண்களால் சாடைகாட்டி, அம்மையப்பன் பக்கம் திரும்பினான்.

“ஐயா, நீங்கள் நாட்டின் நிலவரத்தைச் சொன்னதற்கு நன்றி! விலை மதிக்க முடியாத சில இரத்தினங்கள் எங்களிடம் இருக்கின்றன. நாங்கள் கடார நாட்டைச் சேர்ந்தவர்கள். அதை விற்கவே இங்கு வந்துள்ளோம். நாங்கள் போவதையறிந்த எங்கள் அரசரும், சோழ அரசரின் நல்லெண்ணத்தைப் பெற்று வரும்படி எங்களைப் பணித்துள்ளார். அதற்காகத்தான் இப்போது கங்கைகொண்ட சோழபுரம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றோம்” என்றான்.

‘கடாரம் சென்று வெற்றியீட்டி இப்போதுதானே இராசேந்திரன் திரும்பியிருக்கின்றார். அதற்குள் மன்னனிடமிருந்து நல்லெண்ணத் தூதுவனா? நம்பும்படியில்லை’ என்று இருவரையும் சந்தேகத்துடன் பார்த்தான் அம்மையப்பன்.

‘ஒருவேளை இப்படியிருக்குமோ? தோல்வி கண்ட அரசன், நாட்டின் நிலைமையைக் கண்டறிவதற்காக இருவரையும் ஏன் அனுப்பியிருக்கக் கூடாது? சாமந்தனைப் பார்த்தால் ஒற்றர்படையைச் சேர்ந்தவன் போன்று தெரிகிறது. இவள் அரச குடும்பத்தினளாக இருக்க வேண்டும்’ என்று எண்ணிய படி, “நீங்கள் நல்லெண்ணத் தூதுவர் என்பதை அறிந்து நான் சந்தோஷப்படுகின்றேன்! உங்கள் முயற்சி வெற்றி பெற



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என் வாழ்த்துக்கள், ஆனால் உங்கள் நாட்டின் மீது படையெடுத்திருக்க வேண்டாம் என்பதுதான் என் அபிப்ராயம்" என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட இரத்தினாதேவியின் முகம் சிவந்தது. இடையிலிருந்த குறுவாளின் மீது அவளையுமறியாமல் அவளின் கை சென்றது.

அம்மையப்பன் அதைக் கவனித்துவிட்டான். அவர்கள் என்ன நோக்கத்திற்காகத் தமிழகம் வந்திருக்கிறார்கள் என்பதும் இப்போது அவனுக்குப் புரிந்துவிட்டது.

"சோழர் படையெடுப்பால் எங்கள் சைனியம் பெரும் அழிவுக்குள்ளாகிவிட்டது. பல நகரங்கள் தரைமட்டமாகிவிட்டன. இதற்கெல்லாம் காரணமான அவனை நான்..." என உணர்ச்சிவயப்பட்ட இரத்தினாதேவியை இடைமறித்தான் சாமந்தன் "நேரமாகிவிட்டது! சீக்கிரம் கங்கைகொண்ட சோழபுரம் போக வேண்டும்" என்று கூறி பேச வேண்டாமென கண்களால் சாடை காட்டினான்.

புரிந்து கொண்ட இரத்தினாதேவி, பல்லக்குத் தூக்கிகளைக் கூப்பிட்டாள்.

இவர்களிடம் பேச்சுக் கொடுத்ததில் பல செய்திகளைத் தெரிந்து கொண்டேன்; இன்னும் ஒன்றே ஒன்றுதான் பாக்கி. அது... அவள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவளா? இல்லையா? என்பது. போகப் போக அதுவும் தெரிந்து போகிறது என்று, "நீங்கள் கங்கைகொண்ட சோழபுரத்தில் எங்கே தங்கப் போகின்றீர்கள்?" என்றான்.

"இதுவரை அதைப் பற்றி யோசனை இல்லை! அங்கே போய்த்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றான் சாமந்தன்.

"அப்படியென்றால், கங்கைகொண்ட சோழேசுவரக் கோயிலிருக்கும் பெரிய வீதியில், யாத்திரிகர் தங்கும் சத்திரம் இருக்கிறது. சத்திரத் தலைவனிடம், 'சிவப்பழம்' அனுப்பினார் என்று கூறுங்கள். பிறகு பாருங்கள் உங்களுக்கு எப்படி உபசாரம் நடக்கிறது என்பதை!" என்று கூறினான் அம்மையப்பன்.

"உங்கள் உதவிக்கு நன்றி!" என்றாள் இரத்தினாதேவி முறுவலுடன்.

அவர்களிடம் விடைபெற்றுப் புரவியில் ஏறிய அம்மையப்பன் "நாளை வந்து சத்திரத்தில் தங்களைச் சந்திக்கின்றேன்" என்றான்.

அதற்குத் தலையாட்டி விடைதர, இராசேந்திரனை கொல்லத்தான் இவர்கள் கங்கைகொண்ட சோழபுரம் போகின்றார்கள்; பேச்சிலிருந்து அப்படித்தான் தெரிகிறது. பெரியவரிடம் இராசேந்திரனை எச்சரிக்கையுடனிருக்கும்படி சொல்ல வேண்டும் என்று குதிரையைத் தட்டிவிட்டான் அம்மையப்பன். அது காற்று வேகத்தில் அங்கிருந்து கிளம்பியது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நாலு கால் பாய்ச்சலில் புரவி சீறிக் கொண்டு போவதைக் கவனித்த சாமந்தன், "ஒரு துறவிக்கு இந்த அளவு குதிரை ஏற்றம் தெரியுமா? ஆச்சரியமாக இருக்கிறது! இவன் சொல்லும் சத்திரத்தில் நிச்சயம் நாம் தங்கக் கூடாது. சீக்கிரம் நம் காரியத்தை முடித்துக் கொண்டு கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து கிளம்பிவிட வேண்டும். நமக்கு இரு உயிர்கள் வேண்டும். ஒன்று, வெற்றி வீரனாய்த் திரும்பும் இராசேந்திரன்! இன்னொன்று சோழச் சக்கரவர்த்தி" என்று கடாரமொழியில் அவளிடம் கூறினான்.

"இவனைச் சந்தித்ததின் மூலம் நமக்கும் ஒரு செய்தி கிடைத்துவிட்டது. அது... அரசர் நோய்வாய்ப் பட்டிருக்கின்றார் என்பது. அதை வைத்துக் கொண்டு நாம் அரண்மனைக்குள் நுழைந்துவிட வேண்டும். அரசருக்கு மருத்துவம் செய்து, அதன் மூலம் அவரின் நம்பிக்கையைப் பெற வேண்டும். இளவயதில் நான் மருத்துவம் கற்றுக் கொண்டது இப்போது எனக்குக் கை கொடுக்கப் போகிறது. என் குருநாதர் எனக்குக் கொடுத்த அந்த அதிசயக் குளிகையை உபயோகித்து மன்னருக்கு உற்சாகமூட்டுவேன். குளிகையால், அரசர் பிணி நீங்காவிட்டாலும், சாகிறவரை அவர் தெம்புடன் இருப்பார். தெம்பு பெற்றுவிட்ட அரசன் நம்மை நிச்சயம் நம்பாமல் இருக்க முடியாது. அதை வைத்துக் கொண்டு இராசேந்திரன் உயிரை எளிதில் பறித்துவிடுவேன்!" என்று கடார மொழியில் இரத்தினாதேவி சாமந்தனிடம் கூறிவிட்டுப் புறப்படும்படிப் பல்லக்குத் தூக்கிகளுக்குத் தமிழில் கட்டளையிட்டாள்.

இரு பல்லக்குகளும், சிறிது கழிந்து, அக்காட்டுப் பகுதியில் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

## அத்தியாயம் - 9

புரவியிலிருந்து இறங்கிய அம்மையப்பன், கங்கைகொண்ட சோழேச்சுரத்தின் கோபுரத்தைப் பார்த்து, கும்பிடு ஒன்றைப் போட்டுவிட்டு, பக்கத்திலிருந்த சத்திரத்திற்குள் நுழைந்தான்.

சத்திரத் தலைவன் மிகவும் மரியாதையுடன், "வாங்க, வாங்க!" என்று வரவேற்றான். "இன்னும் கொஞ்ச நேரத்தில் கடார நாட்டு மங்கையும், அவளுக்குத் துணையாய் ஒரு ஆணும் என் பெயரைச் சொல்லிக் கொண்டு இங்கே தங்க வருவார்கள். அவர்களுக்கு எல்லா வசதியும் செய்து கொடுத்து, அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும்" என்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“அதற்கென்ன, அப்படியே ஆகட்டும்” என்று தலையாட்டினான் சத்திரத்தலைவன்.

சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு, அங்கிருந்து புரவியில் மீண்டும் கிளம்பினான் அம்மையப்பன்.

*****

இருட்டு அறை...

தூரத்தில் மதுராந்தக வடவாறு சப்தித்து ஓடும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

வெளியே இருந்த காவலனிடம் “பெரியவரைப் பார்க்க வேண்டும்” என்று கூறினான் அம்மையப்பன்.

கொஞ்சம் காத்திருக்கும்படி, உள்ளே சென்று திரும்பிய காவலன் வரச் சொன்னதாக அவனிடம் தெரிவித்தான்.

அம்மையப்பன் உள்ளே நுழைந்தான். ஒரே கும்மிருள். தட்டுத் தடுமாறி நடந்துதான், தாழ்வாரம் போன்று இருக்கும் அப்பகுதியைக் கடக்க வேண்டும்!

ஆனால், அம்மையப்பன் சர்வசாதாரணமாக எந்தவிதத் தடுமாற்றமும் இல்லாது, வேகமாக நடந்து சென்றான்.

கூடம் வந்தது. அகன்று பெரியதாய் இல்லாவிட்டாலும், சற்று விசாலமாகவே இருந்தது. மருந்துக்குக் கூட வெளிச்சம் நுழைய முடியாதபடி இருட்டு அந்த இடத்தை நன்கு ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அதன் கூடத்தின் நடுவிலிருந்த தூணில் தீவட்டி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில், தலையில் வெள்ளை முக்காடிட்ட உருவம் ஒன்று ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

இதுவரை மிடுக்காக வந்த அம்மையப்பன், பணிவுடன் தலை குனிந்து, “வணக்கம் ஐயா!” என்றான்.

பதிலுக்குத் தலையை அசைத்து “இந்தத் தடவை நீண்ட நாளாகிவிட்டதல்லவா?” என்றது கரகரப்புக் குரலில்.

“ஆம் ஐயா, எதிரிகளை நாகைவரை பின் தொடர வேண்டியதாகப் போயிற்று. விஷயங்களும் அதற்கு ஏற்றபடி நிறையவே...” என்றதும், உருவம் குறுக்கிட்டு,

“எனக்குத் தெரியும். ஆனால் நாட்கள், நாம் திட்டமிட்ட காலத்திற்குள் அடங்காமல் போய்விட்டதால், எதிரிகளால் உனக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிட்டதோ, என சந்தேகம் தோன்றிவிட்டது” என்றது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“ஐயா, எதிரிகளுக்கு நான்தான் யமன்; அவர்கள் அல்ல எனக்கு” என்றான் அம்மையப்பன் திடமான குரலில்.

“அதுவும் எனக்குத் தெரியும். அந்த ஒரு நம்பிக்கையில்தான், திட்டமிட்டபடி நாட்கள் கடந்து போனாலும், உன்னை எதிர்பார்த்துக் கொண்டு, இங்கே காத்திருக்கின்றேன்” என்றது வழக்கமான கரகரப்புக் குரலில்.

தீவட்டியின் ஒளி சற்று மங்கலாகியது. உருவம் ஆசனத்திலிருந்து எழுந்து, மூலையிலிருந்த எண்ணெய்ச் சட்டியை எடுக்கப் போக, “நான் செய்கின்றேன்; நீங்கள் இருங்கள்!” என்று சட்டியிலிருந்து எண்ணெயை ஊற்றி, பழையபடி பிரகாசத்துடன் தீவட்டியை எரியும்படிச் செய்துவிட்டான்.

உருவம் மெல்லக் கனைத்து, தன் போர்வையை விலக்கிச் செய்யும் போது, மார்பில் அரை முழ அளவிற்குப் பெரிய தழும்பு ஒன்று தெரிந்தது. சாதாரணமாய்ப் பெரும் போர்களில் ஈடுபட்டவர்களுக்கே அந்த அளவிற்குத் தழும்பு இருக்கும்!

“போன விஷயம்..?” என்று உருவம் வினவ,

“நம் அரண்மனையில் வேலை பார்க்கும் தென்னன், நாகை ஜோதிடரின் சீடன் காளிங்கராயனுடன் சேர்ந்து கொண்டு, சோழ அரசுக்கு விரோதமாய்ச் செயல்பட ஆரம்பித்துவிட்டான். இங்கிருந்து செய்திகளைத் தூமகேது என்ற பாண்டிய நாட்டான் மூலம், நாடிழந்த பாண்டியனுக்குத் தெரிவிக்கின்றார்கள்” என்றான்.

அமைதியுடனிருந்த உருவம், ஆத்திரத்துடன், “இராஜத் துரோகிகள்!” என்று பற்களைக் கடித்தது.

“அரசர் இறந்துவிடும் நிலையிலிருக்கிறார். அடுத்து ஆட்சிக்கு வருவதில் இங்கே குழப்பம் இருக்கிறது! என்பன போன்ற விஷயங்கள், நம் பகைவர்களுக்குத் தெரிந்து போய்விட்டன.”

“ம்...” -தலையில் சரிந்த வெண்முக்காட்டை மறுபடியும் நன்கு இழுத்து, முகத்தை மூடிக் கொண்டது.

“கடாரத்திலிருந்து இருவர் இராசேந்திரனைத் தொலைத்துக் கட்ட, அவரைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தி பெண்... அநேகமாக அவள் கடார அரச குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருக்கலாம். இன்னொருவன் கட்டுடலாய் இருக்கின்றான். அவளுக்குத் துணையாக அவன் வந்திருப்பதாகத் தெரிகிறது. வணிகத்தை முன்னிட்டு வந்ததாக என்னிடம் அவர்கள் தெரிவித்தார்கள். பாண்டிய நாட்டான் தூமகேது உதவியுடன் தமிழகம் வந்திருக்கின்றார்கள். கடார வெற்றி வீரர் வீரர்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இராசேந்திரன் எச்சரிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படும்...” என்று அம்மையப்பன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, கூடத்தை ஒட்டி உட்புறமாகச் செல்லும் வழியிலிருந்து ‘தட், தட்’ என்று மூன்று முறை தட்டப்படும் சப்தம் எழுந்தது.

உடனே உருவம் சுறுசுறுப்புப் பெற்றது. “சற்று வெளியே போயிரு அம்மையப்பா! கால் நாழிகை கழித்துக் கூப்பிடுகின்றேன்” என்று கூற, அவன் தலையாட்டிவிட்டுக் கூடத்திலிருந்து வெளியேறினான்.

அவ்விதம் அவன் போகும் போது...

‘சுரங்க அறையில் யார் வந்து தட்டுவார்கள்? அடிக்கடி பெரியவரை யாரோ வந்து சந்திக்கின்றனர். ஒருவேளை என்னைப் போல் அவர்களும் பெரியவரின் நம்பிக்கைக்கு உரிய ஒற்றனா? அவரின் நம்பிக்கை பெற்றவன் நான் ஒருவன்தான் என்று இதுவரை நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது, புதிதாக வேறு ஒருவன் முளைத்திருக்கின்றான். யாராயிருந்தால் நமக்கு என்ன வந்தது? இன்னும் கடினமாக உழைத்து, பெரியவரின் முழு நம்பிக்கையைப் பெற வேண்டும். தீவில் மறைந்து வாழும் நாடிழந்த பாண்டியனையும், அவன் கூட்டத்தையும் கண்டு பிடிக்க வேண்டும். அந்தத் தீவு எங்கே இருக்கிறது? அதற்குப் போக வழி...! தூமகேதுவை ஒரு திங்கள் வரை மறைவாகப் பின் தொடர்ந்தால் எல்லாம் தெரிந்துவிடும். இதைக் கண்டு பிடித்துவிட்டால் நான் பெரியவரின் முழு நம்பிக்கையைப் பெற்றுவிடுவேன்!’ என்று எண்ணியபடி அம்மையப்பன் வெளியே வந்து நின்றான்.

## அத்தியாயம் - 10

**க**ங்கைகொண்ட சோழபுரம்! கிழக்கே வடவாறு ‘சலசல’வென்று சப்தித்து ஓட, வடக்கே முதலாம் இராசேந்திரசோழனின் கங்கை வெற்றி கூறும். ‘சோழகங்கம் ஏரி’ கடலெனப் பரந்து விளங்க, தெற்கிலும், மேற்கிலும் சோணாட்டுச் செழுமையைப் பறைசாற்றும் பசிய வயல்கள் விரிந்திருந்தன.

கோட்டையின் நடுவில் சக்கரவர்த்தி வசிக்கும் மாளிகை இருந்தது.

பலத்த கட்டுக்காவலுடனும், எளிதில் நுழைய முடியாத பாதுகாப்புடனும் ‘கீழை சோபனா’ என்ற பெயருடனுமிருந்த அதன் கிழக்கு வாயில் வழியாகத்தான் உள்ளே புக



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

முடியும். முதல் தளத்துக்கு 'ஆதி பூமி' என்ற சிறப்புப் பெயர் உண்டு. அத்தளத்தின் நடுவே மன்னர் தங்கும் விசாலமான கூடம், அழகிய சித்திர வேலைப்பாடுடன் இருக்கிறது அது.

கருங்கல் பீடத்தில் பளபளக்கும் பெரிய மரத்தூண்களை நிறுத்தி, அதன் மேல் பெரும் உத்திரங்களை வைத்து, அவற்றின் மேல் அகன்ற செங்கற்களால் பதப்படுத்திய சுண்ணாம்பைக் கொண்டு, தளத்தின் மேற்பகுதியை வலிவுடன் அமைத்திருந்தனர் சோழக் கட்டிட வல்லுநர்கள்.

மாமன்னர் அமரும், இராசேந்திர சோழ மாவலிவாணராயன் என்ற பெயருடைய ஆசனம், கூடத்தின் நடுவில் போடப்பட்டு இருந்தது. உச்சியில், முதலாம் இராசேந்திர சோழனின் கேரள வெற்றியைக் குறிக்கும் பல நிகழ்ச்சிகள் சித்திரமாய் தீட்டப்பட்டிருந்தன. 'மாவலிவாணராயன்' என்ற அவ்விருக்கையில் மெலிந்த தேகத்துடன் சோழச் சக்கரவர்த்தி வீரராசேந்திரர், சாய்ந்த நிலையில் அமர்ந்திருந்தார்.

முதுமை அவரை முற்றிலும் ஆட்கொண்ட போதிலும், அரசருக்குரிய மிடுக்கு இன்னும் அவரிடம் இருக்கத்தான் செய்தது.

ஏறக்குறைய இரு திங்களுக்கு மேல் நோயுடன் போராடிக் கொண்டிருக்கும் களைப்பு முகத்தில் நிலவினாலும், அதைச் சமாளிக்கும் மன உறுதியுடன் அவர் காணப்பட்டார்.

அரசரின் பக்கவாட்டில், அவரின் முத்த மகனும், சோழ நாட்டின் இளவரசனுமான அதிராசேந்திரனும், அடுத்து முதலமைச்சர் பிரமாதிராசரும், கடார வெற்றி கண்ட இராசேந்திரனும், அதற்கு எதிர்ப்புறமாக தளபதி தன்மபாலனும், துணைத்தளபதி சிறிய தன்மபாலனும், சேதிநாட்டுக் குறுநில மன்னன் முத்தன்காமனும், கொடும்பாளூர்க் குறுநில மன்னன் சயங்கொண்ட சோழ இருக்குவேளும் நின்று கொண்டிருந்தனர்.

ஒரு தடவை அனைவர் மீதும் பார்வையைச் செலுத்திய சக்கரவர்த்தி பேசத் தொடங்கினார். நோயுற்ற நிலையிலும் அவர் குரலின் கம்பீரம் சற்றும் குறையவில்லை.

"உங்களையெல்லாம் இங்கே வரச் சொன்னதற்கு என்ன காரணம் இருக்கும் என்பது உங்களுக்கே தெரியும். இரு திங்களாய், ராஜ வைத்தியர்களால் என்ன நோய் என்று கண்டு பிடிக்காத நிலையில், அதனுடன் போராடும் எனக்கு நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம் சேர்ந்துவிட்டதால் இரவில் துயின்று பல நாட்கள் ஆகிவிட்டன. அத்தகைய துயர நிலையில், நான் உழன்று கொண்டிருக்கும் போது சமீபத்தில் மதுரையிலிருந்து வந்த செய்தி என் நெஞ்சத்தைப் பிளப்பது போல் இருந்து வருகிறது. இது வரை ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்த பாண்டியன் சடையவர்ம



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சீவல்லபன் திரும்பவும் மதுரைக்குள் நுழைந்து அட்டகாசம் செய்திருக்கிறான். மதுரைக் கோட்டையின் கட்டுக்காவலை மீறி பகைவன் உள்ளே வந்தது எப்படி? வந்ததுமின்றி, காவலுக்கிருந்த வீரர்களில் பலரைக் கொன்று, சொக்கநாதர் ஆலயத்திற்குள் புகுந்து நான்தான் உண்மையான அரசன் என்று பிரகடனப்படுத்திக் கொண்டது எப்படி? அம்மாதிரி அவன் செய்யும் வரை அங்கிருக்கும் சோழப் படைகள் என்ன செய்து கொண்டிருந்தன? பகைவர்களைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்த நம் படைக்கு இப்போதெல்லாம் ஆற்றல் குறைந்துவிட்டதா? நம் ஒற்றர்படை ஏன் கண்காணிக்கத் தவறிவிட்டது? இதற்கெல்லாம் அமைச்சர் பிரமாதிராசர் என்ன பதில் சொல்லப் போகின்றார்? தளபதி தன்மபாலர், அவர்களை அடக்க, மிகப் பெரும்படையை எப்போது திரட்டப் போகின்றார்? திரும்பவும் தளபதி அவர்களுக்கு நான் நினைவுபடுத்தும் வார்த்தையாவது, 'மிகப்பெரும் படை...! ஏனென்றால் பகைவர்கள் கடல்போல் மாபெரும் சைனியத்தை மதுரைக்குள் வைத்திருக்கிறார்கள் அல்லவா? அதனால்தான்! அம்மாதிரி சொல்கின்றேன்!" என்று பேச்சை நிறுத்தி, கோபம் கலந்த பார்வையால் தளபதியைப் பார்க்கலானார்.

பிரமாதிராசரும், தன்மபாலரும், மாமன்னருக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் தலை கவிழ்ந்தனர்.

சற்று நேரம் மௌனமாய்க் கழிந்தது. வேந்தர் மீண்டும் முனிவு கலந்த குரலில் பேசலானார்.

"மாபெரும் இச்சோழப் பேரரசை நிறுவ நாங்களும், எங்கள் முன்னோர்களும் செய்த தியாகங்கள்தான் எத்தனை? பரம்பரைப் பகைவர்களான சாளுக்கியர்களுக்கும், எங்களுக்கும் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க, கவனம் முழுவதும் போரிலேயே இருந்தால், நாட்டைக் கவனிப்பது எப்படி? என்று என் பாட்டனார் ராஜராஜ சோழர், தன் மகள் குந்தவியை கீழைச்சாளுக்கிய மன்னன் விமலாதித்தனுக்கு மணம் செய்வித்து, அதன் மூலம் அவர்களுக்கும், எங்களுக்கும் இருந்த பகையை நீக்கினார். அவரைத் தொடர்ந்து நானும், அதே முறையைப் பின்பற்றி, மேலைச்சாளுக்கிய அரசன் விக்கிரமாதித்தனுக்கு, என் மகள் இராஜசுந்தரியைத் திருமணம் செய்வித்து, மேலைச்சாளுக்கியரின் பகைமையை அழித்துக் கொண்டேன். இவ்விதம் மேலை, கீழைச் சாளுக்கியரின் ஜென்மப்பகை ஒழிந்ததென்று நிம்மதியோடிருக்கும் சமயத்தில், சோழக் குறுநில மன்னர்களும், பாண்டியனும், சேரனும் இவ்வரசுக்கு விரோதமாகத் திரும்பியிருக்கின்றார்கள். அவ்வாறு திரும்பியவர்களை நசுக்கி, இந்தச் சாம்ராஜ்யத்தை வழிநடத்திச் செல்வதற்கு ஏற்ற

சரியான தலைமை இன்னும் சோழ அரசுக்குக் கிடைக்கவில்லையோ என்று எண்ணும் போதுதான், மனம் துயரத்தில் ஆழ்ந்துவிடுகின்றது!" என்று பேச்சை நிறுத்தினார் சோழச் சக்கரவர்த்தி.

அச்சமயம் கொடும்பாளூர்க் குறுநில மன்னரான சயங்கொண்ட சோழ இருக்குவேள் குறுக்கிட்டு, "மன்னிக்க வேண்டும்! சக்கரவர்த்தி அவர்களுக்கு ஒரு விண்ணப்பம்!" என்றார் பணிவுடன்.

"என்ன சயங்கொண்டா? விண்ணப்பம் பண்ணக் கூடிய அளவுக்கு உன்னிடம் விஷயங்கள் நிறைய இருக்கின்றனவோ?" என்றார் பேரரசர்.

"ஆமாம்!" என்று புன்முறுவலுடனே தலையை ஆட்டினார் கொடும்பாளூர்க் குறுநில மன்னன்.

"சரி! உன் விண்ணப்பத்தைச் சொல். என்னவென்று கேட்போம்!" என்று மாமன்னர் தயாராக.

"எல்லா நலங்களும் பொருந்தி, திருமாலுக்கு நிகராய் உள்ள தங்கள் மகன் சோழ இளவரசர் அதிராசேந்திரர் இருக்கும் போது, தாங்கள் ஏன் நாட்டைப் பற்றிக் கவலைப்பட வேண்டும் என்பதே என்னுடைய தாழ்மையான விண்ணப்பம்" என்றார் சயங்கொண்ட சோழ இருக்குவேள்.

அதற்குச் சோழச் சக்கரவர்த்தி மறுமொழி எதுவும் சொல்லாது சற்று நேரம் அமைதியாயிருந்துவிட்டு மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.

"கொடும்பாளூரார் சொல்வதை நான் மறுக்கவில்லை; ஆனால் பரந்த சோழ நிர்வாகத்தை அதிராசேந்திரன் ஒருவனால் மட்டுமே நிர்வகிக்க முடியும் என்பதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது! காரணம்? என் பாட்டன் இராசராசன் காலத்திலிருந்தே ஆற்றல் மிக்க பல இளவரசர்கள் இதை நிர்வகித்து வந்தார்கள். அப்படி இருந்ததால்தான் இந்த அரசு, சோழப் பேரரசாக வளர முடிந்தது. ஆனால் இன்று...? சோழ அரசு கட்டில் வெற்றிடமாய் இருப்பது போல் எனக்குப் படுகிறது."

"..."

"என் தந்தை கங்கைகொண்ட சோழர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் வேள்வியில் பிறந்த தீயைப் போல நாங்கள் நால்வர் சோழ அரசுக்குத் தூண்களாக விளங்கினோம். இராசாதிராசனாகிய என் முதல் தமையன் கொப்பத்துப் போரில் உயிர் துறந்ததும், அப்போர்க் களத்திலேயே என் இரண்டாம் தமையன் இரண்டாம் இராசேந்திர சோழன், சோழ நாட்டின் அரசனாக முடிசூட்டிக் கொண்டு வெற்றி காணும் நிலையிலிருந்த



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சாளுக்கியனைப் புறங்கண்டார். இப்படி ஒரு மாற்றுத் தலைமை அச்சமயம் இல்லாதிருந்தால், அரசின் நிலைமை என்னவாயிருக்கும்? இந்த இடத்தில்தான் நீங்கள் அனைவரும் யோசிக்க வேண்டும்! அதற்குப் பிறகு சோழ இளவரசராயிருந்த இராச மகேந்திரரும் ஒரு போரில் இறந்துவிட, கடைசியாய் நான் சாம்ராஜ்யத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். ஆட்சிக்கு வரும் போது எனக்கு வயது நாற்பது. என் இளமைக் காலம் முழுமையும் போர்க்களத்திலேயே கழிக்கப்பட்டு, என் தமையன்மார்களுக்குப் பேருதவியாக இருந்தேன். அவ்விதம் இருந்ததால்தான் பகைவர்களால் இப்பேரரசை ஒன்றும் செய்ய முடியாமல் போனது. ஆனால் தற்போது..? இருப்பது அதிராசேந்திரன் மட்டுமே. இன்னொரு புதல்வன் காஞ்சி நகரைவிட்டு இப்படியும், அப்படியும் கூட நகர்வதில்லை. இந்நிலையில் அட்டகாசம் செய்யும் பாண்டியர்களை நாம் அடக்க முடியாமல் தத்தளிக்கிறோம், என்ற செய்தி பகைவர்களின் காதுகளுக்கு எட்டினால் நிலைமை என்ன ஆகும்? சோழப் பேரரசு வலிமை குன்றிவிட்டது என்றல்லவா எண்ணி ஒவ்வொருவரும் இவ்வரசுக்கு விரோதமாய்க் கிளம்புவார்கள். அவ்விதம் கிளம்பினால் நாட்டின் கதி என்னாவது? இதையெல்லாம் நினைக்கும் போதுதான் என் இதயம் தீயில் வீழ்ந்த பறவையாய்த் துடிக்கின்றது! கடவுளே! என்னதென்று புரியாத நோயினாலும் தற்போது நிலவும் குழப்பத்தினாலும் என்னை நீ வருத்த வேண்டாம். அதற்குப் பதிலாய் உன்னிடமே அழைத்துக் கொள். எங்களால் கட்டிக் காப்பாற்றப்பட்ட இப்பேரரசு எப்படியாவது போகட்டும். இனிமேல் நான்... நான்...” என்ற அவரால் அதற்கு மேல் வார்த்தைகளைத் தொடர முடியாமல் மௌனமானார். கண்கள் கலங்கின. நீண்ட நேரம் பேசிய களைப்பு மிக, மயக்கத்துடனே அரியணையில் சாய்ந்துவிட்டார்.

அனைவரும் பதறி. “அரசே.. அரசே..!” என அழைக்க, பதிலில்லாததால் அரண்மனை வைத்தியர் வரவழைக்கப்பட்டார். மருத்துவர் நாடி பிடித்துப் பார்த்து, “நீண்ட நேரம் பேசியதின் விளைவு இது. வேறென்றும் பயப்படும்படியாக இல்லை” என்று ஒரு மருந்தைக் குழைத்து மாமன்னரின் நாவில் தடவி, “இன்னும் சில நொடிகளில் விழித்துவிடுவார்” என்றார்.

அப்போது அரண்மனையின் கீழே வாழ்த்து முழக்கம் கேட்டது. என்னவென்று பிரமாதிராசன் முதல் தளத்திலிருந்து கீழே பார்த்தார்.

பட்டத்தரசியும் இளையராணியும் வந்துவிட்டார்கள். அடடே! இதற்குள் இவ்வளவு மக்கள் கூட்டமா? திருவரங்கன் தோளில் என்ன பலத்த கட்டு? அவர்களை வரவேற்பதற்காகக் கீழ்வாயிலை நோக்கி வேகமாகச் சென்றார் பிரமாதிராசர்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“பட்டத்தரசி வாழ்க! இளையராணி வாழ்க!” என்று முழக்கமிட்ட மக்கள் காவலுக்கு நின்றிருந்த வேற்படை வீரர்களைத் தள்ளிக் கொண்டு உள்ளே வர முயன்றனர்.

காவல் தலைவன் வாயிலின் குறுக்கே இரும்புத் தடையைப் போடும்படி வீரர்களுக்கு உத்தரவிட்டான்.

ஆனால், அத்தடையை உடைத்துக் கொண்டு, உள்ளே நுழையும் நோக்கில் அல்லவா மக்கள் இருக்கின்றனர்.

பிரமாதிராசர் வாயிலின் நடுநாயகமாய் நின்று கொண்டு, கலைந்து செல்லும்படி மக்களைப் பணிவுடன் வேண்டினார்.

“அரசருக்கு நடக்கக் கூடாதது நடந்துவிட்டதாக கங்கைகொண்ட சோழபுரமே பேசிக் கொள்கிறது. உண்மையா, பொய்யா என்று அறிய அமைச்சர் அவர்கள் எங்களை அரண்மனைக்குள் அனுமதிக்க வேண்டும்” என்றான் கூட்டத்தில் ஒருவன்.

இதென்ன விபரீதம்! இதற்குள் யார் மக்களைக் குழப்பியிருப்பார்கள்? அரசர் நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்தி கூட, வெளியில் தெரியக் கூடாது என்பதில் சர்வ ஜாக்கிரதையாக அல்லவா இருந்தேன்! அதற்குள் எப்படி இவர்களுக்குத் தெரிந்தது? என்று சற்றே நிலைகுலைந்த பிரமாதிராசர் காவலைப் பலப்படுத்தும் சூழ்நிலை வந்துவிட்டதையுணர்த்தும் முறையில் மாளிகைத் தலைவனைப் பார்த்தார்.

அவனும் அங்குமிங்குமாய்ச் சென்று, பரவலாகக் காவலுக்கு நின்று கொண்டிருந்த வீரர்களை வாயிலுக்கு ஒட்டு மொத்தமாக வந்து நிற்கும்படிக் கட்டளையிட்டான். அதைச் செயலாக்கும் வகையில் வீரர்களும், இரண்டு இரண்டு பேராக, இரும்புத்தடை அருகில் வந்து நிற்கத் துவங்கினர்.

பட்டத்தரசியின் காதில் அரசர் நன்றாக இருப்பதாக மக்களிடம் சொல்லும்படி மெதுவாய்க் கூறினார் பிரமாதிராசர்.

மாமன்னரின் தேவியும், மக்களை நோக்கி, “அமைதி... அமைதி...!” என்று கூறினார்.

அச்சொல்லில் அப்படி என்ன மாயம் இருக்குமோ? உடனே ‘பொட்’டென்று அடங்கி, அரசியார் என்ன சொல்லப் போகின்றார் என்பதை அறிவதற்காக அமைதியுடன் நின்றனர்.

“அரசர் மேல் நீங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தைக் கண்டு, நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் நினைப்பது போல, அல்லது சில கொடியவர்கள் பொய்யாய் உங்களிடம் பரப்பிய தவறான செய்திகள் போல, மன்னருக்கு


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஒன்றும் நடந்துவிடவில்லை. நன்றாகவே இருக்கின்றார். அலைச்சல் காரணமாக அரச வைத்தியரின் ஆலோசனையின் பேரில் மாளிகையினுள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றார். ஒரு நல்ல நாளில் இதே இடத்தில் உங்களை எல்லாம் அவர் நிச்சயம் பார்க்கத்தான் போகின்றார். அதனால் என் வார்த்தையில் நம்பிக்கை வைத்து நீங்கள் அமைதியாய்க் கலைந்து செல்லுங்கள்! இல்லையென்றால் ஓய்வு கொண்டிருக்கும் மன்னருக்கு இது தெரிந்தால், பெரிதும் கவலைப்படுவார். அதனால் அமைதியுடன் நீங்கள் கலைந்து செல்லும்படி உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்" என்று உரையை முடித்தார் பட்டத்தரசி.

"மாமன்னர் வீரராசேந்திரர் வாழ்க! பட்டத்தரசி உலகமுழுதுடையாள் வாழ்க!" என்று முழக்கியபடி மக்கள் அமைதியுடன் கலைந்து செல்ல ஆரம்பித்தனர்.

அவர்கள் போகும்வரை புன்னகையுடன் அங்கேயே நின்று கொண்டிருந்த அரசி, கூட்டம் கலைந்ததும் பிரமாதிராசர் பக்கம் திரும்பி "அரசருக்கு..." என்று வினவ...

"சீக்கிரம் உள்ளே வாருங்கள்!" என்று பதட்டத்துடன் அவரை அழைக்க, என்ன நடந்துவிட்டதோ? என்ற எண்ணத்துடன் அரண்மனையுள் வேகமாய் நடந்தாள் பட்டத்தரசி.

மாவலிவாணரராய இருக்கையில் சாய்ந்தபடியிருந்த அரசர், கண்ணை மூடிய நிலையில் இருப்பதைக் கவனித்து 'மக்கள் சொன்னது போல் ஏதாவது நடந்துவிட்டதா?' என்று அச்சம் மிக அருகில் சென்றார்.

உலகமுழுதுடையாளக் கண்டு, அனைவரும் விலகி வழிவிட்டனர். பதட்டம் நிலவிய அரசியின் முகத்தைக் கவனித்த அரண்மனை மருத்துவர் "பயப்படும்படி ஒன்றும் இல்லை. களைப்பின் மிகுதியால் இலேசான மயக்கம்தான்!" என்றார்.

அதைக் கேட்டு நிம்மதிப் பெருமூச்சுவிட்ட உலகமுழுதுடையாள், "அரசே, அரசே!" என்று கூப்பிட, இதுவரை மயக்க நிலையிலிருந்த மாமன்னர் மெல்லக் கண் விழித்து, "அரசியா? எப்போது வந்தாய்?" என்றார் பலவீனமான குரலில்.

"சற்று முன்புதான் வந்தேன்! தங்களுக்கு ஒன்றுமில்லையே?" - பதட்டத்துடன் கேட்டார் அரசி.

"ஒன்றுமில்லை... கொஞ்ச நேரத்திற்கு முன்பு சிறிது உணர்ச்சிவயப்பட்டேன்! அதன் விளைவுதான் இதெல்லாம்!" என்று புன்னகைத்து, "ஆமாம் இவர்களுடனேயே நீ வர வேண்டியதுதானே. எதற்குப் பின்தங்கி வந்தாய்?" என்றார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“சோதிடரைப் பார்ப்பதற்காகத் தங்கிவிட்டேன். அங்கிருந்து முக்கிய செய்தியும் கொண்டு வந்திருக்கின்றேன்” என்று அரசருக்கு மட்டும் கேட்கும் குரலில் சொன்னார்.

“அப்படியா விஷயம்?” என்ற வேந்தர், தோளில் கட்டுடன், அரசியின் அருகில் நின்று கொண்டிருந்த திருவரங்கனைக் கவனித்து, “யார் இந்தப் பிள்ளை… தோளில் எதற்குச் கட்டு?” என்று வினவினார்.

“அது ஒரு பெரிய கதை. இந்தப் பிள்ளை இல்லையென்றால் நாங்கள் முரடர் கையில் சிக்கி என்ன பாடுபட்டிருப்போமோ!” என்று உடலைச் சிலிர்த்த அரசி, குளக்கரையில் நடந்த எல்லா விஷயங்களையும் தெளிவாகச் சொன்னார் அரசரிடம்.

அமைச்சர் பக்கம் திரும்பிய சக்கரவர்த்தி, “பார்த்தீர்களா? நான் சொன்னது போல் நடந்துவிட்டது. நல்லவேளை! இந்தப் பிள்ளை இல்லையென்றால் பட்டத்தரசியின் கதி என்ன ஆவது?” என மீண்டும் திருவரங்கன் பக்கம் பார்வையை ஓட்டி, “இவனைப் பார்க்கப் பார்க்க என் மனதிற்கு சந்தோஷம்தான் வருகிறது. வீரப்பொலிவுடன் கம்பீரமாகவே இருக்கின்றான்” என்றார்.

திருவரங்கன், அதைக் கேட்டு வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டான்.

“பிரமாதிராசரே! இந்தப் பிள்ளையை எப்போது சோழர் படையில் சேர்த்தீர்? நம்பிக்கைக்கு உரியவன்தானே?” என்று கேள்விகளை அடுக்கினார் சோழச் சக்கரவர்த்தி.

“இந்தப் பிள்ளை பல்லவர் குலத்தில் உதித்தவன். காஞ்சி மாநகர் இவனின் சொந்த ஊர். அண்மையில்தான் இவனைப் படையில் சேர்த்தேன். காஞ்சியிலிருக்கும் ஒற்றர் படைத்தலைவனுக்கு இவன் உறவு முறையாக வேண்டும்” என்றார்.

“அப்படியென்றால் நல்லது!” என்று ஆமோதித்த அரசர் “இம்மாதிரி இளைஞர்களை நிறைய இன்னும் சோழப்படையில் சேர்க்க வேண்டும்” என்று திருவரங்கனை அங்கிருந்து செல்லும்படி குறிப்பால் உணர்த்தினார்.

அதைப் புரிந்து கொண்டு திருவரங்கனும், அங்கிருந்து அகன்றான்.

“இந்தப் பிள்ளையைப் பார்க்கப் பார்க்க எனக்கு சந்தோஷமாக இருக்கிறது! தனி ஒருவனே கையில் ஆயுதம் எதுவுமின்றி கத்தியுடன் முரடர்களைச் சமாளிப்பது என்பது அவ்வளவு சுலபமான விஷயம் அல்ல. அதனால் இவனுக்குப் பெரும் பொறுப்பைக் கொடுக்கும்படி தளபதிக்கு கட்டளையிடுகின்றேன்” என்றார் வீரராசேந்திரர்.

அவ்விதம் செய்வதாகத் தளபதி தன்மபாலர் ஆமோதித்தார். “கொஞ்ச நாள் வரை வருத்தத்துடனிருந்த நான் இப்போது தெம்பு பெற்றுவிட்டேன். இதோ நிற்கும் என் தமக்கை மகன் இராசேந்திரன், கடாரத்தை வென்று காம்போசத்தில் நம் ராஜ்ய உறவைப்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பலப்படுத்திக் கொண்டு வந்திருக்கின்றான். இம்மாதிரி சோழ இளவரசர்கள் நிறையபேர் தோன்றிவிட்டால், ஆபத்து என்பதே இந்த நாட்டிற்கு ஏற்படாது" என்று அதிராசேந்திரர் முகத்தினைக் கவனித்தார் மாமன்னர்.

இளவரசன் முகம் சோழச் சக்கரவர்த்தியின் பேச்சினால் கருமேகமென இருண்டது.

அரசர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. பட்டத்து அரசியை அருகில் அழைத்து, "முதலமைச்சருடன் நீ இங்கே வந்துவிடு. தனிமையில் சில விஷயங்கள் பேச வேண்டும்" என்றார்.

அரச மருத்துவர் தவிர, மற்றனைவரும் தம் தம் அறை நோக்கிச் சென்றனர்.

அப்படிச் செல்லும் போது...

'எதற்காக அரசர் என் அன்னையையும், பிரமாதிராசரையும் தனிமையில் பேச அழைக்கின்றார்? பேசுவதற்கு அப்படி என்ன செய்தி இருக்கிறது? ஒருவேளை...? இப்படி இருக்குமோ!' என்று தன்னையே கேட்டுக் கொண்ட சோழ இளவரசன் பதட்டத்துடன் தன் அறை நோக்கி சிந்தனை வயப்பட்டு நடக்கலானான்.

'என்ன அப்படிப் பேசப் போகின்றார்கள்?' கோபத்துடனே எழுந்த கேள்வி, அதிராசேந்திரன் அறையெங்கும் ஒலிக்கப் பெறலாயிற்று.

*****

**க**தவைத் திறந்து, வெளியே வந்து, திரும்பவும் அதை மூடினாள் ஒருத்தி. அவள் இளையராணியின் பிரதான தோழியும் அவளின் நம்பிக்கைக்குரியவளுமான 'அல்லிக்கொடி' என்ற பெயர் கொண்ட மங்கை.

அறையையொட்டியிருந்த வாயில் ஓரத்திலுள்ள மரத்தூணின் மீது, ஒய்யாரமாய்ச் சாய்ந்தபடி எதிரே தெரிந்த நந்தவனத்தைப் பார்க்கலானாள்.

மூடிய அறைக்கதவை யாரும் திறந்துவிடாமல் பார்த்துக் கொண்டு உள்ளே எவரையும் அனுமதிக்காமல் இருக்கவே, அங்கே நின்று கொண்டிருந்தாள் அல்லிக்கொடி.

"யார் அங்கே நிற்பது?" -அதட்டலுடன் இவள் இருந்த திசை நோக்கி குரல் ஒன்று வர, நந்தவனத்திலிருந்து பார்வையை விலக்கினாள்.

சோழநாட்டுத் துணைத்தளபதி சிறிய தன்மபாலன் வந்து கொண்டிருந்தார்.

'இந்த அரைக் கிழவனுக்கு வேறு வேலையே கிடையாது' என்று முகம் சுளித்தாள் அல்லிக்கொடி. அதற்குள் சிறிய தன்மபாலர் அருகே வந்துவிட்டதால், சுளிப்பைப் புன்னகையாக்கி, "ஒன்றுமில்லை!" என்றாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“ஒன்றுமில்லை என்றால்?” என்று மிடுக்காய் இடுப்பில் கையூன்றியபடியே கேட்டார் சிறிய தன்மபாலன்.

அல்லிக்கொடிக்கு கோபம் கோபமாக வந்தது.

‘என்னை, என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார் இவர்?’ என்று அவரை முறைத்தாள்.

“அரண்மனையில் பகை ஒற்றர் நடமாடுவதாக எனக்கு செய்தி வந்துள்ளது. அதனால் பாதுகாப்பு முழுவதும் இப்போது என் மேற்பார்வையில் வந்திருக்கின்றது. நான் போகும் இடமெல்லாம் உன்னைப் பார்க்கின்றேன். அப்படி என்ன உனக்கு அங்கெல்லாம் வேலை?” என்று கேட்டார் துணைத்தளபதி.

அவ்வளவுதான்! அல்லிக்கொடிக்குச் சினம் மிகுந்தது.

“தளபதி அவர்கள் என்னை வீணாகச் சந்தேகிக்கின்றார். இப்போது கூட ‘அம்மா’ சொல்லிவிடட்டும் நான் இந்த சேடி வேலையை விட்டுவிட்டுப் போய்விடுகின்றேன்” என்று விம்மலானாள்.

“அல்லிக்கொடி! என்ன கேட்டுவிட்டேன்? எதற்கு வீணாய் அழுகிறாய்?” என்று அவர் வினவ, பதில் ஏதும் சொல்லாமல் விம்மலைப் பெரிதாக்கி, ‘ஓ’ என்று உள்ளே இருக்கும் இளையராணியின் காதில் விழும்படி அழலானாள் அல்லிக்கொடி.

இளையராணி கதவைத் திறந்து “என்ன அல்லிக்கொடி?” என்றாள்.

துணைத்தளபதி நடந்ததைச் சொல்ல. “நான்தான் அவளை இங்கே நிறுத்தி வைத்திருந்தேன். ஏனென்றால் நானும் அவரும் உள்ளே முக்கிய விஷயம் பேசிக் கொண்டிருக்கிறோம். இதெல்லாம் தங்களுக்குத் தேவையில்லாத ஒன்று என்று எனக்குப்படுகிறது” - கோபத்துடனே முகத்தில் அறைந்தாற் போல் ‘பட்’டென்று கதவை மூடித் தாழிட்டுக் கொண்டாள் இளையராணி.

இடுப்பில் ஊன்றிய கையை எடுக்காமலே இளையராணியின் போக்கில் சிறிது சலனப்பட்ட துணைத்தளபதி, மூடிய கதவைக் கவனித்தபடி சற்று நேரம் நின்று கொண்டிருந்துவிட்டுப் போகும் சமயத்தில், இன்னும் விம்மியபடியிருந்த அல்லிக்கொடியின் மேல் அலட்சியப் பார்வையைச் செலுத்தினார்.

இப்போது தப்பிவிட்டாய். ஆனால் உன்னைக் கவனிக்கும் காலம் எனக்கு வரத்தான் போகிறது என்று அவ்விடத்திலிருந்து அகன்ற சிறிய தன்மபாலன், ‘விம்முவாள், அழுவாள் பொய்யே’ என்ற வரிகளைத் தனக்குள் கூறிக் கொண்டார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அல்லிக்கொடிக்கு விம்மல் நின்றது. தளபதி போன திசைப் பக்கம் ஒழுங்கு காட்டிவிட்டு, மெல்ல சிரித்தபடி தூணில் சாய்ந்தவாறு நந்தவனத்தைப் பார்க்கத் தொடங்கினாள்.

உள்ளே-

சோழ நாட்டு இளவரசர் அதிராசேந்திரன் இருக்கையொன்றில் அமர்ந்திருக்க, எதிரேயிருந்த பஞ்சணையில் அவரின் மனைவி இளையராணியும், தங்கை இராஜசுந்தரியும் உட்கார்ந்திருந்தனர்.

"துணைத்தளபதியார் வீணாக என் விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டு வருகின்றார்" என்றாள் இளையராணி.

"ஆமாம், நான் கூட பார்த்துக் கொண்டு வருகின்றேன்! அரண்மனையைக் காவலுக்காகச் சுற்றி வருகிறேன் என்று தாம் இருக்கும் பக்கமே அடிக்கடி வருகிறார். சிறிய தன்மபாலருக்கு பெண்கள் பகுதியில் என்ன வேலை?" என்று சினத்துடனே சொன்னாள் இராஜசுந்தரி.

இரண்டு பெண்கள் சொல்வதையும் உன்னிப்புடன் கவனித்த அதிராசேந்திரன், "கொஞ்சம் பொறுங்கள்! ஆட்சி என் கைக்கு வரட்டும். பிறகு எல்லாம் சரியாகிவிடும் என்று அவர்களுக்குச் சமாதானம் கூறினான்.

"ஆட்சி உங்களிடம் வருவதற்குள், மறைமுகமாக நாம் செய்யும் செயல்களை அவர் கண்டு பிடித்துவிடுவார்! பிறகு நம் நிலைமை என்னாவது?" என்றாள் இளையராணி.

"அரசரிடம் இது பற்றிப் பேசுகின்றேன்!" என்று அரை மனதுடனே சொன்னான் அதிராசேந்திரன்.

"நீங்கள் என்ன சொல்வது? அவருக்கு மகள் என்ற முறையில் நானே சொல்கிறேன்!" என்றாள் மேலைச்சாளுகிய நாட்டுப் பட்டத்தரசியான இராஜசுந்தரி.

"அரசர் உங்களிடம் பாசமாகவே இல்லை. கடார வெற்றி பெற்று வந்திருக்கும் இராசேந்திரன் பேரில்தான் அவருக்கு இப்போது அன்பெல்லாம். கண்ணை மூடுவதற்குள் சோழ அரசுப் பொறுப்பை அந்த வேங்கியானிடம் கொடுத்துவிட்டுப் போகவில்லையென்றால் என் பெயரை மாற்றி வையுங்கள்!" என்றாள் இளையராணி அழுத்தமுடன்.

அதிராசேந்திரன் இதைக் கேட்டுப் பெருத்த குழப்பத்தில் ஆழ்ந்தான். இருக்கையிலிருந்து எழுந்து, "அவனை எப்படியும் ஒழித்துக்கட்டியே ஆக வேண்டும்" என்றான் உரக்க.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"அவனை ஒழிப்பது இருக்கட்டும்! பட்டத்தரசியையும், அமைச்சரையும் தனியாக வரச் சொல்லியிருக்கிறாரே அரசர், அது என்ன விஷயமாக இருக்கலாம்?" என்று தன்னிடம் அதிராசேந்திரனால் தெரிவிக்கப்பட்ட செய்தியைச் சொல்லி இருவரையும் பார்த்தவாறு இளையராணி கேட்க...

"அதை அறிந்து கொள்ள நம்மால் முடியுமா? அதற்கு ஏதாவது வழி இருக்கின்றதா?" என்று பரபரப்புடன் கேட்டான் சோழ இளவரசன்.

இராஜசுந்தரி சற்று யோசித்தாள்.

அதிராசேந்திரனும், அதற்கு வழி என்ன என்பது போல அறையைச் சுற்றி சுற்றி வர, கடைசியில் இராஜசுந்தரியே "வழி தென்பட்டுவிட்டது" என்றாள் மகிழ்ச்சியுடன்.

"என்ன வழி?" என்றான் ஆவலுடன் அதிராசேந்திரன்.

"பட்டத்தராசியாருக்கென்று தனி பொக்கிஷ அறை இருக்கிறது. அதற்கும், அரசர் இருக்கும் கூடத்திற்கும் ரகசிய வழி ஒன்று போகிறது. அது கூடத்தின் நடுநாயகமாய் அமைந்திருக்கும் பொய்த்தூணில் போய் முடிகிறது. ஆபத்துக் காலத்தில் பட்டத்தரசி அறையிலிருந்து, அந்தப் பொய்த் தூணில் போய் ஒளிந்து கொள்ளலாம். அவ்விதம் ஒளிந்து கொள்ளும் நபர் மூச்சுவிடுவதற்காக தூணின் நடுவிலுள்ள மான் தலையில் ஒரு சிறிய சந்து இருக்கிறது. அதன்மூலம் கூடத்தில் என்ன பேசுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்! இந்த வழி அரசருக்கும், அரசிக்கும் மட்டுமே தெரியும். ஒரு சமயம் மேலைச்சாளுக்கியரின் கை ஓங்கியிருக்கும் போது கங்கைகொண்ட சோழபுரமே என்ன நடக்கும் என்ற குழப்பத்தில் ஆழ்ந்திருந்த வேளை, பொய்த்தூணை எப்படி இடம் பெயர்ப்பது? எப்படி அதில் ஒளிந்து கொள்வது என்பதெல்லாம் அரசர், அரசிக்குச் சொல்லித் தந்தார். அதை மறைந்திருந்து கவனித்த நான் அவர்கள் போனதும் வேந்தர் சொன்ன முறைகளை உபயோகித்துப் பார்த்திருக்கின்றேன். அந்த அனுபவத்தை வைத்து, இப்போது நான் பொய்த்தூணில் ஒளிந்து கொண்டு, என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனிக்கின்றேன்" என்றாள் இராஜசுந்தரி.

"அருமையான யோசனை! ஆனால் பொக்கிஷ அறை இப்போது உபயோகப்படுத்தாமல் பூட்டியே இருக்கிறதே! சாவி கூட அரசியிடமே இருக்கிறது. எப்படி அதைத் திறப்பது?" என்று கேட்டாள் இளையராணி.

"நான் முயற்சி செய்கிறேன்! கிடைத்தால் வெற்றி. இல்லையென்றால் ஆண்டவன் விட்ட வழி!" என்று எழுந்து கொண்டாள் இராஜசுந்தரி.

## அத்தியாயம் - 11

**வே**ந்தர் வீரராசேந்திரரின் கூடத்துக்குப் பக்கத்திலேயே பட்டத்தரசியின் பொக்கிஷ அறை இருக்கிறது. அதில் பல விலை உயர்ந்த நவரத்தின மாலைகளும், பொன்னணிகளும் மற்றும் விலை மதிக்க முடியாத வைரக்கற்களும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.

பிற்காலச் சோழர் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து இன்று வரை ஆட்சி பீடம் ஏறிய அரசர்களின் சித்திரங்களும், சோழர் ஆட்சியில் நடந்த பல முக்கிய நிகழ்ச்சிகளும் சுவரில் ஓவியமாய்ப் புனையப்பட்டிருந்தன.

மொத்தத்தில் அதைச் சோழரின் சின்னக் கருவூல அறை என்றே அழைக்கலாம்!

அறையின் வடமேற்கு மூலையில் புலி உருவம் கொண்ட சிற்பம் ஒன்று பாயும் நிலையில் உள்ளது என்பதுதான் சாதாரணமாய்ப் பார்ப்பவர்களுக்குத் தெரியும். ஆனால் சூட்சுமம் தெரிந்தவர்களுக்கு? அச்சிற்பத்தின் காதுக்குள் விரலை நுழைத்துப் பக்குவமாய்த் திருகினால், புலி நகர்ந்து ஆள் நுழையக் கூடிய வழி ஒன்று இருக்கிறதென்பது புலனாகும். அதில் நுழைந்தால் நேரே அரசர் இருக்கும் கூடத்தில் உள்ள பொய்த்தூணில் போய் நிற்கலாம்!

சோழச் சக்கரவர்த்தியின் திருமகளும், மேலைச்சாளுக்கிய அரசியுமான இராஜசுந்தரி, இரகசியமாய் ஏற்கனவே இவ்வழியை அறிந்திருந்ததால், தற்போது அதைப் பயன்படுத்திக் கொண்டு, அரசரும், முதலமைச்சரும், பட்டத்தரசியும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிவதற்காக, பூட்டியிருக்கும் பொக்கிஷ அறையின் சாவியைப் பெற வேண்டி அரசியாரின் அந்தரங்க அறையை நோக்கிச் சென்றாள்.

பட்டத்தரசியின் அந்தரங்கத் தோழி அமுதவல்லி மட்டும் அங்கே இருந்தாள்.

“வாருங்கள் சாளுக்கிய அரசி!” என்று இராஜசுந்தரியை அன்புடன் வரவேற்று இருக்கை ஒன்றும் இட்டாள்.

அரசியை அங்கே காணாத இராஜசுந்தரி, ‘ஒருவேளை அரசரிடம் சென்றுவிட்டார்களோ, அவ்விதம் போயிருந்தால், போட்ட திட்டம் என்னாவது?’ என்ற கலக்கத்துடன், “அரசியார் எங்கே?” என்றாள்.

“நந்தவனப் பக்கம் சென்றிருக்கிறார்கள். வந்துவிடுவார்கள்” என்றாள் அமுதவல்லி.

சாளுக்கிய அரசிக்குப் பெருமூச்சு வந்தது. ‘நல்ல வேளை’ என்று இருக்கையில் உட்கார்ந்தாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அச்சமயம் உள்ளே நுழைந்த உலகமுழுதுடையாள் இராஜசுந்தரியைக் கண்டு, "என்னம்மா?" என்றாள் அன்புடனே.

"தங்களைத்தான் பார்க்க வந்தேன்" என்றாள் புன்முறுவலுடன்.

"என்னையா? என்ன விஷயம்?" என்று பட்டத்தரசி வினவ...

"பொக்கிஷ அறையின் சித்திரங்களைப் பார்க்க விரும்புகிறேன். திருமணத்திற்கு முன்பு பார்த்த நினைவு. ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் கழிந்துவிட்டதால் மறுபடியும் அவைகளைக் காண ஆவலாயிருக்கிறது" என்றாள்.

பட்டத்தரசி மௌனமானாள். சில நொடிகள் அவ்வாறு சென்றதும் "அரச விவகாரத்திற்காகத் தனிமையில் பேச என்னை அரசர் கூப்பிட்டிருக்கின்றார். அதனால் நாளை வாயேன்! நீயும், நானுமாய்ச் சித்திரங்களைப் பார்த்துவிடலாம்" என்றாள் அரசி.

இராஜசுந்தரிக்கு முகம் வாடியது.

தான் கூறியது அவள் மனதிற்குச் சங்கடத்தை உண்டு பண்ணிவிட்டதையுணர்ந்த சோழ அரசி, "வேறென்றும் தவறாக எண்ணிவிடாதே. பொக்கிஷ அறையைத் திறந்தே ஆறு திங்கள் ஆகிவிட்டன. இப்போது நீ அதைத் திறந்தால் கூட உள்ளே போக முடியாத அளவு தூசும் தும்பும்தான் இருக்கும். மிகவும் சங்கடப்பட்டுப் போவாய் என்றுதான் அவ்விதம் கூறினேன். மற்றப்படி வேறு எண்ணத்தில் கூறவில்லை. அதிலிருக்கும் பொக்கிஷங்கள் அனைத்துக்கும் நீதானே வாரிசு" என்று பட்டத்தரசி புன்முறுவலுடன் அவளை நோக்கிச் சொன்னாள்.

இந்த வார்த்தைகளால் இராஜசுந்தரி திருப்தியடையவில்லை என்பதை முகவாட்டத்துடனிருந்த அவளின் நிலையை வைத்துப் புரிந்து கொண்ட அரசி, அமுதவல்லியிடம் பொக்கிஷ அறையின் திறவுகோலைக் கொண்டு வரும்படிப் பணித்தாள்.

"மிகச் சிரமப்பட்டு கொடுக்க வேண்டாம் அரசி! இன்னொரு நாளைக்கு நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று இருக்கையிலிருந்து இராஜசுந்தரி எழுந்து கொண்டாள். அப்படி எழும்போது, விழிகளில் வேண்டுமென்று நீரை வரவழைத்து, அவ்விதம் வந்த நீரில் இரண்டு, மூன்று சொட்டைப் பளிங்குத்தரையில் விழும்படிச் செய்தாள்.

'இதென்ன வம்பு! நான் நல்லது சொல்லப் போய் இவள் அதைத் தவறாக எடுத்துக் கொண்டாளே!' என்று சங்கடப்பட்ட அரசி, 'இராஜசுந்தரி திருமணத்திற்குப் பிறகு நிரம்பத்தான் மாறிவிட்டாள்' என்று எண்ணியப்படி "என்ன சிறு பிள்ளைத்தனமாய்?

நான்தான் திறவுகோலைக் கொண்டு வரச் சொல்லிவிட்டேனே! எதற்குக் கண்களில் நீர்?" என்று அதைத் துடைத்தாள்.

அமுதவல்லி திறவுகோலுடன் வந்தாள். அதை இராஜசுந்தரியின் கையில் தந்து, "விரும்பும் அளவுக்குத் திறவுகோலை நீயே வைத்திரு!" என்று அவளின் மென்குழலைக் கோதலானாள் அரசி.

திறவுகோலைப் பெற்றுக் கொண்ட இராஜசுந்தரி, வேலை இவ்வளவு சுலபமாய் முடிந்துவிட்டதை நினைத்து மனதிற்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டாள்.

அதே சமயம்-

அரசர் அழைப்பதாக சோழ வீரன் ஒருவன் வந்திருப்பதை அமுதவல்லி தெரிவிக்க, "பிறகு பேசிக் கொள்ளலாம்" என்று கிளம்பினாள் சோழ அரசி.

திறவுகோலுடன் அதிராசேந்திரன் அறைக்குள் நுழைந்த இராஜசுந்தரி, பெருமையாய் இளையராணியிடமும், அவனிடமும் காண்பித்துவிட்டு, "சீக்கிரம் பொய்த்தூணிற்குள் போய் இருந்தால்தான் அவர்களின் பேச்சு முழு விபரங்களை அறிய முடியும்" என்று பொக்கிஷ அறையைத் திறப்பதற்காக, வேகமாய் நடந்தாள்.

ஆனால்...

இராஜசுந்தரி பொக்கிஷ அறையில் என்ன செய்யப் போகின்றாள் என்பதை அறிவதற்காக பட்டத்தரசி, இரகசியமாய் அமுதவல்லிக்குப் பணித்திருப்பதைச் சாளுக்கிய இளவரசி அறிந்து கொள்ளாததில் வியப்பொன்றும் இருக்க முடியாது அல்லவா?

## அத்தியாயம் - 12

**மா**ற்றுத் திறவுகோலைப் பயன்படுத்தி ஏற்கனவே அறைக்குள் புகுந்த அமுதவல்லி, மறைந்து கொள்வதற்கு ஏற்ற இடம் எதுவென்று பார்க்கும் போது, பாயும் நிலையில் அரை ஆள் உயரத்திலிருந்த புலிச்சிற்பமே கண்களுக்குப் புலப்பட்டது.

'அதுதான் சரியான இடம்' என்று அருகில் சென்றாள். சிற்பம் சுவரோடு சுவராய்ப் பொருத்தப்பட்டிருந்ததால், ஒளிவதற்கு ஏற்ற இடமாக இல்லாதிருப்பதை, அருகே சென்ற பின்பு உணர்ந்த அமுதவல்லி அறையை நோட்டம்விட்டாள். விலையுயர்ந்த கற்களும், ஆபரணங்களும் வைக்கப்பட்ட பேழையின் பின் பகுதி ஏற்றதாகப்படவே, அங்கே சென்று மறைந்து கொண்டாள். உடலைக் குறுக்கிக் கொண்டு குனிந்த நிலையில் உட்கார்ந்திருப்பது அமுதவல்லிக்குக் கடினமாய்த்தானிருந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அரசியின் கட்டளையாயிற்றே! அதனால் பற்களைக் கடித்துக் கொண்டு இன்னும் எவ்வளவு நாழிகை இருக்க வேண்டி வருமோ என்று தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக ஒளிந்து கொண்டாள்.

பொக்கிஷ அறையின் பெருங்கதவு, 'கிரீச்' என்ற சப்தத்துடன் திறக்கப்பட்டது.

"அப்பா! என்ன புழுதி?" என்று தன் அழகிய கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள் இராஜசுந்தரி.

தூசி அடங்கியதும் முகத்திலிருந்து கைகளை அகற்றி, திரும்பவும் திறவுகோலை உபயோகித்து, உட்பக்கமாகப் பூட்டிக் கொண்டாள்.

'ஆஹா! இந்த அறையிலிருக்கும் பொக்கிஷத்தைக் கொண்டு, சோழ நாட்டின் பாதிப்பகுதியை விலை கொடுத்து வாங்கிவிடலாம் போலிருக்கிறதே! வழி வழியாக சோழ அரசுப் பெண்மணிகள் சிறுகச் சிறுக சேர்த்து வைத்துள்ள சொத்தல்லவா? அதனால் தற்போது பெரியதாகி இருக்கிறது. சிறு துளி பெரு வெள்ளம் என்பதற்கு இதைத் தவிர வேறு எடுத்துக்காட்டு இருக்க முடியுமா?' என்று விலையுயர்ந்த அணிகலன்களைச் சிறிது நேரம் வியப்புடன் நோக்கலானாள்.

'இந்நேரம் கூடத்தில் அரச விவகாரங்கள் பற்றிய பேச்சு எழுந்திருக்கும்!' என்று அவளை எச்சரித்த உள் மனம் மூலம் விழித்துக் கொண்ட மேலைச்சாளுக்கிய அரசி, "என்ன மூடத்தனம்? பெண்களுக்கு இருக்கும் நகை ஆசையில் வந்த வேலையை மறந்து, இவைகளைப் பார்க்க ஆரம்பித்துவிட்டேனே" என்று நொந்து கொண்டு, பாயும் புலி அருகே சென்றாள்.

ஆள் காட்டி விரலை வலக்காதில்விட்டுத் திருகினாள். அடுத்தகணம் புலியிருந்த இடத்தில் ஆள் நுழையும் அளவுக்கு வழி தென்பட்டது. சுற்றுமுற்றும் பார்த்த சாளுக்கிய அரசி அந்த வழிக்குள் புகுந்து மறைந்தாள்.

பேழையின் பின்பக்கம் குனிந்த நிலையில் இதுவரை கஷ்டப்பட்டு, உட்கார்ந்து கொண்டிருந்த அமுதவல்லி, இராஜசுந்தரி அவ்வழிக்குள் புகுந்துவிட்டதையறிந்து எழுந்து கொண்டாள்.

அதற்குள் புலிச் சிற்பமும் பழைய நிலைக்கு வந்து வழியும் மறைந்து போனது.

அமுதவல்லியும், இராஜசுந்தரி செய்தது போல வலக் காதில் கைவிட்டுத் திருக, மீண்டும் வழி புலப்பட்டது.

எங்கே போகும் வழி என்று உள்ளே இறங்காமல் வெளியிலிருந்தபடி எட்டிப் பார்த்தாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஒரே இருட்டாக இருந்தது.

அறையிலிருந்த குறைந்த வெளிச்சத்தில் இறங்குவதற்குப் படிக்கட்டுகள் இருப்பது தென்பட்டன.

‘எங்கே போயிருப்பாள் சாளுக்கிய அரசி?’ என்று படிகளில் இறங்கினாள் அமுதவல்லி.

அடுத்தகணமே பாயும் புலி வழியை மூடிக் கொண்டது.

காற்றும், வெளிச்சமும் இல்லாமல், அடுத்து எங்கே கால் வைப்பது என்பது புரியாமல் தடுமாறி நின்ற அமுதவல்லி, ‘கடவுளே! ஏன் வந்து தொலைக்க வேண்டும்? இரகசிய வழிக்குள் இராஜசுந்தரி நுழைந்தாள் என்பதை மட்டும் அரசிக்குத் தெரிவித்திருக்கலாமே... அதைவிட்டு ஏதோ மௌடீகத்தனமாய் புகுந்துவிட்டேனே! இப்போது வெளியில் போக என்ன செய்வது? சுவாசிக்கக் காற்று கூட இங்கே இல்லையே. பழக்கப்பட்டவர்கள் மட்டும் போகக் கூடிய இச்சுரங்க வழியில் முன்பின் தெரியாத நான் மாட்டிக் கொண்டுவிட்டேனே! இப்போது என்ன செய்வது? இராஜசுந்தரி மறுபடியும் இப்படித்தானே திரும்பிவர வேண்டும்? அவள் கண்களில் நான் தென்பட்டுவிட்டால்... விபரீதமாக அல்லவா ஆகிவிடும்? என்னால் பட்டத்தரசியும் அல்லவா சங்கடத்தில் மாட்டிக் கொண்டு, வீணாய்ப் பதில் சொல்ல வேண்டிய நிலைமைக்கு ஆளாவார்கள்’ என்று பலவித எண்ணங்களுடன், மன எரிச்சல் கொண்ட அமுதவல்லி, ஆத்திரத்துடன் வழியை மூடிக் கொண்டிருந்த தடுப்பு மீது ஓங்கிக் குத்தினாள்.

கை வலித்தது தவிர, வேறொன்றும் நிகழ்ந்துவிடவில்லை. ஆவது ஆகட்டும் என்று அங்கேயே உட்கார்ந்துவிட்டாள்.

இருளுக்கு ஏற்றபடி தற்போது அவள் விழிகள் சுருங்கிவிட்டதால், அவளிருந்த இடத்திலிருந்து படிப்படியாக கீழ் நோக்கிப் படிகள் சென்று கொண்டிருந்தது அமுதவல்லிக்குத் தெரிந்தது.

இறங்கித்தான் பார்ப்போம்! தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது. சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன? என்ற தைரியத்துடன் படிகளில் இறங்கலானாள்.

அவை முடியும் இடத்தில், சுரங்கத்தைத் தாங்குவதற்காக பெரிய தூண் ஒன்று நிறுவப்பட்டிருந்தது. அங்கிருந்து மேல்நோக்கி மீண்டும் படிகள் சென்று கொண்டிருந்தன.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

'ஒரு அறைக்கும், இன்னொரு அறைக்கும் இரகசியமாய்ச் செல்ல ஏற்பட்ட வழி இது' என்று அப்போதுதான் அமுதவல்லிக்குத் தெரிந்தது.

துணை நெருங்கி, மேலே செல்லும் படிகளைக் கவனித்தாள்.

அவை முடியும் இடத்தில், ஆள் நிற்கும் அளவுக்கு இடம் ஒன்று காணப்பட்டது.

அந்த இடத்தில்தான் இராஜசுந்தரி நின்ற வண்ணம் எதையோ உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். இனிமேல் அவள் அருகில் செல்ல முடியாது. அப்படிச் சென்றால் இராஜசுந்தரி தன்னைப் பார்த்துவிடுவாள். அதனால் வந்த வழியே திரும்பி, தடுப்பைத் திறக்க முயற்சிக்கலாம். அவ்விதம் திறந்துவிட்டால் 'விட்டது சனியன்' என்று வெளியேறிவிடலாம். சாளுக்கிய அரசி எப்போதாவது வந்து தொலையட்டும்! என்று தடுப்பை அடைவதற்குத் திரும்பினாள். தற்சமயம் அவள் கண்கள் இருட்டைப் பார்த்துப் பழகிவிட்டதால், தடுப்பின் நடுவே பெரிய திருகாணி இருப்பது தெரிந்தது.

'இதுதான் தடுப்பைத் திறக்கும் வழியாக இருக்க வேண்டும்' என்று வேகமாய் நடந்து திருகினாள்.

என்ன ஆச்சரியம்! ஒரு நபர் வெளியேறும் அளவுக்கு வழி தோன்றியது. அதன் மூலம் பொக்கிஷ அறையிலிருந்து லேசாய்க் காற்றும், வெளிச்சமும் வந்து கொண்டிருந்தது. 'நல்லதாய்ப் போயிற்று!' என்று, சுரங்க அறையிலிருந்து வெளியே வந்த அமுதவல்லி, பாயும் புலியை இயக்கி திரும்பவும் வழியை மூடினாள். விஷயத்தை அரசியிடம் சொல்ல வேண்டும் என்ற ஆவலில் மாற்றுத் திறவுகோலால் பொக்கிஷ அறையின் பெருங்கதவைத் திறக்கலானாள்...

## அத்தியாயம் - 13

"எனக்குப் பிறகு சோழ இளவரசனான, 'அதிராசேந்திரன்' ஒருவனால் மட்டுமே இந்நாட்டை நிர்வகிக்க முடியுமா?" -சோழச் சக்கரவர்த்தியின் கேள்வியால், பொய்த் தூணிற்குள்ளிருந்த 'இராஜசுந்தரி' அதிர்ச்சியுற்றாள்.

பட்டத்தரசியும், முதலமைச்சர் பிரமாதிராசரும் அதற்கு என்ன பதில் தரப் போகின்றார்கள்? என்பதற்காக செவிகளைக் கூர்மையாக்கினாள்.

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் வேண்டும்!" என்று அரசர் பிரமாதிராசரைப் பார்க்க, அவர் தொண்டையைச் சரி செய்து கொண்டார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“உங்களுக்குப் பிறகு அதிராசேந்திரன் ஒருவனால் மட்டுமே சோழ அரசுப் பொறுப்பை நிர்வகிப்பது அவ்வளவு உசிதமாய் இல்லை” என்றார்.

சோழச் சக்கரவர்த்தியின் முகத்தில் புன்னகை நிலவியது. “முதலமைச்சர் சொல்வதை அரசியார் ஆமோதிக்கப் போகிறாரா? அல்லது...” என்று அவர் பக்கம் திரும்ப...

“என் மனதிலிருப்பதும் அதுதான்” என்றாள் உலகமுழுதுடையாள் அழுத்தமாக.

பொய்த் தூணில் ஒளிந்து கொண்டிருந்த இராஜசுந்தரிக்கு ஆத்திரம் மிகுந்தது. ‘தாயா இவள்? அரக்கி!’ என்று பற்களைக் கடித்தாள்.

“அதிராசேந்திரன் ஒருவன் மட்டும் இந்த அரசுப் பொறுப்பை நிர்வகிப்பது உசிதமாயில்லை என்று கூறும் முதலமைச்சர், அதற்கு மாற்றாக என்ன கூற விரும்புகின்றார்?”

“சக்கரவர்த்தி அவர்களே, இதற்குப் பதில் கூற முடியாத நிலையில் நான் இருக்கின்றேன்! ஏனென்றால் இது ஒரு சிக்கலான கேள்வியாகப்படுகிறது!”

“இம்மாதிரி சிக்கலை நீக்கத்தானே மந்திரி இருக்கின்றார்! சாதாரண இக்கேள்விக்கே தடுமாறினால், இன்னும் பல சிக்கல்களை நீங்கள் எதிர் நோக்க வேண்டியிருக்கிறதே!” என்றார் அரசர்.

இக்கூற்றினால் சிறிதே தடுமாற்றமுற்ற பிரமாதிராசர் இமைப்போதில் அதை மறைத்துக் கொண்டு, “கேள்விக்குரிய பதில் அரசரிடமே இருக்கிறது!” என்றார் புன்னகையுடனே.

நோயினால் களைப்புற்ற நிலையில், சற்றுத் தெம்பிழந்திருந்த சோழச் சக்கரவர்த்தி, “என்ன இருந்தாலும் நம் முதலமைச்சர் கெட்டிக்காரர்தான்!” என்றார் மகிழ்ச்சியுடனே. அத்தோடு, “இதற்குப் பதில் என்னிடம் இருக்கிறதென்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால், உடன்கூட்டத்ததிகாரிகளின் தலைவரான தங்களின் கருத்து என்ன என்பதை அறியத்தான் கேட்டேன். ஏனென்றால் என் பாட்டன் காலத்திலிருந்தே சோழ அரசு கூட்டுப் பொறுப்பில்தான் இயங்கி வருகிறது. மன்னருக்கே எல்லா அதிகாரங்களும் இருந்தாலும் அமைச்சரின் கருத்தையும் கேட்டுத்தானே இதுவரை நாங்கள் ஆட்சி புரிந்து வந்திருக்கின்றோம்! அந்த முறையில்தான் உங்கள் கருத்தைக் கேட்டேன்” என்றார் அரசர்.

முதலமைச்சர் பிரமாதிரரசர் சுற்றுமுற்றும் பார்த்தார். “கடார வெற்றியீட்டி சோணாட்டுக்குப் பெருமை தேடி வந்திருக்கும் வேங்கி இளவரசரும், தங்களின் தங்கை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மகனுமான இராசேந்திரன்தான், அதிராசேந்திரருக்குப் பிறகு பொருத்தமானவராகப் படுகின்றது!" என்றார்.

"நல்லது! அமைச்சரின் கருத்தை ஆதரிப்போம்" என்று பட்டத்தரசியின் பக்கம் திரும்பிய வீரராசேந்திரர், "இதற்கு உன் கருத்து?" என்று வினவ,

"மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி!" என்றாள் உலகமுழுதுடையாள்.

"பரவாயில்லையே! இம்மாதிரி விஷயங்களில் தாய்ப் பாசத்தைத் தனியாக ஒதுக்கிவிட்டு நாட்டின் நலத்தை மட்டும் கருத்தில் கொண்டு, முதலமைச்சரின் கூற்றை ஆமோதித்த பட்டத்தரசியை உண்மையிலேயே மனதாரப் பாராட்டுகிறேன்!" என்று புகழ்ந்தார் சோழச் சக்கரவர்த்தி.

கிழவனுக்கு அந்திமக் காலம் நெருங்கிவிட்டது. அதனால் ஆடுகிறான்! இந்த அநியாயத்தை எப்படித்தான் பூமித்தாய் தாங்கிக் கொண்டிருக்கிறாளோ? என்று பொய்த்தூணிற்குள் இருந்த இராஜசுந்தரி அடுத்து அவர்கள் பேசப் போகும் விஷயத்தை அறிவதற்குத் தயாரானாள்.

"அரசியார் நாகை சென்ற விஷயம் இன்னும் மர்மமாகவே இருக்கிறதே! ஜோதிடர் என்ன சொன்னார்? அவர் சொன்ன விஷயங்கள் எல்லாம் இளையராணிக்குத் தெரியுமா?" என்று வினாக்களைத் தொடுத்துப் பதிலுக்காக உலகமுழுதுடையாளின் முகத்தைப் பார்த்தார் சக்கரவர்த்தி.

"சோழ நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியும், அடுத்து ஆட்சி பீடம் ஏறுபவர் யார்? என்றும் அவரிடம் கேட்டேன்! அதற்கு அம்பிகைதான் பதில் தரவேண்டும் என்று என்னை மட்டும் பூஜை அறைக்குள் அழைத்துச் சென்றார் நாகை சோதிடர். அம்பிகையின் பதில்..." என்ற பட்டத்தரசி தயக்கத்துடனே, "இப்போது நாம் முடிவு செய்ததற்கு எதிரிடையாக இருக்கிறது" என்றாள்.

"என்ன?" என்று வியப்பினால் முதலமைச்சரின் நெற்றி சுருங்கியது.

"ஆமாம்! அம்பிகை வேங்கி இளவரசனான இராசேந்திரனைத்தான் உங்களுக்குப் பிறகு சோழ அரசனாகத் தேர்ந்தெடுத்தாள்" என்றார் உலகமுழுதுடையாள்.

"அப்படியா விஷயம்?" என்று மோவாயைத் தடவிய அரசர், "என் விருப்பமும் அதுவாகத்தானிருக்கிறது!" என்றார்.

பொய்த்தூணிற்குள்ளிருந்த இராஜசுந்தரிக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

'கிழவனுக்கு மூளை குழம்பிப் போயிருக்கிறது என்பது மட்டும் உண்மை' என்றாள் தனக்குள்ளாக.

'என் விருப்பமும் அதுதான்' என்று அழுத்தமாய் மன்னர் கூறியதைக் கேட்ட முதலமைச்சரின் முகத்தில், எந்தவித வியப்புக் குறியும் தென்பட்டுவிடவில்லை. ஏனென்றால் இது வரை மூத்த மைந்தனுக்கே அரசுப் பொறுப்பு என்று சோழர்கள் கடைப்பிடித்து வந்திருக்கின்றார்கள். அவ்விதம் பரம்பரை பரம்பரையாக வந்த பழக்கத்தை, தற்போது மாற்றி இராசேந்திரனுக்கு முடிசூட்டுவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதனால் பின் விளைவுகள் பயங்கரமாயிருக்கும். குழப்பத்தை உண்டு பண்ணவே காத்திருக்கும் சிலர் இதைப் பயன்படுத்தி நாட்டில் கலவரத்தை ஏற்படுத்தி விடுவர். அத்துடன் இராஜசுந்தரியை மணந்து கொண்டு அதிராசேந்திரனுக்கு மைத்துனன் முறையிலிருக்கும் மேலைச்சாளுக்கிய அரசனான விக்கிரமாதித்தனும், தன் நட்பை முறித்துக் கொண்டு, சோழருக்கு எதிராகப் போருக்கு கிளம்பிவிடுவான்.

அவ்விதம் அவன் போருக்குக் கிளம்புவதற்கும் இன்னொரு காரணம் இருந்தது. கீழைச்சாளுக்கியருக்கும் மேலைச்சாளுக்கியருக்கும் அப்போது பெரிய பகையே நிலவிக் கொண்டிருந்தது.

அதனால், தந்தை வழியில் கீழைச்சாளுக்கிய நாட்டின் இளவரசனாயிருந்த இராசேந்திரனை அவன் எக்காரணங் கொண்டும் சோழ அரசனாய் எற்றுக் கொள்ளமாட்டான். அத்துடன் தன் மனைவி இராஜசுந்தரியின் அண்ணனான அதிராசேந்திரன் வருவதைத்தானே அவனும் விரும்புவான்! அதுதானே மனித இயல்பும் கூட. எனவே...

தற்போது நிலவும் சூழ்நிலைகளை வைத்து அடுத்து அதிராசேந்திரனுக்கு முடிசூட்டுவதுதான் முறை...

பிரமாதிராசர் மனதில் ஏற்கனவே முடிவு செய்திருந்ததையே, அப்போது அரசர் தெளிவாய் இருவரிடமும் கூறினார்.

"அதிராசேந்திரனுக்குப் பதில், அம்பிகையின் ஆணைப்படி இராசேந்திரனுக்கே முடிசூட்டினால் என்ன?" என்றாள் பட்டத்தரசி.

சக்கரவர்த்தி கலீரென்று சிரித்தார்.

"என் ஆசையும் அதுதான். ஆனால், நாட்டின் நிலைமை அம்மாதிரி இல்லையே! இப்போதிருக்கும் சூழ்நிலையில், எனக்குப் பிறகு இராசேந்திரனை சோழச் சக்கரவர்த்தியாக ஆக்கினால், நாட்டில் பாதகமான சூழ்நிலைதான் நிலவும்" என்ற அவர்,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“காஞ்சியின் அரசப் பிரதிநிதியான என் இரண்டாவது மகன் மதுராந்தகன், அதிராசேந்திரனைப் போல அவ்வளவு திறமை படைத்தவனல்ல. அதனால், நான் இருக்கும் போதே, சோழ நாட்டின் இளவரசனாக இராசேந்திரனுக்குப் பட்டம் கட்டி அவனைக் காஞ்சிக்குச் சோழ அரசின் பிரதிநிதியாக அனுப்பி வைக்கலாம் என்று கருதுகிறேன்! இதற்கு உங்களின் முடிவு என்ன?” என்று இருவரையும் பார்த்துக் கேட்டார் வேந்தர்.

“நல்ல யோசனை!” என்றாள் மாதரசி.

பிரமாதிராசர் வார்த்தைகளால் அதனைத் தெரிவிக்காது கண்களாலேயே சம்மதத்தின் அறிகுறியை வெளிப்படுத்தினார். “நீங்கள் இம்மாதிரி செய்யப் போவதை, வேறொரு மங்கள நிகழ்ச்சியில் உறுதிப்படுத்தலாம். அப்படிச் செய்துவிட்டால் காஞ்சிக்கு இராசேந்திரனை அரசப் பிரதிநிதியாக்குவது பற்றி யாரும் ஒரு குறையும் சொல்ல முடியாது” என்றார் முதலமைச்சர்.

“என்னது... முதல்வர் புதிருடனே எதையோ சொல்கின்றார்!” என்று ஆர்வமுடன் அரசர் வினவ...

“ஒன்றுமில்லை. இளவரசன்... அதிராசேந்திரனுக்கு இதுவரை புத்திரசந்தானம் உண்டாகவில்லை. அவருக்குப் பிறகு அவரின் தம்பி மதுராந்தகனுக்கும் பேரரசை நிர்வகிக்கும் அளவுக்குப் போதிய திறமை இல்லை. அதனால் தங்கள் தமையன் மகளான மதுராந்தகியை வேங்கி இளவரசர் இராசேந்திரனுக்கு மனம் செய்துவிட்டால்...! ஏற்கனவே வழிவழியாக வரும் கீழைச்சாளுக்கிய சோழர் மண உறவு, இதன் மூலம் உறுதிப்பட்டுவிடும். அத்துடன், இராசேந்திரன் சோழ வம்சத்துக்கு மாப்பிள்ளையாகவும் ஆகிவிடுவார். குடும்பத்தைக் காக்கத் தகுதியான ஆள் இல்லையென்றால், அக்குடும்பத்தின் மருமகப்பிள்ளையே பொறுப்பை ஏற்றுக் கொள்வது போல... இந்த மங்கல நிகழ்ச்சிக்குப் பிறகு, இராசேந்திரன் சோழ இளவரசனாய் காஞ்சிப் பிரதிநிதியாகலாம். அப்படியாவதை யாரும் குறை சொல்லவும் முடியாது. சோழ நாட்டுக் குறுநில மன்னர்களும், அதிகாரிகளும், நிச்சயம் இதை அங்கீகரிக்கவும் செய்வார்கள்!” என்றார் பிரமாதிராசர்.

தூணுக்குள்ளிருந்த இராஜசுந்தரிக்கு, அதை இரண்டாகப் பிளந்து முதலமைச்சரின் நெஞ்சில் குறுங்கத்தியைச் செலுத்திக் கிழித்துவிடலாமா என்று துடித்தாள்!



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நினைப்பதெல்லாம் செய்ய முடியுமா? அதனால், ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, முதல் மந்திரி சொன்னதற்கு இரு கிழங்களும் என்ன செய்யப் போகின்றது என்பதற்காக, நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு நின்றாள்.

“நல்ல யோசனைதான். என்ன இருந்தாலும், முதன் மந்திரி முதன் மந்திரிதான். இதற்குப் பட்டத்தரசியின் கருத்து எதுவோ?” என்று அவரின் பக்கம் திரும்பிய மன்னர், “அம்மாதிரி நான் கேட்பதற்கும் காரணம் இருக்கிறது. தற்போது காஞ்சிப் பிரதிநிதியாக இருக்கும் மதுராந்தகன் உன் வயிற்றில் பிறந்தவனே. பெண்ணிற்குத் தாய்ப்பாசம் என்பது அவளின் கூடப் பிறந்த ஒன்று அல்லவா?” என்றார்.

“நான் முதலிலேயே கூறிவிட்டேன். பாசம் என்பது அரச விவகாரங்களுக்கு அப்பாற்பட்டதென்று. எனக்கு முன் வாழ்ந்த சோழ அரசகுடும்பத்துப் பெண்மணிகள் எல்லோரும், முதலில் நாட்டின் நலனுக்குத்தான் இடம் கொடுத்தனர். பிறகுதான் பாசத்தைப் பற்றி எண்ணினர். அவர்கள் வழியில் வந்த நானும், அதை மீறுவேனா?” என்றார் அழுத்தமாக.

“நல்லது! இங்கே இப்போது நாம் மூவரும் எடுத்த முடிவானது மிக முக்கியமானது. இதை எக்காரணம் கொண்டும், யாரும் எங்கேயும், எந்தச் சூழ்நிலையிலும், தகுந்த சந்தர்ப்பம் வரும்வரை வெளியிடக் கூடாது. அம்மாதிரி நான் கூறுவதற்குக் காரணம் இல்லாமலில்லை. சோழ அரசுக்கு எதிராகவே செயற்படும் சில தீய சக்திகள் இராசேந்திரனுக்கும், மதுராந்தகிக்கும் மணம் நடப்பதை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அதனால் தக்க நேரம் வரும் வரை நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும். நான் அதிக நாள் உயிரோடு இருக்கமாட்டேன் என்றே எனக்குப் படுகிறது. அதற்குள் நீங்கள் மதுராந்தகி, இராசேந்திரன் திருமணத்துக்கு ஏற்பாடு செய்துவிடுங்கள். பிறகு சோழ இளவரசனாக இராசேந்திரனுக்குச் சுலபமாய் முடிசூட்டிவிடலாம். அப்புறம் எந்தத் தொல்லையும் இருக்காது” என்றார் வேந்தர்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட மேலைச்சாளுக்கிய இளவரசிக்கு அங்கே இருக்கப் பிடிக்காததால், ‘சோழ சாம்ராஜ்ஜியத்துக்கு அழிவு காலம் வந்துவிட்டது’ என்று பொருமியபடி பொய்த்தூணிலிருந்து வெளியில் வந்தாள்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 14

**ம**ன உளைச்சலால் குரோதமும், ஆத்திரமும் மிகுந்து அதனால் சோழச் சக்கரவர்த்தியின் மேல் பெரும் துவேஷம் கொண்ட அவரின் மகளான இராஜசுந்தரி, மிகுந்த வேகத்தோடு இளையராணியின் மாளிகைக்குள் நுழைந்தாள்.

அங்கே...

சோழ இளவரசரும், அவரின் துணைவியார் இளையராணியும், இவளின் வரவை, எதிர்பார்த்திருந்ததால், “வா இராஜசுந்தரி!” என்று வரவேற்றனர்.

மிக்க சினத்துடன் நுழைந்த மேலைச்சாளுக்கிய அரசி, “அண்ணா, பெரிய சதி நடக்கிறது!” என்றாள் உரக்க.

யாராவது அதைக் கேட்டு, எதையாவது நினைத்துக் கொள்ளப் போகின்றனர் என்று பயந்து, “கொஞ்சம் மெதுவாய்...” என்று புன்னகையுடனே கூறினாள் இளையராணி.

ஆனால், இராஜசுந்தரி காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. முன்னைவிட சற்று உரக்கவே பேசத் தொடங்கினாள்.

“இப்போதே போய் அந்தக் கிழத்தின் நெஞ்சில் இந்தக் குறுவாளைப் பாய்ச்சிவிட்டு வருகின்றேன்!” என்று தற்காப்புக்காக அரச மகளிர் இடையில் மறைத்து வைத்திருக்கும் சிறிய வாளைக் கைகளில் எடுத்துக் கொண்டாள். அப்படி எடுத்தவள் அங்கிருந்து திரும்பி வெளியே போகவும் முயன்றாள்.

நிலைமை மோசமாகப் போய்விட்டதையுணர்ந்த அதிராசேந்திரன் விரைந்தோடி, வாயிலின் குறுக்கே நின்று அவளை வழிமறித்து, “சகோதரி!” என்றான் அன்புடன்.

“என்ன அண்ணா?” என்ற இராஜசுந்தரியின் விழிகள் ‘மல மல’வென்று நீரைச் சொறிந்தன.

அதிராசேந்திரன் கதவைத் தாழிட்டு இராஜசுந்தரியின் கன்னத்தில் வழிந்த நீரைத் துடைத்து, அவளை இருக்கையில் இருத்த முயன்றான்.

“என்னை விட்டுவிடுங்கள் அண்ணா. மகனுக்குத் துரோகம் இழைக்கும் பெற்றோர்களைக் கொல்வதில் தவறில்லை. சகோதரனுக்காக ஒரு சகோதரி தகப்பனைக் கொன்று தன்னையும் மாய்த்துக் கொண்டாள் என்று வரலாற்றில் எழுதப்படட்டும்!” என்றாள் ஆவேசத்துடன்.

இராஜசுந்தரி சொல்வதைக் கேட்ட அதிராசேந்திரன், ஆவேசப்படும் அளவுக்கு ஏதோ நடந்திருக்கிறது! அது எதுவாயிருக்கும்? என்று மனதில் கேள்வியை எழுப்பி, “சகோதரி, நீ ஆத்திரம் கொள்ளும் அளவுக்கு அங்கே என்னம்மா பேசிக் கொண்டார்கள்?” என்றான் அமைதியாகவே.

“பெரிய மகனுக்குத் துரோகம் இழைத்துவிட்டார்கள். உனக்குப் பிறகு வேங்கியானுக்கு இளவரசுப் பட்டம் கட்டப் போகிறார்களாம். என் தம்பி மதுராந்தகனுக்குப் பதிலாக, அவனைக் காஞ்சிக்கு அரசப் பிரதிநிதியாக ஆக்கப் போகிறார்களாம். அதை உறுதிப்படுத்தும் முறையில் மதுராந்தகிக்கும், இராசேந்திரனுக்கும் மணம் முடிக்கப் போகிறார்களாம். எப்படி இருக்கிறது வேடிக்கை?” என்றாள் ஆவேசத்துடன்.

அதிராசேந்திரன் திடுக்கிட்டான்!

“அக்கிரமம் அதிகமாகிவிட்டது! ஏதாவது ஒன்று, நடந்தால்தான் இதற்கு வழி பிறக்கும்” என்று பொங்கும் சினத்துடன் மீண்டும் வெளியே போக முயன்ற இராஜசுந்தரியைத் திரும்பவும் தடுத்து, அதே வேகத்தில் அவள் கையிலிருந்த குறுவாளையும் வாங்கிக் கொண்டான்.

அவளின் அழகிய அதரம் கோபத்தினால் சிவந்தது. “என்னிடமிருந்து ஏன் கத்தியை வாங்கிக் கொண்டாய்! நான் செய்யப் போவது புனித காரியம்! அதனால் இச்சோழ சாம்ராஜ்யமே நன்மை அடையப் போகிறது” என்றாள்.

இளவரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆத்திரத்தோடு இருக்கும் இராஜசுந்தரியை முதலில் சாந்தப்படுத்த வேண்டும் என்று, “சகோதரி! சோழ அரசுப் பொறுப்பு மூத்த மகன் என்ற முறையில் எனக்குத்தான் வரும். பரம்பரை பரம்பரையாக வந்த இப்பழக்கத்தை நம் தந்தையால் அவ்வளவு எளிதில் மாற்றிவிட முடியாது. அப்படி ஏதாவது செய்தால் நாட்டில் குழப்பம்தான் வரும். அதனால் எந்தவிதக் கவலையுமின்றி நிம்மதியாக அந்த இருக்கையில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து கொள் அம்மா” என்றான்.

“என் கணவர் மேலைச்சாளுக்கிய மன்னர் இருக்கும் வரை உங்களுக்கு அரசு கட்டில் கிடைக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை! ஆனால்... உங்களுக்குப் பிறகு? அந்தக் கேள்வியைக் கொஞ்சம் மனதிலிருத்தி யோசித்துப் பாருங்கள். தம்பி மதுராந்தகன் கதி என்னாவது? பரம்பரையாக சோழ வம்ச அரசர்களே ஆண்டு வந்த இந்த அரசு கட்டிலை, எங்கிருந்தோ வந்திருக்கும் இராசேந்திரன் அல்லவா கைப்பற்றிக் கொள்வான் போலிருக்கிறது”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“அப்படி நடக்காது, நடக்கவும் முடியாது. அம்மாதிரி நடக்கவும் விடமாட்டேன்” என்று அந்த அறையே அதிரும்படிக் கத்தினான் அதிராசேந்திரன்.

இளையராணி திடுக்கிட்டுப் போனாள்; இராஜசுந்தரியும் வாயடைத்து நின்றாள்.

பரவாயில்லையே! இளவரசருக்கு இப்போதுதான் ரோஷமே வந்திருக்கிறது போலிருக்கிறதே. இது தொடர்ந்திருக்குமேயானால் எவ்வளவு நன்றாயிருக்கும்? என்று எண்ணிய இளையராணி, தன் கணவன் மேலும் என்ன சொல்லப் போகின்றான் என்பதை அறிவதற்காக அவனைப் பார்த்தாள்.

அதற்குப் பதில்-

வாயடைத்து நின்ற இராஜசுந்தரியே பேசலானாள். “அண்ணா! என் கணவரை எப்படியாவது இங்கே வரவழைக்க வேண்டும். மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கொடும்பாளூர்க் குறுநில மன்னனுடன் நாம் கலந்தாலோசிக்க வேண்டும். காலம் கடத்தாமல் இன்றைய இரவே அதைப் பற்றிப் பேச வேண்டும்” என்றாள் பரபரப்போடு.

“இராஜசுந்தரி சொல்வது போலவே இன்றைய இரவு இதுபற்றிப் பேசலாம். அதற்காக, கொடும்பாளூர்க் குறுநில மன்னரை சந்தித்துவிட்டு வருகின்றேன். அதுவரை எனக்காக உணர்ச்சிப் பெருக்கால் எதையாவது செய்து தொலைக்காமல் இங்கே நீ இருக்க வேண்டும்” என்றான் சோழ இளவரசன் அழுத்தமாக.

அப்பொழுது-

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

“யார்?” என்று அதிராசேந்திரன் வினவ, “நான்தான் வீரசோழ இளங்கோவேளான்” என்றான்.

இளவரசன் கதவைத் திறந்தான்.

நல்ல உயரத்துடனும், முகத்தில் மெல்லிய மீசையும், கயறு போல் மெலிந்த தேகத்துடனும் நின்று கொண்டிருந்த ஒருவன் அதிராசேந்திரனை வணங்கி, “மன்னர் பேச்சு மூச்சின்றி இருக்கின்றார். முதன் மந்திரி தங்களைத் தாமதிக்காது உடனே வரச் சொன்னார்!” என்றான்.

“அரசருக்கு ஒன்றும்...” என்று பதறிய சோழ இளவரசனின் கண்கள் கலங்கின.

“வருத்தப்பட இது நேரமில்லை சக்கரவர்த்தி” என்ற சோழ வேளான், ‘சக்கரவர்த்தி’ என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்து அதிராசேந்திரனைத் துரிதப்படுத்தினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மேலாடையைச் சரி செய்து, அவனுடன் புறப்பட ஆயத்தமான சோழ இளவரசன், இளையராணியையும், இராஜசுந்தரியையும் பின்னால் வரும்படிக் கூறிவிட்டு, மன்னரின் அறை நோக்கி நடக்கலானான்.

அவ்விதம் நடக்கும் போது...

"சக்கரவர்த்தி!" என்று திரும்பவும் அழைத்தான் வீரசோழ வேளான்.

இன்னும் நான் இளவரசனாகத்தானே இருக்கின்றேன். சோழப்படையின் ஆயிரம் புரவி வீரர்களுக்குத் தலைவனாயிருக்கும் இவன், நம் நம்பிக்கைக்கு உரியவன்தானா? திடீர் என்று சக்கரவர்த்தி என்று என்னை ஏன் அழைக்கின்றான்? என்று அவனை ஏறிட்டுப் பார்க்க, "என்ன பார்க்கின்றீர்கள் சக்கரவர்த்தி! நான் உங்களின் நம்பிக்கைக்கு முற்றிலும் உகந்தவன். வேண்டுமானால் கொடும்பாளூராரிடம் என்னைப் பற்றி விசாரித்துப் பாருங்கள்; நீங்கள் இடும் ஒவ்வொரு கட்டளையையும் நிறைவேற்றக் காவல் நாயாகக் காத்திருக்கின்றேன்!" என்றான்.

மன்னர் அறை வந்துவிட்டது!

வேந்தரின் இருக்கையைச் சுற்றிப் பட்டத்தரசியும், முதன் மந்திரியும், அரச மருத்துவரும் இருந்தனர்.

சோழ இளவரசனைக் கண்டதும், "சக்கரவர்த்தி மோசம் செய்துவிட்டார் மகனே!" என்று கண் கலங்கி அழுத உலகமுழுதுடையாள், துயர மிகுதியால் அவனைக் கட்டிக் கொண்டாள்.

"தந்தையே!" என்று அவனும் கதற, அரசரின் மூடிக் கொண்டிருந்த வாயை, மருத்துவர் கடினப்பட்டுத் திறந்து தேனில் குழைத்த மருந்தை நாவில் தடவினார்.

"இப்போது!" என்று வருத்தம் மிகுந்த குரலில் பிரமாதிராசர் கேட்க, "நாடித் துடிப்பு நம்பிக்கையூட்டும்படி இல்லை!" என்றார் மருத்துவர்.

பட்டத்தரசியைச் சந்திக்க, கடார தேசத்திலிருந்து ஒரு பெண்ணும், ஆண்மகன் ஒருவனும் வந்திருப்பதாகத் தெரிவித்தான் காவல் வீரன்.

"இப்படிப்பட்ட நிலையில் நான் எப்படி அவர்களைச் சந்திப்பது? நீங்களே என்ன என்று கேட்டுவிடுங்கள்" என்று முதன்மந்திரியிடம் கூறினாள் பட்டத்தரசி.

'இப்போது ஏன் அவர்கள் இங்கே வர வேண்டும்? மாளிகைக் காவற்தலைவனுக்கு யாரையும் உள்ளேவிட வேண்டாமென ஏற்கனவே நான் உத்தரவு செய்துவிட்டேனே! எப்படி அவனை மீறி இவர்கள் உள்ளே வந்தார்கள்...' என்று சிந்தனையில் ஆழ்ந்த பிரமாதிசாசர், கடார இளவரசியை அழைத்து வரும்படி வீரனுக்குக் கட்டளையிட்டார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மயக்கும் யவ்வனங்களுடன் எதற்கும் அசையாத பிரமாதிராசர் மனதையே அசைக்கும் விதத்தில், வசீகரத் தோற்றத்துடனிருந்த இரத்தினாதேவி, முதன் மந்திரிக்கு வணக்கம் தெரிவித்தாள்.

ஏற்கனவே அவளைப் பற்றிய செய்தி அவருக்குத் தெரிந்திருந்ததால், எச்சரிக்கையுடனேயே “என்ன விஷயம்? நீங்கள் யார்?” என்று வினவினார்.

“நான் கடார நாட்டைச் சேர்ந்தவள். பெயர் இரத்தினாதேவி. எங்கள் அரசரின் நல்லெண்ணத் தூதுவராக சோழ மன்னரைச் சந்திக்க வந்திருக்கின்றேன். சக்கரவர்த்திக்கு ஆபத்து என்று கேள்விப்பட்டதும், விரைந்து வந்திருக்கின்றேன். எங்களிடம் அவர் உயிரைக் காப்பாற்றும் அதிசய குளிகை ஒன்று இருக்கிறது. அனுமதித்தால் சக்கரவர்த்தியின் உயிரை என்னால் காப்பாற்ற முடியும்” என்று உறுதியுடன் கூறினாள் அவள்.

முதன் மந்திரியின் உள் மனம் விழிப்புப் பெற்றது. ஏற்கனவே என் காதுகளுக்கு இவளைப் பற்றி அம்மாதிரி செய்தி ஒன்றும் எட்டவில்லையே? என ஏற இறங்க அவளைப் பார்க்கலானார்.

“நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு கணத்தையும் அரசர் உயிரைக் காப்பாற்றலாம் என்று எங்களுக்கு இருக்கும் நம்பிக்கையை அழிக்க வந்த யமனாகவே நான் கருதுகிறேன். அதனால், தாமதிக்காது அரசருக்குச் சிகிச்சை செய்ய எங்களை அனுமதிக்க வேண்டும்” என்றாள்.

முதலமைச்சர் சற்று நேரம் சிந்தித்துவிட்டு, “அம்மணி, உங்களை சிகிச்சைக்கு அனுமதிக்க முடியாத நிலையில் நான் இருக்கிறேன். ஏனென்றால் மன்னர் உயிருக்கு அரச மருத்துவர் ஒரு நாழிகை கெடு கொடுத்துள்ளார். அதற்குள் நீங்கள் ஏதாவது செய்து அதனால் ஏதாவது நடந்துவிட்டால், சோழ அரசகுடும்பத்தினருக்கும் மக்களுக்கும் என்னால் பதில் சொல்ல முடியாது!” என்றார்.

இரத்தினாதேவி இப்பதிலைக் கேட்டு பெரும் படபடப்புக்கு உள்ளானாள். நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளை வழித்துவிட்டு, “என்னிடம் இருக்கும் குளிகையின் மதிப்பை நீங்கள் உணராததாலே இப்படிக் கூறுகிறீர்கள். அது விலை மதிக்க முடியாத பொக்கிஷம். என்னை நீங்கள் அனுமதிக்காவிட்டால் மன்னர் உயிர் பிரிய நீங்கள்தான் காரணம் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாவீர்கள். அதனால் சற்றும் யோசிக்காது அனுமதியுங்கள்” என்றாள் பணிவுடனே.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

முதன் மந்திரி அவளை ஏறிட்டு நோக்கினார். இந்தச் சிறிய வயதில் இவ்வளவு துணிவாய்ப் பேசுகின்றாள். வரவேற்க வேண்டிய அம்சம்தான். சக்கரவர்த்தியின் உயிரை காப்பாற்றும் அபூர்வக் குளிகை இவளிடம் எப்படி வந்தது? என்ற சிந்தனையுடனே அவளைப் பார்க்க...

"நான் அரச குடும்பத்தைச் சேர்ந்தவள். சிறிய வயதிலிருந்து மருத்துவம் கற்க ஆசைப்பட்டு, எங்கள் அரச வைத்தியரிடம் பயின்றேன்! அவர் பல நாள் ஆராய்ச்சி செய்து, மிகவும் கஷ்டப்பட்டு இதைக் கண்டு பிடித்திருக்கின்றார். நான் அவரின் நம்பிக்கைக் குரியவளாயிருந்ததால் எனக்கு அந்தக் குளிகையில் ஒன்றைக் கொடுத்து மிக நெருக்கமானவர்களுக்கு இதைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சோழ அரசரைத் தவிர எனக்கு நெருக்கமானவர் யார்? என் அபூர்வக் குளிகையால் அவர் பிழைத்துக் கொண்டால், எங்கள் நாட்டிற்கும், சோழ நாட்டிற்கும் உறவு பலப்படாதா? அந்த நப்பாசையில்தான், நான் மன்னருக்கு மருத்துவம் செய்ய விரும்புகின்றேன்!" என்றாள் இரத்தினாதேவி.

முதன் மந்திரி இவளை அனுமதிக்கலாமா கூடாதா என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, இளவரசன் அதிராசேந்திரன் அங்கே வந்தான்.

அவனிடம் விஷயத்தைப் பிரமாதிராசர் சொல்ல, "எல்லாம் கடந்து போய்விட்டது. இனிமேல் நீங்கள் மருத்துவம் செய்வது வீண்" என்று கடார இளவரசியிடம் கூறினான் சோழ இளவரசன்.

"இல்லை. இன்னும் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால் அபூர்வக் குளிகையின் ஆற்றல் அளவிட முடியாதது! அதனால்தான் உங்களை நான் வற்புறுத்துகின்றேன்!" என்றாள்.

அதிராசேந்திரன் முதலமைச்சரைப் பார்க்க, அதற்குள் துணைத்தளபதி தன்மபாலர் வந்தார்.

அனைவரும் பட்டத்தரசியிடம் இது பற்றிக் கூற, "கடைசி நேரம்! அவர்கள்தான் முயற்சிக்கட்டுமே" என்று உலகமுழுதுடையாள் சிகிச்சைக்குச் சம்மதித்தாள்.

முதலமைச்சர் வேறு வழியின்றி அவளை மருத்துவம் செய்ய அனுமதித்தார்.

'ஒரு விஷயத்தை நாம் நடக்கவிடக் கூடாது என்று முடிவு கட்டினாலும், நம்மை மீறி அது நடக்கத்தான் செய்கிறது!' என மனதில் எண்ணிய பிரமாதிராசர், சிகிச்சை முடிந்ததுமே இவளைக் கடார நாட்டிற்கு உடனே அனுப்பி வைக்க வேண்டும். அதுதான் சோழ நாட்டிற்கு நல்லது என்று மனதிற்குள் கூறிக் கொண்டார்.


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மயங்கிய நிலையில் இருந்த அரசரின் நாடித் துடிப்பை ஆராய்ந்த இரத்தினாதேவி, சாமந்தனிடம் குளிகையைத் தேனில் குழைக்கும்படிக் கட்டளையிட்டாள்.

சந்தனக் கல்லில் சிறிய தந்தப் பேழைக்குள்ளிருந்த குளிகையை எடுத்து உரசினாள்.

பச்சையும், கறுப்பும், மஞ்சளும் கலந்த நிறத்தில் மருந்துக் கலவை ஒன்று குளிகையிலிருந்து வெளிப்பட்டது.

நாடியைப் பிடித்தபடி, கொப்புளில் கலவையைத் தடவிய கடார இளவரசி, உள்ளங்கை, உள்ளங்கால், நெற்றி இவற்றில் மருந்தைத் தடவி, உடம்பில் சூட்டை உண்டாக்கினாள். நூறு நொடிகளுக்கு ஒருமுறை, நாவில் இன்னொரு குளிகையைத் தேனில் குழைத்துத் தடவிக் கொண்டிருந்தாள்.

அரை நாழிகை கடந்தது.

நாடித் துடிப்பு இன்னும் பலவீனமாய்க் கீழே இறங்கிக் கொண்டிருந்தது.

மருந்தின் அளவை இரட்டிப்பாக்கினாள். அது தவிர கறுப்பு, பச்சை, மஞ்சள் நிறக் கலவையைக் கொப்புளில் தடவிக் கொண்டேயிருந்தாள்.

அரச மருத்துவர் சொன்ன கெடு நெருங்கிக் கொண்டிருந்தது.

'எனக்குத் தெரியாத மருத்துவத்தையா இவள் செய்துவிடப் போகின்றாள்; பார்த்துவிடலாம்' என்று கேலியுடன் இவளைப் பார்த்துக் கொண்டிருந்த மருத்துவரை அருகில் அழைத்து நாடியைப் பார்க்கும்படிச் சொன்னாள் கடார இளவரசி.

நாடியில் கை வைத்த வைத்தியர் அதிர்ந்து போனார். வாதம், பித்தம், சிலேத்துமம் மூன்றும் இறங்கு முகத்திலிருந்த நிலை மாறி, பலம் பெற்று, புதிய வலிவுடன் ஒரே சீராய் இயங்கும் நிலைமைக்கு வந்து கொண்டிருந்தது! திகைத்து நின்றுவிட்டார் மருத்துவர்.

அரசர் பிழைத்துவிட்டார் என்ற நற்செய்தி அரண்மனை முழுவதும் பரவியது.

## அத்தியாயம் - 15

முழு நிலவின் ஒளி அக்கங்காபுரியைப் பகலாக்க சோழ கேரளன் மாளிகை அந்தச் சந்திரனொளியில் வெண்ணிறமாய் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

இளவரசன் அதிராசேந்திரன் அறை முன்பு சரவிளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அவ்வொளியில் மங்கையர் இருவர் நின்ற வண்ணம் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அரண்மனையின் தெற்குப் பக்கமாய்த் திரைச்சீலை தொங்கவிடப் பட்டிருந்ததால், பௌர்ணமிச் சந்திரன் ஒளி தடுக்கப்பட்டு, அங்கே இருட்டாயிருந்தது.

ஆனால், அடிக்கடி வீசும் காற்றினால் திரைச்சீலை சற்றே விலக, அச்சமயம் மட்டும் சந்திரன் ஒளி, விலகிய இடத்தின் மூலம் உள்ளே ஊடுருவி, அங்கே வெளிச்சத்தைப் பரப்பியது.

அவ்விதம் வெளிச்சம்படும் போதெல்லாம், தெற்குப் பக்கத்தின் வலப்பக்கமாகத் தாழ்வாரம் ஒன்று வளைந்து செல்வது தென்பட்டது.

அதையே பார்த்துக் கொண்டிருந்தனர் அந்த இரு மங்கையர்களும். அவர்கள்...? வேறு யாருமல்ல. சோழ இளவரசனின் தேவியான இளையராணியும், அவன் தங்கையான இராஜசுந்தரியுமே!

தற்போது அவ்விடத்தில் இருவர் நடந்துவரும் சப்தம் கேட்கவே, இராஜசுந்தரியின் முகத்தில் சந்தோஷக்குறி நிலவியது.

"வந்துவிட்டார்!" என்றாள் இளையராணியின் பக்கம் திரும்பி. அவள் சொன்னது போல வயதாகிவிட்டிருந்தாலும் மிடுக்கான நடையோடு கொடும்பாளூர்க் குறுநில மன்னன் கம்பீரமாய் இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார். பக்கத்தில் வீரசோழ வேளானும் இருந்தான்.

"வாருங்கள் கொடும்பாளூர் மன்னரே! எங்கே வராதிருப்பீர்களோ என்று பார்த்தேன்" என்று புன்முறுவலோடு அவரை வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்றாள் இளையராணி.

வீரசோழ வேளானை, "நீங்கள் மட்டும் ஏன் வெளியே தங்கிவிட்டீர்கள்? உள்ளே வாருங்கள்" என்று இராஜசுந்தரி அவனையும் அழைத்துக் கொண்டதும் கதவு தாழிடப்பட்டது.

தற்போது சரவிளக்கின் ஒளி மட்டும் மங்கலாக அங்கே விழுந்து கொண்டிருந்தது.

அச்சமயம்...

வெள்ளை முக்காடு போட்ட ஓர் உருவம் வளைவிலிருந்து தோன்றி, சப்தமில்லாமல் நடந்து, அறை முன் நின்றது. எவ்வளவு நீண்ட விரல்கள் அந்த உருவத்திற்கு, வலக்கையில் ஒரு மோதிரம். ஆஹா... அதில் வைக்கப்பட்டிருந்த வைரக் கல்லில் இருக்கும் பிரகாசம்...!

"வர வர அரண்மனைக்குள் மர்ம உருவங்கள் நடமாட ஆரம்பித்துவிட்டன. அதனால், இரவில் கூட நான் அரண்மனையை வலம் வரும்படி ஆகிவிட்டது!" என்று ஒரு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

குரல் கணீரென்று ஒலிக்கவும், உருவம் சட்டென்று சாளரத்தை ஒட்டியிருந்த தூணிற்குப் பின்னால் போய் மறைந்து கொண்டது.

‘சரக், சரக்’ என்று காலணி சப்திக்க, குறுகலான திருப்பத்திலிருந்து வெளிப்பட்ட சோழ நாட்டுத் துணைத் தளபதியான சிறிய தன்மபாலன், தன் பின்னால் வாள் வீரன் ஒருவன் கையில் தீப்பந்தத்துடன் வர, நெஞ்சை நிமிர்த்தி நடந்து வந்து கொண்டிருந்தார். அவரின் கண்கள் சரவிளக்கை நோக்கின.

“என்ன இது! நடுச்சாமமாகியும் இன்னும் இளவரசர் அறைக்கு முன்னிருக்கும் சரவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது!” என்று அங்கே நின்றார் துணைத்தளபதி.

உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. ‘யார் பேசுகின்றார்கள்?’ என்று நெற்றி சுருங்க, வாள் வீரனைப் பார்த்தார்.

அச்சமயம்...

பலமாய் வீசிய காற்றினால் தூணின் பின் மறைந்திருந்த உருவத்தின் மேலிருந்த வெள்ளைத் துணி வெளியே பறக்க, அதை மறைப்பதற்காக உருவம் துணியைத் தன் கையினால் இழுத்து மறைத்துக் கொண்டது.

அப்பொழுது...

வாள் வீரனைப் பார்ப்பதற்காகத் திரும்பிய துணைத்தளபதியின் கண்களுக்கு இது பட்டுவிட்டது.

“யார் அங்கே தூணின் பின்?” என்றார் அதட்டலாக.

பதிலில்லை...

‘சரக்’ என்று இடையிலிருந்த வாளை உருவிக் கொண்டார்.

வாள் வீரன் தீப்பந்த ஒளியைத் தூணின் பக்கம் திருப்பி, வெளிச்சம் நன்கு தெரியும்படி உயர்த்திப் பிடித்துக் கொண்டான்.

அடிமேல் அடி வைத்துத் தூணை நோக்கி வாளுடன் வந்த துணைத்தளபதியை நோக்கி, கனமான வஸ்திரம் ஒன்று பறந்து வந்து, அவரின் முகத்தை மூடியது.

“அட சீ! என்ன இது?” என்று அதை விலக்குவதற்குள் தூணில் ஒளிந்து கொண்டிருந்த உருவம் சட்டென வெளிப்பட்டு, ‘தட்-தட்’ என்று அந்தப் பகுதியே அதிரும்படி ஓடத் தொடங்கியது.

“பிடி பிடி” என்று வாள் வீரனும், துணைத்தளபதியும் பின் தொடர்ந்து ஓட, குறுகிய திருப்பத்திற்குள் நுழைந்து உருவம் மாயமாய் மறைந்துவிட்டது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பின் தொடர்ந்த துணைத்தளபதியும், வாள் வீரனும், "அடடா! வியப்பாய் இருக்கிறதே!" என்று ஆச்சரியப்பட்டு நின்றனர்.

திடீரென நடந்த அமளியால் ஆலோசனையிலிருந்த சோழ இளவரசனும், கொடும்பாளூரானும் 'என்ன சப்தம் அது?' என்று வெளியே வந்தனர்.

"ஓடிய உருவம் எங்கும் போயிருக்க வழியில்லை. அரண்மனை முழுவதும் சோதனை போட வேண்டும்!" என்று தளபதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பத்துப் பதினைந்து வீரர்கள் அங்கே கூடிவிட்டனர். அவர்களை மூலைக்கு மூலை போய்ச் சோதனையிடும்படிக் கட்டளையிட்ட துணைத்தளபதியிடம் வந்த அதிராசேந்திரன், "என்ன நடந்தது?" என்று வினவினான்.

நடந்ததைச் சொன்னார் சிறிய தன்மபாலர். 'முக்காடிட்ட உருவம் யாராக இருக்கும்? எதற்காக நம் அறைமுன் வந்து நின்றது?' என்று குழம்பிய அதிராசேந்திரன், அவர்களுடன் உருவத்தைத் தேடும் பணியில் ஈடுபட்டான். பயனில்லாமற் போகவே இளவரசர் அதிராசேந்திரனிடம் "எச்சரிக்கையுடன் இருங்கள்!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் துணைத்தளபதி.

## அத்தியாயம் - 16

'படபட'வென்று சிறகடித்துப் பறந்த வெண்புறா வானில் வட்டமிட்டு, வீரராசேந்திரர் வசிக்கும் சோழ கேரள அரண்மனையின் எதிரேயுள்ள சாளர முகப்பில் உட்கார்ந்து 'கர்ர்... க்கர்ர்' என்று சப்தம் எழுப்பியது.

அதிகாலை நேரமாயிருந்ததால் இன்னும் இருட்டு மறையவில்லை.

திரும்பவும் அந்த வெண்புறா பலமாய்ச் சப்திக்க ஆரம்பித்தது.

புறாவின் நோக்கம் என்னவாய் இருக்கும்? ஒருவேளை தன் ஜோடியைத் தேடி அங்கு வந்திருக்குமோ?

இம்முறை அது சிறகால் கதவின் மீது மோதி, தட்டுவது போல் ஓசையெழுப்பித் திரும்பவும் சாளர முகப்பில் உட்கார்த்து பலமாய்க் கத்த ஆரம்பித்தது.

அதன் கத்தலுக்குச் செவி சாய்த்தாற் போல முகப்பின் கதவு திறக்கப்பட்டது.

அடுத்த வினாடியே வெண்புறா உள்ளே புகுந்து, அங்கே நின்று கொண்டிருந்த இராசேந்திரன் தோளின் மேல் உட்கார்ந்து கொண்டது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

திடீரென்று கதவு திறக்கப்பட்ட நிலையில், புறா ஒன்று தோளின் மீது அமரும் அனுபவத்தை ஏற்கனவே அவன் பெற்றவன் ஆனதால், அதைப் பற்றி எந்த வியப்பும் கொள்ளாது, தன் கைகளால் மெல்ல வருடினான். பிறகு அதன் காலில் கட்டியிருந்த ஓலை நறுக்கை அவிழ்த்துக் கொண்டான்.

அவ்விதம் அவன் எடுத்துக் கொண்டதும், புறா அவன் கையிலிருந்து விடுபட்டு, 'படபட' என சிறகை அடித்தபடி, சாளர முகப்பின் மீது போய் உட்கார்ந்து கொண்டது.

ஓலை நறுக்கைப் பிரித்துப் படித்த அவன் முகம் அன்றலர்ந்த தாமரை போல் மலர, எதிர்ப்புற மாளிகையை நோக்கினான்.

அங்கே-

புறாவை ஏவிவிட்ட மதுராந்தகி புன்னகையுடன் நின்று கொண்டிருந்தாள்.

"வருவதாகச் சொல்!" என்று உரக்கவே, மதுராந்தகியின் காதில்படும்படிப் புறாவிடம் கூறினான். அதைத் தெரிவிக்க வேண்டும் என்ற கருத்திலோ என்னவோ- புறா சாளர முகப்பிலிருந்து நீங்கி, அவள் தோளில் போய் உட்கார்ந்து கொண்டது. பூங்கரங்களில் அதைப் பற்றிய மதுராந்தகி மெல்ல வருடலானாள். ஏற்கனவே இராசேந்திரன் கைபட்ட இடமல்லவா அது? இப்போது இவளின் மென்விரல்கள் அதன் மீது ஸ்பரிசிக்க, அவள் உள்ளம் அளவில்லா ஆனந்தத்தில் மூழ்கியது. இதைக் கண்ணுற்ற இராசேந்திரன், தன் விரல்கள் மேல் அவள் மென் விரல்கள் படுவது போன்று உணர்வு பெற்றவனாகி, மகிழ்ச்சியால் கண்களை மெல்ல மூடினான்.

*****

எளிய மாலை நேரம்-

சோழகங்கம் ஏரியின் மாலைக் காற்று இதமாய் வீச, அதனால் எழுந்த சிறுசிறு அலைகள், ஆனந்தத்துடன் கரையைத் தாளமிட்டுக் கொண்டிருந்தன. ஓரத்திலிருந்து பலவகை மரங்களிலிருந்து பறவைகள் அத்தாளத்திற்கேற்ப 'கீச் கீச்' என்று இன்குரல்களால் இன்னிசை இசைக்கத் தொடங்கின. அதற்கு ஏற்றபடி கங்காபுரியின் கோட்டைக்குள்ளிருக்கும் நந்தவனத்திலிருந்து பலவித மலர்களின் நறுமணங்கள் ஒன்று சேர்ந்து, புதிய மணமாய்ப் பரிமளித்துக் கடலெனப் பரந்து நிற்கும் சோழகங்கத்தின் மேல் வீசிக் கொண்டிருந்தது.

அந்த வாசனைக்காகவே பலர் மாலை நேரத்தில் அங்கே வந்து பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தனர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அரசகுடும்பத்தினருக்கென்று தனியாய் மண்டபம் இருந்தது. மாலைநேரப் பொழுதைக் கழிக்க, மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அங்கே வருவது வழக்கம்.

அந்த முறையில்...

மண்டபத்தின் அருகே இரு இளம் மங்கையர் விரிந்து நிற்கும் அப்பெரும் நீர்ப்பரப்பைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

காற்றென்னும் ஓவியன், தென்றல் என்ற தூரிகையைக் கொண்டு, நீர்ப்பரப்பென்னும் அந்த இடத்தில் பெரும் வளைகோடுகளைத் தீட்ட, அவ்வாறு தீட்டிய கோடுகள் அவனுக்குப் பிடிக்காததாலோ என்னவோ, அதை அழித்துவிட்டுத் திரும்பவும் திருத்தமாய்க் கோடுகளை நீர்ப்பரப்பின் மீது புனைய, இவ்விதம் புனைவதும் அழிப்பதுமாய் இருக்கும் அந்த ஓவியனின் கிறுக்குத்தனத்தை வியந்தபடி இருந்த மங்கையரில் ஒருவரான மதுராந்தகி, “மலர்விழி, நேரம் கடக்கிறதே! இன்னும் அவர் வரவில்லையே?” என்றாள்.

“இன்னும்..?” என்று அந்த வார்த்தையை மட்டும் அழுத்திக் கேலியாய்த் திருப்பிச் சொன்ன மலர்விழியை, மதுராந்தகி தன் கையிலிருந்த தாமரை மலரினால் அடிக்க, “அம்மா, என்ன வலிவலிக்கிறது!” என்று பொய்யாய் நடித்து, “மலரை வீணாக்கிவிடாதீர்கள். அடி வாங்குவதற்கென்றே ஒருவர் வரப் போகின்றார்! அதற்கு மிச்சம் மீதி வைத்திருங்கள்!” என்றாள். உடனே அதைக் கேட்ட மதுராந்தகி, தாமரை மலரை அவள் மீது வீச மலர்விழி தப்பிக்க வேண்டி, அங்கிருந்து ஓடலானாள். அப்பொழுது எதிரே வந்து கொண்டிருந்த இராசேந்திரனைக் கண்ணுற்ற மலர்விழி, நாணத்துடன் அவனுக்கு வழிவிட்டு, அருகிலிருந்த மரத்தின் பின் ஒதுங்கிக் கொண்டாள். எப்படியும் மலரால் அடித்துவிட வேண்டும் என்ற நோக்கில், பின்னால் முழு வேகத்துடன் ஓடி வந்த மதுராந்தகி, அதே வேகத்தில் எதிரில் வந்த இராசேந்திரன் மீது மோதி, அப்படியே மார்பிலும் சாய்ந்து கொண்டாள்.

இந்தக் காட்சிக்காகவே இதுவரை எதிர்பார்த்தது போல...

சோழகங்கத்தின் ஏரிக்குள்ளிருந்த வாளைமீன்கள் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தன. தருக்களிலிருந்த பறவைகள் ஆனந்த மிகுதியால் ‘கீச் கீச்‘ என்று கீதம் இசைத்தன. பன்னீர் மரங்கள் அக்காதலர்கள் மீது பன்னீர்ப் புஷ்பங்களைச் சொரிந்தன.

இயற்கை அன்னை இவ்விதம் அவர்களின் காதலை ஆசீர்வதிக்க, இராசேந்திரன் மார்பில் துவண்ட மதுராந்தகி, அடுத்த நொடியே அதிலிருந்து மீள எண்ணி முயற்சிக்க, மனம் இடங்கொடாது போகவே, இன்னும் நெருங்கி நன்கு தழுவிக் கொண்டாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கடாரப் போரில் வாளின் கூர்மையை உணர்ந்து பழக்கப்பட்டிருந்த இராசேந்திரனுக்கு, மதுராந்தகியின் முன் அழகின் கூர்மையை அனுபவிப்பது புதியதாயிருந்ததால், அந்தப் புது சுகத்தை நன்றாய் அனுபவிக்க வேண்டுமென்ற வேகத்துடன் அவள் நழுவிவிடாதபடி நன்கு இறுக்கினான்.

இதற்கு மேல் உணர்ச்சி வசப்படக் கூடாது என்பது போல துள்ளிய வாளை மீன்கள் நீருக்குள் மறைந்துவிட்டன; இன்னிசை கீதம் பாடிய பறவைகள் தன் வாய்களை மூடிக் கொண்டன; நறுமணம் பரப்பிய தென்றலும் தற்சமயம் அங்கிருந்து மறைந்துவிட்டது. பூக்களைச் சொரிந்த பன்னீர் மரங்களும் மேலும் சொரிவதை நிறுத்திக் கொண்டன.

அதை உணர்ந்த வேங்கி நாட்டு இளவரசன் தன் பிடியைத் தளர்த்தினான். மதுராந்தகி நாணத்துடன் நின்றாள்.

முதலில் யார் பேசுவது என்ற பாவனையில் இருவரும் சிறிது நேரம் மௌன நிலைமையில், ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருந்தனர்.

'இதென்ன விபரீதம்? இப்படியே இவர்கள் நின்று கொண்டிருந்தால் மாலைப்பொழுது கடந்துவிடுமே' என்று மரத்திலிருந்து வெளிப்பட்ட மலர்விழி மெல்லக் கனைத்தாள்.

தங்களை மறந்து, ஒருவரையருவர் பார்த்தபடி நின்று கொண்டிருந்த இருவரும், சுயநினைவு பெற்று மலர்விழியின் பக்கம் திரும்பினர்.

"இங்கேயே நீங்கள் நின்று கொண்டிருந்தால், யார் கண்ணிலாவது படக்கூடும். அந்த மண்டபம் நம் போன்றவர்கள் தங்குவதற்காகவே கட்டப்பட்டது. அங்கே போய் பேசிக் கொண்டிருங்கள். நான் இங்கேயே நிற்கின்றேன்" என்றாள் மலர்விழி.

இருவரும் மண்டபத்தை நோக்கி நடந்தனர்.

'என்ன பேசுவது? எதைப் பற்றிப் பேசுவது?' என்று சிறிது தடுமாறிய இருவரின் மௌன விரதத்தை முதலில் கலைத்தது இராசேந்திரன்தான்.

"நீண்ட நாளாய் என் மனதில் அடக்கப்பட்ட கேள்வி இது! உனக்கு நிரம்பவும் திமிர் வந்துவிட்டதாக நான் கருதுகின்றேன்!" என்றான்.

"எப்படி நீங்கள் சொல்லலாம்?" என்று ஊடிய மதுராந்தகி, நெருக்கமாய் இருந்ததற்குப் பதில் சற்று இடைவெளி யிருக்கும்படித் தள்ளி அமர்ந்து கொண்டாள்.

அம்மாதிரி இடைவெளி ஏற்படுத்தி உட்காருவதைக் கவனித்த இராசேந்திரனுக்கு, அவ்விதம் தள்ளி உட்காருவதிலும் 'தனி சுகம்' இருக்கிறது என்பதை உணர்ந்து, அதை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வரவேற்பது போல், அவனும் தள்ளி அமர்ந்து, அதற்காக மனதிற்குள் சந்தோஷப்படவும் செய்தான்.

கோபத்தில் நான் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்தால், வேண்டுமென்று என்னைக் கேலி செய்யும் நோக்குடன், மேலும் தள்ளி உட்காருவதாயென்று மனதில் துளிர்த்த கோபத்தால் மதுராந்தகி இன்னும் கொஞ்சம் விலகி, அவனுக்கும் இவளுக்கும் இருக்கும் இடைவெளியை அதிகமாக்கினாள்.

'நல்ல வேடிக்கைதான்; அதில் தனி சுகம் இருக்கிறது என்று நான் இடைவெளியைப் பெரிதுபடுத்தினால் வேண்டுமென்றே அதிகமாக்குவதா?' என்று எண்ணிய வேங்கி இளவரசனும் அவள் பக்கமாக நகர்ந்து இடைவெளியைக் குறைத்தான்.

ஆனால் மதுராந்தகியா அதற்கு இசைவாள்! இடைவெளியைப் பெரிதாக்கியது முதலில் நீங்கள்தான்! அதனால் இதற்கு நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும் என்று சிறிது விலகிப்போனாள்.

என்ன இது? நான் அவளை நோக்கிப் போக அதற்கு எதிர்மாறாய் விலகிப் போகிறாளே? இதிலா விளையாட்டு? "மதுராந்தகி!" என்று கூப்பிட்டபடி அவளை நோக்கி நெருங்கினான்.

அவர் என்னை நோக்கி வருவதை நான் அநுமதிக்க முடியாது என்று அவள் மேலும் தள்ளி உட்கார முயலும் போது, மண்டபத்தின் கோடி வந்துவிட, இன்னும் தள்ளினால் சோழகங்கம் ஏரியில்தான் விழ வேண்டும் என்ற நிலையில் மண்டபத் தூணை ஒரு கையால் பிடித்துக் கொண்டாள்.

தூணிற்கு அப்பால் ஏரி என்ற நிலையில், அவளின் ஒரு கை தூணைப் பிடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த இராசேந்திரன். "அரசகுமாரி- பக்கத்தில் ஏரி..." என்று எச்சரித்தபடி அவளை இப்புறம் இழுத்து அமர்த்துவதற்காக அருகில் சென்றான்.

"என்னைத் தொட வேண்டாம்! நான் பாதுகாப்பாகத்தான் உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன்!" என்று கோபத்துடனே கூறிய மதுராந்தகி, தன்னை நோக்கி வரும் வேங்கி இளவரசன் கையில் படாதிருக்க வேண்டி, இன்னும் கொஞ்சம் நகர, "வேண்டாம் விபரீதம்!" என்று அதைத் தடுக்கும் எண்ணத்தில், அவளின் கைகளை இராசேந்திரன் பற்ற முயற்சித்தான். அதிலிருந்து அவள் திமிறிய போது, பிடிப்பு வழுக்கி நீரின் பக்கம் சாய்ந்துவிட்டாள். நீரில் அரசகுமாரி விழக் கூடாது என்பதற்காக, ஒரு கையால் தூணைப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் அவளைப் பிடிக்கும் சமயத்தில், இவனுக்கும் வழுக்கி, இருவரும் ஏரிக்குள் 'தொபீர்' என்று விழுந்தனர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நீச்சல் பயிற்சியில் நன்கு அனுபவம் பெற்ற இராசேந்திரன், சமாளித்து மேலுக்கு வந்து அரசகுமாரி எங்கிருக்கின்றாள் என்று தேடினான். அவள் நீந்தியபடி ஆள் நிற்கும் அளவிற்கு ஆழம் வந்ததும், தரையில் காலூன்றி நின்று ‘இராசேந்திரன் என்ன ஆனான்?’ என்று சுற்று முற்றும் கவனித்தாள்.

கழுத்தளவு ஆழத்தில் அவன் காலூன்றி நிற்பதைப் பார்த்து, “என்னை ஏன் நீருக்குள் தள்ளினீர்?” என்று முனிவுடனே வினவினாள்.

“நானா தள்ளினேன்! நல்ல வேடிக்கை! நீரில் விழப் போகின்றாய் என்றல்லவா உன்னைப் பிடிப்பதற்கு வந்தேன். அதற்குள் எனக்கும் வழுக்கிவிட்டது!” என்றான்.

“நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்! வரும் போதே எனக்குத் திமிர் என்றீர்கள். அதில் ஆரம்பித்ததுதான் நம் சண்டை.”

“அதுவா விஷயம்? முந்தின நாள் இரவு நான் சாளரத்தில் வந்து தோன்றியதும், நீ சரேலென்று உள்ளே திரும்பிவிட்டாயே. அதற்குக் காரணம்தான் என்னவோ?” என்றான்.

“கால்கடுக்க ஏறக்குறைய ஒன்றரை நாழிகை தங்களுக்காக நின்றிருக்கின்றேன்! ஆனால் தாங்கள் என்ன ஏது என்று பார்க்காமல், நிதானமாய் எல்லாக் காரியங்களையும் முடித்துவிட்டு வருகின்றீர்கள். அதுவரை அசையாமல் நிற்பதற்கு என் கால்கள் என்ன இரும்பினாலா செய்யப்பட்டிருக்கின்றது!” என்று கோபத்துடனே கேட்டாள்.

“அப்படிப் பார்த்தால் கடாரம் சென்று வெற்றியீட்டி வந்திருக்கும் என்னை வரவேற்க நீ வரவேயில்லை. அதற்காக உன்னை நான் ஏன் கோபித்துக் கொள்ளக் கூடாது?” என்று அதற்குப் பதில் கூறினான் இராசேந்திரன்.

“நாணம் காரணமாக நான் வரவில்லை. இதெல்லாம் பெரிய விஷயம் என்று என்னிடம் சண்டைபோட வந்துவிட்டீர்கள்!” என்று மதுராந்தகி சிணுங்கினாள்.

“சிணுங்கலைப் பார்... சிணுங்கலை. உன்னிடம் நான் பேசவே போவதில்லை” என்று முகத்தைத் திருப்பிக் கொண்டான் இராசேந்திரன்.

“இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை!” என்று கழுத்தளவு நீரிலிருந்த அரசகுமாரி, மார்பளவுக்கு வந்து நின்று, தன் மென்கரங்களால் நீரை அள்ளி அள்ளி வேங்கி அரசன் மீது வீசினாள்.

“அரசகுமாரி என்ன வேடிக்கை?” என்று நீர் முகத்தில் படா வண்ணம், கைகளில் தடுத்தபடி அவளை நோக்கி வந்தான்.

அப்படி வரும்போது-



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கழுத்துக்குக் கீழே, மதர்த்து நின்ற அவளின் பருவ அழகுகளை மறைத்து நின்ற மார்புக் கச்சை நனைந்துவிட்டிருந்ததால், விம்மிய அப்பகுதியின் பூரிப்பு வெளிப்பட்டு நிற்க, அத்துடன் நில்லாது கருமை நிறம் பெற்ற முன் பகுதி நன்றாகவே அவன் கண்களுக்குப் புலப்பட்டுவிட்டதால், அதனால் நிலை குலைந்து சிலையாக நின்றான்.

“இதென்ன ஜலவிளையாட்டு? இருள் வந்துவிட்டதே! எப்படி எல்லாவற்றையும் உலர வைத்துக் கொண்டு அரண்மனை போவீர்கள்?” என்று கரையில் நின்றபடி வினவிய மலர்விழியின் குரல், மதுராந்தகியின் செவிகளில் விழுந்ததும், நீரை அள்ளி வீசுவதை நிறுத்தி, அவனைப் பார்த்தாள்.

இதுவரை அவன் சிலையாய் நின்று கொண்டு, தன் அழகுகளையே பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதைக் கவனித்த மதுராந்தகி நாணத்துடன் சடக்கென்று நீருக்குள் அமிழ்ந்து கொண்டாள். விழிப்படைந்த இராசேந்திரன் அதே நினைவுடன் மயக்கம் கலந்த பார்வையில், மதுராந்தகியை உற்றுப் பார்க்கலானான்.

“அரசகுமாரி, இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறது! வாருங்கள் போய்விடலாம்” என்று மீண்டும் குரல்தாள் மலர்விழி.

‘புறா மூலம் ஓலை நறுக்கில் இங்கே தங்களைச் சந்திக்க விரும்பியதற்குச் செவிசாய்த்து மண்டபக் கரைக்கு வந்ததற்கு நன்றி!’ என்று விழிகளாலேயே கூறிய மதுராந்தகி, நீரிலிருந்து நடக்கலானாள்.

கரிகுழல்களில் முத்து முத்தாய் அரும்பிய நீர்த்துளிகள், மென்நடையின் அசைவினால் உதிர்ந்து நீருக்குள் விழ, அழகிய இளமுதுகும், அதற்கு கீழே குன்றென ஒளிர்ந்த அவள் பின்னழகும் கண்களைக் கூச வைக்க, அதனால் திகைப்பூண்டை மிதித்தவன் போல் திக்கு முக்காடி கொஞ்ச நேரம் இப்படியே அரசகுமாரியின் பின்னழகின் கோலத்தைக் காண முடியாதா என்ற ஏக்கத்துடன் தவித்துக் கொண்டிருக்கும் போதே, கரையேறிய மதுராந்தகி, ஆடையைப் பிழிவதற்காக மரத்தின் பின் மறைந்தாள்.

இதற்கு மேல் பார்வையைச் செலுத்துவது அவ்வளவு நாகரிகம் இல்லை என்று உணர்ந்த இராசேந்திரன், வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றான்.

ஆடைகள் அவிழ்க்கப்பட்டு அதிலிருந்த நீரைப் பிழியும் சப்தம் மட்டும் அவன் காதில் விழுந்தது. ‘நீரை வடிக்க துணியை முறுக்கும் மதுராந்தகி கூட என் மனத்தையும் சேர்த்தல்லவா பிழிந்து கொண்டிருக்கிறாள்’ என்று சலனப்பட்ட வேங்கி இளவரசன், “போய் வருவதாக” அவள் தோழி வார்த்தையைக் கேட்டுத் திரும்பினான்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மதுராந்தகி அங்கே நின்று கொண்டிருந்தாள். ஆஹா! அந்தக் கரிய குழலும், அதற்குக் கீழே பிறை வடிவத்தில் ஒளிர்ந்த நெற்றியும், கருப்பு நிற வானவில் போல் வளைந்த அவளின் புருவங்களும், அதற்கேற்றாற் போன்று நேர்த்தியாய் அமைந்த அவளின் நாசியும், செவ்வல்லி இதழ் போல சிவந்து ஜொலிக்கும் அந்த இதழ்களும்...

அந்த இதழுக்கேற்றாற் போல...

"வாருங்கள் இளவரசி! இருட்ட ஆரம்பித்துவிட்டது. இனிமேல் இங்கே நாம் நிற்பது அவ்வளவு உசிதமல்ல!" என்று மலர்விழி மதுராந்தகியைப் பற்றி இழுக்க, "போய் வருகிறேன் இளவரசே!" என் விடைபெற்று, அவன் பார்வையிலிருந்து விடுபட்டதும், மிகவும் சோர்வுடனே கரையேறினான் இராசேந்திரன்.

## அத்தியாயம் - 17

**மா**லை சென்று இருள் கவிந்த நேரம்! தென்னன் ஒவ்வொரு அறையிலும் சென்று அங்கிருந்த விளக்கினை ஏற்றிக் கொண்டு வந்தான்.

இருட்டிவிட்டதால், அரண்மனைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியாயிருக்கிறதா என்று அறிவதற்காக துணைத்தளபதி இரு வீரர்களுடன் ஒவ்வொரு இடமாய்ச் சுற்றி வர ஆரம்பித்தார்.

முந்தின நாள் அபாய நிலையிலிருந்த மன்னர் பட்டத்தரசியின் மாங்கல்ய பலத்தினாலும், கடார இளவரசியின் மருத்துவ சிகிச்சையாலும், இறைவன் அருளினாலும் பிழைத்துக் கொண்டார். ஆனால்,

அவர் உயிருக்கு இருக்கும் ஆபத்து இன்னும் நீங்கிவிட்டதாக இரத்தினாதேவி சொல்லவில்லை. பத்து நாள் பொறுத்துத்தான் எதையும் சொல்ல முடியும் என்று கூறிவிட்டாள்.

மன்னரின் அறையிலிருந்த பாவை விளக்கை ஏற்றி தென்னனிடம், முகத்துக்கு நேரே இருந்த சரவிளக்கை சிறிது நகர்த்தித் தொங்கவிடும்படி, சக்கரவர்த்தி வீரராசேந்திரர் சாடையினால் தெரிவிக்க, தென்னனும் அவ்விதமே தொங்கவிட்டான்.

அரசரின் முகம் வெளுத்துப் போய் தெளிவில்லாதிருந்தது. மெல்லத் திரும்பி சற்று ஒருக்களித்துப் படுப்பதற்கு முனைந்த சக்கரவர்த்தியின் அருகில் வீரன் ஒருவன் வந்து, இராஜசுந்தரி வந்திருப்பதாகத் தெரிவித்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

‘எதற்கு இப்போது என்னைப் பார்க்க வர வேண்டும்?’ என்று மனதில் எழுந்த வினாவுடன், “வரச்சொல்!” என்றார்.

சாளுக்கிய இளவரசி உள்ளே வந்து, “தங்கள் உடம்புக்கு ஒன்றும் இல்லையே அப்பா!” என்றாள்.

“தற்போதைக்கு நன்றாகத்தான் இருக்கின்றேன். பிறகு என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது” என்று பலவீனமாய் இருமினார்.

“நிரம்பவும் மெலிந்துவிட்டீர்கள்...” என்ற இராஜசுந்தரி, “ஏனப்பா வீணாய் நாட்டைப் பற்றிய எண்ணங்களை மனதில் போட்டுக் கொண்டு, கவலையில் உழல்கிறீர்கள்! பொறுப்பை உங்கள் மூத்த மகனிடம் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக இருக்க வேண்டியதுதானே?” என்றாள்.

“அப்படித்தான் நானும் நினைக்கிறேன்! ஆனால் முடியவில்லையே அம்மா! அம்மாதிரி பொறுப்பை ஒப்படைக்கத்தானே அதிராசேந்திரனை மதுரையிலிருந்து இங்கு வரவழைத்தேன். ஆனால்...” என்று நிறுத்திய அரசருக்குத் தொடர்ந்து பேச முடியாமல் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

“உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் தந்தையே. எப்படியிருந்தீர்கள்? எப்படி ஆகிவிட்டீர்கள். உங்களைப் பார்க்கும் போது எனக்கு வருத்தம்தான் ஏற்படுகிறது.”

சக்கரவர்த்தி பலவீனமான குரலில், “நேற்றே என் உயிர் போக வேண்டியது. சோழ மண்ணில் மேல் உள்ள பாசத்தினால் இன்னும் என் உயிர் இந்த உடலைவிட்டுப் பிரியாமல் இருக்கிறது. புதியதாக கடாரத்திலிருந்து வந்திருக்கும் பெண் மருந்தைக் குழைத்துக் குழைத்து எப்படியோ என் உயிரைக் காப்பாற்றிவிட்டாள். கண்ணை மூடுவதற்குள் நான் ஏதாவது இந்த நாட்டிற்குச் செய்துவிட வேண்டும்!” என்றார்.

“செய்வதற்கு எங்கேயம்மா எனக்குத் துணிவு வருகிறது? இருப்பது அதிராசேந்திரன் ஒருவனே! அவன் ஒருவனால் இந்தச் சோழ அரசை நிர்வகிக்க முடியும் என்பதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. என் பாட்டன் ராஜராஜன் காலத்திலிருந்தே பல சோழ இளவரசர்கள் அவருக்குத் உறுதுணையாக இருந்தார்கள். இப்போது அதை நினைக்கும் போது என் நெஞ்சம் வேதனையால் துடிக்கிறது அம்மா” என்றார்.

“நீங்கள் ஏன் இதுபற்றிக் கவலைப்பட வேண்டும். அண்ணனுக்குத் துணையாக என் தம்பி மதுராந்தகன் இல்லையா? அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிட்டால் எல்லாம் சரியாகிவிடுகிறது!” என்று அதற்கு மறுமொழி கூறினாள் இராஜசுந்தரி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"இதைக் கேட்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் மதுராந்தகனுக்கு அந்த அளவுக்குத் திறமையில்லையே! காஞ்சி நகரைவிட்டு இப்படியும் அப்படியும் கூட அவன் அசையமாட்டேன் என்கிறானே! அரசகுமாரன் என்றால் பல போர்களில் கலந்து அனுபவப்பட வேண்டுமே! நம் மதுராந்தகன் அப்படி அனுபவப்பட்டதாக எனக்குத் தெரியவில்லையே அம்மா!" என்றார் மாமன்னர்.

"இதற்கா நீங்கள் கவலைப்படுகிறீர்கள்? மனிதனுக்கு உள்ள திறமை அளவிட முடியாதது; ராஜ்ஜிய விவகாரங்களில் ஈடுபட ஈடுபட, மதுராந்தகனுக்கு அந்த அனுபவம் தானாக வந்துவிடுகிறது. அதனால் நாளைக்கே அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிடுங்கள்" என்றாள்.

சோழச் சக்கரவர்த்தி அதைக் கேட்டுப் புன்முறுவல் பூத்தார். அவர் மௌனமாய்ப் புன்னகையுடன் இருப்பதைக் கவனித்த இராஜசுந்தரி, "அப்படித்தான் ஏதாவது குழப்பம் வந்தாலும், சமாளிக்க குந்தள நாட்டுச் சக்கரவர்த்தியும் தங்களின் மருமகனுமான விக்கிரமாதித்தன் இருக்கின்றார். ஒரு குடும்பத்தில் தகுதியான ஆள் இல்லை என்ற நிலை வரும் போது, அக்குடும்பத்தைக் காக்க மருமகப்பிள்ளைதானே முன் வருவார்! அவ்விதம் பலம் பொருந்திய அரசராய் தங்கள் மருமகப்பிள்ளை இருக்கும் போது, இந்தச் சோழ நாட்டைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்றாள்.

சக்கரவர்த்தி வீரராசேந்திரருக்குத் தூக்கிவாரிப் போட்டது போல் ஆகிவிட்டது. 'முதலமைச்சர் என்னிடம் சொன்ன இந்த வார்த்தைகளைப் பக்கத்திலிருந்து கேட்டது போல் அல்லவா இவள் சொல்கிறாள்?' என்று அவளை ஒருதரம் ஏறிட்டு நோக்கிய மன்னர், "நீ சொல்வதிலும் இருக்கிறது..." என்று சிந்தனையில் ஆழ்ந்தார்.

அப்போது யாரோ நடந்து வரும் சப்தம் கேட்க, இராஜசுந்தரியும் அரசரும் திரும்பினர்.

பட்டத்தரசி உலகமுழுதுடையாள் வந்து கொண்டிருந்தாள்.

"எப்போது வந்தாய் இராஜசுந்தரி?" என்று வினவியபடி, வேந்தரின் அருகில் வந்து, "இப்போது தங்களுக்கு எப்படியிருக்கிறது?" என்றாள்.

"பயப்படும்படி ஒன்றும் இல்லை!" என்ற அரசர், மருத்துவரின் இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு எனக்குப் பழக்கமாகிவிட்டது" என்று உற்சாக மிகுதியால் மெல்ல சிரித்தார். அதைத் தாங்காமல் இருமல் வெளிப்பட, "உங்களைத்தான் அதிகம் பேச வேண்டாம் என்று அந்தப் பெண் சொல்லியிருக்கிறதே!" என்று நெஞ்சைத் தடவித் தடவிவிட்டாள் பட்டத்தரசி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சில நொடிகளில் இருமல் நின்றது. அரசர் ஒருக்களித்துப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டார். இருக்கையில் உட்கார்ந்த பட்டத்தரசி இராஜசுந்தரியிடம் "சாப்பாடு ஆயிற்றா மகளே?" என்று வினவினாள்.

"இல்லை! இனிமேல்தான் சாப்பிட வேண்டும்!" என்று கூறிய அவளை, "நேரமாகிவிட்டதே! நீ போய்ச் சாப்பிடம்மா! மன்னரை நான் பார்த்துக் கொள்கின்றேன்!" என்று அனுப்பி வைத்தாள். 'நல்ல நேரத்தில் வந்து என் அன்னை கெடுத்துவிட்டாள். இல்லையென்றால் இந்நேரம் அரசரை என் வழிக்குக் கொண்டு வந்திருப்பேன்' என்று மனக்குறையுடனே அங்கிருந்து இராஜசுந்தரி வெளியேறினாள். சரவிளக்கின் ஒளியைச் சற்றுக் குறைத்து, அரசர் மேல் குளிர்காற்று படாமல் இருக்க, பெரிய போர்வையை எடுத்துப் போர்த்தி, அவரின் காலடியில் உட்கார்ந்து கொண்டு, அவர் நலத்திற்காக இறைவனை வேண்டத் துவங்கினாள் பட்டத்தரசி.

## அத்தியாயம் - 18

இரவு நேரம்-

கங்கைகொண்ட சோழபுரத்தின் கிழக்கே, மதுராந்தக வடவாறு என்ற நதி ஓடிக் கொண்டிருந்தது. அது ஏறக்குறைய கங்காபுரிக் கோட்டையை ஒட்டிக் கிழக்குப்புறமாய் இருந்தது. அதன் கரையில் பெரிய அரசமரமும் அதற்குக் கீழே கருங்கல் மண்டபம் ஒன்றும் தென்பட்டது.

அரசகுடும்பத்தினரும், பெரும் செல்வந்தர்களும் அங்கே வந்து தங்கி, கரைபுரண்டு ஓடும் வடவாற்றை அடிக்கடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள். சில சமயம் பெரு மரங்களும் நானாவித புஷ்பங்களும் ஆற்றை மூடியபடி வரும் காட்சி, அவர்களின் கண்களுக்குப் பெருவிருந்தாய் அமையும். இந்த வேடிக்கையைப் பார்ப்பதற்கு வரும் கூட்டம் தங்கவே அந்த மண்டபம் அங்கே அமைக்கப்பட்டிருந்தது.

தற்போது அதை நோக்கி மூன்று குதிரைகள் சென்று கொண்டிருந்தன. முதல் புரவியில் சோழ நாட்டு இளவரசர் அதிராசேந்திரனும், அடுத்து கொடும்பாளூர் நாட்டை ஆளும் குறுநில மன்னரான சயங்கொண்ட சோழ இருக்குவேளும், அவருக்குப் பக்கத்தில் வீரசோழ இளங்கோ வேளானும் இருந்தனர்.

மூன்று குதிரைகளும் மண்டபத்தை அடைந்ததும் நிறுத்தப்பட்டன. முதலில் குதித்த வீரசோழ இளங்கோ வேளான் வயதில் மிகுந்த சயங்கொண்ட சோழ இருக்குவேள்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

குதிரையிலிருந்து இறங்குவதற்கு உதவி புரிந்தான். இளவரசன் அதிராசேந்திரன் புரவியிலிருந்து குதித்து மண்டபத்தை ஒருமுறை நோட்டம்விட்டான். மூன்று புரவிகளையும் அரசமரத்தில் பிணைத்துவிட்ட சேனாதிபதி வீரசோழன், மண்டபத்தை ஒருமுறை சுற்றி வந்து யாரும் இல்லையென்று முடிவு செய்து கொண்டான்.

"நமக்கு முன்பே புறப்பட்டுவிட்டார்களே! இன்னும் வரவில்லையே?" என்று தூரத்தில் தெரிந்த கோட்டையைப் பார்த்தபடி கூறிய அதிராசேந்திரன் 'நேரம் கடக்கிறதே!' என்று நிலை கொள்ளாமல் தவித்தபடி அங்குமிங்கும் நடந்தான்.

"கங்கைகொண்ட சோழேச்சுரம் போய்விட்டு வருவதாக என்னிடம் சொன்னார்கள். தலைமைப் பட்டர் அரசமகளிர் ஆயிற்றே என்று தடபுடலாய் வரவேற்பு கொடுத்திருப்பார்! அதில் மயங்கி இவர்களும் அங்கேயே..." என்று கொடும்பாளூர்க் குறுநில மன்னன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இவர்களை நோக்கிப் பல்லக்கு ஒன்று வந்து கொண்டிருந்தது.

"வந்துவிட்டார்கள்!" என்றான் வீரசோழன், அதிராசேந்திரன் பத்து முழ தூரம் வரை முன்னால் நடந்து, பல்லக்கிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த இராஜசுந்தரியையும், இளையராணியையும் பார்த்துச் சிறிது கோபமாகவே "என்ன இவ்வளவு நேரம்?" என்றான்.

"கோயிலில் நேரமாகிவிட்டது" என்றாள் இளையராணி புன்னகையுடன்.

"இளவரசே, நான் சொன்னது சரியாகிவிட்டதல்லவா?" என்ற கொடும்பாளூரார், தன் அருகில் வந்த இரு மங்கையர்களையும் பார்த்து, "சீக்கிரம் நாம் கோட்டைக்குத் திரும்பிவிட வேண்டும்! இல்லையென்றால் உள்ளே இருப்பவர்கள் நாம் ஏதோ பெரிய கோட்டையைப் பிடிப்பதற்காக இங்கே சதி செய்வதாக நினைத்துக் கொள்வார்கள்!" என்றார்.

"நீங்கள் சொல்வதும் சரிதான்!" என்று ஆமோதித்த இராஜசுந்தரி, அவர் அருகில் அமர்ந்தாள். பல்லக்குத் தூக்கி வந்தவர்கள் கொஞ்சம் தள்ளி நின்று, யாராவது வருகிறார்களா என்று கண்காணிக்கத் தொடங்கினர்.

இளையராணி அதிராசேந்திரன் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ள, சேனாதிபதி வீரசோழன் மீண்டும் ஒருமுறை மண்டபத்தின் உள்ளே சென்று வெளியே வந்து பிறகு சுற்றுப்புறமெங்கும் நடந்து யாரும் இல்லையென உறுதிப்பட்டதும், அவர்களுக்கு எதிரே வந்து நின்று கொண்டான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“முந்தின இரவு நாம் சோழ நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிப் பேச, இளவரசரின் அறையில் கூடினோம். துரதிர்ஷ்டமாக துணைத்தளபதி ஏதோ மர்ம உருவத்தைப் பார்த்துவிட்டதாக அமர்களம் பண்ணிவிட்டார். அதனால் அரண்மனைக்குள் எந்தச் சுவரில் எந்தக் காது இருக்குமோ என்ற பயத்தில் இங்கே நாம் கூடியிருக்கின்றோம்! இப்போது நாம் எடுக்கப் போகும் முடிவு மிக முக்கியமானது. அதனால் எந்தவித விருப்புவெறுப்பின்றி நன்கு யோசித்து நாம் முடிவு எடுக்க வேண்டும்!” என்ற சயங்கொண்ட சோழ இருக்குவேள் தன் நரைத்த மீசையைத் தடவியபடி அனைவரையும் கவனிக்கலானார்.

அப்பொழுது காற்று பலமாக வீசியதால் அரசமரத்திலிருந்து காய்ந்த இலைகள் இவர்கள் மேல் உதிர்ந்தன.

“எந்தக் கிளை?” என்று அனைவரும் பதட்டத்துடன் பார்க்க, இராஜசுந்தரி சுட்டிய கிளை காற்றினால் அசைந்து சிறிது விலகி, மறைந்து திரும்பவும் பழைய நிலைக்கு வந்தது.

“வெறும் வெற்றுக் கிளையாய் அல்லவா இருக்கிறது” என்ற அதிராசேந்திரன், “முந்தின இரவு அரண்மனையில் நடந்த நிகழ்ச்சியால் இராஜசுந்தரி மிகவும் பாதித்துப் போயிருக்கிறாள்” என்றான்.

“இல்லை அண்ணா! நான் கிளையில் நிச்சயம் ஓர் உருவத்தைப் பார்த்தேன்” என்றாள் அழுத்தத்துடன்.

சயக்கொண்ட சோழ இருக்குவேள் அதைக் கேட்டுப் பெருங் குரலில் சிரிக்கலானார். “நல்ல வேடிக்கைதான் இது. நேரம் கடந்து கொண்டிருக்கிறது” என்றார்.

“எதற்கும் பார்த்துவிட்டு வருகின்றேன்” என்று வீரசோழன் மரத்தில் ஏற முயன்றான். முடியவில்லை. ஏணி போன்ற அமைப்பில்லாமல் அம்மரத்தில் ஏற முடியாது என்பதை உணர்ந்து மரத்தின் மேல் பகுதியை நன்கு உற்றுப் பார்த்துவிட்டு, “அப்படி ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை!” என்றான்.

“இல்லை, நான்…” என்று கூற வந்த இராஜசுந்தரியை, கொடும்பாளூரார் இடைமறித்து, “ஏதாவது காற்றுக்கறுப்பாய் இருக்கலாம். நம் ஆலோசனையைத் தொடங்கலாமே!” என்றார்.

இராஜசுந்தரியின் முகத்திலிருந்த பதட்டம் இன்னும் மறையவில்லை. அரை மனதுடனே இவர்களைப் பார்ப்பதும், பிறகு மரத்தின் உச்சியை நோக்குவதுமாய் இருந்தாள். இதைக் கவனித்த இருக்குவேள்,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“அந்தக் காற்றுக் கறுப்பெல்லாம் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. அதற்காக நீ கவலைப்பட வேண்டாம்! நான் இருக்கின்றேன்!” என்று தொண்டையைக் கனைத்துவிட்டுப் பேசலானார்.

“நாட்டின் எதிர் காலம் நமக்கு முக்கியம். பெரிய வெற்றி ஈட்டிவிட்டதாக அலட்டிக் கொள்ளும் இராசேந்திரனை அரசு கட்டிலில் அமர்த்த சக்கரவர்த்தி அளவில் சதி நடக்கிறது! இந்த நேரத்தில் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இல்லை என்றால் நமக்கு எதிராய்ச் செயல்படும் எதிராளியின் கை ஓங்கிவிடும். அரசர் இப்போது குழந்தை நிலையில் இருக்கின்றார். அவரை நம் பக்கம் கொண்டு வருவது நம்மிடம்தான் இருக்கிறது. அதை விடுத்து, அவர் பேரில் நாம் குறை சொல்வது அவ்வளவு நல்லதல்ல” என்றார்.

“கொடும்பாளூர் மன்னர் சொல்வதை நான் ஆதரிக்கின்றேன்!” என்றான் இளவரசன்.

‘இந்தத் தந்தைப் பாசத்தில் ஒன்றும் குறைவில்லை. இதற்கு மேல் அரசர் இவருக்குப் பெரிய பொறுப்புக் கொடுத்தாலும், கையில் பிடிக்க ஆயிரம் ஆட்கள்தான் வேண்டும்’ என்று சோழ இளவரசன் அதிராசேந்திரனை எரித்துவிடுவது போலப் பார்த்தாள் அவரின் மனைவி இளையராணி.

“ஆதரிப்பது இருக்கட்டும், முதலில் இவரின் தம்பிக்கு இளவரசுப் பட்டம் கட்டும் விஷயத்தில் மன்னரைச் சம்மதிக்க வைக்கட்டும்!” என்றாள் இராஜசுந்தரி சிறிது காட்டமாக.

“நல்ல யோசனை. இராஜசுந்தரி சிறு பெண்ணாயிருந்தாலும் புத்திசாலித்தனமாகவே பேசுகிறாள்” என்று சாளுக்கிய அரசியைப் புகழ்ந்தார் சயங்கொண்ட சோழ இருக்குவேள்.

அதைக் கேட்ட அதிராசேந்திரன் முகத்தில் மௌனம் நிலவியது. அதைக் கலைக்கும் முறையில் இராஜசுந்தரிதான் பேசினாள்.

“காஞ்சியில் அரசப்பிரதிநிதியாகயிருக்கும் தம்பி மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டுவதே நமது முதல் முயற்சி. சக்கரவர்த்தியை இதுபற்றி இளவரசர் கேட்காவிட்டாலும், நானே நேரில் போய்க் கேட்டேன். ஆனால் கிழ...” என்று தவறி அவள் வாயிலிருந்து வந்த அந்தத் தகாத வார்த்தையைக் கேட்ட கொடும்பாளூர்க் குறுநில மன்னரும், அதிராசேந்திரனும் சிறிது கோபமாகவே அவளை முறைக்க, அப்படியே அவ்வார்த்தையை அடக்கிக் கொண்டு, “அரசர் இசையவில்லை!” என்றாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"அதற்கு என்ன காரணம் சொன்னார் மாமன்னர்?" - சயங்கொண்ட சோழ இருக்குவேளின் கேள்வி.

"என்ன காரணம் சொன்னார்... மதுராந்தகனுக்குப் போர் அனுபவம் இல்லையாம். திறமை கிடையாதாம்!" என்றாள் முனிவுடனே.

"அப்படியா செய்தி!" என்று முகத்தைத் தடவிக் கொண்ட குறுநில மன்னர், "சக்கரவர்த்தியின் மனதை அந்த அளவிற்கு மாற்றிவிட்டார்கள்! அவ்விதம் மாற்றுவதற்கு யார் காரணமாக இருப்பார்கள்?" என்றார் இராஜசுந்தரியிடம்.

"எல்லாம் அந்தப் பிரமாதிராசரும், பட்டத்தரசி உலகமுழுதுடையாளுந்தான். பெற்ற மகனுக்கு எதிராய் அன்னையே செயல்படுவது, சோழ அரசில் தவிர வேறு எங்கும் இருக்க முடியாது!" என்றாள் அழுத்தமாக.

சிந்தனையில் ஆழ்ந்த கொடும்பாளூரார், "இதற்கு நாம் முடிவுகட்டியே ஆக வேண்டும். அரசர் உயிர் வாழப் போவது நாள் கணக்கில்தான்! இப்படிச் சொல்வதற்கு சோழ இளவரசர் என்னை மன்னிக்க வேண்டும்" என்று அதிராசேந்திரன் பக்கம் திரும்பியபடி, "அதற்குள்ளே நாம் மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிட வேண்டும். இல்லையென்றால் அந்த இடத்தைக் கீழைச்சாளுக்கிய இளவரசன் பிடித்துக் கொள்வான்" என்றார்.

"நீங்கள் சொல்வதை நான் முழு மனதுடன் ஆதரிக்கின்றேன்" என்றாள் இராஜசுந்தரி சிறிது உரக்கவே.

"இதற்கெல்லாம் ஏற்பாடாக சோழநாட்டுக் குறுநில மன்னர்களின் ஆதரவைத் திரட்ட வேண்டும். நம்பிக்கையான ஆட்களை அவர்களிடம் தூதாக அனுப்ப வேண்டும்" என்று ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினர்.

"வீரசோழன் இருக்கின்றான். நம்பிக்கையில் அவனுக்கு ஈடு இணை கிடையாது" என்றான் அதிராசேந்திரன்.

"ஒருவன் போதாதே! பலர் வேண்டுமே?"

"இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் என் கணவர் குந்தள நாட்டுச் சக்கரவர்த்தி இங்கிருந்தால் நன்றாக இருக்கும்!" என்று குறுக்கிட்டுச் சொன்னாள் இராஜசுந்தரி.

"இதுவும் எனக்கு நல்லதாகப்படுகிறது" என்று இளையராணி ஆமோதித்தாள்.

"குந்தள நாட்டிற்கு ஆளை அனுப்பி, அவர் வருவதற்குள் இங்கே மாமன்னர் உயிர் இருக்குமோ?" என்ற சயங்கொண்ட சோழ இருக்குவேள், "துரிதமாகச் செய்தியை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

எல்லோருக்கும் அனுப்பக் கொடும்பாளூரிலிருந்து ஆட்களை வரவழைத்தால் என்ன?" என்றார்.

அதை இராஜசுந்தரி விரும்பவில்லை என்பதை, வாட்ட முற்ற அவள் முகம் தெளிவாய்க் காட்டியது.

இதைக் கவனித்த இளையராணி, அதிராசேந்திரனைக் குறிப்பினால் இதுபற்றி உணர்த்தி, "குந்தள நாட்டுச் சக்கரவர்த்தி வருவதுதான் நல்லது. ஏனென்றால் அரசரும் இன்றோ நாளையோ என்றிருக்கின்றார். அந்தச் சமயத்தில் பக்கத்தில் அவரின் மருமகப்பிள்ளை இருப்பது தேவையான ஒன்று" என்றாள்.

இளவரசன் அதை ஆமோதித்து, அதற்கு வீரசோழனை அனுப்புவதாக ஒப்புக் கொண்டான்.

இந்நேரத்தில் கொடும்பாளூர்ப் படைகள் கோட்டையில் இருந்தால், நம் சொற்படி அதிராசேந்திரனை ஆட்டுவிக்கலாம் என்று கனவு கண்டிருந்த கொடும்பாளூராரின் எண்ணம் அப்பொழுது எடுபடாமல் போய்விடவே, மனம் சலன முற்று மௌனமானார்.

அதைக் கவனித்த சோழ இளவரசன், "குறுநில மன்னர்களுக்கெல்லாம் ஆட்களை அனுப்ப, கொடும்பாளூர் ஒற்றர்களைப் பயன்படுத்துவோம்!" என்றான்.

இளையராணியும் அதற்குச் சம்மதப்பட, இராஜசுந்தரியும் வேறு வழியின்றி "சரி" என்று ஒப்புக் கொண்டாள்.

இன்றைய இரவே குந்தள நாட்டிற்கு வீரசோழனை அனுப்புவதென்றும், இன்னும் இரு தினங்களில், கொடும்பாளூரிலிருந்து ஒற்றர்களை வரவழைத்து அவர்கள் மூலம் குறுநில மன்னர்களின் ஆதரவைப் பெற முயற்சிப்பதென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

காஞ்சியில் அரசப்பிரதிநிதியாயுள்ள மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட எந்த வழியில் அரசரை நிர்ப்பந்தப்படுத்துவது என்பதில் பலவித கருத்துக்கள் தோன்றினாலும், கடைசியில் அதிராசேந்திரனை அதற்காக மாமன்னரிடம் அனுப்பி ஒப்புதல் பெற முயற்சிப்பது என்று முடிவு எடுத்து, நேரம் ஆகிவிட்டதால் கோட்டைக்குத் திரும்ப அனைவரும் எழுந்து கொண்டனர்.

அந்த இடத்திலேயே அதிராசேந்திரனின் முத்திரை மோதிரமும் பொன் முடிப்பும் பெற்றுக் கொண்டு ஆறாம் விக்கிரமாதித்தனை அழைத்து வர வீரசோழன் குந்தள நாட்டை நோக்கிப் புரவியில் பயணம் தொடங்க ஆயத்தமானான்.

கங்காபுரியின் கோட்டை நோக்கி, அனைவரும் புறப்பட்டுப் போனதும், பெருங்காற்றால் அரசமரத்தின் கிளைகள் அசைந்து ஓய, ஒரு கிளையிலிருந்து கயிறு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஒன்று ‘தடக்’ என்று தரையில் வந்து விழுந்தது. அடுத்த நொடியே கயிற்றின் மூலம் ஓர் உருவம் ‘மடமட’வென்று தரையில் இறங்கியது.

அது இறங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம், “ஐயனாரே! கீழே இறங்கி வா” என்று குரல் கொடுக்க, உடும்பு என்ற சிறு விலங்கு மெல்ல கிளையிலிருந்து இறங்கி அடி மரத்தை அடைந்து, உருவத்தைப் பார்த்து, தன் இரட்டை நாக்கை நீட்டி நீட்டி, மறுபடியும் வாய்க்குள் இழுத்துக் கொண்டது.

உடும்பின் கழுத்துக்குச் சற்றுத் தள்ளி கயிற்றின் முடிச்சை அவிழ்த்துச் சுருட்டித் தோளில் மாட்டிக்கொண்டு உடும்பையும் இன்னொரு தோளில் வைத்தபடி, “கோட்டையிலே குத்து வெட்டு” என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டு அங்கிருந்து நடக்க ஆரம்பித்தது உருவம்.

அந்த உருவம்…? நமக்கு ஏற்கனவே பழக்கமான தென்னன்தான்.

மதுராந்தக வடவாற்றை ஒட்டி அவன் நடந்தவாறு, “கோட்டையிலே குத்து வெட்டு” என்று மீண்டும் சொல்லி வாய் மூடுவதற்குள், தென்னன் முதுகில் கூரிய கத்தி அழுந்தியது. “அசையாதே நில்” என்ற வார்த்தையினைக் கேட்டுச் சிலையாய் நின்றான் பதறியபடி.

அடுத்த சில நொடிகளில், அவன் மூக்கின் பக்கம் வந்த மருந்தின் இலையை நுகர்ந்ததால் மயக்கமடைந்து கீழே விழ, அப்படியே அவனைத் தாங்கி தரையில் ஒருக்களித்துப் படுக்க வைத்தது, வெள்ளை முக்காடு போட்ட உருவம். இந்தக் குழப்பத்தில் தோளில் ஒட்டிக் கொண்டிருந்த உடும்பு தரையிறங்கி புதருக்குள் ஓடி மறைந்து கொண்டது.

## அத்தியாயம் - 19

இருள் சூழ்ந்த அந்தப் பெரிய அறையின் ஒரு மூலையில் கைகள் கட்டுப்பட்டுக் கிடந்த தென்னன், மெல்ல கண் விழித்தான். அந்தமில்லா இருள் போல முதலில் அவனுக்குத் தோன்றினாலும், மெல்ல மெல்ல அறையின் சுவர்களும், மற்றவைகளும் அவனுக்குத் தெரிந்தன. சுவர் ஓரமாய் வேல்களும், வாள்களும் வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

நான் எங்கிருக்கின்றேன்? இது எந்த இடம்? கங்கைகொண்ட சோழபுரத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கும் இவனுக்கு நன்கு பழக்கமானதால், இது கோட்டையில் எந்தப்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பகுதியைச் சேர்ந்தது? என்பதை அறிவதற்காக அந்த அறையின் ஒவ்வொரு பகுதியையும் நோட்டம்விட்டான்.

கடைசியில்...

குழப்பம் வந்ததே தவிர, அந்த அறையைப் பற்றி ஒன்றும் புலப்படவில்லை. கைகள் இரண்டும் கட்டப்பட்டுவிட்டதால், மெல்ல எழுந்து உட்கார முயன்று, முடியாமல் திரும்பவும் சமாளித்து ஒருவாறு உட்கார்ந்தான்.

விண் விண் என்று தலை பலமாய் வலிக்க, அடிபட்டிருக்குமோ? அல்லது மண்டையில் அடித்து மயக்கமுறச் செய்து என்னை இங்கு கொண்டு வந்தார்களோ? என்று குழம்பியபடி தலையை ஆட்டிப் பார்த்தான் தென்னன். அடிபட்டதற்கான அடையாளம் எதுவுமில்லை.

எப்படி இங்கு கொண்டு வரப்பட்டேன்? எப்படி... எப்படி...? என்று ஆற்றங்கரையில் நடந்தவைகளை மனதில் நினைவு கூர்ந்தான்.

உடும்பைத் தோளில் வைத்தபடி, நான் கோட்டையிலே குத்துவெட்டு என்று சொல்லியபடி ஆற்றின் கரையோரமாய் நடந்து கொண்டிருந்த போது... முதுகின் பின்னால் கூரிய கத்தி பதிந்து அசையாதே... நில்... என்று கரகரத்த குரல் ஒன்று ஒலிக்க, நானும் அதற்குக் கட்டுப்பட்டு நடப்பதை நிறுத்தி, அசையாதிருக்கும் போது... ஒரு கை என் மூக்கின் அருகில் வர... ஆ! அந்த வாசனை... அந்த வாசனை... என்னவென்று புரியாத வாசனை... அவ்வளவுதான் எனக்குத் தெரிகிறது. பிறகு என்ன நடந்தது? இங்கு எப்படி வந்தேன்? ஒன்றும் தெரியவில்லையே. கடைசியில் இந்த இருட்டறையில் கைகள் கட்டுப்பட்டுக் கிடக்கின்றேன். இது என்ன மந்திரமா? மாயமா? ஒன்றும் புரியவில்லையே. கரகரப்பான அந்தக் குரலும்... அந்தக் கைகளும்... எவ்வளவு நீளமான விரல்கள்! ஒரு விரலில் மோதிரம். அது... அது... எங்கோ... எப்போதோ யாரிடமோ? பார்த்த மாதிரி இருக்கிறதே. ஆ! நினைவுக்கு வரவில்லையே. இதைக் கண்டுபிடித்துவிட்டால் கைக்குரிய நபர் யாரென்று தெரிந்துவிடும். என்று தென்னன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே... இருட்டான அந்த அறையில் வெளிச்சம் பரவத் தொடங்கியது. அவன் புருவங்கள் நெரிய வெளிச்சம் வந்த பக்கம் பார்க்க... தீப்பந்தம் ஒன்று இவனை நோக்கி வர, கண்களைக் கசக்கிவிட்டுப் பார்க்கும் போது, வீரன் ஒருவன் அதைப் பிடித்தபடி வர... பின்னால்... அட! இவரா?

திகைப்புடன் வைத்த விழி வாங்காது, தென்னன் அவரைப் பார்க்க...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சோழ நாட்டின் முதலமைச்சரும், சக்கரவர்த்தியின் நம்பிக்கைக்குரியவருமான, பிரமாதிராசர்தான் மிடுக்குடன் வந்து கொண்டிருந்தார்.

அருகில் வந்த முதலமைச்சர், "என்ன தென்னா? ஏன் அப்படிப் பார்க்கின்றாய்? இங்கே எப்படி வந்துவிட்டாய் என்றா திகைக்கின்றாய்?" என்றார்.

பதிலுக்குத் தலையை மட்டும் ஆட்டிய அவன் பார்வையை அவரின் கைகளின் மீது செலுத்தினான். 'அந்த மோதிரம்... அந்த மோதிரம்...' என்று மனதிற்குள்ளே இரண்டு தரம் சொல்லிக் கொண்டான்.

"இவன் கைக்கட்டை அவிழ்த்துப் பின்பக்கமாகக் கட்டு. அப்படிக் கட்டினால் இவனுக்கு நிற்க வசதியாக இருக்கும்" என்று வீரனுக்குக் கட்டளையிட்டார் முதலமைச்சர்.

தீப்பந்தத்தை வைப்பதற்கு மரச்சட்டத்தில் ஒரு துளையைச் செய்து, அதைச் சுவரில் பொருத்தியிருந்தனர். அந்தத் துளையில் தீப்பந்தத்தைச் செருகிய வீரன், தென்னனின் கைக் கட்டுகளைத் தளர்த்திப் பின்பக்கமாய்த் திருப்பித் திரும்பவும் கைகளை இறுக்கிக் கட்டினான்.

"நீ வெளியே காவலுக்கு நில். நான் கூப்பிடும் போது வா" என்று உத்திரவிட்ட பிரமாதிராசர், வீரன் போகும் வரை மௌனமாயிருந்து விட்டுத் தென்னனை நோக்கி, "நீ செய்த குற்றத்திற்கு உன்னைச் சிரச்சேதம் செய்ய வேண்டும்!" என்றார் கடுமையாக.

'சிரச்சேதமா... இது என்ன விபரீதம்?' என்று திகைத்த தென்னன், சற்றுத் துணிவை வரவழைத்து, "ஐயா, நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்! தயவு செய்து அதைத் தெரிவித்தால் தங்களுக்குப் புண்ணியம் உண்டு!" என்றான் பணிவோடு.

பிரமாதிராசர் களீரெனச் சிரித்தார். "ராஜத்துரோகம் செய்திருக்கின்றாய்? அதாவது இந்தச் சோழ நாட்டிற்கும், சோழ அரசுக்கும் நீ வஞ்சகம் பண்ணிவிட்டாய்" என்றார்.

அரண்மனைச் செய்திகளைக் காளிங்கராயனிடம் சொன்னதை இவர்கள் தெரிந்து கொண்டுவிட்டார்களா? என்று யோசித்த தென்னன் தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது. இனி சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன? என்ற மன உறுதியோடு, "நான் என்ன ராஜத்துரோகம் செய்தேன் என்பதைத் தாங்கள் இந்த ஏழைக்குத் தெரிவிக்க வேண்டும்" என்றான்.

"தெரிவிக்க வேண்டுமா? உண்மையிலேயே உனக்கு நிறையத் திமிர்தான்!" என்று அதட்டிய பிரமாதிராசர் "இளவரசரும், அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும் மதுராந்தக வடவாற்றின் கரையில் முக்கிய விஷயமாய்ப் பேசிக் கொண்டிருந்ததை நீ ஒளிந்திருந்து கேட்டாயல்லவா? அவ்விதம் அரசகுடும்பத்தினர் பேசும் போது, பணியாளனாயிருக்கும் நீ



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

எவ்விதம் மறைந்து கேட்கலாம்? அதனால்தான் நீ இராஜத்துரோகம் செய்துவிட்டதாக நான் கூறுகின்றேன்!" என்றார்.

"ஐயா! என் பேரில் நீங்கள் இராஜத்துரோகம் சாட்டியது இருக்கட்டும் அரசர் எடுக்கும் முடிவுக்கு எதிரிடையாக சிலர் நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்களே. அவர்களுக்கு நீங்கள் என்ன தண்டனை வழங்கப் போகின்றீர்கள்?" என்று அவரைத் திருப்பிக் கேட்டான்.

பிரமாதிராசருக்கு முகம் சிவந்தது. "அப்படிப்பட்ட நயவஞ்சகர்கள் யார்?" என்றார் அந்த அறையே அதிரும்படி.

அவர் இம்மாதிரிப் பேசித் தென்னன் கேட்கவில்லையாதலால் பயந்தபடியே, "சோழ நாட்டு இளவரசரும், அவரின் துணைவியும், தங்கை இராஜசுந்தரியும், சயங்கொண்ட சோழ இருக்குவேளும், படைத்தலைவர் வீரசோழனும்..." என்றான். இப்படிக் கூறியதற்காக முதலமைச்சர் நம்மை அதிகமாகக் கோபிப்பாரா! என்ற அச்சமும் அச்சமயம் அவன் மனதிற்குள் எழுந்தது.

"என்ன சொன்னாய்?" என்ற வியப்புக்குறியுடன் அவனையே பார்த்த பிரமாதிராசர், தென்னன் அருகில் வந்து, அவன் தோளைத் தட்டினார்.

"உன்னுடைய ராஜ விசுவாசம் பாராட்டுக்குரியது!" என்றார்.

இவ்விதம் அவர் பாராட்டிக் கூறிய வார்த்தைகளினால் உற்சாகம் அடைந்த தென்னன் முகத்தில் மகிழ்ச்சிக்குறி நிலவ, சிறிது கர்வமாக நிமிர்ந்து நின்றான்.

"அங்கே என்ன பேசிக் கொண்டார்கள் தென்னா?" என்று வினவினார் பிரமாதிராசர்.

"இன்று காலை இளவரசர் அறையைச் சுத்தம் செய்வதற்குச் சென்றேன். உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. வந்த வழியே போய்விடலாம் என்று முனைவதற்குள், 'இங்கே நாம் சந்திக்கக் கூடாது. இரவு மதுராந்தக வடவாற்றின் அரசமர மண்டபத்தில் சந்தித்து, அடுத்து இளவரசு பட்டம் யாருக்கு என்பதை முடிவு செய்ய வேண்டும்!' என்ற சாளுக்கிய அரசியின் குரல் கேட்கவே, தூணில் மறைந்தேன். உள்ளிருந்து கொடும்பாளூராரும், வீரசோழனும் வெளியில் வந்தார்கள். அவர்களை வாசல்வரை வந்து இளவரசர் வழியனுப்பி வைத்தார். கூட இராஜசுந்தரியும் இருந்தார். அப்போதுதான் என் மனதில் சந்தேகம் தோன்றியது. அடுத்து இளவரசர் யார் என்பதை அரசரல்லவா முடிவு செய்ய வேண்டும்? இவர்கள் யார் என்று குழம்பினேன். சக்கரவர்த்தியிடம் இதைத் தெரிவிக்கலாமா? என்று கூட எண்ணினேன். ஆனால், நான் நினைப்பது போலல்லாமல்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வேறு மாதிரி அவர்களின் நோக்கம் இருந்தால், நமக்கல்லவா தொல்லை வரும். அதனால் அரசமர மண்டபத்தில் என்னதான் பேசுகின்றார்கள் என்பதை அறிந்து, பிறகு சக்கரவர்த்தியிடம் இதைப் பற்றித் தெரிவிக்கலாம் என்று முடிவுகட்டி, அதற்காகவே பேசுவதை ஒட்டுக் கேட்டேன்!” என்றான் தென்னன்.

“நல்லது! அரசமர மண்டபத்தில் என்ன அப்படிப் பேசினார்கள்?”

முதலமைச்சர் கேள்விக்குப் பதில் சொல்லலாமா? கூடாதா? என்று யோசித்தான் தென்னன். அங்கே கேட்டதை அப்படியே இவரிடம் தெரிவித்துவிடுவதால் தலை ஒன்றும் போய்விடாது. மாறாக இவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகிவிடலாம். அதை வைத்துக் கொண்டு சில காரியங்களை இவர் மூலம் சாதித்துக் கொள்ளலாம் என்றெண்ணி,

“நிறைய விஷயங்கள் பேசினார்கள் முதன்மந்திரி” என்றான்.

பிரமாதிராசர் அவன் பக்கத்தில் வந்தார். தோளைத் தட்டி “என்னிடம் எப்படிச் சொல்வது என்றுதானே தயங்குகிறாய்? கவலைப்படாதே. நிறைய வெகுமதிகள் தருகிறேன்! அத்துடன் உன்னை...” என்று வார்த்தைகளை முடிக்காமலே புன்னகையுடன் அவனைப் பார்த்தார்.

அந்தப் பார்வையில்...

‘முடிக்காமல் நான் விட்டுவிட்ட வாக்கியத்தில் நிறைய விஷயங்கள் இருப்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும்’ என்ற அர்த்தம் தொனித்தது.

நான் கேட்ட விஷயத்தை இவரிடம் சொல்வதால் எனக்கு இருவகையில் இலாபம் கிடைக்கிறது! பிரமாதிராசரின் வெகுமதிகளையும் நம்பிக்கையையும் பெறுகிறேன். அதே விஷயத்தை மீண்டும் காளிங்கராயனிடம் தெரிவித்தால் பொற்காசுகளும் கிடைக்கும். ஒரே கல்லில் இரு மாங்காய்கள் என்று மகிழ்ச்சியுடன் தொண்டையைச் சரிசெய்து கொண்டு, “பெருமதிப்புக்குரிய அமைச்சர் பெருமானே, மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட அரசரை நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும், இது சம்பந்தமாக மன்னரைச் சரிக்கட்ட குந்தள மன்னரை இங்கே வரவழைப்பது என்றும், சோழக் குறுநில மன்னர்களின் ஆதரவைத் திரட்டக் கொடும்பாளூர் ஒற்றர்களை எங்கும் அனுப்புவது என்றும் அங்கே முடிவு எடுக்கப்பட்டது” என்றான்.

முதல்மந்திரியின் மனம் இதைக் கேட்டுச் சலனப்பட்டாலும், தென்னனுக்கு அது தெரியக் கூடாது என்பதற்காக, நொடிப் பொழுதிற்குள் மனதை மாற்றிக் கொண்டு, “இதைத் தவிர வேறு ஏதாகிலும் பேசிக் கொண்டார்களா?” என்றார்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இல்லை ஐயா! நான் சொன்ன செய்திகளைத்தான் அவர்கள் பேசினார்கள்” என்றான்.

வெளியே நின்று கொண்டிருந்த வீரனைக் கைதட்டிக் கூப்பிட்டார் பிரமாதிராசர்.

“இவனுக்கு ஐம்பது பொற்காசுகள் அடங்கிய முடிப்பைக் கொடு!” என்று உத்தரவிட்டார்.

பொற்காசுகள் அடங்கிய முடிப்பு தென்னனிடம் கொடுக்கப்பட்டது.

தென்னன் அதைப் பெற்றுக் கொண்டதும், கண்களைக் கறுப்புத் துணி கொண்டு வீரன் கட்டினான்.

உடனே தென்னன் பதறி...

“முதன்மந்திரி அவர்களே! என் கண்களை ஏன் கட்டுகின்றீர்கள்?” என்று கேட்டான்.

“சம்பிரதாயம். வேறொன்றும் நீ பயப்படும்படி நடக்காது. இங்கே வரும் ஆட்களை இவ்விதம்தான் கண் கட்டி அனுப்பப்படும்” என்றார் அழுத்தமாக.

வீரனுடன் மெல்லத் தடவித்தடவி நடந்த தென்னன். ‘இது எந்த இடமாக இருக்கும்?’ என்பதை அறிவதற்காக தரையைக் காலால் தடவிப் பார்த்தான்.

என்ன இது? அதே வாசனை. ஆம். அதே வாசனைதான்... என்று அவன் நிதானிப்பதற்குள், மயக்கம் வந்துவிடவே, வீரன் மேல் அப்படியே சாய்ந்து கொண்டான்.

‘சுரீர்’ என்று சூரிய ஒளிபடவே, தென்னன் கண் விழித்தான். பழையபடி மதுராந்தக வடவாற்றின் கரையிலேயே அவன் தற்போது இருந்தான். கடவுளே... இங்கு எப்படி வந்தேன்? கண்கள் கட்டப்பட்டதும் மயக்க வாசனையை நுகரும்படிச் செய்து இங்கே கொண்டுவந்து போட்டிருக்க வேண்டும். முதலமைச்சர் கொடுத்த பொற்காசுகள் எங்கே? ஐயோ! கொடுத்த மாதிரிக் கொடுத்துத் திரும்பவும் வாங்கிக் கொண்டார்களா? முதலமைச்சர் அப்படியெல்லாம் செய்யமாட்டாரே? இங்கேதான் எங்கேயாவது இருக்க வேண்டும் என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

சற்றுத் தள்ளி அந்த முடிப்பு கீழே கிடந்தது. எழுந்து உடம்பில் படிந்த புழுதியைத் தட்டிக் கொண்டு, அதை எடுத்துக் கொண்டான்.

இரவில் நானிருந்த இடம்... அந்த இருட்டு அறை... எதுவாக இருக்கும்? என்ற கேள்வி அச்சமயம் அவன் மனதில் தோன்றியது.

மதுராந்தகப் பேராறு, காலை இளம்பரிதியின் ஒளியில், வெள்ளிக்குழம்பென மின்னிக் கொண்டிருந்தது. அதன் இரு கரையெங்கும், பலவித மரங்கள், வான் முட்டும்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அளவிற்கு உயர்ந்து வளர்ந்திருந்தன. காலைக் கடனைக் கழித்துக் குளித்துவிட்டு, ஈரத்துணியுடன் பொன்முடிப்போடு கங்காபுரிக் கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தான் தென்னன்.

எதிரே-

யார் இவர்கள்? என்று கண்ணை இடுக்கிப் பார்க்கும் போது...

எங்கு போனாலும் அவர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும் என்ற அரசரின் கட்டளைப்படி இருவரையும் வணங்கினான்.

பதிலுக்கு வணங்கி, "உன் பெயர் தென்னன்தானே?" என்றாள் அவ்விருவரில் ஒருவரான கடார இளவரசி.

"ஆம்!" என்று பணிவுடனே தலையாட்டினான்.

இரத்தினாதேவியின் முகம் மலர்ந்தது. உடனே, "கடலரசன்!" என்றாள் மகிழ்ச்சியோடு.

அவ்வார்த்தைகளைக் கேட்ட தென்னனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'இவர்கள் நம்மவர்களா? நம் கூட்டத்துக்கு மட்டுமே தெரியும் இந்த வார்த்தை இவர்களுக்கு எப்படித் தெரிந்தது?' என்று கடார இளவரசியைச் சந்தேகத்துடனே பார்த்தான்.

"தூமகேது என் நண்பன்; அவர்தான் இந்த வார்த்தையை எனக்குக் கூறி உங்களைப் பார்க்கச் சொன்னார்!" என்றாள் இரத்தினாதேவி.

"நல்லது! இனிமேல் உங்களுக்கு நான் அடிமை. என்ன உதவி தேவைப்பட்டாலும் என்னிடம் கேளுங்கள்! நான் செய்கின்றேன்!" என்றான் பணிவுடனே.

"தேவைப்படும் போது கேட்போம்" என்று கூறிய சாமந்தன், கடார இளவரசியுடன் வடவாற்றை நோக்கிப் போகலானான்.

'என்ன இருந்தாலும் தூமகேதுவைப் போன்ற கெட்டிக்காரர்களைத் தன்னகத்தே கொண்ட பாண்டிய அரசர் பெரும் புண்ணியம் செய்தவராகத்தான் இருக்க வேண்டும்! கடார இளவரசியான இரத்தினாதேவி, சோழ அரசரின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டாள். அரச விருந்தாளியாக, அவள் சாமந்தனுடன் அரண்மனையிலே தங்கியிருக்கின்றாள். அவளுக்குச் சகல மரியாதையும் இங்கே செய்யப்படுகிறது. இப்படிப்பட்டவளைத் தூமகேது வளைத்துப் போட்டுவிட்டதால், இவளைக் கொண்டே சோழ வம்சத்தை நிர்மூலமாக்கிவிடலாம்!' என்று எண்ணியபடி தென்னன் கோட்டைக்குள் மகிழ்ச்சியுடன் நுழைந்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 20

சோழச் சக்கரவர்த்தி வீரராசேந்திரர் இருக்கையிலிருந்து மெல்ல எழுந்தார். அருகேயிருந்த பட்டத்தரசிக்கு வியப்பாகிவிட்டது. ஏறக்குறைய ஆறு திங்களுக்கு மேல், படுத்த படுக்கையிலிருந்தே துன்பப்பட்டுக் கொண்டிருந்த அவர், இப்போது எழுந்து நடமாட ஆரம்பித்துவிட்டார் என்றால்...

முதலமைச்சர் பிரமாதிராசர் கூட, கடார இளவரசி இரத்தினாதேவி சம்பந்தமாக அவருக்குக் கிடைத்த செய்தியை வைத்துச் சிகிச்சை முடிந்ததும், கடார நாட்டிற்கு அனுப்ப மனதில் முடிவு செய்து வைத்திருந்தார்.

ஆனால்...

அதிசயிக்கத் தக்க வகையில் அரசர் குணமடைந்துவிட்டதும், இரத்தினாதேவியை அங்கிருந்து அனுப்ப, மாமன்னரிலிருந்து பட்டத்தரசி வரை யாரும் விரும்பாததால் இந்தச் சமயத்தில் இப்பிரச்சினையை எழுப்பி, அதன் மூலம் அவர் அவமானப்பட விரும்பவில்லை.

அதனால், காலம் கருதி மௌனமாக இருந்தார் முதன்மந்திரி.

அந்தச் சமயத்தில்-

பாண்டிய நாட்டிலிருந்து அவசரத் தூதுவன் ஒருவன் வந்தான். அங்கே குழப்பமான நிலைமை நிலவுவதாகவும், சீக்கிரம் சோழ இளவரசர் வரவேண்டுமென்றும், தற்காலிகக் கோட்டைத் தளபதி மூவேந்தராசனிடமிருந்து மிகவும் அவசரம் என குறிப்பிட்டிருந்த கடிதத்தை முதலமைச்சரிடம் தந்தான்.

தெம்புடன் சிறிது தூரம் வரை நடமாடியபடி இருந்த அரசருக்கு இச்செய்தி அறிவிக்கப்பட்டது.

அவர் பிரமாதிராசரிடம் என்ன செய்யலாம் என்று யோசனை செய்ய...

"தற்சமயத்திற்கு சோழ இளவரசர் இங்கே இருப்பதுதான் நல்லது. மதுரைக் கோட்டையின் பாதுகாப்பைப் பலப்படுத்த இன்னும் சில வீரர்களுடன் இராசேந்திரனையும், திருவரங்கனையும் அனுப்பி வைக்கலாம். குழப்பம் நீங்கியதும் மூவேந்தராசனுக்குப் பதில், திருவரங்கனைப் படைக்குத் தலைமையாக்கிவிட்டு, இராசேந்திரனை கங்கைகொண்ட சோழபுரத்திற்குத் திரும்ப அழைத்துக் கொள்ளலாம்!" என்றார் முதன்மந்திரி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அனைவருக்கும் அந்த யோசனை நல்லதாகப்பட்டது. சோழ இளவரசன் அதிராசேந்திரனுக்கு இராசேந்திரனை அங்கே அனுப்ப விருப்பமில்லாமற் போனாலும் தற்சமயத்திற்குக் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து அவன் போவது மனதிற்குத் திருப்தியாக இருக்கவே, முதலமைச்சர் சொன்ன யோசனைக்குச் சம்மதித்தான். அத்துடன் மதுராந்தகி-இராசேந்திரன் திருமணம் தள்ளிப் போகவும் வாய்ப்பிருக்கிறது. எனவே, படைகளுடன் சீக்கிரம் இராசேந்திரனை அனுப்பும்படி முதலமைச்சரிடம் கூறினான் சோழ இளவரசன்.

தேர்ந்தெடுத்த புரவி வீரர்கள் ஆயிரம் பேர்களுடன் இராசேந்திரன், திருவரங்கன் துணையோடு போவதற்கான ஏற்பாடுகளைச் சோழ நாட்டுத் தளபதி தன்மபாலர் செய்ய ஆரம்பித்தார்.

அதற்குள் மதுராந்தகியைப் பார்த்துப் பேசிவிட வேண்டும் என்று விருப்பப்பட்ட இராசேந்திரன், திருவரங்கனை அவளிடம் தூது அனுப்பினான்.

மதுராந்தகியின் அறையில் நிறைய பெண்கள் இருந்ததால் எப்படித் தெரிவிப்பது என்று சங்கடப்பட்ட அவன், பிறகு வரலாம் என்று திரும்பினான்.

இளவரசி மதுராந்தகி அறை முன் நின்றுவிட்டுப் போகும் திருவரங்கனைக் கவனித்த மலர்விழி, அருகில் சென்று, “யார் வேண்டும் உங்களுக்கு?” என்றாள்.

சோணாட்டுத் தளபதி மகள் மலர்விழியிடம் அவன் பேசிப் பழகவில்லையாதலால், மனதில் எழுந்த கூச்சத்தினால் உடல் முழுவதும் வியர்க்க, “வந்து...” என்று தயக்கத்துடன் நிறுத்தினான்.

திருவரங்கன் வீரத்தைப் பற்றி ஏற்கனவே அவள் கேள்விப்பட்டிருந்ததால், அவனைப் பற்றி மனதில் ஒருவிதப் பிடிப்புடன் இருந்த மலர்விழி, தன்னைப் பார்த்தவுடன் கூச்சத்தினால் வார்த்தைகள் தடுமாறுவதைக் கவனித்து, “என்ன வந்து?” என்றாள் புன்முறுவலுடனே.

“ஒன்றுமில்லை... கடார வீரர் இராசேந்திரர் இளவரசி மதுராந்தகியை அரண்மனை நந்தவனத்தில் பார்க்க விரும்புகின்றார்” என்றான்.

“எதற்காக?” என்று வினவினாள் மலர்விழி.

“அவர் மதுரைக்குக் கலகம் செய்யும் பாண்டியர்களை அடக்கப் போகின்றார். அதற்குள் இளவரசியாரை நந்தவனத்திலுள்ள கண்ணன் சிலையருகில் பார்க்க விரும்புகின்றார்” என்று கூறிவிட்டு நடக்கலானான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

‘எப்போது சந்திக்க வேண்டும்?’ என்பதைத் தெரிவிக்காமல் போகிறாரே என பீடு நடை நடந்து செல்லும் திருவரங்கன் மேல் விழிகளைப் பரப்பிய மலர்விழி, எப்படிக் கூப்பிட்டுக் கேட்பது? என்று தயங்கி, அதற்குள் திருவரங்கன் போய்விடப் போகிறார் என்று உள்மனம் எச்சரிக்கவே, விரைந்து அவனை நோக்கி ஓடினாள் மலர்விழி.

தன் பின்னால் ‘ஜல்... ஜல்...’ என்ற சலங்கை ஒலியுடன் ஓடி வரும் மலர்விழியைக் கவனித்துத் திருவரங்கன் சட்டென்று நின்றான்.

“என்ன வேண்டும்?” என்றான்.

“இடத்தை மட்டும் குறிப்பிட்டீர்கள். எப்போது சந்திக்க வேண்டும் என்று காலத்தைச் சொல்லவில்லையே?” என்றாள் முறுவலுடன்.

“நான் ஒரு முட்டாள்!” என்று அசடு வழிய தலையில் அடித்துக் கொண்டு, “இன்னும் கால் நாழிகை நேரத்திற்குள் வந்துவிடச் சொல்லுங்கள்” என்று கூறிவிட்டு நடந்தான்.

அந்த நடையில்தான் எத்தனை கம்பீரம்! ஆண்களில் இவர் ஏறு போல் அல்லவா இருக்கின்றார்! இத்தகையவர் எனக்குப் புருஷராக வாய்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்... என்று திருவரங்கன் நடந்து செல்வதைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டாள் மலர்விழி.

*****

**ந**ந்தவனத்தில் நானாவித மலர்களின் நறுமணம் மனதிற்கு ரம்மியமாய் இருந்தது. அதை நுகர்ந்தபடி, சில்லென வீசிய மெல்லிய பூங்காற்றின் சுகத்தை அனுபவித்தவாறு, இராசேந்திரனும், திருவரங்கனும் கண்ணன் சிலையருகே நின்றனர்.

மூன்று முழ உயரத்தில் குழலூதும் கண்ணன் இவர்களைப் பார்த்துப் புன்னகை புரியும் நிலையில் இருந்தான்.

“இதோ வந்துவிடுகிறோம் என்றல்லவா புரவி வீரர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்த தளபதியிடம் சொல்லிவிட்டு வந்தோம். நேரமாகிவிட்டால் அவர் எங்கே, எங்கே? என்று அல்லவா நம்மைத் தேடுவார்?” என்று அவசரப்படலானான் இராசேந்திரன்.

மலர்விழியிடம் சொன்ன கால் நாழிகை கடந்துவிட்டது. ‘இந்தப் பெண்களே இப்படித்தான்’ - சலிப்பும், எரிச்சலும் கலந்த குரலில் கூறிய இராசேந்திரன் செவிகளில் காற்சிலம்பு ஒலிக்கும் சப்தம் விழுந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"வந்துவிட்டார்கள்!" என்றான் திருவரங்கன் புன்னகையுடனே. அத்துடன் நிற்காமல் அங்கிருந்து சண்பக மரத்தடியில் போய் நின்று கொண்டு, வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

மதுராந்தகியுடன் கூட வந்த மலர்விழி சண்பகமரத்தின் அருகில் தங்கிவிட, மதுராந்தகி மட்டும் கண்ணன் சிலை நோக்கி நடந்து சென்றாள்.

"வா, மதுராந்தகி!" என்று அவள் மென்கரத்தைப் பற்றிய இராசேந்திரன் மனம், மகிழ்ச்சியால் திளைக்க, அவளைப் பார்த்து முறுவலித்தான்.

முகம் சிவக்க, வெட்கத்துடன் தலை குனிந்து, "எதற்காக என்னை வரச் சொன்னீர்கள் அவசரமாய்?" என்றாள்.

"ஏன்... வரச்சொல்ல எனக்கு உரிமையில்லையா?" என்று வினவினான் இராசேந்திரன்.

"அதற்கு இல்லை... உடனே என்று சொல்லும் போது என்னதோ... ஏதோ என்று ஒப்பனை கூட செய்யாமல் வர வேண்டியிருக்கிறதே" என்றாள்.

"உன் இயற்கையழகை விட ஒப்பனையழகா உயர்ந்து விடப் போகின்றது. அகன்ற பெரிய கருவிழிகள் ஒன்றே போதுமே. நாளெல்லாம் உன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு" என்று அவளின் கன்னத்தை மெல்லக் கிள்ளினான்.

"போதும் உங்கள் குறும்பு. யாராவது பார்க்கப் போகின்றார்கள் இந்த விளையாட்டை!" என்றாள் மதுராந்தகி.

"கலகம் செய்யும் பாண்டியர்களை அடக்க நான் மதுரை போகின்றேன். வருவதற்கு எப்படியும் ஒரு திங்கள் ஆகலாம். அதைச் சொல்லவே உன்னை இங்கே கூப்பிட்டேன்!" என்றான் இராசேந்திரன்.

"ஒரு திங்களா...?"

"ஆமாம்! அப்போதுதான் நான் கூப்பிட்டவுடன் உடனே வந்து நிற்பாய்" என்று அவளின் இடுப்பை வளைத்த அவன் கரம், மெல்ல அப்பகுதியிலிருந்து கீழ்நோக்கி இறங்கத் தொடங்கியது.

உடல் சிலிர்த்து மதுராந்தகி, "வெட்கமாக இருக்கிறது!" என்றாள்.

"ஏன்?" என்று அவள் செவிகளில் மட்டும் கேட்கக் கூடிய குரலில் உணர்ச்சி வயத்துடன் இராசேந்திரன் கேட்டு, மீண்டும் அவளின் கன்னத்தில் கைவைத்து சிவந்த இதழ்களை அன்புடன் வருட...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“யாராவது வந்துவிடப் போகின்றார்கள்!” என்று விலகிய மதுராந்தகி, “இப்போதெல்லாம் சேஷ்டைகள் அதிகமாகிவிட்டன” என்று கீழே கிடந்த மலர்களைப் பொறுக்கி அவன் மேல் வீசினாள்.

அதே சமயம்-

சண்பகமரத்தின் அருகிலிருந்த திருவரங்கன், தன் எதிரே நின்று கொண்டிருந்த மலர்விழியைப் பார்த்தான்.

கீழே குனிந்தபடி விழிகளின் ஒரு பக்கத்தை மட்டும் திருட்டுத்தனமாய்த் தன் மேல் பரப்பிக் கொண்டு இருப்பதை உணர்ந்து, திருவரங்கன் கூச்சத்துடன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

ஆகா! அவளின் கள்ளப் பார்வையில்தான் எத்தனை சந்தோஷம் இருக்கிறது! அதை அனுபவிக்க வகை தெரியாமல் முகத்தை உடனே திருப்பிக் கொண்டுவிட்டேனே! என்ன நினைத்துக் கொள்வாளோ? என்று மீண்டும் அவள் பக்கம் பார்வையைச் செலுத்தினான்.

கூரிய அவளின் விழிகள், இன்னும் அவன் மேலிருந்து அகலவில்லை. அவனைத் துளைப்பது போல் அழுத்தமாய்த் திருவரங்கனை நோக்கின.

பதிலுக்கு முறுவல் மட்டும் செய்துவிட்டு, உலகத்தையே கொடுத்தாலும் இந்தப் பார்வைக்கு ஈடாகாது என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

‘நீங்கள் நிரம்பவும் கூச்சப்படுகிறீர்கள்? இந்தச் சந்தர்ப்பத்திற்காக நான் காத்து இருந்த நாட்கள் கணக்கிலடங்கா!’ என்கிற மாதிரி மலர்விழி திருவரங்கனைப் பார்த்து மெல்ல சிரிக்கலானாள்.

‘மலர்விழி! உந்தன் சிவந்த இதழ்களில் வெண் பற்கள் மின்ன நீ முறுவலிக்கும் எழிலை என்னவென்று சொல்வது? நாளெல்லாம் இதைப் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருக்கிறது!’ என்று தன் உள்ளத்தில் தோன்றிய உணர்வை வெளிப்படுத்தும் முறையில் திருவரங்கன் அவளை உற்றுப் நோக்க...

அப்போதுதான், நாணம் வந்து தொலைத்தது போல், அவள் தலை குனிந்து கொண்டாள். அவ்விதம் குனியும் போது, அம்பினும் கூரிய அவளின் விழிகள், திருவரங்கனை வீழ்த்துவது போல் அவன் மீது பதிந்தன.

“புறப்படலாம் திருவரங்கா! நமக்காக அங்கே தளபதி துடித்துக் கொண்டிருப்பார்!” என்ற இராசேந்திரன் குரல் கேட்டு, அவன் சுய உணர்வு பெற்றான்.

மனத்தை மலர்விழியிடம் விட்டுவிட்டு, வெறும் வெற்றுடலோடு அவன் இராசேந்திரன் பின் நடக்கலானான்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 21

நிலமகளின் மார்பில் கிடந்து ஒளி வீசும் பதக்கம் என பாண்டிய நாட்டைக் கருதினால் அதனைச் சுற்றியுள்ள நகரங்கள் அனைத்தும் பதக்கத்தைச் சுற்றிப் பதிக்கப் பெற்ற மணிகள் எனக் கொண்டு, மதுரைத் திருநகர் அம்மணிகளின் நடுவிலுள்ள விலையுயர்ந்த மாணிக்கம் என்றே அழைக்க வேண்டும்.

அத்தகு சிறப்பு வாய்ந்த மதுரை நகர் நோக்கி ஆயிரம் புரவி வீரர்கள், இராசேந்திரன் தலைமையில், திருவரங்கனுடன் வேகமாய்ச் சென்று கொண்டிருந்தனர்.

நெற்பயிர்கள் வளத்துடன் கரும்புகள் போல் உயரமாய் வளர்ந்து காற்றில் அசைந்து, சோழ வீரர்களை உற்சாகத்தோடு வரவேற்றன.

'வாருங்கள் சீக்கிரமாய்! நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும், கலகக்காரர்களால் மதுரை அழிபட்டுவிடும்!' என்று தடாகமென்ற மங்கை நல்லாள் தாமரை இலையாகிய மரகதத் தட்டில், வெண்முத்தென்ற நீரைக் கொண்டு ஆரத்தி எடுக்க...

'புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யா குலக்கொடி.'

என்று சிலம்பு தந்த இளங்கோ அடிகளால் புகழப்பட்ட வைகை ஆறு இவர்களைக் கண்ட குதூகலத்தில், குரவம், மகிழ், கோங்கு, வேங்கை, வெண்கடம்பு, சுரபுன்னை, மாஞ்சாடி, மருது, செருந்தி, சண்பகம், பாதிரி ஆகிய மலர்களால் ஆன ஆடையே உடுத்திக் கொண்டு சுழித்து ஓடத் துவங்கினாள்.

அதைப் பார்த்தவாறு புரவியைச் செலுத்திக் கொண்டு வந்த இராசேந்திரன், கடிவாளத்தை இழுத்து நிறுத்தினான்.

உச்சி வெய்யில் மிகவும் கடுமையாக இருந்தது. அருகில் வந்த திருவரங்கனிடம் "படைகள் வைகை ஆற்றில் தாக சாந்தி செய்து கொள்ளட்டும்!" என்று கட்டளையிட்டான்.

வீரர்கள் தம் தம் குதிரைகளை நிறுத்தி கை, கால், முகங்களைக் கழுவிக் கொண்டு, ஆற்றையட்டி அமைந்த வேங்கை மரத்தின் நிழலில் இளைப்பாறுவதற்காக உட்கார்ந்தனர்.

சற்றுத்தள்ளி, சண்பகமரத்தின் கீழ் அமர்ந்த இராசேந்திரன், திருவரங்கனுடன் வையை ஆற்றில் இறங்கினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இரு கரங்களாலும் நீரை அள்ளி முகம், கால்களைக் கழுவி, தெளிந்த நீர் பருக வேண்டி, இன்னும் கொஞ்சம் ஆழத்தில் இராசேந்திரன் இறங்க, சிறிய பேழையொன்று ஆற்று வெள்ளத்தில் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

"என்ன பேழை அது?" என்று ஆர்வமுடன் திருவரங்கனைப் பார்க்க, அவன் ஆடை நனைந்தாலும் பரவாயில்லை என்று நீரில் குதித்துப் பெட்டியைக் கைப்பற்றி இராசேந்திரனிடம் கொடுத்தான்.

வாங்கிய அவன், கரைக்கு வந்து பெட்டியைத் திறந்தான். உள்ளே சிறிய ஓலை நறுக்கு இருந்தது.

எடுத்துப் படித்தான்...

'எச்சரிக்கை! நீர் மதுரை மாநகர் நோக்கிப் போவது விண்ணுலகம் செல்வது போல்தான்! அதனால் இப்படியே திரும்பி சோழநாடு செல்வதுதான் உனக்கு நன்மை பயக்கும்' - இப்படிக்கு வீரசபதம் செய்த பாண்டியர்கள்! என்று எழுதியிருந்தது.

ஆடை முழுவதும் நனைந்து நீர் சொட்டச் சொட்ட கரையேறிய திருவரங்கன் "பேழையில் என்ன இருந்தது?" என்று வினவினான்.

இராசேந்திரன் ஓலை நறுக்கை அவனிடம் தந்தான்.

"பேடிகள்! எங்களையா எச்சரிக்கிறீர்கள்!" என்று கர்ஜித்த திருவரங்கன், சுற்று முற்றும் பார்த்தான்.

அதற்குள் இராசேந்திரன் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த வீரர்களை அழைத்து, மூலைக்கு ஒரு பக்கமாக ஏவி, யாராவது இருக்கின்றார்களா? என்று பார்க்கும்படிக் கட்டளையிட்டான்.

கால் நாழிகைக்கு மேல் தேடியும், ஆள் இருக்கும் தடயம் எதுவும் தென்படவில்லை.

"நீ சொன்னது போலவே அவர்கள் பேடிகள்தான்! நேருக்கு நேர் சந்திக்காத அவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை" என்று கூறிவிட்டுப் புரவி ஏறினான் இராசேந்திரன்.

ஆயிரம் குதிரைகளின் குளம்பொலிகளும் ஒன்றாய்ச் சேர்ந்து அப்பகுதியெங்கும் நிரம்பி, ஊழிக்காலம் வந்துவிட்டது போல் கேட்பவர்கள் பிரமிக்க, மதுராநகர் நோக்கி அனைவரும் பயணமாயினர்.

சிறிது நேரம் கழிந்தது...



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வையை ஆற்று நீரின் அடியிலிருந்து ஒரு உருவம் எழுந்தது. மேனி முழுவதும் எண்ணெய் பூசப்பட்டிருக்க, கரிய நிறத்துடன் கட்டுடலோடிருந்த அது கரை ஏறியது. அந்த உருவம் வேறு யாருமல்ல.. தூமகேதுதான் அவன்!

ஓலை நறுக்கைப் பேழையில் வைத்து ஆற்றில் விட்டுவிட்டு, வீரர்கள் கண்ணில் படாதிருக்க நீருக்குள் மூச்சடக்கி இதுவரை ஒளிந்து கொண்டிருந்தான் அவன்.

வெகு தூரம் சென்றுவிட்ட புரவி வீரர்கள் பக்கம் பார்வையைச் செலுத்திய தூமகேது, இவர்களில் பாதிப்பேரையாவது அழித்தால்தான் நம்மால் தாக்குப் பிடித்து நிற்க முடியும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என வேகமாய் காட்டிற்குள் ஓடலானான்.

வெகுதூரம் ஓடியதும், சிறிய குன்றும் அதையொட்டி ஆங்காங்கே சிறுசிறு மலைகளும் இருந்த பகுதி வந்தது.

மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க நின்றான். அது அடங்கி மூச்சு சமநிலைக்கு வருவதற்குள் “கடலரசன்!” என்று குரல் கேட்டது.

அடுத்தகணமே பல்வேறு திசைகளிலிருந்து இருபது, முப்பது பேர் கும்பலாக ஓடி வந்தனர். அவர்கள் அனைவரும் கரிய நிறத்துடன், முறுக்கிய மீசையுமாய் இருந்தனர்.

அவர்களை ஒரு தரம் நோட்டம்விட்ட தூமகேது ஆத்திரத்துடன், “சோழ நாய்கள் மதுரையை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களை நிர்மூலமாக்க நாம் மாறுவேடத்தில் இரகசிய வழியின் மூலம் கோட்டைக்குள் நுழைய வேண்டும்” என்று கூறி, “கோநேரின்மை கொண்ட சடையவர்ம சீவல்லபர்!” என்று வலக்கரத்தை உயர்த்த கூடியிருந்தவர்கள், “வாழ்க! வாழ்க!” என்று முழங்கினர்.

ஒவ்வொருவர் கையிலும் கொடிய நஞ்சு தடவப் பெற்ற குத்துவாள் ஒன்று இருந்தது. அனைவரும் குறுக்கு வழியில் தூமகேதுவுடன் மதுரை நோக்கிப் பயணமாயினர்.

*****

**ம**துரை நகரைச் சுற்றி நீண்டு வளைந்து இருந்த பெரிய மதில் வலிவுடன் மிகவும் உயரமாயும் இருந்தது. அம்மதிலுக்குள் ஏழு திருச்சுற்றுகள் இருக்கின்றன. அதன் உள்ளே மன்னர் வசிக்கும் அரண்மனையும், குடிமக்கள் வாழும் தெருக்களும், கோவில்களுமாயிருந்தன.

நகரின் நடுநாயகமாய் சொக்கநாதர் ஆலயம் அமைந்திருந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பெரிய கடல் ஒன்று மதுராநகரின் புறத்தே வந்துவிட்டது போல, மதிலைச் சூழ்ந்து அகழி இருந்தது.

அதில்...

வாளை மீன்கள் எழுந்து துள்ள, ஆமைகள் தம் உறுப்புக்களை விரித்துக் கொண்டு திரிய, கொடிய கூற்றுவன் போல முதலைகள் நீருக்குள் அமிழ்ந்து கிடந்தன.

அகழிப் பாலத்தின் மூலம் சோழப் புரவி வீரர்கள் அதைக் கடந்து கோட்டைக்குள் புகுந்தனர்.

கடைசியாய் வந்த இராசேந்திரனையும், திருவரங்கனையும் தற்காலிகக் கோட்டைத் தலைவனான மூவேந்தன் வரவேற்றான்.

"முதலில் கோட்டையின் பாதுகாப்பைப் பார்வையிட வேண்டும்!" என்று அவனிடம் தெரிவித்தான் இராசேந்திரன்.

மூவேந்தன் இருவரையும் கோட்டையின் உச்சிக்கு அழைத்துச் சென்றான். சுற்றிலும் பார்வையைச் செலுத்திய இராசேந்திரன், திருவரங்கனுடன் கோட்டையை ஒரு சுற்று சுற்றினான். அவ்விதம் அவன் சுற்றி வருவதற்கு ஒரு நாழிகைப் பொழுது தேவைப்பட்டது.

இருபது முழத்திற்கு ஒருவர் வீதம் யவன வீரர்கள் காவலுக்கு இருந்தனர். இவர்களை நீக்கிவிட்டுச் சோழ வீரர்களை அதற்குப் பதிலாக நிறுத்த வேண்டும் என்று மனதில் முடிவு செய்து, மதிலின் உட்புறமாக பொறிகள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றான். பல பொறிகள் பழுதுற்ற நிலையில் இருந்தன.

முக்கியமாய் கற்களை வீசும் கவண்பொறி உடைந்து இருந்தது. வேல், வாள், சூலம் இவற்றைப் பகைவர் மேல் குறிதவறாமல் வீசும் பொறிகள் நன்றாக இயங்கின. ஆனால் பகைவீரர்களை அப்படியே விழுங்கும் பாம்புப் பொறிகள் பழுதுற்று இருந்தன. பகை வீரர்களின் கைகளையும், தலைகளையும் அறுக்கும் அரிசங்கிலிவிட்டு இழுக்கும் பொறி அடியோடு சிதைந்து போயிருந்தது. வறுத்த மணலையும், நெருப்பையும், கற்களையும் மழை போல் சரமாரியாய் வீசும் பொறிகள் மிகவும் துருப்பிடித்து போய் இயக்குவதற்கே கடினமாயிருந்தன.

இவற்றையெல்லாம் கவனித்த இராசேந்திரன் மூவேந்தன் பக்கம் திரும்பி, "கோட்டையின் பொறுப்பு உன்னிடம்தானே இருக்கின்றது?" என்று வினவினான்.

"ஆமாம்!" என்றான் நிதானமாக.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“கோட்டைக்குள்ளிருக்கும் பொறிகள் அனைத்துமே சரியாக இல்லையே. இதையெல்லாம் கவனிக்காமல் நீர் என்ன செய்து கொண்டிருந்தீர்!” என்று கேட்டான் இராசேந்திரன்.

“நான் என் கடமையைச் சரிவரவே செய்தேன்” என்று கூறினான் மூவேந்தன்.

அங்கே ஏதும் அவனிடம் பேசக்கூடாது என்று அரண்மனைக்குள் திருவரங்கனுடன் சென்றான். மூவேந்தனை அமரச் சொல்லி, சோழச் சக்கரவர்த்தியின் கடிதத்தை அவனிடம் தந்தான்.

அதில்-

இதைக் கண்ட மறுகணமே எல்லாப் பொறுப்புகளையும் இராசேந்திரனிடம் ஒப்படைக்கும்படி தெரிவிக்கப்பட்டிருந்தது.

முகச்சோர்வுடன் இடையிலிருந்த வாளைக் கழற்றி இராசேந்திரனிடம் கொடுத்தான் மூவேந்தன்.

மதில் மேல் காவல் காக்கும் வீரர்கள் எத்தனை? நகரை வலம் வருபவர்கள் எத்தனை? அரண்மனைக்குள் எத்தனை வீரர்கள் இருக்கின்றார்கள்? என்று ஒரு பட்டியலைத் தயாரிக்கும்படித் திருவரங்கனிடம் உத்தரவிட்டுவிட்டு, சிறிது களைப்பாறி நகரை வலம் வர தன்னுடன் வரும்படி மூவேந்தனிடம் கூறினான்.

மனம் அவனுடன் போக விருப்பமில்லாமற் போனாலும், அரச உத்தரவு என்பதால் வேண்டா வெறுப்பாய்த் தலையசைத்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றான்.

பகல் கழிந்து மாலை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஜாதிக் குதிரைகள் இரண்டு அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சொக்கநாதர் ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

ஒன்றில் கம்பீரமாய் வீற்றிருந்த இராசேந்திரன், சுற்றுச் சூழலைக் கவனித்தவாறு சென்று கொண்டிருந்தான். இன்னொன்றில் தொய்வான முகத்துடன் மூவேந்தன் இருந்தான். அவ்விருவருக்கும் பாதுகாப்பாக முன்னும் பின்னும் பத்துப் பத்து வீரர்கள் புரவியில் அமர்ந்திருந்தனர்.

பொற்றாமரைக் குளம் பக்கம் திரும்பிய இராசேந்திரன் அசுவத்தின் முன், ஒரு நடுத்தர வயதினன் வேகமுடன் ஓடி வந்து, “நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!” என்று கூவியபடி கீழே விழுந்தான்.

வேங்கி இளவரசன் கடிவாளத்தை இழுக்க, ஜாதிப் புரவி கட்டுக்கு அடங்காமல் கால்களை உயரத் தூக்கி, கனைத்துக் கொண்டு நின்றது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"அக்கிரமம் நடக்கிறது. சீக்கிரம் போங்கள்!" என திரும்பவும் உரக்கக் கூவினான் அவன்.

திடீரென இவ்விதம் சப்தமுடன் சொன்னதைக் கவனித்த இராசேந்திரன் புரவியிலிருந்து குதித்தான்.

"என்ன அக்கிரமம் நடந்துவிட்டது?" என்று அவன் அருகில் சென்று கேட்டான்.

அச்சமயம்...

நான்குபுறமும் மக்கள் 'ஐயோ!' என்று அலறிக் கொண்டு சிதறி ஓடலாயினர். யானைகள் இரண்டு வேகமாய் இவர்களை நோக்கி வர, யானைப் பாகர் இருவர், "மதம் பிடித்துவிட்டது! விலகுங்கள்! விலகுங்கள்!" என்று கூவியபடி பின்னால் அதைத் துரத்திக் கொண்டு வந்தனர்.

இராசேந்திரன் புரவி வீரர்களை விலகி நிற்கும்படி எச்சரித்துவிட்டு, மதம் பிடித்த யானையை அடக்குவதற்குத் தயாரானான்.

ஆனால்... அவன் உள் மனம் வேறு விதமாய் அல்லவா கூறுகிறது! கைகளை மடக்கி அதன் மத்தகத்தைப் பிடித்து அடக்கத் தயாராக வேண்டிய இராசேந்திரன், உள் மனக் கூற்றுப்படி, ஓடிவரும் யானைகளின் முன் நிதானமாய்ப் போய் நின்று, அதற்குரிய பாஷையில் எதையோ கூறினான். யானையிரண்டும் சாதுவாய் அவன் முன் மண்டியிட்டன.

பின்னால் வந்த பாகர்கள் அங்குசத்தால் கோபத்துடன் குத்த, அவர்களை விலகி நிற்கும்படி எச்சரித்தான் இராசேந்திரன்.

நான்கு பக்கமும் சிதறிய மக்கள், அபாயம் வரும் அளவிற்கு ஒன்றும் நடக்கவில்லையென்று உணர்ந்து, நடப்பதை அறிவதற்காக கூட்டமாகக் குழுமினர்.

கீழே விழுந்த நடுத்தர வயதினன் எழுந்து நின்றான். யானைப் பாகர்கள் இருவரையும் சுட்டி, "பிடியுங்கள் அந்தத் தேசத்துரோகிகளை!" என்று உரக்கக் கத்தினான்.

யானைகள் சாதுவாய் இராசேந்திரன் முன் மண்டியிட்டதையும், நடுத்தர வயதினன் 'பிடியுங்கள்!' என்று கூவியதையும் கண்ட இரு பாகர்களும், கூட்டத்தோடு கூட்டமாக நழுவ முயன்றனர்.

அந்தச் சமயத்தில்தான் யானைப் பாகன் ஓடிவந்தான். "எங்கே அந்தப் பொய்யர்கள்!" என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, யானையின் அருகில் சென்று, மெல்ல அன்புடன் தடவிக் கொடுக்கலானான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இராசேந்திரன் யானைப் பாகன் வேடத்திலிருந்த பாண்டியர்களைக் கைது செய்யும்படி வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

நழுவப் பார்த்த அவ்விருவரும் காவல் வீரர்களால் வளைக்கப்பட்டனர்.

அதே சமயம்...

குறுங்கத்தி ஒன்று நடுத்தர வயதினன் மார்பில் பாய்ந்தது.

"ஹா!" என்று கீழே வீழ்ந்தான்.

அவனை அரண்மனை வைத்தியரிடம் அழைத்துச் செல்லும்படி ஏற்பாடு செய்துவிட்டுப் புரவியை அரண்மனைக்குத் திருப்பினான்.

அது நடந்த ஒன்றரை நாழிகைப் பொழுதிற்கெல்லாம் படைத்தலைவர்களின் கூட்டத்தை இராசேந்திரன் அவசரமாய்க் கூட்டினான்.

கோட்டைக் காவற்தலைவன், நகரக் காவற்தலைவன், நாற்படைத் தளபதிகள், மூவேந்தன், திருவரங்கன் ஆகியோர் அதில் இருந்தனர்.

"நீங்கள் எதற்காக இங்கு வரவழைக்கப்பட்டிருக்கின்றீர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான். நான் வந்த சில நாழிகை நேரத்திற்குள் கட்டடியிலிருந்த யானையை சோழப் பகைவர்கள் அவிழ்த்துவிட்டு, மக்கள் நடமாடும் இடத்தில் அவற்றை துரத்திக் குழப்பம் விளைவித்திருக்கின்றனர். அத்துடன் நில்லாது அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்துக் கொண்டு வந்த நம் ஒற்றர் படையைச் சேர்ந்த ஒருவரை நச்சுக்கத்தியை எறிந்து கொன்றுவிட்டனர். இதிலிருந்து அவர்களின் போக்கை நாம் ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது. சோழ அரசின் பொறுப்பிலிருக்கும் மதுரையையும், மதுரை வாழ் மக்களையும் நிம்மதியுடன் வாழவிடாமல் செய்து, அதன் மூலம் சோழ ஆட்சிக்கு அவப்பெயர் விளைவிக்க வேண்டுமென்பது அவர்கள் திட்டம். அதை முறியடித்து இங்கே அமைதி ஏற்படுத்துவது நம் அனைவரின் கடமையாகும். அந்தக் கடமையை நிறைவேற்ற உங்களின் ஒத்துழைப்பைக் கோரவே, சோழ அரசரின் ஆனையை நிறைவேற்ற வந்திருக்கும் நான் இக்கூட்டத்தைக் கூட்டியிருக்கிறேன்.

"நடந்த குழப்பங்களை நான் யோசிக்கும் போது, சில முடிவுகளுக்கு வரவேண்டியிருக்கிறது. ஒன்று... மதுரைக்குள் குழப்பம் விளைவிப்பவர்கள் கோட்டைக்குள் நன்கு ஊடுருவி இருக்கிறார்கள். இதை நிச்சயம் மறுக்க முடியாது. இரண்டு... அந்த ஊடுருவல்காரர்களுக்குக் கோட்டைக்குள்ளேயே சிலர் பாதுகாப்புத் தருகின்றனர். இது நம்பிக்கையான இடத்திலிருந்து நமக்குக் கிடைத்த செய்தி! அதனால், குழப்பம் விளைவிக்கும் கலகக்காரர்களை அடக்க நான் சில முடிவுகளை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

எடுத்திருக்கிறேன். அந்த முடிவை நீங்கள் ஆராய்ந்து, அவற்றிலிருக்கும் குறைகளைச் சுட்ட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கலகத்தை அடக்குவதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் உங்களுக்கு எந்தவித மாறுபாடும் இருக்காது என்று நம்புகிறேன். அதற்காக இன்னும் ஒரு நாழிகை நேரத்திற்குள், நகரெங்கும் ஊரடங்குச் சட்டம் போட விரும்புகிறேன்! அவசியமான உணவுப் பண்டங்களைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் வாங்கிக் கொண்டு, மறு அறிவிப்பு வரும் வரை மக்கள் இல்லத்திற்குள்ளேயே இருக்க வேண்டும்; மீறுபவர்கள் மாறுகால் மாறுகை வாங்கப்படுவார்கள். அத்துடன் நிற்காது தேர்ந்தெடுத்த வீரர்களுடன் மூவேந்தன் ஒரு பக்கமும், திருவரங்கன் மற்றொரு பக்கமும் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் சென்று சோதனையிட வேண்டும். இது சற்றுக் கசப்பான விஷயம்தான். என்ன செய்வது? புரையோடிவிட்ட நோயை இந்தவித மருந்தின் மூலம்தான் குணப்படுத்த வேண்டியிருக்கிறது. ஐயத்துக்குரியவர்கள் யாராயிருந்தாலும் அவர்களின் கண்கள் பிடுங்கப்படும். அவசியமானால் மரணதண்டனை கூட தரப்பட வேண்டும். அவ்விதம் தண்டனை தரப்பட்டவர்களின் உடல்கள் மக்கள் நடமாடும் இடத்தில், பார்வைக்கு வைக்கப்படும்! மேற்கூறிய யோசனைகளில் மாற்றம் செய்ய வேண்டும் என்று நீங்கள் கருதினால் உடனே தெரிவிக்கலாம்" என் தன் பேச்சை நிறுத்தி அனைவரையும் பார்க்கலானான் இராசேந்திரன்.

எந்த மாற்றமும் தேவை இல்லை என்று அனைவரும் கூறினர்.

எடுத்த முடிவை மக்களுக்குப் பறையறிவித்து உணவுப் பொருள் வாங்க மட்டும் அவகாசம் தந்து ஊரடங்குச் சட்டத்தை அமுலாக்கும்படி அனைவருக்கும் கட்டளையிட்டான் இராசேந்திரன்.

அடுத்துக் கோட்டையைக் காவல் செய்யும் யவன வீரர்களுக்குப் பதில், சோழ நாட்டிலிருந்து வந்திருக்கும் புரவி வீரர்களை நிறுத்த வேண்டும் என்ற அவனின் யோசனையை மூவேந்தன் எதிர்த்தான்.

"வழிவழியாக அவர்கள் காவல் புரிகின்றார்கள். கோட்டையின் இரகசிய வழிகள், பொறிகளை இயக்கும் முறைகள் இவைகளில் யவனர்கள் தேர்ச்சி பெற்றவர்கள். தற்சமயம் இவர்களை மாற்றி, சோழ வீரர்களை அங்கே நிறுத்தினால், திடீரென பகைவர்கள் தாக்குதல் தொடுத்தால் அதைச் சமாளிக்க முடியாமல் போய்விடும்!" என்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“யவனர்கள் காவலுக்குச் சிறந்தவர்கள் என்ற கருத்தை நான் மறுக்கவில்லை. ஆனால் அதே சமயம் சோழ வீரர்களின் திறமையைக் குறைத்து மதிப்பிடும் மூவேந்தன் கூற்றை ஏற்கும் நிலையில் நான் இல்லை. கங்காபுரிக் கோட்டையையும், தஞ்சைக் கோட்டையையும் தற்சமயம் சிறப்பாகக் காவல் புரிபவர்கள் சோழ வீரர்கள்தான். வேண்டுமென்றால் மதுரைக் கோட்டை அவர்களுக்குப் பழக்கமில்லாத ஒன்று என்று கூறட்டும். நான் ஏற்றுக் கொள்கிறேன்! அதைவிடுத்து, வேறு மாதிரி கூறுவதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. இருந்தாலும் மூவேந்தன் வார்த்தைகளை மனதில் வைத்து மதுரைக் கோட்டையைக் காக்கும் யவன வீரர்களில் சரிபாதிக்கு நம் சோழ வீரர்களை நிறுத்தலாம் என்று என் கருத்தில் மாற்றம் செய்கின்றேன். இதற்கு மூவேந்தன் கருத்து என்ன?” என்று அவன் பக்கம் திரும்பினான் இராசேந்திரன்.

அவன் சம்மதிக்க, எடுக்கப்பட்ட முடிவுகளை உடனே அமுலாக்கும்படிக் கூறினான்.

அடுத்த சில நொடிகளில், மதுராநகர் விதிகளில் பறை முழக்கம் கேட்டது.

திடீரென ஊரடங்கு அமுலாக்கியதைப் பற்றி வியப்பும், திகைப்பும் பெற்ற மக்கள், தெருக்களில் புரவிவீரர்கள் நடமாட்டம் அதிகரிப்பதையுணர்ந்து, அங்காடிகளில் தங்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்வதற்காகப் போட்டி போட்டனர்.

ஒரு நாழிகை கடந்தது. விதிகள் யாவும் வெறிச்சோடின. புரவி வீரர்கள் நடமாட்டம் மட்டும் தெருக்களில் அதிகரித்தபடியிருந்தது.

மூவேந்தன் தலைமையில் ஐம்பது வீரர்கள் கிழக்கு மாடவிதியைச் சோதனையிடுவதற்காக அரண்மனையிலிருந்து வெளிவந்தனர்.

அந்தத் தெருவின் முக்கிய நபர் வீட்டிற்குச் சென்ற மூவேந்தன், சோதனையிடுவதற்கு அவரைக்கூட அழைத்துக் கொண்டான்.

முதல் வீட்டின் கதவு தட்டப்பட்டது. உள்ளே இரு பெண்மணிகள் மட்டும் இருந்தார்கள். “என்ன வேண்டும்?” என்று பெருங்கதவின் நடுவிலிருந்த பார்க்கும் வழியின் மூலம் அவர்கள் கேட்க...

“அரச உத்தரவுப்படி உங்கள் இல்லத்தைச் சோதனையிட வேண்டும்!” என்றான் வீரர்களில் ஒருவன்.

“வீட்டில் யாரும் ஆண்மக்கள் இல்லை. வணிகத்திற்காக சாவகம் சென்றுவிட்டனர்” என்றாள் மங்கையரில் ஒருத்தி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அத்தெருவின் நபர் முன்னே வந்து, “வேந்தரின் கட்டளை! தாழை நீக்கி வழிவிட்டு விடுங்கள். ஒப்புக்கு உள்ளே போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடட்டும்!” என்றார்.

கதவு திறக்கப்பட்டது.

ஐந்து வீரர்கள் உள்ளே புகுந்தனர். கூடம், பெருங் கூடம், தாழ்வாரம், பொக்கிஷ அறை, சமைக்கும் இடம், பூசை அறை முதலியவற்றைப் பார்வையிட்டுப் பின்னாலிருந்த தோட்டத்திற்குள் நுழைந்தனர்.

இந்தச் சமயத்தில் வைகை ஆற்றின் கரைக்குச் சற்றுத் தள்ளியிருந்த சிறிய காட்டுப் பகுதியின் நடுவிலுள்ள பாழடைந்த சிவன் கோவிலை இங்கே குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

அந்த கோவில், பாண்டியர் ஆட்சி செய்யும் காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாக இருந்தது. பாண்டிய மன்னன் ஒருவனுக்கு மதுரைச் சொக்கநாதர் அங்கு தரிசனம் தந்ததாக ஒரு ஐதீகம். சோழருக்கும், பாண்டியருக்கும் நடந்த போரில், கோவிலைச் சுற்றியுள்ள நகரம் அழிக்கப்பட்டுவிட, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சோழப் பிரதிநிதிகள், சிவன் கோவிலைக் கவனிக்காமல் விட்டுவிட்டனர்.

நாளடைவில் ஆலயத்தைச் சுற்றி மரம், செடி கொடிகள் மண்டி, பெரிய காடு போல் ஆகிவிட்டது. அதனால் மக்கள் நடமாட்டம் குறைந்துவிட, தற்போது யாரும் அப்பகுதிக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டனர்.

பாண்டிய வேந்தர்கள் காலத்தில் கோவிலுக்கும் கோட்டைக்கும் செல்ல சுரங்கவழி ஒன்று இருந்தது.

அவ்வழியாகப் பாண்டிய அரசர்கள் சிவனை வழிபட்டு வந்தனர். பின்னால் வந்த சோழ அரசுப்பிரதிநிதிகளுக்கும், அவர்களின் அதிகாரிகளுக்கும் இந்த வழி தெரியாதாகையால் உபயோகப்படுத்தப்படாமல் அது மூடியே கிடந்தது.

பாண்டிய ஒற்றர் தலைவனான தூமகேது, கோட்டைக்கு இரகசியமாய்ச் செல்ல அதைப் பயன்படுத்திக் கொண்டான். சுரங்க வழி நேராய் அரண்மனை நந்தவனத்தின் நடுவிலிருந்த விநாயகர் ஆலயத்தில் போய் முடிவடைந்தது.

அங்கே செல்லும் தூமகேது நந்தவனத்தைக் காக்கும் ஊழியனுக்குக் கையூட்டுக் கொடுத்து, வடக்கு மாடவீதியிலுள்ள வீடுகளின் பின்புறத் தோட்டப் பகுதியை அடைந்துவிடுவான். அந்தத் தெருவிலுள்ளவர்கள் அனைவரும் பெரும் வணிகர்கள். அவர்கள் வழிவழியாக மதுரையில் வசிப்பவர்கள். அத்தோடு பாண்டியர்களுக்கு விசுவாசமாய் இருப்பவர்களும்கூட. அதைப் பயன்படுத்தி அவனும், அவனுடைய



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் அங்கே மறைந்து கொண்டு நகரில் குழப்பத்தை ஏற்படுத்தி வந்தனர்.

தூமகேதுவும், அவனுடன் வந்த இருபது ஆட்களும் மதுரை நகரிலேயே பெரும் செல்வந்தனான வைசிய குலத்தைச் சேர்ந்த தனபாலன் இல்லத்தில் தற்சமயம் ஒளிந்து கொண்டு இருந்தனர்.

கிழக்கு மாடவீதியில் சோழ வீரர்கள் சோதனையிடும் செய்தி அவன் காதிற்கு எட்டியது. அடுத்து என்ன செய்வது என்று சிந்தித்தான்.

வீட்டிற்குள் இருந்தால் எப்படியும் சோழநாய்கள் மோப்பம் பிடித்துவிடுவர் என்பதால், இல்லத்தையட்டியிருந்த கிணற்றுக்குள் ஒளிந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து, அனைவரும் அதில் இறங்கிக் கொண்டனர்.

ஒவ்வொருவரும் மூச்சடக்குவதில் சிறந்தவர்களாயிருந்ததால், சோழ வீரர்கள் கிணற்றைப் பார்வையிட வரும் போது, நீருக்குள் அமிழ்ந்து கொள்ள வேண்டும் என்பது அவனது திட்டம்.

கிழக்கு மாடவீதி முடிந்து, வடக்கு மாடவீதிக்குள் நுழைந்த மூவேந்தன் தனபாலன் இல்லம் முன்வந்து நின்றான்.

இல்லச் சொந்தக்காரருக்கு, இதயம் ‘தட் தட்’ என்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. ஏனென்றால், இராஜத்துரோகம் என்று குற்றம் சாட்டி மரணதண்டனை தந்துவிடலாம் அல்லவா? அதனால், சோழ வீரர்களிடம் சிக்காமலிருந்தால் சொக்கநாதருக்கு நூற்றி எட்டு குடங்களில் பாலாபிஷேகம் செய்வதாக அப்போது வேண்டிக் கொண்டான். பிறகு...

தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது! இனிமேல் சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன என்ற உறுதியுடன் மூவேந்தனை, புன்முறுவலுடன் “வாருங்கள்” என்று அழைத்தான். மனம் மட்டும் ‘பட பட’வென்று அடித்துக் கொள்ளத்தான் செய்தது.

வேலைக்காரனைக் கூப்பிட்டு அனைவருக்கும் இருக்கை போடும்படிக் கட்டளையிட்டான்.

“வேண்டாம்! எங்களுக்குத் தலைக்கு மேல் வேலை இருக்கிறது. காரியத்தை முடித்துக் கொண்டு போய்விடுகிறோம்!” என்றான் மூவேந்தன்.

“இல்லை... இல்லை... உங்களைக் கௌரவிப்பது என் கடமை!” என்ற தனபாலன், அனைவருக்கும் பழரசத்தை வரவழைத்துத் தந்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“கொஞ்சம் என்னுடன் கூட வந்து மற்ற வீடுகளைச் சோதனையிட உதவி புரிய வேண்டும்” என்று தனபாலனிடம் மூவேந்தன் கேட்க...

“அதற்கென்ன ஆகட்டும்!” என்று தலையை ஆட்டினான். உள்ளிருக்கும் எல்லா அறைகளையும் சோதனையிட்டு, “யாரும் ஒளியவில்லை!” என்று வீரர்கள் அறிவித்தனர். தோட்டத்தைச் சோதனையிட இரு வீரர்கள் கூரிய வேலுடன் போவதற்குப் புறப்பட்டனர்.

“எல்லாம் பார்த்தாகிவிட்டதே! இன்னும் என்ன தாமதம்? இவரெல்லாம் அரசுக்கு விசுவாசமானவர்தான்! வாங்கப்பா போகலாம்!” என்ற மூவேந்தனிடம், “தோட்டம் பாக்கியிருக்கிறது!” என்றான் வேல்வீரர்களில் ஒருவன்.

இருக்கையிலிருந்து எழுந்த மூவேந்தன், “அங்கே பூதம் கீதம் எதுவும் இல்லை. சீக்கிரம் பார்த்துவிட்டு வாருங்கள்!” என்று புன்சிரிப்புடன் தனபாலனைப் பார்த்தவாறு கூறினான்.

வேல்வீரர்கள் இருவரும் தோட்டத்திற்குச் சென்றனர்.

காலடிச் சப்தத்தைக் கேட்டு, தூமகேதுவும், மற்றவர்களும் நீருக்குள் அமிழ்ந்து மூச்சையடக்கிக் கொண்டனர்.

மரங்கள் இருந்த பகுதிப் பக்கம் சென்று, சோதனையிடலாம் என்று நினைத்து இருந்த வேல்வீரன் செவிகளில், அத்தனை பேரும் மொத்தமாகக் கிணற்றுக்குள் அமிழ்ந்ததால் ஏற்பட்ட சலசலப்புச் சத்தம் விழுந்தது.

திடுக்கிட்ட அவ்வீரன்...

“கேணிக்குள் சப்தம் கேட்கிறது!” என்றான் பரபரப்போடு.

வேறுபக்கம் பார்வையைச் செலுத்தி, ஆராய்ந்தபடியிருந்த மற்றொரு வீரன், “அப்படியா?” என்று ஓடிவர...

இருவரும் கிணற்றுப் பக்கம் சென்றனர். வெற்று கிணறுதான் அப்போது தெரிந்தது.

சப்தம் கேட்ட வீரன், “வியப்பாக இருக்கிறதே! சலசலவென்று ஓசை என் காதில் விழுந்ததே!” என்று வேகமாய்ப் படிகளில் இறங்கி நீர்மட்டம் சென்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

மேலே நின்று கொண்டிருந்த வீரன், “ஏதாவது பூச்சி பொட்டு ஓடியிருக்கும் வா. திரும்பிப் போகலாம்!” என்றான் அவசரத்துடன்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இல்லை. ஆட்கள் மறைந்து கொள்வது போன்ற சப்தம் கேட்டது” என்று அடித்துக் கூறிய வீரன், படிகளின் அடிப்பாகத்தைச் சுற்றி ஏதாவது போறைபோல் வழியிருக்கிறதா என்று கூர்ந்து கவனிக்கலானான்.

மேலேயிருந்த வீரன் சலிப்படைந்தான்.

“என்னப்பா அப்படிப் பார்க்கிறாய்? நீ பார்க்கிற வேகத்தைப் பார்த்தால் கிணற்றுக்குள் மூழ்கிக்கூட ஆட்களைத் தேடுவாய் போலிருக்கிறதே!” என்றான் கேலியாக.

அதற்குத் தயாரானாற் போல, அவன் வேலின் கூர்ப் பகுதியை நீரில்விட்டு இப்படியும் அப்படியும் ஆட்டிப் பார்த்தான்.

ஏறக்குறைய நீர்மட்டத்திற்கும், கிணற்றின் தரைப் பகுதிக்கும் பத்து ஆள் ஆழத்திற்கு மேல் இடைவெளியிருந்ததால், வேலின் கூறிய முனை நீரில் ‘பொளக்’ என்று சப்தத்தை மட்டுமே எழுப்பியது.

மூவேந்தன் சீக்கிரம் வரும்படி கோபத்துடன் இவர்களை அழைக்க, “கூப்பிடுகிறார் தலைவர்! நீ பார்த்தது போதும், மேலே ஏறி வா!” என்று மேலிருந்தவன் சலிப்புடன் கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

தனி ஒருவனாய் இன்னும் அங்கேயே நின்று கொண்டு நீர்மட்டத்தையும், மற்றப் பகுதிகளையும் நோட்டம்விட்டு திருப்தியில்லாமல், படிகளில் ஏறி மேலே வெளியே வந்தான் வேல்வீரன்.

“என்னப்பா அங்கே பண்ணிக் கொண்டிருந்தாய்?” என்று மூவேந்தன் எரிச்சலுடன் அவனை அதட்ட பக்கத்திலிருந்த வீரன், “கிணற்றுக்குள் பாண்டியப் பகைவர்களைத் தேடுகிறான்” என்றான் கேலியாக.

“எமகாதகனப்பா நீ! ஆட்களைத் தரையில் தேடாமல் நீரில் தேட ஆரம்பித்துவிட்டாய். உண்மையிலேயே உன்னைப் பாராட்டத்தான் வேண்டும்” என்று மூவேந்தன் சிரித்துக் கொண்டே கூற, அதைக் கேட்ட மற்றவர்களும் ‘கொல்’ என்று சிரித்துவிட்டனர்.

கிணற்றுக்குள் அவன் இறங்கினதைப் பார்த்த தனபாலன், ‘கண்டுபிடித்துவிடப் போகிறான்! நம் உயிர் அவ்வளவுதான்’ என்று மனம் படபடக்க, கை கால்கள் நடுங்கியபடியிருந்தவன், ‘கொல்’ என்ற சிரிப்புச் சத்தம் எழுந்ததும், உயிர் வந்தது போல, அவனும் பெருமூச்சுவிட்டு, அவர்களுடன் சேர்ந்து கொண்டு சிரிக்கலானான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“நல்ல வேடிக்கைதான்!” என்று மூவேந்தன் தனபாலனிடம் விடைபெற்றுக் கொண்டு, “சீக்கிரம் புறப்படுங்கள்!” என்று வீரர்களுக்குக் கட்டளையிட்டு வீதியில் இறங்கினான்.

அவர்களுடன் தெரு வரை போய்விட்டுத் திரும்பிய தனபாலன் கிணற்றருகில் சென்று “ஆபத்து நீங்கிவிட்டது!” என்று கூறினான்.

நீரிலிருந்து வெளியே வந்து படிகளில் உட்கார்ந்திருந்த அத்தனை பேரும் வெளி வந்தனர்.

“இனிமேல் நீங்கள் இங்கேயிருப்பது எனக்கு ஆபத்தைத்தான் விளைவிக்கும். அதனால் கெடுபிடி குறையும் வரை, வேறு எங்கேயாவது போய் மறைந்து கொள்ளுங்கள்” என்றான் தனபாலன்.

“இருட்டிவிட்டதும் போய்விடுகிறோம். நீங்கள் கவலைப்பட வேண்டாம்” என்று அதற்குப் பதில் கூறிய தூமகேது,

“இதுவரை இடம் கொடுத்து உதவி செய்த உங்களுக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டிருக்கின்றோம்” என்றான் உணர்ச்சிவயப்பட்டு.

இருட்டு...

செல்வந்தர் தனபாலிடம் சொல்லிக் கொண்டு, வீட்டின் பின்பகுதியிலிருந்த சந்தில் வந்து நின்றான் தூமகேது.

அச்சமயம் தூரத்தில் புரவிகள் செல்லும் சப்தம் கேட்டது.

“காவல் செய்கிறவர்கள் நகரை வலம் வருகின்றனர். எச்சரிக்கையுடனிருங்கள்!” என்று தன் தோழர்களிடம் கூறிய தூமகேது மறைந்தபடி அரண்மனை நந்தவனத்தின் பின் பகுதிக்குப் போய்ச் சேர்ந்தான். ஏற்கனவே நந்தவனத்தைக் காப்போனுக்கு அவன் வருகையைத் தெரிவித்திருந்ததால், தாழ் போடாமல் வெறும் கதவு மட்டும் மூடி அடைத்திருந்தான்.

கதவின் மேல் கைவைத்து அழுத்தினான். திறந்து கொண்டது. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அவனுடன் எல்லோரும் நந்தவனத்திற்குள் நுழைந்தனர்.

மகிழமரத்தடியில் தீவட்டி ஒன்று இவர்களை நோக்கி வர, யாரோ எதுவோ என பூச்செடிகளின் பின் ஒளிந்து கொண்டனர்.

வரவர, தீப்பந்த வெளிச்சத்தில் அதைப் பிடித்துக் கொண்டு வந்தவன் நந்தவனத்தைக் காப்பவன் என்று அறிந்த தூமகேது வெளியே வந்து அவனருகில் சென்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இனிமேல் நீங்கள் இந்த வழியில் வர வேண்டாம். ஏனென்றால் நாளையிலிருந்து வேறு ஆளைக் காவலுக்குப் போடப் போகின்றார்கள்” என்றான் நந்தவனம் காப்போன்.

தூமகேதுவுக்குத் தூக்கிவாரிப் போடத்தான் செய்தது. இருந்தாலும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, பத்து பொற்காசுகளைக் கொடுத்து, அவனிடமிருந்த தீவட்டியை வாங்கிக் கொண்டான்.

நந்தவனத்தின் நடுநாயகமாயிருந்த விநாயகர் கோவிலுக்குள் தோழர்களுடன் நுழைந்தான். சற்று நேரத்தில் விநாயகர் பீடத்துடன் நகர்ந்தார். ஆள் நுழையுமளவிற்குத் தரையில் வழி தோன்றியது. இரவு நேரமாக இருந்ததால் அவ்வழி தெளிவாகத் தெரியவில்லை. தட்டுத் தடுமாறி தூமகேது தீப்பந்தத்துடன் முதலில் இறங்கினான். பின்னல் அவனுடன் வந்தவர்கள் இறங்க, தீப்பந்தத்தைக் காண்பித்தபடி தூமகேது வழிகாட்டிக் கொண்டே முன்னால் செல்லலானான்.

பள்ளம் மேடுமாக அது சீரில்லாமல் இருந்தது. ஒரு இடத்தில் ஈரமாய் ஆங்காங்கே நீர் கசிந்து கொண்டிருந்தது.

“பார்த்து வாருங்கள்! வழுக்கப் போகிறது; இந்த இடத்துக்கு நேர்மேலே அகழி இருக்கிறது!” என்றான் தூமகேது.

‘வழுவழு’ என்றிருந்த அப்பகுதியில் ஜாக்கிரதையுடன் கால் வைத்து அவன் செல்லும் போது, பின்னால் வந்தவர்களில் ஒருவன், “என்ன பெரிய வழுக்கல்?” என்று அனாவசியமாய்க் கால் வைக்க, ‘தொபீர்!’ என்று கீழே விழுந்து, “ஐயோ!” என இடுப்பைப் பார்த்துக் கொண்டான்.

முன்னால் சென்று கொண்டிருந்த தூமகேது, “என்ன சப்தம் அங்கே?” என்று நின்று சற்று அச்சத்துடன் வினவ...

விழுந்துவிட்ட அவனை மற்றவர்கள் கைகொடுத்துத் தூக்கிவிட்டார்கள்.

“அதனால்தான் எச்சரித்தேன். இனிமேலாவது பார்த்து வாருங்கள்!” என்று தீப்பந்தத்தை உயர்த்தி, தூமகேது முன்னால் நடக்கலானான்.

பாழடைந்திருந்த சிவன் கோவில் லிங்கம் அந்த இருட்டில் ‘கிரீச்‘ என்ற சப்தத்துடன் விலகியது.

சற்று நேரத்திற்கெல்லாம் கோவிலுக்கு முன்னாலிருந்த அரசமரத்தின் முன் அனைவரும் குழுமினர்.

தீப்பந்தத்தை ஒருவன் உயரத் தூக்கிப்பிடிக்க, அனைவரையும் ஒருமுறை பார்த்துவிட்டுத் “தோழர்களே!” என்று தன் பேச்சைத் துவக்கினான் தூமகேது.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இருபத்தோரு பேராக நாம் கோட்டைக்குள் நுழைந்தோம். இப்பொழுது இருவர் குறைந்து பத்தொன்பது பேராக ஆகிவிட்டோம். பாகன் வேடத்திலிருந்த நம் இரு தோழர்களும், சோழ ஓநாய்களின் கையில் சிக்கிக் கொண்டு, இந்நேரம் அவர்களின் உயிர் பறி போயிருக்கலாம். பகைவன் திடீரென ஊரடங்கை அமுலாக்குவான் என்று நாம் நினைக்கவேயில்லை. இப்படி முன்கூட்டியே செய்வான் என்று தெரிந்திருந்தால், வேறு முறையில் திட்டத்தைத் தீட்டியிருக்கலாம். யானைகள் முழுமையும் நகரெங்கும் அவிழ்த்துவிடப்பட்டு மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டும் என்று நாம் செய்திருந்த முடிவு தோல்வியடைந்துவிட்டது.

“நம் நடமாட்டங்கள் அனைத்துமே பகை ஒற்றர்களுக்குத் தெரிந்துவிட்டதால்தான், அப்படி ஒரு தோல்வியைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். ஒரு ஆறுதல்... பகை ஒற்றன் ஒருவன் உயிரை நம் நச்சுக்கத்தி குடித்துவிட்டது. ஆனால் அதற்குப் பதிலாக நம்மவர்களில் இருவர்... அவர்களிடம் சிக்கிக் கொண்டுவிட்டனர்.

“அதற்குப் பதிலடி கொடுப்பது போல், சோழ ஓநாய்களின் தலைகள் தரையில் உருள வேண்டும்! அதற்கு என்னருமைத் தோழர்களே, நீங்கள் தயாராக வேண்டும். இனிமேல் நாம் நினைப்பது போல் கோட்டைக்குள் செல்ல முடியாது. காரணம்... நமக்கு உதவி செய்து வந்த நந்தவனம் காப்போனை வேறு இடத்துக்கு மாற்றிவிட்டார்கள். அதனால் மாறுவேடத்தில்தான் இனி கோட்டைக்குள் பிரவேசிக்க முடியும். செய்... அல்லது செத்து மடி! என்பது நம் அரசனின் தாரக மந்திரம்! அடிமை விலங்குடன், கண்ணீரும் கம்பலையுமாயிருக்கும் பாண்டிய அன்னையை மீட்கும் வரை நம் போராட்டம் நிற்கப் போவதில்லை!” என்று பேச்சை நிறுத்திய தூமகேது, “பாண்டிய சக்கரவர்த்தி சடையவர்ம சீவல்லபர்!” என்று உரக்கக் கூறினான். சுற்றியிருந்தவர்கள் “வாழ்க! வாழ்க!” என்று முழங்கினர்.

அந்த இரவில் வேகமாய் ஒலித்த வாழ்த்து முழக்கம் அப்பகுதியெங்கும் பரவியது. கோட்டையிலிருந்து வீசிய காற்றால், மதுரா நகரெங்கும் அது எதிரொலிக்க முடியாமல் அந்தப் பகுதியிலேயே மெள்ள அடங்கிவிட்டது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 22

**பா**தாள அறை...

அரண்மனையின் நடுவில் மிகவும் பாதுகாப்புடன் இருந்த அந்தப் பகுதிக்குச் செல்ல, நிலாமுற்றத்தினருகிலிருக்கும் படிக்கட்டுகளில் சென்று, வலப்பக்கம் திரும்ப வேண்டும். அங்கிருந்து சுரங்கம் போன்று பூமிக்கு அடியில் சென்று கொண்டிருந்த படிகளில் இறங்கினால், மேலே இருப்பது போல், கூடம் போன்ற அமைப்பு கீழேயும் இருக்கும். அதன் நடுவே பெரிய இரும்புக் கதவுகள் கொண்டு மூடப்பட்டிருந்த அந்த இடத்தைத் தாண்டினால், இருபுறமும் சிறு சிறு அறைகள் இருக்கும். அவைகளில்தான் பயங்கர குற்றம் புரிந்த குற்றவாளிகளை அடைத்து வைத்திருந்தார்கள்.

பாதாளச் சிறையிலிருந்து அவ்வளவு சீக்கிரம் ஒருவர் தப்பி வெளியேறுவது என்பது முடியாத காரியம்! திரும்பித் திரும்பி, வளைந்து வளைந்து இருக்கும் படிக்கட்டுகள் முடியும் ஒவ்வொரு இடத்திலும், வேல் வீரர்கள் இருவர் காவல் காத்து நிற்கின்றனர்.

அத்துடன் நில்லாது, இருபது வீரர்களுக்கு மேல் உருவிய வாளுடன், அப்பகுதியை அடிக்கடி வலம் வந்து கொண்டிருந்தனர். அத்தனைப் பாதுகாப்புடனிருக்கும் பாதாளச்சிறையில் ஒருவர் சிறை வைக்கப்பட்டால், அவரின் முடிவு காலம் நெருங்கிவிட்டது என்றுதான் கொள்ள வேண்டும். பொய்ப்பாகர் வேடத்தில் கலகம் செய்ய வந்த பாண்டியர் இருவரும் இங்கேதான் அடைக்கப்பட்டிருந்தனர்.

மதுரையின் தற்காலிக அரசப்பிரதிநிதியாகப் பதவி ஏற்றுள்ள இராசேந்திரன், திருவரங்கனுடன் அங்கே சென்றான்.

பாதாளச்சிறையின் தலைமைக் காவலன் இரும்புக் கதவைத் திறந்து அவர்களை வரவேற்றான்.

“அவர்களைப் பற்றி ஏதாவது தெரிந்ததா?” என்று இராசேந்திரன் கேட்டான் உள்ளே நுழைந்தபடி.

“கொடுமையின் எல்லைக் கோட்டுக்கே சென்று துன்புறுத்திவிட்டோம். அவர்களிடமிருந்து எதையும் வரவழைக்க முடியவில்லை” என்றான் சிறைத்தலைவன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு.

“சரி, பார்க்கலாம்.” என்று சிறை வைக்கப்பட்டிருந்த அறை முன் தலைவனுடன் சென்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

காவல் வீரன் இரும்புக்கதவைத் திறந்துவிட, உள்ளே திருவரங்கனுடன் சென்றான் இராசேந்திரன்.

உத்தரத்தில் தொங்கிய இரு சங்கிலிகளைப் பின்பக்கமாக மடித்து, இருவரையும் பிணைக்கப்பட்டிருந்தது. அவர்கள் கை அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்க, கால்கள் இரண்டும் முன்பக்கமாய் இழுத்துத் தரையில் கட்டப்பட்டிருந்தது.

இது ஒன்றே போதும் அவர்களுக்கு!

ஆனால்...

அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. உடலெங்கும் இரத்தக் காயங்கள். ஒருவனுக்கு முன் பல் இரண்டும் உடைந்து உதடுகள் வீங்கிப் போயிருந்தன. இன்னொருவனுக்கு வலக்கண் புருவத்தில் வெட்டுக்காயம் ஏற்பட்டு, அதிலிருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது.

செய்தியை வரவழைப்பதற்கு நிரம்பத்தான் துன்புறுத்திவிட்டார்கள். இருந்தாலும் ஒன்றுமே இவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள முடியவில்லையே!

பாதாளச் சிறைக்காவல் தலைவனைக் கூப்பிட்டுக் கைகளையும் கால்களையும், அவிழ்த்து விடுவிக்கும்படி கூறினான் இராசேந்திரன்.

கைதியை அம்மாதிரி செய்யும் வழக்கம் இல்லையே! என்று பொருள்படும் விதத்தில் சிறைத்தலைவன் இவனைக் கவனிக்க...

“பரவாயில்லை. இவ்வளவு கட்டுக் காவலையும் மீறி இவன் ஓடிவிடமாட்டான். நாமும் மனிதர்கள்தான். ஒருவனைத் துன்புறுத்துவதற்கு அளவு என்று ஒன்று இல்லையா?” என்றான் இராசேந்திரன்.

சங்கிலிகளை அவிழ்த்து, இருவரையும் பிணைப்பிலிருந்து விடுவித்தனர்.

நிற்க முடியாமல் அவர்களின் கால்கள் நடுங்கின. கைகள் அசைக்க முடியாமல் மரத்துப் போயிருந்தன.

உட்காரும்படி இருவரையும் பார்த்துக் கூறினான் இராசேந்திரன்.

ஆனால், கீழே உட்கார முடியாமல் மிகவும் சங்கடப்பட்டனர்.

குடிப்பதற்கு தண்ணீர் தரும்படி காவல்தலைவனுக்குக் கட்டளையிட்டான்.

மட்பாண்டத்தில் குளிர்ந்த நீர் கொண்டு வரப்பட்டது.

சிறைத்தலைவனிடமிருந்து அதை வாங்கி, கை, கால், முகம் ஆகியவற்றைக் கழுவிக் கொண்டு, “அப்பாடா!” என்று இருவரும் பெருமூச்சுவிட்டனர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சற்று நேரம் சென்றதும், இராசேந்திரன் அவர்கள் அருகில் சென்றான். "உங்களைத் துன்புறுத்த வேண்டாம் என்று இவர்களுக்குக் கட்டளையிட்டுவிடுகிறேன். இனிமேல் உங்கள் உயிருக்கு எந்தவித ஆபத்தும் இருக்காது. நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? உங்களை ஏவிவிட்டவர் யார்? எதற்காக யானைகளை அவிழ்த்து மக்கள் நடமாட்டமுள்ள பகுதியில்விட்டுக் குழப்பம் ஏற்படுத்த முனைந்தீர்கள்? இதையெல்லாம் தெரிவித்துவிட்டால் உங்கள் இருவரையும் மன்னித்து விடுதலை செய்துவிடுகின்றேன்!" என்றான் மிகவும் கனிவாக.

அன்புடன் நடந்து தங்களிடமிருந்து செய்தியை வாங்க முயற்சிக்கின்றான் என்பதைப் புரிந்து கொண்ட இருவரும், "மன்னித்துக் கொள்ளுங்கள்; நாங்கள் சொல்ல முடியாத நிலையில் இருக்கின்றோம்" என்றனர்.

இராசேந்திரன் அதைக் கேட்டு முறுவலித்தான்.

"என்னைப் பகைவன் என்று எண்ண வேண்டாம். உங்களுக்கு உதவி புரிய வந்த நண்பன் என்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

தலை குனிந்தபடியிருந்த இருவரில் ஒருவன் நிமிர்ந்தான். அவன் கண்கள் இராசேந்திரன் மேல் ஆழமாய்ப் பதிந்தன.

"நீங்கள் என்ன கூறினாலும் எங்களின் பதில் இதுதான். அது..." என்று நிறுத்தி திரும்பவும் தலைகுனிந்தவாறு, "சொல்ல முடியாத நிலையில் இருக்கின்றோம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்றான்.

"என்ன திமிர்!" என்று கோபமுற்ற சிறைத்தலைவன் அடிப்பதற்காகக் கைகளை ஓங்கியபடி அவர்கள் மேல் பாய்ந்தான். இராசேந்திரன் அவனைத் தடுத்து, "ஆத்திரப்படுவதால் எந்தப் பயனும் கிடைத்துவிடாது. கொஞ்சம் அமைதியுடன் இரு!" என்று கூறி, "நீங்கள் சொன்ன இப்பதில் எனக்குத் தேவைப்படாத ஒன்று. இருந்தாலும் நான் கோபப்படாமல் கேட்க விரும்புகின்றேன். உங்கள் பெயர்தான் என்ன?" என்றான்.

இருவரும் ஒருவரையருவர் பார்த்துக் கொண்டனர். சொல்வதா? வேண்டாமா? என்பது போல சில நொடிகள் மௌனமாயிருந்துவிட்டு, "ஐயா, தயவு செய்து உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறோம். எங்களைப் பற்றி எதுவும் கேட்க வேண்டாம்" என்று உறுதியான குரலில் கூறினார்கள்.

அவர்களின் கட்டுக்கோப்பான உறுதியைக் கண்டு வியந்த இராசேந்திரன், "பெயரைச் சொல்வதால் எந்தவிதத் தவறும் இல்லையென்று எனக்குப்படுகிறது. அதனால்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

உங்கள் இரகசியங்கள் எங்களுக்குத் தெரியவும் போவதில்லை. எனவே பெயரைச் சொல்வீர்கள் என்று நம்புகின்றேன்!" என்று புன்முறுவலுடனே கூறினான்.

"மன்னிக்கவும், உங்கள் நம்பிக்கையை நாங்கள் நிறைவேற்ற முடியாத நிலையிலிருக்கிறோம்" என்று உறுதியுடன் கூறினான் இருவரில் ஒருவன்.

அதைக் கேட்ட இராசேந்திரன் சினம் கொண்டான். அதை அடக்குவதன் அடையாளமாக உதட்டை மெல்லக் கடித்துக் கொண்டு...

"இத்தனை உறுதியுடன் இருக்கும் உங்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்" என்றான்.

"நன்றி!" என்று அவர்களில் ஒருவன் முறுவலுடன்.

"நன்றி சொன்னது பற்றி எனக்கு மகிழ்ச்சிதான்! இருந்தாலும் உங்கள் பெயரை நான் தெரிந்து கொள்வதில் எந்தவிதப் பாதகமும் ஏற்படாது என்றே நினைக்கின்றேன்!" என்றான் இராசேந்திரன் திரும்பவும்.

"ஐயா, திருப்பித் திருப்பிக் கேட்டாலும், எங்கள் பெயரைச் சொல்வதற்கில்லை. அப்படிக் கூறினால் எங்கள் தலைவருக்கு நாங்கள் துரோகம் செய்தவர்கள் ஆவோம். அதனால் தயவு செய்து எங்களை எதுவும் கேட்க வேண்டாம்!" என்றனர் திட்டமான குரலில்.

இனிமேல் அவர்களிடம் எப்பதிலையும் வரவழைக்க முடியாது என்று அறிந்து கொண்ட இராசேந்திரன் சிறைத் தலைவன் பக்கம் திரும்பி, அவர்களுக்கு வயிறு நிறைய உணவு தரும்படி உத்தரவிட்டு வெளியே வந்தான்.

பின் தொடர்ந்த சிறைத்தலைவன், "நஞ்சு கலந்த உணவுதானே?" என்று கேட்க, "ஆமாம்!" என்று தலையாட்டிவிட்டுப் பாதாளச் சிறையின் படிகளைக் கடக்கலானான் இராசேந்திரன்.

## அத்தியாயம் - 23

**பா**ல் நிலவு இரவைப் பகலாக்கும் முயற்சியில் ஈடுபட்டு, ஓரளவு வெற்றியும் கண்டது போல், சோழகங்கம் ஏரியில் நல்ல வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

ஏரியின் கரையோரம் எந்தவித அசைவுமின்றி வான் முட்டும் அளவிற்கு, உயரத்துடனிருந்த மரங்களின் உச்சிகள் நிலவொளியில் பளிச்சிட்டாலும், அதன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அடிப்பாகத்தில் விழுந்த நிழலால் உண்டான இருட்டும், அதைத் தொடர்ந்து அங்கே நிலவிய அமைதியும் பார்ப்பவர்களுக்கு அச்சத்தைத்தான் ஊட்டிக் கொண்டிருந்தது.

அந்த அச்சத்தினூடே இலேசாய் வீசிய தென்றல் காற்று மனதிற்கு இதத்தைக் கொடுத்தாலும், அங்கே நிலவிய அச்சமான சூழலை, அவை அதிகரிப்பது போலவே இருந்தது.

ஆங்காங்கே சிதறிக் காணப்பட்ட இரைக்காக புதர்களிலிருந்து கீரிகள், அப்படியும் இப்படியுமாக ஓடிக் கொண்டிருந்தன.

மரங்களிலிருந்து பட்சிகள் சப்திக்கும் போதெல்லாம் அதற்கு எதிரிடையாக தூரத்திலிருந்து நரிகள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன.

இத்தனைத் தனிமைச் சூழலில் காணப்பட்ட அந்த ஏரியை ஒட்டியிருந்த மண்டபத்தில், கடார இளவரசி இரத்தினாதேவியும், சாமந்தனும் நீர்ப்பரப்பைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தனர்.

“நேரமாகிவிட்டது இளவரசி! இனிமேல் நாம் இங்கிருப்பது முறையல்ல! அரண்மனைக்குத் திரும்பிவிடலாம்!” என்றான் சாமந்தன்.

“கடாரத்தைவிட்டு வந்து இரு திங்கள் ஆகிவிட்டன. இன்னும் பகை முடிக்காமல் இருக்கின்றோம். அதற்குள் அவன் மதுரை போய்விட்டான்” என்றாள் சற்று எரிச்சலுடனே.

சாமந்தன் அதைக் கேட்டுப் பற்களைக் கடித்தான்.

“மதுரைக்கே சென்று அவனை மேல் உலகம் அனுப்பினால் என்ன?” அவளைத் திருப்பிக் கேட்டான். அந்தக் கேள்வியில் கடார இளவரசிக்குச் சிந்தனை எழுந்தது.

“நீ சொல்வதும் சரிதான். நாளையே சக்கரவர்த்தியிடம் மதுரைக்குப் போவதாகச் சொல்லிவிட்டு, பகைவன் இராசேந்திரனை தீர்த்துக் கட்ட வேண்டும்” என்றாள்.

“சபாஷ்! உங்கள் முடிவுக்கு என் வாழ்த்துக்கள்!” என்று ஒரு குரல் அவர்கள் பின்னாலிருந்து குறுக்கிட்டது.

இருவரும் திடுக்கிட்டு எழுந்து கொண்டனர். சாமந்தன் வாளை உருவிக் கொண்டான். இரத்தினாதேவி குறுவாளைக் கையிலெடுத்தாள்.

“இரண்டையும் உறையில் போடுங்கள். நான் உங்கள் சிநேகிதி!” என்று மண்டபத்தூணின் பின்னாலிருந்து, சாளுக்கிய நாட்டு அரசியான இராஜசுந்தரி வெளி வந்தாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவளை அந்த நேரத்தில் அங்கே எதிர்பார்க்கவில்லையாதலால், இருவரும் திகைத்து சிலையென நின்றனர் சில நொடிகள் வரை.

பின்பு...

இரத்தினாதேவி சமாளித்து இதழ்களில் புன்முறுவலைப் படரவிட்டு, “உங்களை நாங்கள் இங்கே எதிர்பார்க்கவில்லையே” என்றாள்.

“ஆமாம். நீங்கள் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள்தான். அதே போல் நானும் இந்த இடத்தில் உங்களை இப்போது எதிர்பார்க்கவில்லை!”

நம்மால் பேசப்பட்ட விஷயங்கள் அனைத்தும் இராஜசுந்தரிக்குத் தெரிந்துவிட்டது. ஒன்று இவளை நாம் தீர்த்துக் கட்ட வேண்டும். இல்லையென்றால் நம் இருவரையும் சதி செய்ததாகக் குற்றம்சாட்டி தூக்கிலிட்டுவிடுவார்கள். ஆனால்... என்று குழப்பத்துடனிருந்த சாமந்தனை நோக்கி, “நண்பரே!” என்றாள் இராஜசுந்தரி.

இவ்விதம் அவள் கூப்பிடுவதைக் கேட்ட இரத்தினாதேவி தன் விழிகளில் வியப்பைப் படரவிட்டு, அவளைப் பார்த்தாள்.

“நீங்கள் பேசின அனைத்துச் செய்திகளும் என்னால் கேட்கப்பட்டுவிட்டது என்பதை நான் மறுக்கவில்லை. அப்படிக் கேட்டுவிட்டதால் உங்களுக்கு எந்தவித ஆபத்தும் இந்த இராஜசுந்தரியால் ஏற்பட்டுவிடாது!” என்றாள் உறுதியாக.

அவள் குரலில் தொனித்த அழுத்தத்தைக் கேட்ட இருவருக்கும், சிறு நம்பிக்கை மனதில் தோன்றியது. இருந்தாலும் எந்த அளவிற்கு இவளை நம்பலாம் என்ற கேள்விக் குறியுடனே அவளைப் பார்த்தனர்.

“நீங்கள் என்ன பேசப் போகின்றீர்கள் என்பதை அறிவதற்காக உங்களை நான் இங்கே பின் தொடரவில்லை. உங்களைப் போலவே, மதுரைக்குப் போய்விட்ட அந்த இராசேந்திரனை எப்படி ஒழிக்கலாம் என்பதை ஆலோசிக்கவே, இங்கே நான் மட்டுமல்லாது, இன்னும் இரண்டு பேர்களும் வந்திருக்கின்றோம்!” என்றாள்.

“இரண்டு பேரா?” என்று புரியாமல் வினவினான் சாமந்தன்.

“ஆம்; இரண்டுபேர்கள்தான். அதோ பாருங்கள்!” என்று தூரத்திலிருந்த பாதிரி மரத்தைச் சுட்டிக்காட்டினாள்.

அவள் காட்டிய இடத்தில் பல்லக்கு ஒன்று இருந்தது. அதற்குப் பக்கத்தில் ஒரு புரவி நின்று கொண்டிருந்தது. பெண் ஒருத்தியும் வயதான ஒரு பெரியவரும் மண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

“யார் அவர்கள்?” என்று நிலவொளியில் உற்றுக் கவனித்தாள் இரத்தினாதேவி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதுவரை பாதிரிமர நிழலால் மறைக்கப்பட்டிருந்த அவர்கள் முகம் தற்போது வெட்டவெளியில் வந்துவிட்டதால், அவர்கள் யாரென்று கடார இளவரசிக்குப் புரிந்தது. அதன் அடையாளமாக முறுவலித்தாள். இளையராணி, அதற்குப் பின்னால் அந்தப் பெரியவர் என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். (பெரியவர் என்று அவள் குறிப்பிட்டது சயங்கொண்ட சோழ இருக்குவேளை).

"இப்போது திருப்திதானே உங்களுக்கு! இராசேந்திரனை வீழ்த்த வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்தவித மாறுபாடும் இல்லை. உங்கள் இருவரோடு நாங்கள் சேர்ந்துவிட்டதால், இராசேந்திரன் மேல் உலகம் செல்வது உறுதியாகிவிட்டது" என்றாள் மகிழ்ச்சியோடு.

கடார நாட்டை அவன் அழித்துவிட்டதால் நமக்கு அவன் எதிரியாகிவிட்டான். ஆனால் இவர்களுக்கு அவன் ஏன் பகைவனானான்? என்று மனதிலெழுந்த ஐயத்தை வினாவடிவாக்கிக் கேட்டாள் கடார இளவரசி.

"சொல்கின்றேன்! அதெல்லாம் பெரிய கதை. மொத்தத்தில் அவன் எங்கள் நாட்டைச் சேர்ந்தவனல்ல. ஆனால் சோழ அரசுப் பொறுப்பைக் கைப்பற்ற எங்களுக்கு எதிராக சதி செய்கிறான். அதனால் எங்களுக்குப் பகைவனாகிவிட்டான்" என்றாள்.

"அப்படியா விஷயம்?" என்று புரிந்து கொண்ட கடார இளவரசி, மகிழ்ச்சியுடனே சாமந்தன் பக்கம் திரும்பி "இன்னும் வாளை ஏன் உறையில் போடாமலிருக்கிறாய்? இவர் நம் நண்பர்தான்" என்றாள்.

சாமந்தன் அரைமனதுடனே வாளை உறையிலிட்டான். அதற்குள் இருவரும் மண்டபத்தை நெருங்கிவிட்டனர்.

முன்னால் வந்த இராஜசுந்தரியுடன், கடார இளவரசியும், சாமந்தனும் இருப்பதைக் கவனித்து "இவர்கள் எப்படி இங்கே வந்தார்கள்?" என்று திகைப்புற்று, இளையராணி அவர்களை நோக்கினாள்.

தட்டுத்தடுமாறி வந்த சயங்கொண்ட சோழ இருக்குவேளுக்குக் கைகொடுத்து மண்டபத்தில் உட்கார வைத்தாள் இராஜசுந்தரி.

செங்குத்தாயிருந்த சோழகங்கத்தின் ஏரிக்கரையை ஏறி வந்ததினால் ஏற்பட்ட படபடப்பு அடங்க, மூச்சை நிதானப்படுத்துவதற்கு முதியவரான சயங்கொண்ட சோழ இருக்குவேள் சில நொடிப் பொழுதை எடுத்துக் கொண்டார்.

பிறகு அவர்கள் பக்கம் திரும்பி, "இவர்கள்...?" என்று இழுத்தபடி கேட்டார்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"நமக்கு முன்பே இங்கே வந்திருக்கிறார்கள். எதற்கு என்று தெரியுமா? எல்லாம் நம் பகைவன் இராசேந்திரனை ஒழிப்பதற்காகத்தான்" என்றாள் குதூகலத்துடன்.

"அப்படியென்றால் நாம் எல்லோரும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள்தான்!" என்று மகிழ்ச்சியின் மிகுதியால் உரக்கச் சிரித்த இருக்குவேள், "நான் சொல்வது சரிதானே?" என்று இராஜசுந்தரியை வினவினார்.

"செயங்கொண்டார் சொன்னால் தப்பே இருக்க முடியாது" என்று குறுக்கிட்டாள் இளையராணி.

அத்துடன், "இவர்கள் இருவரையும் போகச் சொல்லிவிட்டுத்தானே நாம் ஆலோசனையைத் தொடர வேண்டும்!" என்று கேட்டாள்.

"இல்லை. அவர்களும் இருப்பார்கள். சயங்கொண்டார்தான் ஒரே சாதி என்று சொல்லிவிட்டாரே. மதுரையிலிருக்கும் பகைவனைக் கொல்ல நாம் ஆளைத் தேடிக் கொண்டிருந்தோம் அல்லவா? கடார இளவரசி இரத்தினாதேவியை கடவுளே அதை நிறைவேற்ற அனுப்பியிருக்கின்றார்" என்றாள் இராஜசுந்தரி.

"என்னது...?" - புரியாமல் இளையராணி இரத்தினாதேவியைப் பார்க்க...

அவள் குறுவாளைக் கையிலெடுத்தாள். சரக்கென்று இலேசாய் மணிக்கட்டில் கீறி, அதிலிருந்து வழிந்த இரத்தத்தைக் கையில் எடுத்து, "இந்த இரத்தத்தின் மீது ஆணை! என் பகைவன் இராசேந்திரனைக் கொல்லவே நாங்கள் இங்கே வந்திருக்கின்றோம்!" என்றாள் உணர்ச்சியுடன். உடனே சாமந்தன் இடைமறித்து, "என்ன இளவரசி! வெறும் வாயினால் சொன்னால் போதாதா? அதற்காக உன் உடம்பில் காயத்தையா ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்?" என்றான்.

இரத்தினாதேவிக்கு இராசேந்திரன் மீது எத்தனை வெறுப்பு இருக்கிறது என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர். "அவனைக் கொல்ல இவளைத் தவிர வேறு தகுதியான ஆள் கிடையாது" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள் இராஜசுந்தரி.

சயங்கொண்ட சோழ இருக்குவேள் "சீக்கிரம் பேச்சை முடித்துக் கொண்டு புறப்பட வேண்டும். நான் அரண்மனையைவிட்டு வரும் போதே 'எங்கே போகிறீர்கள்?' என்று சோழ நாட்டுத் தளபதி தன்மபாலன் கேட்டான். போகும் போது அப்படிக் கேட்பது நாகரீகம் அற்ற செயல் என்று தளபதியுடன் சண்டை போட்டுவிட்டு வந்தேன். அதனால்..." என்ற அவரைப் பேசவிடாமல் இராஜசுந்தரி குறுக்கிட்டு.

"தளபதி! பூனை போல் மௌனமாய் இருக்கிறார். ஆனால் அவர் செய்யும் காரியங்கள் விஷமத்தனம் கொண்டவையாக இருக்கின்றன" என்றாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இன்னும் கொஞ்சநாள் பொறுத்துக் கொள்ளுங்கள். என் கணவர் அரசரானதும் முதலில் சிறையில் தள்ளுவது அந்த ஆளைத்தான்” என்றாள் இளையராணி.

“சரி விஷயத்துக்கு வாருங்கள்! இராசேந்திரனைத் தீர்த்துக்கட்ட மதுரைக்கு கடார இளவரசி இரத்தினாதேவியைத்தானே அனுப்பப் போகின்றீர்கள்” என்றார் இருக்குவேள்.

“ஆமாம்! இங்கேயிருக்கும் அனைவருக்கும் அதில் எந்தவித மாற்று எண்ணமும் இல்லை” என்று அழுத்திச் சொன்னாள் இராஜசுந்தரி.

இரத்தினாதேவிக்கு முகம் மலர்ந்தது. அதைக் கவனித்த இருக்குவேள், “இது ஒரு சரியான சந்தர்ப்பமாக எனக்குப் படுகிறது. கலகம் செய்யும் பாண்டியர்களை அடக்க மதுரைக்குப் போயிருக்கிறான் இராசேந்திரன். இந்தச் சமயத்தில் அவனை நாம் தீர்த்துக்கட்டிவிட்டால், பழி பாண்டியர் தலையில் விழுந்துவிடும்; அரசு கட்டிலுக்குப் போட்டியாக முளைத்த அவனும் ஒழிந்து போவான்” என்றார்.

இராஜசுந்தரி மகிழ்ச்சியுடனே, “அப்படித்தான் செய்ய வேண்டும்” என்று பலமாக ஆமோதித்தாள்.

“இந்நேரத்தில் சோழச் சக்கரவர்த்தி கடார இளவரசியை வெளியே அனுப்பச் சம்மதிக்கமாட்டாரே, அவருக்குத்தான் இளவரசி பேரில் தனி பாசம் இருக்கின்றதே!” என்று ஐயத்தைக் கிளப்பினாள் இளையராணி.

“ஆமாம்! அதற்கு என்ன செய்வது?” என்று இராஜசுந்தரி சிந்தனையில் மூழ்க, “நான் சக்கரவர்த்தியைச் சரிகட்டிக் கொள்கிறேன்” என்று நம்பிக்கையுடன் கூறினாள் கடார இளவரசி.

இறுதியில் மதுரைக்கு இளவரசியையும், சாமந்தனையும் புவியில் அனுப்புவது என்று முடிவு செய்தனர். துணைக்குத் தென்னனை அனுப்பும்படி கேட்டுக் கொண்டாள் கடார இளவரசி.

“மதுரையில் கோட்டைத் தலைவனாக இருந்த மூவேந்தன் என் கணவனின் நம்பிக்கைக்கு உரியவன். அவனுக்கு ஒரு கடிதம் தருகிறேன். தேவையான உதவிகளை அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்” என்றாள் இளையராணி.

“கடார இளவரசி அரசு விருந்தாளி. தேவையான வசதியைச் செய்யவும்! என்று சக்கரவர்த்தியிடமிருந்து கடிதம் பெற்றுக் கொண்டால் மிக்க நல்லதாயிருக்கும்!” என்று அச்சமயம் யோசனை சொன்னார் இருக்குவேள்.

“அம்மாதிரி ஒரு கடிதத்தைத் தான் எப்படியும் சக்கரவர்த்தியிடமிருந்து வாங்கிக் கொள்வேன். அத்துடன் சூழலை அனுசரித்துத் தக்க நேரம் பார்த்து இராசேந்திரனைத்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தீர்த்துக் கட்டிவிடுவேன். பழி கலகம் செய்யும் பாண்டியர் தலையில் விழுந்துவிடும்! அதைப் பற்றி நீங்கள் கவலை கொள்ள வேண்டாம்!" என்று உறுதியுடன் கூறினாள் இரத்தினாதேவி.

அனைவரும் அவளுக்கு வெற்றி வாழ்த்து கூற, புறப்படுவதற்காக மண்டபத்திலிருந்து எழுந்தனர்.

இருக்குவேள் எங்கே போகின்றார் இந்த இரவு நேரத்தில்? என்று ஐயப்பட்டு, அவரைப் பின் தொடர ஆயத்தமான சோழநாட்டுத் தளபதியைச் சக்கரவர்த்தி திடீரென அழைத்துவிடவே, என்னவென்று கேட்டுவிட்டு வருவதற்குள் இருக்குவேள் புரவியில் கிளம்பிவிட்டதாகத் தகவல் தெரிந்தது.

எங்கே போயிருப்பார்? என்று யோசித்த சோணாட்டுத் தளபதி, வடவாற்று மண்டபத்தில் இருக்கலாம் என்று புரவியை அங்கே செலுத்தினார். ஒரு ஈ, காக்கைக் கூட அங்கே இல்லாததால் ஏமாற்றமடைந்து, குழப்பத்துடனே சிந்திக்க, கடைசியில் சோழகங்கம் ஏரியில் ஒரு மண்டபம் இருக்கிறது. அங்கே போய்ப் பார்க்கலாம் என்று அரை மனதுடனே குதிரையை வேகமாகச் செலுத்தினார் தளபதி.

அவர் நினைத்தது போலவே மண்டபத்திலிருந்து இருக்குவேளும், மூன்று பெண்களும், இன்னொரு நபரும் இருப்பதைக் கவனித்துப் புரவியுடன் இருட்டான இடத்தில் மறைவாக நின்று கொண்டார்.

ஒரு புரவியில் இருக்குவேள் ஏறிக் கொள்ள, மற்றொன்றில் சாமந்தன் அமர்ந்து கொண்டான். கடார இளவரசி இரத்தினாதேவியையும், சாமந்தனையும் சேர்த்துக் கொண்டு அப்படி என்ன இந்த மண்டபத்தில் ஆலோசித்திருப்பார்கள்? என்ற கேள்வி அச்சமயம் அவர் மனதில் எழுந்தது.

புரவியை மாற்று வழியில் திருப்பி, கங்கைகொண்ட சோழபுரக் கோட்டையை அதிசீக்கிரமாய் அடைந்தார்.

முழு நிலவின் வெளிச்சத்தில் முன்னே சயங்கொண்ட சோழர் மகிழ்ச்சியுடன் செல்ல, பின்னால் மூன்று பெண்களும், சிரித்தபடி மென்னடை நடக்க, அதற்குப் பின்னால் சாமந்தன் முகத்தில் என்ன அப்படி ஒரு பெருமிதம்?

கோட்டைக்குள் நுழைந்த ஒவ்வொருவரையும், மறைவாய் நின்று கண்காணித்த தளபதி, 'ஏதோ சதி நடக்கப் போகிறது! அதற்காகத்தான் மண்டபக்கரையில் ஆலோசித்திருக்கிறார்கள்' என்று ஊகித்து பிரமாதிராசரைப் பார்ப்பதற்காக, அவரின் மாளிகை நோக்கிப் போனார் சோழத்தளபதி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 24

சோழச் சக்கரவர்த்தியின் கை நாடியைப் பிடித்துப் பார்த்த இரத்தினாதேவி புன்முறுவலுடனே, "இப்போது எப்படியிருக்கு?" என்று வினவினாள் மாமன்னரைப் பார்த்து.

வீரராசேந்திரர் படுக்கையிலிருந்து எழுந்து தெம்புடனே சிரித்துக் கொண்டார். "இப்போது எனக்கு ஒன்றும் இல்லை!" என்று பஞ்சணையிலிருந்து இறங்கி, சிறிது தூரம் மெல்ல நடந்தார்.

அதைக் கவனித்த இரத்தினாதேவி, மனதிலேயே ஒரு திட்டம் ஒன்றைத் தீட்டிக் கொண்டு, "சக்கரவர்த்தி!" என்று மென்மையான குரலில் மனம் கனியும்விதத்தில் அவரை அழைத்தாள்.

"என்ன இளவரசி?" என்று அவர் அருகில் வர...

"ஒரு மூலிகை மட்டும் கிடைத்துவிட்டால், நீங்கள் இருபது வயதுக் காளை போல் ஆகிவிடுவீர்கள்!" என்றாள் புன்முறுவலுடனே.

மாமன்னருக்குச் சந்தோஷம் மிகுந்தது. ஒவ்வொரு மனிதனும் இளமையாகவே இருக்க ஆசைப்படுவான் அல்லவா? அதுவும் வயது முதிர்ந்துவிட்ட வயோதிகரைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. நோயினால் அவதியுறும் சோழ வேந்தருக்கு 'இருபது வயதுக் காளை' என்ற அவ்வார்த்தை அமுதமென செவிகளில் விழுந்துவிட்டதால், மனம்விட்டு உரக்கச் சிரித்தார். "அந்த மூலிகை எங்கே இருக்கிறது என்று சொல்ல முடியுமா?" என்று பரபரப்போடு வினவினார்.

"நான் போகுமிடமெல்லாம் தேடிவிட்டேன் மன்னரே! அநேகமாக மலைப்பகுதியில்தான் அது வளரும், மிக அபூர்வ மூலிகையான அது, மதுரையொட்டியிருக்கும் காடுகளில் இருக்கலாம் என்று எனக்குப்படுகிறது" என்றாள்.

"அப்படியென்றால் நம் நாட்டு வில்லியர்களை அங்கே அனுப்பி தேடச் சொன்னால் என்ன?"

"இல்லை, சக்கரவர்த்தி! எனக்குத்தான் அதைப் பற்றி நன்றாய்த் தெரியும். நான் போய்த் தேடுவதுதான் நல்லது!" என்றாள்.

"சரி; அப்படியென்றால் மதுரையிலிருக்கும் இராசேந்திரனுக்கு ஒரு கடிதம் தருகின்றேன். அங்கே நீ நமது விருந்தாளியாக தங்கி, மூலிகையைத் தேடிக் கொண்டு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வந்துவிடு. துணைக்கு...?" என்று அரசர் வினவ, "தென்னனையும், சாமந்தனையும் அனுப்பினால் போதும்" என்றாள்.

"நல்லது இன்றே நீ புறப்படு!" என்று சக்கரவர்த்தி கூறிக் கொண்டிருக்கும் போதே முதலமைச்சர் பிரமாதிராசர் உள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்த வேந்தர், "நல்ல நேரத்தில் வந்தாய் பிரமாதிராசா! கடார இளவரசி உடனே மதுரை புறப்பட விரும்புகின்றாள். அதற்கான ஏற்பாட்டைச் செய். துணைக்குச் சாமந்தனையும் தென்னனையும் அனுப்பி வை!" என்று உத்தரவிட்டார்.

முதன்மந்திரிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

இந்தச் சிறு பெண் இவ்வளவு விரைவில் சோழச் சக்கரவர்த்தியை மயக்கிவிட்டாளே! என்று மனதிற்குள் வியந்து, மதுரைக்கு இவள் எதற்காகப் போகின்றாள்? என்று அவளைப் பார்த்தார். ஒரு விஷயம் புலப்பட்டது. அது...

இராசேந்திரனைக் கொல்லவே அவள் மதுரைப் பயணத்தை மேற்கொண்டிருக்கலாம்! என்று ஊகித்து, அதைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், "குழப்பமான இந்நேரத்தில் பெண்கள் அங்கே போவது அவ்வளவு நல்லதாகப்படவில்லை" என்றார்.

இவள் விஷயத்தில் பிரமாதிராசன் எதற்கு எடுத்தாலும் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டே இருக்கின்றான்! அத்துடன் கடார நாட்டிற்கு அனுப்பிவிட வேண்டும் என்று அடிக்கடி என்னிடம் சொல்லி வருகின்றான். எதற்காக இவனுக்கு இந்தப் புத்தி? என்று சோழச் சக்கரவர்த்தி சற்றே முனிவுடன், "நான் சொன்னதைச் செய் பிரமாதிராசா!" என்றார் உரத்த குரலில்.

சக்கரவர்த்தி இவ்விதம் பேசி, முதன்மந்திரி கேட்டதில்லையாதலால் வேறு வழியின்றி, "சரி!" என ஒப்புக் கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக, வேண்டா வெறுப்புடன் காவலனை அழைத்து விடையில் அதிகாரியை வரச் சொன்னார்.

இவள் போய்ச் சேருவதற்கு முன்பே, மதுரை வரும் விஷயத்தை இராசேந்திரனுக்குத் தெரிவித்து, எச்சரிக்கையுடன் இருக்கச் சொல்ல வேண்டும். அதற்கு என்ன வழி? என்றும் யோசிக்கலானார்.

பல்லக்கில் அவளை மதுரைக்கு அனுப்ப வேண்டும்! பல்லக்குத் தூக்கிகளிடம் சுற்றுவழியில் செல்லும்படி சொல்லி வைப்போம். அதற்குள் உயர்சாதிப் புரவியில் ஒரு வீரனை அனுப்பிச் செய்தியைத் தெரிவித்துவிடலாம் என்று திட்டமிட்டு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள விடையில் அதிகாரிக்கு உத்தரவிட்டார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆனால்...

புரவியில்தான் செல்லப் போகிறேன் என்று கடார இளவரசி இரத்தினாதேவி கூறிவிட்டதால், ஆண்டவன்விட்ட வழி என்று தென்னனுக்கும், சாமந்தனுக்கும், அவளுக்குமாக புரவியைத் தயார் செய்து வைக்கும்படி கட்டளையிட்டார்.

காவிரிக் கரையின் வடக்குப் பக்கமாகச் சென்ற பெரு வழியின் மூலம், உறையூரை அடைந்து, அங்கிருந்து காவிரியாற்றைக் கடந்து, தென்கரைப் பக்கம் வழியாக, நெடுங்குளம் சென்று மதுரையை அடைய வேண்டும். அந்த வழியில்தான் மூன்று புரவிகளும் சென்று கொண்டிருந்தன. தூய்மையான வெள்ளை நிறத்திலிருந்த குதிரையில் இரத்தினாதேவி இருந்தாள். சாம்பல் நிறப் புரவியில் சாமந்தன் அமர்ந்திருந்தான். கருப்பும், பழுப்பும் கலந்த நிறக் குதிரையில் தென்னன் இருந்தான்.

மதுரையின் பாதுகாப்புப் பொறுப்பேற்றிருக்கும் இராசேந்திரனுக்குச் சோழச் சக்கரவர்த்தி தந்த ஓலை, இரத்தினாதேவியிடம் இருந்தது. பகலவன் செந்நிறக் கதிர்கள் கடுமையாய் மூவரையும் வறுத்த புரவியை ஓரிடத்தில் நிறுத்தி ஓய்வெடுத்துச் செல்லலாம் என்று தென்னன் இடம் தேடினான். தூரத்தில் பாழ் மண்டபம் ஒன்றும் அதையொட்டி ஆலமரமும் அதனருகே சிதலமுற்ற ஒரு குளமும் தென்பட்டன. அங்கே இளைப்பாறிச் செல்வோம் என்று அவன் கூற, மூவரும் அதை நோக்கிப் புரவியைச் செலுத்தினர்.

மண்டபம், இன்றோ நாளையோ என்பது போல ஒரு பக்கமாய் சாய்ந்து கீழே விழுந்துவிடுவது போல இருந்தது. குளத்தின் படிக்கட்டுகள் ஒழுங்காக இல்லை. ஆங்காங்கே இடிந்து கால் வைத்து இறங்குவதற்கு வசதியற்று இருந்தது. நீரில் அல்லிமலர்கள் நிறைய இருந்தன. கெண்டைகள் துள்ளிக் கொண்டிருந்தன.

ஆலமரத்திலிருந்து உதிர்ந்த இலைகள் தரையை முழுவதும் மூடியிருந்தன. மூன்று குதிரைகளும் ஒன்றாய் அங்கே வர அதனால் ஏற்பட்ட சலசலப்புச் சப்தத்தில் மரங்களிலிருந்து பறவைகள் இப்படியும் அப்படியும் பறந்து சென்றன.

“இந்தக் குளத்து நீரைக் குடிக்க முடியுமா?” என்று சுற்றுக்சூழலை நோட்டம்விட்டபடி கேட்டாள் இரத்தினாதேவி.

“அல்லி இருப்பதால் தண்ணீர் அசுத்தமாவதற்கு வழியில்லை!” என்று புரவியிலிருந்து குதித்தான் சாமந்தன்.

கடார இளவரசிக்கு அந்தச் சுற்றுச் சூழல் சற்றும் பிடிக்காததால் அரை மனதுடனே புரவியிலிருந்து இறங்கினாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதைக் கவனித்த தென்னன், “பிரயாணம் என்று வந்துவிட்டால் இதையெல்லாம் பார்ப்பதற்கு இல்லை” என்று குதிரையிலிருந்து குதித்தான்.

இரத்தினாதேவி குளற்றங்கரையிலே நின்று கொண்டாள். தென்னனும், சாமந்தனும் எச்சரிக்கையுடனே குளத்தில் இறங்கி கை, கால், முகம் இவற்றைக் கழுவிக் கொண்டு கையினால் சிறிது நீர் அள்ளிக் குடித்தனர். வெய்யிலுக்கு அது மிகவும் குளிர்ச்சியாயிருந்ததால் இன்னும் கொஞ்சம் அள்ளிப் பருகலாயினர்.

அதைக் கவனித்து இரத்தினாதேவியும் குளத்தில் இறங்கினாள் ‘அப்பா! இந்த வெய்யிலுக்குக் குளத்து நீர் எத்தனை இதமாக இருக்கின்றது. ஆண்கள் இல்லையென்றால் நீரில் இறங்கிக் குளிக்கலாம்’ என்று தண்ணீரை அள்ளி, அள்ளி உடல் முழுவதும் நனைத்துக் கொண்டாள். தாகத்தைத் தணிக்க மென்விரல்களால் நீரை அள்ளிக் குடித்துவிட்டுக் கரையேறினாள்.

மூவரும் ஆலமர நிழலில் அமர்ந்தனர்.

“மதுரைக்கு இன்னும் எத்தனை தூரம்?” என்று சாமந்தன் வினவினான்.

“உறையூரை எட்ட இன்னும் ஐந்து கல் இருக்கிறது. அதை அடைந்து ஆற்றைக் கடந்துவிட்டால் அப்புறம் மதுரைக்குப் போவது சுலபம்!” என்ற தென்னன், “எனக்கு ஒரு யோசனை...” என்று நிறுத்தினான்.

“என்ன யோசனை?” என்றாள் இரத்தினாதேவி ஆர்வமுடன்.

“மதுரைக்கு நீங்கள் இருவரும் போங்கள். நான் தூமகேதுவுடன் பின்னால் வருகின்றேன்!” என்றான்.

“தூமகேது வருவது நமக்கு நல்லதுதான். அதற்குள் பகைவன் எச்சரிக்கை பெற்றுவிட்டால்?” என்ற இரத்தினாதேவி இருவரையும் கவனித்து, “எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் ஒருத்தியே அவனைக் கொன்றுவிட முடியும்!” என்றாள்.

“இந்த இடத்தில் உங்களின் விவேகத்தோடு இளமையும் சேர்ந்து கொண்டால் அவனை வீழ்த்துவது சுலபம்” என்றான் தென்னன்.

“அவ்வளவு சீக்கிரம் அவன் இளமைக்கு அடிமைப்படுபவன் அல்லவே!” என்றாள் கடார இளவரசி குறுக்கிட்டு.

“உங்கள் இளமை காமனையும் கிறங்க வைக்கும்!” என்று உறுதியோடு தென்னன் கூற...

இரத்தினாதேவிக்கு அவ்வார்த்தைகளால் மகிழ்வே ஏற்பட்டது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

‘தான் அழகு’ என்ற வார்த்தையைக் கேட்பதில் ஒவ்வொரு பெண்களும் ஆனந்தம் கொள்ளவே செய்வர். அதற்கு இரத்தினாதேவி மட்டும் விலக்காக முடியுமா? எனவே உள்ளத்தில் எழுந்த அச்சந்தோஷத்தால் ஏற்கனவே தனிச் சோபையுடனிருந்த அவள் இளமை முகத்தில், இன்னும் கவர்ச்சி கூடவே செய்தது.

“நான் சொல்வதை நீங்கள் இருவரும் கவனிக்க வேண்டும். ஏனென்றால் பகைவன் வீழ்வதில் முதலில் சந்தோஷப்படுவது நானாகத்தான் இருக்க முடியும். நீங்கள் அவசரப்பட்டு எதையாவது செய்ய முற்படமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இருந்தாலும் என் மன ஆறுதலுக்காக நான் கூறுகின்றேன். நீங்கள் சோழ அரசின் கௌரவ விருந்தினராக மதுரை செல்கின்றீர்கள். அதனால் உங்களுக்கு அங்கே சகல மரியாதையும் கிடைக்கும். இதைப் பயன்படுத்தி இராசேந்திரனை நீங்கள் நிச்சயம் கவரத்தான் செய்வீர்கள். அந்தக் கவர்ச்சியால் அவன் மயங்கி நிற்கும் சமயத்தில் நீங்கள் பகைவனைச் சந்திப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்! இந்தச் சந்தர்ப்பத்தில் அவனே உங்களைத் தேடி வருவான். அப்படி வரும்போது பாண்டிய இலச்சினைக் கொண்ட இந்தக் குறுவாளால் அவனைக் கொன்றுவிடுங்கள். பழி பாண்டியர் தலையில் விழ, உங்கள் மேல் யாரும் சந்தேகம் கொள்ளமாட்டார்கள்” என்றான் தென்னன்.

“சரி!” என்று ஒப்புக் கொண்டாள் கடார இளவரசி.

“நேரமாகிவிட்டது புறப்படலாம்” என்று சாமந்தன் எழுந்து புரவியை நோக்கிச் செல்ல, இருவரும் அவனைத் தொடர்ந்து நடந்தனர்.

மூன்று புரவிகளும் மதுரை நகருக்கு வாயு வேகத்தில் பறந்தன. ஆனால் புரவி ஏறுமுன், கடார இளவரசியின் கையிலிருந்த பொருள் ஒன்று கீழே விழுந்துவிட்டதே! அது என்ன?

போகும் வேகத்தில் அவள் அதைக் கவனிக்கவில்லையென்றாலும் பின்னால் அதற்காக நிச்சயம் வருத்தப்படத்தான் போகிறாள்.

இவர்கள் புறப்பட்ட அரை நாழிகை கழித்து அம்மையப்பன் குதிரையில் அங்கே வந்து சேர்ந்தான். உடம்பெல்லாம் ஒரே வியர்வை. நெற்றியிலும் உடம்பின் பல பகுதிகளிலும் அணிந்திருந்த திருநீற்றுச் சின்னம் கலைந்து போயிருந்தது. அதை அணிந்து கொள்வதற்காக வேண்டி அம்மையப்பன் புரவியை அங்கே நிறுத்தினான்.

குதிரைக்கு வாயில் நுரை தள்ளியது. அதைப் பார்த்து மிகவும் வேகமாகவே செலுத்திவிட்டேன் போலிருக்கிறது! என்று அருகில் சென்று செல்லமாய் தட்டிக் கொடுத்தான். குதிரையும் அதை ஏற்றுக் கொண்டது போல் தன் முகத்தை அம்மையப்பன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கைகளில் மெல்ல உராயலாயிற்று. சிறிது நேரம் புரவியைத் தடவிக் கொடுத்துவிட்டு, “சிவாய நம!” என்று முணுமுணுத்தபடி குளத்தில் இறங்கினான் குளிக்க.

‘அட, இது என்ன! காய்ந்த சருகுகளுக்கு இடையில் மினுக்.. மினுக் என்று ஒரு மோதிரம்.’ சிவபக்தருக்கு பொன்னாசை வந்துவிடவே ஓடிப் போய் அதை எடுத்தான்.

அடடே! இதன் முத்திரை கடார நாட்டிற்கு உரியவை போலிருக்கிறதே! அப்படியென்றால் இம்மோதிரம் இளவரசி இரத்தினாதேவிக்குச் சொந்தமானது. இது எப்படி இங்கே வந்திருக்க முடியும்? என்று சுற்று முற்றும் பார்த்த அம்மையப்பனுக்குக் குதிரையின் காலடிகள் புலப்பட்டன.

குளத்தில் இறங்குவதை நிறுத்திவிட்டு அருகே சென்று பார்த்தான். ஏறக்குறைய நிறைய குதிரைகள் இங்கே வந்திருக்க வேண்டும் என்று தெரிந்தது. அப்படியென்றால்...

சிவ பக்தனாகிய அம்மையப்பனுக்கு ஒரு விஷயம் விளங்கியது. மதுரையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் அவர்கள் தன்னைப் போலவே இளைப்பாறுவதற்காக இங்கே இறங்கியிருக்க வேண்டும்! அச்சமயத்தில் இந்த மோதிரம் கடார இளவரசியின் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்திருக்கலாம். “சிவாய நம!” என்று சந்தோஷத்துடன் உச்சரித்துக் கொண்டே, மோதிரத்தைக் குதிரையின் கழுத்திலிருந்த தோல் பையில் பத்திரப்படுத்திவிட்டு, ஆனந்தமாய் நீரில் மூழ்கி மூழ்கி எழுந்தான்.

சீக்கிரம் புறப்பட வேண்டும் என்பதற்காக நீரிலிருந்து மனமில்லாமல் கரைக்கு வந்தான். திருநீற்றை நெற்றி, மார்பு என்று அணிந்து, புதிய ஆடையை இடுப்பில் தரித்துக் கொண்டு பழையதை நனைத்துப் பிழிந்து கொண்டான். காற்றில் அதைச் சிறிது நேரம் உலரவிட்டான். புரவி இப்போது தெம்பு பெற்றுவிடவே அதைத் தட்டிக் கொடுத்துவிட்டு, ஈர ஆடையைக் குதிரையின் கழுத்தில் சுற்றிவிட்டு அதன் மேல் அமர்ந்தான் அம்மையப்பன்.

அவர்களுக்கு முன்பு நான் மதுரை போய்ச் சேர வேண்டும். நேரான வழியில் சென்றால் என்னால் போக முடியாது. குறுக்கு வழியில் காட்டுப் பாதையில் செல்ல வேண்டும். கள்ளர் பயம் இருக்கத்தான் செய்யும். எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு போக வேண்டும். முதன்மந்திரி என்னிடம் ஒப்படைத்த இந்தக் காரியத்தை எந்தத் தடங்கலும் இன்றி நிறைவேற்ற வேண்டும்.

அவர்களுக்கு முன்பு மதுரை போய்விட்டால் நல்லது. இல்லையென்றாலும் கிடைத்த நேரத்தை வீணாக்காமல் எப்படியாவது இராசேந்திரனைச் சந்தித்து



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இரத்தினாதேவி எந்த நோக்கத்துடன் அங்கே வந்திருக்கின்றாள் என்பதைத் தெரிவித்துவிட வேண்டும் என்று புரவியைத் தட்டிவிட்டான்.

அது வாயு வேகத்தில் பறந்தது.

பெருவழிப்பாதையிலிருந்து அதைத் திருப்பிய அம்மையப்பன் தன் அரைக்கச்சையைத் தடவிப் பார்த்துக் கொண்டு குதிரையின் வேகத்தைக் கூட்டினான்.

நிசப்தமான காட்டுப் பகுதியில் புரவியின் குளம்பொலி அப்பகுதியை அதிரடித்தது.

மிக வேகமாய்ச் சென்ற அம்மையப்பன் கண்களுக்கு வழியின் குறுக்கே பெரும் பள்ளம் வந்துவிடவே கடிவாளத்தை இழுத்தான்.

புரவி ஆக்ரோஷமாக கனைத்துக் கொண்டே பள்ளத்தைத் தாண்ட முயற்சித்தது.

ஆனால் அம்மையப்பன் வேறுவிதமாய் அல்லவா நினைத்திருந்தான். கடிவாளத்தை இன்னும் பலமாய் இழுத்துப் புரவியை நிறுத்தி வந்த வழியே திரும்பினான்.

இந்த முயற்சியினால் புரவி கனைத்தபடி இப்படியும் அப்படியும் ஓட முயற்சிக்க “ஈசுவரா! இது என்ன குழப்பம்!” என்று அதைத் தட்டித் திருப்பினான்.

அது அவனுக்குத் கட்டுப்படாமல் முரண்டு பிடிக்க எரிச்சலுற்ற அம்மையப்பன், கடிவாள வாரினால், அதை ஓங்கிப் பலமாக அடித்தான்.

ஆனால் புரவி திரும்பத் திரும்ப ஓடத்தான் முயற்சித்தது.

அதற்குள், பக்கத்திலிருந்த புதரிலிருந்து பத்துப் பேருக்கு மேல் புரவியையும், அவனையும் சூழ்ந்து கொண்டனர்.

ஒவ்வொருவர் கையிலும் வெட்டிரிவாள் இருந்தது. கரிய மதயானை போன்று ஒவ்வொருவரும் கருத்த மேனியராய் திடகாத்திரமாயிருந்தனர்.

அவர்கள் விழித்த விழியிலிருந்து யாரென்று புரிந்துவிட்டது.

வழிப்பறி செய்யும் கள்ளர்கள் அவர்கள் என்பதையறித்து “ஐயா, நான் அவசரமாக மதுரை போக வேண்டும். சிவ பக்தனான என்னிடம் என்ன இருக்கும் என்று நீங்கள் மடக்கினீர்கள்?” என்று கேட்டான்.

“சாதாரண சிவபக்தனாய் இருந்தால் விட்டுவிட்டிருப்போம். புரவியோட்டும் சிவபக்தன் என்பதால் வழி மறித்துவிட்டோம்” என்றான் அவர்களில் ஒருவன்.

அனேகமாக அவன் தலைவனாய் இருக்க வேண்டும் என்று யூகித்த அம்மையப்பன், இடுப்பிலிருந்து சில பொற்காசுகளை எடுத்து அவனிடம் கொடுத்து, “வழிச் செலவுக்காக வைத்திருந்தேன்! நீங்கள் குறுக்கிட்டுவிட்டதால் உங்களிடம் தந்துவிட்டேன்! எனக்கு வழிவிட்டுவிடுங்கள்” என்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“ஆஹா! சிவபக்தருக்கு என்ன தாராளம். இப்படிப்பட்டவர் இன்று கிடைத்தது நாம் செய்த அதிர்ஷ்டம்தான்” என்றான் அவர்களில் ஒருவன்.

“பூசணி போல் எத்தனை தளதளவென்று இருக்கின்றார் பார்த்தாயடா!” என்றான் இன்னொருவன்.

“அவர் குதிரை மட்டும் என்னவாம்! அதுவும் அவரைப் போலவே கொழு கொழு என்றிருக்கிறது!” என்றான் மற்றொருவன்.

“சிவபக்தருக்குப் புடவை கட்டி மேலே முக்காடு போட்டால் அசல் பெண் போல் இருப்பார்!” என்று சொன்னவன் பக்கத்திலிருந்தவனிடம், “நீ கல்யாணத்திற்குப் பெண் தேடிக் கொண்டிருந்தாயே; பட்டுப் புடவை கட்டி இவரைத் தாலிக் கட்டிக் கொள்வேன்!” என்றான் கேலியுடன்.

“நன்று சொன்னாய் அப்பனே. பெண் பிள்ளை கூட இத்தனை மினுமினுப்பாய் இருக்கமாட்டாள்!” என்று அவன் அம்மையப்பனைப் பார்த்து, “கொஞ்சம் கீழே இறங்கப்பா!” என்றான்.

அம்மையப்பன் சினத்தின் கடைக்கோட்டுக்கே சென்றுவிட்டான். இது ஒரு அபாய வழி என்று தெரிந்திருந்தும் சீக்கிரம் போக வேண்டும் என்ற காரணத்தால் இப்பக்கம் மூடத்தனமாக வந்துவிட்டேன்! என்ன செய்வது என்று யோசிக்கலானான்.

அனைவர் கையிலும் ஆயுதம் இருக்கிறது. என் வாள் கடிவாளத்தையொட்டி இருக்கும் உறையில் வைத்துவிட்டேன்! என்ன செய்யலாம்? தனி ஒருவனாய் இவர்களுடன் முரண்டு பிடிப்பதைக் காட்டிலும் தற்போதைக்கு குதிரையிலிருந்து இறங்கிவிடுவதே உத்தமம் என்று கீழே இறங்கினான்.

அவனின் மொட்டைத் தலையை ஒருவன் தடவி “இத்தனை வழுவழுப்பான மண்டையை என் ஆயுளில் இதுவரை பார்த்ததில்லை” என்றான் கேலியுடன்.

“குதிரை பிரமாதம்! எத்தனைப் பொன்னுக்கு இதை நீர் வாங்கினீர்?” என்று கேட்டான் ஒரு திருடன்.

“நான் சோழ அரசைச் சேர்ந்தவன். மதுரைக்கு அரசாங்க விஷயமாக அவசரமாய்ச் சென்று கொண்டிருக்கிறேன்! அதனால் பொற்காசுகளை எடுத்துக் கொண்டு வழியை விட்டுவிடுங்கள்” என்றான் சிறிது கோபத்தோடு.

“ஓ! தாங்கள் சோழ நாட்டினரா? அப்படியென்றால் நிச்சயம் மேல் உலகத்துக்கு உங்களை வழி அனுப்பி வைக்க வேண்டியதுதான்!” என்றான் கள்வர்களில் ஒருவன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இருங்கடா! முதலில் குதிரை எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். பிறகு சிவபக்தரைக் கைலாயத்திற்கு அனுப்பலாம்!” என்று ஒருவன் புரவியில் ஏறி உட்கார்ந்தான். இதுவரை அமைதியுடனிருந்த அசுவம் மேலேயிருப்பது தன் எசமானர் அல்ல என்பதையுணர்ந்து அங்கே நிலவிய சூழ்நிலையையும் புரிந்து கொண்டு முன் காலைத் தூக்கி ஆக்ரோஷத்துடன் கனைத்து அப்படியே அவனைத் தரையில் தள்ளியது. அதே வேகத்தில் பின் கால்களால் அருகிலிருந்த இருவரை மிக வலிமையுடன் உதைக்கவும் செய்தது. அந்த உதையில்...

ஒருவன் கையிலிருந்த வெட்டரிவாள் நழுவி அம்மையப்பன் அருகில் விழுந்தது. சட்டென்று அவன் எடுத்துக் கொண்டான்.

எடுத்த வேகத்தில் தன் பக்கத்திலிருந்த இருவரைப் பலமாய்த் தாக்கி அவர்களைக் கீழே வீழ்த்தினான்.

இதைக் கவனித்த மற்றவர்கள், “பிடியுங்கள் அந்த மொட்டைத் தலையனை!” என்று அம்மையப்பனை நோக்கி ஓடி வந்தனர்.

ஓடிவந்த அந்த ஐந்து பேரையும் அம்மையப்பன் மூர்க்கத்தனமாகத் தாக்கிப் புரவி பக்கமாக தள்ளினான். தன் பக்கமாக வந்த இருவரை முன் போலவே அது பின்னங்கால்களால் உதைத்தது. மற்ற மூவரில் இருவரையும் அம்மையப்பன் வாளுக்கு இரையாக, எஞ்சி நின்ற ஒருவன் ‘விட்டால் போதும்’ என்று ஓட்டம் பிடித்தான்.

அவனைப் பார்த்துக் கீழே விழுந்த மற்றவர்களும் எழுந்து ஓடலாயினர். பலமான அடியினால் எழுந்திருக்க முடியாமல் இருந்தவர்கள் கையிலிருந்த வெட்டரிவாளைத் தரையில் போட்டுவிட்டு அம்மையப்பனைக் கையெடுத்துக் கும்பிட்டனர்.

ஏறக் குறைய இருவர் குற்றுயிராய் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்க இன்னும் இருவர் இடுப்பொடிந்து எழ முடியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இவர்களால் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து ஓடிப் போனவர்கள் இன்னும் அதிகம் பேருடன் வரலாம் என்பதால் அங்கேயிருப்பது நல்லது அல்ல என்று அருகில் வந்த அசுவத்தில் ஏறிக் கொண்டு தக்க நேரத்தில் உதவிய அதை நன்றியுடன் தட்டிக் கொடுத்தான்.

சற்று கழிந்து...

காட்டுப்பாதையிலிருந்து திரும்பி வழக்கமான பெருவழியில் அம்மையப்பன் குதிரை உறையூரை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 25

உறையூரில் காவிரியைக் கடந்து நெடுங்குளம் பெருவழி மூலம் மதுரையை அடைந்த மூன்று புரவிகளும், அகழிப் பாலம் தூக்கப்பட்டிருந்ததால் கோட்டையில் புகமுடியாமல் அங்கேயே நின்றனர்.

தென்னன் புரவியிலிருந்து குதித்து முன்னே வந்தான். கோட்டையைக் காவல் செய்யும் வீரர்களில் ஒருவனைப் பார்த்து, "நாங்கள் சோழச் சக்கரவர்த்தியின் விசேஷ தூதுவர்கள்! எங்களை உள்ளேவிட வேண்டும்" என்றான்.

யாரையும் உள்ளேவிடக் கூடாது என்பதற்காகவே மதுராபுரிக் கோட்டையின் மாபெரும் கதவு மூடப்பட்டிருந்ததால் தென்னனை அங்கேயே இருக்கும்படிக் கூறிவிட்டுக் கோட்டைத் தலைவனிடம் அதைத் தெரிவித்தான்.

அவன் கோட்டையின் மேல்பகுதியிலிருந்தவாறு தென்னனைப் பார்த்தான்.

"சோழ மன்னரிடமிருந்து நாங்கள் ஓலை கொண்டு வந்திருக்கின்றோம்" என்றான் தென்னன் கோபத்தோடு.

அவன் விறைப்பாய்ச் சொன்ன முறையிலிருந்தும் மற்ற இரண்டு பேரில் ஒருத்தி அரசகுடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டினள் போன்று இருந்ததாலும் மூவரும் உள்ளே நுழைந்துவிடுவதால் கோட்டையே பறிபோய்விடாது என்பதாலும் கோட்டைக் காவலன் அரச உத்திரவுக்கு அடிபணியாத குற்றத்துக்கு ஆளாகி தண்டனை பெற வேண்டாமென்று எண்ணி அகழிப் பாலத்தை இறக்கி அவர்களை உள்ளே அனுமதிக்கும்படி உத்தரவிட்டான்.

மரப்பாலத்தைக் கடந்த மூவரையும் வரவேற்ற கோட்டைத் தலைவன் நேராக அவர்களை இராசேந்திரனிடம் அழைத்துச் சென்றான்.

முக்கிய அலுவல் வேலையாயிருந்த இராசேந்திரன் வந்துவிடுவதாகக் கூறி கூடத்தில் உட்கார வைக்கும்படிக் கோட்டைத் தலைவனுக்குப் பணித்தான்.

எதற்காக அரசர் இந்தச் சமயத்தில் இரத்தினாதேவியிடம் ஓலை கொடுத்து அனுப்புகின்றார்? ஏற்கனவே என் மனதில் சோழ நாட்டிற்கு ஏன் அவள் வரவேண்டும் என்ற கேள்வி எழுந்துவிட்டது. தற்போது அவள் இங்கேயும் வந்திருக்கின்றாள் என்ற சிந்தனையுடனே இராசேந்திரன் அவர்களிருந்த கூடத்தை அடைந்தான். இவனைக் கண்டதும் தென்னன் எழுந்து வணங்கி நின்றான். கடார இளவரசியும் சாமந்தனும் புன்முறுவலுடன் கைகூப்பினர். பதிலுக்கு மரியாதை செய்துவிட்டு ஓலை வந்திருக்கிறது



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என்று கோட்டைத் தலைவனால் தனக்கு அறிவிக்கப்பட்ட செய்தியை மனதில் வைத்துக் கொண்டு இரத்தினாதேவியைப் பார்த்து மெல்ல முறுவலித்தான்.

கடார இளவரசியின் அகன்ற இரு பெரும் விழிகளும் இவனைச் சுட்டெரிப்பது போல ஒருகணம் பார்த்தன. மறுகணம் அந்தச் சுட்டெரிப்பு மறைந்து அங்கே இராசேந்திரனை ஈர்க்கக்கூடிய காந்த சக்தி ஒன்று தோன்றியது.

அதை அவன் மேல் படரவிட்டபடி செவ்வல்லி இதழ்களைப் போல் இருந்த அவளின் சிவந்த இளம் உதடுகளில் முறுவல் ஒன்றைத் தவழவிட்டாள். சில நொடிகள் செல்ல அம்முறுவல் பெரிதாகி முத்தென்ற வெண்ணிறப் பற்கள் தெரியும்படி மெல்ல சிரிக்கலானாள்.

அந்தச் சிரிப்பினால் நிலைகுலைந்து போன இராசேந்திரன் பார்வையை அவளிடமிருந்து விலக்கி, "நீங்கள்...!" என்றான் தடுமாற்றத்துடன்.

"நாங்கள் சோழச் சக்கரவர்த்தியின் விருந்தாளிகள்!" என்றாள் கடார இளவரசி. அதற்கு அடையாளமான ஓலையன்றையும் அவனிடம் நீட்டினாள்.

ஓலையின் அடிப்பாகத்தில் பாதிப் பகுதிக்கு மேல் அவளின் செங்காந்தள் மலர் போன்ற நீண்ட விரல்கள் ஆக்ரமித்துக் கொண்டிருந்ததால் அதைப் பெற்றுக் கொண்ட இராசேந்திரன் கரங்களின் மீது அவை படவே செய்தன.

அந்தப் படுதலினால் தன் மனத்தையிழந்த அவன் இன்னும் கொஞ்ச நேரம் என்பது போல வேண்டுமென்றே கடார இளவரசியின் விரல்களைத் தொட்டபடியிருந்தான். அதையே இரத்தினாதேவியும் எதிர்பார்த்ததால் விரல்களை இன்னும் கொஞ்சம் முன்னே தள்ளி அவன் கரங்களில் நன்றாய்ப் படச் செய்து மெல்ல இராசேந்திரனைப் பார்த்து முறுவலித்தாள்.

'விரல்கள் எத்தனை மென்மையாய் இருக்கின்றன!' என்று அந்தத் தொடுதல் சுகத்தில் திளைத்த இராசேந்திரன் தன்னை நோக்கி முறுவலித்த அவளுக்கு உம்மென்று முகத்தைக் காட்டுதல் ஆண்மகனுக்கு அழகல்ல என்று எண்ணி பதிலுக்குப் புன்முறுவல் செய்தான்.

நான் நினைத்தபடி ஆள் முதல் கட்டத்திலேயே விழுந்துவிட்டான் என்று மகிழ்ச்சியுற்ற இரத்தினாதேவி, "என் கையிலிருப்பது அரசரின் ஓலை" என்றாள்.

இராசேந்திரனுக்கு சுய உணர்வு வந்தது. "ஆமாம்!" என்று அசடு வழியச் சிரித்து அதை வாங்கிப் படித்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

‘இரத்தினாதேவி நம் விருந்தாளி. நான் இருந்தால் என்ன வசதிகள் செய்வாயோ அதைப் போன்று இவளுக்கும் செய்ய வேண்டும்!’ -என்று அதில் குறிப்பிட்டிருந்தது.

“மன்னிக்க வேண்டும்! உங்களை நீண்ட நேரம் உட்கார வைத்துவிட்டேன்! வாருங்கள் உள்ளே செல்லலாம்!” என்று மூவரையும் அழைத்துச் சென்றான் இராசேந்திரன்.

சில நொடிப் பொழுதில் மூவருக்கும் தனித்தனியாக அறைகள் ஒதுக்கப்பட்டு, அவர்களுக்கென்று காவல் வீரர்கள் போடப்பட்டனர். இரத்தினாதேவிக்கு கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க இரு பணிப்பெண்களை அமர்த்தினான். ‘எப்போதும் என்னைக் கூப்பிடலாம்’ என்று அவளிடம் தெரிவித்துவிட்டு மூவருக்கும் சரியான முறையில் வசதிகள் செய்யப்பட்டதா? இன்னும் ஏதாவது விட்டுப் போய்விட்டதா? என்று யோசித்தபடி தன்னுடைய அறைக்குள் நுழைந்தான் இராசேந்திரன்.

“குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும்!” என்ற கோட்டைத் தலைவன் குரலால் சிந்தனை கலையப் பெற்று, “என்ன?” என்றான்.

“யாரோ ஒரு சிவபக்தன்... மொட்டைத் தலையுடன் இருக்கின்றான். தங்களுக்கு முதலமைச்சரிடமிருந்து ஓலை கொண்டு வந்திருப்பதாகக் கூறுகின்றான். அவனை உள்ளே விடலாமா?” என்றான்.

மொட்டைத் தலையனா... என்று சிந்தித்த இராசேந்திரன், அவனைப் பற்றி நினைவு வந்தவன் போல, “முதலமைச்சரிடமிருந்தா?” என்று கேட்டான்.

“ஆமாம்!” என்று கோட்டைத் தலைவன் கூற, “அழைத்து வா!” என்று ஆணையிட்டுவிட்டு அறைக்குள் சென்றான்.

கோட்டைத் தலைவன் அவனை வணங்கிவிட்டு அகன்றதும், ‘இது என்ன! ஓலை மேல் ஓலை! சக்கரவர்த்தி ஒரு பக்கம்; முதலமைச்சர் ஒரு பக்கம். நம்மை ஒரு மாதிரி ஆக்கிவிடுவார்கள் போலிருக்கிறதே!’ என்று எண்ணியபடி கடார இளவரசியின் நினைவோடு இருக்கையில் அமர்ந்தான்.

ஆகா! பொன்னிற மேனி என்றால் அவளுக்குத்தான் தகும். உயர்ஜாதிப் புரவி போல் அவளின் பின்னழகு எத்தனை மிடுக்குடன் இருக்கிறது! அவளின் நடைக்கு இந்த உலகத்தையும் அதற்கு அப்பால் இருக்கின்ற வான மண்டலத்தையும் கொடுத்தால் கூட ஈடாகாது போலிருக்கிறதே. துருதுருவென்று அசையும் அவளின் அகன்ற கண்களில்தான் எத்தனை வசீகரம். இரத்தத்தைத் தோற்கடிப்பது போல் செக்கச் சிவந்த அந்த இதழ்களைக் கண்டிப்பாய்... நான்...


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதற்கு மேல் அவன் மனசாட்சி இரத்தினாதேவியைப் பற்றிச் சிந்திக்கவிடவில்லை. கங்காபுரிக் கோட்டையில் உன் வரவை எதிர்பார்த்து நாளும் உண்ணாமலும், உறங்காமலும் இருக்கும் மதுராந்தகியை மறந்துவிட்டாயா அரசகுமாரனே! என்று கேலியாகக் கேட்டது.

அந்தக் கேள்விக்குப் பதில் கூற முடியாமல் கைகளை மடக்கியபடி அறையைச் சுற்றிச் சுற்றி வந்த இராசேந்திரன் இவள் ஏன் இப்போது இங்கே வர வேண்டும்? மதுராந்தகி எப்படி இருக்கின்றாளோ என்று தன்னையே கேட்டுக் கொண்டான். இதெல்லாம் கொஞ்ச நேரம் என்கிற மாதிரி மறுபடியும் கடார இளவரசியின் நினைவு அவன் மனதில் தலைதூக்கியது. இவ்விதம் இரு பெண்களைப் பற்றி மாறி மாறி நினைத்து, அதனால் அவன் குழம்பிக் கொண்டிருக்கும் போது...

"வருங்கால சோழ இளவரசன் வாழ்க. மதுரையின் தற்காலிகப் பிரதிநிதியான உங்களுக்கு என் வணக்கங்கள்!" என்று கூறியபடி கோட்டைத் தலைவனுடன் உள்ளே நுழைந்தான் அம்மையப்பன்.

அவனை எதிரேயிருந்த ஆசனத்தில் உட்காரும்படிக் கூறினான் இராசேந்திரன்.

"சிவாய நம!" என்று முணுமுணுத்தபடி அமர்ந்தான் அம்மையப்பன்.

"முதலமைச்சரிடமிருந்து என்ன செய்தி?"

"நிறைய உண்டு!" என்று தன் இடுப்பிலிருந்த ஓலைச் சுருளை அவனிடம் தந்தான்.

அதைப் பார்த்த இராசேந்திரனுக்கு முகம் மாறியது.

கோட்டைத் தலைவன் அதைப் புரிந்து கொண்டு அறையிலிருந்து வெளியேறினான். "அப்படி என்ன எனக்கு அபாயம் வந்துவிட்டது?" என்று அம்மையப்பனைப் பார்த்து வினவினான் இராசேந்திரன்.

"ஒரு பெண்ணுருவில் வந்திருக்கிறது. அதுவும் கடார தேசத்திலிருந்து வந்திருக்கிறது!"

"என்னது?" புருவங்கள் நெரித்து நிமிர்ந்து இராசேந்திரன் உட்கார...

"ஆம், உங்களைக் கொல்லவே அவள் கடாரத்திலிருந்து வந்திருக்கிறாள். கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து நீங்கள் மதுரை வந்துவிட்டதால் சக்கரவர்த்தியிடம், அவருடைய நோய்க்கு மூலிகை கொண்டு வருவதாகக் கூறிவிட்டு இங்கே வந்திருக்கிறாள். பழி பாண்டியர் தலையில் விழ அவள் உங்களை..." என்று நிறுத்தி அவனைப் பார்த்தான் அம்மையப்பன்.

இராசேந்திரனுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“முதலமைச்சர் அவளை இங்கு வராமல் தடுக்க எவ்வளவோ முயற்சித்தார். ஆனால் சக்கரவர்த்தியிடம் அவளுக்கு இருக்கும் நன்மதிப்பைப் பயன்படுத்தி இங்கு வர அனுமதி வாங்கிக் கொண்டாள். அதனால் உங்களுக்கு எச்சரிக்கை செய்யவே என்னை அனுப்பினார்!” என்றான்.

அழகிய பெண் கூற்றுவனுக்குச் சமம் என்ற கருத்து கொண்ட பாடலின் வரிகள் அவன் நினைவுக்கு வந்தன.

“வஞ்சகி!” என்று பற்களைக் கடித்தான்.

“என் கடமை முடிந்துவிட்டது சோழப்பிரதிநிதி! இனிமேல் பக்குவமாக அவளை இங்கிருந்து கங்கைகொண்ட சோழபுரம் அனுப்பும் வழியைப் பாருங்கள்! நான் வருகின்றேன்!” என்று எழுந்து கரம் குவித்தான்.

“என்ன அம்மையப்பா, அதற்குள் புறப்பட்டுவிட்டாய்?” என்ற இராசேந்திரனிடம்,

“இந்தக் கட்டைக்கு ஓய்வு என்பதே கிடையாது. சோழ அரசுக்குத் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை நினைக்கும் போது, என் மனம் எப்படி ஓய்வை நாடும்? அதுமட்டுமல்லாமல் இங்கே மற்றுமொரு முக்கிய வேலை இருக்கிறது. சமயம் வரும் போது மறுபடியும் உங்களைச் சந்திக்கின்றேன்!” என்று அவனிடம் விடைபெற்றுக் கொண்டு கோட்டையிலிருந்து வெளிவந்தான்.

‘எப்படியும் தூமகேதுவின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து அதன் மூலம் தீவில் ஒளிந்து வாழும் பாண்டியனை அறிய வேண்டும். அதுவரை எனக்கு ஊணும் கிடையாது; உறக்கமும் இல்லை’ என்று பிரதிக்கினை செய்து புரவியை வேகமாகச் செலுத்தினான் அம்மையப்பன்.

## அத்தியாயம் - 26

**சோ**ழேந்திரன் என்ற பட்டப் பெயருடன் தொண்டை மண்டலப் பிரதிநிதியாக ஆட்சி புரியும் சோழச் சக்கரவர்த்தியின் இரண்டாவது மகனான மதுராந்தகன் காஞ்சி அரண்மனையில் முக்கிய வேலையாயிருந்தான்.

அவனுக்கு முக்கிய வேலையென்பது…

இளம் மகளிர்களுடன் உல்லாசமாய்ப் பொழுது போக்குவது. அந்த முறையில் பதினாறு வயது கூட நிரம்பாத அழகிய இளம் பெண்ணான அவளை அருகில் அழைத்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவள் கூலிக்குச் சேலை போடுபவள் என்றாலும், மன்னருக்குரிய பெருமையுடன் காஞ்சியை ஆளும் சோழப்பிரதிநிதி என்பதால் புன்முறுவலுடனே அவன் அருகில் வந்தாள்.

சிறு வயதுப் பெண் என்றாலும் அக்குலத்தைச் சேர்ந்தவள் என்பதால் மதுராந்தகன் எதிர்பார்த்ததுக்கு மேலாக சரச விளையாட்டில் தேர்ச்சி பெற்றவள் போல் அவனை மார்புற அணைத்தாள். கூரிய இரு முட்கள் சோழப்பிரதிநிதியின் மார்பைத் தைத்தது போல் அவனுக்கு உணர்வு தோன்றியது.

அதன் விளைவாய் தன்னையே மறந்த மதுராந்தகன் அவனுடைய கைகளை வழுவழுத்த அவளின் பின்னழகின் மென்மையில் மிக நளினமாகப் படரவிட்டான்.

அந்தப் படர்தலுக்கு ஏற்றவாறு அவ்விளம் பெண்ணும் தன் பின்னழகைப் பக்குவமாய்த் திருப்பினாள்.

மதுராந்தகனும் அந்த அழகிய பூங்கொடி போலிருந்த இளம் பெண்ணும் ஒருகணம் தன்னை மறந்தனர்.

அந்தச் சமயம் பார்த்து மூடப்பட்டிருந்த அறையின் கதவை அவளின் மெய்க்காப்பாளனான மாயசேகரன் 'தட தட'வென்று தட்ட...

"இந்த நேரத்தில் யார்?" என்று கோபமுடன் மதுராந்தகன் வினவி ஆடையைச் சரி செய்து கொண்டான். இளம்பெண் கதவைத் திறந்தாள்.

"குந்தள நாட்டுச் சக்கரவர்த்தியும், சோழச் சக்கரவர்த்தியின் மருமகனுமான விக்கிரமாதித்தர் வந்திருக்கின்றார்" என்றான் மாயசேகரன்.

செய்தியை அறிந்து சோழேந்திரன் 'இப்போதுதானா வந்து கழுத்தறுக்க வேண்டும்!' என்று எரிச்சலுடன் முணுமுணுத்தவாறு ஆடையைத் திருத்திக் கொண்டே அவரிடம் வருவதாகத் தெரிவிக்கும்படி மெய்க்காப்பாளனிடம் கூறினான்.

அவன் போனதும் இளம் பெண்ணின் கன்னத்தில் ஒரு முத்தம் வைத்து இன்னொரு நாளைக்குப் பார்க்கலாம் என்று குந்தள சக்கரவர்த்தியை வரவேற்பதற்காக வேகமாய் அங்கிருந்து வெளியேறினான்.

நால்வகைப் படைகளுடன் வந்த விக்கிரமாதித்தன். "என்ன சோழேந்திரா நலமா?" என்று விசாரித்தான். அவன் பக்கத்தில் குந்தள நாட்டிலிருந்து விக்கிரமாதித்தனைப் படையுடன் அழைத்து வர, அதிராசேந்திரனால் அனுப்பப்பட்ட வீரசோழ வேளான் இருந்தான். அக்காவின் கணவன் என்பதால் அவனை மிக்க மரியாதையுடன் வரவேற்றுப் படைகளுக்கு எல்லா வசதிகளும் செய்யும்படி உத்தரட்டான் மதுராந்தகன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பகல் உணவு முடிந்தது.

வீரசோழ வேளான், குந்தள நாட்டு மன்னன் ஆறாம் விக்கிரமாதித்தன், சோழேந்திரன் என்ற பட்டப்பெயருடைய மதுராந்தகன் ஆகிய மூவரும் சிறிது ஓய்வெடுத்துவிட்டு அடுத்து என்ன செய்வது என்ற ஆலோசனையில் இறங்கினார்கள்.

ஏற்கனவே காஞ்சி மாநகர நடவடிக்கைகளை மறைமுகமாகக் கண்காணிக்க சக்கரவர்த்தி வீரராசேந்திரன் அனுமதியோடு, முதலமைச்சர் பிரமாதிராசரால் அமர்த்தப்பட்டிருந்த சோழர் ஒற்றர்படையைச் சேர்ந்தவனும், திருவரங்கனின் பெரியப்பா முறையுமான இளம்சிங்கன் மூவரும் ஆலோசிக்க எண்ணியதை எப்படியோ அறிந்து, அவர்களுக்கு முன்பாக அவ்வாலோசனை அறைக்குள் நுழைந்து ஆயுதங்கள் வைக்கப்படும் பெரிய பேழையின் பின் சென்று ஒளிந்து கொண்டான்.

ஓய்வெடுத்துவிட்டு உள்ளே வந்த மூவரும் வாயிற் காவலனிடம் யாரையும் அனுமதிக்க வேண்டாமென்று உத்தரவிட்டு, உட்பக்கம் கதவைத் தாளிட்டு இருக்கையில் அமர்ந்து கொண்டனர்.

குந்தள நாட்டுச் சக்கரவர்த்தி சுற்றுமுற்றும் நோட்டம்விட்டு, “நம்மைத் தவிர இங்கே வேறு யாரும் இல்லையே?” என்று வினவினான் மதுராந்தகனிடம்.

“நம் ஒற்றன் இளம்சிங்கனைவிட்டு இந்த அறையைப் பார்க்கச் சொல்லிவிட்டேன்! அப்படி ஏதாவது இருந்தால் என்னிடம் தெரிவித்திருப்பான்” என்றான்.

“என்னப்பா இது... அவன் முதலமைச்சர் ஆளா? இல்லை நம் ஆளா? அவனைவிட்டு எப்படி இந்த அறையைப் பார்க்கச் சொன்னாய்?” என்றான் விக்கிரமாதித்தன்.

“சோழ ஒற்றர் பிரிவைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு விசுவாசமானவர்கள். அவர்கள் மேல் நாம் சந்தேகப்படக் கூடாது” என்றான் சோழேந்திரன்.

“நீ பொதுவாகச் சொல்கின்றாய்! நான் கேட்பது தனிப்பட்ட முறையில் அவனைப் பற்றி!” என்ற விக்கிரமாதித்தன், “இப்போது அவன் எங்கே?” என்றான்.

“இங்கேதான் இருப்பான். வேண்டுமென்றால் கூப்பிடட்டுமா?” என்று கேட்டான் சோழேந்திரன்.

“இம்மாதிரி முக்கிய நபர்கள் எங்கேயிருப்பார்கள் என்பதைப் பற்றிய விபரங்கள் உன்னிடம் எப்போதும் இருக்க வேண்டும்!” என்று குந்தள மன்னன் கூறவும், வீரசோழ வேளான் இருக்கையிலிருந்து எழுந்து, “அவனைக் கூப்பிடட்டுமா?” என்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"வேண்டாம். இப்போது எதற்கு அவன்? நம் சோழேந்திரன் நிர்வாகத்தில் எப்படியிருக்க வேண்டும் என்று சொன்னேன். சரி. ஆலோசனையைத் தொடங்குங்கள்!" என்றான்.

"கங்காபுரியென்னும் கங்கைகொண்ட சோழபுரத்தில் முதலமைச்சர் வைத்ததுதான் சட்டமாயிருக்கிறது. அரசர் நோய்வாய்ப்பட்டு இன்றோ நாளையோ என்றிருப்பதால் அவரைக் கைக்குள் போட்டுக் கொண்டு இவர் விருப்பம் போல் செயல்படுகிறார். நம் சோழ இளவரசர் அதிராசேந்திரருக்கு அடுத்து இராசேந்திரனை இளவரசனாக்க அரசரின் சம்மதத்தை வாங்கிவிட்டார் என்று தெரிகிறது. எனவே ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் தங்களை அழைத்து வரவே, குந்தள நாட்டிற்கு இளவரசர் அதிராசேந்திரர் என்னை அனுப்பினார்!" என்று வீரசோழன் மேலைச்சாளுக்கிய வேந்தனைப் பார்த்துக் கூறினான்.

மதுராந்தகனுக்கு முகம் மாறியது.

"என்ன திமிர் இருக்கும் இவர்களுக்கு?" என்று சாளுக்கிய வேந்தன் கோபத்துடன் பற்களைக் கடித்து, "இரந்து தின்னும் நாய்களுக்கு அரசுப்பட்டமா வேண்டும்?" என்றான் உரக்க.

"ஆரம்பத்திலிருந்தே முதலமைச்சர் என் பேரில் ஒரு கண்ணாக இருக்கின்றார். அவரை முதலில் அப்பதவியிலிருந்து விலக்க வேண்டும்" என்றான் மதுராந்தகன் கோபத்தோடு.

"என்னை இளித்தவன் என்றா நினைத்துவிட்டார்கள்? சோழ அரசுக்கு நான் மருமகப்பிள்ளை என்ற முறையில் அதிராசேந்திரனுக்கு பிறகு, சோழேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டாவிட்டால் என் பெயர் விக்கிரமாதித்தனல்ல!" என்றான் அந்த அறையே அதிரும்படி.

"கங்காபுரிக் கோட்டையின் நிர்வாகமும் நம் கைக்கு வரவேண்டும். சோணாட்டுத் தளபதி தன்மபாலர் முதல்மந்திரி சொல்வதற்கெல்லாம் தலையாட்டுகின்றார். அவர் தம்பி சிறிய தன்மபாலர் செய்யும் அட்டகாசத்துக்கு அளவேயில்லை. இதற்கு எல்லாம் முடிவு கட்டினால்தான் நம் கை ஓங்கும்!" என்றான் வீரசோழன்.

"சீக்கிரம் நாம் கங்கைகொண்ட சோழபுரம் புறப்படுவது நல்லது! இல்லையென்றால் அங்கே ஏதாவது நடந்தாலும் நடந்துவிடலாம்" என்றான் வீரசோழ வேளான் அவசரத்துடன்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"ஆமாம், நீ சொல்வது போல உடனே புறப்படுவதுதான் உத்தமம்" என்று மதுராந்தகன் பக்கம் திரும்பிய சாளுக்கிய மன்னன், "சோழேந்திரா, நீயும் என்னுடன் வா. அங்கேயே அதிராசேந்திரனுக்கு பிறகு உனக்கு இளவரசுப் பட்டம் கட்ட அரசரிடம் உறுதிமொழி வாங்கிவிடுகின்றேன்! எவன் என்னைத் தடுப்பது என்று பார்த்துவிடலாம்" என்றான் உறுதியான குரலில்.

"உங்களுக்கு எவன் தடை சொல்வது? நீங்கள்தான் சோழ நாட்டின் மருமகனாயிற்றே!" என்று வீரசோழ வேளான் கூற மூவரும் எழுந்து கொண்டனர்.

அவர்கள் போன சில நொடிகள் கழித்து இளம்சிங்கன் பேழையிலிருந்து வெளிவந்தான்.

அறையின் வாயிற்காவலனிடம், "எச்சரிக்கை! நான் இங்கே ஒளிந்திருப்பதைப் பற்றி யாரிடமும் மூச்சுவிடக் கூடாது. அப்படி மூச்சுவிட்டால்...!" என்ற இளஞ்சிங்கனிடம்,

"அப்படியே ஆகட்டும்! உங்களால் நான் வேலைக்கு அமர்த்தப்பட்டவனாயிற்றே! இதைக் கூடவா செய்யாமல் இருப்பேன்?" என்றான் வாயிற்காவலன்.

அங்கு நடந்த உரையாடல்களை மிகச் சுருக்கமாக ஓலைக் கீற்றில் வரைந்து, அதைப் புறாவின் காலில் கட்டிப் பறக்கவிட்டான் இளஞ்சிங்கன். அடுத்து சில நொடிகளில் வான் மண்டலத்தில் சிறகடித்துப் பறந்தது புறா.

## அத்தியாயம் - 27

**சா**ளுக்கிய சக்கரவர்த்தி ஆயிரம் வீரர்களுடன் காஞ்சியிலிருந்து கங்கைகொண்ட சோழபுரம் நோக்கி வருவதைத் தெரிவிப்பதற்காக முன்னால் ஒரு குதிரைவீரன் புறப்பட்டுவிட்டான்.

ஆனால், அதற்கு முன்பே இவர்கள் காஞ்சி வந்த செய்தியும் மூவரும் அறையில் விவாதித்த விஷயங்களும் அங்கிருந்து கங்கைகொண்ட சோழபுரம் நோக்கி வரும் விபரமும் முதலமைச்சருக்குத் தெரிந்துவிட்டது.

இது பற்றி அவர் அரசருடன் பேசினார். 'இப்போது எதற்கு விக்கிரமாதித்தன் இங்கே வர வேண்டும்! அதுவும் ஆயிரம் வீரர்களுடன்' என்று மன வருத்தமுற்ற சோழச் சக்கரவர்த்தி, மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று சிந்தனையில் ஆழ்ந்தார்.

அந்தச் சமயம் பார்த்துத்தான் பட்டத்தரசி உலகமுழுதுடையாள் ஒரு இரகசியத்தை வெளியிட்டார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"அதிராசேந்திரனுக்குப் பிறகு யாருக்கு இளவரசுப் பட்டம் கட்டலாம் என்பது பற்றி முதன்மந்திரியும் நீங்களும், நானும் பேசிய விவரங்கள் இராஜசுந்தரிக்குத் தெரிந்துவிட்டது" என்ற பீடிகையுடன் பேச்சைத் தொடர்ந்த அவர், "என்னுடைய பொக்கிஷ அறையிலிருந்து நம் எதிரிலிருக்கும் இந்தப் பொய்த்தூணிற்குள், இரகசிய வழி இருப்பது அவளுக்குத் தெரிந்தே இருக்கிறது! அதைப் பயன்படுத்திப் பொக்கிஷ அறையின் திறவுகோலை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டு, பொய்த்தூணிற் குள்ளிருந்தவாறு நாம் பேசிய அனைத்து விஷயங்களையும் தெரிந்து கொண்டுவிட்டாள். அதை வைத்து அதிராசேந்திரனுக்குத் தவறான செய்திகளைத் தந்து, தன் கணவனை சாளுக்கிய நாட்டிலிருந்து வரவழைத்திருக்கின்றாள்!" என்றாள் உலகமுழுதுடையாள்.

மாமன்னர் அதைக் கேட்டுத் திகைக்க, "நமக்கு எதிராக ஒரு கூட்டமே இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எப்போது நீங்கள் கண்ணை மூடுவீர்கள் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிராசேந்திரன் அரசரானதும் கடாரத்தில் வெற்றியீட்டி வந்திருக்கும் இராசேந்திரனை இங்கிருந்து விரட்ட திட்டம் போட்டுவிட்டார்கள். மதுராந்தகி இராசேந்திரன் திருமணம் நடைபெறக்கூடாது என்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்" என்றார் சோணாட்டுத் தளபதி.

அரசருக்கு ஆத்திரம் வந்தது. "இதையெல்லாம் ஏன் என்னிடம் முன்பே தெரிவிக்கவில்லை!" என்றார் சினத்துடன்.

"நீங்கள் உடல் நலமற்று அடிக்கடி மயக்கத்தில் ஆழ்ந்துவிடுவதால் இதையெல்லாம் கூறி உங்கள் மனதைப் புண்படுத்த வேண்டாம் என்று இருந்துவிட்டேன்" என்றார் முதன்மந்திரி.

"நாளைக்கே நாகை சோதிடரை இங்கே வரவழையுங்கள். நல்ல நாளில் மதுராந்தகி, இராசேந்திரன் திருமணம் நடைபெற ஏற்பாடு செய்கின்றேன். அந்தத் திருமணம் நடந்ததும் அதிராசேந்திரனுக்குப் பிறகு இளவரசுப் பட்டம் இராசேந்திரனுக்கே என்று நானே உறுதி செய்துவிடுகின்றேன்! எவன் வந்து தடுப்பது என்று பார்த்துவிடலாம்!" என்று உரத்த குரலில் கூறிய வீரராசேந்திரர், தளபதியின் பக்கம் திரும்பி, "நமக்கு எதிராக ஒரு கூட்டமே என்று சொன்னீர்களே. அது யார், யார் என்று தெரியுமா?" என்றார்.

"கொடும்பாளூர்க் குறுநில மன்னர் சயங்கொண்ட சோழ இருக்குவேள், இளவரசர் அதிராசேந்திரர், அவர் மனைவி இளையராணி, தங்கள் மகள்!" என்றார் சோழத் தளபதி.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"ஊர் இரண்டு பட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். அது போல் அந்தக் காலத்திலிருந்தே கொடும்பாளூரானுக்குக் கலகபுத்தி. கங்கைகொண்ட சோழபுர அரண்மனைக்கு அவன் அடிக்கடி வரும்போதே எனக்குச் சந்தேகம்தான். இருந்தாலும் என்ன செய்துவிட முடியும் என்று அலட்சியமாக இருந்துவிட்டேன். ம்... யாரையும் குறை சொல்லிப் பயன் இல்லை. என் உதிரத்தில் உதித்த மக்களே எனக்கு எதிராகச் செயல்படும் போது, யாரை நான் நோக முடியும்?" என்று மனதில் வருத்தம் மிக, முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார்.

அரசரின் கண்கள் கலங்கின, இருமல் அதிகமாகியது. உடலைக் குலுக்கித் குலுக்கி இருமத் தொடங்கினார். பட்டத்தரசி அவரின் நெஞ்சை நீவிவிட்டு "மருத்துவரை அழைக்கட்டுமா?" என்று பணிவுடன் கேட்டார்.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க "அரண்மனை மருத்துவன் ஒன்றும் பிரயோசனமில்லை. அந்தப் பெண் மதுரையிலிருந்து எப்போது வருவாள்?" என்று வினவினார் சக்கரவர்த்தி.

கடார இளவரசியைப் பற்றிச் சக்கரவர்த்தியிடம் சொல்ல இதுதான் நல்ல நேரம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது, திடீரென பேரரசர் 'அந்தப் பெண் எப்போது வருவாள்?' என்று கேட்கிறாரே; அவளைப் பற்றிச் சொல்வதா? வேண்டாமா என பிரமாதிராசர் யோசித்துக் கொண்டிருக்கும் போது சோழச் சக்கரவர்த்தியே "பிரமாதிராசனுக்கு அந்தப் பெண்ணைப் பற்றிச் சொன்னாலே பிடிக்கவில்லை போலிருக்கிறது" என்றார் வீரராசேந்திரர்.

முதன்மந்திரி சிந்தனை கலைந்து, "அப்படியில்லை மாமன்னரே! அவளும்..." என்று இழுக்க...

"பிரமாதிராசர் தடுமாறுகின்றார். முதலில் அவளை மதுரையிலிருந்து இங்கே வரவழைக்க ஏற்பாடு செய்யும்!" என்றார் திட்டமான குரலில்.

இதற்கு மேல் அவளைப் பற்றி ஏதாவது கூறினால் நமக்குத்தான் மூக்குடைப்பு ஏற்படும் என்று புரிந்து கொண்டு, 'நன்றாகவே அரசரைக் கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறாள்... கெட்டிக்காரப் பெண்' என்று மனதிற்குள் பாராட்டியபடி, "அப்படியே செய்கின்றேன் அரசே!" என்றார்.

"என்னமோ தெரியவில்லை, அந்தப் பெண் போனதிலிருந்து எனக்கு ஆரோக்கியமே போய்விட்டது போலிருக்கிறது!" என்ற மாமன்னர், "மேலைச்சாளுக்கியன் வந்தால் இங்கே குழப்பம் அல்லவா ஏற்படும்!" என்று சிந்தனைவயப்பட்டார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“நால்வகைப் படைகளுடன், எண்ணிறந்த வீரர்களுடன் போருக்குப் போவது போல கங்கைகொண்ட சோழபுரத்தை நோக்கி அவர் வருகின்றார்!” என்றார் சோழத்தளபதி.

“இங்கே வரவேண்டாம் என்று என் சார்பில் அவருக்கு ஒரு செய்தியை அறிவித்தால் என்ன?” என்று முதல்மந்திரியைக் கேட்டார் சோழச் சக்கரவர்த்தி.

“குந்தள மன்னரை இங்கே வரச்சொன்னது நம் இளவரசர் அதிராசேந்திரர். இப்போது நாம் வர வேண்டாம் என்று தடுக்கப் போய் அதனால் விரும்பத் தகாத விளைவுகள் ஏற்பட்டால்...?”

“என்ன அப்படிப் பெரியதாய் விரும்பத்தகாத விளைவு ஏற்பட்டுவிடும்? என் உத்தரவு என்று இரு வீரர்களை அனுப்பி தெரிவித்துவிடுங்கள். அவர்கள் வந்த வழியே திரும்பிப் போகட்டும்!” என்றார் அரசர் கோபத்துடனே.

“சக்கரவர்த்தி! தயவு செய்து நான் கூறுவதைக் கேளுங்கள். நீங்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் இந்நிலையில் உங்களுக்கும், இளவரசருக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுவிட்டது என்று வெளி உலகுக்குத் தெரிந்தால், இதைக் வைத்து நம் குறுநில மன்னர்கள் நாட்டில் கலவரத்தைத் தூண்ட முயற்சிக்கலாம். அதனால் அருள் கூர்ந்து இந்த ஒரு விஷயத்தில் என் கருத்தைக் கேளுங்கள்” என்றார் பிரமாதிராசர் பணிவுடனே.

“சரி. அப்படியென்றால் உங்கள் பேச்சுப் பிரகாரமே, குந்தள மன்னரை கோட்டைக்குள் படைகளுடன் அனுமதிக்கின்றேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். உள்ளே நுழைந்ததும் அவன் பங்காளியான இராசேந்திரனைச் சோழ இளவரசன் துணையோடு நாட்டைவிட்டு வெளியேற்றமாட்டான் என்பது என்ன நிச்சயம்? அத்துடன் மதுராந்தகனைக் காஞ்சியிலிருந்து அழைத்துக் கொண்டு வருகிறான் என்று கூறுகின்றீர்கள். என்ன நோக்கத்தோடு விக்கிரமாதித்தன் மதுராந்தகனோடு வருகின்றான்? அதிராசேந்திரனுக்குப் பிறகு சோழேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட வேண்டுமென்றுதான் வருகின்றான். இதையெல்லாம் எப்படி என்னால் அனுமதிக்க முடியும்? அதனால்தான் கூறுகின்றேன். வந்தபின் காப்பதைவிட, வருமுன்னரே காத்துவிட்டால் நல்லதாகப் போய்விடுகிறது!”

“பேரரசே! நீங்கள் சொன்னதெல்லாம் நடக்கத்தான் போகிறது! இல்லையென்று நான் கூறவில்லை. ஆனால் திடீரென இங்கே வர வேண்டாம் என்று மேலைச்சாளுக்கிய மன்னரை நாம் தடுத்து, அதை அவமானமகாக் கருதி அவர் பெரும்படையைத் திரட்டி நம்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மீது போர்தொடுத்தால் என்ன செய்வது? தற்போது இருக்கும் நிலையில் இதை நம்மால் சமாளிக்க முடியுமா? போரைப் பற்றிச் சொல்லவில்லை! நமக்கு எதிராக இளவரசர் அதிராசேந்திரர் அவருடன் சேர்ந்து கொண்டால்... அதற்காகத்தான் சொல்கின்றேன்!" என்ற பிரமாதிராசரை மேற்கொண்டு பேசவிடாமல் சோழச் சக்கரவர்த்தி இடைமறித்து...

"அதற்காக மாற்று யோசனை ஏதாவது வைத்திருக்கின்றீர்களா?" என்றார்.

"கோட்டைக்குள் அவர்களை அனுமதித்து, சொல்வதற்கெல்லாம் தலையாட்டியபடி மதுரையிலிருக்கும் இராசேந்திரனை திடீரென இங்கே வரவழைத்து அவருக்கும் மதுராந்தகிக்கும் திருமணத்தை நடத்திவிட வேண்டும்!" என்றார்.

"அந்தச் சமயத்தில் நிகழ்ச்சியை நடைபெறவிடாமல் அவர்கள் குழப்பத்தையுண்டு பண்ணினால்?"

"நாம் அதற்குள் நம் படைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். திருமண நிகழ்ச்சி நடைபெறும் போது அவர்கள் குழப்பத்திற்குத் தயாரானால் உடனே நாம் இளவரசரையும் விக்கிரமாதித்தனையும் வீட்டிற்குள்ளேயே மடக்கி வைக்கப்பட வேண்டும்" என்றார்.

"அதற்குப் பிறகு மட்டும் விக்கிரமாதித்தன் படைகளோடு போருக்கு வரமாட்டான் என்று எப்படி நம்புகிறீர்கள்?"

"இராசேந்திரனுக்குத் திருமணம் நடந்துவிட்டால் நமக்குப் பலம் கூடிவிடும் என்று நம்புகிறேன்! அத்துடன் ஆவேசத்துடன் வரும் அவர்களைத் தடுப்பதைவிட வந்தபின் அவர்கள் மெத்தனமாயிருக்கும் போது நாம் நம் கைவரிசையைக் காட்டுவது நமக்குச் சாதகமாய் அமையலாம் என்பது என் கருத்து" என்றார் முதன்மந்திரி.

சக்கரவர்த்தி சற்று நாம் சிந்தனையில் ஆழ்ந்து, "எனக்கு உடல் நலமில்லாது போனதால்தான் இவ்வளவு குழப்பமும். எனக்கு மட்டும் பழைய ஆரோக்கியம் இருந்தால், கதையே வேறு மாதிரி ஆகிவிடும்" என்று மெல்லக் கூறினார். பிறகு,

"நீங்கள் கூறியபடியே ஆகட்டும்!" என்று சம்மதித்து, "இப்போதிருந்தே சோழப் படைகளைக் கோட்டைக்குள் தயார் நிலையில் வையுங்கள்" என்றார்.

"முக்கியமாய் நம் நம்பிக்கைக்குரிய சிலர்... அதாவது சேதிநாட்டு மன்னன் முத்தன் காமன், துணைத்தளபதி சிறிய தன்மபாலர்... மற்றும் குறிப்பிடத்தக்க விதத்தில் இருப்பவர்கள்..." என்று கூறிக் கொண்டே வந்த சக்கரவர்த்தி, "எங்கே வீரசோழ இளங்கோ வேளான்? அவன் கொஞ்சம் துணிச்சல் பேர்வழியாயிற்றே. அவனையும் கோட்டை பாதுகாப்புக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாமே!" என்றார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"வீரசோழ வேளான்தான் குந்தள நாட்டிற்குச் சென்று விக்கிரமாதித்தனை இங்கே அழைத்துக் கொண்டு வருகின்றான்!" என்றார் சோழத் தளபதி.

"என்னது?" - திகைப்பினால் வினவிய அரசர், சோணாட்டுத் தளபதியை ஏறிட்டுப் பார்த்து, "என்னைக் கேட்காமல் எப்படி அவனை இவ்வளவு நீண்ட பயணத்துக்கு அனுமதித்தீர்?" என்றார்.

"அவன் குந்தள நாட்டிற்குப் போவது எனக்குத் தெரியாது. அவனை அனுப்பிவிட்டுப் பிறகுதான் சோழ இளவரசர் என்னிடம் தெரிவித்தார்."

"துரோகிகள்! தலைக்குத் தலை பெருந்தனம் அதிகமாகிவிட்டது! இந்நாட்டிற்கு சக்கரவர்த்தி ஒருவரா? அல்லது இருவரா? இனிமேல் என்னைக் கேட்காமல் எந்தக் காரியமும் நடைபெறக் கூடாது. முதலில் அந்தத் துரோகியைக் கைது செய்யுங்கள்" என்றார் உரக்க.

அரசரின் உத்தரவு ஓலையில் எழுதப்பட்டு திருமந்திர ஓலை நாயகத்தால் கையப்பமும் இடப்பட்டது.

அதே சமயம்...

கங்கைகொண்ட சோழபுரத்தை நோக்கி ஆறாம் விக்கிரமாதித்தனுடனும், அரசரின் இரண்டாவது மகனும், காஞ்சிப் பிரதிநிதியுமான மதுராந்தகனுடனும், எதிர்கால சோழ நாட்டின் தளபதி நான்தான் என்ற ஆனந்தக் கற்பனையில் மூழ்கியபடி புரவியைச் செலுத்தியவாறு வந்து கொண்டிருந்தான் வீரசோழ இளங்கோ வேளான்.

## அத்தியாயம் - 28

ஒரு வீட்டுக்கு மரியாதைக்குரிய மருமகன் வந்துவிட்டால், அந்த வீடு கலகலப்பில் ஆழ்ந்து ஒரே அமர்க்களத்தில் மூழ்கிவிடும்.

அதே போல...

சோழ நாட்டின் மருமகப்பிள்ளையான, ஆறாம் விக்கிரமாதித்தன் கங்கைகொண்ட சோழபுரம் நோக்கி வரும் போது அது எப்படியிருக்கும்?

இந்தக் கேள்விக்கு விடைதருவது போல வீதியெங்கும் தோரணங்களும் கோட்டை முழுமையும் - இரு நாட்டிற்குரிய கொடிகளுமாய் இருந்தன.

ஒவ்வொரு வீட்டின் முன்பகுதியும் நன்றாய் சாணத்தால் மெழுகப்பட்டு கமுகு, செந்நெல், மா, முதலியவற்றால் ஆன தோரணங்களால் அணி செய்யப்பட்டிருந்தன.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சக்கரவர்த்தி வீரராசேந்திரர் மட்டும் உடல் நலத்துடன் இருந்திருந்தால், இந்நேரம் அக்கங்காபுரியே தேவலோகப் பட்டணம் போன்று அலங்காரத்திலும், கோலாகலத்திலும் சூழ்ந்திருக்கும்.

குந்தள வேந்தரை வரவேற்க, சூரிய உதயம் ஆகி இரு நாழிகை கழித்து இளவரசன் அதிராசேந்திரன் முதல்மந்திரியுடன் கோட்டை வாயிலுக்கு வந்துவிட்டான். மக்களும் அவர்களை வரவேற்க, திரளாய்க் கூடி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

"சக்கரவர்த்தி வீரராசேந்திரர் வாழ்க!"

"காஞ்சிப் பிரதிநிதி சோழேந்திரர் வாழ்க!"

"குந்தள மாமன்னர் விக்கிரமாதித்தர் வாழ்க!" என்று மக்கள் முழக்கம் வானத் தொட....

கூட்டத்தை நோக்கிக் கையசைத்தபடி மேலைச்சாளுக்கிய மாமன்னனும், காஞ்சிப் பிரதிநிதி சோழேந்திரனும் கங்காபுரிக் கோட்டைக்குள் நுழைந்தனர்.

இளவரசர் அதிராசேந்திரன் மைத்துனனையும், அவனின் இளவலையும் மார்புறத் தழுவி வரவேற்றான். முதன்மந்திரி இருவருக்கும் மாலையிட, 'கீழைசோபனா' என்ற மாளிகை நோக்கி அனைவரும் சென்றனர்.

பின்னால் பெருந்திரளாய் வந்த மக்கட்கூட்டம் முன் வாயிலிலேயே தடுக்கப்பட்டது.

இளவரசர் அதிராசேந்திரனுடன் சோழச் சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்காக ஆறாம் விக்கிரமாதித்தனும், சோழேந்திரன் என்ற பட்டப் பெயருடைய மதுராந்தகனும் மாளிகைக்குள் புகுந்தனர்.

பின்னால் நுழைந்த வீரசோழ இளங்கோ வேளானை சோழத்தளபதி தன்மபாலர் தனியாக அழைத்தார்.

"என்ன தளபதியாரே?" என எதிர்காலத் தளபதி நான்தான் என்ற இறுமாப்பில் சற்றுக் கர்வமாகவே கேட்டான்.

"இப்படி வாருங்கள்!" என்று கூட்டத்திலிருந்து அவனைப் பிரித்துத் தனியாக அழைத்துச் சென்றார் தன்மபாலர்.

"விஷயத்தைச் சொல்லுங்கள். அங்கே மதுராந்தகரும், விக்கிரமாதித்தரும் என்னைக் காணவில்லையென்று தேடுவார்கள்!" என்றான் வீரசோழன் பரபரப்பாக.

இன்னும் கொஞ்சம் தள்ளி அவனை அழைத்துச் சென்ற தளபதி, "உன்னைக் கைது செய்யும்படி சோழச் சக்கரவர்த்தி எனக்குப் பணித்திருக்கின்றார்" என்றார்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"என்னது?" -திகைப்புடன் வினவிய வீரசோழன், "கைது செய்யும் அளவுக்கு நான் என்ன குற்றம் செய்தேன்?" என்றான் உரத்த குரலில்.

"இது அரசரைக் கேட்க வேண்டிய கேள்வி!" என்று அவனை நெருங்கினார் சோழத்தளபதி.

"நான் சிறைக்குப் போகுமுன் இளவரசர் அதிராசேந்திரரைப் பார்த்துவிட்டுத்தான் வருவேன்" என்று அங்கிருந்து வேகமாய்ப் போக முயல...

அவனை விட்டுவிட்டால் அப்புறம் நிலைமை மோசமாகிவிடும் என்று உணர்ந்த சோழத்தளபதி, "எங்கே போகிறாய் வீரசோழா. நில்!" என்றார் அதிகாரத்துடன்.

"இல்லை. நான் இளவரசரைப் பார்க்க வேண்டும். பிறகுதான் என் கைக்கு நீ விலங்கிட முடியும்" என்றான் பதட்டம் கலந்த குரலில்.

முரண்டு பிடிக்கும் அவன் அதிராசேந்திரனைப் பார்த்துவிட்டால் சூழ்நிலை அப்படியே தலைகீழாகிவிடும் என்று அறிந்த சோழத்தளபதி, கைகளைப் பலமாகத் தட்டினார்.

இதுவரை உருவிய வாளுடன் மறைவாய் நின்று கொண்டிருந்த வீரர்கள் பதினைந்து பேர் வீரசோழனைச் சூழ்ந்துது கொண்டனர்.

அவனும் தன் வாளை உருவி அவர்களைத் தாக்க முயல சடக்கென்று உள்ளே புகுந்த சோழத்தளபதி வீரர்கள் மேல் வீசப்பட்ட அந்த வாளைத் தன் வாளினால் அதே வேகத்தில் தடுத்து அவனையும் கீழே தள்ளினார்.

சற்றும் இதை எதிர்பார்க்காத அவன், கால் இடறிக் கீழே விழ, வாளுடன் இருந்த தளபதி வீரசோழன் கையைக் காலால் மிதித்துக் கொண்டு மார்பில் தன் வாளைப் பதித்தார்.

"அக்கிரமம்! இது அநியாயம்!" என்று உரக்க கத்தினான் வீரசோழன்.

அதற்குள் வீரன் ஒருவன் அவன் கையிலிருந்த வாளைப் பறித்துக் கொண்டான். இன்னொருவன் கைகளில் விலங்கிட்டு அவனைத் தரையிலிருந்து தூக்கினான்.

ஆனால் வீரசோழன் முரண்டு பிடித்துத் திமிறியபடி "இந்த அக்கிரமத்துக்கு நீங்களெல்லாம் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்" என்றான் உரக்க.

"வரவில்லையென்றால் அப்படியே தூக்கிக் கொண்டு சிறைக்குச் செல்லுங்கள்" என்று உத்தரவிட்டு தளபதி சிறைக்கூடம் வரை பின்னாலேயே சென்றார்.

வீரசோழன் சிறைக்குள் தள்ளப்பட்டான். "உனக்குத் தளபதி பதவி பறிபோய்விடப் போகிறது என்ற பயத்தில், மாமன்னரிடம் என்னைப் பற்றி ஒன்றுக்கு இரண்டாகச்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சொல்லி கைது செய்துவிட்டாய். இதற்குப் பதிலாய் உன்னை நான் இதே சிறையில் தள்ளாவிட்டால், என் பெயர் வீரசோழ இளங்கோ வேளான் இல்லை" என்று சபதம் செய்தான்.

'ஆத்திரத்துடனிருக்கும் அவனிடம் பேசுவது வீண்' என்று பூட்டிய சிறைக் கதவைச் சோதனையிட்டுவிட்டு, அங்கிருந்து செய்தியைச் சொல்வதற்காக சக்கரவர்த்தி இருக்கும் கூடத்தை நோக்கி வேகமாய் நடந்தார் சோழத்தளபதி.

பழி ஒரு பக்கம்; பாவம் ஓரிடம் என்பார்கள்! அதைப் போன்று கோபம் ஒரு பக்கம்; தண்டனை இன்னொருவனுக்கு என்பது போல சக்கரவர்த்தி வீரராசேந்திரர் தன் மகன் மேல் ஏற்பட்ட சினத்தைத் தணிக்க அவனுக்கு உறுதுணையாய் இருந்த வீரசோழ இளங்கோ வேளான் மேல் பாய்ந்தார். விளைவு? அவன் சிறையில் அடைக்கப்பட்டான்.

சற்று அதிகப் பிரசங்கித்தனமாக துணிச்சலுடனே சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்த அந்தச் சுத்தவீரன் மேல் தளபதி தன்மபாலருக்கு ஒரு கண் ஏற்கனவே இருக்கத்தான் செய்தது. அது தொழில் முறையில் ஒவ்வொருவரும் கொள்ளும் பொறாமைதான்!

அந்தப் பொறாமையின் விளைவும், இச்சூழலில் தன் மகன் மேல் காட்ட முடியாத சக்கரவர்த்தியின் கோபமும், அதிகப் பிரசங்கித்தனமாக தன்னிடம் கூடக் கூறாமல் குந்தள நாட்டிற்குச் சென்றுவிட்டானே என்று முதன்மந்திரிக்கு அவன் மேல் ஏற்பட்ட முனிவும், எல்லாமாய் ஒன்று சேர்ந்து அவன் சிறைக்குப் போக வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது.

தளபதி தன்மபாலர் சக்கரவர்த்தியிருக்கும் இடத்தை அடைந்ததும் அங்கே விக்கிரமாதித்தர் மாமன்னரின் பஞ்சணைக்கருகில் அமர்ந்திருந்ததைக் கண்டார்.

பக்கத்தில் மதுராந்தகன் கையைக் கட்டியபடி நின்று கொண்டிருந்தான். அளவுக்கு மீறிய பெண்களின் மோகத்தினால் அவனுடைய முகத்தில் இளமை குன்றியிருந்தது.

அதற்குச் சற்றுத் தள்ளி இளவரசர் அதிராசேந்திரர் இருந்தார். தந்தையைப் பற்றிய கவலை அவருக்கு இருந்தாலும், அதனூடே வெகு சீக்கிரத்தில் சோழச் சக்கரவர்த்தியாகப் போகிறோம் என்ற எண்ணத்தின் விளைவாய் ஏற்பட்ட ஒருவித மகிழ்ச்சி முகத்தில் இருக்கத்தான் செய்தது.

அதற்கு எதிர்புறமாக தன் கணவன் ஆறாம் விக்கிரமாதித்தன் படைகளுடன் வந்துவிட்டதால் தன் கை ஓங்கிவிட்டது என்ற நம்பிக்கையோடு இராஜசுந்தரி தெம்புடனே இருந்தாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சோழ வேந்தரின் கால்பக்கமாக அவரின் பட்டத்தரசியான உலகமுழுதுடையாள் கணவன் நிலைமை மோசமாகிவிட்டதே அவர் உடம்பு தேறாதா? என்று கவலையுடன் இருந்தாள்.

இவர்களைக் கவனித்தபடி அருகே முதன்மந்திரி சிறிது சோகத்துடனே இருந்தார்.

வீரசோழன் கைது செய்யப்பட்ட செய்தியைக் கூற வேண்டும் என்று அங்கே வந்த சோழத்தளபதி, பஞ்சணையில் மாமன்னர் கண்மூடியபடி படுத்துக் கிடப்பதையும், அருகே அனைவரும் மௌனமாய் நிற்பதையும் பார்த்துப் பதட்டத்துடன் அண்மையில் விரைந்து வந்தார்.

“சக்கரவர்த்தி. சக்கரவர்த்தி! உங்கள் மருமகன் வந்திருக்கின்றார் பாருங்கள்” என்றாள் உலகமுழுதுடையாள்.

இதுவரை கண்களை மூடியபடியிருந்த சக்கரவர்த்தி மெல்ல விழித்து, ஆறாம் விக்கிரமாதித்தனைப் பார்த்தார்.

அந்தப் பார்வையில்...

‘இப்போது ஏன் இங்கே வரவேண்டும்?’ என்ற கேள்வி இழையோட புன்னகையோடு, “எப்போது வந்தீர்கள்?” என்றார்.

“கொஞ்ச நேரம் முன்புதான்” என்று குந்தள மன்னன் கூறுவதற்குள் சக்கரவர்த்திக்கு இருமல் மிகுந்தது.

உடலைக் குலுக்கியபடி இருமிய சக்கரவர்த்தி முதன்மந்திரியின் பக்கம் திரும்பி, “அந்தப் பெண்ணை அழைத்து வர ஆளை அனுப்பிவிட்டாயிற்றா?” என்றார்.

“நீங்கள் சொன்ன அன்றே அனுப்பிவிட்டேன். மதுரையிலிருந்து அவர்கள் வரவேண்டியதுதான் பாக்கி!” என்றார் பிரமாதிராசர்.

உலகமுழுதுடையாளை அண்மையில் வரும்படிச் சைகை செய்த சக்கரவர்த்தி, “என்னை நிமிர்த்தி உட்கார வைத்தால் நன்றாக இருக்கும்!” என்றார்.

பணிப்பெண்ணின் உதவியால் இலவம் பஞ்சாலான தலையணைகளை அவர் முதுகுக்குப்பின் அடுக்கி, அதில் சாய்வாய் உட்கார வைத்து, “இப்போது பரவாயில்லையே?” என்றாள்.

“இன்னும் கொஞ்சம் சாய்வாக்கினால் நல்லது” என்று சக்கரவர்த்தி கூறவும், அவ்விதமே பணிப்பெண் தலையணைகளை சரிக்க...

அதில் சாய்ந்து கொண்டு, “இப்போது வசதியாகயிருக்கிறது” என்றார்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“உங்களைப் பார்க்க எனக்கு மிகவும் வருத்தமாயிருக்றது. எப்படியிருந்தீர்கள்? இப்போது எப்படி ஆகிவிட்டீர்கள்!” என்று ஆறாம் விக்கிரமாதித்தன் வருத்தத்துடன் கூறினான்.

“எல்லாம் காலத்தின் கோலம் மருமகனே. எனக்கு இப்போது மாகச் சனி. என் உயிர் போகும் வரை இப்படித்தான் என்னை ஆட்டிப் படைக்கும்” என்றார்.

அவருக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது; அதைத் தொடர்ந்து இருமலும் வந்தது.

“மருந்து...” என்று அவர் பணிப்பெண்ணைப் பார்க்க சிறிய பொற்பேழைக்குள்ளிருந்த குளிகையை எடுத்து வாயில் இட்டு மண் ஜாடியிலிருந்த நீரை வெள்ளிக் குவளையில் ஊற்றி அவரைக் குடிக்கச் செய்தாள்.

பட்டத்தரசி மாமன்னரின் மார்பை நீவிவிட்டாள். மருந்து உள்ளே போன சற்று நேரம் கழித்துத் தெம்புபெற்ற சக்கரவர்த்தி, கம்பீரமாகவே கனைத்துக் கொண்டார்.

“மருந்தால்தான் நான் இப்போதெல்லாம் உயிர்வாழ முடிகிறது” என்று புன்முறுவலுடனே ஆறாம் விக்கிரமாதித்தன் பக்கம் திரும்பி, “குந்தள நாட்டில் நல்ல விளைச்சல்தானே?” என்றார்.

“அமோகமான விளைச்சல். இந்த ஆண்டு எனக்கு நல்ல வருடம் என்றுதான் கூற வேண்டும்” என்றான் ஆறாம் விக்கிரமாதித்தன்.

“சந்தோஷம்!” என்ற வீரராசேந்திரர் காஞ்சிப் பிரதிதியான மதுராந்தகன் பக்கம் திரும்பி, “சோழேந்திரா! நலமாய் இருக்காயா? காஞ்சியின் நிலவரம் எப்படி இருக்கிறது?” என்றார்.

“அமைதியான சூழ்நிலைதான்” என்ற மதுராந்தகன், “தாங்கள் உடலைப் பற்றி மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்!” என்றான்.

அதைக் கேட்டுச் சக்கரவர்த்தி சிரித்தார். “என் இரண்டாம் மகனுக்கு என் பேரில் எவ்வளவு அக்கறை!” என்று கேட்டுவிட்டு, “நீ சொன்ன யோசனைப்படி நடக்கின்றேன்!” என்றார்.

உடனே ஆறாம் விக்கிரமாதித்தன் குறுக்கிட்டு, “மதுராந்தகனுக்கு உண்மையிலேயே உங்கள் பேரில் அளவிட முடியாத பாசம்தான். காஞ்சியைவிட்டு நான் புறப்படும் போதே தங்களைப் பார்க்க வருவதாகக் கூறினான். நான்தான் தற்போதுள்ள நிலையில் நீ காஞ்சியைவிட்டு வருவது அவ்வளவு நல்லதாகப்படவில்லை என்று கூடச்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சொன்னேன் ஆனால் அவன்தான் பிடிவாதமாகப் பார்த்துவிட்டு உடனே திரும்பிவிடுவதாக என்னுடன் வந்தான்" என்றான்.

"நல்லது. என் பிள்ளைகள் இவ்வளவு அக்கறையுடன் இருப்பதைப் பார்த்து உண்மையிலேயே நான் பெருமைப்படுகின்றேன்!" என்றார் சோழச் சக்கரவர்த்தி.

"காஞ்சியின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், மற்றும் அங்கு நிலவும் அமைதியையும் நான் பார்க்கும் போது, என்னால் மதுராந்தகனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. கை தேர்ந்த நிர்வாகத்தினன் போன்று அவன் அரசு அதிகாரிகளைச் செயல்பட வைக்கும் திறமை இருக்கிறதே, அதற்கு ஈடாக தங்களைத்தான் அவனுக்கு ஒப்பிட வேண்டும்" என்று சோழ மாமன்னர் வீரராசேந்திரரைப் புன்முறுவலுடன் பார்த்துக் கூறினான் குந்தள வேந்தன்.

ஏற்கனவே அவர்கள் என்ன நோக்கத்துடன் இங்கே வந்திருக்கின்றார்கள் என்பதைச் சோழ ஒற்றர் பிரிவைச் சேர்ந்த இளஞ்சிங்கன் மூலம் அறிந்து கொண்ட முதன்மந்திரி சொன்ன விஷயங்கள், அச்சமயம் சக்கரவர்த்திக்கு நினைவில் வந்தன. மேலைச்சாளுக்கியர் எதற்குப் பீடிகை போடுகின்றார் என்பதை அறிந்து பிரமாதிராசரிடம், "பிரயாணக் களைப்பு நீங்க குந்தள மன்னருக்கு உணவு படையுங்கள். ஓய்வெடுத்துவிட்டு வரட்டும். பிறகு சாவகாசமாகப் பேசலாம்" என்றார்.

ஆனால் ஆறாம் விக்கிரமாதித்தன், "பிறகு உண்கின்றேன்!" என்று கூறிவிட்டு, சக்கரவர்த்தியின் அருகே நெருங்கி, "தங்களிடம் ஒரு விண்ணப்பம்!" என்றான் தாழ்ந்த குரலில்.

எதைக் கேட்கப் போகின்றான் என்பதை மனதிற்குள் புரிந்து கொண்ட மாமன்னர், "என்னது?" என்று புரியாத குரலில் அவனைப் பார்த்து வினவினார்.

"தங்கள் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. அரசுப் பொறுப்பை அதிராசேந்திரரிடம் கொடுத்துவிட்டு, இளவரசுப் பட்டத்தை இப்போதே மதுராந்தகனுக்கு உறுதி செய்துவிடுங்கள்" என்றான்.

இதை முதலிலேயே எதிர்பார்த்திருந்ததால் முதன்மந்திரியின் பக்கம் திரும்பி, "மேலைச்சாளுக்கிய வேந்தர் சொன்னதைக் கேட்டீர்களா?" என்றார் வீரராசேந்திரர்.

"கேட்டேன்!" என்று அவர் பணிவுடன் கூற...

மௌனமாய் யோசனையில் ஆழ்ந்த சக்கரவர்த்தி மதுராந்தகனைப் பார்த்து, "சோழேந்திரா!" என்றார் அன்புடனே.

"என்ன தந்தையே?" என்றான் பணிவோடு.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“உனக்கு நான் எது செய்தாலும் தந்தை என்ற முறையில் நன்மைதான் செய்திருப்பார் என்று உத்தம மகனான நீ அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வாய் அல்லவா?” என்று கேட்டார்.

“ஆம், இதில் என்ன சந்தேகம்?” என்றான் அழுத்தமுடன்.

“நல்லது!” என்று ஒருகணம் கண்களை மூடிய சோழச் சக்கரவர்த்தி விழிகளைத் திறந்து, மதுராந்தகனை அன்புடன் உற்று நோக்கினார். பிறகு “உனக்கு நான் இளவரசுப் பட்டம் என்று உறுதி செய்யாமல் வேறு ஒருவனுக்குச் செய்துவிடுகின்றேன் என்று வைத்துக் கொள்வோம்! அதற்காக உத்தமமகன் என்ற முறையில் நீ கோபிக்கமாட்டாய் அல்லவா?” என்றார்.

மதுராந்தகனுக்கு முகம் மாறியது. மறைத்துக் கொள்ள வேண்டி தலைகுனிந்து கொண்டான்.

“சக்கரவர்த்தியின் மனதை யாரோ மாற்றிவிட்டார்கள். எந்த நாட்டிலும் ஒவ்வொரு தந்தையும் தன் மகனுக்குத்தான் இளவரசுப் பட்டம் கட்டி நான் பார்த்திருக்கின்றேன்” என்றான் ஆறாம் விக்கிரமாதித்தன் சற்று உரக்கவே.

அதைக் கேட்ட வீரராசேந்திரர் உணர்ச்சி வயப்படாமல் விக்கிரமாதித்தனைப் புன்முறுவலுடனே கவனித்து, “என் மருமகன் மிக உணர்ச்சிவயப்பட்டுவிட்டார் என்று நினைக்கின்றேன்” என்றார்.

“ஆமாம். என் மைத்துனனுக்கு இளவரசுப் பட்டம் என்று இல்லாது எங்கிருந்தோ இங்கு இரந்து தின்ன வந்திருக்கும் ஒரு பிச்சைக்கார ஓநாய்க்கு இளவரசுப் பட்டம் என்றால் சோழ நாட்டின் மேல் மிகுந்த அக்கறை கொண்ட தங்கள் மருமகனான எனக்கு ஆத்திரம் வராமல் வேறு என்ன வரும்?” என்றான்.

சக்கரவர்த்தி உதடுகளைக் கடித்துக் கொண்டார். கோபத்தினால் முகம் சிவந்து காணப்பட்டது. இருந்தாலும் பொறுமையுடன் அதை அடக்கிக் கொண்டு, “என்ன சொன்னீர்?” என்றார் அழுத்தமாக.

“மதுராந்தகனைத் தவிர வேறு யாருக்கும் இளவரசுப் பட்டம் என்று நீங்கள் உறுதி செய்யக் கூடாது என்று கூறுகின்றேன்!” என்று அதைவிட அழுத்தமாகக் கூறினான்.

சக்கரவர்த்தி சப்தமாகவே சிரித்தார். அதன் விளைவாய் இருமல் வெளிப்பட்டது. அதற்காக அவர் பலமாய் இரும...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

உலகமுழுதுடையாள் அவரின் நெஞ்சை நீவியபடி சூழ்நிலையை அத்துடன் முடித்துக் கொள்வது எல்லோருக்கும் நல்லது என்ற எண்ணத்தில், “பிறகு பேசலாமே. உங்களுக்குத்தான் தற்போது உடல்நலமில்லாது இருக்கின்றதே” என்றாள்.

“இது முக்கியமான விவகாரம். இதில் போய் உடல்நலமில்லை என்று பார்ப்பது எனக்குப் பின்னால் நாட்டில் குழப்பம்தான் ஏற்படும்!” என்ற அவர், “நான் தற்போது நிலவும் சோழ நாட்டின் சூழலை வைத்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன்” என்றார்.

“சக்கரவர்த்தி அவர்களை நான் மறுத்துப் பேசுவதாக நினைக்க வேண்டாம். தற்போதிருக்கும் சூழலை ஆராய்ந்துதான் நானும் சொல்கின்றேன். மதுராந்தகனைத் தவிர வேறு யாருக்கும் இளவரசுப் பட்டம் என்று உறுதி செய்தால், நாட்டில் குழப்பம்தான் ஏற்படும்” என்றான் சினத்தோடு.

சோழ வேந்தருக்குக் கோபம் கொப்பளித்தது. “என்னைப் பயமுறுத்துவதாகத் தெரிகிறது!” என்றார்.

“இல்லை, பின்னால் நடக்கும் விஷயத்தை முன்கூட்டியே சொல்கின்றேன்!”

“பின்னால் என்ன நடக்கும் என்று தெரிந்துதான் நானும் இந்த முடிவுக்கு வந்துள்ளேன்!” என்று அதற்கு மறுமொழி தந்தார் மாமன்னர்.

“உங்களின் முடிவு ஒருதலைப் பட்சமானது. நோயுற்று குழப்பத்திலிருக்கும் தங்கள் மனதை யாரோ மாற்றிவிட்டதின் விளைவு இது!” என்றான் குந்தள மன்னன்.

சோழ அரசர் அவனை மௌனமாகவே ஏறிட்டு நோக்கி, “என்னை யாரும் மாற்றவில்லை, மாற்றும் அளவுக்கு நான் குழப்பத்திலும் இல்லை. ஆண்டவன் அருளால் மிகத் தெளிவாகவே இருக்கின்றேன்” என்றார் அழுத்தமுடன்.

“இல்லை; உங்கள் மனம் மாற்றப்பட்டுவிட்டது. இதை நீங்கள் மறுத்தாலும், உங்கள் மனச்சாட்சி மறுக்காது” என்று மீண்டும் கூறினான் உறுதியாக.

“என்ன இதெல்லாம்? மரியாதைக்குரிய சோழச் சக்கரவர்த்தியிடம் இப்படியா நீங்கள் பேசுவது? எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை!” என்றாள் பட்டத்தரசி வருத்தம் தோய்ந்த குரலில்.

“இது உரிமைப் பிரச்சினை. உயிருடனிருக்கும் சிறு புழு கூட தனக்கிருக்கும் உரிமையைவிட்டுக் கொடுக்காது. நீங்கள் அமைதியாயிருங்கள்! நாங்கள் இவரை எதிர்த்துப் பேசவில்லை. எங்கள் பக்கமிருக்கும் நியாயத்தை அவருக்குப் புரிய வைக்கவே இம்மாதிரி பேசுகின்றேன்” என்றான் விக்கிரமாதித்தன் திட்டமாக.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"ஓ... இறக்கை முளைத்துவிட்டதல்லவா? அப்படித்தான் பேசுவீர்கள். ஆனால், நான் நாற்பது வயதுவரை என் தமையன்மாரின் முகத்தைக்கூட ஏறிட்டுப் பார்த்ததில்லை. அவ்வளவு மரியாதை கொடுத்து வாழ்ந்ததால்தான், இப்போதும் நான் ஆட்சி பீடத்தில் இருக்கின்றேன்! ஆனால் இப்போது காலம் கெட்டுப் போய்விட்டது" என்று கோபத்துடன் மௌனமுற்ற சோழ மாமன்னர், மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க தொடர்ந்து பேசுவதை நிறுத்திக் கொண்டார்.

பட்டத்தரசி அருகில் வந்து அவரின் நெற்றியை வருடிய படி, "ஏன் பதட்டத்துடன் பேசுகின்றீர்கள்? நிதானமாய் இருங்கள்!" என்று கண் கலங்கக் கூறி, சரிந்துவிட்ட தலையணையை நிமிர்த்தி அவரை அதில் சாய்த்துவிட்டாள்.

"மன்னர் உடல் நலம் எய்திய பிறகு, நிதானமாய்ப் பேசி ஒரு முடிவு எடுக்கலாம். இப்போதிருக்கும் நிலையில் இதெல்லாம் வேண்டாம். குந்தள மன்னரை அழைத்துக் கொண்டு போய், அவருக்கு உணவு முதலிய வசதியைச் செய்துகொடு" என்றாள் அதிராசேந்திரனிடம்.

"அதிராசேந்திரனுக்குப் பிறகு மதுராந்தகனுக்குத்தான் இளவரசுப் பட்டம் என்று சக்கரவர்த்தியின் வாயால் கூறும்வரை நாங்கள் இந்த இடத்தைவிட்டு நகரப் போவதில்லை" என்றான் ஆறாம் விக்கிரமாதித்தன் திட்டமான குரலில்.

அந்த வார்த்தையைக் கேட்ட சோழ மன்னர் சினத்தின் உச்சிக்கே சென்றார்.

"பிரமாதிராசா! இப்போதே இராசேந்திரனை உடனே புறப்பட்டு வரும்படி மதுரைக்கு ஆள் அனுப்பு" என்றார் கட்டளைக் குரலில்.

அந்தக் குரலில் தொனித்த உறுதியைக் கண்டு, அனைவரும் திகைத்துவிட்டனர். முதன்மந்திரிக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. வெளிப்படையாக அரசர் இவ்விதம் கூறிவிட்டதால் இதற்கெல்லாம் காரணம் நான்தான் என்று இவர்கள் நினைக்கப் போகின்றார்கள். எதிராளிக்கு இவரின் வெளிப்படையான அறிவிப்பினால் இன்னும் கொஞ்சம் கோபம் கூடப்போகிறது! அதனால் அவர்கள் எப்படியும் மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட வேண்டும் என்பதில் முழுமூச்சுடன் செயல்படுவார்கள். நோய் முற்றிவிட்டதால் அரசர் அடிக்கடி நிதானத்தை இழந்துவிடுகின்றார். என்ன செய்வது என்ற எண்ணத்துடன் 'நீங்கள் இம்மாதிரி பதட்டப்பட்டு வார்த்தைகளை இவர்களிடம் கொட்டியிருக்க வேண்டாம்!' என்று பொருள்படும் விதத்தில் அரசரைப் பார்த்தார் முதன்மந்திரி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆனால் மாமன்னரோ, “ஏன் இன்னும் நிற்கின்றாய்! இது சக்கரவர்த்தியின் கட்டளை. கூப்பிடு அந்த திருமந்திர ஓலை நாயகனை!” என்று அந்த அறை அதிரும்படி உரத்த குரலில் முழங்க...

அதன் விளைவாய் அடுத்தகணமே மயக்கத்தில் ஆழ்ந்தார்.

“என்னப்பா இதெல்லாம்! இதற்குத்தான் அப்போதிருந்தே சொல்லிக் கொண்டு வந்தேன்!” என்று பட்டத்தரசி கலக்கத்துடன் கதறினாள்.

முதன்மந்திரி அரச மருத்துவரை அழைத்து வரும்படிக் காவலனைப் பணித்தார்.

ஓடி வந்த மருத்துவர் நாடிபிடித்து, “உணர்ச்சி வயப்பட்டதின் விளைவு இது” என்று ஒரு குளிகையை எடுத்துத் தேனில் குழைத்து நாவில் தடவினார்.

நொடிகள் கடந்து கொண்டிருந்தன.

“நாடி இயல்பான நிலைக்கு வந்துவிடும். இன்னும் சற்று நேரத்தில் அரசர் கண் விழிக்கலாம்! அதற்குப் பிறகு யாரும் அவருக்குத் தொந்தரவு கொடுக்காமல் இருப்பது நல்லது” என்றார்.

பட்டத்தரசியைத் தவிர அனைவரும் அங்கிருந்து அகன்றனர்.

## அத்தியாயம் - 29

இரவு...

பல்லி மூன்று முறை ‘இச்... இச்’ என்றது.

“நான் சொன்ன யோசனையைப் பல்லிகூட ஆமோதித்துவிட்டதால் நமக்கு வெற்றிதான்” என்று அந்த அறையே அதிரும்படிக் கூறினான் குந்தள நாட்டு மன்னனான ஆறாம் விக்கிரமாதித்தன்.

‘கீழை சோபனா’ என்ற பெயருடைய கடைசி அடுக்கில் ஆறாம் விக்கிரமாதித்தருக்கு என்று ஒதுக்கப்பட்ட அறையில், இளவரசன் அதிராசேந்திரன் காஞ்சிப் பிரதிநிதி மதுராந்தகன், இராஜசுந்தரி, இளையராணி ஆகியோரும் உடன் இருந்தனர்.

சயங்கொண்ட சோழ இருக்குவேளைச் சோழச் சக்கரவர்த்தி ‘இங்கே என்ன உனக்கு வேலை? கலகம் பண்ணவா?’ என்று கேட்டுவிட்டதால், ‘நமக்கேன் வம்பு’ என்று அவர் கொடும்பாளூருக்குப் பயணமாகிவிட்டார்.

அதனால் அன்றைய ஆலோசனையில் அவர் இல்லை.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“பிரமாதிராசர் அசந்துவிட்டார் இனிமேல் நம்மைக் கண்டால் அவருக்குப் பயம்தான்” என்ற பீடிகையுடன் ஆரம்பித்தாள் இராஜசுந்தரி.

“ஆமாம்! நோயுற்ற நிலையில் இன்றோ நாளையோ என்று இருக்கும் சோழச் சக்கரவர்த்தியைக் கையில் போட்டுக் கொண்டு அவர் பண்ணின அட்டகாசத்துக்கு இனி மேல் ஒரு முடிவு வந்துவிட்டது” என்ற ஆறாம் விக்கிரமாதித்தன் “ஒரு யோசனை... மதுரைக்குக் கலகத்தை அடக்கச் சென்றிருக்கும் இராசேந்திரனை அங்கேயே தீர்த்துக் கட்டிவிட்டு, பழியைப் பாண்டியர் தலையில் போட்டுவிட்டால் என்ன?” என்று உற்சாகத்துடனே அனைவரையும் பார்த்துக் கேட்டான்.

“நீங்கள் இப்போது சொல்லும் இந்த யோசனையை நாங்கள் எப்போதோ அமுலாக்க மதுரைக்கு ஆள்கூட அனுப்பிவிட்டோம். அநேகமாய் இந்நேரம் இராசேந்திரன் கொல்லப்பட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை” என்றாள் இராஜசுந்தரி.

“சபாஷ்! என் மனைவிக்கு நன்றாகவே மூளை வேலை செய்கிறது. கொல்வதற்கு அனுப்பிய ஆள் யார்?” என்றான்.

“ஒரு பெண். கடார தேசத்திலிருந்து வந்தவள்!” என்ற இராஜசுந்தரி அவளைப் பற்றிய முழு விபரத்தையும் குந்தள நாட்டு மன்னனுக்குத் தெரிவித்தாள்.

“பழி வாங்கத் துடிக்கும் ஒரு பெண்ணிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு விட்டதால் இந்நேரம் அவள் காரியத்தை முடித்திருப்பாள் என்றே நம்பலாம். அது சரி... நம்முடன் வந்த வீரசோழ வேளான் எங்கே?”

“அவனைத்தான் நானும் தேடிக் கொண்டிருக்கின்றேன். சரியான பதில் இல்லை. ஒருவேளை சொந்த ஊருக்குப் போயிருக்கலாம். எனக்குக் கூட தெரியாது என்று முதன்மந்திரி ஒரு மாதிரியாகப் பதில் சொன்னார்!” என்றான் இளவரசன் அதிராசேந்திரன்.

“என்னப்பா இது வேடிக்கை. சோழப் படையில் முக்கிய பொறுப்பு வகிக்கும் அந்நபர் சொல்லாமல் கொள்ளாமல் போவது என்றால்... அதுவும் முதலமைச்சருக்குத் தெரியாது என்று சொல்கிறார். இதில் ஏதோ சூட்சுமம் இருப்பதாகத் தெரிகிறது” என்ற விக்கிரமாதித்தன், “ஒருவேளை அவனைச் சிறையில் போட்டிருப்பார்களோ?” என்றான்.

“அந்த அளவுக்கு முதன்மந்திரிக்குத் துணிவு கிடையாது; அத்துடன் சிறை செல்லும் அளவுக்கு அவன் ஒரு குற்றமும் புரியவில்லையே?” என்றான் சோழ இளவரசன்.

“இல்லை... இந்த முதல்மந்திரி பிரமாதிராசர் இருக்காரே... அவர் சூழ்ச்சிகளில் கைதேர்ந்த நபராகத் தெரிகிறது. அதனால் எதற்கும் நீ சிறைக் கூடத்தையெல்லாம் ஒரு பார்வை பார்த்துவிடுவது நல்லதாகப்படுகிறது” என்றான்.

“அப்படியே செய்கின்றேன்” என்று சம்மதித்த அதிராசேந்திரன், “சோழச் சக்கரவர்த்தியின் உடல்நிலை நாளுக்கு ஒன்றாக இருப்பதால், திடீரென மதுரையிலிருக்கும் வேங்கியானை வரவழைத்து சோழ அரசு அதிகாரிகளையும் குறுநில மன்னர்களையும் வைத்துக் கொண்டு இவனுக்குத்தான் இளவரசுப் பட்டம் கட்ட வேண்டும் என்று சொன்னால்? நாம் எப்படி அதைச் சமாளிப்பது?” என்றான் அதிராசேந்திரன்.

“வேங்கியான் மதுரையிலேயே எமலோகம் போய்விடுவான் என்று சொன்னீர்களே!” என இராஜசுந்தரியைப் பார்த்தவாறு குந்தள மன்னன் கேட்க,

“எனக்கு அதில் பூரண நம்பிக்கையிருக்கிறது! ஒருவேளை அவன் ஆயுள் கெட்டியாயிருந்து தப்பித்துக் கொண்டால்?” என்று திருப்பிக் கேட்டாள் இராஜசுந்தரி.

“ஓ! இப்படி ஒன்றா?” என்று தலையைச் சொறிந்த ஆறாம் விக்கிரமாதித்தன் “அங்கே அவன் தப்பித்துக் கொண்டு இங்கே வந்துவிட்டாலும் என் படைத்தலைவனை விட்டுக் கொன்றுவிட்டால் போகிறது” என்றான். பிறகு,

“பட்டத்தரசி உலகமுழுதுடையாளை நம் பக்கம் ஈர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் நம் பக்கம் வந்துவிட்டால் மதுராந்தகனுக்கு நிச்சயம் இளவரசுப் பட்டம் கட்டினாற் போலத்தான்” என்றான் உறுதியான குரலில்.

“அதுதான் முடியாது; நமக்கு முதல் எதிரியே அந்த அம்மையார்தான்” என்று குறுக்கிட்டாள் இராஜசுந்தரி.

“என்ன?” - வியப்புடன் குந்தள மன்னன் அவளைப் பார்க்க...

“ஆமாம்! எனக்குப் பிறகு இராசேந்திரனுக்குத்தான் இளவரசுப் பட்டம் கட்ட வேண்டும் என்பதில் அவர்கள்தான் தீவிரமாக இருக்கின்றனர்” என்று குறுக்கிட்டுச் சொன்னான் அதிராசேந்திரன்.

“நல்ல வேடிக்கைதான்! ஒரு அன்னை தான் பெற்ற மகனுக்கு இளவரசுப் பட்டம் வேண்டாம் என்று சொல்வதை சோழ அரசில் தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது. இதற்குப் பிறகு நாம் முயற்சிப்பது வீண்தான் என்று தோன்றுகிறது” என்று கூறியவாறு சிந்தனையில் ஆழ்ந்தான் குந்தள மன்னன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“அன்னையா அவள்? ஈவு இரக்கம் இல்லாத அரக்கி. அதற்காக நீங்கள் என்னைக் கைவிட்டுவிட்டால், நான் எங்கே போவேன்? என் உயிரையே மாய்த்துக் கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியே இல்லை” என்று இதுவரை மௌனமாயிருந்த மதுராந்தகன் ஆத்திரத்துடன் குறுக்கிட்டான்.

“மதுராந்தகா! இந்தக் குந்தள மன்னன் இருக்கும் வரை நீ எதற்கும் கவலைப்பட வேண்டாம். நான் இரண்டு முக்கிய பொறுப்புகளை நிறைவேற்றவே இப்போது மேலைச்சாளுக்கிய நாட்டிலிருந்து இங்கே வந்திருக்கின்றேன். ஒன்று இளவரசன் அதிராசேந்திரன் இந்நாட்டின் மன்னனாக்கப்பட வேண்டும். இரண்டு காஞ்சிப் பிரதிநிதியான நீ சோழ நாட்டின் இளவரசனாக்கப்பட வேண்டும். இரண்டையும் நிறைவேற்றாமல் நான் இந்த கங்கைகொண்ட சோழபுரத்தைவிட்டு நகரப் போவதில்லை! அதனால் நீ எதற்கும் கவலைப்பட வேண்டாம்! நான் இருக்கின்றேன்!” என்று அவன் அருகில் சென்ற விக்கிரமாதித்தன்,

“துணிவுடன் இரு! ஏன் ஒரு மாதிரி உம்மென்று இருக்கின்றாய். வருங்கால சோழ நாட்டின் இளவரசன் என்றால் எப்படி கம்பீரமாய் இருக்க வேண்டும் தெரியுமா?” என்று தன் மார்பை நிமிர்த்திக் காண்பித்து, அவனைத் தட்டிக் கொடுத்தான்.

அப்போது-

தாம்பூலம் தரித்து அதை மென்று கொண்டிருந்த இராஜசுந்தரி துப்புவதற்காக காலதரின் அருகில் சென்றாள்.

அடுத்தகணம்-

‘வீல்’ என்று அவள் அலற...

“என்ன, என்ன?” என்று அனைவரும் ஓடி வந்தனர்.

“வெள்ளை... முக்காடு... ஒன்று...” என்று குளறியபடியே வாய் வராமல் சைகையால் காலதரை ஒட்டியிருந்த மாமரத்தின் கிளையைக் காண்பித்தாள்.

ஆறாம் விக்கிரமாதித்தன் தலையை வெளியே நீட்டி எட்டிப் பார்க்க, மெல்லிய வெள்ளைத் துணி ஒன்று கிளையில் சிக்கியபடி காற்றில் பறந்து கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து கிளையிலிருந்து மாளிகையின் உச்சிப்பகுதியில் யாரோ தாவினாற் போன்ற பிரமை! சடக்சென்று அவன் பறந்து கொண்டிருந்த வெள்ளைத் துணியைப் பற்ற, மேலிருந்து அதை யாரோ பலத்துடன் இழுப்பது போன்று தோன்றவே, ஆறாம் விக்கிரமாதித்தனும் பிடியைவிடாமல் தன் முழுப் பலத்தையும் செலுத்தித் துணியை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இழுக்க, மூன்று முழ நீளத்திற்கு 'டர்'ரென்று கிழிந்து போன வெள்ளைத்துணி ஒன்று அவன் கைக்கு வந்தது.

உடனே பரபரப்போடு, "மாளிகையின் உச்சிப் பகுதிக்குப் போக வழியிருக்கிறதா?" என்று கேட்டான்.

"இருக்கிறது!" என்று அதிராசேந்திரன் கூறியதும், "எனக்கு வழிகாட்டு!" என்று வாளை உருவிக் கொண்டான். இளவரசன் அதிராசேந்திரனும் வாளை உருவியபடி "என்ன விஷயம்?" என்று வினவ, "பேசுவதற்கு இது நேரமல்ல" என்று படபடப்புடன் கூறிய குந்தள மன்னன், தன் கையிலிருந்த வெள்ளைத் துணியை, "பத்திரம்!" என்று இராஜசுந்தரியிடம் கொடுத்துவிட்டு இளவரசன் அதிராசேந்திரனுடன் மாளிகையின் உச்சிக்கு ஓடினான்.

இதுவரை இருக்கையிலிருந்த மதுராந்தகனையும், "நீயும் போய் என்னவென்று பார்!" என்று இராஜசுந்தரி விரட்ட அவனும் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

கிளையிலிருந்தபடி அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த வெள்ளை முக்காடிட்ட உருவம், சட்டென்று இராஜசுந்தரி தாம்பூலத்தை உமிழ வருவாள் என்று எதிர்பார்க்கவில்லை. அதனால் அவள் 'வீல்' என்று அலறவும், மிகவும் சங்கடமான நிலைமை வந்துவிட்டதையுணர்ந்த உருவம் சட்டென்று கிளையிலிருந்து காலதருக்கு மேலிருந்த அலங்கார முகப்பில் காலை வைத்துத் தாவி மாளிகையின் உச்சியை அடைந்தது. அப்படித் தாவும் போதுதான் தலையில் முக்காடு போட்டிருந்த வெள்ளைத் துணி சரிந்து, காற்றில் பறந்தபடி கிளையில் சிக்கிக் கொண்டது. இந்தச் சமயத்தில்தான் விக்கிரமாதித்தன் அதைப் பார்த்துவிட்டுத் துணியைப் பற்றிக் கொண்டான். உச்சிக்குச் சென்ற உருவம் அங்கிருந்தபடி துணியை இழுக்க விக்கிரமாதித்தனும் விடாமல் பலங்கொண்ட மட்டும் இழுத்ததால் துணி கிழிந்து மூன்று முழ நீளத்திற்கு அவன் கையில் சிக்கிக் கொண்டது! போனால் போகட்டும் என்று மேலே முக்காடு இல்லாமல், உச்சிப் பகுதியிலிருந்து மாளிகைக்குச் செல்லும் மரப்படிகளை நோக்கி ஓடியது.

ஆகா! இந்த உருவத்தின் உயரம்தான் என்ன? இப்போது முக்காடு இல்லாமல் அதன் பின் பகுதி மட்டும் நமக்கு தெரிய... நிச்சயம் அது ஒரு பெண் அல்ல என்று புலப்படுகிறது. நடையில்தான் எத்தனை வேகம்!

ஆனால் அதே மரப்படிகளில் யாரோ தன்னை நோக்கி ஓடிவருகின்றார்களே. அது யார்? ஒருவேளை தன்னைப் பார்த்துவிட்ட விக்கிரமாதித்தனாக இருக்கலாம். அதனால் மரப்படி வழியாக மாளிகைக்குள் செல்வது ஆபத்து என்பதை உணர்ந்த உருவம் மீண்டும்

வந்த வழியே திரும்பி, வருவது வரட்டும் என அதே மரக்கிளையில் இறங்க. அதற்குள் உருவிய வாட்களுடன் உச்சியை அடைந்துவிட்ட, விக்கிரமாதித்தனும் இளவரசன் அதிராசேந்திரனும் மறுபடியும் அது மரக்கிளையில் இறங்குவதைப் பார்த்து பின்னால் வந்த மதுராந்தகனைக் காலதருக்குப் போகும்படி விரட்ட... அவனும், “தமக்கையே!” என்ற குரல் எழுப்பியபடி “பலகணிப் பக்கம் மீண்டும் உருவம் இறங்குகிறது” என்று கூவியபடி திரும்பி ஓட... அறையின் முன் பக்கம் நின்று கொண்டிருந்த இருபெண்களும் வேகமாய் காலதரின் பக்கம் செல்ல... அதற்குள் அது அப்பகுதியைக் கடந்து கொண்டிருந்தது.

அப்படிக் கடக்கும் போது தன்னை நோக்கி ஓடிவந்த இரு பெண்களும், தன்னை யாரென்று கவனித்துவிடாமல் இருப்பதற்காக கிழிந்து போய் மீதியிருந்த வெள்ளைத் துணியையும் அவர்கள் முகத்தை மறைக்கும்படி விட்டெறிந்தது.

உருவம் அவர்களைத் தாண்டுவதற்கும். அந்த துணி திரைபோல் அவர்கள் முகத்தை மூடுவதற்கும் சரியாக இருந்தது.

“சீ! என்ன இது?” என்று முகத்திலிருந்த துணியை விலக்கி இரு பெண்களும் பலகணி வழியாக கீழே எட்டிப் பார்ப்பதற்குள் அது கீழ் அடுக்கிலிருந்த இன்னொரு காலதரின் வழியாக மாளிகைக்குள் புகுந்து மறைந்துவிட்டது.

அதே சமயம் உச்சிப் பகுதிக்கு ஓடிவந்த இருவரும், உருவம் இறங்கிய மரக்கிளையின் பக்கம் வந்து கீழே எட்டிப் பார்த்தனர்.

அப்போதுதான் அது மாளிகைக்குள் புகுந்து மறைத்தது. அது மரக்கிளையை ஒரு கையால் பிடித்து, மறுகையில் காலதரைப் பற்றித் தாவிய போது விரலில் அணிந்திருந்த மோதிரத்தில் பதித்திருந்த வைரக்கல்லின் ஒளி, நிலவொளியில் பிரதிபலித்து எட்டிப்பார்த்த விக்கிரமாதித்தன் கண்களைக் கூசச் செய்தது.

‘அப்பா! எத்தனை நீளமான விரல்கள். அது அணிந்திருந்த மோதிரம்... அந்த மோதிரத்திலிருந்த வைரக்கல்லின் ஒளி... அக்கல் மிக உயர்ந்ததாக இருக்க வேண்டும்! அப்படியென்றால் உருவம்...?’

சிந்தனை வயப்பட்ட விக்கிரமாதித்தனை பின்னாலிருந்த இளவரசன் அதிராசேந்திரன் தோளைத்தொட்டு “தப்பிவிட்டதா?” என்றான்.

“ஆமாம்!” என்று தலையாட்டிய குந்தள மன்னன் மெல்ல திரும்பினான்.

“நான்கு பக்கமும் வீரர்களைவிட்டுத் தேடினால் என்ன?” என்று சோழ இளவரசன் பரபரப்புடன் வினவ...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“அதனால் பயன் இல்லை. இந்நேரம் அவ்வுருவம் தன் வேடத்தைக் கலைத்துக் கொண்டிருக்கும்” என்றான்.

“என்னது?” - வியப்புடன் அதிராசேந்திரனிடமிருந்து கேள்வி தோன்றியது.

“ஆமாம். வெள்ளை முக்காடு போட்ட உருவத்திற்குள், இன்னொரு பெரிய மனிதர் இருக்கின்றார். அது யார்? இதைக் கண்டு பிடித்துவிட்டால் நம் எதிராளியின பலத்தில் பாதி குறைந்துவிடும்” என்றான் குந்தள வேந்தன்.

“என்னது, ஒரே புதிராக இருக்கிறது?” என்று அதிராசேந்திரன் கேட்க...

“ஆமாம்! நம்முடைய இரகசியங்களை அறிந்து கொள்வதற்கு வெள்ளை உருவத்தைத்தான் நம் எதிரிகள் பயன்படுத்துகிறார்கள். அந்த உருவம் யாராக இருக்கலாம்?” என்று சிந்தனையுடன் சோழ இளவரசன் பக்கம் திரும்பிய மேலைச்சாளுக்கியன், “சோழ நாட்டின் தலைமை ஒற்றன்... இல்லையென்றால் முதன்மந்திரி. அதுவும் இல்லையென்றால் சோழத்தளபதி. அதுவும் இல்லையென்றால் பட்டத்தரசி. எதுவுமே இல்லையென்றால் நமக்குப் போட்டியாக இருக்கும் வேங்கியான். இவர்களில் யாராவது ஒருத்தர்தான் அந்த வெள்ளை முக்காடு போட்ட உருவமாக இருக்க வேண்டும்” என்று அழுத்திக் கூறினான்.

“எப்படித் தீர்க்கமாகச் சொல்கின்றீர்கள்?”

“அந்த உருவம் அணிந்திருந்த மோதிரத்தை வைத்துச் சொல்கின்றேன். மோதிரத்திலிருந்த கல்லை சாதாரண நபர்களால் நிச்சயம் வாங்க முடியாது. நான் மாளிகையின் உச்சியில் நிற்கின்றேன். அந்த உருவம் இருக்கும் இடம் என்னிடமிருந்து சுமார் முன்னூறு முழ தூரத்துக்கு மேல் இருக்கும். இரவில் நிலவொளியில் என்னமாய் என் கண்களைக் கூச வைப்பது போல், அந்தக் கல் பளிச்சிடுகிறது. அதிராசேந்திரா! இனிமேல்தான் நீ மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். என்னைக் கூட இனிமேல் நீ நம்பக் கூடாது. சுவர்களுக்கும் காதுகள் உண்டு என்ற வார்த்தைக்கு இப்போதுதான் உண்மையான பொருளை அறிந்து கொண்டேன்!” என்று கூறியபடி மரப்படியிலிருந்து இறங்கி இருவரும் அவர்களிருந்த அறையை அடைந்தனர்.

“என்ன ஆயிற்று?” என்று மதுராந்தகன் பரபரப்போடு வினவினான்.

“தப்பித்துவிட்டது!” என்றான் விக்கிரமாதித்தன்.

“வெள்ளைத் துணியின் மற்றொரு பகுதியைக் கையில் வைத்திருந்த இராஜசுந்தரி “இதை எங்கள் முகத்தில் வீசிவிட்டு, நாங்கள் யாரென்று அதைக் கண்டு பிடிக்காமல் செய்துவிட்டது” என்றாள் வருத்தத்தோடு.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“கெட்டிக்கார உருவம்தான்!” என்ற குந்தள மன்னன், “இல்லை நம் எதிரிகள் மிகவும் கெட்டிக்காரத்தனமாகச் செயல்படுகின்றனர்” என்று அவளிடமிருந்த மீதித் துணியை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

“இதே போன்று நாங்கள் ஆலோசனையில் இருந்த போது, இந்த வெள்ளை முக்காடு போட்ட உருவம் எங்கள் அறையின் முன் வந்தது. அச்சமயம் மாளிகையை வலம் வந்த துணைத்தளபதி உருவத்தைக் கண்டு அதை நெருங்குவதற்குள் துணியை அவர் முகத்தில் விட்டெறிந்து தப்பித்துக் கொண்டது” என்றான் சோழ இளவரசன்.

“நிச்சயம். இல்லையென்றால் நான்தான் வெள்ளை முக்காடு உருவம். என்னைப் பிடித்துக் கொள் என்றா முன்னால் வந்து நிற்கும்” என்று கூறியபடி, ஏற்கனவே இராஜசுந்தரியிடம் தந்த மூன்று முழத்துணியையும் கேட்டு வாங்கிக் கொண்டான்.

இரண்டையும் ஒன்றாக வைத்து கிழிந்த பகுதியைப் பொருத்திப் பார்த்தான். நன்றாகப் பொருந்தவே, இரு துணிகளும் ஒன்றுதான் என்ற முடிவுக்கு வந்து, “இந்தத் துணியை யார் அணிந்து நீ பார்த்திருக்கின்றாய்?” என்று அதிராசேந்திரனைக் கேட்டான் குந்தள வேந்தன்.

நீண்ட நேரம் அவன் உற்று உற்றுப் பார்த்துவிட்டு ஒன்றும் புரியாமல் குழம்பிக் கொண்டிருந்தான்.

“ஆனால் ஒன்று மட்டும் எனக்குப் புலனாகிறது. இந்தத் துணியை ஆண்கள் நிச்சயம் உடுத்த முடியாது. பெண்கள்தான் உடுத்தியிருக்க வேண்டும்” என்று முடிவுக்கு வந்த விக்கிரமாதித்தனை இடைமறித்த இராஜசுந்தரி, “உண்மை! நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. இப்போதுதான் எனக்கும் நினைவுக்கு வருகிறது. இது என் அன்னையார் அணியும் ஆடை. நான் நிறைய முறை அவர்கள் அணிந்து பார்த்திருக்கின்றேன்” என்றாள் உற்சாகமான குரலில்.

அதற்குப் பிறகு இளவரசன் அதிராசேந்திரனும் துணையைத் தொட்டுப் பார்த்துவிட்டு, “தங்கை சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை” என்றான்.

“ஆ...! இப்போதுதான் எனக்கும் ஒரு வழி கிடைத்திருக்கிறது. இன்னும் பத்து தினங்களில் இந்த வெள்ளை முக்காட்டை யாரென்று கண்டுபிடிக்கவில்லையென்றால் என் பெயர் விக்கிரமாதித்தனில்லை” என்று சூளுரைத்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 30

மிகுந்த நம்பிக்கைக்கு உரியவனை அனுப்பி மதுரையிலிருந்து இராசேந்திரனை வரவழைக்க வேண்டும் என்று திட்டமிட்ட முதன்மந்திரி அதைச் செயலாற்றும் முறையில் யாரை அனுப்பலாம் என்று சோழத் தளபதியுடன் ஆலோசித்தார்.

ஒற்றர் படையில் இருக்கும் அரசரின் நம்பிக்கைக்கு உரியவனான காரனை விழுப்பரையன் பெயரைச் சோணாட்டுத் தளபதி கூற அவனைக் கூப்பிட்டனுப்பினார் பிரமாதிராசர்.

ஏற்கனவே ஒருவன் இரத்தினாதேவியை அழைத்துவர அனுப்பப்பட்டுவிட்டான். தற்போது இன்னொருவன்? என்ன செய்வது? சூழ்நிலை அம்மாதிரி இருக்கிறது.

இரத்தினாதேவியும், இராசேந்திரனும் ஒன்றாக கங்கைகொண்ட சோழபுரம் வரமுடியாது! பலே கைகாரியான இரத்தினாதேவி நடுவழியில் இராசேந்திரனுக்கு ஆபத்து விளைவித்தாலும் விளைவித்துவிடலாம். எவ்வாறு திட்டமிட்டுத் திறமையோடு செயல்பட்டாலும் அடுத்த கணம் என்ன நடக்கும் என்பதை நம்மால் அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியவில்லையே!

அத்துடன் இராசேந்திரன் மதுரையில் இருப்பதாகவும் அவனைக் கொல்ல இரத்தினாதேவி அங்கே போயிருக்கின்றாள் என்பதையும் மனதில் வைத்துத்தான் அவனுக்கு எதிராகச் செயல்படுபவர்கள் மேற்கொண்டு இதுவரை அவனுக்கு எதிரிடையாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றார்கள்.

அதனால் நாம் அதைப் பயன்படுத்திக் கொண்டு இராசேந்திரனை இரகசியமாய் யாருக்கும் தெரியாமல் மதுரையிலிருந்து இங்கே வரவழைத்து திடீரென அவனுக்குத் திருமணத்தை முடித்துவிட வேண்டும்.

கடைசி வரையில் இராசேந்திரன் மதுரையில் இருக்கின்றான் என்ற நம்பிக்கையை அவர்கள் மனதில் உண்டுபண்ணிவிட்டாலே அதுவே நமக்குப் பெரிய வெற்றிதான் என்ற முடிவுக்கு வந்த முதன்மந்திரி, காரனை விழுப்பரையனை மதுரைக்கு அனுப்பி இராசேந்திரனை இரகசியமாய் மாறுவேடத்தில் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அழைத்துவர வேண்டும் என்று திட்டமிட்டார்.

இங்கே அவன் மதுராந்தகியைக் கைப்பிடிக்கும் வரை இராசேந்திரன் மதுரையில் இருப்பதாகவே ஒரு வீண் பிரமயை எதிரிகளுக்கு ஏற்படுத்த வேண்டும். சோழச் சக்கரவர்த்தியின் கூற்றுப்படி இராசேந்திரனை இங்கே வரவழைக்க ஒரு வீரன்


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

எல்லோருக்கும் தெரியும் விதத்தில் மதுரை புறப்பட வேண்டும். அவன் மதுரை சேரும்வரை, எதிரிகளின் கவனம் அவன் மேல்தான் இருக்கும். அதைப் பயன்படுத்தி இங்கே நாம் திருமணக் காரியங்களை வெற்றிகரமாக முடித்துவிடலாம் என்ற எண்ணத்தோடு காரனை விழுப்பரையனுக்கு பிரயாண வசதிகள் செய்து கொடுத்துப் புரவியில் இரகசியமாய் அவனை மதுரை போகும்படி அனுப்பி வைத்தார்.

அதே சமயம்...

வலையிலிருந்து நழுவிவிட்ட மீனாக இராசேந்திரன் இரத்தினாதேவியின் மோகன வலையில் சிக்காமல் ஒதுங்கிக் கொள்ள, அவனை மோகன வலையில் சிக்க வைத்து அவன் உயிரைப் பறிக்கும் தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள் கடார இளவரசி.

மதுரை மாளிகையின் இரண்டாவது அடுக்கின் சாளரத்தில் நின்றவாறு தூரத்தில் தெரிந்த வைகை நதியையும் அதையட்டியிருந்த அடர்த்தியான காட்டையும் பார்த்தபடி, "எத்தனை இயற்கையுடன் இது மிக அழகாக இருக்கிறது! இம்மாதிரி ஒரு இடம் நம் நாட்டில் இல்லையே!" என்று பெருமூச்சுவிட்டபடி இருந்தாள்.

அப்பொழுது 'சரக் சரக்' என்று காலணியின் சத்தம் கேட்டது. அதனால் சிந்தனை கலையப் பெற்றுத் திரும்பினாள்.

மதுரையின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக சோழ அரசினரால் அனுப்பப்பட்ட இராசேந்திரன் கம்பீரநடை நடந்தபடி வந்து கொண்டிருந்தான்.

இரத்தினாதேவியின் விழிகளது கால்பகுதி மட்டுமே திறந்த நிலையில் அவனைப் பார்த்த கடார இளவரசி தற்போது முன்பக்கமாய்த் திரும்பி இமைகளை முழுக்க விரித்து பார்வையில் ஆவல் கொப்பளிக்க அவனைப் புன்முறுவலுடன் நோக்கினாள்.

பதிலுக்கு அவன் உதடுகளிலும் புன்முறுவல் நெளிந்தது. அடுத்தகணமே அதை மறைத்துக் கொண்டு, "கடார இளவரசியாருக்கு வேலை ஒன்றும் இல்லை போலிருக்கிறது!" என்றான் சிரித்தவாறு.

"தாங்கள் சொல்வது தவறு. அதோ பாருங்கள்!" என்று தூரத்தில் தெரிந்த வைகையைச் சுட்டினாள்.

அண்மையில் வந்த இராசேந்திரன், "வெறும் வைகையைச் சுட்டுகின்றீர்கள்!" என்றான்.

"நன்றாக உற்றுப் பாருங்கள்! அதில் நதி மட்டுமா தெரிகிறது?" என்றாள் குறுநகையுடனே.

"ஆம்! என் கண்களுக்கு நதி மட்டும்தான் தெரிகிறது!" என்றான் உறுதியாக.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“எனக்கு அதற்கு அப்பால் ஒன்று தெரிகிறது” என்று தன் கூர்விழிகளை அவன் மீது பரப்பி முறுவலித்துச் சொன்னாள்.

“அதற்கு அப்பால் என்ன தெரிகிறது!” என்று மீண்டும் அதை உற்று நோக்கிய இராசேந்திரன், “என் சிற்றறிவுக்கு ஒன்றுமே புலப்படவில்லை!” என்றான்.

“நதிக்குப் பக்கத்திலேயே அடர்ந்த காடு ஒன்று இருக்கிறது பார்த்தீர்களா?” என்றாள்.

“ஆம்; காடு இருக்கிறது. அதற்கு என்ன இப்போது?” என்றான் சற்று எரிச்சலுடனே.

“அந்தக் காட்டில்தான் மாமன்னருக்குத் தேவைப்படும் மூலிகை இருக்கிறது!” என்ற இரத்தினாதேவி, “தாங்கள் என்னுடன் கூட வந்தால் அதைக் கண்டுபிடித்துவிடலாம்!” என்றாள்.

‘ஆகா! என்ன சூழ்ச்சியைக் கையில் வைத்துக் கொண்டு என்னை அங்கே கூப்பிடுகின்றாள்?’ -என்று சிந்தனை வயப்பட்ட அவன்... அவளை மேலும், கீழும் பார்க்க...

“வாருங்கள். சோழச் சக்கரவர்த்தியின் உயிர் காப்பாற்ற வேண்டும் என்பதில் உங்களுக்கு அக்கறையில்லையா?” என்று மயக்கும் மொழியில் அவனைக் கேட்டாள்.

“இருக்கிறது. ஆனால் எனக்கு அத்துடன் ஒரு ஐயமும் தோன்றுகிறது” என்றான்.

“என்னது?”

“நான் வந்தால்தானா அந்த மூலிகை கிடைக்கும்? இல்லையென்றால் கிடைக்காதா?” என்றான் இராசேந்திரன் இளநகையோடு.

“ஆமாம். அதில் எந்தவிதச் சந்தேகமுமில்லை. மூலிகை என்பது உடனே போய்ப் பறித்துவிடுவது அல்ல. பல நாட்கள் பல இடங்களில் கஷ்டப்பட்டுத் தேட வேண்டும். அப்படித் தேடும் நபர் ஒருவர் அல்ல. பலர்... இப்போது கூட அந்த நாட்களை நான் நினைக்கின்றேன். என் குருநாதருடன் காடுகளில் அலைந்த நாட்களை நினைக்கும் போது, கால்கள் வலித்த வலி இருக்கிறதே! அப்பப்பா சொல்லும் தரமன்று?” என்றாள்.

“மூலிகையைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது? நான் எப்படி உன்னுடன் வந்து தேட முடியும்?” என்றான் இராசேந்திரன்.

“அதன் அடையாளங்களை உங்களுக்குச் சொல்வேன். அதை வைத்துக் கொண்டு நீங்கள் அக்கறையுடன் தேடினால் கிடைக்கும். அத்துடன்...” என்று நிறுத்திய அவள்,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சிவந்த அந்த இளம் இதழ்களில் மென்மையாய் ஒரு சிறிய புன்முறுவலையும் நெளியவிட்டாள்.

அதைப் பார்த்த இராசேந்திரன் இந்த இதழ்களுக்கு அந்தச் சிறிய முறுவல் எத்தனைப் பொருத்தமாய் இருக்கிறது! என்று வியந்து அதற்குமேல் அதைப் பார்த்தால் தன் மனதிற்குள் அம்மாயக்காரி புகுந்துவிடுவாள் என்று எச்சரிக்கையடைந்து, பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

“ஏன் வேறு பக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்டீர்கள்? என்னைக் கண்டால் உங்களுக்குப் பயமா?” என்றாள் வேண்டுமென்றே.

“பயமா? சே... சே... எனக்குத் தலைக்கு மேல் வேலை இருக்கிறது! வேண்டுமானால் உங்களுக்குத் துணையாக வேறு ஒரு ஆளை அனுப்புகிறேன்!” என்று அங்கிருந்து நழுவப் பார்த்தான்.

“வேறு ஆளா? உங்கள் கண்களுக்கு இருக்கும் சிறப்பு அந்த நபருக்கு இருக்குமா?”

“என் கண்களுக்கு அப்படி என்ன சிறப்பு இருக்கிறது?”

“சட்டென்று யாரையும் கவர்ந்துவிடும் தன்மை! செடிகளோடு செடியாக இருக்கும் மூலிகை, நீங்கள் போனவுடன் உங்கள் கண்களுக்கு இருக்கும் வசீகரத்தில் மயங்கி எளிதில் அது புலப்பட்டுவிடும்!”

“மூலிகை என்பது பெண்ணா?”

“ஆம்! அந்த மூலிகை பெண் இனத்தைச் சேர்ந்தது!”

“எப்படி அவ்வளவு திட்டமுடன் சொல்கின்றாய்?”

“எனக்கு அனுபவம் இருக்கிறது. இந்தக் கண்களுக்காக என்னையே உங்களுக்கு அர்ப்பணித்துவிட்டு இப்போது நான்...” என்ற அவளை, இராசேந்திரன் சிரித்துக் கொண்டே இடைமறித்து, “இனிமேல் தாங்கமாட்டேன்! எனக்குத் தலைக்கு மேல் அலுவல்!” என்று அங்கிருந்து நகரத் தொடங்கினான்.

“கொஞ்சம் நில்லுங்கள்! இன்னும் நான் வார்த்தையை முடிக்கவில்லையே!”

“அதற்குள் நான் முடிந்து போவேன்” என்று கூறியபடி, சிரித்தவாறு அங்கிருந்து நடக்கத் தொடங்கினான்.

தன் மாய வலையில் அகப்படாத ஆத்திரத்தினால், அவளின் விழிகள் இரண்டும் சிவந்தன.

“இந்தக் கடார இளவரசி எடுத்த சபதத்தை நிறைவேற்றியே தீருவாள்!” என்று அழுத்திக் கூறியபடி அங்கிருந்து தன் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

எதிரே...

திருவரங்கன் வந்து கொண்டிருந்தான்.

நின்று அவனை நோக்கி முறுவலித்தாள்.

அவன் நடப்பதை நிறுத்தி, “என்ன இளவரசி?” என்றான் இளம் நகையோடு!

“தங்களின் வீரமிக்க நடை என்னைக் கவர்ந்துவிட்டது. அதனால் தங்களைப் பார்த்து முறுவலித்தேன். ஏன் அம்மாதிரி நான் செய்வதை நீங்கள் விரும்பவில்லையா?”

“இப்படி ஒரு வார்த்தையை உங்களிடமிருந்து கேட்பதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!” என்றான் திருவரங்கன்.

என் வலையில் சிக்கக் கூடிய பல முட்டாள் மீன்களில் இது முதல்தரமான மீன் என்று மனதில் நினைத்துக் கொண்ட அவள் அவனைப் பார்த்து மயக்கும் விதத்தில் சிரித்தாள்.

“உங்களுக்கு இருக்கும் மேதாவிலாசத்தை நினைக்கும் போது எனக்கு வியப்பு ஏற்பட்டது. அதன் விளைவாய் நான் சிரிக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கபட்டேன்” என்றாள்.

“மிக அழகாகப் பேசுகின்றீர்கள்!” என்று அவன் பாராட்ட...

“அதைவிட அழகாக இல்லையா நான்?” என்று வினவினாள்.

“நிச்சயம்!” என்றான் அழுத்தமாய்.

“அந்த அழகு எத்தனை நாளைக்கு என்னிடம் இருக்கும்?” என்று திருப்பி அவனைக் கேட்டாள்.

“கொஞ்ச காலம் வரை...” என்ற அவன் தலை குனிந்தான்.

“இந்த அழகைப் பயன்படுத்த உங்களைவிடப் பொருத்தமான ஆள் எனக்கு இருப்பதாகத் தெரியவில்லை!” என்று தன் விழிகளை மெல்லத் தாழ்த்தி பெருமூச்சு ஒன்றையும்விட்டாள்.

திருவரங்கனுக்கு என்ன பேசுவது என்று புரியவில்லை. தடுமாறியபடி அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

இதற்கு மேல் அங்கு நிற்பது விவேகமல்ல என்று உணர்ந்த இரத்தினாதேவி, “உங்களைப் பிறகு சந்திக்கிறேன்” என்று தன் அறைக்கு நடக்கலானாள்.

அப்படி நடக்கும் போது நின்று திரும்பி... அவனை ஒரு பார்வையும் பார்த்துவிட்டுச் சென்றாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வாள் ஒன்றே வாழ்வு என்று இதுவரை எண்ணியிருந்த திருவரங்கனுக்கு அதற்கு அப்பாலும் ஒன்று இருக்கிறது என்பதை அவள் பார்வையின் மூலம் தெரிந்து கொண்டான். திரும்பவும் அவளை எப்போது சந்திப்பது? என்ற எண்ணத்துடனே சற்று நேரம் அங்கேயே நின்று பிறகு இராசேந்திரனைப் பார்ப்பதற்காக விரைந்தான்.

'இராசேந்திரனைக் கொல்வதற்கு இதுவரை எனக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. இப்போது கூரிய அம்பு கிடைத்துவிட்டது!' என்று தன் மனதிற்குச் சொல்லியவாறு இரத்தினாதேவி மகிழ்ச்சியுடனே அறைக்குள் நுழைந்தாள்.

*****

இரத்தினாதேவியின் சேடி திருவரங்கன் தங்கியிருந்த அறைக்குச் சென்று கடார இளவரசி அழைப்பதாகத் தெரிவித்தாள்.

"என்ன செய்தி?" என்று அவன் மகிழ்ச்சியுடன் வினவ...

"எனக்குத் தெரியாது ஐயா!" என்றாள் பதிலுக்கு.

'இரவு நேரத்தில் அழைக்கும் மர்மம் என்ன?' என்று சிந்தனையிலாழ்ந்த அவன் "வருவதாகத் தெரிவி!" என்றான் சேடியிடம்.

அவள் போனதும்...

ஆடையை மாற்றிக் கொண்டு உடம்பில் நறுமணப் பொருள்களைப் பூசிக் கொண்டு இரத்தினாதேவியின் அறையை நோக்கி நடந்தான். அவன் உள்மனம் மட்டும் போகாத இடத்துக்குப் போவதாக அவனை எச்சரித்துக் கொண்டேயிருந்தது.

ஆனால் அவளின் வாளிப்பான உடற்கட்டிலும், பூரிபான இளமையிலும் ஏற்கனவே மனதைப் பறிகொடுத்திருந்த திருவரங்கன் ஒருவித மயக்கத்தில் தன்னை மறந்த நிலையோடு, மனம் இன்ப குதூகலத்தில் ஆழ, அவள் இருந்த அறையின் கதவைத் தட்டினான்.

'தடக்' என்ற சப்தத்துடன் தாழ் நீக்கப்பட்டது.

கதவை உட்பக்கமாகத் தள்ளிய திருவரங்கன் முன்னால் இரத்தினாதேவி இந்திரலோகத்துச் சுந்தரி போல் ஒயிலாக நின்று கொண்டு, "வாருங்கள்!" என்றாள்.

இதுவரைப் பாதிக் குழப்பமும், மீதி மகிழ்ச்சியுமாக இருந்த திருவரங்கன், அவளின் கவர்ச்சியான தோற்றத்தைக் கண்ட நொடிப்பொழுதில், எல்லாவற்றையும் மறந்து உள்ள உறுதியையும் அவளிடம் பறிகொடுத்துவிட்டு அறைக்குள் வெற்று மனிதனாகப் புகுந்தான்.

சந்தனம், அத்தர், புனுகு, சவ்வாது இவை போன்ற நறுமணப் பொருள்கள் அவள் மேனி எங்கும் பூசப்பட்டிருக்க அதனால் எழுந்த வாசனை அவன் நாசியைத் துளைத்தது. ஏற்கனவே அவளின் தோற்றத்தில் மயங்கியிருந்த திருவரங்கன், அவளிடமிருந்து வீசிய இவ்வாசனையை அந்த அழகு நல்லாளின் மேனியிலிருந்து இயல்பாய்த் தோன்றிய நறுமணம் என்ற நினைப்போடு நன்றாய் மூச்சை இழுத்து இழுத்து அதை நுகர ஆரம்பித்தான்.

அப்படி நுகர நுகர அவன் மனம் என்னவென்று விவரிக்க முடியாத இன்பத்தில் ஆழ ஆரம்பித்தது.

"அரசே!" என்று அச்சமயம் இனிய குரலில் அழைத்தாள்.

கேட்பார் மயங்கும் தன்மையில் அந்தச் சொற்களின் இழைந்த குழைவுக்கு ஒருவிதக் கவர்ச்சியை அளவுடன் கூட்டும் பக்குவம் இரத்தினாதேவிக்கு மட்டும் தெரிந்த வித்தையாக இருந்ததால் அந்த வார்த்தையைக் கேட்ட திருவரங்கன் 'இன்னும் ஒருமுறை தன்னை அப்படிக் கூப்பிடமாட்டாளா?' என்ற ஏக்கத்துடனே அவளை உற்று நோக்கினான்.

"உங்களை அரசே என்று கூப்பிட்டேன்! அதற்கு என்ன காரணம் என்று நீங்கள் கேட்கக் கூடாதா?" என்று மென்மையான குரலில் வினவிய இரத்தினாதேவி, கையிலிருந்த மலர்ச் செண்டால் அவன் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினாள். அத்துடன்...

"நான் கேட்ட கேள்விக்கு உங்களால் பதில் சொல்லத் தெரியவில்லை" என்றாள் இரத்தினாதேவி.

"உண்மை! எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை" என்று அவன் ஒப்புக் கொண்டான்.

"எனக்கு அந்தக் கேள்விக்குப் பதிலும் தெரியும்!" என்ற அவள், தன் இமைகளைப் பாதி மூடியபடி பார்வையை அவன் மீது ஓட்டினாள்.

அவளின் கரங்களைப் பற்றிய திருவரங்கன் "என்ன பதில்?" என்றான் குறுநகையுடன்.

"என்னையும் எனக்கே உரிய இளமையையும், அந்த இளமைக்கு அணி செய்யும் செழுமையையும், அந்தச் செழுமைக்குக் கவர்ச்சியைத் தரும் என் பருவப் பூரிப்பையும் ஆளக்கூடிய ஒரே ஆண்மகன் இந்த உலகத்தில் உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதால் உங்களை 'அரசே!' என்றழைத்தேன்!" என்றாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“நான் கொடுத்து வைத்தவன்!” என்று அவளை அருகில் இழுத்து அணைக்க முயல...

அவ்விதம் இடம் கொடுத்தால் தனக்கு மதிப்பு இருக்காது என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்ததால், மெல்ல விலகி, “இந்தக் குறும்பெல்லாம் இப்போது வேண்டாம்!” என்றாள் பொய்யான கோபத்துடன்.

அழகு மங்கையர்க்கு பொய்யான கோபமே ஒருவித அழகு! அந்த அழகுக்கு அழகு செய்வது போலிருந்த அவளின் தோற்றத்தில் மனதைப் பறிகொடுத்த திருவரங்கன், “பின் எப்போது வேண்டும்?” என்று உயிரற்ற உடலாய் அவள் மேல் மயக்கத்துடன் சாய்ந்தான்.

அப்படியே அவனைத் தாங்கிய இரத்தினாதேவி, “உங்கள் தோள்களின் திண்மைக்கு நான் என்றும் அடிமை!” என்றாள்.

“எனக்கும் அடிமைத்தனம் என்றால் மிகவும் பிடிக்கும். அதுவும் உன் அழகுக்கு அடிமையாக இருப்பதையே நான் விரும்புகின்றேன்!” என்று அவளை மார்புறத் தழுவினான்.

அத்தழுவலில் அவன் மனம் கிளுகிளுப்பை எய்தியது புரிகுழலில் கைகளைவிட்டுக் கோதிய திருவரங்கன், மெல்ல கைகளை இறக்கி அவளின் கழுத்தின் பின்பகுதிக்கு வந்தான்.

அங்கே கோடிட்டது போன்றிருந்த உரோமக் கீற்று அவனின் கரத்துக்கு இன்ப உணர்வை ஊட்ட அதனால் மயங்கி நின்ற அவன், வழுவழு என்றிருந்த முதுகில் கரங்களைப் படரவிட்டான்.

“அப்பா!” என்று அவள் புன்னகையுடன் நெளிந்தாள்.

அந்த நெளிவினால் தன்னை முழுவதும் இழந்துவிட்ட திருவரங்கன், சற்று உணர்வு பெற்றவனாகி கைகளை மேலும் இறக்க, மார்புக் கச்சையின் பின்பக்க முடி தட்டுப்பட்டது.

உணர்வின் மிகுதியால் அவன் இதயம் ‘படக் படக்!’ என்று அடிக்க, கரங்களை அதிலிருந்து விலக்கிக் கொண்டான்.

“ஏன் எடுத்துவிட்டீர்கள்? அவிழ்க்க முடியாத அளவிற்கு நான் ஒன்றும் கடினமாக முடிச்சு போடவில்லையே?” என்றாள்.

கரங்கள் நடுநடுங்க, “அதற்கு இல்லை...!” என்று வாய் குளறினான்.

“நீங்களும் நானும் தவிர இந்த அறையில் யாரும் இல்லை; வீணாக வெட்கப்பட வேண்டாம்!” என்று அவன் கன்னத்தைத் தட்டினாள் செல்லமாக.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“அதற்கு இல்லை...” என்று மீண்டும் குளறிய திருவரங்கன், கைகளை அந்த இடத்துக்குக் கொண்டு சென்றான்.

அடுத்த சில நொடிகளில்...

“இரத்தினாதேவி! இரத்தினாதேவி!” என்று குரல் கேட்டது.

“யாரோ கதவைத் தட்டுகின்றார்கள்!” என்று சற்று அச்சத்துடனே கூறினான் திருவரங்கன்.

கடார இளவரசி அதற்குப் பதட்டப்படாது, பஞ்சணையின் அடியில் அவனைப் படுத்துக் கொள்ளும்படிக் கூறிவிட்டு அவனால் பாதி அளவு தளர்த்தப்பட்ட முடியை மறுபடியும் நன்கு முடிந்து கொண்டாள்.

அடியில் மறைந்திருந்த திருவரங்கன், “நல்ல நேரத்தில் இப்படிக் குறுக்கிட்டு...” என்று கதவைத் தட்டியவனைத் திட்ட ஆரம்பித்தான்.

“பேசாதிருங்கள்!” என்று ஆடையைச் சரி செய்து தாழினை நீக்கினாள்!

சாமந்தன் அங்கே இருந்தான்.

“என்ன இந்த நேரத்தில்?” என்று பொய்யான எரிச்சலுடன் கேட்டாள்.

அவன் கண்களைச் சிமிட்டி, “மூலிகை இருக்கும் இடம் என் கனவில் தெரிந்துவிட்டது. அதைச் சொல்லவே ஓடி வந்தேன். அந்த நினைவு மாறுவதற்குள் போய்த் தேடினால் கிடைத்துவிடும்” என்றான்.

“அப்படியா! கொஞ்சம் இரு. நான் ஆடை மாற்றிக் கொண்டு வருகின்றேன்!” என்று கதவைத் தாளிட்டாள்.

“வருங்கால மதுரைப் பிரதிநிதி அவர்களே! என்று அன்புடன் திருவரங்கனை அழைத்தாள்.

“என்ன இது! பட்டமெல்லாம் பலமாக” என்று கூறியபடி பஞ்சணையின் அடியிலிருந்து வெளிவந்தான்.

அவன் வலக்கரத்தில் தன் இதழ்களைப் பதித்து, “இப்போது சூழ்நிலை சரியில்லை. நாளைக்கு வாருங்கள்!” என்றாள்.

“நாளைக்கா?” என்று அவன் திகைப்புடன் வினவ...

“ஆமாம்! இதையெல்லாம்விட நமக்குச் சக்கரவர்த்தியின் உயிர்தான் பெரிது. தற்போது விட்டுவிட்டால் கனவில் கண்ட இடம் சாமந்தனுக்கு மறந்து போய்விடும். அதனால் சூட்டோடு சூடாக அவனோடு அந்த இடத்துக்குப் போகலாம் என்று

இருக்கின்றேன்! இவள் உங்களுக்கே உரியவள். இன்று இல்லை என்றால் நாளை. அதற்காக வீண் கலக்கம் வேண்டாம்” என்றாள்.

ஏமாற்றமடைந்த திருவரங்கன் அவிழ்த்து ஒரு பக்கம் வைக்கப்பட்ட வாளை இடையில் கட்டிக் கொண்டு, “வாட்டுமா?” என்று சாமந்தனைத் திட்டிக் கொண்டே அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

“இன்னும் ஒன்று இருக்கின்றது!” என்று மற்றொரு கன்னத்தைக் காண்பித்தாள்.

அதையும் செல்லமாகத் தட்டினான். அப்போதுதான் அவன் முகத்திலிருந்த ஏமாற்றக்குறி மறைந்து புன்சிரிப்பு தோன்றியது.

அதைக் கவனித்து இரத்தினாதேவி, “எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?” என்று அவன் கரங்களைப் பற்றியபடி கேட்டாள்.

“ஏன் தயக்கத்துடனே உன்னிடமிருந்து கேள்வி வருகிறது. செய் என்று எனக்கு உத்தரவிடு. நான் அதை முடிக்கின்றேன்!” என்றான்.

“இராசேந்திரருக்கு என் மீது கோபம்...” என்று அவனைப் பார்த்தாள்.

“என்ன கோபம்?” என்றான் புரியாமல்.

“நான் கடார நாட்டிலிருந்து நல்லெண்ணத் தூதாக இங்கு வந்திருக்கின்றேன்! ஆனால் அவரோ.. அவரைப் பழிவாங்கவே நான் வந்திருப்பதாகத் தவறாக எண்ணி, என்னைச் சந்தேகப் பார்வையுடன் பார்க்கின்றார். உங்கள் மீது ஆணையாகச் சொல்கின்றேன்! அந்த மாதிரி எண்ணம் எதுவும் எனக்கு இல்லை. சக்கரவர்த்தியின் உத்தரவின் பேரில்தான் மூலிகை தேட இங்கு வந்திருக்கின்றேன்!” என்றாள் உறுதியான குரலில். அத்துடன் அவள் விழிகளில் நீரும் சுரந்தது.

அதைக் கண்ட திருவரங்கன் மனம் நெகிழ்ந்தது. “அதற்காக நீ ஏன் கவலைப்படுகின்றாய்?” என்றான்.

“என் மீது அவருக்கு ஒரு கண் இருக்கிறது. எந்த நேரத்திலும் நான் இராசேந்திரரால் கைது செய்யப்படலாம் என்று நினைக்கிறேன்” என்றாள்.

“எனக்குத் தெரிந்தவரை அம்மாதிரி ஒரு எண்ணம் அவருக்கு இல்லை!” என்றான் திட்டமுடன்.

“நீங்கள் பார்ப்பது ஒரு பக்கத்து இராசேந்திரனை மட்டும்! இன்னொரு பக்கத்து இராசேந்திரன் இருக்கின்றார். அவர் பொல்லாதவர்!” என்றாள்.

திருவரங்கன் குழம்பினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"நாடுவிட்டு நாடு வந்த இந்தச் சிறு பெண்ணிற்கு உங்களைத் தவிர வேறு கதியில்லை. அவரைக் கண்டாலே எனக்கு அச்சமாக இருக்கிறது. என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று மண்டியிட்டு அவன் கால்களைப் பற்றிக் கொண்டாள்.

அப்படிப் பற்றும் போது... ஏற்கனவே விழிகளில் சுரக்கவிட்ட நீரை கால்களில் 'பொட் பொட்' என்று விழும்படிச் செய்தாள்.

இதற்கு மேல் திருவரங்கனால் சும்மாயிருக்க முடியவில்லை. அவளை அப்படியே தூக்கி, கன்னத்தில் வழிந்த நீரைத் துடைத்தான். "நான் இருக்கும் வரை நீ எந்தவித அச்சத்திற்கும் ஆளாக வேண்டாம். இது உறுதி!" என்று அழுத்தமாய் கூறினான்.

அப்பொழுது...

"இன்னுமா இரத்தினாதேவி உடைமாற்றுகின்றாய்?" என்று சாமந்தன் வெளியிலிருந்து உரக்கவே வினவ, "இதோ!" என்று திருவரங்கனைச் சீக்கிரம் போய்விடும்படி சைகை செய்ய, அவன், "நாளை?" என்றான் புன்முறுவலுடன்.

"நிச்சயம்!" என்று அவனைத் தழுவி முத்தம் வைத்த இரத்தினாதேவி, மற்றொரு பக்க வழியில் வெளியே அனுப்பி வைத்தாள்.

திருவரங்கன் சென்றதும்...

தாளினை நீக்கிக் கதவைத் திறந்த சாமந்தனிடம் "பிடித்துவிட்டேன்!" என்றாள்.

"நல்லது. நான் போய்த் தூங்கட்டுமா?" என்றான்.

"இல்லை. மூலிகை தேடுவது போல் கொஞ்ச நேரம் பாவனை செய்வோம்!"

இருவரும் அறையிலிருந்து வெளிவந்தனர். 'கண்டவனுக்கு என் இளமையைப் பறிகொடுக்க நான் என்ன வேசியா? நல்ல நேரத்தில் ஏற்கனவே நான் கூறியிருந்தபடி சாமந்தன் குறுக்கிட்டான்; இல்லை என்றால் திருவரங்கனிடமிருந்து நான் தப்பித்திருக்க முடியாது!' அத்துடன் 'உண்ணப்படாத கனிக்குத்தான் மிகுந்த மதிப்பு இருக்கும்!' என்று எண்ணியவாறு மெல்ல நடக்கலானாள்.

## அத்தியாயம் - 31

**அ**ந்த முன்னிரவின் இருள் மதுரைக் கோட்டையில் மெல்லப் பரவிக் கொண்டிருந்தது.

ஆங்காங்கே யவன வீரர்கள் நகரை வலம் வந்தபடி எச்சரிக்கை ஒலி எழுப்பிக் கொண்டிருந்தனர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வீதிகள் எங்கும் நிசப்தத்தில் ஆழ்ந்திருந்தன. ஏதாவது அசம்பாவிதம் நடக்கக் கூடாது என்று புரவிப்படை ஒன்று நகரை வலம் வந்து கொண்டிருந்தது.

அது சரியான முறையில் இயங்குகின்றதா என்பதை அறிவதற்காக இராசேந்திரனும், திருவரங்கனும் முன்னால் ஒரு வீரன் தீப்பந்தத்தை ஏந்தியபடி செல்ல பின்னால் இரு வீரர்கள் நீட்டிய வேலுடன் கண்காணித்தபடி வர, புரவியில் நகரைச் சுற்றிப் பார்ப்பதற்குக் கிளம்பினர்.

நடுச்சாமம் வந்துவிட்டது; நகரின் ஒதுக்குப்புறமான அந்தச் சிவன் கோயிலிலிருந்த ஆலமரத்தடியில் இருவரும் புரவியை நிறுத்தினர்.

“பரவாயில்லை. மதுரைநகர் நான் எதிர்பார்த்ததைவிட அமைதியுடனே இருக்கிறது” என்று திருப்தியுற்ற இராசேந்திரன், திருவரங்கனை நோக்கி, “என்னப்பா! நானும் கவனித்துக் கொண்டு வருகின்றேன்! நீ இரண்டு நாட்களாகவே மனநிலை சரியில்லாத ஆள் போலவே இருக்கின்றாயே?” என்றான்.

“ஆமாம். எனக்கு மனம்தான் சரியில்லை!” என்று அவனும் அதை ஆமோதித்தான்.

இவன் மனத்தைச் சரிப்படுத்த என்ன செய்யலாம்? என்று யோசித்த இராசேந்திரன் நினைவு வந்தவன் போல, “கடார இளவரசிக்கு மூலிகை தேட ஆள் துணை வேண்டுமாம்! நீ போயேன். மனம் சரியாகும்” என்றான் வேடிக்கையாக.

திருவரங்கன் மனத்தை உற்சாகப்படுத்த இராசேந்திரன் கூறிய வார்த்தைகளை, திருவரங்கன் வேறுவிதமாய்ப் பொருள் செய்து கொண்டு சற்றுக் காட்டமாகவே, “நான் அரசகுடும்பத்தில் பிறந்திருந்தால் இப்படியெல்லாம் கூறியிருக்கமாட்டீர்கள்!” என்றான்.

இராசேந்திரனுக்கு அப்பதில் என்னவோ போலிருந்தது!

திருவரங்கன் போக்கில் ஏன் திடீர் மாற்றம்? என்று குழம்பியபடியே, வீரர்களுக்கு எதிரில் இம்மாதிரி வாக்கு வாதம் செய்து கொள்வது நல்லது அல்ல என்று எண்ணி, தீப்பந்தத்தை வாங்கிக் கொண்டு அவர்களைப் போகும்படி உத்தரவிட்டான்.

அங்கிருந்து அவர்கள் சென்றதும்...

“உன் போக்கே எனக்குப் புரியவில்லை! நான் என்ன கூறிவிட்டேன் என்று நீ அப்படிக் கோபத்துடன் பதில் சொன்னாய்?”

திருவரங்கன் அதற்கு மௌனமாகவே இருந்தான். இதற்கு மேல் அவனை வற்புறுத்துவது இப்போதைக்கு நல்லது அல்ல என்று எண்ணிய இராசேந்திரன், “மாளிகைக்குத் திரும்பிவிடலாம்!” என்று புரவியைத் திருப்பினான்.

திருவரங்கனும் அவன் பின்னே குதிரையைச் செலுத்திக் கொண்டிருந்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

முன்னே சென்ற இராசேந்திரன் புரவியின் கடிவாளத்தை இழுத்து நிறுத்தி, "சக்கரவர்த்தியிடமிருந்து ஒரு தூதுவன் வந்திருக்கின்றான்" என்றான்.

மெதுவாய்ப் புரவியை ஓட்டிக் கொண்டு வந்த அவன், காலினால் அதைத் தட்டி, இராசேந்திரன் அருகில் சென்று, "கேள்விப்பட்டேன்!" என்றான்.

"எதற்காக வந்திருக்கின்றான் தெரியுமா?"

"தெரியாது!"

பதில் கூட விறைப்பாக இருக்கிறது! என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட இராசேந்திரன், "இரத்தினாதேவியை அழைத்துப் போகவே வந்திருக்கின்றான்" என்றான்.

இரத்தினாதேவி என்ற வார்த்தையை இராசேந்திரனிடமிருந்து கேட்டதுமே திருவரங்கன் எரிச்சலடைந்தான். அந்தப் பேதைப் பெண்ணை இவர் மிகவும் கேவலமாகவே நினைத்துக் கொண்டிருக்கின்றார். ஒருவேளை எனக்கும் அவளுக்கும் இருக்கிற காதல் தொடர்பைத் தெரிந்து வைத்துக் கொண்டுதான் அப்படிக் கேலி செய்கின்றாரோ என்னவோ என்று எண்ணியவாறு புரவியைச் செலுத்தத் துவங்கினான்.

அந்தச் சமயத்தில்...

"அந்த மாயப்பிசாசு இங்கிருந்து போவது ஒருவிதத்தில் நல்லதே!" என்றான் வேங்கி இளவரசன் காட்டமாக.

நிச்சயம் எனக்கும் அவளுக்கும் இருக்கிற தொடர்பு இவருக்குத் தெரிந்தே இருக்கிறது! அதனால்தான் முதலில் அவளை இங்கிருந்து துரத்த முடிவு செய்துவிட்டார். அவள் கங்கைகொண்ட சோழபுரம் போனதும், முதன்மந்திரியைக் கைக்குள் போட்டுக் கொண்டு, அவளைச் சிறையில் தள்ளிவிடுவார்கள். அதனால்தான் என்னைக் காப்பாற்றுங்கள் என்று என்னிடம் கதறினாள் என்று தவறான முடிவுக்கு வந்த திருவரங்கன், "நீங்கள் அவளை மாயப் பிசாசு என்று கூறுவதை நான் எதிர்க்கின்றேன்!" என்றான் .

இராசேந்திரன் புரவி சடக்கென்று நின்றது.

"என்ன சொல்கின்றாய்?" என்று கேட்ட அவன் கண்கள் சினத்தீயை உமிழ்ந்தன.

"இரத்தினாதேவி மாயப் பிசாக அல்ல என்று சொன்னேன்."

"இல்லை; அவள் நிச்சயம் ஒரு மாயப் பிசாசுதான். இல்லையென்றால் நான் போகுமிடமெல்லாம் அவள் என்னைத் துரத்திக் கொண்டு வரமாட்டாள்" என்றான் வேகத்தோடு.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

‘அவள் சொன்னது முற்றிலும் சரியாகிப் போய்விட்டது’ என்று எண்ணிக் கொண்டு, “நீங்கள் நினைப்பது போல் அவள் உங்களைத் துரத்திக் கொண்டு வரவில்லை; கடாரத்திலிருந்து நல்லெண்ணத் தூதாகத் தமிழகம் வந்திருக்கிறாள்; அரசரின் நோய் தீர மூலிகை தேடி இங்கே வந்திருக்கின்றாள்! அவ்வளவுதான்” என்றான்.

அவன் சொன்ன பதிலால் திகைப்படைந்த இராசேந்திரன், அவளைப் பற்றி இவ்வளவு விஷயமும் இவனுக்கு எப்படித் தெரிந்தது. ஒருவேளை இரத்தினாதேவி சொல்லியிருப்பாளோ என்று வியப்புற்றான். பரவாயில்லை. நன்றாகவே அவளுக்குப் பக்கமேளம் கொட்டுகிறான் என்று எண்ணியவாறு, “உனக்கு ஏன் அவளைப் பற்றிச் சொன்னால் கோபம் வருகிறது?” என்று வினவினான்.

“எனக்கு ஏன் கோபம் வருகிறது. ஒருவரைப் பற்றி அவதூறு சொன்னால் அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது!” என்றான் திருவரங்கன்.

இராசேந்திரனுக்கு அளவுக்கு அதிகமாகவே கோபம் உண்டாகியது “நன்றாகவே அந்தக் கள்ளி வலையில் நீ சிக்கிக் கொண்டாய். நமக்குள் பிளவு ஏற்படுத்த வந்த அந்த மாயப் பிசாசை வெட்டிப் போட்டால்கூடப் பாதகமில்லை!” என்றான் ஆத்திரத்தோடு.

“இப்படிச் சொல்வதற்கு என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். நான் இருக்கும்வரை இரத்தினாதேவிக்கு உங்களால் எந்தவித ஆபத்தும் ஏற்படாது என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்” என்றான் திருவரங்கன்.

“அதையும் பார்த்துவிடுகின்றேன்!” என்று கோபத்துடன் புரவியை அங்கிருந்து வேகமாய்ச் செலுத்திய இராசேந்திரன், திரும்பவும் அதைத் திருவரங்கன் அருகில் திருப்பிக் கொண்டு வந்து, “சோழச் சக்கரவர்த்தியின் கௌரவ விருந்தாளியாக அவள் இங்கே வந்திருப்பதால் தப்பித்தாள். இல்லை என்றால் கதையே வேறு மாதிரி ஆகியிருக்கும்!” என்றான் கோபத்தோடு.

“உங்கள் வீரம் ஒரு பெண்ணைக் கொல்வதால் பெருமைப்பட்டுவிடாது” என்றான் திருவரங்கன் பதிலுக்கு.

அந்தக் கூற்றால் கோபமுற்ற இராசேந்திரன், “யாரிடம் பேசுகிறாய் என்பதை நினைவுபடுத்திக் கொள் முதலில்” என்றான்.

“அதனால்தான் சொன்னேன்! நான் அரசகுலத்தில் பிறக்கவில்லை என்று!” என்று திருவரங்கன் பணிவுடனே கூறினான்.

“நீயும் கங்கைகொண்ட சோழபுரம் போய்ச்சேர்; உன் சேவை எனக்குத் தேவையில்லை. நாளை அவள் போகின்றாள்; கூடவே நீயும் போ!” என்று



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆக்ரோஷமுற்றுப் புரவியை வாரினால் அடிக்க, அது நாலுகால் பாய்ச்சலில் அங்கிருந்து கிளம்பியது.

சினத்துடன் இராசேந்திரன் சென்றதைக் கவனித்த திருவரங்கன், 'இவரை நம்பி நான் இந்த உலகில் பிள்ளையாய்ப் பிறக்கவில்லை. என் கையில் வாளிருக்கிறது! அதை வைத்துக் கொண்டு எங்கும் என்னால் பிழைத்துக் கொள்ள முடியும். ஏன், கடாரத்துக்கே அவளுடன் சென்றுவிடுகின்றேன்!' என்று குதிரையை நேராக இரத்தினாதேவி தங்கியிருக்கும் மாளிகையை நோக்கிச் செலுத்தலானான்.

பெண் நினைத்தால் எதையும் செய்ய முடியும் என்ற வார்த்தைக்கு இங்கே அர்த்தம் கிடைத்துவிட்டது.

இருவரையும் பிளவுபடுத்தித் திருவரங்கன் மூலமாகவே இராசேந்திரனைக் கொல்ல வேண்டும் என்று தற்போதைய சூழ்நிலையை வைத்து அவள் கட்டிய முடிவுக்கு முதல்கட்ட வெற்றி என்பது போல் நண்பர் இருவரும் மனக்கசப்பு அடைந்துவிட்டனர்; இதைவிட என்ன வேண்டும் அவளுக்கு?

## அத்தியாயம் - 32

புரவியிலிருந்து இறங்கிய திருவரங்கன் அதே வேகத்துடன் நேராக இரத்தினாதேவி தங்கியிருக்கும் மாளிகைக்குள் நுழைந்து கதவை தடதடவென்று வேகமாய்த் தட்டினான்.

"யார்?" என்று உள்ளிருந்து குரல் வந்தது.

"நான்தான் திருவரங்கன்!" என்றான்.

கதவு திறக்கப்பட்டது.

"வாருங்கள்!" என்று வரவேற்றாள் இரத்தினாதேவியின் சேடி.

கதவைத் திறப்பது கடார இளவரசியாக இருக்கும் என்று எண்ணி மிடுக்குடன் நின்று கொண்டிருந்த திருவரங்கன் ஏமாற்றத்துடன் "இளவரசி...?" என்றான்.

"உள்ளே இருக்கின்றார்கள். உடம்பு சரியில்லை!" என்று பதில் கூறினாள் சேடி.

"உடம்பா?" - அவளைத் தள்ளிக் கொண்டு உள்ளே போவது போல் நுழைந்தான்.

'உம்' கொட்டியவாறு படுத்திருந்த கடார இளவரசி எதற்காக அம்மாதிரி நாடகத்தை ஆடுகின்றாள் என்பதை அவள் மேலிருந்த மோகத்தின் காரணமாகப் புரிந்து



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கொள்ளாது உண்மையாகவே அவளுக்கு உடம்புதான் சரியில்லை என்றெண்ணி அருகே சென்றான்.

“என்ன இளவரசி தங்களுக்கு?”

அதற்கு அவள் மறுமொழி சொல்லாது, ‘உம்’ கொட்டுதலில் வேகத்தைக் கூட்டினாள். இதுவரை ஒருக்களித்துப் படுத்திருந்த அவள் தற்சமயம் மல்லாந்து படுத்தவாறு கதவின் ஓரமாய் நின்று கொண்டிருந்த சேடியைப் பார்த்து, “நீ போயேன்!” என்றாள் தாழ்ந்த குரலில்.

அங்கிருந்து சேடி போகும் வரை பார்வையை அவ்விடத்திலேயே பதித்திருந்த இளவரசி, அவள் போனதும் அங்கிருந்து விலக்கி உடம்பு சரியில்லாமலிருந்ததால் எம்மாதிரி முகம் இருக்குமோ அதுபோன்ற முகத்துடன் திருவரங்கனைக் கண்டுவிட்டதால் கடினப்பட்டுப் புன்னகையை வரவழைப்பது போன்று ஒரு பாவனையை அம்முகத்தில் ஏற்படுத்தி அத்துடன் இதழ்களில் குறுநகை ஒன்றையும் தோன்றச் செய்தாள்.

அதை மெய்யென்று நம்பிய மாவீரன் திருவரங்கன், (அவள் விஷயத்தில் அல்ல) “உன்னை இந்த மாதிரி பார்க்க என் மனத்துக்கு வேதனையாகவே இருக்கிறது” என்று அவள் படுத்திருந்த பஞ்சணையில் கால் பக்கமிருந்த இடைவெளியில் உட்கார்ந்தான்.

அவன் உட்காருவதற்கு ஏற்றபடி சற்று நகர்ந்து இடம் கொடுத்த இரத்தினாதேவி, “நேற்று இரவு முழுவதும் தங்கள் நினைவாகவே படுத்திருந்தேன்! அம்மாதிரி படுத்திருப்பதற்குக் காரணம் இல்லாமலில்லை...” என்று நிறுத்திக் கண்களைச் சிமிட்டினாள். “வரப்போகும் இரவை உங்களுடன் கழிக்கும் இன்பமான சூழ்நிலையை எண்ணியதின் விளைவாகவே எனக்கு உறக்கமில்லாமல் போய்விட்டது” என்றாள். அத்துடன்...

அவனிருந்த இடத்திற்கும் அவளுக்கும் இருசாண் அகலத்தில் இருந்த இடைவெளி தற்போது மறைந்து, கதலித்தண்டை நிகர்த்த அவளின் கனமான இரு தொடைகளும் திருவரங்கன் பின்புறப் பகுதியில் படும்விதத்தில் சாய்ந்தும் கொண்டாள். பொய்யான முறையில் நடிக்கின்றாள் என்று யாராவது அடித்துச் சொன்னால் கூட இனி அவன் அவள் விஷயத்தில் நம்பத் தயாராயில்லை.

அதனால் “இளவரசி!” என்றான் மயக்கத்துடனே. “இப்படியே இருந்தால் எனக்கு எவ்வளவு இன்பமாக இருக்கும் தெரியுமா?” என்றாள் அவள் திரும்பி.

“அது வரக்கூடிய காலம் வெகு தொலைவில் இல்லை” என்றான் திருவரங்கன் உறுதியோடு.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இன்னும் நான்கு நாட்கள்தான் நான் இங்கே இருக்கப் போகின்றேன். கங்கைகொண்ட சோழபுரத்துக்கு வரச்சொல்லி சக்கரவர்த்தி இங்கே ஆளை அனுப்பியிருக்கின்றார்” என்றாள்.

“கேள்விப்பட்டேன் இராசேந்திரர் மூலமாய்” என்ற திருவரங்கன், “எனக்கும் இங்கே சீட்டுக் கிழிந்துவிட்டது; உடனே நானும் கங்கைகொண்ட சோழபுரம் வரப்போகின்றேன்!” என்றான் உற்சாகத்தோடு.

“அப்படியா!” என்று மகிழ்ச்சியுடன் சிரித்தாள் அவள். அதிகம் சிரித்துவிட்டதால் உடல் தாங்காமல் போனதை திருவரங்கன் உணர வேண்டும் என்று பொய்யாய் ‘ம்’ கொட்டவும் செய்தாள்!

“ஏன் இளவரசி உடம்பை அலட்டிக் கொள்கிறாய்? பேசாமல் இரேன்!” என்று பரிவுடன் கூறினான் திருவரங்கன்.

“நீங்கள் சொல்வதுதான் சரி!” என்று ஆமோதித்த இரத்தினாதேவி, “எப்படிக் கங்கைகொண்ட சோழபுரம் போவது என்று தவித்துக் கொண்டிருந்தேன்; இப்போது நீங்கள் துணை வருவதால் எனக்கு இனிமேல் கவலையில்லை!” என்றாள். இதைத் தொடர்ந்து, “அது என்ன சீட்டுக் கிழிப்பு?” என்று வினவினாள்.

“எனக்கும் இராசேந்திரருக்கும் கருத்து வேறுபாடு தோன்றிவிட்டது. அதனால் இனி அவரின் கீழ் என்னால் பணியாற்ற முடியாது” என்றான் திட்டமுடன்.

தான் கணக்கிட்டபடி நண்பர்கள் இருவருக்கும் மன கசப்பு ஏற்பட்டுவிட்டதை உணர்ந்த இரத்தினாதேவி, உள்ளூர மகிழ்ச்சியுற்றாள். அதை வெளியே காண்பிக்கக் கூடாது என்ற எண்ணத்தில், முகத்தில் வேண்டுமென்றே கடுகடுப்பை வரவழைத்து, “மதுரையைப் பார்க்கும் பொறுப்பு அவரிடம் வந்துவிட்டதால் செருக்கு வந்துவிட்டதோ?” என்றாள்.

“உண்மை, நீ சொல்வது முற்றிலும் உண்மை! என்று ஆத்திரத்தோடு அழுத்தமாய்ச் சொன்னான்.

“ஆனால், இது போன்று அட்டகாசம் செய்தவர்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்ட கதைதான் எனக்குத் தெரியும்” என்ற கடார இளவரசி, “கங்கைகொண்ட சோழபுரத்திலேயே நான் கைது செய்யப்படலாம். இல்லையென்றால் என் மீது அபாண்டமான குற்றம்சாட்டி என்னைத் தூக்கில் கூடப் போட்டுவிடலாம்!” என்றாள்.

திருவரங்கனுக்குச் சினம் தோன்றியது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“கவலைப்படாதே இரத்தினாதேவி! நான் உயிரோடு இருக்கும் வரை ஊர்ந்து செல்லும் புழுகூட உனக்குத் தீங்கு விளைவிக்க முடியாது!”

“என் உயிருக்குயிரான தாங்கள் இருக்கும் வரை ஆபத்தொன்றும் வந்துவிடாது என்பது தெரியும். இருந்தாலும் என்னைப் பற்றித் தவறாக இராசேந்திரர் நினைத்துக் கொண்டிருப்பதை வைத்துச் சொல்கின்றேன்... அப்படி எனக்கு அவரால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் தாங்கள் எனக்காக ஒரு நினைவுச் சின்னம் எழுப்பி அதில் தங்களின் காதலி என்று ஒரு வார்த்தை இருக்க வேண்டும். இவ்விதம் நீங்கள் செய்யவில்லை யென்றால் இறந்து போன என் ஆன்மா சாந்தி பெறாது!” என்றாள் கண் கலங்கி.

திருவரங்கனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

அவளின் மென்கரங்களைப் பற்றினான். “கலங்காதே இரத்தினாதேவி!” என்று கன்னத்தில் வழிந்த நீரைத் துடைத்து மௌனமாய் உதட்டைக் கடித்தான்.

தற்போது திருவரங்கனை நினைத்த அளவுக்குக் கவர்ந்தாகிவிட்டது. இனி அவன்..? ‘தன்னால் இயக்கப்படும் ஒரு பொம்மை’ என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் அப்போது.

அதனால் இனிமேல் அந்த உராய்தல் தேவையில்லை என்பது போல அவனிடமிருந்து விலகிப் புரண்டாள்.

“என்ன இரத்தினா... விலகிச் செல்கின்றாய்?” என்று தன் வலிய கரங்களை அவளின் மென்மையான பின் பகுதியில் வைத்துத் தன் பக்கம் இழுக்க...

திருவரங்கனைத் தனிமையில்விட்டால் தன்னைத் தொல்லை செய்வான் என்று எண்ணி, “எனக்குத் தலை வலிக்கிறது” என்றாள்.

“என்னைப் பார்த்தப் பிறகு கூடவா உனக்குத் தலையை வலிக்கிறது?”

“உடல் நலமாயில்லை என்று தங்களிடம் சொன்னேன் அல்லவா? அதுதான்...!” என்று பஞ்சணையிலிருந்து எழுந்தாள். சிறிய வெள்ளிப் பேழையிலிருந்து, ஒரு குளிகையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு நீரைக் குடித்தாள்.

“நன்கு தூங்கினால் சரியாய்விடும். படுத்துக் கொள்கின்றேன்” என்று மீண்டும் பஞ்சணையில் சாய்ந்தாள்.

அவன் அவளை அணைக்க முயல...

“ஆக்கப் பொறுத்தது... ஆறப் பொறுக்கக் கூடாதா?” என்று அவனின் முகத்தைத் தன் மெல்லிய விரல்களால் தடவியபடி சொன்னாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

திருவரங்கன் கெஞ்சும் குரலில், "ஒன்றுமட்டும்..." என்று உணர்ச்சிவயப்பட்டு அவளின் மீது அப்படியே சாய்ந்து தன் இதழ்களை அவள் இதழ்களோடு இணைத்து, விரல்களால் அவளின் கரிய குழலை மெல்ல வருடினான்.

"போதும். இன்னொரு நாளைக்கு" என அவனிடமிருந்து விலகி, பஞ்சணையிலிருந்து எழுந்து கொண்ட இரத்தினாதேவி "முதலில் இங்கிருந்து புறப்படுங்கள். இல்லையென்றால் என்னைத் தூங்கவிடமாட்டீர்கள். என் உடல்நலம் மேலும் கெட்டுவிடும்" என்றாள் அவள்.

திருவரங்கன் திரும்பவும் அவளை அணைக்க முயல...

"பொல்லாதவர் நீங்கள். இன்னொரு நாளைக்கு என்றேனே. அதைச் சற்று காதில் வாங்கிக் கொள்ளக் கூடாதா?" என்று அன்புடன் பற்களைக் கடித்தபடி அவன் கன்னத்தை பொய்யாகக் கிள்ளினாள்.

அந்தச் சுகத்தில் மெய்மறந்து நிற்க... இதுதான் சமயம் என அவனைத் தள்ளிக் கொண்டே சென்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வெளியே தள்ளி "பிறகு" என்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

சற்று நேரம் அங்கேயே நின்ற திருவரங்கன், உயிரற்ற உடலைப் போல மெல்ல அங்கிருந்து அகன்றான்.

## அத்தியாயம் - 33

**நா**ட்கள் நான்கு கடந்துவிட்டன. முதன்மந்திரி பிரமாதிராசரால் அனுப்பப்பட்ட காரனை விழுப்பரையன் மதுரையை அடைந்துவிட்டான். 'கோட்டைப் பொறுப்பைத் திருவரங்கனிடம் ஒப்படைத்துவிட்டு உடனே மாறுவேடத்தில் தன்னுடன் புறப்பட்டு வரவேண்டும்' என்ற அமைச்சரின் கட்டளையை இராசேந்திரனுக்குத் தெரிவித்தான். அத்துடன் எல்லா விஷயங்களையும் இரகசியமாக வைக்க வேண்டும் என்பதையும் கூறினான்.

அதைக் கேட்ட இராசேந்திரனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை.

இரத்தினாதேவியை அழைத்துவர சக்கரவர்த்தி அனுப்பிய தூதன் இன்னும் மதுரையிலிருந்து அவளுடன் புறப்படவில்லை. அதற்குள் இன்னொருவர்? அப்படியென்றா நிலைமை அங்கு மோசமாக இருக்கிறது என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

உடம்பு சரியில்லை என்று நாட்களைத் தள்ளிக் கொண்டு வந்த அவள், அனேகமாக இன்று சக்கரவர்த்தியின் தூதுவனோடு கங்கைகொண்ட சோழபுரம் புறப்பட்டுவிடலாம். அதற்குள் கோட்டைப் பொறுப்பைத் திருவரங்கனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

ஆனால் அவன்?

வரவர ஏதோ பிதற்றுகின்றானே! மாயக்கள்ளி அவனைக் வலைக்குள் போட்டுக் கொண்டாளா? அவளைப் பற்றிப் பேச்செடுத்தாலே அவன் என்னமாய்ச் சீறுகின்றான். இருக்கட்டும்.. இருக்கட்டும். ஆளைப் பக்குவமாகத்தான் சமாளிக்க வேண்டும்! என்று இராசேந்திரன் திருவரங்கனைக் கூப்பிட்டு வர ஒரு ஆளை அனுப்பினான்.

எதற்கு என்னை அழைக்கின்றார்? என்று ஆழ்ந்து யோசனை செய்த திருவரங்கன், கூப்பிட்டதற்குப் போய் என்னவென்று கேட்டு வைப்போம் என இராசேந்திரன் மாளிகை நோக்கி வந்தான்.

அவன் அறையில் முதன்மந்திரி அனுப்பிய காரனை விழுப்பரையன் இருந்தான்.

இருக்கையில் உட்கார்ந்திருந்த இராசேந்திரனின் முன்னால் சென்ற திருவரங்கன், முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு, “கூப்பிட்டீர்களாமே?” என்றான்.

“இவர் முதன்மந்திரி அனுப்பிய தூதர்” என்று காரனை விழுப்பரையனைச் சுட்டிச் சொன்ன இராசேந்திரன், “பொறுப்பை உன்னிடம் கொடுத்துவிட்டு என்னை உடனே கங்கைகொண்ட சோழபுரம் புறப்பட்டு வரும்படி சொல்லியிருக்கின்றார்” என்றான்.

அவன் தயங்கிய வண்ணம் கீழே தலைகுனிந்தபடி, “நானும் கங்கைகொண்ட சோழபுரம் புறப்பட்டுவிடலாம் என்று நினைக்கின்றேன்!” என்றான் மெல்லிய குரலில்.

“அப்படியென்றால் இங்கே யார் இருப்பது?” - கோபத்துடன் அவனிடமிருந்து கேள்வி வெளிப்பட்டது.

திருவரங்கன் அதற்குப் பதில் சொல்லாமல் மௌனமாகவே இருந்தான்.

“நமக்கும் உனக்கும் கருத்து வேறுபாடு தனிப்பட்ட முறையில் இருக்கலாம். நாட்டுப் பணியில் அது குறுக்கிடக் கூடாது” என்று அழுத்தமுடன் இராசேந்திரன் கூறியதும்,

“இல்லை என்று நான் மறுக்கவில்லை; ஆனால் கொஞ்ச நாளாகவே எனக்கு மனநிலை சரியாக இல்லை! அதனால் கங்கைகொண்ட சோழபுரம் புறப்பட்டுவிடலாம் என்று நினைக்கின்றேன்” என்றான்.

இராசேந்திரனுக்குக் கோபம் வந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“நாம் இருவரும் சென்றுவிட்டால், கோட்டைப் பொறுப்பை ஏற்பது யார்? எப்போது சோழரிடமிருந்து பறித்துக் கொள்ளலாம் என்று துடித்துக் கொண்டிருக்கும் பாண்டியர் கைகளில் கொடுத்துவிடலாமா?” என்றான்.

“வந்து...” என்று பேச முற்பட்ட திருவரங்கனை, “எனக்குத் தெரியாது. நான் இப்போதே புறப்பட ஆயத்தமாகிவிட்டேன்! மதுரையின் பொறுப்பை நீதான் ஏற்றுக் கொள்ள வேண்டும். சக்கரவர்த்தியின் சார்பில் முதன்மந்திரி அனுப்பிய கட்டளை இது!” என்று அரச முத்திரை பதித்த முடங்கலைக் காண்பித்தான்.

அதைப் பார்த்துத் திருவரங்கன் மலைத்து நிற்க...

இருக்கையிலிருந்து எழுந்துகொண்ட இராசேந்திரன், “இப்போதே கோட்டைத் தலைவர்களுக்கும் மற்ற முக்கிய அதிகாரிகளுக்கும் நீ பொறுப்பு ஏற்பதைத் தெரிவித்துவிடுகின்றேன்! ஏற்கனவே கோட்டைத் தலைவனை அழைத்து வர ஆளை அனுப்பிவிட்டேன். ஒரு விஷயம்...” என்று அவனருகில் வந்து, “இவை யாவும் இரகசியமாய் நடக்க வேண்டும் என்பது முதல்மந்திரியின் உத்திரவு” என்றான்.

“என்னது?”

“ஆமாம்! நீ, கோட்டைத்தலைவன், மற்ற முக்கிய அதிகாரிகள் இவர்களைத் தவிர மற்றவர்களுக்கு நான் மதுரையில் இருப்பதாகவே தெரிய வேண்டும்!”

“எதற்கு இப்படி ஒரு ஏற்பாடு?”

“எனக்குத் தெரியவில்லை. அங்கே போனால் தெரியும்.”

‘அப்படி என்ன கங்கைகொண்ட சோழபுரத்தில் அவசரம்?’ என்று திருவரங்கள் யோசிக்கும் சமயத்தில், உள்ளே நுழைந்த கோட்டைத்தலைவனும், சோழ அரசின் முக்கிய அதிகாரிகள் இருவரும் இராசேந்திரனை வணங்கி நின்றனர்.

அவர்களிடம் முதன்மந்திரியின் உத்தரவை விளக்கி, அது இரகசியமாய் இருக்க வேண்டிய அவசியத்தையும் கூறினான்.

அடுத்த சில நொடிகளில் திருவரங்கன் கோட்டையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

யவன வீரனைப் போன்று உடையணிந்து, தோற்றத்தில் மாறுதலும் செய்து கொண்ட இராசேந்திரன், காரனை விழுப்பரையனுடன் கங்கைகொண்ட சோழபுரம் நோக்கிப் புறப்பட்டான்.

அப்படிப் போகும் போது...



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இளவரசி இரத்தினாதேவியை சீக்கிரம் அனுப்பிவைக்குமாறு திருவரங்கனிடம் தெரிவித்துவிட்டு, தான் போகிற விஷயம் முக்கியமாய் அவளுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்றும் கூறினான்.

“அப்படியே செய்கின்றேன்” என்று தலையாட்டிவிட்டு அவள் மாளிகை நோக்கி சென்றான் திருவரங்கன்.

## அத்தியாயம் - 34

“வாருங்கள்! என்மீது கோபமா?” என்று புன்னகையுடன் வரவேற்றாள் கடார இளவரசி.

“இல்லை!”

“அப்படியென்றால் ஏன் இன்று முழுவதும் தங்களைக் காணவில்லை?”

“பொறுப்பு அதிகமாகிவிட்டது!”

“பொறுப்பா? அதைத்தான் விடுவித்துக் கொண்டதாக என்னிடம் கூறினீர்களே?”

இச்சமயத்தில் அந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சற்றுத் திணறி, மௌனமாக அவளைப் பார்த்து முறுவலித்தான்.

“சரி... சரி... நான் கங்கைகொண்ட சோழபுரம் புறப்பட்டுவிட்டேன். நீங்களும் என்னுடன் வருவதாக ஏற்கனவே தெரிவித்தீர்கள். அதனால் சீக்கிரம் புறப்பட வேண்டும் என தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்!” என்றாள்.

‘வரவில்லை என்று எப்படிச் சொல்வது? எல்லாம் ரகசியமாய் வைக்கப்பட வேண்டும் என்பது இராசேந்திரனின் கட்டளை’ என்று தர்மசங்கடத்தில் ஆழ்ந்த திருவரங்கன், “தற்சமயம் நான் வருவதற்கில்லை!” என்றான்.

“என்னது?” வியப்பில் மூழ்கிய இரத்தினாதேவி, பக்கத்தில் வந்து ஏற இறங்க அவனைப் பார்த்தாள்.

“ஆமாம் இளவரசி. நிலைமை அம்மாதிரி இருக்கின்றது. தற்சமயம் மதுரையிலேயே தங்கிவிடலாம் என்று நினைக்கின்றேன்!”

நேற்றுவரை என்னுடன் வருவதாகச் சொன்னவன் இப்போது வரவில்லையென்று சொல்கின்றானே? அப்படியென்றால் இதற்குள் இராசேந்திரன் இவன் மனதை மாற்றிவிட்டானா? இவ்விதம் ஒரு நிலையில்லாத இவனை வைத்துக் கொண்டு நாம் ஒரு காரியமும் செய்ய முடியாதே! எதற்காக இவன் தற்சமயம் என்னுடன் வர மறுக்கின்றான்?



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதை அறிவதற்காக வேண்டி, “போய்விட்டு வந்துவிடலாம். சக்கரவர்த்திக்கு மருந்து ஆகிவிட்டிருக்கும். அதனால் அதைக் கொடுத்துவிட்டு மறுபடியும் நான் இங்கேதான் வர வேண்டியிருக்கிறது. ஏனென்றால் மதுரை எனக்கு நிரம்பவும் பிடித்துவிட்டது!” என்று சிரித்தவாறு கூறினாள்.

“அதற்கு இல்லை. நீ மட்டும் போய் வந்துவிடு. நாள் இங்கேயே இருந்துவிடுகின்றேன்!” என்றான் திருவரங்கன்.

“காரணம்...?”

சொல்வதற்கில்லை என்று சொல்ல முடியுமா? அதனால் அதற்கு என்ன பதில் சொல்வதென்று யோசித்தவாறு திணறிக் கொண்டிருந்தான்.

“நீங்கள் சிந்தனை வயப்படுவதைப் பார்த்தால் உள்ளுக்குள் ஏதோ விஷயம் இருப்பதாகப்படுகிறது” என்று அவனைப் பார்த்துக் கண் சிமிட்டிய இரத்தினாதேவி, தன் கைகள் இரண்டையும் இணைத்து அவன் பின் கழுத்தில் வைத்துத் தன் பக்கமாய் அவனை இழுத்தாள்.

பதிலுக்குத் திருவரங்கனும் அவளின் வழுவழுத்த முதுகில் தன் நீண்ட கைகளை வைத்தணைத்து, பரந்த தன் மார்பின் மேல் அவளை நன்கு பதியவைத்து அழுத்தமுடன் தழுவினான்.

இதற்காகவே அவள் காத்திருந்தது போல அவன் உடலோடு தன்னை நன்கு இணைத்துக் கொண்டு, அவன் கன்னத்தில் பூவினும் மென்மையான தன் இதழ்களைப் அற்புதமாய்ப் பதியவிட்டாள்.

அந்த மென்மையான பதிப்பில் தன் மனதை முற்றும் இழந்த திருவரங்கன், அந்த இதழ்களில் தன் உதடுகளை இணைப்பதற்கு முயன்றான்.

ஆனால் அவள் அதைவிட ஒருபடி அதிகமாய்ச் சென்று, அவன் மூக்கின் நுனியைத் தன் முத்துப் போன்ற பற்களினால் அழுத்தமில்லாது அவனுக்கு வெறியூட்டும் விதத்தில் மெல்ல கடித்தாள்.

தன் நாசியில் அவளின் கூரிய வெண்பற்கள் உராய்ந்ததினால், இன்பத்தின் எல்லையை நோக்கிச் சென்ற திருவரங்கன் அவளின் பின் பகுதியைச் சுற்றியிருந்த தன் பிடியை இறுக்க...

இதுதான் சமயம் என்று எண்ணிய இரத்தினாதேவி “எதற்காக என்னுடன் வர மறுக்கின்றீர்கள்?” என்றாள் கொஞ்சும் குரலில்.

“நான்தான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே” என்று அவன் தடுமாற்றத்துடன் கூற...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இல்லை. நீங்கள் எதையோ மறைத்துப் பேசுவதை உங்கள் முகம் எனக்குக் காட்டிக் கொடுக்கிறது. போங்கள்! இதற்குள்ளேயே இரு மனத்துடன் பழகும் நீங்கள் எப்படிக் கடைசிவரை என்னைக் கண் கலங்காமல் வைத்துக் கொள்வீர்கள்” என்று அவனிடமிருந்து விலகினாள்.

அத்தோடு பெண்களுக்கே உரிய வழக்கமான ஆயுதமான விழிகளில் நீர்சுரக்க வைக்கும் முறையை அச்சமயம் நன்கு பயன்படுத்தினாள்.

“என்ன இரத்தினா. நான் என்ன மறைத்துவிட்டேன் என்று அழுகின்றாய்? நீ நினைக்கிற மாதிரி இல்லை!” என்று அவளருகில் வந்து பின் பகுதியைத் தொட முயன்றான்.

அவன் கைகளைக் கோபத்துடன் விலக்கிய கடார இளவரசி, “என் வாழ்வில் உங்கள் ஒருவரைத்தான் நம்பியிருந்தேன். நீங்களும் கைவிட்டுவிட்டதால் நான் தற்கொலைதான் செய்து கொள்ள வேண்டும்” என்றாள்.

அத்துடன் அவள் விழிகளிலிருந்த வழிந்த நீர், மென்மையான அக்கன்னங்களில் வழிந்து ஓடத் தொடங்கியது.

‘நான் எங்கே போய் முட்டிக் கொள்ள முடியும்? ஈசுவரா! இது என்ன விபரீதம்?’ என்று சங்கடப்பட்டான் திருவரங்கன். கோட்டைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதால் தான் வரமுடியாத நிலையில் இருக்கின்றேன் என்று இவளிடம் எப்படிக் கூற முடியும்? அரசாங்க இரகசியம் காப்பாற்ற படவேண்டும் என்ற பொறுப்பிலிருந்து வழுவிவிட்ட குற்றத்திற்கு ஆட்பட வேண்டி வருமே? அதற்கு என்ன செய்யலாம்? என்று குழம்பியபடி, “தயவு செய்து உன்னை வேண்டிக் கொள்ளுகின்றேன்! என்னை இதற்கு மேல் ஒன்றும் கேட்காமல் இருப்பது நல்லது” என்றான்.

அப்படியென்றால்? இவனிடம் நிச்சயமாய் ஏதோ இரகசியம் இருக்கிறது என்று புலப்பட்டுவிட்டது என்பதைப் புரிந்து கொண்ட இரத்தினாதேவி, “என்னை நீங்கள் உண்மையாகக் காதலிக்கவில்லை என்று தெரிகிறது” என்றாள் கோபத்துடன்.

“நான் இருக்கும் தர்மசங்கடமான நிலையை நீ புரிந்து கொண்டால் நிச்சயம் நீ இப்படித் திருப்பித் திருப்பி என்னைக் கேட்கமாட்டாய்” என்றான் இரக்கமுடன்.

“காதலன்... காதலி... கணவன்... துணைவி என்று வந்துவிட்டால் எந்த ஒரு விஷயமும் அவர்கள் இருவருக்கும் கண்டிப்பாகத் தெரிய வேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்கும்!” என்று கூறிய அவள் தன்னால் பிரித்துவிட்ட திருவரங்கன் கரத்தை அவளே வலிய எடுத்துத் தன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மென்தோளின் மேல் சாய்த்துக் கொண்டு, “என் கண்ணல்ல! நமக்குள் எதற்கு இரகசியம்!” என்று அவன் நெற்றியில் தன் இதழ்களைப் பதித்தாள். அத்தோடு நிற்காமல் அவனை முன் பக்கமாய் இழுத்துத் தன் மேல் சரித்துக் கொண்டாள்.

இதற்கு மேல் அவனால் என்ன செய்ய முடியும்? இதுவரை அவளிடம் சொல்லக் கூடாது என்ற உறுதியுடனிருந்த அவனின் பிடிப்பு இதனால் தளர்ந்துவிட்டது. “என் மீது ஆணையாய்க் கேட்கின்றேன்! நான் சொல்லப் போகும் விஷயத்தை யாரிடமும் நீ சொல்லக் கூடாது என்று எனக்குச் சத்திய வாக்குத் தர வேண்டும். அத்தோடு அதை வைத்துக் கொண்டு சோழ அரசுக்கு எதிராக நீ எந்தக் காரியத்திலும் பிரவேசிக்கமாட்டேன் என்று உறுதிமொழியும் தர வேண்டும்!” என்றான்.

அதற்கு அவள் சம்மதிக்க. எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் கூறினான். அத்துடன் யாரிடமும் சொல்லக் கூடாது என்று சத்தியமும் வாங்கிக் கொண்டான்.

தூமகேதுவைச் சந்திக்கத் தென்னன் இரகசியமாய் மதுரையிலிருந்து சென்றுவிட்டதால் அவன் வரும் வரை உடம்பு சரியில்லை என்று பொய்சாக்குக் கூறி, கங்கைகொண்ட சோழபுரம் போகாமல் தள்ளிக் கொண்டு வந்த இரத்தினாதேவி, மாறுவேடத்தில் இரகசியமாய் இராசேந்திரன் புறபட்டுவிட்டதைத் திருவரங்கன் மூலம் அறிந்து கொண்டு தானும் கங்காபுரி செல்ல உத்தேசித்து சாமந்தனுடன் ஆலோசனை செய்தாள்.

அவனும் புறப்படுவதே நல்லது என்றான்.

“மூலிகை தேடச் சென்றிருக்கும் தென்னன் வந்தால் கங்கைகொண்ட சோழபுரம் அனுப்பி வையுங்கள்” என்று திருவரங்கனிடம் கூறிவிட்டு, சாமந்தனுடன் புறப்பட ஆயத்தமானாள். ஆனால் கூடவே சோழச் சக்கரவர்த்தியின் தூதுவனும் வருவதைப் பார்த்து சாமந்தனும் அவளும் வெளிப்படையாக எதுவும் பேச முடியாது என்பதை உணர்ந்த இரத்தினாதேவி அவனை மதுரையிலேயே விட்டுவிடத் திட்டமிட்டாள்.

ஆனால் அவனோ “உங்களுடன் கூடவே நானும் வருவேன். சக்கரவர்த்தி அவ்விதம்தான் என்னிடம் கூறியிருக்கின்றார்” என்று உறுதியாய்ச் சொல்லிவிட்டான்.

அதைக் கேட்ட திருவரங்கனும், “சக்கரவர்த்தியின் கட்டளையை நான் மீற முடியாது!” என்று கைவிரித்துவிட்டான்.

வேறு வழியின்றி அவனையும் கூட அழைத்துக் கொண்டாள். ஆனால் அவர்கள் இருவரும் அவனுக்குப் புரியாத கடார மொழியில் பேசிக் கொள்வது என்று தீர்மானித்துக் கொண்டார்கள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அடுத்த ஒரு நாழிகை கழித்து-

மூன்று புரவிகளும் கங்கைகொண்ட சோழபுரம் நோக்கி வேகமாய் ஓடத் துவங்கின.

## அத்தியாயம் - 35

**ம**துரைக் கோட்டையில் இராசேந்திரனைக் கடார இளவரசியால் ஆபத்து வருகின்றதென்று எச்சரித்த அம்மையப்பன், தூமகேதுவைப் பின் தொடர்ந்தால் அதன் மூலம் பாண்டிய மன்னன் ஒளிந்திருக்கும் இடத்தை அடைந்துவிடலாம் என்று திட்டமிட்டு அவனிருக்கும் இடத்தை எப்படி அறிவது என்ற சிந்தனையுடனே கொற்கையை நோக்கிக் குதிரையைச் செலுத்தினான்.

உயர் சாதிக் குதிரையில் சைவத்துறவி ஒருவர் போவதை வழியிலிருக்கும் மக்கள் சற்று வித்தியாசமாகக் கவனிக்க, அம்மையப்பன் அதைப் பற்றிக் கவலை கொள்ளாது குதிரையில் வேகமாய்ப் பயணம் செய்யலானான்.

இந்தக் கோலத்தில் இவ்விதம் அனைவரின் கவனத்தைக் கவருவதில் தனக்கு ஆபத்து இருக்கின்றது என்பதை உணர்ந்தேயிருந்த இவன், அவ்விதமாவது தூமகேதுவின் கவனம் தன் மீது விழாதா என்ற நப்பாசையுடன் அசுவத்தை நடத்திக் கொண்டிருந்தான்.

பகற்போது நெருங்கிவிட்டது; களைப்பாறிச் செல்லலாம் என்று குதிரையை நிறுத்தினான்.

சுற்று முற்றும் பார்க்க அந்த இடம் மிகச் சிறிய ஊராக இருந்ததால், இதில் எப்படித் தங்குவது என்ற ஐயத்துடனே எதிரில் வந்த ஒருவனிடம், "ஐயா, தங்குவதற்கு இவ்விடத்தில் எங்கேயாவது சத்திரம் இருக்கின்றதா?" என்று வினவினான்.

அம்மையப்பனை அவன் ஏற இறங்கப் பார்த்தான்! அப்பார்வையில்...

துறவிகூட குதிரை ஒன்று வைத்திருக்கின்றாரே என்ற ஏளனம் இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "இவ்விடத்தில் அப்படி ஒன்றும் இல்லை; இதைத் தாண்டினால் போகும் வழியிலேயே ஒரு சத்திரம் இருக்கிறது" என்று அதற்குரிய வழியையும் விளக்கினான்.

"நன்றி!" என்று வழி கூறியவருக்கு வணக்கம் வைத்துவிட்டுப் புரவியை வேகமாய்ச் செலுத்தினான்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஊரைக் கடந்ததும் பெரிய மரங்கள் வான் முட்டும் அளவிற்கு வளர்ந்து இருந்தன. அதற்கிடையே பழைய மாளிகை ஒன்று தென்பட்டது. அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்த அவன், குதிரையை அங்கே செலுத்தினான்.

முகத்தில் சிரிப்பும் மெலிந்த தேகத்தோடு ஒருவன் அம்மையப்பனை வரவேற்க வெளியே வந்தான்.

"ஒரு துறவி புரவியில் வந்து..!" -அவனையுமறியாமல் பாட்டாக வாயிலிருந்து வெளிப்பட்டது.

"ஆகா! என்ன அற்புதம்! சூரியன் உதித்த நேரத்திலிருந்து யாரும் வரவில்லையே என்று காத்திருந்தேன். தாங்கள் வந்துவிட்டீர்கள். உயர் சாதிப் புரவியில், முகத்தில் சிவச் சின்னம் துலங்க, சாட்சாத் அந்த ஈசுவரனே இங்கே வந்துவிட்டது போன்று இருக்கின்றது" என்று கூறியபடியே "ஒரு துறவி புரவியில் வந்து.." என்று மீண்டும் பாடத் துவங்கினான்.

"அப்பனே, தாங்கள் கவிதை பாடும் நபரோ?" என்றான் அம்மையப்பன்.

"கவிதை பாடும் நபர் என்று அஃறிணைப் பொருள் போல் என்னை அழைக்காதீர். கவிஞர் என்று அழுத்தமாய் மரியாதையுடன் கேளுங்கள். ஏனென்றால் எங்கள் குடும்பம் பாரம்பரியம் கொண்டது. என் முன்னோருக்கு முன்னோர் ஒட்டக்கூத்தர் பரம்பரையில் வந்தவர்கள்" என்றான்.

"ஓஹோ! எனக்குத் தெரியாமல் போய்விட்டது கவிஞரே!" என்று கேலியுடன் சொன்ன அவன் "சற்று முன்பு என்னைப் பற்றி ஒரு வரி பாடினீர்களே! அதை முழுமையாகப் பாடுங்களேன்!" என்றான்.

"பாடுவதற்குள்தான் நீங்கள் குறுக்கிட்டு என் ஆர்வத்தைக் கெடுத்துவிட்டீர்களே! இல்லையென்றால் சாகா வரம் பெற்ற ஒரு கவிதையை இயற்றியிருப்பேன்" என்றான் சத்திரத் தலைவன்.

"இயற்றியிருப்பீர். நிச்சயம் உங்களைப் பார்த்தால் அம்மாதிரிதான் தெரிகிறது" என்ற அம்மையப்பன், "கவிஞரே, என் புரவி நீண்ட பயணம் செய்து வந்திருக்கிறது. அதற்குக் கொஞ்சம் 'கொள்' வையுங்கள்; நானும் கொஞ்சம் ஓய்வெடுக்கின்றேன். எல்லாவற்றுக்கும் அச்சாரமாக இந்தாருங்கள்" என்று பொற்காசு ஒன்றைத் தந்தான்.

சத்திரத் தலைவன் அதை வாங்கிக் கொண்டு, "நான் எப்படியெல்லாமோ இருக்க வேண்டியவன். என் தலையெழுத்து, இங்கே யாத்திரிகர்கள் தங்கும் விடுதியை நடத்திக் கொண்டிருக்கின்றேன்" என்று கூறினான். மீண்டும், "ஒரு துறவி புரவியில் வந்து... வந்து...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வந்து" என அதற்கு மேல் அவனுக்கு வரிகள் கிடைக்காததால், அம்மையப்பனின் குதிரையைப் பின் பக்கத்திலிருந்த இலாயத்திற்கு அழைத்துச் சென்றான்.

அதற்குப் பிறகு. அம்மையப்பனுக்கு உணவு படைக்கப்பட்டது. அதைச் சாப்பிட்டதும் பயணம் செய்த களைப்பு கண்களில் பரவவே, சத்திரத்தில் நடுக்கூடத்தையொட்டி இருந்த சிறிய அறையில் உள்ள பஞ்சணையில் சாய்ந்தான்.

அடுத்த சில நொடிகளில் நித்திராதேவி அவனை ஆட்கொண்டாள். அதன் அறிகுறியாக அவனிடமிருந்து குறட்டைச் சபதம் வெளிப்பட்டது.

அதே சமயம் இரு புரவிகளில் தென்னனும், தூமகேதுவும் அங்கே வந்தனர்.

"பரவாயில்லையே. இன்று நான் நரி முகத்தில்தான் விழித்திருக்கின்றேன்!" என்று உற்சாகத்துடனே சத்திரத்தலைவன், "வாருங்கள்! வாருங்கள்!" என்று அவர்களை வரவேற்றான். "ஒரு துறவி புரவியில் வந்து... வந்து..." என்று அடுத்த வரிக்காக அந்தத் தொடரைத் திரும்பத் திரும்பப் பாடினான். அப்போது...

"என்னய்யா இது? ஒரு பைத்தியத்திடம் வந்து மாட்டிக்கொண்டோமே!" என்று தூமகேதுவின் காதில் தென்னன் மெல்லிய குரலில் கூற. "அது கவி பாடும் பைத்தியம்" என்று இரகசியமாய்ச் சொன்னவன், "நீ நினைப்பது போல் வேறு ஒன்றுமில்லை. நான் ஏற்கனவே ஒருமுறை இங்கே வந்து தங்கியிருக்கின்றேன்" என்று அவனுக்குச் சமாதானம் கூறிச் சத்திரத் தலைவன் பக்கம் திரும்பி, "தாங்கள் அதிக உற்சாகத்தில் இருப்பதாக அல்லவா எனக்குத் தெரிகிறது" என்றான் தூமகேது.

"ஆமாம்! உற்சாகத்தில்தான் இருக்கின்றேன்! 'ஒரு துறவி புரவியில் வந்து...' என்று நான் பொய்யாகப் பாடவில்லை. சற்று முன்பு ஒரு சிவபக்தர் புரவியில் இங்கே வந்தார். அந்த அதிசயத்தைத்தான் நான் கவியாக இயற்றிப் பாடலாம் என்று முயற்சிக்கின்றேன்" என்றான் சத்திரத் தலைவன்.

தூமகேதுவுக்கு வியப்பினால் விழிகள் விரிந்தன. நெற்றியைச் சுருக்கித் தென்னனைப் பார்க்க, அவனும் புரியாமல், "முற்றும் துறந்த ஒரு முனிவர் குதிரையில் வந்தாரா?" என்றான் வியப்புடனே.

"ஆமாம்; வேண்டுமென்றால் உள்ளே போய்ப் பாருங்கள். அவர் நன்கு குறட்டைவிட்டுக் கொண்டு நித்திரையில் ஆழ்ந்திருக்கின்றார்!" என்றான்.

அதைக் கேட்டு இருவரும் உள்ளே சென்றனர்.

பெருங்குறட்டை ஒலியுடன் அம்மையப்பன் உறங்கிக் கொண்டிருந்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இவன்...?” என்று வியப்புடன் உரக்கக் கூறிய தென்னனைத் தூமகேது அடக்கி, “எனக்கும் தெரியும்!” என்றான்.

இருவரும் அங்கிருந்து அகன்று சிந்தனை வயப்பட்டனர்.

பின்னால் வந்த சத்திரக்காரன் அதைக் கவனித்து “என்ன யோசனை? இந்தத் துறவியைப் பற்றி உங்களுக்கு முன்பே தெரியுமா?” என்றான் உரத்த குரலில்.

உதட்டில் விரலை வைத்து மெதுவாய்ப் பேசும்படிச் சைகை செய்த தூமகேது அவனை அருகில் அழைத்து “நாங்கள் இங்கே வந்திருப்பது இவனுக்குத் தெரியக் கூடாது!” என்று அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் கூறினான்.

‘இதில் ஏதோ விஷயம் இருக்கிறது!’ என்று மட்டும் தெரிந்து கொண்டான் சத்திரத்தலைவன். அச்சத்துடனே, “துறவி... புரவி” என்று உளறத் தொடங்கினான்.

“பயப்படாதே! சத்திரத்தில் வைத்து ஒன்றும் நடக்காது!” என்று முதுகில் தட்டிக் கொடுத்தான் தென்னன்.

“ஆமாம்! அதுதான் நல்லது. உங்களுக்குள் இருக்கும் சண்டையை வேறெங்கேயாவது வைத்துக் கொள்ளுங்கள்” என்றான் சத்திரக்காரன் சிரித்துக் கொண்டே.

“எங்களுக்குத் தங்குவதற்கு மட்டும் அறை கொடுங்கள்” என்று தூமகேது அவனை வேண்ட...

“தருகின்றேன். மேல் தளத்தில் ஒரு அறை இருக்கிறது. அங்கே தங்குங்கள்” என்று இருவரையும் மரப்படிகளில் அழைத்துக் கொண்டு சென்றான்.

மூவரும் ‘தட் தட்’ என்று மேல்தளத்தில் நடமாடுவதால் ஏற்பட்ட சப்தத்தைக் கேட்டு உறக்கத்திலிருந்த அம்மையப்பன் கண்விழித்தான்.

முகத்தைச் சொறிந்து கொண்டு எழுந்து உட்காரும் சமயத்தில் அவன் செவிகளில் பேசுங்குரல் விழுந்தது.

“என்னது இது புதிய குரல்?” என்று எழுந்து கூடத்தை கடந்து மரப்படிகளில் காலை வைத்து சப்தமின்றி மேலே ஏறினான்.

“துறவிக்கு இன்று இறுதி நாள். அதுதான் நம் கண்ணில் சிக்கிவிட்டான்” என்று தென்னன் கூறவும், பதிலுக்குத் தூமகேதுவும் “ஆமாம்!” என்றான்.

மேற்கூறிய உரையாடல் அம்மையப்பன் செவிகளில் தெளிவாக விழுந்தது.

துறவிக்கு இறுதி நாள். அப்படியென்றால் துறவி யார்? தனக்குள்ளே வினவிய அம்மையப்பனுக்கு தன்னுடைய துறவிக் கோலம்தான் நினைவுக்கு வந்தது.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சந்தேகமில்லாமல் தன்னைத்தான் இவர்கள் குறிப்பிட்டு பேச வேண்டும் என்ற முடிவுக்கு வந்து குரலும் கேட்டது போன்று இருக்கவே, 'யாராக இருக்கலாம் அவர்கள்?' என்பதை அறிவதற்காக சப்தமில்லாமல் மரப்படிகளில் ஏற முயன்றான்.

அதே சமயம்...

"அறை வசதிதானே? நான் வரட்டுமா?" என்று அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு சத்திரக்காரன் இறங்குவதற்காகப் படிகளின் அருகில் வந்தான்.

கீழிருந்தபடி அவன் கால்களைக் கவனித்துவிட்ட அம்மையப்பன், மிக வேகமாய்ப் படியிறங்கித் தன்னுடைய அறைக்குள் சென்று படுத்துக் கொண்டு கண்களையும் மூடிக் கொண்டான்.

வேகமாய் அவன் கீழிறங்கியதால் ஏற்பட்ட சப்தம் சத்திரக்காரன் செவியில் விழுந்தது.

அது என்ன சப்தம் என்று கீழே வந்தபடி சுற்று முற்றும் பார்த்தான்.

யாரும் இல்லாததனால் அம்மையப்பன் தூங்கும் அறைக்குச் சென்று எட்டிப் பார்த்தான்.

குறட்டை ஒலி செவியைத் துளைத்தது.

அப்படியென்றால் யாரோ படிகளில் இறங்கியது போல் தெரிந்ததே! அது யார்? என்று கேள்வியை எழுப்பிய சத்திரக்காரன். 'இது என்ன... இன்று நரிமுகத்தில் விழித்தேன் என்று சந்தோஷப்பட்டேன். இப்போது பரிமுகத்தில் விழித்தது போன்றல்லவா ஆகிவிட்டது. மேலே தங்கியிருக்கும் இருவரும் நல்லகுணம் இல்லாதவர்கள் போல் தெரிகிறது. அவர்களை முதலில் இங்கிருந்து கிளப்பிவிட வேண்டும்' என்று ஓடியது யாராயிருக்கலாம் என்று சத்திரம் முழுவதும் தேடினான்.

யாரும் தென்படவில்லை.

அதனால் தலைமயிரைப் பிய்த்துக் கொள்ளாத குறையாக என்ன செய்வது என்று புரியாமல் குழம்பியபடி தரையில் உட்கார்ந்தான்.

அப்போதுதான் உறக்கத்திலிருந்து விழித்தது போன்று எழுந்து உட்கார்ந்த அம்மையப்பன், நீண்ட கொட்டாவி ஒன்றைவிட்டு, "என்ன சத்திரக்காரரே! தலையில் கை வைத்துக் கொண்டு தரையில் உட்கார்ந்து கொண்டீர்?" என்று அவன் சமீபமாய் வந்து "கவிதையை முடித்துவிட்டீரா?" என்று வினவினான்.

"கவிதையாவது! மண்ணாவது... இப்போதிருக்கும் நிலையில் என் தலை முடியைப் பிய்த்துக் கொண்டு எங்கேயாவது ஓடி ஒளிந்து கொள்ளலாம் போலிருக்கு!" என்று அருகில்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வந்து, "இங்கிருந்து நீங்கள் சீக்கிரம் போய்விடுங்கள்! மேலே..." என்று அதற்கு மேல் வந்த வார்த்தைகளை அடக்கிக் கொண்டு, 'உனக்கு அபாயம் இருக்கிறது!' என்பதை சாடை மூலம் தெரிவித்தான்.

"என்ன மேலே..." என்று புரியாமல் அம்மையப்பன் வினவிய அதே சமயம், மரப்படிகளில் அந்த இருவரும் இறங்கும் சப்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

தூமகேதுவும், தென்னனும் இடுப்பில் கையூன்றியவாறு அட்டகாசமாய்ச் சிரித்தபடி அம்மையப்பனை நோக்கி வந்தார்கள்.

'ஓ! இந்தச் சூரர்கள்தானா? இவர்களைத் தேடி நான் போக, என்னத் தேடி இவர்களே இங்கு வந்துவிட்டார்கள். நல்லவேளை!' என்று மகிழ்ச்சியுற்ற அச்சிவ பக்தன் இருவரையும் யாரென்று அடையாளம் தெரிந்தது போல் காட்டிக் கொள்ளாமலே, "வணக்கம்!" என்று கரங் குவித்தான்.

பதிலுக்குத் தலையை மட்டும் சாய்த்து வணக்கத்தை அலட்சியத்துடன் வெளிப்படுத்திய தூமகேது, தென்னன் பக்கம் திரும்பி, "இந்தச் சிவபக்தன் தம்மை ஈசுவரன் என்று நினைத்து வணங்கினாரா?" என்று கேலியுடன் கேட்டான்.

"ஆமாம்! ஆமாம்! நம்மைப் பார்த்தால் சிவன் போல்தான் தெரிகிறது!" என்றான் தென்னன்.

அம்மையப்பன் விடவில்லை.

"இந்தப் பூவுலகில் உதித்த ஒவ்வொரு உயிரும் ஈசனின் அம்சத்தைச் சேர்ந்ததுதான்" என்றான் அழுத்தமாக.

"இதென்ன கதை வேறு மாதிரி போகிறது!" என்று மூவரையும் பார்த்து மெல்ல சிரித்த சத்திரக்காரன் "நீங்கள் மேலேயிருந்து ஏன் கீழே வரவேண்டும்?" என்றான்.

தூமகேது அந்தச் சத்திர மாளிகையே இடிந்து வீழ்வது போல் உரக்கச் சிரித்தான். சத்திரக்காரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'இவன் மனிதன்தானா? இப்படிச் சிரிக்கின்றானே?' என்று "மெள்ள... மெள்ள" என்றான்.

"சத்திரக்காரரே எனக்கு உரக்கச் சிரித்துத்தான் பழக்கம். மெள்ள... மெள்ள என்று நீங்கள் சொல்லும் வார்த்தை இங்கே எடுபடாது" என்று கூறிவிட்டுத் திரும்பவும் இடியோசை போல சிரிக்கலானான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அம்மையப்பனுக்கு ஒன்றும் புரியவில்லை. சிரிக்கும் தூமகேதுவை மேலும் கீழும் பார்க்க ஆரம்பித்தான். உடனே தென்னன் குறுக்கிட்டு, “சிவ அம்சம் சிரிக்கின்றது. நீங்கள் வேறு ஒன்றும் நினைக்க வேண்டாம்!” என்றான்.

அப்போது சத்திரக்காரன் குறுக்கிட்டான். “இந்த மாளிகையே விழுந்துவிடுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது” என்றான்.

“அப்படியாகிவிட்டால் அதற்கு ஈடாக இந்தப் பொன் முடிப்பைத் தருவேன்! கவலைப்படாதே” என்று இடுப்பில் செருகியிருந்த முடிப்பை எடுத்துக் காண்பித்தான் தூமகேது.

“அதற்காக சிரித்தே என் மாளிகையை இடித்துவிடலாம் என்று முடிவு கட்டிவிட்டீரா?”

“இல்லை. என் நோக்கம் உம் மாளிகை அல்ல; இந்தச் சிவபக்தன்தான்!” என்று அம்மையப்பனை நெருங்கினான்.

அதற்காகவே காத்திருந்தது போல அம்மையப்பன் “நாம் அனைவரும் நண்பர்கள்!” என்று புன்னகை செய்தான்.

“நண்பர்கள்தான்! அதை இல்லையென்று யார் மறுத்தது?” - இது தூமகேதுவின் செருக்குத்தனமான கேள்வி.

“சரி... சரி... இப்போதைக்கு நீங்கள் மேல்தளத்துக்கு போய்விடுங்கள்!” என்று சத்திரக்காரன் குறுக்கிட்டு சொல்ல...

“நண்பரைப் பிறகு கவனிக்கின்றேன்” என்று முறைப்புடன் கூறி தூமகேது, தென்னனுடன் மேல்தளத்திற்குப் போக மரப்படி ஏறினான்.

அவர்கள் மேலே போனதும், அம்மையப்பன் பக்க திரும்பிய சத்திரக்காரன், “நீர் இங்கிருந்து போய்விடும்; இவர்களால் உமக்கு ஆபத்து காத்திருக்கிறது” என்றான் பயத்தோடு.

“அதற்காக நான் ஓடி ஒளியப் போவதில்லை. என் பக்கம் ஈசன் இருக்கின்றார். அதனால் எனக்கு ஒன்றும் ஆபத்து ஏற்படாது” என்று கூற...

“உங்களுக்கெல்லாம் இடம் கொடுத்தேன் அல்லவா? எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்!” என்று கைகளைப் பிசைந்தான் சத்திரக்காரன்.

அம்மையப்பன் அதைக் கவனித்து, “அப்படியே நான் போய்விட்டால் கூட உன்னை இவர்கள் சும்மாவிடமாட்டார்கள். அதனால் உனக்கு ஆபத்து



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஏற்படாதிருக்கவே, நான் சத்திரத்தில் தங்கியே ஆக வேண்டும்” என்று அழுத்தமுடன் கூறினான்.

“எப்படியாவது போங்கள்!” என்று அதற்கு மேல் அங்கே நிற்காமல் மேற்கொண்டு தன் வேலையைக் கவனிப்பதற்காகப் பின்பக்கம் சென்றான் சத்திரத்தலைவன்.

மாலை நெருங்கிக் கொண்டிருந்தது.

“கொற்கைக்கு இங்கிருந்து எவ்வளவு தூரம்? இருட்டுவதற்குள் அதை நெருங்க முடியுமா?” என்று சத்திரக்காரனை வினவினான் அம்மையப்பன்.

‘எப்படியாவது இங்கிருந்து போனால் சரி’ என்ற நினைப்பிலிருந்த அவன், “கொஞ்ச தூரம்தான். இருட்டுவதற்குள் போய்விடலாம்!” என்றான்.

வேறு உடைகளை மாற்றிக் கொண்டு சத்திரக்காரனுக்கு இரு பொற்காசுகளைத் தந்து தன் குதிரையில் ஏறினான். மேலேயிருந்த அவர்களும் புறப்பட ஆயத்தமாகி குதிரை அருகில் வந்தனர்.

இதை எதிர்பார்த்தது போல அம்மையப்பன், “நண்பர்களே, நான் வரட்டுமா?” என்றான் விடைபெறும் நோக்கில்.

“நாங்களும் வருகிறோமே. நீங்கள் இப்போது எங்கே போகிறீர்கள்?” என்று தென்னன் குறுக்கிட்டு வினவ...

“நான் கயிலாயத்துக்குப் போகின்றேன். நீங்கள்?” என்று கேலியுடன் கேட்டான் அம்மையப்பன்.

“கூட வரச் சொன்னால் நாங்களும் கயிலாயம் வரத் தயார்!” என்று கூறினான் தூமகேது.

“சரி... அப்படியென்றால் புறப்படலாமே!” என்று அம்மையப்பன் கூறவும், அவர்கள் குதிரை ஏறிக் கொண்டனர்.

‘துறவிக்கு இன்றோடு ஆயுள் முடியப் போகின்றது! பாவம்’ என்று நினைத்த சத்திரக்காரன், அனுதாபத்துடன் அம்மையப்பனை நோக்கினான்.

புன்னகையோடு அவனிடம் விடைபெற்றுக் கொண்டு, மற்ற இருவரோடும் அங்கிருந்து கிளம்பினான் சிவபக்தன்.

என்னைத் துறவி என்றே இவர்கள் நினைத்துவிட்டிருக்கின்றார்கள். எதையும் சமாளிக்கும் மனத்திண்மையும் ஏறக்குறைய ஐந்து பேரை ஒரே சமயத்தில் வீழ்த்தக்கூடிய உத்தி தெரிந்த சிறந்த போர் வீரனாகத் தான் இருப்பதையும், அதே சமயம் துன்பங்களை எதிர்நோக்கி வெற்றி பெறும் புத்திசாதுர்யமும் இருக்கின்றதை இவர்களுக்கு உணர



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வைக்கும் நேரம் வந்துவிட்டது என்ற எண்ணத்துடனே சிவபக்தன் குதிரையைச் செலுத்திக் கொண்டு முன்னே சென்றான்.

## அத்தியாயம் - 36

இருட்டு நெருங்கிக் கொண்டிருந்தது. கொற்கைத் துறைமுகத்தின் கலங்கரை விளக்கின் ஒளி தெரியத் தொடங்க, தென்னன் அதைப் பார்த்து, "சமீபம்தான்!" என்று தூமகேதுவின் பக்கம் திரும்பிக் கூறினான்.

"ஆமாம். கயிலாயம் கூட மிக நெருக்கத்தில் வந்துவிட்டது. அப்படித்தானே சிவபக்தரே?" என்று கிண்டலுடன் கேட்டான் தூமகேது.

மௌனமாகவே இவர்களைக் கவனித்துக் கொண்டு புரவியைச் செலுத்தி வந்த அம்மையப்பன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

அது ஒரு காட்டுப்பாதை என்பதற்கு அறிகுறியாக இருபுறமும் அடர்ந்த செடி கொடிகள் நன்கு உயரமாய் வளர்ந்திருந்தன. கீரிகள் குறுக்கும் நெடுக்குமாய் ஓடிக் கொண்டிருந்தன. வழியில் தாவி ஓடிய காட்டு முயல்கள், குதிரையின் குளம்பொலி கேட்டு அச்சமுற்று அருகிலிருந்த புதருக்குள் நுழைந்து கொண்டன.

வேகமாய்ச் சென்ற தூமகேது சடக்கென்று புரவியை நிறுத்தினான்.

"என்ன தூமகேது கயிலாயம் வந்துவிட்டதா?" என்றான் தென்னன் கிண்டலாக.

"இல்லை. அதற்கு இந்த வழி உசிதம் இல்லை என்பதற்காகவே புரவியை நிறுத்தினேன்" என்று பின்னால் வந்த அம்மையப்பன் பக்கம் திரும்பி, "சிவபக்தரே, கடற்கரை ஓரமாகவே நல்ல வழி ஒன்று இருக்கிறது. அதில் போகலாமா!" என்றான்.

இவர்களைப் பின் தொடர்வது என்னுடைய வேலை. அதைப் புரிந்து கொள்ளாமல் என்னைக் கிண்டல் செய்கிறார்கள். இருக்கட்டும்! என்று எண்ணிய அம்மையப்பன், "நீங்கள் எங்கே கூப்பிடுகின்றீர்களோ அங்கே நான் வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்" என்றான்.

"ஆகா! இவர்தான் உண்மையான சிவபக்தர்!" எனப் பாராட்டும் விதத்தில் கூறி தூமகேது, புரவியைக் கடற்கரை நோக்கிச் செல்லும் வழியில் திருப்பினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் மூன்று புரவிகளும் அந்த வழியில் ஓடத் துவங்கின.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கடற்கரையை நெருங்கியதும், அதையொட்டித் தெற்குப் பக்கமாகச் செல்லும் காட்டு வழியில் தூமகேது புரவியை ஓட்ட, தென்னனும் அம்மையப்பனும் அவனைப் பின் பற்றிக் குதிரையைச் செலுத்தினர்.

கடல் அலைகள் ஆர்ப்பரிக்கும் சப்தம் மூவரின் செவியில் விழுந்தன.

வேகமாய் புரவியைவிட்டுக் கொண்டு வந்த தூமகேது, அதன் வேகத்தைக் குறைப்பதற்காகக் கடிவாளத்தை இழுக்க குதிரை முன் கால்கள் இரண்டையும் தூக்கிக் கனைத்தது.

அப்படியே அதைத் திருப்பி அம்மையப்பனை நோக்கி வந்தான். பின்னால் இருந்த தென்னன் சரக்கென்று வாளை உருவிக் கொண்டான்.

இருவரும் தன்னைத் தீர்த்துக்கட்டும் முயற்சியில் இறங்கிவிட்டார்கள் என்பது அம்மையப்பனுக்குப் புரிந்தது. இந்த இருவரையும் சமாளிப்பதில் தனக்கு எந்தவிதமான தொந்தரவும் இருப்பதாக அவனுக்குப்படவில்லை. ஆனால் நட்பு முறையில் அவர்களுடன் கூடவே எவ்வளவு தூரம்வரை வேண்டுமோ அவ்வளவுவரை செல்ல வேண்டும் என்று தீர்மானித்திருந்த அவன் முடிவுக்கு தற்போது ஒரு மாற்றம் தேவைப்படுகிறது என்பதை நினைக்கும் போதுதான் அவனுக்குச் சங்கடமாக இருந்தது.

அதனால் சேனத்தையொட்டி இருந்த தன் வாளின் மேல் கை வைத்தபடி இருவரையும் பார்த்து மெல்லச் சிரித்தான். அதே சமயம் அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கும் வகையில் தன் புரவியை சற்றுப் பின்னுக்குத் தள்ளிக் கொள்ளவும் செய்தான்.

அருகில் வந்து தூமகேது அட்டகாசமாய்ச் சிரிப்பு ஒன்றை வெளிப்படுத்தி "கைலாயம் உங்கள் கண்களுக்குத் தெரிகின்றதல்லவா?" என்றான்.

அதைக் கேட்டு அம்மையப்பன், "எனக்குத் தெரியவில்லையே நண்பரே!" என்றான் அமைதியாக.

"அதோ பாருங்கள்! நீங்கள் போக வேண்டிய கயிலாயம்!" என்று தன் சுட்டு விரலால் சுட்ட...

அவன் காட்டிய இடத்தை அம்மையப்பன் பார்க்கும் போது, நீர் நிறைந்த பெரிய குட்டை ஒன்று தெரிந்தது. அது வழிக்கு குறுக்கே இருந்ததால், அதைத் தாண்டித்தான் மூவரும் போக வேண்டி இருந்தது. அதற்கு அப்பால் சிறிது தொலைவில் அடர்த்தியாய் ஒரு காடு இருந்தது.

"வெறும் குட்டைதானே இருக்கிறது. இது எப்படி ஈசன் உறையும் கயிலாயமாகும்?" என்றான் அம்மையப்பன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“சிவபக்தர் புறக்கண்ணால் பார்க்கின்றார். அதனால்தான் அவருக்குத் தெரியவில்லை. அகக் கண்ணால் பாருங்கள். நிச்சயம் உங்களுக்குப் புலப்படும்” என்றான் தூமகேது இடி இடி என்று சிரித்து.

நம்மை ஒரு வழி பண்ணிவிட முடிவு செய்திருக்கிறார்கள். அதனால்தான் குட்டையைக் காண்பித்துக் கேலி செய்கின்றார்கள் என்று புரிந்து கொண்ட அம்மையப்பன் இவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

அதே சமயம்...

குதிரை மேலிருந்த தூமகேது தென்னன் பக்கம் திரும்பி “சிவபக்தருக்கு கயிலாயம் தெரியவில்லை. நாம் அடையாள காட்டலாம் வா!” என்று அம்மையப்பன் அருகே நெருங்க முயன்றான். தென்னன் உருவிய வாளுடன் கிட்டே வர, இதற்குமேல் பேசாமல் இருப்பது ஆபத்தை விளைவிக்கும் என்று கருதிய சிவபக்தர், குதிரையின் கழுத்துப் பகுதியில் மறைத்து வைத்திருந்த வாளை உருவி, வசதிக்காகத் தன் புரவியை இன்னும் கொஞ்சம் பின்னுக்கு நகர்த்திக் கொண்டான்.

“அடடே! துறவிக்குச் சண்டைகூட போடத் தெரியும் போலிருக்கே!” என்று கூறியவாறு தென்னன் வாளை அம்மையப்பன் மார்பை நோக்கி வீசினான்.

இதை எதிர்பார்த்த அச்சிவத்துறவி, தன்னை நோக்கி வந்த வளைத் தடுத்து, அதே வேகத்தில் அவன் இடது தோளில் இலேசான காயத்தையும் உண்டு பண்ணினான்.

தூமகேது அதைக் கவனித்து ஆக்ரோஷத்துடன் தன் வாளை ஓங்கியபடி அம்மையப்பனை நோக்கி வர, இருவருக்கும் வாட்போர் மூண்டது.

இடது... வலது... என்று அவன் வீசிய பக்கங்களெல்லாம் தன் வாளைச் சுழற்றி இறுதியில் தூமகேதுவின் கையிலிருந்த வாளின்பிடி தளரும் சமயம் பார்த்து, முழுப் பலத்துடன் அதை தாக்க, ‘ணங்’ என்ற சப்தத்துடன் தரையில் விழுந்தது.

இடத் தோளில் குருதி வழிய துறவியை ஒரே வெட்டாய் வெட்ட வேண்டுமென்று தென்னன் பாய்ந்து வர, அப்பாய்ச்சலை எதிர்க்காமல் அம்மையப்பன் ஒதுங்கிக் கொண்டான்.

மிகுந்த வேகத்துடன் குதிரை ஓடிவந்ததால், அதற்குத் தடுப்பு இல்லாமல் போகவே, தத்தளித்து நிலைதவறி அவனுடன் தரையில் விழுந்தது.

ஒரு துறவிக்கு இந்த அளவிற்கு எதிர்க்குந்திறன் இருப்பதைக் கண்டு வியந்தான் தூமகேது. இனி அவனை ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து, “சீக்கிரம்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தென்னா! இவனைப் பிறகு கவனிப்போம்! என்னைத் தொடர்ந்து வா!" என்று நிராயுதபாணி ஆகிவிட்ட அவனும் தப்பித்தோம், பிழைத்தோம் என்ற கணக்கில் புரவியை வேகமாக ஓட்டலானான்.

குதிரையுடன் கீழே விழுந்த தென்னன் ஒருவாறு சமாளித்து எழுந்தான். அசுவத்தையும் தரையிலிருந்து கிளப்பி, அதன்மேல் தாவி உட்கார்ந்து வேகமாய்த் தூமகேதுவைப் பின் தொடர்ந்தான்.

இருவரும் குட்டையைக் கடந்து காட்டை நோக்கிக் குதிரையை ஓட்டினர்.

அவர்களைப் பிடிப்பதற்காக அம்மையப்பனும் தொடர்ந்து புரவியைச் செலுத்தினான்.

வழியின் குறுக்கே இருந்த நீர்க் குட்டையில் ஆபத்து இருக்கின்றது என்பது பழக்கப்பட்டவர்களுக்கே தெரியும். அதனால் எச்சரிக்கையுடன் குதிரையை நடுப்பக்கமாகச் செலுத்தினால்தான் எந்தவித ஆபத்துமின்றி புரவியுடன் அதைக் கடக்க முடியும். இல்லையென்றால் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக இருக்கும் பெரும் பள்ளத்தில்தான் குதிரையுடன் விழ வேண்டி வரும்!

இதையறியாத அம்மையப்பன், அவர்களைப் பிடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாய் ஏற்பட்ட மனவேகத்தின் காரணமாக, குதிரையைக் குட்டையின் குறுக்கே சற்றும் யோசிக்காது செலுத்தினான். அது முதலில் தயங்கினாலும், மேற்கொண்டு தன்னைச் செலுத்துபவனின் வற்புறுத்துதல் காரணமாக நீரில் வேகத்துடன் பாய்ந்தது.

அடுத்த நொடியே பெரும் பள்ளத்தில் விழுந்து நீச்சலடித்தவாறு அது மறுகரையை அடைய முயன்றது. அம்மையப்பனும் தன் முட்டாள்தனத்தை எண்ணி நொந்தபடியே புரவியையொட்டி நீந்தலானான்.

எப்போதோ ஏற்பட்ட பெரும் கடல் கொந்தளிப்பால் அமைந்த பள்ளமானதால், அது மிகவும் ஆழமாகவே இருந்தது.

முன்னால் சென்ற இருவரும், "துறவி நிச்சயம் கயிலாயத்துக்குப் போய்விடுவார்!" என்ற கேலியுடன் புரவியை வேகமாக ஓட்டிக் கொண்டு மறைந்தனர்.

கரையேறி தன்னை நொந்து கொண்ட அம்மையப்பன் புரவியின் கழுத்திலிருந்த தோற்பையில் வைக்கப்பட்டிருந்த பொன் முடிப்பும், மாற்று ஆடையும் பத்திரமாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவர்கள் போன வழிப்பக்கம் போய்ப் பார்த்தால் ஏதாவது தடயம் கிடைக்காதா என்ற நப்பாசையோடு குதிரையைக் காட்டை நோக்கிச் செலுத்தலானான்.

அதற்குள் நன்றாக இருட்டிவிட்டது; அவனுக்கு வழியும் புலப்படாமல் எந்தப் பக்கம் செல்வது என்று புரியாமல் குழம்பி நின்றான்.

அச்சமயம்...

அவனுக்கு எதிரே 'மினுக் மினுக்' என்று வெளிச்சம் புலப்பட்டது. அங்கே சென்றால் இவர்களைப் பற்றிய தடயம் ஏதாவது கிடைக்கும் என்று புரவியை அங்கே செலுத்த நினைத்தான்.

ஆனால்...

அமைதியாயிருந்த அந்த இருட்டில் குதிரையின் குளம்பொலியால் எதிரிகள் விழித்துக் கொள்ளப் போகிறார்கள் என்ற எண்ணம் தோன்றவே, புரவியை அங்கேயே தட்டிக் கொடுத்து நிறுத்திவிட்டுச் சப்தமின்றி வெளிச்சம் தெரிந்த பகுதிக்குச் சென்றான்.

மூன்று பேர்கள் பேசும் குரல் கேட்டது.

அடர்ந்து வளர்ந்திருந்த அத்திமரத்தின் பின்பக்கம் சென்று கொண்டு எட்டிப் பார்த்தான்.

சுமார் முந்நூறு முழ தூரத்தில் தென்னனும், தூமகேதுவும் ஒரு படகோட்டியிடம் பேசிக் கொண்டிருந்தனர்.

படகோட்டியின் இடையில் ஒரு துண்டும், கழுத்தில் கறுப்புக் கயிறும் அணிந்திருந்தான். தலை கலைந்து காற்றில் பறந்து கொண்டிருந்தது. காலில் வெள்ளியால் செய்யப்பட்ட வளையம் அணிந்திருந்தான்.

கடற்காற்று அம்மையப்பன் பக்கமாய் வீசிய போதெல்லாம் அவர்கள் பேசியது தெளிவாய்க் கேட்டது. அங்கிருந்து எதிரே தெரிந்த ஒரு சிறிய தீவைச் சுட்டிக்காட்டி எதையோ சொல்லிக் கொண்டிருந்தான் தூமகேது.

அதற்கெல்லாம் தலையாட்டியபடி படகோட்டி கடைசியில் இரு கைகளையும் விரித்து முடியாது என்னும் பொருளில் எதையோ கூறினான்.

தூமகேது விடவில்லை.

எதை எதையோ பேசி கடைசியில் ஐந்து பொற்காசுகளை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

முதலில் தயங்கினாலும் கடைசியில் தீவுக்கு வரச் சம்மதித்திருக்க வேண்டும்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

படகோட்டி கரையிலிருந்த கட்டுமரத்தைக் கடலில் தள்ளினான். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் படகோட்டி, தென்னன், தூமகேது மூவரும் எதிரில் தெரிந்த தீவை நோக்கிப் பயணமாயினர்.

அந்தத் தீவில்தான் பாண்டிய மன்னன் ஒளிந்திருக்க வேண்டும். இப்போது அவர்களை எப்படிப் பின் பற்றிச் செல்வது? என்று யோசித்தபடி, அத்திமரத்திலிருந்து வெளிப்பட்ட அம்மையப்பன், இடுப்பில் இரு கைகளை ஊன்றியபடி தீவை நோக்கிச் செல்லும் கட்டுமரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

போனவன் எப்படியும் இங்கே திரும்பத்தான் வேண்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று புரவி அவ்விடத்திற்கு அழைத்து வந்து, படகோட்டி திரும்பு வரை அங்கே பொறுமையுடன் காத்திருந்தான்.

அச்சமயம் கட்டுமரமும் வேகமாய்க் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

கட்டுமரத்திலிருந்து படகோட்டி இறங்கி, நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளியை வழித்துவிட்டு, அதை கரைக்கு இழுத்து வர முயன்றான்.

“அதற்கு அவசியமில்லை!” என்று ஒரு குரல் வெளிப்படவே, யாரென்று தலை தூக்கிப் பார்த்தான் படகோட்டி. சட்டென்று புலனாகாததால் உருவத்தின் அருகில் வந்து பார்க்க. துறவி போன்று ஒரு மனிதன் மழுங்க மொட்டை அடித்து, இடையில் காவித்துண்டும், நெற்றியில் திருநீற்றுடன் அம்மையப்பன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திருக்கிட்டான்.

“யாருங்க சாமி…!” என்று அவன் வாய் குளறியது.

“என்னை அங்கே அழைத்துச் செல்ல வேண்டும்!” என்று தீவைச் சுட்டிக் கூறினான் அம்மையப்பன்.

“அங்கேயா? நீங்க…” என்பதற்குள் சிவபக்தன் குறுக்கிட்டு, “அவன் கொடுத்தது போல இரு மடங்கு பொன் தருகின்றேன்!” என்றான்.

“என்னால் முடியாது சாமி. அங்கெல்லாம் நீங்கள் போகக் கூடாது. அவர்கள் கண்ணில் பட்டால், உங்களை மட்டுமல்ல, என்னையும் கொன்று போடுவார்கள்!” என்றான் பயத்துடனே.

“கவலைப்படாதே படகோட்டி! நான் இருக்கின்றேன்” என்று அவன் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

“ஆளைவிடுங்க சாமி! நான் குழந்தை குட்டிக்காரன்” என்று கட்டுமரத்தைக் கரைக்கு இழுக்க முயன்றான் படகோட்டி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தன் பின்னால் வைத்திருந்த சிறிய வாளை எடுத்து அவன் நெஞ்சுக்கு நேராக அம்மையப்பன் நீட்டவும், படகோட்டியின் கண்கள் பயத்தால் மிரண்டன.

"நான் சொல்கிறபடி கேட்டால் உன் உயிருக்கு ஆபத்து இல்லை!"

"நீங்கள் சொல்கிறபடி கேட்டால் அவர்கள் என்னை யமலோகம் அனுப்பிவிடுவார்களே!"

"அதற்கு நான் பொறுப்பு ஏற்கின்றேன்!"

"வேண்டாம் சாமி, ஆளைவிடுங்கள்!" என்று கையெடுத்துக் கும்பிட்டான் படகோட்டி. அவன் விடுவதாக இல்லை.

"என்னைக் கண்டிப்பாகத் தீவுக்கு நீ அழைத்துச் செல்ல வேண்டும்!" என்று வாளை அவன் நெஞ்சில் படும்படி வேகமாக அழுத்தினான்.

அச்சத்தினால் அவன் உடல் முழுவதும் நடுங்கியது.

"பயப்பட வேண்டாம் படகோட்டி. உன்னை நான் ஒன்றும் செய்யப் போவதில்லை. இது இரகசியமாகவே இருக்கும்; உனக்குப் பத்துப் பொற்காசுகள் வரை தருகின்றேன்!" என்றான்.

பணம் பத்தும் செய்யும் என்பார்கள். பொற்காசு என்றால் அரசனுக்கே ஆசை பிறக்கும். ஆண்டியான இந்த படகோட்டி அதற்கு விலக்காக முடியுமா? அதனால் இவனைத் தீவுக்கு அழைத்துப் போனால்தான் என்ன என்ற எண்ணத்திற்கு வந்துவிட்டான்.

"நான் உங்களை அழைத்துப் போவதைப் பற்றி எனக்கு எந்தவித ஆட்சேபமும் இல்லை; ஆனால் நம் இருவரையும் அவர்கள் பார்த்துவிட்டால் கொன்று போடுவார்கள். அதற்குத்தான் பயப்படுகிறேன்!" என்று குழப்பத்துடனே தலையைச் சொறிந்தான்.

"அவர்கள் கண்ணில் படாமல் மறைந்து கொள்ள என்னால் முடியும்" என்று அம்மையப்பன் திட்டமாய்க் கூறவும், அவன் பேச்சில் தொனித்த உறுதியில் படகோட்டிக்கு நம்பிக்கை உண்டானதாகத் தெரியவில்லை.

சற்று யோசனையில் ஆழ்ந்துவிட்டு, "இடுப்பளவு ஆழத்தில் உங்களைக் கடலில் விட்டுவிடுகின்றேன். அங்கிருந்து நீங்கள் தீவிற்கு எப்படியாவது போய்விடுங்கள். அங்கே போகக்கூடிய வழியை மட்டும் உங்களுக்குக் காட்டிவிடுகின்றேன்" என்றான்.

அம்மையப்பன் அதற்குச் சம்மதித்தான்.

கட்டுமரத்தில் ஏறும்படிப் படகோட்டி கூறவும் சிவபக்தருக்குத் தன்னுடைய புரவியின் நினைவு வந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"நான் திரும்பும் வரை நீ பத்திரமாய் இதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்காகத் தனியாக ஒரு பொற்காசு தருகின்றேன்!" என்று தன் புரவியைச் சுட்டிக் கூறினான்.

படகோட்டி தலையசைத்து, "உங்களுக்குப் பழக்கப்பட்ட புரவிதானே?" என்று கேட்டான்.

"ஆமாம்!"

"அப்படியென்றால் கடிவாளத்தை அவிழ்த்து என்னிடம் கொடுத்துவிடுங்கள்! நீங்கள் வரும் வரை காட்டிலேயே அது மேய்ந்து கொண்டிருக்கட்டும்!"

அம்மையப்பனுக்கு அவன் சொன்னது சரி என்று பட்டது. அருகில் சென்று கடிவாளத்தைக் கழற்றி அவனிடம் கொடுத்துப் "பத்திரம்!" என்றான். குதிரையைத் தட்டிக் கொடுத்து, "நான் வரும்வரை ஜாக்கிரதை!" என்று அதைத் தடவிக் கொடுத்தான். குதிரை கனைத்தது.

கட்டுமரத்தில் அம்மையப்பன் ஏறிக் கொண்டான். சிறிது தூரம் வரை கடலில் அது தத்தளித்தது. அதைக் கடந்ததும், வேகமாய்த் தீவை நோக்கிப் போக ஆரம்பித்தது.

அமாவாசை இருட்டு. கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடல் நீர். மேலே கரிய மேகங்களின் தொகுதி. அதற்கிடையே கடற்காற்றின் சீற்றம். தூரத்தில் கடல் நாரைகளின் சப்தம் பலமாகக் கேட்டன. அதற்கு எதிரொலி போல காட்டிலிருந்து நரிகளின் ஊளைக் குரல்கள்.

கட்டுமரத்தில் உட்கார்ந்திருந்த அம்மையப்பன் முகத்தில் மீன் ஒன்று துள்ளி விழுந்தது.

"ச்சீய்!" என்று அவன் அலறினான்.

"இதெல்லாம் சகஜம் சாமி!" என்று துடுப்பு வலித்தான் படகோட்டி.

கரும்புள்ளி போல் தெரிந்த தீவு இப்போது பெரிய வட்டமாய்க் கண்ணுக்குப் புலப்பட்டது. இருளில் அதைப் பார்க்கப் பார்க்க அம்மையப்பனுக்கு மலைப்பாகத்தான் இருந்தது. "சிவாய நம!" என்று சொல்லிக் கொண்டு மனதை உற்சாகப்படுத்திக் கொண்டான்.

"தோ பாருங்க சாமி. இன்னும் கொஞ்சம் தூரம்தான் என் கட்டுமரம் போகும். அப்புறம் நீங்க கடலில் இறங்கித்தான் போகனும். இந்தத் தீவுக்கு அப்பால் இன்னொரு குட்டித் தீவு இருக்கு. அதில்தான் பாண்டியராசா இருக்கார். அந்தக் குட்டித் தீவுக்குப் போக இடையிலே நீங்க கடலைக் கடந்துதான் போகனும். அந்தத் தீவுக்குப் போயிட்டா,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இரண்டு அசோக மரத்துக்கு இடையிலே காட்டுத் தழையாலே ஒரு குடிசை போட்டு, அதிலே ராசா தங்கியிருக்கார். ஒரு விஷயத்தை நீங்க ஜாக்கிரதையா கவனிக்கணும். இந்தத் தீவிலிருந்து அந்தக் குட்டித் தீவுக்குப் போக தீவின் ஆரம்பத்திலேயே இரு நாவல் மரம் இருக்கு; ஒன்று வடக்குப் பார்த்துக் கிளை பிரியும். இன்னொன்று தெற்கும் வடக்குமாக சூலம் போல் கிளை பிரியும். சூலம் போல இருக்கிற கிளையை அடையாளம் வைச்சுக்கினு நீங்க நூல் பிடிச்ச மாதிரி நடந்தாதான் தீவை அடைய முடியும். தவறினா நீர்ச்சுழலிலே சிக்கி உயிரைப் பறிகொடுக்க வேண்டியதுதான்" என்று சொல்லியபடி கட்டுமரத்தை நிறுத்தி கடலில் குதித்தான் படகோட்டி.

அவன் இடுப்பு வரைதான் கடல் நீர் இருந்தது.

எதிரே... இருளில் அச்சமூட்டும் வகையில் தீவு அமைந்திருந்தது. நன்கு உயரமான அடர்த்தியாயிருந்த மரங்கள் கடற் காற்றில் பயங்கரமாய்ப் பேய் போன்று ஆடிக் கொண்டிருந்தன. அதற்கு எதிர்மாறாக அலைகளே இல்லாமல் கடல்நீர் சலனமற்று இருந்தது.

கடல்காற்று மட்டும் அளவுக்கு மீறிய ஆவேசத்துடன் இப்படியும் அப்படியுமாய்ச் சுழன்று வீசிக் கொண்டிருந்தது.

தீவுக்குள்ளிருந்து ஓநாய்கள் ஓலமிடும் ஒலி தெளிவாய் அச்சமயத்தில் கேட்டது.

எப்பேற்பட்ட திடமனிதனுக்கும் அச்சம் தரும் வகையில் அச்சூழல் அமைந்திருக்க, 'சிவாய நம!' என்று உச்சரித்தபடி இடுப்பில் குறுவாள் இருக்கிறதா என்று பார்த்தபடி அம்மையப்பனும் கடலுக்குள் இறங்கிக் கொண்டான்.

சிறு சிறு அலைகளாய் அவன் மீது மோதிய கடல்நீர் அவனைத் தள்ள முயற்சித்தது. ஆனால் அவன் தரையில் அழுத்திக் கால்களை ஊன்றிக் கொண்டதால், அதன் முயற்சி தோல்வியே அடைந்தது. சிறிய மீன்கள் கூட்டமாக அம்மையப்பன் கால்களைத் தொட்டுத் தொட்டுச் சென்றன. அதிலிருந்து தப்பிக்க வேண்டி மாறி மாறி கால்களை எடுத்து எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

அருகிலிருந்த படகோட்டி கட்டுமரத்திலிருந்து சிறிய துணி மூட்டையைத் பிரித்து, அதிலிருந்த பொருளை நீரின் நான்கு பக்கம் வீசியெறிய கால்களைத் தொட்டுக் கொண்டிருந்த மீன்கள், சிதறி விழுந்த பொருளைக் கவ்வுவதற்காக நான்கு புறமும் ஓடி மறைந்தன. தற்சமயத்துக்கு மீன்கள் தொல்லையிலிருந்து விடுபட்டு நிம்மதியுடன் பெருமூச்சொன்றைவிட்டான் அம்மையப்பன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“கையில் இந்த முட்டையை வைச்சுக்கினு மீன்கள் உங்க கால்களைச் சீண்டும் போதெல்லாம் இதை அப்பப்ப வாரி இறைச்சீங்கன்னா, அவை உங்களைவிட்டு ஓடிப் போகும்! அப்படியே மெள்ள நடந்து நீங்க தீவை அடைஞ்சுக்கலாம். அத்தோட இந்தக் கல்லை முக்கியமா வைத்துக்கங்க” என்று இடுப்புத் துணியில் முடிந்திருந்த இரண்டு சிறிய கற்களை அவிழ்த்து அம்மையப்பனிடம் கொடுத்தான்.

“இதை ரெண்டையும் ஒண்ணோடு ஒண்ணு உரசினா நெருப்பு வரும். அதை வைச்சு நீங்க காய்ந்த சருகு, சுள்ளி மூலம் தீ மூட்டிக்கலாம். அதற்கப்புறம் உங்களுக்கு வழி சுலபமாயிடும். ஆனா ஒரு விஷயத்தை நீங்க கண்டிப்பா தெரிஞ்சிக்கணும்! நீங்க தீ மூட்ற சமாச்சாரம் மற்றவங்களுக்குத் தெரியக் கூடாது. தெரிஞ்சா உங்களை யாருன்னு அவுங்களுக்குக் காட்டிக் கொடுத்துவிடும். வெற்றியோடு வாங்க!” என்றான் படகோட்டி.

துணி மூட்டையையும், அந்த இரு சிக்கிமுக்கி கற்களையும் வாங்கிக் கொண்டு, இடுப்பிலிருந்து முடிப்பை அவிழ்த்து பதினொரு பொற்காசுகளை அவனிடம் எண்ணிக் கொடுத்து, மீதியை இடுப்பில் முடிந்து கொண்டான்.

படகோட்டி கட்டுமரத்தில் ஏறி அதைக் கொற்கைத் துறைமுகத்தை நோக்கித் திருப்பிக் கொண்டு, “சாமி! நாளைப் பகல் போதை விட்டுடுங்க. எப்படியாவது ஒளிஞ்சி, கிளிஞ்சி காலம் தள்ளிடுங்க. இதே மாதிரி இருட்டினதும் இந்த இடத்துக்கு வந்திடுங்க. நான் கட்டுமரத்தோடு இங்கே வந்து காத்திருக்கேன். நீங்க கண்டிப்பா வந்திடுங்க. மற்றபடி எதனா தவறி துரதிர்ஷ்டவசமா நடந்தா ஆண்டவன்விட்ட வழியாகுது!” என்று கட்டுமரத்திற்குத் துடுப்பு போட்ட அவன் நிறுத்தி, “ஆமா, நாளைபூரா நீங்க சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவீங்க?” என்றான்.

“மத்தியானம்தான் சத்திரத்தில் சரியான சாப்பாடு கிடைச்சுதப்பா. இது எனக்கு மூன்று நாளைக்குகூடத் தாங்கும். அப்படிப் பழகிப் போன ஜீவனப்பா இது. நாளை மறக்காமல் இரவு வந்திடப்பா” என்று தீவை நோக்கி தண்ணீரில் நடக்க ஆரம்பித்தான் அம்மையப்பன்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த படகோட்டி, ‘சரியான சாமியார்தான் இந்த ஆள். இந்தத் துறவி எங்கே திரும்பப் போறது? சந்தேகம்தான். எப்படியும் அவன் கண்ணிலே இந்தச் சாமியார் படாமல் இருக்க முடியாது. அப்படித் தவறினா சுழல்லே சிக்கி ஜீவனைவிடத்தான் போறார் இவர். நமக்குப் பதினொண்ணு பொற்காசு கிடைச்சுது! ஆயிரம் பொன் தாளக் கூடிய ஒரு உசந்த ஜாதிக் குதிரை வேறு! நரி முகத்தில்தான்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இன்றைக்கு நமக்கு விழிப்பு!' என்று உற்சாகத்துடனே வேகமாய்க் கரையை நோக்கிக் கட்டுமரத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

## அத்தியாயம் - 37

சில இடங்களில் மார்புவரை ஆழம் இருக்க, காலைக் குத்திய மீன்களுக்காக மூட்டையை அவிழ்த்து, அதிலிருந்ததை நீரில் நான்குபுறமும் வாரி இறைத்தான் அம்மையப்பன். மீன்கள் நான்கு பக்கமும் சிதறி ஓடின. இப்போது நடப்பதற்குச் சிரமமில்லாமல் இருந்தது.

ஆந்தை அலற, ஓநாய்கள் பயங்கரமாய் ஓலமிட, எங்கிருந்தோ யானைகளின் பிளிறல்களும் அதைத் தொடர்ந்தன.

அதற்கு இடையே 'உய்... உய்' என்று கடற்காற்றின் சீறல்கள் அவனை அச்சுறுத்தும் வகையில் இருந்தன.

தட்டுத் தடுமாறி தீவையடைந்து கரையில் கால்வைக்க இடம்தேடி அதன் மூலம் வழுக்கித் தரையில் விழுந்த அம்மையப்பன் மீண்டும் சமாளித்து எழுந்து நின்றான்.

காவி உடையெல்லாம் மண். அதனால் குறுவாளையும், துணிமூட்டையையும், பொன் முடிப்பையும், மற்றும் இதர பொருள்களையும் தரையில் வைத்து, இடுப்பிலிருந்த காவி உடையை அவிழ்த்து அதிலிருந்த மண்ணை உதறி மீண்டும் அணிந்து கொண்டான்.

சண்டையிட வேண்டிய தருணம் வந்தால், இடுப்புத் துணி அவிழாமல் இருப்பதற்காக நன்கு முடிச்சிட்டுக் கட்டிக் கொண்டு தீவை நோக்கினான்.

காற்றினால் மரங்கள் அசையும் அசைவைத் தவிர வேறு ஒன்றும் அவன் செவிகளில் விழவில்லை.

எதிரே பனைமரங்கள். முள்வேலன். இப்படி அடர்த்தியாய்ப் பேய்க் கணங்கள் போல் நின்று கொண்டிருந்தன.

உள்ளிருந்து யாரோ சிரிப்பது போன்ற ஒலி.

மறுபடியும் இது தொடர... அந்தத் தீவை மூடியிருந்த இருட்டு அதற்குத் துணை செய்வது போன்று அம்மையப்பனைப் பயமுறுத்தியது.

இதற்கெல்லாம் அவன் அசைபவனல்ல. 'சிவாய நம!' என சொல்லிக் கொண்டான். கொஞ்ச நஞ்சமிருந்த மனச் சலனமும் இப்போது அவனைவிட்டு அகன்றுவிட்டது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சிக்கி முக்கி கற்களை உரசிப் பார்த்தான். ‘குபுக்’ என்று பொறி பறந்தது. அந்த இமைப்போது வெளிச்சத்தில் ஆள் செல்லக் கூடிய ஒற்றையடிப் பாதை ஒன்றும் தெரிந்தது.

இங்கும் அங்குமாக மரங்களின் கிளைகள் வீட்டுக் கூரை போல் அந்தப் பகுதியையே மறைத்துக் கொண்டிருந்தன.

காட்டு அணில்களும், முயல்களும் ‘கீச் கீச்‘ என்று சப்தித்து புதருக்குள் மறைந்து கொண்டன.

அந்த ஒற்றையடிப் பாதைதான் போகும் வழி என்று அவனுக்குப் புரிந்தது.

ஏதாவது வெளிச்சம் இருந்தால்தான் அதில் போக முடியும் என்று உணர்ந்து, காய்ந்த சுள்ளிகளை ஒன்றாக்கி அதைப் பற்ற வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தான்.

அதற்காக அங்குமிங்கும் சென்று அவன் பார்க்கும் போது யாரோ பின்னால் நடந்து வருவது போல அவன் செவிகளில் விழுந்தன.

திரும்பிப் பார்த்தான். கறுப்பாக ஒரு உருவம்; கண்ணை இடுக்கி, இருளில் யார் என்று பார்ப்பதற்கும் சடக்கென்று மறைந்து கொள்வதற்கும் சரியாயிருந்தது.

“சிவாய நம!” என்று உரக்கக் கூறினான்.

திரும்பவும் அவ்வுருவம் புதரிலிருந்து வெளிப்படுவது போன்று தோன்றியது.

நெருப்புண்டாக்கும் அந்தக் கற்களை எடுத்து உரசினான்.

அதிலிருந்து பறந்த தீப்பொறியில் கறுப்பாய் ஒன்று சந்தேகமில்லாமல் அவன் கண்களுக்குப் புலனாகியது. குறுவாளை எடுத்துக் கொண்டான். ஆனால் வெளிப்பட்ட அந்த உருவம் அதற்குள் எப்படி மறைந்து போய்விடும்?

முன்பு கேட்ட அந்தச் சிரிப்பு திரும்பவும் கேட்கத் தொடங்கியது.

அதைத் தொடர்ந்து சுழன்று சுழன்று காற்று வீசியது. மரத்தின் கீழிருந்த காய்ந்த சருகுகள் சலசலவெனச் சப்தித்தபடி பறந்து சென்றன.

திரும்பவும் தட்தட் என்று காலடி ஓசை. ஒரு முடிவுக்கு வந்த அம்மையப்பன், தன் பக்கத்திலிருந்த மரத்தின் கிளையை வெட்டினான். தழைகளைக் கழித்து நீண்ட கொம்பாக்கி வளைத்துப் பார்த்தான்.

அவ்வளவு சீக்கிரம் அது முறிந்துவிடும் கம்பல்ல என்று தெரிந்தது.

கீழிருந்த சருகுகளை ஒன்றாய்க் குவித்து சிக்கிமுக்கி கற்களை உரசும் போது அந்தக் கறுப்பு உருவம் புதரிலிருந்து வெளிப்பட்டு இவனை நோக்கி ஓடி வந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

உருவம் இவனை அடைவதற்குள் நெருப்புண்டான தீப்பொறி மேல் சருகுகளை வைத்துவிட்டான். அது புகைந்து எரிவதற்குள் உருவம் அம்மையப்பனை நெருங்கிவிட்டது. கையிலிருந்த கோலால் அதன் இடுப்புப் பகுதியில் சுழற்றி அடிக்க 'ஹாவ்' என்று கத்தியபடி, தள்ளி விழுந்தது.

அது எழுவதற்குள் புகைந்து கொண்டிருந்த சருகுகளின் மீது காய்ந்த இலைகளைப் போட்டுவிட்டதால் 'குபுக்' என்று பெருந் தீ ஏற்பட்டது.

கொழுந்துவிட்டு எரிந்த அந்த வெளிச்சத்தில் அவனைப் பயமுறுத்திய கறுப்பு உருவம் ஒரு காட்டுக் கரடியாயிருந்தது.

"ஓ! நீதானா?" என்று கொம்பைப் பலமாய்ப் பிடித்து அதைத் தாக்க ஆயத்தமானான்.

ஆனால் நெருப்பைக் கண்டுவிட்ட அது, தப்பித்தோம் பிழைத்தோம் என்று மரங்களுக்கிடையே ஓடி மறைந்தது.

காய்ந்த சுள்ளிகளை ஒன்று சேர்த்து மரப்பட்டையால் கட்டி அதைப் பற்ற வைத்துக் கொண்டான்.

நீளமாயிருந்த பல சுள்ளிகளை அடுக்கி இன்னொன்றைத் தயார்படுத்தி வைத்துக் கொண்டான்.

இடுப்பில் இருந்த பொன்முடிப்பையும் மீன்களுக்குப் போடும் உணவையும் புதருக்கு அடியில் அடையாளம் வைத்து மறைத்துவிட்டு, குறுவாளை இடையில் செருகிக் கொண்டு, கக்கத்தில் சுள்ளிக்கட்டையை வைத்து, ஒரு கையில் எரியும் கட்டையுடனும், இன்னொரு கையில் கம்புடனும் அந்த வழியே நடக்கலானான்.

முன்பு கேட்ட சிரிப்பொலி கிளம்ப...

தொடர்ந்து ஆந்தை பயங்கரமாய் அலறியது.

"சை!" என்று கோபத்துடன் குரல் வந்த பக்கம் திருப்பிக் கத்தினான்.

அவனுக்குத் தெரியும் சிரிக்கும் உருவம் யார் என்று! அதனால் மனதில் எந்தவிதச் சலனமின்றி தீவை சீக்கிரம் கடந்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் வேகமாய் நடக்கலானான்.

ஏறக்குறைய இரவு தொடங்கி முதல் சாமம் கழியும் சமயத்தில், தீவின் மறுகரையை அவன் அடைந்தான். இருட்டைப் பார்த்து அவன் கண்கள் பழகிப் போனதால் எதிரே சிறிய தீவு ஐந்நூறு முழ தூரத்தில் இருப்பது தெரிந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இரண்டும் ஒரே தீவாகத்தான் இருந்திருக்க வேண்டும். கடல் கொந்தளிப்பால் உள்ளே புகுந்த கடல் நீர், இரண்டையும் தனித்தனியாகப் பிரித்திருக்கிறது என்று யூகித்த அம்மையப்பன், படகோட்டி சொன்ன நாவல் மரத்தைத் தேடலானான்.

அதற்குள் கையிலிருந்த இரண்டாவது சுள்ளிக்கட்டு எரிந்து முடியும் தருவாயிலிருந்தது. நெருப்பு அணைவதற்குள் நாவல் மரத்தைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற பதட்டத்துடன் அங்குமிங்கும் அலையும் போது...

அவன் அருகிலேயே சிரிப்புச் சப்தம் கேட்டது.

'இங்கே சிரிக்கும் அணில்கள் நிறைய இருக்க வேண்டும்' என்று மனதிற்குள் கூறிக் கொண்ட அம்மையப்பன் சருகுகளைத் திரட்டுவதற்காக வடக்குப் பக்கமாகச் சென்றான்.

கறுப்பு உருண்டைகளாக நாவற் பழங்கள் சிதறி நிறையத் தரையில் கிடக்க...

அம்மையப்பன் மேலே நிமிர்ந்து பார்த்தான்; அணையப் போகும் தருணத்தில் இருந்த சுள்ளிக்கட்டை வெளிச்சத்தில் வடக்கும் தெற்குமாக ஒரு கிளை சூலாயுதம் போல பிரிந்து காற்றில் இப்படியும் அப்படியும் அழகாக அசைந்து கொண்டிருந்தது.

"கண்டுபிடித்துவிட்டேன்" என்று உற்சாகத்துடனே கூறிய அம்மையப்பன், 'கரடியை விரட்டக் கம்பு வெட்டியது நல்லதாகப் போயிற்று!' என்று அதன் நேர் எதிரே எச்சரிக்கையுடன் கடலைக் கடக்கத் தயாரானான்.

ஆழம் முழங்காலுக்கு மேல் இருந்தது. ஆனால் பக்கத்தில் பத்து ஆள் அளவிற்குப் பெரும் மணற் பள்ளங்கள் அமைந்திருந்தன. அதில் ஆளை விழுங்கக் கூடிய நீர்ச் சுழிப்புகள் பல இருந்தன. அதனால்தான் படகோட்டி நம்மை எச்சரிக்கை செய்திருக்கிறான் என்று நினைத்து மிகக் கவனத்துடன் காலை வைத்துக் கடலைக் கடக்கலானான்.

கடல் நீரின் ஓட்டம் அதிகமாயிருந்தது. அம்மையப்பன் முழங்காலைப் பறித்து, கடலுக்குள் அவனை இழுத்துக் கொண்டு போவது மாதிரி நீரின் வேகம் பலத்துக் காணப்பட்டது. கையிலிருந்த கம்பால் முன்பக்கம் பள்ளம் இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்த பிறகு காலை வைத்து நடந்தான்.

தீவை அடைவதற்குள் நடுச்சாமம் வந்துவிட்டது. தட்டுத் தடுமாறி கரையேறினான்.

"யாரடா அவன்?" என்று குரல் கேட்க, சட்டென்று தரையில் ஊர்ந்தபடி அருகிலிருந்த புதருக்குள் மறைந்து கொண்டான் அம்மையப்பன்.

கையில் தீப்பந்தத்துடன், உருவிய வாளோடு கரிய நிறத்துடன் இருந்த வீரன் ஒருவன், அம்மையப்பன் ஒளிந்திருந்த புதரை நோக்கி வந்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

‘ஆரம்பமே சரியில்லாமல் இருக்கிறது. வருபவனுடன் சண்டை போடுவதைத் தவிர வேறு வழியில்லையா?’ என்று சுற்று முற்றும் பார்த்தான்.

அதற்குள் பின்னால் வந்த இன்னொரு வீரன், “என்னப்பா இருட்டில் போகிறாய்? அங்கே கூட்டம் ஏற்பாடு செய்ய தலைவர் உன்னைக் கூப்பிடுகிறார்!” என்றான்.

“ஒரு ஆள் கரையேறினாற் போன்று தெரிந்தது!” என்றான் முதல் வீரன்.

“ஆளா... இருக்காதுப்பா. சமீபத்தில் காட்டுக்கரடி ஒன்று தீவில் உலவிக் கொண்டிருந்தது. அதுவாயிருக்கும்!” என்றான்.

“இல்லையப்பா! யாரோ ஒரு ஆள் தட்டுத் தடுமாறி கரையேறியதை என் கண்களால் பார்த்தேன்” என்றான் உறுதியான குரலில்.

“அப்படியா?” என்று இருவரும் புதரை நெருங்க... இனி மறைந்திருப்பது விவேகமான காரியமல்ல என்று எண்ணி, கையிலிருந்த கோலினால் முதலில் வந்தவன் நெற்றிப் பொட்டைத் தாக்கினான். அவன் “அம்மா” என்று மயங்கி அலறி விழ, இன்னொருவன் தன் கையிலிருந்த ஈட்டியை அம்மையப்பன் மீது வீசினான்.

மார்பை நோக்கி வந்த அதைத் தடுத்துக் கம்பினால் தட்டிக் கீழே தள்ளினான். “தீவிற்குள் வேற்று மனிதன்” என்று உரக்கக் கூவியபடி அந்த மனிதன் ஓடத் தலைப்பட்டான்.

அவனைத் தப்பிக்கவிட்டால் நம் தலைக்குத்தான் ஆபத்து என்று உணர்ந்து, கையிலிருந்த கம்பைச் சுழற்றி மிக்க வேகத்துடன் அவன் பின்னங்கால்களை நோக்கி வீசினான். ஓடிய வீரனின் கால்களுக் கிடையில் அக்கம்பு சிக்கியது. நிலைதடுமாறித் தரையில் சாய்ந்தான்.

பின்னால் துரத்திக் கொண்டு சென்ற அம்மையப்பன், குறுவாளை அவன் மார்பில் பாய்ச்சினான்.

“அம்மா!” என்ற ஓசை அத்தீவே அதிரும்படிக் கேட்டது. இனி அந்த இடத்தில் இருப்பது தனக்குத் தீங்கைத் தரும் என்று உணர்ந்து, கம்புடன் சரசரவென வேறு பக்கம் நடையைக் கட்டினான் அம்மையப்பன்.

இரு அசோக மரங்களுக் கிடையில், தழையால் வேயப்பட்ட அந்தச் சிறு குடிலுக்கு முன்பாக இரண்டு தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன.

அந்த ஒளியில்...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

குடிலுக்கு முன்பாக, சுமார் பத்துப்பேர் அமர்ந்திருந்தனர். அவர்களோடு தென்னனும் தூமகேதுவும் இருந்தனர். அவர்களுக்கு எதிரேயிருந்த உயரமான இடத்தில் இருபத்தைத்து அகவை நிரம்பிய இளைஞன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்தால் அரசகுலத்தைச் சேர்ந்தவன் போன்று தெரிந்தது. இடையில் ஒரு வாளும், கையில் பொன் கங்கணமும் அணிந்திருந்தான்.

அவனை அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் ‘இளவரசன்’ என்று அழைத்தார்கள்.

ஆம். அவன் பாண்டிய மரபைச் சேர்ந்தவன்! பெயர் மாறவர்மன். இவன் தந்தை சடையவர்ம சீவல்லபன் தான் இழந்த பாண்டிய நாட்டைப் பெறுவதற்காக, சோழர்களுடன் போராடியபடி, மறைந்து வாழ்ந்து, ஆட்சியைப் பிடிக்கத் தக்க தருணத்தை எதிர் நோக்கியிருந்தார்.

ஒவ்வொரு அமாவாசை அன்றும் சிதறிக் கிடக்கும் பாண்டிய அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே கூடி, அடுத்து என்ன செய்வதென்று விவாதித்து, பழையபடி மதுரையிலும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் சென்று ஒளிந்து கொள்வார்கள்.

அதுபோன்று அன்றும் அவர்கள் வழக்கம் போல் கூடியிருந்தனர்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் பாண்டிய மன்னன் சடையவர்ம சீவல்லபன் இலங்கை அரசனிடம் உதவிபெற வேண்டி ஈழம் சென்றுவிட்டதால், அவன் மகனான மாறவர்மன் தற்போது கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, ‘வேற்று மனிதர் யாராவது இருக்கின்றார்களா?’ என்று அனைவரையும் ஒரு தரம் பார்த்தான்.

அந்த இளவயது முகம் பலவித உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டது போன்று சிறிது சிவந்து காணப்பட்டது. தொண்டையைக் கனைத்துப் பேசத் துவங்கினான்:

“மதுரைக் கோட்டையில் இன்னும் புலிக்கொடி பறந்து கொண்டிருக்கிறது. பாண்டிய வம்சத்தைச் சேர்த்த நமக்கு இது ஒரு பெரிய அவமானம். பேடிகளே, நீங்கள் ஆண் பிள்ளைகள் அல்ல என்பது போல் அது காற்றில் நம்மைப் பார்த்து நையாண்டி செய்தபடி பறந்து கொண்டிருக்கிறது. சிங்கங்கள் அமர்ந்த சிம்மாசனத்தில் இன்று சிறு நரிகள் வாசம் செய்கின்றன. இவற்றையெல்லாம் அங்கிருந்து ஓட்டி, குலதெய்வமான மதுரை மீனாட்சியின் ஆசியை எப்போது பெறப் போகின்றோம்? அதை நினைக்கும் போது என் நெஞ்சம் கொதிக்கின்றது! மதுராநகரில் வாழும் மக்கள் நம்மவர்களின் ஆட்சியை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். அந்த ஏக்கத்தைச் சோழ நரிகளுக்கு எதிராய் திருப்பிவிட முடியாத திறமையற்றவர்களாக இருக்கின்றோம். அவர்களிடையே பரவியிருக்கும் நம் ஒற்றர்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றார்களா?



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதற்காக தூமகேதுவிடம் வெளிப்படையாக என் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று பேச்சை நிறுத்தி அவனைப் பார்த்தான் பாண்டிய இளவரசனான மாறவர்மன்.

தூமகேது எழுந்து கைகட்டி நின்றான்.

"இளவரசே! புதிதாக வந்திருக்கும் சோழப் பிரதிநிதியான இராசேந்திரன் மிகக் கெடுபிடியாக இருக்கின்றான். நகரில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது! நமக்குப் பழக்கமான அரசாங்க வீரர்களை வேறு இடங்களுக்கு மாற்றிவிட்டான். அத்துடன்..." என்று சொல்லிக் கொண்டு வந்த அவனை பாண்டிய இளவரசன் இடைமறித்து,

"இந்தக் கோழைச் சமாதானத்தை நான் விரும்பவில்லை. பகைவர்கள் என்றால் நமக்குத் தொல்லை கொடுப்பவர்கள்தான்! அதையெல்லாம் சமாளித்து அவர்களை வெற்றி காண்பதில்தான் நம் திறமையே இருக்கின்றது!" என்றான்.

"ஒப்புக் கொள்கிறேன்!" என்று முகவாட்டத்தோடு உட்கார்ந்து கொண்டான் தூமகேது.

"கங்கைகொண்ட சோழபுரத்திலும் ஏக குழப்பம். அடுத்து ஆட்சிக்கு வருவது யார் என்பதில் அவர்களுக்குள்ளே பலமான கருத்து வேறுபாடுகள். அதன் விளைவாய், சோழ சைனியத்திலும் போட்டி கிளம்பிவிட்டதாக நமக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. வலங்கை இடங்கை என்று சோழப்படைக்குள்ளே இரு பிரிவாகப் பிரிந்து இடங்கைப் பிரிவினர் அதிராசேந்திரன் அரசுகட்டில் ஏறுவதை எதிர்ப்பதாகச் சோழநாட்டில் பரவலாகப் பேசிக் கொள்கின்றனராம். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நமக்கெல்லாம் அதிரசம் கிடைத்தது போன்ற நிலை. இதை எந்த அளவிற்குச் சாதகமாக நாம் பயன்படுத்துகின்றோமோ அந்த அளவிற்கு நமக்கு வெற்றி!" என்று கூறிக் கொண்டிருக்கும் போதே வீரன் ஒருவன் பரக்கப் பரக்கக் கூட்டத்தை நோக்கி ஓடிவந்தான்.

"என்ன? என்ன?"வென்று அனைவரும் கேட்க, "நம் வீரர்களில் ஒருவன் கொலை செய்யப்பட்டுவிட்டான். இன்னொருவனுக்குப் பேச்சு மூச்சில்லை" என்றான்.

மாறவர்மன் வாளை உருவிக் கொண்டான். அனைவரும் கையில் கிடைத்த ஆயுதங்களுடன் வீரனைப் பின் பற்றி ஓடினர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அசோக மரத்தின் பக்கவாட்டில் சென்ற கிளையில் ஒளிந்தபடி இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மையப்பன் எச்சரிக்கையோடு இன்னும் சிறிது உயரச் சென்று கிளையோடு கிளையாக மறைந்து கொண்டான்.

தரை... புதர்... செடி... கொடிகளின் பக்கம் எல்லாவற்றிலும் கொன்றவனைத் தேடி ஓய்ந்து போன அவர்கள், ‘யார் கொன்றிருப்பார்கள்? ஒருவேளை நமக்குள்ளே யாராவது முன் பகையை வைத்துக் கொன்றிருப்பார்களா?’ என்று குழம்பத் தொடங்கினர்.

அவர்கள் அம்மாதிரி ஒரு முடிவுக்கு வருவதற்கும் காரணம் இல்லாமலில்லை. சமுத்திரத்திலிருந்து வெகு தொலைவிலிருக்கும் இந்தச் சிறிய தீவுக்குள் அன்னியர் எவரும் அவ்வளவு சீக்கிரம் வருவதற்கு வழியில்லாத காரணத்தால், அந்தவித ஒரு முடிவுக்கு அவர்கள் வரவேண்டியிருந்தது.

சிலர் கரடியின் மீதும், இன்னும் சிலர் பேயின் மீதும் கூடப் பழியைப் போட்டனர்.

மாறவர்மன் மட்டும் ‘சோழர்களின் வேலையாக இருக்குமோ?’ என்ற கேள்வியுடன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

மறு நாள் நண்பகல் சென்று மாலை நெருங்கியது. பேசிக் கொண்டபடி படகோட்டி கட்டுமரத்துடன் அங்கே போய்ப் பார்க்கலாம் என்று வலையுடன் அந்த இடத்திற்குச் சென்று காத்திருந்தான்.

வழக்கத்திற்குமாறாய் கடல்காற்று அதிக வேகத்துடன் வீசிக் கொண்டிருந்தது.

எவ்வளவு நேரம் ஆகுமோ என சுற்றுமுற்றும் பார்த்தபடி, மீன்களையாவது பிடிக்கலாம் என்று நீரோட்டமான பகுதிக்குச் செல்ல கட்டுமரத்தைத் திருப்பினான்.

அச்சமயம்...

அம்மையப்பன் இடுப்பளவு ஆழத்தில் வந்தவாறு “படகோட்டி! எங்கே போகிறாய்? நில்!” என்றான் உரத் குரலில்.

காற்று படகோட்டியின் பக்கம் வீசியதால் அம்மையப்பன் கூப்பிட்டது அவன் செவிகளில் தெளிவாய் விழுந்தது. சடக்கென்று திரும்பிப் பார்த்தான்.

‘சிவாய நம!’ என்று உச்சரித்தபடி, சிவபக்தன் இவனை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

‘அட! இந்தச் சாமியார் கெட்டிக்கார ஆள்தான் போலிருக்கிறது! அந்த எமகாதகப் பயல்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு எப்படியோ தப்பித்து வந்துவிட்டாரே!’ என்று வியப்புடன் கட்டுமரத்தை அவன் பக்கம் ஓட்டினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“படகோட்டியாய் இருந்தாலும் சொன்னபடி வந்துவிட்டாய்! கரைக்குப் போனதும் உனக்கு சில வெகுமதி தரப் போகின்றேன்!” என்று கட்டுமரத்தில் அமர்ந்த சிவபக்தன், “சீக்கிரம் கரைக்குச் செலுத்தப்பா. அவர்கள் நம்மைப் பார்த்துவிடப் போகின்றார்கள்!” என்று அவசரப்பட்டான்.

வேகமாய்த் துடுப்பு வலித்த படகோட்டி, “உண்மையிலேயே நீங்க கெட்டிக்கார சாமிதான்!” என்றான்.

அதை ஆமோதிப்பது போல கடலும் தன் அலைக்கரங்களால் அவனைத் தழுவ முயற்சிப்பது போல், கடல் நீரைக் கட்டுமரத்திற்குள் வாரி இறைத்தது.

## அத்தியாயம் - 38

**ய**வன வீரனைப் போன்று உடையணிந்த இராசேந்திரனும், காரனை விழுப்பரையனும் உறையூரையடைந்த போது அவர்களுக்குத் திடுக்கிடும் செய்தி ஒன்று காத்திருந்தது.

எதிர்பார்த்த செய்தி என்றாலும் இவ்வளவு சீக்கிரம் அது நடந்துவிட்டதா என்று நினைக்கும் போது, இருவருக்கும் ஒருகணம் என்ன செய்வதென்று புரியாமல் போய்விட்டது.

உறையூர்க் கோட்டத் தலைவனிடம் உண்மைதானா என்று அறிவதற்காக காரனை விழுப்பரையனை அனுப்பி வைத்தான் இராசேந்திரன்.

கோட்டத் தலைவனும் அந்தச் செய்தி உண்மைதானா என்று அறிவதற்காக, கங்கைகொண்ட சோழபுரத்திற்கு ஆளை அனுப்பியிருப்பதாகத் தெரிவித்தான்.

அன்றைய இரவு அங்கேயே தங்குவது என அவர்கள் பிரயாண திட்டத்தில் இருந்தது.

தற்போது அந்தத் திடுக்கிடும் செய்திக்காக, திட்டத்தை மாற்றிக் கொண்டு இருவரும் இரவென்று பாராமல் புரவியில் பயணமாயினர்.

இராசேந்திரனுக்கு மனநிலை சரியில்லாமலிருந்தது. காரனை விழுப்பரையனை அருகில் அழைத்து, “சோழச் சக்கரவர்த்தி மறைந்துவிட்டதாக உறையூரில் கேள்விப்பட்ட செய்தி, உண்மையாக இல்லாமலிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?” என்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"இனி எனக்கு அங்கே என்ன இருக்கிறது? அவரின் இறுதிக் கடன்கள் முடிக்கப்பட்டிருந்தால், உடனே வேங்கி போய்விடலாம் என்றெண்ணுகின்றேன். பழைய மதிப்பு இனிமேல் எனக்கு அங்கே இருக்காது!" என்று மனமொடிந்து சொன்னான்.

"என்ன இளவரசே அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? மறைந்த சோழச் சக்கரவர்த்தி தங்களுக்குத்தான் இளவரசுப் பட்டம் கட்ட வேண்டுமென்று விரும்பினார். பட்டத்தரசியும் அதை ஆதரித்தார். அப்படியிருக்கும் போது நீங்கள் ஏன் சோழ நாட்டைவிட்டுப் போக வேண்டும்?"

"ஆரம்பத்திலிருந்தே அதிராசேந்திரனுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடுகள் நிறையவே உண்டு; இனி சோழ நாட்டின் அடுத்த சக்கரவர்த்தி என்ற நிலையில், எனக்கு அங்கே முக்கியத்துவம் இருக்காது என்று படுகிறது. நான் ஒதுக்கப்பட்டவனாக இருப்பேன். அதனால் என் தாய் நாடான வேங்கி நாட்டிற்குப் போய்விடுவதே நல்லது" என்று கூறிய இராசேந்திரனை விழுப்பரையன் இடைமறித்தான்.

"முதன்மந்திரி உங்கள் பக்கத்தில் இருக்கின்றார். தளபதி தன்மபாலரும், அவரின் சகோதரரும் உங்களை ஆதரிக்கின்றனர். அதனால் வீணாக மனத்தைப் போட்டுக் குழம்பிக் கொள்ள வேண்டாம். நீங்கள் நினைப்பது போல அதிராசேந்திரர் அவ்வளவு துணிவாக தன்னிச்சையாக செயல்படுபவர் அல்ல; முதலமைச்சரின் சொற்கேட்டுத்தான் நடப்பார். நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்றான் உறுதியாக.

"எனக்கென்னமோ அம்மாதிரி தெரியவில்லை. போகப் போகப் பார்க்கலாம்!" என்று புரவியை வேகமாகச் செலுத்துவதற்காக வாரினால் ஓங்கி அடித்தான்.

*****

'**செ**ய்தி காட்டுத் தீ போன்று பரவிவிட்டது!' என்ற முதுமொழி உண்டு. அது எவ்வளவு உண்மை என்பது சோழச் சக்கரவர்த்தி வீரராசேந்திரர் விண்ணுலகு எய்தியதிலிருந்து தெரிகிறது.

நான்கு புறமும் ஆட்களை அனுப்பிச் செய்திகளைத் தெரிவிப்பதற்குள், அவர்களுக்கு முன்பே அச்செய்தி தெரிந்துவிட்டிருக்கிறது.

'சக்கரவர்த்தி இறந்துவிட்டார்' என்ற செய்தி முதல் ஊரிலிருந்து அடுத்த ஊருக்குப் பரவ எவ்வளவு நேரமாகும்? அதே மாதிரி அடுத்த ஊர், அடுத்த ஊர் என்று காட்டுத் தீயென அது சோழ நாடெங்கும் பரவிவிட்டிருந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதையறிந்த மக்களும் சிலர் துக்கித்தும், இன்னும் சிலர் அழுதும், வேறு சிலர் சோழ நாட்டின் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற கவலையுடன் செய்வதறியாது திகைத்தும் இருந்தனர்.

சக்கரவர்த்தி அனுப்பிய ஆளுடன் சாமந்தன் துணையோடு கங்கைகொண்ட சோழபுரம் நோக்கி வந்து கொண்டிருந்த இரத்தினாதேவிக்கும் இச்செய்தி எட்டிவிட்டது.

'ஒழிந்தான் பகைவன்' என்று உள்ளுணர்வு அவளுக்கு மகிழ்ச்சிக் கீதம் இசைக்க, "இன்னும் ஒருவன் இருக்கின்றான்! அவனும் ஒழிய வேண்டும்" என்று கோபத்துடன் கூறிக் கொண்டாள்.

அவளை அழைத்துவர அனுப்பப்பட்ட விசேஷ தூதன் இச்செய்தியைக் கேட்டு ஒருகணம் வெளிப்படையாகவே அழுதுவிட்டான். சோழநாட்டின் எதிர்காலம் பற்றி அவனுக்கும் ஐயமாகவே இருந்தது.

இரவு நெருங்கியதால் அருகிலிருந்த சத்திரத்தில் மூவரும் தங்கினர்.

தூதன் இரவிலும் பயணம் செய்யலாம் என்ற கருத்தை இரத்தினாதேவி ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் வேறு வழியின்றி அவனும் அவர்களுடன் தங்கும்படியாகிவிட்டது.

தூதன் வெளியே படுத்துக் கொள்ள, சாமந்தன் தரையிலும், இரத்தினாதேவி பஞ்சணையிலும் படுத்துக் கொண்டனர்.

"இனிமேல் முதலமைச்சரின் கை ஓங்கிவிடும். நம்மைக் கங்கைகொண்ட சோழபுரத்திலேயே சிறை வைத்துவிடலாம். அதனால் அங்கே போகாமல், இப்படியே கடாரதிற்குத் திரும்பிவிட்டால் என்ன?" என்று வினவினான் சாமந்தன்.

இரத்தினாதேவிக்கு அந்தக் கூற்று சரியென்று படவில்லை.

"தற்போதைய அரசர் யாரென்று நினைக்கிறீர்கள்? அதிராசேந்திரன்! நமக்கு மிக நெருக்கமானவர். அவரை மீறி முதலமைச்சர் ஒன்றும் நம்மைக் கைது செய்ய முடியாது!" என்றாள்.

"எனக்கு என்னமோ நீ சொன்னதை ஏற்கும் நிலையில் நான் இல்லை. இப்போதுதான் ஆட்சிபீடம் ஏறியிருப்பதால் முதல் அமைச்சரை மீறி நடக்க முடியாது என்றே எனக்குப்படுகிறது!"

அதைக் கேட்டு இரத்தினாதேவி புன்முறுவலித்தாள்.

"அப்படி முதலமைச்சர் சொற்படி ஆடும் பாவையாக இருந்தால், நாம் ஏன் அதை மாற்ற முயலக் கூடாது?"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“முயல்வதற்கு நம்மை வெளியேவிட்டால்தானே! உள்ளே சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டால்?”

“அவ்வளவு மோசமாக நம்மை நடத்தும் அளவுக்கு என்ன குற்றம் புரிந்துவிட்டோம்? அவனால்...” என்று மேற்கொண்டு பேச முயன்ற அவளை சாமந்தன் இடைமறித்து,

“இராஜத்துரோகம் என்று ஒரு வார்த்தை போதாதா? அதுவும் நாம் வெளிநாட்டினர் என்பதால் நம்மீது பழி சுமத்துவதற்கு வசதியாகப் போய்விட்டது” என்றான்.

இரத்தினாதேவி மௌனமானாள். பிறகு அதைக் கலைக்கும் விதத்தில், “இறுதிக் கடன்கள் முடியும்வரை இம்மாதிரி விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடத்த அவர்கள் மனம் துணியாது. இப்போது கங்கைகொண்ட சோழபுரம் செல்வோம். நிலைமை சரியில்லையென்றால் அங்கிருந்து சொல்லாமல் கொள்ளாமல் கடாரம் போய்விடலாம்!” என்றாள்.

சாமந்தன் இதற்குச் ‘சரி’ என்று ஒப்புக் கொண்டான்.

மிகுந்த நேரம் கடந்துவிட்டதாலும், அத்துடன் வெகு தூரம் பயணம் செய்த களைப்பின் மிகுதியாலும் இருவரும் துயில் கொண்டனர்.

*****

**ப**டகோட்டிக்குக் கூடுதலாகப் பொற்காசுகளைக் கொடுத்து அவனிடம் விடைபெற்றுக் கொண்டு, புரவி ஏறிய அம்மையப்பன், மதுரையை நெருங்கிக் கொண்டிருந்தான்.

‘அந்தப் பாண்டிய ஓநாய்களிடம் மாட்டிக் கொள்ளாமல் தப்பித்தது பெரிய கதை’ என்று அதைப் பற்றிச் சிந்திக்கலானான் அவன். ஒரு இரவும், மறுநாள் பகலும் மரத்தின் மேலேயே ஒளிந்திருந்தது தனக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது. எல்லா இடங்களிலும் தேடி அலுத்துவிட்ட அவர்கள் திரும்பவும் அசோக மரத்தின் கீழ் கூடிவிட்டனர். அதற்குள் ஒவ்வொரு கிளையாகத் தாவித் தாவி அத்தீவின் மறுமுனைக்கு வந்துவிட்டேன்! அங்கிருந்து பெரிய தீவிற்குப் போய்விட்டால் தொல்லையிருக்காது என்பதை உணர்ந்து இருட்டட்டும் என்று காத்திருந்தேன்!

அந்த எதிர்பார்த்த இருட்டும் வரவே, சப்தமின்றி மரத்திலிருந்து இறங்கி, எச்சரிக்கையுடன் கடலைக் கடந்து பெரிய தீவிற்குள் நுழையும் போதுதான் எனக்குப் பெருமூச்சே வந்தது!



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதைக் கடந்து கடலில் இறங்கும் நேரம் பார்த்துக் கட்டுமரத்துடன் படகோட்டியும் அங்கே வந்துவிட்டான்.

'இது ஒரு பெரிய காரியம்தான்!' என்று தான் தீவுக்குள் போய் வந்ததைப் பற்றிப் பெருமிதத்துடன் நினைத்தவாறு மதுரைக்குள் அவன் நுழைந்த போது சக்கரவர்த்தி மறைந்துவிட்ட செய்தி செவிகளில் விழுந்தது. ஒருகணம் திடுக்கிட்டு என்ன செய்வதென்றறியாது புரியாமல் நின்றான்.

## அத்தியாயம் - 39

**ஆ**வணித் திங்கள் ஆயில்ய நாளில் கங்கைகொண்ட சோழனின் மகனாய் அவதரித்த சக்கரவர்த்தி வீரராசேந்திரர் பூதவுடல் நீத்து, புகழுடம்பு பெற்று விண்ணுலகம் எய்திவிட்டார்.

இராசகேசரி என்ற பட்டப் பெயருடன், சோழ அரசுப் பொறுப்பை ஏற்ற அவர் சோழநாட்டைக் காப்பதற்காகத் தன் வாழ்நாள் முழுமையும் போரிலேயே செலவிட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டார். அதற்காக மக்களிடம் வேலி ஒன்றுக்கு ஒரு கழஞ்சுப் பொன் வீதம் வரியாக வசூலித்தார்.

'வீரமே துணையாகவும், தியாகமே அணியாகவும்' என்ற வரிகளுடன் தொடங்கும் மெய்க்கீர்த்தி இவரின் வீரச் செயல்களைக் குறிக்க...

'நேற்று இருந்தார் இன்றில்லை' என்ற பெருமைக்கு ஏற்ப அவர் மறைந்துவிட்ட நிகழ்ச்சியைத் தாங்க முடியாது சோழ மக்கள் சொல்லால் விவரிக்க முடியாத துயரத்தில் ஆழ்ந்தனர்.

அந்தச் சூழ்நிலையில்தான் யவன வீரனைப் போன்று உடையணிந்து உள்ளே புகுந்த இராசேந்திரனுக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது. அது...

மன்னர் வீரராசேந்திரருக்கு அவசரம் அவசரமாக இறுதிக் கடன்களைச் செய்து முடித்துவிட்டார்கள் என்பதே!

கடைசியாய் அவரின் உயிரற்ற உடலைப் பார்க்கலாம் என்று ஆவலுடன் வந்த அவனுக்கு இது பெருத்த ஏமாற்றமாகப் போய்விட்டது.

முதலமைச்சர் கூடப் பொறுப்பில்லாமல் நடந்துவிட்டாரே! என்ற கோபத்துடன் அவரின் மாளிகை நோக்கி காரனை விழுப்பரையனுடன் சென்றான்.

ஆனால்...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மாளிகையின் முன்னாலிருந்த வீரர்கள், அவர்களைத் தடுத்துவிட்டனர். அத்துடன் யாரையும் உள்ளேவிட முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டனர்.

‘ஆட்சி மாறிவிட்டதின் அறிகுறி இங்கேயே தெரிகிறதே!’ என்று உணர்ந்து இராசேந்திரன், பின்பக்க வழியாக இரகசியமாய் நுழைந்தான்.

முதலமைச்சர் சோர்வுடனிருந்தார். யவன வேடத்திலிருந்த இராசேந்திரனைப் புரிந்து கொண்டு, தன் அந்தரங்க அறைக்குள் அவனை அழைத்துச் சென்றார். காரனை விழுப்பரையன் யாராவது வருகின்றார்களாவென்று வெளியே கண்காணித்தபடி இருந்தான்.

“இதற்குள் எப்படி நீங்கள் அரசருக்கு இறுதிக் கடன்களை முடிக்கலாம்? எனக்கு அவர் மாமன் முறை வேண்டும். நாங்களெல்லாம் இல்லாமல் எப்படி நடத்தினீர்?” என்று கோபத்துடனே கேட்டான் இராசேந்திரன்.

“என் கைகள் கட்டப்பட்டுவிட்டதப்பா. அரசர் இறந்ததும், அரசிக்கு சுயநினைவே இல்லை. யார் சொன்னாலும் சரி... சரி... என்று தலையாட்ட ஆரம்பித்துவிட்டார். இராஜசுந்தரியும் இளையராணியும் இதை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். நீண்ட நாள் நோயுற்று இருந்ததால் இறந்த மறுநாளே உடலிலிருந்து ஒருவித வாசனை வர ஆரம்பித்துவிட்டது. அதனால், சீக்கிரம் இறுதிக் கடன்களை முடிக்க வேண்டும் என்று அவர்கள் செய்த முடிவுக்கு, கட்டுப்பட வேண்டியதாகப் போயிற்று.”

“என்ன இருந்தாலும் நான் வரும் வரை இறுதிக் கடன்களை நிறுத்தியே வைத்திருக்கலாம்” என்று தன் எண்ணத்தை வெளியிட்ட இராசேந்திரன், “தங்களைப் பார்ப்பதற்கு மாளிகைக்குள் நுழையக்கூட எங்களை அனுமதிக்கவில்லை!” என்றான்.

“அது என் உத்தரவு அல்ல அப்பா. இப்போதைய சோழச் சக்கரவர்த்தி அதிராசேந்திரனின் கட்டளை. இதிலிருந்தே என் நிலைமையை நீ புரிந்து கொண்டிருக்க வேண்டும்!” என்றார் முதலமைச்சர் அமைதியாக. அத்துடன் சிறிது வருத்தம் தோய்ந்த குரலில் அவர் கூறிய விஷயமாவது:

“நான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது. சோழச் சக்கரவர்த்தி உயிருடன் இருக்கும்போதே உனக்கும் மதுராந்தகிக்கும் திருமணம் நடத்திவிட திட்டமிட்டிருந்தோம். அதற்கு அரசரின் பரிபூரண ஒத்துழைப்பும், பட்டத்தரசியின் ஆதரவும் இருந்தது. அந்த நம்பிக்கையில்தான் உன்னை மதுரையிலிருந்து இரகசியமாக வரவழைக்க ஆளை அனுப்பினேன். ஆனால் தெய்வத்தின் நினைப்பு வேறாக இருந்துவிடவே, என் திட்டங்கள் எல்லாம் தோல்வியில் முடிந்துவிட்டன. இனி நான்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என்ன செய்ய முடியும்? இன்று காலையில்தான் சோழச் சக்கரவர்த்தியாக முடிசூடியிருக்கும் அதிராசேந்திரர் என்னைப் பார்க்க வந்தார். அவரிடம் என்னை வீட்டுக்குள்ளேயே இருக்கச் செய்வது மனவேதனையைத் தருகிறது என்று கூட சொன்னேன். அதற்கு அவர், 'நீங்கள் பதவியிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்' என்று மறுமொழி கூறிவிட்டார். இதைவிட ஒரு அவமானத்தை என் வாழ்க்கையில் இதுவரை நாள் சந்தித்ததில்லை. என்ன செய்வது? நேரம் சரியில்லை என்று பேசாமல் இருந்துவிட்டேன். என்னால் சிறை வைக்கப்பட்ட வீரசோழ இளங்கோ வேளான் அரசரின் மெய்க்காப்பாளனாக ஆக்கப்பட்டிருக்கிறான். சிறிய தன்மபாலர் சிறை வைக்கப்பட்டுள்ளார். அதற்குக் காரணமே இல்லை. தளபதிக்கு என்ன நேருமோ என்ற கவலை! நீண்ட நாளாய் மறைபட்டிருந்த இடங்கை, வலங்கை பிரிவு மறுபடியும் சோழப் படையில் தலைதூக்கும் போல் தெரிகிறது! குந்தள மன்னர் சொன்னபடியெல்லாம் அரசர் ஆடுகின்றார். கங்கரபுரியின் கோட்டை தலைமை குந்தள நாட்டைச் சேர்ந்தவருக்குத் தரப்போவதாக பேசப்படுகிறது. சோழ அரசர் அதிராசேந்திரர் எங்களையெல்லாம் நம்பாமல் செயல்படுகிறார். எத்தனை நாளைக்குக் குந்தள மன்னர் அவருக்குத் துணையிருப்பார்? இது தெரியாமல் அந்த இரு பெண்மணிகள் சொன்னபடி செயல்படும் பொம்மையாக இருக்கின்றார். சக்கரவர்த்திக்குரிய தன்னிச்சையாய்ச் செயல்படும் திறன் அவருக்கு இருக்கிறதா என்றால் சந்தேகமாயிருக்கிறது!" அவர் கூறிக் கொண்டிருக்கும் போது அந்தரங்க அறையிலிருந்த மூலப் பக்கத்திலிருந்து 'தட் தட்' என்று மூன்று முறை தட்டும் சப்தம் கேட்டது.

"அது என்ன சப்தம்?" என வாளை உருவினான்.

சோர்ந்திருந்த முதலமைச்சரின் முகத்தில் புன்முறுவல் வெளிப்பட்டது.

"இது அனுமதிக்கப்பட்ட சப்தம்தான்" என்றார்.

இராசேந்திரன் அதைப் புரிந்து கொண்டு, "நான் வெளியே இருக்கட்டுமா?" என்றான்.

"அப்படித்தான்!" என்ற அவர், அங்கிருந்து புறப்படத் திரும்பிய இராசேந்திரனை, "சற்று நில்!" என்றார்.

"என்ன முதன்மந்திரி?" என்று கேட்டவாறு அருகில் வந்தான்.

"மரியாதைக்குச் சோழச் சக்கரவர்த்தியாக ஆகியிருக்கும் அதிராசேந்திரனைப் பார்த்து வாழ்த்துத் தெரிவி! உன்னை இளவரசன் ஆக்குவதற்கு அதன் மூலம் அவருக்கு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

எண்ணம் வருகிறதா பார்க்கலாம். நானும் சக்கரவர்த்தியின் விருப்பம் என்று ஏற்கனவே அவரிடம் சொல்லியிருக்கின்றேன்!”

“எனக்கு இளவரசனாக விருப்பம் இல்லை. இவர்கள் மத்தியில் அந்தப் பட்டத்துடன் உலவுவதைவிட எங்கேயாவது போர்க்கள முனைக்கு அனுப்பி வையுங்கள். போய்விடுகின்றேன்” என்றான் விரக்தியான குரலில்.

“நம்பிக்கையை இழந்துவிடாதே இராசேந்திரா! எனக்கு ஏற்பட்ட தோல்வியைவிடவா உனக்கு ஏற்பட்டுவிட்டது? இறுதி வெற்றி நமக்குத்தான்! கவலைப்படாமல் அதிராசேந்திரரைப் போய்ச் சந்தி. உன்னை ஒன்றும் அவர் செய்துவிடமாட்டார். அப்படி ஏதாவது நடந்தால் நானும் மற்றவர்களும் வேடிக்கை பார்க்கமாட்டோம். அதனால் துணிவுடன் அவரைச் சந்தித்துவிட்டு என்னை இரகசியமாய் வந்து பார். அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று தெரிவிக்கின்றேன்!” என்றார்.

அதற்குள் மறுபடியும், ‘தட் தட் தட்’ என்று மூன்று முறை தட்டும் சப்தம் கேட்டது.

முதலமைச்சர் இருக்கையிலிருந்து எழுந்து கொண்டார்.

இராசேந்திரன், “அதிராசேந்திரரைப் பார்த்துவிட்டுப் பிறகு வந்து சந்திக்கின்றேன்” என்று அங்கிருந்து வெறியேறினான்.

மூலையிலிருந்த சுவரிலுள்ள புலித்தலையை அவர் வலப் பக்கமாய்த் திருப்பினார். மூலைப்பக்கத்தில் ஆள் நுழையுமளவிற்கு வழி கிடைத்தது. உள்ளே எட்டிப் பார்க்க, வெள்ளை முக்காடிட்ட உருவம் சுரங்கப் படிக்கட்டுகளின் நின்று கொண்டிருந்தது.

முதலமைச்சரைப் பார்த்ததும் அது கை குவித்து வணங்கியது.

அவ்விதம் கைகுவிக்கும் போது, விரலிலிருந்த வைர மோதிரத்தின் ஒளி அவரின் கண்களைக் கூச வைப்பது போல் பளிச்சிட்டது.

அந்த வெளிச்சம் கண்களில் படாதிருக்க ஒருகணம் இமைகளை மூடிக் கொண்டார்.

“என்னப்பா வழக்கத்திற்கு விரோதமாய்” என்று கூறியபடி படிக்கட்டுகளில் கால் வைத்து மூலையில் உண்டான வழியை அடைத்துக் கொண்டார்.

அந்தக் கரகரப்புக் குரல்... அதே வாசனை... சுரங்க அறை முழுவதும் வீச உருவத்தின் அருகில் சென்றார்.

“சதி! பெரிய அளவில் நடக்கிறது. மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட முடிவு செய்து இரகசியமாய் சோதிடரை வரவழைத்துத் தேதியும் குறித்துவிட்டார்கள். பட்டத்தரசியைக் கொல்ல முடிவு செய்துவிட்டார்கள். மன்னர் இறந்த துக்கம் தாளாமல் நஞ்சுண்டு இறந்துவிட்ட மாதிரி வெளி உலகத்துக்குத் தெரியும்படி அவர் கைப்பட



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

எழுதப்பட்ட ஒரு போலி ஓலை நறுக்கைத் தயார் செய்துவிட்டார்கள். இன்னும் மூன்று தினங்களில் அவர் கொல்லப்படலாம்” என்றது உருவம்.

முதலமைச்சருக்கு நெற்றி சுருங்கியது.

“அவரைக் கொல்வதால் இவர்களுக்கு என்ன இலாபம்?”

“எதுவாயினும் உங்களைக் கலந்து செய்யும்படி, அதிராசேந்திரருக்குக் கட்டளையிட்டிருக்கின்றார் பட்டத்தரசி. இது சோழ மன்னருக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அத்துடன் மதுரையிலிருந்து இராசேந்திரனை வரவழைத்து, அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டும்படி அடிக்கடி அதிராசேந்திரரை நச்சரித்துக் கொண்டிருக்கிறார்.”

“ஓ! கதை இப்படிப் போகிறதா?” புரிந்து கொண்ட முதன்மந்திரி, “இளவரசர் அதிராசேந்திரர் இந்த அளவிற்குத் துணிந்துவிட்டாரா?” என்றார்.

“அவர் சம்மதிக்கவில்லை. ஆனால் அவருக்குத் தெரியாமல், விக்கிரமாதித்தர் இம்மாதிரி ஒரு திட்டத்தைத் தீட்டி வைத்திருக்கிறார். அரசியின் நச்சரிப்புத் தாங்காமல் அவர்கள் சொல்லியபடி இராசேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினால் என்ன? நம்மை மீறியா போய்விடுவான்? என்று தன் தங்கை இராஜசுந்தரியிடம் கேட்டிருக்கின்றார் அரசர். அதன் விளைவாய் அவர்கள் சோழச் சக்கரவர்த்திக்குத் தெரியாமல் இத்தகைய கீழ்த்தரமான செயலில் இறங்கியிருக்கின்றார்கள்.”

“சோழப் பேரரசர் பட்டத்தரசி சொல்வது போல் தலையாட்ட ஆரம்பித்தால், அவர்களுக்கு மதிப்பில்லாமல் போய்விடுமே! அதனால்தான் அவர்கள் அரசியைக் கொன்றுவிடுவதில் தீவிரமாயிருக்கிறார்கள்.”

“இதைப் பட்டத்தரசிக்குத் தெரிவித்து, அவர்களை எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்ல வேண்டுமே?” - முதன்மந்திரி குழம்பிக் கொண்டிருக்கும் போது, உருவம் குறுக்கிட்டு...

“நீங்கள் அவரைச் சந்திக்க முடியாதா?” என்று கேட்டது.

“முடியாது. எக்காரணம் கொண்டும் நான் இந்த மாளிகையைவிட்டு வெளியேற முடியாது!”

“அக்கிரமம். இது அநியாயம். இதற்கு அவர்கள் பதில் சொல்லியேயாக வேண்டும்” என்று உருவம் பற்களைக் கடிக்க...

சினத்தினால் அதன் கண்கள் கொழுந்துவிட்டெரியும் சுடரெனப் பிரகாசித்தன.

“இரகசிய வழியின் மூலம் சந்தித்தாலென்ன?” உருவம் திரும்பவும் வினவ...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இந்த அறைக்கும் அவர்கள் இருக்கும் அறைக்கும் எந்தவித மறைவான வழியும் இல்லை. அதனால்தான் யோசிக்கின்றேன்!” என்றார் முதன்மந்திரி.

“நான் நேரே போய் அவர்களுக்கு எச்சரிக்கை செய்யட்டுமா?”

“அப்படியே செய்! ஆனால் இந்த உருவத்துடன் போக வேண்டாம். உன் பழைய உருவத்தில் சென்றுவிடு” என்று கூறினார்.

வெள்ளை முக்காடு போட்ட உருவம் சம்மதித்தது.

“அடுத்து உன்னுடைய வேலை என்ன?”

“சிறிய தன்மபாலனை விடுதலை செய்வது. அதற்காகத்தான் தக்க நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்!”

“எச்சரிக்கையுடன் செயல்படு. அவர்களிடம் மாட்டி கொள்ளாதே! இப்போதிருக்கும் சூழ்நிலைக்கு நீ ஒருத்தன்தான் எனக்கு வலக்கை போன்று இருக்கின்றாய். சாக்கிரதை” என்றார் முதன்மந்திரி.

“நான் அவர்களிடம் சிக்கமாட்டேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்!” - பிரமாதிராசரிடம் விடைபெற்றுக் கொண்டு உருவம் அங்கிருந்து மறைந்தது.

முதன்மந்திரி பழையபடி சுரங்க வழியைத் திறந்து வெளியேறி இருக்கையில் அமர்ந்து அடுத்து என்ன செய்யலாம்? என்ற யோசனையில் மூழ்கலானார்.

*****

**பி**ரமாதிராசரின் மாளிகையிலிருந்து வெளியேறிய இராசேந்திரன், யவன வேடத்தைக் கலைத்துக் கொண்டு காரனை விழுப்பரையனுடன் பட்டத்தரசியின் மாளிகை நோக்கிச் சென்றான்.

அவனை வீதியில் மக்கள் அடையாளம் கண்டு கொண்டு சூழ்ந்து கொண்டனர். இராசேந்திரன் புரவியிலிருந்து இறங்கி அனைவரையும் வணங்கினான்.

சக்கரவர்த்தி இறந்தது பற்றிக் கூட்டத்தினர் கண் கலங்கி நிற்க இவனுக்கும் துயரம் தாளாமல் விழிகளில் நீர் சுரந்தது. அவனுடன் கடாரத்திற்குக் கூடச் சென்ற போர் வீரர்கள் சிலர் இராசேந்திரனைப் பார்த்துவிட்டு அருகே வந்து வணங்கி நின்றனர்.

அனைவரையும் நலம் விசாரித்து ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட முறையில் பேசிக் கொண்டிருக்கும் போது சக்கரவர்த்தியின் மெய்க்காப்பாளனான வீரசோழ இளங்கோ வேளான் தன்னுடன் வந்து கொண்டிருந்த வீரர்களிடம், “அது என்ன கூட்டம்?” என்று வினவினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"தெரியவில்லை!" என்று ஒரு வீரன் பதில் கூறவும் அதனால் கோபமுற்று "இம்மாதிரி அசட்டையாய் நாம் இருக்கக் கூடாது. வலங்கைப் பிரிவினரான நமக்கு எதிராக இடங்கை வகுப்பார் கலகம் செய்ய முயல்வதாக செய்தி வந்துள்ளது. வாருங்கள். என்னவென்று பார்ப்போம்!" எனக் கூட்டத்தை நோக்கிக் குதிரையைச் செலுத்தினான்.

"என்னப்பா நடுவீதியில் கும்பல்? எல்லோரும் கலைந்து செல்லுங்கள்!" என்று ஒரு வீரன் அதட்ட மக்கள் ஒன்றும் பேசாமல் மெல்ல கலைந்து செல்ல ஆரம்பித்தனர்.

குதிரையிலிருந்தவாறு இதைப் பார்த்துக் கொண்டிருந்த வீரசோழ இளங்கோ வேளான், கூட்டத்தினர் நடுவில் இராசேந்திரன் நிற்பதையும், அதற்குப் பக்கத்தில் காரனை விழுப்பரையன் இருப்பதையும் கவனித்துத் திடுக்கிட்டான்.

முன்பெல்லாம் இராசேந்திரனைக் கண்டால் அவன் வணங்குவது வழக்கம். ஆனால் இம்முறை அம்மாதிரி எதுவும் செய்யாமல் சற்று மிடுக்குடனே, "எப்போது மதுரையிலிருந்து வந்தீர்? முந்தின சக்கரவர்த்தி மறைந்த செய்தி எப்போது தெரிந்தது?" என்று கேட்டான்.

"சற்று முன்புதான் வந்தேன்" என்று கூறிய இராசேந்திரன், "அரசரை நான் பார்க்க வேண்டுமே!" என்றான்.

"அரசர் முக்கிய வேலையாயிருக்கின்றார். இப்போது நீங்கள் சந்திக்க முடியாது! வேண்டுமென்றால் நீங்கள் வந்திருப்பது பற்றி அவரிடம் தெரிவிக்கின்றேன்!"

"மகிழ்ச்சி. அதற்குள் நான் பட்டத்தரசியைப் பார்த்துவிட்டு வருகின்றேன். சக்கரவர்த்தியைப் பார்க்க விரும்புவது பற்றி அவரிடம் ஒரு வார்த்தை தெரிவித்து வையுங்கள். எப்போது வரச்சொல்கிறாரோ, அப்போது சந்திக்கின்றேன்!"

"பார்க்கலாம்"- அலட்சியத்துடன் கூறிய வீரசோழ இளங்கோ வேளான் கூட்டத்தினரிடையே, வீரர்கள் இருப்பதைப் பார்த்து, "இங்கே என்ன உங்களுக்கு வேலை!" என்றான் சீற்றத்தோடு.

"ஒன்றுமில்லை" என்றபடி அவர்களும் கலைய, சில பேர் "உங்கள் அட்டகாசத்துக்கெல்லாம் சீக்கிரம் முடிவு வரத்தான் போகிறது!" என்று முணுமுணுத்தவாறு அகன்றனர். வீரசோழ இளங்கோ வேளான் இராசேந்திரனை ஒரு மாதிரி பார்த்தபடி, புரவியைத் தட்டிவிட்டான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 40

இரத்தினாதேவி கங்கைகொண்ட சோழபுரத்துக்குள் தெம்புடனே நுழைந்து சாமந்தனுடன் சோழகேரளன் திருமாளிகை முன் இறங்கினாள்.

இராசேந்திரனுக்குக் கூறியது போலவே, காவலுக்கு நின்றிருந்த வீரர்கள் அவளையும் உள்ளேவிட மறுத்தனர்.

"வியப்பாக இருக்கிறதே!" என திகைப்புற்ற கடார இளவரசி, அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தபடி நிற்க, கோவிலுக்குச் செல்வதற்காக வெளியில் வந்த இளையராணியும், இராஜசுந்தரியும் "வாருங்கள்! வாருங்கள்!" என்று புன்முறுவலுடன் வரவேற்றனர். அவர்களுடன் நடந்து சென்றவாறு...

"உள்ளே நுழைய முடியாத அளவிற்குக் காவல் பலத்திருக்கிறதே?" என்றாள் கடார இளவரசி.

"ஆமாம்! கொஞ்ச நாளைக்கு இப்படித்தான் இருக்கும். பிறகு எல்லாம் சரியாகிவிடும்!"- இது இளையராணியின் பதில்.

"அரசர் இறந்துவிட்டதைக் கேள்விப்பட்டேன். கங்கைகொண்ட சோழபுரத்தில் நான் இருந்திருந்தால் இவ்வளவு சீக்கிரம் இறக்கவிட்டிருக்க மாட்டேன்!"

இராஜசுந்தரி குறுக்கிட்டாள்.

"நீங்கள் இல்லாமற் போனதே நல்லதாகப் போய்விட்டது!"

"என்னது?" - கடார இளவரசியின் புருவங்கள் நெரிந்தன.

"ஆமாம்! சோழச் சக்கரவர்த்தி கண்களை மூடினதினால்தான் எங்களுக்கெல்லாம் நல்லகாலம் பிறந்திருக்கிறது. இல்லையென்றால் என் அண்ணன் ஆட்சிக்கு வந்திருக்க முடியாது! முதன்மந்திரி வைத்ததுதான் சட்டமாய் போயிருக்கும்!" என்றாள் இராஜசுந்தரி.

"ஓ! அதைச் சொல்கிறீர்களா? நான் மதுரைக்குப் போனது ஒருவிதத்தில் நல்லதாகப் போய்விட்டது என்று சொல்லுங்கள்!" -சிரித்துக் கொண்டே கூறினாள் இரத்தினாதேவி.

"இராசேந்திரனுக்கு அங்கே இறுதிக்கடன் நடக்க வழி செய்துவிட்டீர்கள் அல்லவா?" - ஆர்வத்தோடு இளையராணி கேட்க...

இரத்தினாதேவி பதில் சொல்ல முடியாது மௌனம் சாதித்தாள்.

"என்ன? அவன் இன்னும் உயிருடன் இருக்கின்றானா?"

"ஆமாம்!"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"ஆச்சரியம்தான்!" என்ற இராஜசுந்தரியிடம், "அவன் இங்கே மாறுவேடத்தில் வந்திருக்கின்றான்; மதுரையில் இல்லை" என்று கூறினாள் கடார இளவரசி.

"அப்படியா?" - வியப்புற்ற இளையராணி, "சாமர்த்தியக்காரன்தான் போலிருக்கிறது" என்றாள்.

அதிராசேந்திரர் வீற்றிருக்கும் கூடம் வந்துவிட்டது.

மூன்று பெண்களும் சாமந்தனுமாக உள்ளே நுழைந்தனர்.

மாவலிவாணராயன் இருக்கையில் அதிராசேந்திரர் சக்கரவர்த்திக்குரிய மிடுக்குடன் அமர்ந்திருந்தார். பக்கத்தில் குந்தள நாட்டு மன்னனான விக்கிரமாதித்தன் வீற்றிருக்க, வீரசோழ இளங்கோ வேளான் கைகட்டி நின்று கொண்டிருந்தான். கொடும்பாளூர்க் குறுநில மன்னர் நரைத்த மீசையைத் தடவியவாறு, மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்தார். அடுத்து இளவரசுப் பட்டம் தனக்குத்தான் என்ற தற்பெருமையில் மதுராந்தகன் இன்னொரு இருக்கையில் இருந்தான்.

அந்த நேரத்தில் நான்கு பேரும் நுழைவதை சோழச் சக்கரவர்த்தியான அதிராசேந்திரர் எதிர்பார்க்கவில்லை. வியப்புடனே அவர்களைப் பார்த்து, "வாருங்கள்! வாருங்கள்!" என்று வரவேற்றார்.

"சோழச் சக்கரவர்த்தி நீண்ட நாள் வாழ வாழ்த்துகிறேன். இந்நாட்டின் பேரரசரானதிற்கு என் மனப்பூர்வமான பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றாள் கடார இளவரசி.

"நல்லது. உட்காருங்கள்" என்று ஆசனத்தைக் காண்பிக்க, நால்வரும் அமர்ந்தனர்.

"இராசேந்திரன் மாறுவேடத்தில் இங்கே வந்திருப்பதாகக் கடார இளவரசி தெரிவிக்கின்றார்" - பேச்சை ஆரம்பித்தாள் இராஜசுந்தரி.

"எனக்குத் தெரியும். அத்துடன் அவன் மாளிகைக்குள் நுழைய முடியாமல், நாய் போல் வீதியில் அலைந்ததும் தெரியும். இப்போதுதான் போனால் போகிறதென்று முன்னால் தங்கியிருந்த மாளிகையின் திறவுகோலை அவனிடம் தரச் சொல்லியிருக்கின்றேன். இந்நேரம் அறைக்குள் இளைப்பாறிக் கொண்டிருக்கலாம். அதே சமயம் அவனை இங்கிருந்து வெளியேற்றிவிடவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது!"

குந்தள நாட்டுச் சக்கரவர்த்தியான விக்கிரமாதித்தன் குறுக்கிட்டு, "என்ன அதிராசேந்திரா, இவர்களிடமெல்லாம்..." - மேற்கொண்டு அவர்களிடம் சொல்ல



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வேண்டியதில்லை என்பதைக் குறிப்பால் உணர்த்தும் விதத்தில், தன்னுடைய பேச்சை நிறுத்தினான்.

"இவர்கள் நமக்கு வேண்டியவர்கள்!" என்று கூறிய அதிராசேந்திரன் விக்கிரமாதித்தன் பக்கம் திரும்பி "மறைந்துவிட்ட என் தந்தைக்கு அற்புதமான வைத்தியம் செய்து அவர் உயிரைச் சிறிது நாள் காப்பாற்றிய பெருமை இவருக்கே உரியது. இரத்தினாதேவி என்று பெயர். கடார நாட்டைச் சேர்ந்தவர்கள். நல்லெண்ணத் தூதாக இங்கே வந்திருக்கின்றார்கள்" என்றார்.

இரத்தினாதேவி விக்கிரமாதித்தனைப் பார்த்துக் கை கூப்பினாள்.

"அத்துடன் இன்னொன்றும் சொல்கின்றேன்! இவர்கள் இராசேந்திரனுக்கு பகைவர்கள்!"

அப்போதுதான் விக்கிரமாதித்தன் முகத்தில் மலர்ச்சி தோன்றியது.

"இவர்களுக்கு மருத்துவம் தெரியுமா?" என்ற கேள்வியுடன் மதுராந்தகன் அச்சமயம் குறுக்கிட்டான். ஏற்கனவே இரத்தினாதேவியின் தோற்ற அமைப்பிலும் அங்கங்களின் பூரிப்பிலும் மனதைப் பறிகொடுத்திருந்த அவன் "கொஞ்ச நாட்களாகவே உடலில் சோர்வு தட்டுகிறது. அது நீங்கிப் புதிய சுறுசுறுப்புடன் இருக்க தங்களிடம் மருந்து உண்ண ஆசைப்படுகின்றேன்" என்றான் புன்முறுவலோடு.

அளவுக்கு மீறிய பெண்கள் போகத்தினால், முகத்தில் இளமை குன்றியிருந்த அவனை அப்போதுதான் பார்த்தாள். 'அரசகுமாரனுக்குரிய துடிப்பு இல்லாமல் இருக்கின்றாரே. அத்துடன் பெண்கள் விஷயத்தில் அதிக ஈடுபாடுடையவர்' என அவனைப் பற்றிக் கணக்குப் போட்டு 'இவனிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்று எண்ணி "அதற்கென்ன. சோர்வு நீங்க என்னிடம் சிறப்பான மருந்தெல்லாம் இருக்கிறது. நீங்கள் கவலைப்பட வேண்டாம்!" என்றாள்.

சந்தோஷத்தின் மிகுதியால் மதுராந்தகன் இருக்கையிலே நெளிந்தான்.

'அறிவு கெட்ட மடையன்' என்று அவனை நோக்கி முகம் சுளித்த குந்தளச் சக்கரவர்த்தி, "இதற்குள் என்னப்பா உனக்குச் சோர்வு வந்துவிட்டது? நல்ல இளம் வயது. கல்லையும் உண்டு செரிக்கும் விதத்தில் சக்தி இருக்க வேண்டும்! அதைவிட்டு சோர்வு அது இது என்று மருந்து கேட்கின்றாயே?" என்றான்.

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாது, இரத்தினாதேவியைப் பருகிடும் விதத்தில் மதுராந்தகன் அவளை முறைத்துப் பார்த்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என்னதான் வேற்று ஆடவனுக்குக் கட்டிலில் இடம் கொடுக்கும் பெண்ணாக இருந்தாலும், பிடிக்காத ஆண் மகனை உதாசீனம் செய்துவிடும் இயல்பு அவளிடம் அமைந்துள்ளதால், மதுராந்தகனிடம் காமத்தைத் தவிர வேறு சிறப்பான ஆண்மைக் குணம் ஏதும் இல்லாததால், வெறுப்புக் கலந்த பார்வையால் அவனை நோக்கிவிட்டு, விழிகளை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

அந்தத் திரும்பலைப் பற்றிக் கவலைப்படாது அவள் விழிகள் தன் மீது பரவியதே போதும் என்ற கணக்கில் புன்முறுவலை நெளியவிட்டபடி இரத்தினாதேவியை இன்னும் நன்றாக உற்று நோக்க ஆரம்பித்தான் மதுராந்தகன்.

சோழச் சக்கரவர்த்தி அதிராசேந்திரர் குறுக்கிட்டார். "நீங்கள் சோழ நாட்டின் கௌரவ விருந்தாளிகள்; முந்தின சக்கரவர்த்தி தந்த மதிப்பும் மரியாதையும் தொடர்ந்து உங்களுக்குத் தரப்படும்" என்று வீரசோழ இளங்கோ வேளான் பக்கம் திரும்பி, "இவர்களை அழைத்துச் சென்று விருந்தினர் மாளிகையில் தங்க எல்லா வசதிகளையும் செய்து தரும்படி மாளிகைத் தலைவனிடம் கூறு!" என உத்தரவிட்டார்.

வீரசோழ இளங்கோ வேளான் இருவரையும் அழைத்து கொண்டு அங்கிருந்து அகன்றான்.

விக்கிரமாதித்தன் மதுராந்தகனை அழைத்து "சற்று நந்தவனம் வரைக்கும் உலவிவிட்டு வா!" என்றான்.

"எதற்கு?"

"உடல் நலத்திற்கு மருந்து உண்பதைவிட, உலவுவது சாலச் சிறந்தது!"

கடார இளவரசியிடம் தனிமையில் பேச வேண்டும் என உரிய தருணத்திற்கு யோசித்துக் கொண்டிருந்த அவன் இதுவே ஏற்ற சமயம் என்று புறப்பட்டான்.

'யாரையும் உள்ளேவிட வேண்டாம்!' என்று வெளியே காவலுக்கிருந்த வீரர்களிடம் உத்தரவிட்ட விக்கிரமாதித்தன், எழுந்து கூடத்தை நோட்டம் விட்டுவிட்டு வந்து உட்கார்ந்தான்.

விக்கிரமாதித்தன், இராஜசுந்தரி, சோழச் சக்கரவர்த்தி அதிராசேந்திரர், இளையராணி, கொடும்பாளூர்க் குறுநில மன்னர் மட்டும் அறையிலிருந்தனர்.

சாளுக்கிய வேந்தன் "நாட்டைவிட்டு வந்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. என் தமையன் சோமேசுவரன் எனக்கு எதிராய்ப் படைகளைத் திரட்டுவதாக செய்தி வந்துள்ளது" என்றான்.

அதிராசேந்திரர் முகத்தில் அதிர்ச்சி நிலவியது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இதற்குள்ளாகவா புறப்பட வேண்டும்? மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிட்டுப் போகலாமே?” - குறுக்கிட்டாள் இராஜசுந்தரி.

“இங்கே வந்து முப்பது தினங்களுக்கு மேல் ஆகிவிட்டது, அங்கே நிலைமை சரியில்லை! நான் உடனே புறப்பட வேண்டும்” என்றான் அழுத்தமாய்.

அந்த வார்த்தைகளுக்காக முகத்தைச் சுருக்கி, யோசனையில் ஆழ்ந்த அதிராசேந்திரன், “என்ன இருந்தாலும் குந்தள வேந்தருக்கு இங்கிருந்து போக என்னிடமிருந்து அனுமதி இல்லை!” என்றான் சிரித்துக் கொண்டு.

மீசையைத் தடவியபடி கொடும்பாளூரார், சக்கரவர்த்தியை வினோதப் பொருளைப் பார்ப்பது போல் பார்த்தார்.

“சோழச் சக்கரவர்த்தி என்னை இங்கேயே இருக்கச் சொன்னது பற்றிச் சந்தோஷம். ஆனால் குந்தள நாட்டின் நிலைமை மிக மோசமாய் இருக்கிறது. நான் எப்படியும் போக வேண்டிய சூழலில் இருக்கின்றேன். அதற்கு முன் சில வார்த்தைகள், அதிராசேந்திரருக்குச் சொல்ல விரும்புகிறேன். தற்சமயம் இங்கே பதவியிலிருப்பவர்களெல்லாம் பேரரசருக்கு எதிராய்ச் செயல்படுபவர்கள். அவர்களை நீக்கிவிட்டு அவ்விடத்தில் நமது நம்பிக்கைக்குகந்த ஆட்களை அவர் அமர்த்தியே ஆக வேண்டும். இல்லையென்றால் ஆட்சியில் பெருங்குழப்பம் ஏற்படும் என தெரிகிறது. அதற்கு முதற் கட்டமாக தளபதி தன்மபாலரை நீக்கி, அங்கே வீரசோழ இளங்கோ வேளானை அமர்த்த வேண்டும். கோட்டையின் பொறுப்பு நம் அனைவரின் நம்பிக்கைக்குரிய கங்கனிடம் தரப்பட வேண்டும். முதலமைச்சர் பதவி பிரமாதிராசருக்கு மட்டும் சொந்தம் அல்ல; அதனால் வேறு ஒருவருக்கு அப்பதவி தரப்பட வேண்டும். பட்டத்தரசியின் விஷயத்தில் நான் சொன்ன யோசனைதான் சிறந்தது. பாவ புண்ணியம் பார்ப்பதால், உங்களின் முடிவுக்கே விட்டுவிடுகின்றேன். திரும்ப வந்திருக்கும் இராசேந்திரனை இங்கிருந்து நாடு கடத்திவிட வேண்டும். அவனை வைத்துக் கொண்டால் உங்களுக்கு என்றும் ஆபத்துதான். அத்துடன் மதுரைக்குச் சோழ அரசின் பிரதிநிதியாக இராசராச பாண்டி மண்டலத்தை ஆளும் தங்களின் சிற்றப்பன் ஆளவந்தானை நியமிக்க வேண்டும். இவைகளையெல்லாம் செய்தால்தான் ஓரளவாவது நாம் ஆட்சியை இங்கே நிலை நிறுத்த முடியும்!” என்றான் விக்கிரமாதித்தன்.

“இவையெல்லாம் செய்துவிடுகிறோம். நீங்கள் இந்த சமயத்தில் எங்களைவிட்டுப் போக வேண்டாம்” என்று இடை மறித்துக் கூறினாள் இளையராணி.

விக்கிரமாதித்தன் அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த போது...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவ்வறையின் பெருங்கதவு அவசரமாக ‘தட தட’வெனத் தட்டப்பட்டது.

“என்ன இது? அதிகப்பிரசங்கித்தனமாய்?” முனிவுடன் மேலைச்சாளுக்கிய வேந்தன் எழுந்தான்.

“யாரது இந்நேரத்தில்?” கேள்வியையெழுப்பியபடி கதவை நோக்கிச் சென்றாள் இராஜசுந்தரி.

“அவசரம். மிக அவசரம்!” என்று குரல் கேட்டது.

பதட்டத்துடனே தாழினை நீக்கினாள். அடுத்த நொடியே...

“என்ன பிடித்துவிட்டார்களா! அந்த வெள்ளை முக்காடிட்ட உருவத்தை. இதோ வருகிறோம்!” என்று உற்சாக மிகுதியால் கூறினாள்.

எல்லோரும் குதூகலத்துடன் செய்தியைத் தெரிவித்த வீரனைப் பின் பற்றி வேகமாய் நடந்தனர்.

பாதாளச் சிறைக்குச் செல்லும் வழியில் உருவம் நின்று கொண்டிருந்ததாகவும், அதைப் பார்த்து அடிமேல் அடியெடுத்து வைத்துப் பின்பக்கமாய்ச் சென்று பிடித்துக் கொண்டதாகவும் தெரிவித்தான் வீரன்.

அவ்விடத்தை அடையும் போது அங்கேயிருந்த மூன்று வீரர்களும் சோர்ந்த முகத்துடன் தப்பித்துவிட்டதாகக் கூறினர்.

“மடையர்கள்!” - கோபத்துடன் அதிராசேந்திரர் கூவினார்.

“மன்னிக்க வேண்டும்! நாங்கள் அதைப் பின்பக்கமாகப் பிடித்திருந்தோம். கையில் விலங்கிடுவதற்காக எங்களில் ஒருவன் முன்பக்கம் செல்லும் போது, நீட்டிய அதன் கையிலிருந்த மோதிரத்தின் ஒளி, அவன் கண்களைக் கூசவைக்க என்ன இது என்று முகத்தை மூடுவதற்குள், பின் பக்கம் பிடித்திருந்தவனைக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிட்டது. பின்பற்றி ஓடலாம் என்பதற்குள், பளிச் பளிச் என்று வீசிய ஒளியில், நாங்கள் திகைப்பூண்டை மிதித்தவர்கள் போல் நின்றுவிட்டோம்!”

“அதுதானே விஷயம்! இவ்வளவு எளிதாக எப்படிக் கிடைத்துவிடும் என்று பார்த்தேன்!” என்று கூறிய குந்தளத்தான், “அதைப் பிடிக்க நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்!” என்றான்.

“என்ன திட்டம் அது?” என்று சோழச் சக்கரவர்த்தி அருகிலிருந்த வீரர்களை அங்கிருந்து விலகிச் செல்லும்படிக் கூறினார்.

“முதல் அமைச்சர் அந்த உருவில் நடமாடுவதாக ஐயம்! அவரைப் பிடித்துச் சிறையில் வைத்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்” என்றான் விக்கிரமாதித்தன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"இல்லை. அந்த மோதிரம் யாருடையது என்று தெரியும். மோதிரத்தின் ஒளியைப் பற்றி நான் முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன்!" என்றார் சோழச் சக்கரவர்த்தி.

குந்தள மன்னன் வியப்புடன் குறுக்கிட்டு, "என்னது?" என்று வினவினான்.

"ஆமாம். என் அன்னைக்குத் தாய் வீட்டுச் சீதனமாக அளிக்கப்பட்ட மோதிரம் அது. இப்போது உருவத்தின் மேலிருக்கும் வெள்ளைத் துணியையும், அதையும் வைத்து யோசித்தால் அநேகமாய் என் அன்னையாக இருக்கலாம் என்று கருதுகின்றேன்."

"நீ சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை; ஒரு பெண்ணால் அந்த அளவிற்குச் செயல்பட முடியுமா? நன்றாய் யோசித்துக் கூறு. மாளிகையின் உச்சியிலிருந்து எவ்வளவு வேகமாகவும், போர் வீரனுக்குரிய செயல் திறனுடனும், மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு அது கீழே இறங்கிற்று. இதையெல்லாம் பார்க்கும் போது பட்டத்தரசி என்று கூறுவதை நான் ஏற்பதற்கில்லை!" என்றான் விக்கிரமாதித்தன்.

"என் அன்னைக்குப் போரைப் பற்றிய சில விஷயங்கள் தெரியும் என்பது என் போன்ற சிலருக்குத்தான் தெரியும்!"

குந்தள வேந்தனுக்கு அப்போதுதான் சிந்தனை வேறு பக்கமாகத் திரும்பியது. ஏன் இவ்விதம் இருக்கக் கூடாது என்று கேள்வியை எழுப்பிக் கொண்டான்.

"இவ்வளவு தூரம் வந்துவிட்டதால், பாதாளச் சிறையைப் பார்வையிடலாம்!" என்று சோழச் சக்கரவர்த்தி கூற அனைவரும் சிறைக்கூடத்தை நோக்கி நடந்தனர்.

## அத்தியாயம் - 41

**நீ**ண்ட நாட்களுக்குப் பிறகு அந்த அறைக்குள் நுழைவதற்காக சங்கடப்பட்டாலும் நுழைய வேண்டிய அவசியம் வந்துவிட்டதால் வெள்ளை முக்காடு போட்ட உருவம் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, பட்டத்தரசியின் அறைக்குள் நுழைந்தது.

முகத்தில் பொட்டையும், தலையில் பூவையும் இழந்துவிட்டிருந்தாலும், அம்மாதரசிக்குரிய முகக்களையில் சிறிதும் குறையாமல் இலக்குமியின் அம்சம்போல் இருந்தார் பட்டத்தரசி.

காலடிச்சத்தம் கேட்டு நிமிர்ந்தார்.

அருகில் வந்து "பட்டத்தரசிக்கு வணக்கம்!" என்றது உருவம்.

பதிலுக்கு வணங்கி, "புதிய செய்தி ஏதாவது உண்டா?" என்று கேட்டார் பட்டத்தரசி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“உண்டு...” என்று சினத்துடனே கூறிய அது “உங்களைக் கொல்லும் திட்டத்திற்கு வந்துவிட்டார்கள்!” என்றது.

“சீக்கிரம் அதைச் செய்யட்டும். என் கணவர் சென்ற இடத்துக்கு நான் போய்ச் சேர்ந்துவிடுகின்றேன்.”

“தாயே, இப்படிச் சொல்லிவிட்டால் எப்படி?” சோழ நாடு பகைவர்கள் கையில் அல்லவா சிக்கிக் கொள்ளும்?” வருத்தத்துடன் அது கூற “அதற்காக நான் என்ன செய்ய முடியும்?” - சலிப்புடன் மௌனம் சாதித்தார் பட்டத்தரசி.

“தாயே, உங்களை நம்பித்தான் நாங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுகிறோம். நீங்களே சலிப்படைந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்?”

சிறிது நேரம் அமைதி நிலவ... அதைக் கலைக்கும் விதத்தில் உருவம்தான் பேசியது.

“சக்கரவர்த்தி அதிராசேந்திரர் திரும்பவும் மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருக்கின்றார். தங்கள் முயற்சியால் இராசேந்திரனுக்குச் சூடினால்தான் என்ன என்று அவர் மனதில் துளிர்த்த கருத்தை இப்போது மாற்றிக் கொண்டுவிட்டார். முதன்மந்திரி மாளிகைக்குள்ளே சிறை வைக்கப்பட்டிருக்கின்றார். எந்தக் காரணத்தைக் கொண்டும் இப்படி அப்படி என்று அவர் அசைய முடியாது. மதுரையிலிருந்து இராசேந்திரன் இங்கே வந்திருக்கின்றார். முதன்மந்திரியையும் தங்களையும் சந்திக்க அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. சிறிய தன்மபாலர் இன்னமும் சிறையில்தான் இருக்கின்றார். கங்காபுரிக் கோட்டையின் பொறுப்பு விக்கிரமாதித்தனின் கையாளான கங்கனுக்குக் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டுவிட்டது!”

“அப்படிக் கொடுப்பதால் நம் படைக்குள்ளே கலகம் தோன்றுமே?” என்றார் வருத்தமுடன்.

“ஆமாம். அதனால்தான் சக்கரவர்த்தி கூட அம்முடிவை இதுநாள் வரை தள்ளிக் கொண்டு வந்தார். ஆனால் விக்கிரமாதித்தன் நிர்ப்பந்தத்தின் பேரில் இப்போது கங்கனுக்கு வெகு சீக்கிரம் தரப்பட இருக்கிறது! மதுரையிலிருந்து கடார இளவரசி சாமந்தனுடன் திரும்பிவிட்டாள். உங்கள் இளைய மகன் அவள் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருக்கின்றார்.”

“என்னது?”

“அவருக்கு சோழ இளவரசுப் பட்டத்தைவிட கடார இளவரசியின் அழகில்தான் மோகம் அதிகமாயிருக்கிறது!”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“நல்ல பிள்ளைதான்!”

“உங்களுக்காக இல்லாவிட்டாலும் இந்தச் சோழ நாட்டிற்காக நீங்கள் உயிர் வாழத்தான் வேண்டும். அதற்காக ஒரு வேண்டுகோள். நீங்கள் எதைச் சாப்பிட்டாலும் முதலில் பூனைக்கு வைத்துவிட்டுப் பிறகு சாப்பிடுங்கள்!” பணிவுடன் கேட்டுக் கொண்டது.

“உயிர்த் தோழி அமுதவல்லி இருக்கும்வரை உண்ணும் உணவில் நஞ்சிட்டுவிட முடியாது. அதற்காக நீ கவலைப்பட வேண்டாம்!”

“இருக்கலாம். இருந்தாலும் எச்சரிக்கை தேவை என்று கூறுகின்றேன். இது விண்ணப்பம்!” என அழுத்திக் கூறிய உருவம் தன் சுண்டு விரலில் அணிந்திருந்த மோதிரத்தைக் காட்டி “இந்த மோதிரம் இல்லை என்றால் ‘நான் யார்?’ என்று தங்கள் மகனுக்குத் தெரிந்திருக்கும். அத்துடன் நானும் சிறைப்பட்டிருப்பேன்.”

அம்மோதிரத்தின் ஒளியால் ஒருகணம் கண்ணை மூடி வேறு பக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்ட அரசி, “ஆபத்துக் காலத்தில் இந்த ஒளியைப் பயன்படுத்தி தப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் சிறப்பு வாய்ந்த வைரக்கல்லை இதில் பதித்திருக்கின்றார்கள். என்னிடம் வெறுமனே கிடந்த அது இப்போது உமக்குப் பயன்படுவதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்!” என்றாள் அரசி.

“வெகு விரைவில் இது உங்களிடமே திருப்பித் தரப்படும். அந்தக் காலம் கூடிய சீக்கிரம் வரவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.”

“நல்லது!”

“நான் விடைபெறுகின்றேன் தாயே! கூடிய சீக்கிரம் நல்ல செய்தியுடன் தங்களைச் சந்திக்கின்றேன்!”

“அப்படியே ஆகட்டும்!” என்று உருவத்தை அனுப்பிய அரசி தன் தோழி அமுதவல்லியைக் கூப்பிட்டு, சோழச் சக்கரவர்த்தியை நான் பார்க்க விரும்புவதாகத் தெரிவி. அத்துடன் அவசரம் என்றும் அறிவி!” என்றாள்.

அரசியாரின் உத்தரவுடன் சோழச் சக்கரவர்த்தி இராசேந்திரன் மாளிகை நோக்கி வேகமாய் நடந்தாள் சேடி.

*****

திருமந்திர ஓலை நாயகம் சக்கரவர்த்தியின் உத்தரவு வரையப் பெற்ற ஓலையை ஒரு தரம் படித்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"இராசராச பாண்டி மண்டலத்தை ஆளும் சோழ அரசின் பிரதிநிதியான என் சிறிய தந்தையான ஆளவந்தான் அவர்களுக்கு அரசர் விடுக்கும் செய்தியாவது: இன்று முதல் நீங்கள் பாண்டிய நாடான மதுரைக்குச் சோழ அரசின் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டிருக்கின்றீர்கள். இப்போதே தாங்கள் அதை ஏற்க வேண்டும்." படித்துப் பார்த்த திருமந்திர ஓலை நாயகம், அரசர் உத்தரவு! என்று அதில் கையப்பமிட்டார்.

அடுத்த ஓலை நறுக்கில்...

"அரசர் விடுக்கும் செய்தி: வேங்கி நாட்டு இளவரசராயிருந்த இராசேந்திரனுக்கு, இதைக் கண்ணுற்ற அடுத்தகணமே, தாங்கள் வேங்கிப் பகுதியிலிருக்கும் சோழப் படைக்குத் தலைமை தாங்க வேண்டும்!"

அதற்கும் கையப்பமிட்ட திருமந்திர ஓலைநாயகம் விடையில் அதிகாரியைக் கூப்பிட்டு, இரு ஓலைகளையும் உரியவர்களிடம் சேர்ப்பித்துவிடும்படி உத்தரவிட்டான்.

அதைப் பெற்றுக் கொண்ட அதிகாரி அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அங்கிருந்து அகன்றான்.

உத்தரவுகள் ஓலை மூலம் அவரவருக்குச் சேர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டது என்ற செய்தியை அறிந்த சோழச் சக்கரவர்த்தி அடுத்து மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டுவதற்கான முயற்சிகளைச் செய்ய முனைந்த போது...

பெரிய அரசியாரின் சேடி வந்து அவசரமாக அழைப்பதாகக் கூறினாள்.

இது என்ன புதிதாய்? போய்ப் பார்த்துவிட்டு மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டும் விஷயத்தையும் சொல்லிவிடலாம் என்று அவரின் மாளிகை நோக்கிச் சென்றார்.

"வா, அதிராசேந்திரா!"- தனக்கு எதிரே இருந்த இருக்கையைக் காண்பித்துச் சொன்னார்.

"என்ன அவசரமாகக் கூப்பிட்டீர்களாமே?"

"ஆமாம்! முதலமைச்சரை ஏன் வீட்டிற்குள்ளேயே இருக்கும்படிக் கூறிவிட்டாய்?"

"காரணம் கருதித்தான். உரிய நேரம் வரும்வரை அவர் உள்ளேயே இருக்க வேண்டியது மிகவும் அவசியமாய்ப் போய்விட்டது."

"எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை!"

"பிடிக்காத விஷயங்கள் சில நடக்க நீங்கள் அனுமதிக்கத்தான் வேண்டும்!"

"அப்படி என்ன அனுமதி? பிரமாதிராசரைவிட உனக்கு நம்பிக்கைக்குரியவர் இந்த நாட்டில் வேறு யாராவது இருக்கிறார்கள் என்று நீ உறுதியாகச் சொல்ல முடியுமா?"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"என் தந்தை இருக்கும் வரை நம்பிக்கைக்கு உரியவராகத்தான் இருந்தார். இப்போது எனக்கு எதிராகச் செயல்படுகிறார்."

"அதை உன்னால் நிரூபிக்க முடியுமா?"

"பல விஷயங்களில். காலம் கனியும் போது எல்லாம் வெளிப்படத்தான் போகிறது."

"சிறிய தன்மபாலரை நீ இன்னும் சிறையிலிருந்து விடுதலை செய்யவில்லை. அவர்கள் சோழ நாட்டிற்காகச் செய்த தியாகங்கள் எத்தனை? இந்த மாதிரி தியாக சீலர்களின் வெறுப்பையெல்லாம் பெற்றுக் கொண்டு, நீ எத்தனை நாளைக்கு ஆட்சி புரிய முடியும்?"

"மன்னிக்க வேண்டும் தாயே. சிறிய தன்மபாலர் இராசத்துரோகக் குற்றத்திற்காகச் சிறை வைக்கப் பட்டிருக்கின்றார்!"

பெரிய அரசியாருக்குச் சீற்றம் மிகுந்தது. "அவர் செய்த இராசத்துரோகக் குற்றம்தான் என்ன?"

அதிராசேந்திரன் மௌனம் சாதித்தான்.

"உனக்கு வேண்டாதவர்களையெல்லாம் இராசத்துரோகம் என்று வீண் குற்றம் சுமத்தி, அவர்களைச் சிறையில் தள்ளுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது!"

"தற்சமயம் குற்றத்தை நிரூபிக்க முடியாத நிலையில் இருக்கின்றேன். உரிய நேரம் வரும்போது இவர்களின் உண்மை உருவம் வெளிப்படத்தான் போகிறது!"

"அதிராசேந்திரா! உனக்குத் துர்ப்போதனைகள் செய்யும் ஆட்களின் எண்ணிக்கை கூடிவிட்டதாக நான் உணருகிறேன். இதனால் உனக்குத் தீமையைத்தவிர நன்மை ஏதும் விளையப் போவதில்லை!"

"உங்களுக்கு அது துர்ப்போதனைகளாக இருக்கலாம். ஆனால் எனக்கு? என் உயர்வில்... என் வெற்றியில் நாட்டக் கொண்ட நல்லிதயங்கள் கூறும் அறிவுரைகளாக நினைக்கின்றேன்!"

பெரிய அரசியாரிடமிருந்து வேதனை கலந்த சிரிப்பு வெளிப்பட்டது.

"யார் நல்லவர்? யார் கெட்டவர் என்று பிரித்துப் பார்க்க முடியாத சிறு குழந்தையாயிருக்கின்றாய். இதைவிட துர்ப்பாக்கிய நிலை எனக்கு வேறு என்ன வேண்டும்? உன்னைப் பெற்ற தாய் என்பதால் கூறுகின்றேன். அவர்களை விலக்கிவிட வேண்டும்!"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"அவர்களை விலக்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்! ஆனால் துர்ப்போதனைகள் என்று சொல்கிறீர்களே அப்படி ஒன்றை நீங்கள் உதாரணங்காட்டிக் கூற முடியுமா?"

பெரிய அரசி அதிராசேந்திரனை ஒருமுறை மேலும் கீழும் நோட்டம்விட்டார்.

"அவசியம் சொல்லத்தான் வேண்டுமா?"

"ஆமாம்!"

"என்னை நஞ்சிட்டுக் கொல்ல உனக்குச் சொன்ன யோசனையை எந்தப் போதனையில் சேர்ப்பது?"

அதிராசேந்திரர் திகைத்துவிட்டார்! இந்த விஷயம் இவர்களுக்கு எப்படித் தெரிந்தது? அப்படியென்றால் வெள்ளை உருவத்தில் நடமாடியது இவர்கள்தான் என்று நான் முடிவு செய்தது மிகவும் சரியாகிப் போய்விட்டது!

"என்ன இராசேந்திரா, மௌனம் சாதிக்கின்றாய்? பெற்ற அன்னைக்கு விஷமிட்டுக் கொல் என்று சொல்லும் அவர்களின் முகத்தில் நீ விழிக்கலாமா? இப்படி யோசனை கூறும் அவர்கள் உன் நல்வாழ்வில் அக்கறை கொள்பவர்கள் என்று சொல்வதை என்னால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? முதலில் விக்கிரமாதித்தனையும் இராஜசுந்தரியையும் குந்தள நாட்டிற்கு அனுப்பி வை. கலகக்காரரான சயங்கொண்ட சோழ இருக்குவேளை கொடும்பாளூருக்கு அனுப்பு..."

சோழ மன்னர் இடைமறித்தார்.

"இவர்களையெல்லாம் அனுப்பிவிட்டு, என்னைத் தனிமையில் தவிக்கச் சொல்கிறீர்களா?"

"ஏன், நான் இல்லை? முதலமைச்சர் பிரமாதிராசர் இல்லை. இதைவிட என்ன வேண்டும் உனக்கு?"

அதிராசேந்திரர் சிரித்து "சயங்கொண்ட சோழ இருக்குவேளும், குந்தள மன்னரும், உங்கள் சிறிய மகன் மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி முடித்ததும் இங்கிருந்து போய்விடுவார்கள்!" என்றார்.

பெரிய அரசியாருக்கு முகத்தில் அதிர்ச்சிக் குறி நிலவியது. "இராசேந்திரனுக்கு அல்லவா இளவரசுப் பட்டம் கட்ட வேண்டும் என்று சொன்னேன். மறைந்து போன நம் சக்கரவர்த்தியின் விருப்பம் கூட அதுதானே."

"இல்லை என்று நான் மறுக்கவில்லை. ஆனால் நாட்டின் சூழ்நிலையை அனுசரித்து என்னால் இந்த முடிவுக்கு வரப்பட்டது. அத்துடன் இராசேந்திரனுக்கு இளவரசுப் பட்டம்


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கட்டுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. தயவு செய்து இதற்கு மேல் இந்த விஷயத்தை நீங்கள் வற்புறுத்த வேண்டாம்!"

"அப்படியென்றால் என்னை நஞ்சிட்டுக் கொன்றுவிட்டு அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிடு."

"தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் வேண்டாம் என்று கூறும் ஒரு விசித்திரத் தாயை இந்த உலகத்தில் உங்களைத் தவிர வேறு யாரையும் பார்க்க முடியாது."

"அப்படித்தான் வைத்துக் கொள். இராசேந்திரா! பெற்ற மகனைவிட இந்தச் சோழ நாடு எனக்கு முக்கியமாகப்படுகிறது. அத்துடன் மறைந்துவிட்ட கணவரின் ஆசையை நிறைவேற்றுவதும் என்னுடைய கடமையாகப் போய்விட்டது."

"இதை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை என்பதைத் தவிர தற்சமயம் வேறு ஒன்றும் கூற முடியாத நிலையிலிருக்கின்றேன் நான்!"

"இதற்காகவா மகனே உன்னை அரசு கட்டிலில் ஏற்றினோம்?"

"தந்தைக்குப் பின் தனயன் என்ற முறைப்படி எனக்கு அரசு கட்டில் கிடைத்திருக்கிறது. மற்றபடி நீங்கள் மனமுவந்து தரவில்லை!" - அதிராசேந்திரர் குரலில் கோபம் இழைந்திருந்தது.

"இனிமேல் உன்னிடம் பேசுவதற்கு ஒன்றும் இல்லை; உன் விருப்பப்படியே செய். இந்தச் சோழ நாட்டிற்கு இனி நல்ல காலம் இல்லை. அழியப் போகும் இந்த சாம்ராஜ்யத்தை அந்த அழிவிலிருந்து காப்பது யார்? கடவுளுக்குத்தான் வெளிச்சம்!" - வருத்தமுடன் கூறிய அரசியாரின் விழிகள் கலங்கின. அங்கே நின்றால் தன் மனமும் வருத்தத்தில் அழும் என்று உணர்ந்த அதிராசேந்திரர்,

"வருகிறேன் தாயே! உரிய நேரத்தில் உங்கள் விருப்பங்கள் ஒவ்வொன்றும் நிறைவேற்றி வைக்கப்படும். வீணாக வருந்த வேண்டாம்" என்று அங்கிருந்து அகன்றார்.

## அத்தியாயம் - 42

இரவு நேரம்...

அரச உத்தரவைப் பெற்றுக் கொண்ட இராசேந்திரன் மெல்லச் சிரித்துக் கொண்டான்.

அரசரைப் பார்க்க வேண்டும் என்று செய்தி அனுப்பினால் அவர்கள் எனக்கு இங்கிருந்து வேங்கி எல்லைக்குப் போ என்று உத்தரவு அனுப்புகிறார்கள். இதிலிருந்து



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

எனக்கு எவ்வளவு மதிப்பு தரப்படுகின்றது என்று புரிகிறது. மொத்தத்தில் தற்போதைய சோழ அரசருக்கு என்னைப் பிடிக்கவில்லை. அதனால் கண்மறைவாக கொஞ்ச நாளைக் இருந்துவிடுவதே தேவலை என்று தோன்றியது.

"என்ன செய்யலாம்?" - காரனை விழுப்பரையனுடன் ஆலோசித்தான் இராசேந்திரன்.

"இங்கிருந்து போவது எனக்கு உசிதமாய்ப்படவில்லை!" என்றான் அவன்.

"இங்கிருந்தால் அரச கட்டளையை மீறிய குற்றத்திற்கு ஆளாக வேண்டி வருமே?"

"அதுவும் உண்மை. ஆனால் தற்போது நிலவும் சூழலைப் பார்த்தால் வெகு சீக்கிரமே இங்கு ஒரு மாற்றம் ஏற்படும் போல் தெரிகிறது."

"எப்படிச் சொல்கிறாய் விழுப்பரையா?"

"வலங்கை, இடங்கைப் பிரிவு மறுபடியும் சோழப்படையில் தலைதூக்கும் போல் தெரிகிறது!"

"அப்படித் தலைதூக்கினால் கடுமையான நடவடிக்கை மூலம் அடக்கிவிடலாமே!"

"அடக்கிவிடலாம். ஆனால் அடக்குவது யார் என்பதுதான் கேள்வி! தற்போதைய அரசருக்கு ஆலோசனை கூற நிறைய பேர். கும்பல் பெருத்தால் கூச்சல் பெருகும் என்பார்கள்! அது போல..." என்று அவன் கூறும்போதே, யாரோ நடந்து வரும் காலடியோசை கேட்டது.

"யார் அது?"

"நான்தான் வீரசோழ இளங்கோ வேளான்."

"ஓ! அரசரின் மெய்க்காப்பாளரோ?" என்று காரனை விழுப்பரையன் கேலியுடன் கூற, "இல்லை, சோழ நாட்டின் தளபதி" என்றான் பெருமிதத்தோடு.

"எப்போதிலிருந்து?" என்ற கேள்விக்குறியுடன் இராசேந்திரன் அவனை உற்று நோக்கினான்.

"முந்தின தளபதி இருக்கும் இடம் தெரியவில்லை. அதனால் எனக்கு அந்தப் பதவியைத் தந்திருக்கின்றார்கள்." அவன் குரலில் அழுத்தமும் அத்துடன் கர்வமும் தலைதூக்கியது.

"சந்தோஷம். அதிரசம் ஏதாவது கொடுத்துச் சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றான் காரனை விழுப்பரையன்.

"அதிரசம்தானே! இதோ தருகின்றேன்" என்று ஓலை நறுக்கை நீட்டினான் வேளான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதில் காரனை விழுப்பரையனைக் கைது செய்யும் அரச உத்தரவு இருந்தது.

"எதற்காக என்னைக் கைது செய்ய வேண்டும்? நான் என்ன குற்றம் செய்தேன்?"- ஆவேசத்துடன் கத்தினான் காரனை விழுப்பரையன்.

அதற்குள் உருவிய வாட்களுடன் பத்து வீரர்கள் அறைக்குள் நுழைந்து ஓரமாக நின்று கொண்டனர். இராசேந்திரன் அவர்களைப் பார்த்தபடி...

"காரணம் இல்லாமல் காரனை விழுப்பரையனைக் கைது செய்வது வெட்கக்கேடான விஷயம்" என்றான்.

"காரணம் இருக்கின்றது. இடங்கைப் பிரிவைச் சேர்ந்த விழுப்பரையன் சோழர் படையில் பிளவை உண்டு பண்ண முயற்சி செய்தார்!"

"உன்னால் நிரூபிக்க முடியுமா?"

"சோழ ஒற்றர்களிடமிருந்து வந்த செய்தியைவிட வேறு சான்று வேண்டுமா?" என்று கேட்டபடி அவர்களை நெருங்கினான் வீரசோழ இளங்கோ வேளான்.

"சரியான கோமாளித்தனமாக இருக்கின்றது!" ஆத்திரத்துடன் காரனை விழுப்பரையன் உரத்த குரலில் கூற.. வீரர்கள் பக்கம் திரும்பிய வீரசோழ இளங்கோ வேளான், "ஏன் நிற்கின்றீர்கள். விழுப்பரையன் கையில் விலங்கிடுங்கள்!" என்றான் அதிகாரக் குரலில்.

வீரர்கள் அவனை நெருங்கவும், இராசேந்திரன் வாளை உருவிக் கொண்டு விழுப்பரையன் முன் நின்று கொண்டான். "யாரும் அவனைக் கைது செய்யக் கூடாது. அப்படி கைது செய்வதாயிருந்தால் முதலில் என்னுடன் போரிடுங்கள்" என்றான் ஆவேசமாக.

முன்னால் சென்ற வீரர்கள் திகைத்து நின்றுவிட்டனர்.

"இது அரச உத்தரவு. அதை நீங்கள் தடுத்தால் இராஜத்துரோகக் குற்றத்திற்கு உள்ளாவீர்கள்" என்றான் இளங்கோ வேளான் கடுமையாய்.

"எனக்கும் தெரியும். ஆனால் நீதிக்காக அரச உத்தரவை மீறுவதில் தவறில்லை!" என்றான் பதிலுக்கு.

"தாங்கள் கலகம் செய்யும் நோக்கில் இருந்தால், பின்னால் நடக்கும் எந்த நிகழ்ச்சிக்கும் தங்களைத்தான் என்னால் பொறுப்பாக்க முடியும்" என்று கூறியபடி வீரஇளங்கோ வேளானும் வாளை உருவிக் கொண்டான்.

அந்தச் சிறிய அறையில் பெரும் குழப்பம் நிகழ இருந்த அந்த நேரத்தில்...

"இராசேந்திரா!" என்ற குரல் கேட்டது. அனைவரும் திரும்பினர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சோழச் சக்கரவர்த்தி அதிராசேந்திரர் வாயிற்புரத்தில் நின்று கொண்டிருந்தார்.

அவரைக் கண்டதும் சோழ இளங்கோ வேளான் ஒதுங்கிக் கொண்டான்.

அறைக்குள் நுழைந்த அதிராசேந்திரர் "இம்மாதிரி ஏதாவது நடக்கும் என்று தெரிந்துதான் நானே இங்கு வந்தேன்" என்று புன்முறுவலோடு இராசேந்திரனை நோக்கி நடந்து வந்தார்.

நிசப்தமாக இருந்த அந்த நேரத்தில், அவரின் காலடி ஓசை அறையெங்கும் ஒலித்தது.

"காரனை விழுப்பரையனக் கைது செய்வதில் உனக்கென்ன ஆட்சேபம்?"

"அக்கிரமமான முறையில் இவர் கைது செய்யப்படுவதைத்தான் எதிர்க்கின்றேன்."

"இரகசியங்கள் இரகசியமாகவே இருக்க வேண்டும். காரனை விழுப்பரையனைப் பற்றி நிறைய குற்றச்சாட்டுக்கள் நம் பார்வைக்கு வந்துள்ளன. எந்நிலையில் நீ இருந்தால், இந்நேரம் அவன் சிரத்தையறுப்பதற்கு உத்தரவிட்டிருப்பாய்."

"மிகுந்த நம்பிக்கைக்குரியவன் என்று தங்களின் தந்தையால் பாரட்டப்பட்டவரா இப்போது இராசத்துரோகக் குற்றம் புரிந்துவிட்டார்?"

"ஆமாம். அவர் இருந்த போது நாட்டின் நிலை வேறு! இப்போது இருக்கும் நிலை வேறு. உன் உடம்பில் சோழ இரத்தம் ஓடுகிறது. அதனால் சோழ ஆட்சிக்கு எதிராக நீ குழப்பம் செய்யமாட்டாய் என்று நம்புகிறேன்! உண்மையான சோழ வம்சத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் இந்த நாட்டிற்காக உயிரைத் துறக்கத் துணிவானே தவிர, அதற்கு எதிராக வாளை உருவிடமாட்டான்!"

"இல்லை என்று நான் மறுக்கவில்லை..." -மேற்கொண்டு பேச முயன்ற இராசேந்திரனை சக்கரவர்த்தி இடைமறித்து, "இப்போது ஏற்பட்டிருக்கும் ஆபத்தான நிலையைக் கருதித்தான் வேங்கி நாட்டு எல்லையில் உள்ள நம் சோழப்படைக்குப் பொறுப்பேற்க உன்னை அனுப்பியுள்ளேன். அதை நிறைவேற்ற உடனே புறப்படும்படி உனக்கு அன்புக் கட்டளை இடுகின்றேன்" என்றார்.

"புறப்பட எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் காரனை விழுப்பரையனை அநீதியாகச் சிறையில் தள்ளுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது."

"அவன் புரிந்த குற்றம் அப்படி!"

"இல்லை, இது வீண் பழி என்று நான் கருதுகின்றேன்!"

சோழச் சக்கரவர்த்தி மெல்ல சிரித்துக் கொண்டார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“உன்னால் கங்கைகொண்ட சோழபுரத்தில் வீண் கலகம் ஏற்பட்டதென்று அவப்பெயர் வேண்டுமா? அதற்காகத்தான் நீ இந்தச் சோழக் குருதியில் தோன்றினாயா?”

“கலகத்துக்கு நான் காரணமாகமாட்டேன்! இதை உறுதியாக நீங்கள் நம்பலாம். ஆனால் காரனை விழுப்பரையனை உங்கள் கரங்களில் அநியாயமாக ஒப்படைத்துவிட்டு வெறும் கையோடு என்னால் வேங்கி எல்லைக்குப் போக முடியாது!”

“அதற்காக என்னை என்ன செய்யத் சொல்கிறாய்?” என்றார் சக்கரவர்த்தி சீற்றம் மிகுந்த குரலில்.

“வேண்டுமானால் காரனை விழுப்பரையனை என்னுடன் அனுப்பிவிடுங்கள்; எனக்குத் துணையாக இருக்கும்!”

“குற்றம் புரிந்தவனை உன் கூட அனுப்புவது எந்த நீதியில் இருக்கிறது?”

“அவன் என்ன குற்றம் புரிந்தான் என்று எனக்குத் தெரிய வேண்டும்!”

“சோழப்படையிலுள்ள இடங்கைப் பிரிவினரை எனக்கு எதிராகக் கலகம் புரியும்படி தூண்டினான். இதைவிட வேறு சான்று என்ன வேண்டும்?”

அதைக் கேட்ட இராசேந்திரன் காரனை விழுப்பரையன் பக்கம் திரும்பி, “என்ன சொல்கிறாய் சக்கரவர்த்தி குற்றச்சாட்டிற்கு!” என்று கேட்டான்.

“இதை நான் மறுக்கிறேன். என்னைப் பிடிக்காதவர்கள் எனக்கு எதிராகப் பொய்யாய்த் திரிக்கப்பட்ட கதை.”

“இல்லை. பொய் சொல்கிறான்!” - ஆவேசத்துடன் இளங்கோ வேளான் இடைமறிக்க...

சோழச் சக்கரவர்த்தி குறுக்கிட்டு “இரவு நேரத்தில் ஏன் வீண் குழப்பம்? காரனை விழுப்பரையனை உன்னுடன் அனுப்ப வேண்டும். அவ்வளவுதானே?” என்று இராசேந்திரனைப் பார்க்க, “ஆமாம்!” என்றான் அவன்.

“வழிவிடுங்கள்! இருவரும் வேங்கி எல்லைக்குப் போகட்டும்!” என்று அதிராசேந்திரர் உரத்த குரலில் கூறினார்.

சற்று நேரம் கழித்து இராசேந்திரனும் காரனை விழுப்பரையனும் கங்காபுரிக் கோட்டையைவிட்டு வேங்கி எல்லை நோக்கிப் பயணமாயினர்.

அவ்விதம் பயணமாகும் போது...

தான் வளர்ந்த கங்காபுரியை அவன் திரும்பிப் பார்த்தான். இருளில் கங்கைகொண்ட சோழேச்சுவரத்தின் கோபுரம் தெரிந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தான் பிறந்து வளர்ந்து ஆளாகிய அந்த மண்விட்டுப் பிரியும் நிலை வந்துவிட்டதை எண்ணிப் பார்க்கின்றான்.

விழிகளில் நீர் சுரக்கின்றது.

அதைத் துடைத்தபடி குதிரையை வேகமாகச் செலுத்தலானான் இராசேந்திரன்.

புரவிகள் இரண்டும் சோழகங்கம் ஏரிக்கரையின் மீது சென்று கொண்டிருந்தன.

இராசேந்திரனுக்குத் தாங்க முடியாத மனத்துன்பம் மிகுந்துவிடவே, குதிரையை மிக வேகமாகச் செலுத்தாமல் அதன் போக்கின்படி போகவிட்டான்.

பக்கத்தில் வந்து கொண்டிருந்த காரனை விழுப்பரையன் கங்கைகொண்ட சோழபுரத்தைவிட்டு இராசேந்திரனைப் போகச் சொல்லிவிட்டதால் ஏற்பட்ட மனக்குழப்பத்தின் காரணமாகவே குதிரையை மெல்ல செலுத்துகின்றான் என்பதையுணர்ந்து அதற்கேற்றார் போல் அவனும் குதிரையின் வேகத்தை அடக்கிக் கொண்டான்.

இரு புரவிகளும் கலங்கல் செல்லும் பெரிய மேடையின் பக்கம் வரும்போது, வானத்திலிருந்த நட்சத்திரங்கள் மறைந்து, கரிய மேகங்கள் ஒன்று திரள ஆரம்பித்தன. இலேசான குமுறலோடு மின்னலும் பளிச் பளிச் சென்று தெரிந்தது.

“மழை வரும் போலிருக்கிறதே!” -காரனை விழுப்பரையன் ஆகாயத்தைப் பார்த்தவாறு கூறினான்.

அவன் சொல்வதற்கு ஏற்றபடி வானிலிருந்து ‘பொட் பொட்’ என்று மழைத்துளிகள் அவர்கள் மீது விழுந்தன.

“வெறும் தூறல்கள்தான். அதற்குள் நாம் பழையாறையை நெருங்கிவிடலாம்!” என்று புரவியை வாரினால் அடித்தான் இராசேந்திரன்.

அது நான்கு கால் பாய்ச்சலில் அங்கிருந்து கிளம்பத் தயாராகவும் அவர்கள் மீது விழுந்த மழைத்தூறல்கள் பலத்து வேகமாய் விழ ஆரம்பித்தன.

“பலமாக வருகிறதே! சற்று ஒதுங்கிச் செல்வோமே!” காரனை விழுப்பரையன் அவசரப்பட்டான்.

அதற்கு ஏற்றார் போன்று இடியும், மின்னலுமாக பெருமழையாய்ப் பெய்ய ஆரம்பித்தது. ஒதுங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில், கலங்கல் மடைப்பக்கமிருந்த மண்டபத்தில் புரவியுடன் இருவரும் ஒதுங்கி நின்றனர். மழை இன்னும் வேகமாகப் பெய்யத் தொடங்கியது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"சீக்கிரம் போய்விடலாமென நினைத்தால் மழை வந்துவிட்டதே!" -இராசேந்திரன் ஆகாயத்தை நோக்கினான்.

அது இரண்டு பிரிவாய்ப் பிரிவது போல மின்னல் ஒன்று அடிவானம் வரை வேகமாய்ப் பெரிய ஒளிக்கோடு போட்டபடி நெளிந்து மறைந்தது. அதன் ஒளி கண்ணைக் கூச வைக்க, வேறு பக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

அப்போது...

பளீரென பளிச்சிட்ட மின்னலில் இவர்களிருந்த மண்டத்தை நோக்கி குதிரையில் ஒருவன் வேகமாய் வந்து கொண்டிருந்தான்.

அவன் யார் என்று கவனிப்பதற்குள் மின்னல் மறைந்து அப்பகுதியெங்கும் இருட்டில் மூழ்கியது.

காரனை விழுப்பரையன் பக்கம் திரும்பிய இராசேந்திரன், "நாம் இருக்கும் இடத்தை நோக்கி குதிரையில் ஒருவன் வருவதைப் பார்த்தேன்!" என்றான்.

"உண்மையாகவா?"

"ஆமாம்! இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வரப் போகின்றான் பார்!" - இராசேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது, இருவர் செவிகளிலும் குதிரையின் குளம்பொலி சப்தம் விழுந்தது.

"யாராக இருக்கும்? ஒருவேளை நம்மைக் கைது செய்வதற்காக வீரர்கள் அனுப்பப்படுகின்றார்களா?" - சற்றுக் கோபத்துடன் கேட்டவாறு, காரனை விழுப்பரையன் வாளின் மீது கை வைத்தான்.

மழையில் முழுவதும் நனைந்து போய், குதிரையுடன் மண்டபத்திற்குள் நுழைந்த அந்த உருவத்தைக் கண்டு, விழுப்பரையனின் கை வாளின் மீதிருந்து அகன்றது.

"நீங்களா?" - என்றான் இராசேந்திரன்.

"ஆம்! நான்தான்!" -முகத்தில் வழிந்த மழை நீரைத் துடைத்துக் கொண்டே மேலாடையைக் கழற்றிப் பிழிந்த சோழ நாட்டின் துணைத்தளபதியாயிருந்த சிறிய தன்மபாலர், "நீங்கள் எப்படி இந்த நேரத்தில் இங்கே வந்தீர்கள்?" என்றார்.

"வேங்கி எல்லையில் உள்ள சோழப்படைக்குத் தலைமை தாங்கிப் போகும்படி எங்களுக்கு அரச உத்தரவு! அதனால் புறப்பட்டுவிட்டோம்!"

"இந்தக் கடுமையான மழையிலா?"

"அரசர் எங்களுக்கு உத்தரவிடும்போது மழையில்லை; கோட்டையைவிட்டு நாங்கள் வெளியேறும் போதுதான் மழை பிடித்துக் கொண்டது."



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"என்ன இருந்தாலும் இரவு நேரத்திலா உங்களை கோட்டையிலிருந்து போகச் சொன்னார்?"

"ஆமாம்! நீங்கள் எப்படி மழை நேரம் பார்த்து இங்கு வந்தீர்கள்?"

"என்னைச் சிறையில் வைத்திருந்தார்கள். தப்பிக்க இது நல்ல தருணமாக இருந்ததால் பயன்படுத்திக் கொண்டேன்" என்ற சிறிய தன்மபாலர் "வெகு சீக்கிரம் நாம் இங்கிருந்து போய்விட வேண்டும். இல்லையென்றால் என்னைத் தேடிவரும் வீரரின் பார்வையில் நாம் அகப்பட்டுக் கொள்ள வேண்டி வரும்" என்று பிழிந்த ஆடையை மேலே போர்த்திக் கொண்டு குதிரையின் அருகில் சென்று தட்டிக் கொடுத்தார்.

அந்தச் சமயத்தில் தீப்பந்தத்தின் ஒளி ஒன்று தெரிந்தது.

விழுப்பரையன் பதற்றத்துடன் "தீப்பந்த ஒளி தெரிகிறது. அநேகமாய் நம்மைத் தேடும் வீரர்களாயிருக்கலாம்" என்றான்.

குதிரையைத் தட்டிக் கொடுத்தபடியிருந்த சிறிய தன்மபாலர் திரும்பி அந்த ஒளியை உற்றுக் கவனிக்கலானார். கொஞ்ச நேரம் அவர் கண்கள் அசையாமல் நின்றன. பிறகு மூச்சுவிட்டபடி "நீங்கள் நினைப்பது போல் இல்லை!" என்றார்.

"இல்லையா?"

"ஆமாம். அந்தத் தீப்பந்தத்தைப் பிடித்துக் கொண்டு வருவது நம்முடைய நண்பர். இன்னும் கொஞ்ச நேரத்தில் தெளிவாகப் போகிறது" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த தீப்பந்த ஒளி மண்டபத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அடிக்கடி மின்னியபடியிருந்த மின்னல் வெளிச்சத்தில் தீப்பந்தத்தைப் பிடித்திருந்த உருவம் இராசேந்திரன் கண்களுக்குப் புலனாகவே செய்தது.

இது என்ன விசித்திரம். தலையில் வெள்ளை முக்காடு. கையில் தீப்பந்தம். யாராக இருக்கும்? என்று அவன் உருவத்தைக் கூர்ந்து கவனிப்பதற்குள், மின்னல் வெளிச்சம் மறைந்துவிடவே, 'அடடே! நல்ல நேரத்தில் இருள் சூழ்ந்துவிட்டதே!' என்ற ஆதங்கத்துடன் மங்கலாகத் தெரிந்த பந்த ஒளியில் உருவத்தை உற்றுக் கவனித்தான்.

வேகமாய் நடந்து வந்த உருவம் சடக்கென்று மண்டபத்தின் இடப்பக்கத்திலிருந்த பெரிய ஆலமரத்தின் பின்பு மாயமாமாய் மறைந்து கொண்டது. சிறிய தன்மபாலர், "நீங்கள் இருவரும் இங்கேயேயிருங்கள்! நான் பார்த்துவிட்டு வந்துவிடுகின்றேன்" என்று ஆலமரத்தை நோக்கி ஓடினார்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வெள்ளை முக்காடு உருவம் தன் இயல்பான கரகரப்புக் குரலில், "மண்டபத்தில் இருவர் இருக்கிறார்களே?" என்று கேட்க, "இராசேந்திரனும், காரனை விழுப்பரையனும்தான்" என்றார் சிறிய தன்மபாலர்.

"நல்லது. என்ன விஷயமாக அவர்கள் இங்கே வந்தார்களாம்?"

"இருவரையும் வேங்கி எல்லையில் உள்ள நம் சோழ படைக்குத் தலைமை தாங்க அரசர் அனுப்பியிருக்கின்றாராம்."

வெள்ளை முக்காடிட்ட உருவம் பரபரப்படைந்தது.

"நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது. இராசேந்திரனை இங்கிருந்து அனுப்ப அவர்கள் திட்டம் போட்டுவிட்டார்கள். அத்திட்டத்தை நடத்த நாம் விடக்கூடாது!"

சிறிய தன்மபாலருக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன்?" என்று வினவினார்.

"கூடிய சீக்கிரம் மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட தீர்மானித்துவிட்டார்கள். அத்துடன் வலங்கை இடங்கை என்று சோழர் படையில் பிரிவெண்ணம் தூக்கியிருக்கிறது. இடங்கைப் பிரிவினர் மறைந்த சோழச் சக்கரவர்த்தியின் கருத்துப்படி இராசேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட வேண்டுமென்று வெளிப்படையாகக் கூறி வருகின்றனராம். அதனால் இந்நேரத்தில் இராசேந்திரன் கோட்டைக்குள் இருந்தால் ஏதாவது கலகம் நிகழ்த்தி இளவரசனாக்கி விடப் போகிறார்கள் என்று பயந்து அப்புரப்படுத்தும் எண்ணத்தில் வேங்கிக்கு அனுப்புகின்றார்கள்."

"இப்பொழுதே போய் இராசேந்திரனிடம் வேங்கிக்குப் போக வேண்டாம் என்று தெரிவித்து வருகின்றேன்" என்றார் சிறிய தன்மபாலர் அவசரமாக.

"உடனே அதைச் செய்துவிடு. நீங்கள் மூவரும் நான் சொல்லுமிடத்தில் இரகசியமாகத் தங்கியிருங்கள். இராசேந்திரன் வேங்கிக்குப் போனதாகவே சோழ அரசன் எண்ணிக் கொண்டிருக்கட்டும். அதற்குள் முதன்மந்திரியைக் கலந்து சில ஏற்பாடுகள் செய்து வைக்கின்றேன். இன்னும் சில நாட்களில் இங்கே பெரிய மாற்றம் நிகழப் போவதாக என் உள்மனம் சொல்லிக் கொண்டிருக்கிறது. அவ்விதம் நிகழும்போது பழையாறைக்குச் செய்தி அனுப்புகின்றேன். அப்போது நீங்கள் மூவரும் தாமதிக்காமல் கங்கைகொண்ட சோழபுரம் வந்து சேருங்கள்" என்ற உருவம் காற்றினால் தலையிலிருந்து சரிந்த முக்காடை பழையபடி இழுத்துச் சரி செய்து கொண்டது.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“நான் சீக்கிரம் திரும்பிவிட வேண்டும். பழையாறைக்குப் போவதற்கு இராசேந்திரன் சம்மதிக்கின்றாரா? என்பதைத் தெரிந்து கொண்டு வா!” என்று அவசரப்பட்டது உருவம்.

சிறிய தன்மபாலர் மண்டபத்தை நோக்கித் திரும்பினார்.

விஷயத்தை இராசேந்திரனிடம் அவர் சொன்னதும், “அரச உத்தரவை மீறுவதற்கு இல்லை. வேங்கிக்குப் போய்த்தான் தீர வேண்டும்!” என்றான் உறுதியாக.

‘இது என்ன வம்பு?’ என்று திகைத்த சிறிய தன்மபாலர், “நாட்டில் நிலவும் குழப்பத்தை அனுசரித்து நாங்கள் எடுக்கும் முடிவுக்கு நீங்கள் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்!” என்றார் அழுத்தமான குரலில்.

இராசேந்திரனுக்கு என்ன செய்வதேன்றே புரியவில்லை. சற்றுச் சிந்தனை வயப்பட்டு சிறிய தன்மபாலர் பக்கம் திரும்பினான்.

“என் உடம்பில் சோழ இரத்தம் ஓடுகிறது. என்னால் இங்கே கலவரமும், அதன் விளைவாய்ப் பெரும் குழப்பமும் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அதனால் வேங்கிக்குப் போய்விடுவதே நல்லதாகப்படுகிறது!”

சிறிய தன்மபாலருக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. ஆலமரத்தை நோக்கி ஓடினார்.

“என்ன ஆயிற்று?” என்று உருவம் வினவ...

“இராசேந்திரர் அரச உத்தரவை மீறுவதற்கு இல்லை என்று திட்டமாய்க் கூறிவிட்டார்.”

“அவரை வேங்கிக்குப் போகவிடக் கூடாது. அதனால் இராசேந்திரரை மட்டும் இங்கு அழைத்து வா! பேசி பார்க்கிறேன்!” என்றது.

அதற்குத் தலையசைத்து சிறிய தன்மபாலர் மண்டபத்திற்கு ஓடிச் சென்று இராசேந்திரனிடம் தெரிவித்தார். காரனை விழுப்பரையனை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு சிறிய தன்மபாலருடன் ஆலமரத்தை நோக்கி நடந்தான். தீப்பந்த ஒளியில் வெள்ளை முக்காட்டிற்குள் அந்த உருவம் அவனது கண்களுக்குப் புலனாகியது.

உற்றுப் பார்த்தான்.

மார்பில் அரைமுழ அளவிற்கு வெட்டுக் காயமிருந்த வடு. ஆகா! இந்த வடு... இந்த வடு... என்று அவன் தலையைச் சொறிந்து யோசனை செய்யும் போது, பலமாய் வீசிய பெருங்காற்றால் உருவத்தின் முக்காடு விலகிவிட உருவத்துக்கு உரியவர் யாரென்று



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவனுக்கு விளங்கிவிட்டது. ‘இவரா? சோழ நாட்டிற்காகப் பல தியாகங்கள் செய்த இவரா? இவர் ஏன் இந்த உருவில் உலவ வேண்டும்?’

அந்தக் கேள்வியோடு அவன் அவரை நெருங்கவும், “வா இராசேந்திரா! நான் யாரென்று தெரிந்துவிட்டதல்லவா?” என்று கேட்டது அந்த உருவம்.

சிந்தனையுடனும், உணர்ச்சிப் பெருக்குடனும் தத்தளித்த அவன் கைகளைக் குவித்து, “நீங்கள் ஏன் இந்த உருவில் நடமாட வேண்டும்?” என்று வினவினான்.

“எல்லாம் நாட்டிற்காகத்தானப்பா! இந்த உருவின் மூலம்தான் நான் பல காரியங்களை வெற்றிகரமாக முடித்துவிட்டேன். சோழ நாட்டை வீழ்த்த சதி செய்த சதிகாரர்களின் சதிகளையெல்லாம் இதன் மூலம்தான் அறிய முடிந்தது. ராஜத்துரோகம் என்று வீண்பழி சுமத்தி, அநியாயமாய்ச் சிறையில் தள்ளிய சிறிய தன்மபாலரை என்னால் இந்த உருவின் மூலம்தான் விடுவிக்க முடிந்தது. பட்டத்தரசிக்கு நஞ்சிடத் திட்டமிட்ட நயவஞ்சகர்களின் எண்ணத்தை இதன் மூலம்தான் அறிந்து அவருக்கு எச்சரிக்கையும் தர முடிந்தது!”

“பட்டத்தரசிக்கு விஷமா? வியப்பாக இருக்கிறதே!”

“ஆமாம் இராசேந்திரா. அரசர் இறந்த துக்கம் தாளாமல் நஞ்சுண்டு இறந்துவிட்டேன்! என்று அரசியார் கைப்பட எழுதியது போல், ஒரு போலி லிகிதத்தைத் தயார் செய்துவிட்டிருந்தார்கள். அப்படி அவர்கள் லிகிதம் தயாரிக்கும் போதுதான் அதை நான் மறைந்திருந்து கவனித்தேன்.”

இராசேந்திரனுக்கு ஆத்திரம் மிக, “பட்டத்தரசிக்கு விஷம் வைக்கும் அளவிற்குத் துணிந்த அந்தச் சதிகாரர்கள் யார்?” என்றான் கோபத்தோடு.

“மேலைச்சாளுக்கிய வேந்தன் விக்கிரமாதித்தன். அவர் மனைவி இராஜசுந்தரி, பட்டத்தரசி இளையராணி, கொடும்பாளூர்க் குறுநில மன்னர்.”

இராசேந்திரன் பற்களைக் கடித்தான். “மேலைச்சாளுக்கிய அரசன் சோழருக்கும், தனக்கும் உள்ள பழைய பகையை இப்போது தீர்த்துக் கொள்ள முடிவு செய்துவிட்டான் போலிருக்கிறது.”

“ஆமாம் போரினால் சோழரை வெற்றி காண முடியாதென்று, வஞ்சக வழிக்குத் திரும்பி விட்டிருக்கின்றான். இது புரியாத சக்கரவர்த்தி, அவன் சொற்படியெல்லாம் நடக்கத் துவங்கியிருக்கின்றார்!”

“அதற்குக் காரணம்?”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இரு பெண்கள். ஒன்று அவர் மனைவியான இளையராணி. இன்னொன்று அவரின் தங்கையான இராஜசுந்தரி.”

“வேங்கிக்கு உன்னை அனுப்பி, அங்கே விக்கிரமாதித்தனால் உன்னைத் தீர்த்துக்கட்ட சதித் திட்டமும் தீட்டப்பட்டிருக்கிறது!”

“என்னது?”

“மேலைச்சாளுக்கிய மன்னனுக்கு நீ பங்காளி அல்லவா? அத்துடன் நீ சோழ அரசின் எதிர்கால இளவரசன். உனக்கு ஒரு முடிவுகட்டிவிட்டால், வஞ்சகர்களின் வழி எளிதாகிவிடும். சுலபமாய் மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிடலாம்.”

“இளவரசுப் பட்டம் ஏற்க எனக்கு விருப்பமில்லை.”

உருவம் வருத்தம் கலந்த குரலில் சிரித்தது. “உனக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம். ஆனால் மறைந்த சக்கரவர்த்தி அம்மாதிரி நினைக்கவில்லையே. சோழ சாம்ராஜ்யத்திற்கு ஏற்படப் போகும் சரிவைத் தாங்கி நிலை நிறுத்தும் மன உறுதி படைத்த சோழ அரசகுல இளைஞர்களில், உன்னைத்தான் தலை சிறந்தவன் என்று முடிவு செய்து வைத்திருந்தார். அதைத்தான் என்னிடமும், முதன்மந்திரியிடமும், பட்டத்தரசியிடமும் சொல்லியிருக்கின்றார். மறைந்த அவரின் ஆன்மா சாந்திபெறவாவது நீ அந்தப் பட்டத்தை ஏற்கத்தான் வேண்டும்!”

இராசேந்திரன் மௌனம் சாதிக்கலானான்.

“இந்த நாட்டிற்காக நாங்கள் செய்த தியாகங்கள் எத்தனை? அந்தத் தியாகங்கள் விழலுக்கு இறைத்த நீர் போல் ஆகிவிடக் கூடாது என்பதுதான் எங்களின் கோரிக்கை. இராசேந்திரா, பட்டத்தரசியார் கூட இந்த இக்கட்டான நேரத்தில் உன்னைத்தானப்பா மலைபோல் நம்பியிருக்கின்றார். அதனால் நீ வேங்கி செல்வதைத் தவிர்க்க வேண்டும்!”

“மன்னிக்கவும்! அரச உத்தரவை நான் மீற முடியாத நிலையில் இருக்கிறேன்!”

“அப்படியென்றால் உன் விருப்பப்படி நடக்க நான் குறுக்கே நிற்கமாட்டேன்! ஆனால் ஒன்று. என் கண் முன்னே இந்தச் சோழநாடு அழிந்து போவதையும், கொழுந்துவிட்டு எரியும் தீயில் பட்டத்தரசி தன்னை அர்ப்பணித்துக் கொள்வதையும், சதிகாரர்களால் முதன்மந்திரி பதவி நீக்கம் செய்யப்படுவதையும் காண என் மனதிற்கு வலிமை இல்லை. அதைவிட இந்த உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிவிருக்கிறது”- இடையில் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து இராசேந்திரனிடம் நீட்டி, “இதை மார்பில் பாய்ச்சிவிட்டு என் பிணத்தின் மீது வேண்டுமானால் வேங்கிக்குப் போ!” என்றது ஆக்ரோஷத்துடன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இராசேந்திரன் என்ன செய்வதென்று புரியாமல் கைகளைப் பிசைந்தபடி நின்றான்.

தூறல் நின்று வானம் வெளுத்துக் கொண்டிருக்க மண்டபத்திலிருந்து மூன்று புரவிகள் பழையாறை நோக்கிப் பயணமாயின.

போகும் மூன்று புரவிகளை பார்த்துக் கொண்டிருந்த உருவம், அணைந்து கொண்டிருந்த தீப்பந்தத்தைத் தூர எறிந்துவிட்டு, "இனி எனக்கு வெற்றி கிடைத்துவிட்டது!" என்று கூறியபடி இருளில் நடந்து மறைந்தது.

## அத்தியாயம் - 43

**ம**துரைக்குள் நுழைந்த அம்மையப்பனுக்குச் சோழச் சக்கரவர்த்தி மறைந்த செய்தியும், புதிய அரசராக அதிராசேந்திரர் அரியணை ஏறியிருப்பதையும் கேள்விப்பட்டு, உடனே கங்கைகொண்ட சோழபுரம் போக முடிவு செய்தான். பாண்டிய சதிகாரர்கள் மதுரையைத் தாக்க இருக்கும் செய்தியைத் திருவரங்கனிடம் தெரிவித்து, அவனை எச்சரிக்கையுடன் இருக்கச் செய்யலாம் என்று எண்ணி அவனைப் பார்க்க முயன்றான். ஆனால் அவனைப் பற்றி ஒன்றும் சரியான விபரங்கள் தெரியாமற் போகவே, கோட்டைத் தலைவனான மூவேந்தனிடம் அதைப் பற்றித் தெரிவித்துக் கங்கைகொண்ட சோழபுரம் நோக்கிப் பயணமானான்.

மனிதனுக்குப் பெண் என்றால் சற்றுச் சபலம்தான்! ஆனானப்பட்ட விசுவாமித்திரரே மேனகை அழகில் மயங்கிவிட்டார் என்றால், இளைஞனும் துடிப்பும் நிறைந்த வீரனான திருவரங்கன் எம்மாத்திரம்?

கடார இளவரசி இரத்தினாதேவி மதுரையைவிட்டுப் போனதிலிருந்து அவனுக்கு மனநிலை சரியாகவே இல்லை. 'கங்கைகொண்ட சோழபுரம் எப்போது போவோம்?' என்ற கேள்வியுடனே மதுரையம்பதியில் அரச விவகாரங்களை அரைகுறை மனதுடனே கவனித்துக் கொண்டு வந்தான். மதுரைப் பொறுப்பு வேறு ஒருவருக்குத் தரப்பட்டுவிட்டதால் சற்றும் தாமதிக்காது 'கங்கைகொண்ட சோழபுரம் புறப்பட்டு வருக!' என்ற அரச உத்தரவு கிடைத்ததும் கடார இளவரசியைக் காண இதுதான் சந்தர்ப்பம் என்று தற்காலிகமாகப் பொறுப்பை மூவேந்தனிடம் ஒப்புவித்துவிட்டுக் கங்கைகொண்ட சோழபுரம் நோக்கிப் பயணமானான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதற்காகவே காத்திருந்தது போல பாண்டிய ஒற்றன் கொற்கைக்குச் சற்றுத் தள்ளி, தீவில் மறைந்து வாழும் சடையவர்ம சீவல்லபனுக்கும், அவன் மகனான மாறவர்மனுக்கும் இதைத் தெரிவித்தான்.

மதுரைக் கோட்டையில் பாண்டியரின் மீன் கொடி பறக்கும் தருணம் வந்துவிட்டது என்று மகிழ்ந்த சடையவர்ம சீவல்லபன், கோட்டையைத் தாக்கும் திட்டம் ஒன்றை வகுத்து மாறவர்மன் தலைமையில் ஐந்நூறு பேர் அடங்கிய குழுவைக் கோட்டைக்குள் இரகசியமாய் அனுப்பி வைத்தான். ஏறக்குறைய இருநூறு பேர் அடங்கிய வீரர்களுடன் சடையவர்ம சீவல்லபன் வைகை நதியைக் கடந்து, காவற்காட்டின் பக்கம் மறைந்து நின்றான்.

இரவு நேரமானதால் கோட்டையின் உச்சியில் சோழ வீரர்கள் தீப்பந்தங்களுடன் உலவிக் கொண்டிருந்தனர்.

கோட்டைக்குள்ளிருந்த இரகசிய சுரங்கப் பாதை மூலம் அரண்மனை நந்தவனத்திலிருக்கும் விநாயகர் கோவிலையடைந்த மாறவர்மன் வெளியே எட்டிப் பார்த்தான்.

யாரையும் காணவில்லை.

அவனை அடுத்துத் தூமகேதுவும், தென்னனும் சப்தமின்றி சுரங்க வழியிலிருந்து வெளிவந்தனர். அந்த நந்தவனத்தின் பின் பக்கத்தில்தான் அவர்களுக்கு அடைக்கலம் தரும் செல்வந்தர் தனபாலின் வீடு இருக்கிறது.

மலர்களைப் பறிப்பதற்கும், பணியாளர்கள் வெளியேறுவதற்குமான நந்தவனத்தின் வடக்குப் பக்கமாகச் சிறிய வாயில் இருக்கிறது. அந்த வாயிலையொட்டியிருந்த சந்தின் வழியாகச் சென்றால் செல்வந்தர் தனபாலின் வீட்டின் பின் பக்கத்தை அடையலாம். ஆனால் தற்போது இரு வீரர்கள் கையில் வேற் கம்புகளுடன் அங்கே காவலுக்கு நிற்கின்றார்களே! என்ன செய்வது? என்று வியப்புற்ற தூமகேது மாறவர்மனை மட்டும் தன் பின்னால் வரச் சொன்னான்.

இருவரும் மல்லிகைச் செடியின் பின் மறைந்து கொண்டனர். இதற்குள் நான்கைந்து வீரர்கள் கோவிற் கதவின் உள்ளிருந்து தலையை வெளியே நீட்டினர். தான் கூறும் வரை வெளியே வர வேண்டாம் என்று அவர்களை நோக்கிச் சைகை செய்தான் மாறவர்மன்.

தூமகேது செடியின் பின் மறைந்தவாறு புலியைப் போல மெல்ல உறுமினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

காவல் வீரர்களில் ஒருவன் திரும்பி, “ஏதோ உறுமுவது போல் சப்தம் கேட்கிறதே!” என்றான்.

இரண்டாமவன் மல்லிகைச்செடியை உற்றுப் பார்த்து, “அங்கே ஏதோ...” என்பதற்குள் திரும்பவும் தூமகேது பலமாக உறுமினான்.

கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் அவர்களிடமிருந்து விலகியது. செடிக்குப்பின் ஏதோ ஒரு மிருகம் இருப்பதாக இருவரும் முடிவு செய்து, உருவிய வாளுடன் அடிமேல் அடி எடுத்து நடந்தனர்.

இதற்குள் இன்னொரு பக்கமாக அவர்களின் பின்னால் வந்துவிட்ட மாறவர்மன், தன் சமீபத்திலிருந்த முல்லைக் கொடியைப் பலமாய்க் குலுக்கினான். அச்சப்தம் கேட்டு இருவரும் திரும்புவதற்குள், செடியின்பின் மறைந்திருந்த தூமகேது வீரர்கள் மேல் பாய, மாறவர்மனும் அவனுடன் சேர்ந்து கொண்டு இருவரையும் வீழ்த்தினர். அதற்குள் கோயிலுக்குள்ளிருந்த வீரர்கள் வெளிப்பட்டுச் செடியின் பின்னால் மறைந்து கொண்டனர். தூமகேதுவைச் செல்வந்தர் தனபாலின் வீட்டிற்கு அனுப்பி மக்களைத் திரட்டிக் கொண்டு அரண்மனைக்கு வரும்படிக் கூறினான் மாறவர்மன். தூமகேது அவ்விதம் செய்வதாகக் கூறிவிட்டுப் பின் வாயிலின் வழியாக தனபாலின் வீடு நோக்கிச் சென்றான்.

தென்னனைத் தீப்பந்தத்துடன் ஆலமரத்தின் மேல் ஏறி, உச்சிக்கிளைக்குச் சென்று இரு வாட்களைக் குறுக்கும், நெடுக்குமாய் வைக்கப்பட்டிருப்பது போல் அடையாளம் வைத்துக் காவற்காட்டில் மறைந்திருக்கும் தன் தந்தையான சடையவர்ம சீவல்லபனுக்குச் சைகை செய்யும்படிக் கூறினான்.

அவ்விதமே தென்னன் ஆலமரம் ஏறவும், மற்றவர்கள் ஆங்காங்கே மறைந்திருந்து வெளிப்படும் சோழ வீரர்களைத் தாக்கும்படி உத்தரவிட்டுத் தேர்ந்தெடுத்த நூறு வீரர்களுடன், மாறவர்மன் அரண்மனைக்குள் புகுந்தான்.

ஆலமரத்தில் தீப்பந்தத்தின் ஒளியைக் கண்ணுற்ற சடையவர்ம சீவல்லபன், கோட்டையைத் தாக்குவதற்குத் தன் வீரர்களுக்கு ஆணையிட்டான்.

அகழிப்பாலம் தூக்கப்பட்டிருந்ததால் வில் வீரர்கள் நூறு பேர் மரங்களிடையே மறைந்து நின்றபடி கோட்டையின் உச்சியிலிருந்த சோழ வீரர்களின் மீது அம்பை எய்யத் தொடங்கினர்.

வரிசையாக வந்த அம்புச் சரங்களினால் தாக்குண்ட சோழ வீரர்கள் அலறியபடி கோட்டையின் மேல் தளத்திலிருந்து கீழே விழ...



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

திடீரென்று அலறல் சத்தமும், அதைத் தொடர்ந்து வீரர்கள் 'தொப் தொப்' என்று தரையில் வீழ்வதையும் கண்ட கோட்டைக் காவலன் திகைப்புற்று, அம்புகள் எங்கிருந்து எய்யப்படுகிறது என்பதைக் கவனிக்க முயன்றான். காவற்காட்டின் மரங்களிலிருந்து அவை வருகின்றன என்று உணர்ந்து, கோட்டைச் சுவர்களில் அமைக்கப்பட்டப் பொறிகளை இயக்கி காவற்காட்டைத் தாக்கும்படி வீரர்களுக்கு ஆணையிட்டான் காவலன்.

இதற்குள் அரண்மனைக்குள் புகுந்த மாறவர்மன் எதிர்ப்பட்ட வீரர்களை வீழ்த்தியபடி, அதைத் தன் வசமாக்கும் முயற்சியில் இறங்கினான்.

செடிகளிலும், புதர்களிலும் மறைந்திருந்த பாண்டிய வீரர்கள் காவற்காட்டைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்ட கோட்டை வீரர்கள் மேல் அம்புகளைச் செலுத்தி அவர்களை வீழ்த்தும் பணியில் ஈடுபட்டனர்.

மதுரைக் கோட்டைப் பொறுப்பை ஏற்றுள்ள மூவேந்தன், வீரர்களின் அலறலையும், அரண்மனைப் பெண்களின் ஓலத்தையும் கேட்டு, ஏதோ ஆபத்து நிகழ்ந்துவிட்டது என உணர்ந்து, ஒருவேளை பாண்டிய சதிகாரர்கள் கோட்டைக்குள் புகுந்துவிட்டார்களோ என்று ஐயுற்று, வாளினை உருவியபடி அறையிலிருந்து வேகமாக வெளியே வந்தான்.

அங்கே காவலுக்கு நின்றிருந்த வீரனிடம் குதிரைப் படையையும், யானைப்படையையும் தயாராக்கிக் கோட்டைக்கு கொண்டு வரும்படி உத்தரவிட்டு, தன் முன் சிதறி ஓடிக் கொண்டிருந்த வீரர்களை ஒன்று திரட்டினான்.

ஏறக்குறைய ஐந்நூறு பேர்களுடன் அவன் அரண்மனை வாயிலை நோக்கிவர, அங்கே மாறவர்மன் எதிர்ப்பட்ட வீரர்களை வீழ்த்தியபடி அரண்மனைக்குள் முன்னேறிக் கொண்டிருந்தான்.

முன்கூடத்தில் மாறவர்மனும், மூவேந்தனும் மோதினர்.

இதற்குள் சோழ வீரர்கள் அங்கே வந்து குவியத் தொடங்கினர்.

எண்ணிக்கையில் குறைவாக இருந்த பாண்டிய வீரர்களைத் திடீரென்று அவர்கள் சூழ்ந்து கொண்டதால் பாண்டியன் பக்கம் இலேசான குழப்பம் தோன்றியது. மாறவர்மன், "சோர்வடைய வேண்டாம்! துணிந்து போரிடுங்கள்!" என்றபடி ஆட்டு மந்தைக்குள் புகுந்த புலியென மூவேந்தனிடமிருந்து நீங்கி, சோழ வீரர்களின் நடுவில் பாய்ந்தான். அத்துடன் வெளியேயிருக்கும் பாண்டிய வீரர்களை உள்ளே வரும்படிக் குரல் கொடுத்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தன்னைவிட்டு வீரர்கள் கூட்டத்தில் பாய்ந்து வழியுண்டாக்கியபடி, சோழ வீரர்களைச் சிதைக்கும் முயற்சியில் ஈடுபடுவதையறிந்த மூவேந்தன், பாண்டிய வீரர்களைத் தாக்கியவாறு மாறவர்மனை வழிமறித்தான்.

ஆயிரம் வீரர்கள் அடங்கிய சோழரின் குதிரைப்படை அரண்மனை முன் வந்துவிட்டது.

அந்தப் படையைக் கண்டதும் பாண்டிய வீரர்கள் நிலைகுலைந்தனர்.

மாறவர்மன் குரல் கேட்டு, மறைவிலிருந்த பாண்டி வீரர்கள் அரண்மனைக்குள் நுழைய முயற்சிக்க, சோழரின் புரவிப்படையால் அவர்களும் சுற்றி வளைக்கப்பட்டனர்.

“வெற்றி! அல்லது வீரமரணம்! வீரர்களே! சோர்வடையாதீர்கள். கடைசி வரை போரிடுங்கள்! அடிமைப்பட்ட உங்கள் பாண்டிய அன்னைக்கு நீங்கள் இரத்தம் சிந்த சபதம் எடுத்துவிட்டதை நினைத்துப் பாருங்கள். சோர்வைடையாதீர்கள்!” - உரக்கக் கூறியபடி, தன்னை வழிமறித்த மூவேந்தனின் வாளினைத் தடுத்தான். ஆனால் அடுத்தகணமே அந்த வாளின் முனை அவன் புஜத்தில் பட்டு இலேசான காயத்தை உண்டாக்கியது.

அதைப் பற்றிக் கவலைப்படாமல் ஆக்ரோஷத்துடன் வாளினைச் சுழற்ற, குதிரை வீரர்களால் மடக்கப்பட்ட பாண்டியர்கள் நிலையும் அச்சமயம் மிகவும் பரிதாபமாகவே இருந்தது.

இந்த அளவிற்குச் சோழன் படைவீரர்களைக் குவித்து வைத்திருக்கின்றான் என்பதும், வெகு சீக்கிரமே அவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து தங்கள் மீது தாக்குதலைக் தொடுப்பார்கள் என்பதையும் எதிர்பார்க்க வில்லையாதலால், தனக்கு ஏற்படப் போகும் பெருந்தோல்விக்கு என்ன செய்வது? என்ற எண்ணத்துடனே மாறவர்மன் மூவேந்தனுடன் போரிட்டுக் கொண்டிருந்தான்.

அவன் கண்முன்னே பல பாண்டிய வீரர்கள் மரண ஓலமிட்டவாறு மண்ணில் சாய்ந்து கொண்டிருந்தனர். அந்தச் சமயம் பார்த்து பேரிரைச்சல் ஒன்று கோட்டையின் முன்பு கேட்டது.

“பாண்டிய அரசர் சடையவர்ம சீவல்லபர் வாழ்க! சோழ ஓநாய்களை அழிப்போம் ஒழிப்போம்!”-அந்தப் பகுதியே அதிரவைப்பது போல் கேட்டது.

‘என்ன அது?’ என்று மூவேந்தன் சப்தம் வந்த பக்கம் திரும்பினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சுமார் இரண்டு ஆயிரம் பேருக்கு மேல், மக்கள் கூட்டம் கைகளில் தீப்பந்தங்களை ஏந்தியபடி, கிடைத்த ஆயுதங்களுடன் அரண்மனையை நோக்கி மிக வேகத்துடன் வந்து கொண்டிருந்தனர்.

'மக்கள் நமக்கு எதிராகத் திரும்பிவிட்டார்களா!' என்ற திகைப்புடன் புரவி வீரர்களை நோக்கி, குதிரையைச் செலுத்தி அவர்களைக் கலையுங்கள்" என்று உரக்கக் கூறினான்.

'தோல்வியைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்கப் போவதில்லை' என்று சோர்வுடனே போரிட்டுக் கொண்டிருந்த பாண்டிய வீரர்கள் திரண்டு வந்து கொண்டிருந்த மக்களைக் கண்டு புதிய சக்தியும், புதிய வேகமும் பெற்றவர்கள் போல், சீறிப்பாயும் சிங்கமென சோழ வீரர்களைத் தாக்கத் தொடங்கினர்.

விளைவு? சோழ வீரர்கள் புரவியிலிருந்து மண்ணில் சாய்ந்தனர். புரவிப்படையில் பெரும் சரிவு நிகழ்வதையறிந்த மூவேந்தன் "துணிவுடன் செயலாற்றுங்கள்! அரண்மனை நோக்கி வரும் மக்களை விரட்டுங்கள்!" என்று ஆணையிட்டவாறு மாறவர்மனுடன் போரிட்டுக் கொண்டே, அரண்மனை வாயிலை நோக்கிப் போகும் நினைப்பில் வேகமாய்த் திரும்பினான்.

அச்சமயம் வாளைப் பிடித்திருந்த அவன் கைப்பிடி இலேசாய்த் தளர்ந்தது.

இதையறிந்து மாறவர்மன் பலம் கொண்ட மட்டும் தன் வாளினால் அந்த வாளைத் தாக்க.. அடுத்தகணமே 'ணங்' என்ற சப்தத்துடன் தரையில் வாள் விழுந்தது.

உடனே சற்றும் தாமதிக்காது அவன் மார்பில் வளைப் பாய்ச்சினான் மாறவர்மன். 'ஹா!' எனப் பெருங்குரலிட்டபடி தரையில் துடிதுடித்துக் கீழே சாய்ந்தான் மூவேந்தன்.

அதைக் கண்ட சோழப் படைகள், நான்கு பக்கமும் சிதறி ஓடத் துவங்கின. அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாண்டியப் படைகள் அவர்களைத் துரத்த ஆரம்பித்தன.

சற்று நேரத்திற்கெல்லாம் மதுரை நகரின் கோட்டை கதவு திறக்கப்பட்டது; சடையவர்ம சீவல்லபன் மக்கள் வாழ்த்து முழக்கத்துடன் வெற்றிப் பெருமிதத்தோடு உள்ளே நுழைந்தான்.

இதுவரை கோட்டையின் உச்சியில் பறந்து கொண்டிருந்த புலிக்கொடி அகற்றப்பட்டு, அங்கே பாண்டிய அரசருக்குரிய மீன்கொடி ஏற்றப்பட்டது.

மெல்லியதாய் வீசிய காற்று, பாண்டியன் வெற்றி பெற்றுவிட்டான் என்ற உற்சாகத்தில் வேகமாய் வீச, அதன் விளைவாய்க் கோட்டையில் ஏற்றப்பட்ட கொடி ஆனந்தமாய் அசைந்தபடி பறக்கத் துவங்கியது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 44

**க**ங்காபுரிக் கோட்டையையடைந்த அம்மையப்பன், கதவுகள் மூடப்பட்டிருப்பதையறிந்து கோட்டைக் காவலனிடம் உள்ளே போக வேண்டியதைப் பற்றிக் கூறினான்.

"சிவபக்தரான தங்களுக்குக் கோட்டைக்குள் என்ன வேலை?" என்று கேட்டான் அவன்.

"முதன்மந்திரியைப் பார்க்க வேண்டும்?"

"எந்த மந்திரி... பழையவரா? புதியவரா?"

இந்தக் கேள்விக்குச் சிவபக்த சிரோன்மணிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. இருந்தாலும், "பிரமாதிராசர்!" என்றான் அழுத்தமாக.

கோட்டைக் காவலனிடமிருந்து சிரிப்பு வெளிப்பட்டது.

"என்னிடம் சொன்னது போல் வேறு யாரிடமும் இம்மாதிரி சொல்லாதீர்கள். கோட்டைக்குள் நிலைமை தலைகீழாக ஆகிவிட்டது. நான் சைவப் பற்றுள்ளவன் என்பதால் கூறுகின்றேன். முதலில் இங்கிருந்து போய்விடுங்கள்!"

அம்மையப்பன் தயங்கி நின்றான்.

"ஐயா! தங்கள் சிவ வேடம்தான் உங்களை என்னிடமிருந்து காப்பாற்றியிருக்கிறது. வேறு யாராக இருந்தாலும் இந்நேரம் விலங்கிட்டுத்தான் மறுவேலை பார்த்திருப்பேன். அதனால் முதலில் இங்கிருந்து போய்விடுங்கள்."

'இனிமேல் அங்கிருப்பதும் கோட்டைக்குள் புக முயற்சிப்பதும் வீண்' என்று பட்டது அம்மையப்பனுக்கு. வேறு முறையைப் பின் பற்றி வேறு வழியாகத்தான் கோட்டைக்குள் போக வேண்டும் என்று எண்ணியபடி, மதுராந்தக வடவாற்றின் பக்கம் புரவியைச் செலுத்தினான்.

ஆற்றின் ஓரமாயுள்ள அரசமர நிழலில் அதைக் கட்டிவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

யாரும் தென்படவில்லை.

அரசமரத்தின் கீழ் இருந்த மேடையும், அந்த மேடையின் ஒரு பக்கமாயிருந்த கருங்கல் மண்டபமும், ஏற்கனவே அவனுக்குப் பழக்கப்பட்ட இடம்தான். என்றாலும் சற்று நேரம் யோசித்தபடி நின்றான். பிறகு, "சிவாய நம!" என்று அவனது வாய் முணுமுணுக்க மண்டபத்திற்குள் புகுந்து மறைந்துவிட்டான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கொஞ்ச நேரம் கழித்து வெள்ளை முக்காடு போட்ட உருவத்தை முதன் முதலில் சந்தித்த அந்த இருட்டு அறையின் வாயிலின் முன்பாக நின்றான் அம்மையப்பன்.

இப்போது அங்கே காவல் பலத்திருந்தது. எப்பொழுதும் ஒரு ஆள் இருக்கக் கூடிய அவ்விடத்தில் தற்போது நான்கு பேர் நின்று கொண்டிருந்தனர்.

தயங்கியபடியே அருகில் சென்று "பெரியவரைப் பார்க்க வேண்டும்" என்றான்.

இந்த இரகசிய வழி பழக்கப்பட்டவர்களுக்கே தெரியும் என்பதாலும் அந்நால்வரில் ஒருவன் ஏற்கனவே இவனுக்கு பழக்கமானவன் என்பதாலும் "உள்ளே முக்கிய ஆலோசனையிலிருப்பதால் சற்றுப் பொறும்!" என்று கூறினான்.

அம்மையப்பன் அதற்குச் சம்மதித்து அருகிலிருந்த இருக்கையில் அமர்ந்தான். ஆனால் நேரம் கடந்து கொண்டே போனதால் மதுராந்தக வடவாற்றின் பக்கம் சிறிது நேரம் உட்கார்ந்து வரலாம் என்று வீரனிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

கங்கைகொண்ட சோழபுரம் வந்து சேர்ந்த திருவரங்கன் கோட்டைக்குள் புக முடியாத நிலையில் பலத்த காவல் இருப்பதைப் பார்த்துத் திகைப்புற்று, கோட்டையின் மேற்புறம் வீரர்களின் நடமாட்டம் குறைந்தும், சாளுக்கிய வீரர் நடமாட்டம் அதிகரிப்பதையும் உணர்ந்து, 'இது என்ன சாளுக்கிய நாட்டின் தலைநகரமா? அல்லது கங்கைகொண்ட சோழபுரம்தானா?' என்று அவனுக்குச் சந்தேகம் எழவே செய்தது.

'உடனே புறப்பட்டு வருக!' என்ற அரச உத்தரவைக் காண்பித்துத் தான் உள்ளே செல்ல வேண்டிய அவசியத்தைக் கோட்டைத் தலைவனிடம் கூறினான்.

சற்று யோசனை செய்துவிட்டுத் திருவரங்கனை மட்டும் கோட்டைக்குள் விடும்படிக் காவல் வீரர்களுக்கு உத்தரவிட்டான் தலைவன்.

திருவரங்கனுடன் இரு சாளுக்கிய வீரர்கள் துணையாக வந்தனர்.

இவ்விதம் வீரர்கள் வருவது அவனுக்குப் பிடிக்காததால் "எனக்கு அரண்மனை போக வழி தெரியும்" என்று எரிச்சலுடன் கூற,

"உங்களுடன் கூடச் செல்லும்படி எங்களுக்கு உத்தரவு. இது தவிர ஒன்றும் தெரியாது" என்றனர் இருவரும்.

'சோழப்படையில் முக்கிய பொறுப்பு வகிக்கும், எனக்கே இந்த நிலைமை என்றால் சாதாரண குடிமகன் நிலைமை எப்படியிருக்கும்?' - இந்தக் கேள்வியுடன் மனத்தில் தோன்றிய எரிச்சல் அதிகமாக, சோழச் சக்கரவர்த்தியிடம் இது பற்றிப் பேச வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

சக்கரவர்த்தியிருக்கும் சோழ கேரளன் மாளிகை வந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வழக்கம் போல் அங்கேயும் அவனுக்கு உள்ளே புக அனுமதி கிடைக்காததால் திரும்பவும் அரச உத்திரவைக் காண்பித்து விளக்கம் கூற, வீரர்கள் திருவரங்கனைச் சோழப் படையின் தளபதியான வீரசோழ இளங்கோ வேளானிடம் அழைத்துச் சென்றனர்.

இதுவரை துணையாக வந்த இரு வீரர்களும், தங்கள் பணி முடிந்துவிட்டதென்று கோட்டைக்குத் திரும்பிவிட்டனர்.

தளபதி பதவி கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில், முகம் என்றுமில்லாத மலர்ச்சியுடனிருக்க, தனது மெல்லிய மீசையை நன்கு முறுக்கிவிட்டுக் கொண்டு, “என்ன விஷயம்!” என்றான் திருவரங்கனிடம்.

குரங்கு கையில் பூமாலை கிடைத்துவிட்டது போல் வீரசோழ இளங்கோ வேளானுக்குத் தளபதி பதவி கிடைத்துவிட்டது. அதனால்தான் என்னையே, ‘என்ன விஷயம்?’ என்று கேட்கின்றான் என புரிந்து கொண்ட திருவரங்கன் “சக்கரவர்த்தி அவர்கள் மகளிர் கையிலுள்ள பந்து என நினைத்துவிட்டார் போலும்! மதுரையில் எனக்கு விதிக்கப்பட்ட பணியைச் செய்து கொண்டிருக்கும் போது, எதற்கு இங்கே அவசரமாக வரவழைக்க வேண்டும்? வந்த இடத்தில் இங்கேயும், அங்கேயும்...” என்ற திருவரங்கனை மேற்கொண்டு பேசவிடாமல் இடைமறித்து, “யாரிடம் பேசுகின்றாய் என்பது நினைவிருக்கிறதா?” என்றான் இளங்கோ வேளான் முனிவுடனே.

“ஓ! நன்றாகவே நினைவிருக்கிறது. தாங்கள் சோழத்தளபதி என்பதும், தங்கள் முன் நிற்கும் நான் சோழர் படையில் முக்கிய பொறுப்பு வகிப்பவன் என்பதும் தெரிகிறது” என்றான் சற்றுக் காட்டமாகவே.

வீரசோழ இளங்கோ வேளானுக்கு கோபம் அதிகரித்தது. இருக்கையிலிருந்து சடாரென்று எழுந்து திருவரங்கன் அருகில் வந்தான். சுற்றியிருந்த வீரர்கள் என்ன நேருமோ! என்று அச்சத்துடன் இருவரையும் பார்க்க, ‘இந்த நேரத்தில் இவனிடம் எதற்குத் தகராறு?’ என்று சினத்தையடக்கியபடி “நீ அதிகமாகவே பேசுகின்றாய்!” என்றான் சோழத்தளபதி.

“சற்று முன்பு கோட்டையில் எனக்குக் கிடைத்த மரியாதை, வேறு யாருக்காகவாவது கிடைத்திருந்தால் பெரிய ரகளையே பண்ணியிருப்பார்கள்!”

“அப்படி என்ன உனக்கு நேர்ந்துவிட்டது?”

“என்னைக் காவற் கைதி போல் நடத்தியிருக்கிறார் கோட்டைக்காவலர். இரு வீரர்களை என்னோடு துணைக்கு அனுப்பியிருக்கின்றார். அது...!” என்று மேற்கொண்டு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பேசமுற்பட்டவனைச் சிரித்தபடி குறுக்கிட்டு "உன்னைப் பற்றி அவருக்குத் தெரியாது. அவர் சாளுக்கிய படைப் பிரிவைச் சேர்ந்தவர்" என்றான் சோழத்தளபதி.

"அப்படிப்பட்ட தெரியாத நபரை முக்கிய பொறுப்பில் எப்படி அமர்த்தினீர்?"

"இது சக்கரவர்த்தியைக் கேட்க வேண்டிய கேள்வி!"

"கேட்கத்தான் போகின்றேன். கேட்காமல் நான் விடப்போவதில்லை" என்று சொன்ன திருவரங்கன் "சக்கரவர்த்தியை உடனே பார்க்க வேண்டும்" என்றான்.

'இவன் இடங்கைப் பிரிவைச் சேர்ந்தவன்! அதனால்தான் துடுக்குத்தனமாய்ப் பேசுகின்றான்! சமயம் வரும் போது இவனைப் பழிதீர்க்க வேண்டியதுதான்' என்று மனதிற்குள்ளே கூறிக் கொண்ட சோழத்தளபதி, "சக்கரவர்த்தியை இப்போது பார்க்க முடியாது. முக்கிய வேலையாயிருக்கிறார். அவரைப் பார்க்கும் வரை நீ விருந்தினர் மாளிகையில் தங்கியிரு" என்றான். மேற்கொண்டு இடம் கொடுத்தால் இன்னும் அதிகப்பிரசங்கித் தனமாகவே பேசுவான் என பக்கத்திலிருந்த வீரர்கள் பக்கம் திரும்பி "சக்கரவர்த்தியைப் பார்க்கும்வரை இவர் விருந்தினர் மாளிகையிலேயே தங்க சகல வசதியும் செய்து கொடு" என்று உத்தரவிட்டான்.

'இனிமேல் இவனிடம் ஏன் பேசிக்கொள்ள வேண்டும்!' என்று தன்னை அழைத்துப் போகத் தயாராக இருந்த வீரனுடன் விருந்தினர் மாளிகை நோக்கிப் புறப்பட்டான்.

அப்படிப் போகும் போது...

இரத்தினாதேவியைப் பற்றிய நினைவு வந்தது.

எல்லாம் நல்லதிற்காகத்தான். கடார இளவரசியைச் சந்திக்க அருமையான சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சியுடனே வீரன் பக்கம் திரும்பி, "இரத்தினாதேவி எங்கே தங்கியிருக்கிறார்கள் என்று தெரியுமா?" என்றான் மெல்லிய குரலில்.

கங்கைகொண்ட சோழபுரத்திலிருக்கும் அரசகுல இளைஞர்களெல்லாம் ஏன் இவள் மேல் இப்படியரு சபலம்? -கேள்வியை எழுப்பிய அந்த வீரன், அதற்காக மனதிற்குள் சிரித்துக் கொண்டு, "அவர்களும் விருந்தினர் மாளிகையில்தான் தங்கியிருக்கின்றார்கள்!" என்றான்.

நல்லதாகப் போய்விட்டது! - சந்தோஷமுற்று மிக வேகமாய் வீரனுடன் அம்மாளிகை நோக்கி நடக்கலானான் திருவரங்கன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 45

**த**னக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் உடைகளை மாற்றிக் கொண்டு தலைமுடியை நன்கு வாரிக் கொண்டு நெற்றியில் சந்தனப் பொட்டு மிளிர ஒரு தரம் அலங்காரம் நன்றாக இருக்கிறதா எனப் பார்த்துக் கொண்டான். பிறகு இரத்தினாதேவி தங்கியிருக்கும் அறை நோக்கி கம்பீரமாக நடக்கத் தொடங்கினான் திருவரங்கன்.

அவளது அறை முன் சாமந்தன் நின்று கொண்டிருந்தான். ‘நல்ல வரவேற்புதான்’ என்று முறுக்கிய மீசையைத் தடவி விட்டபடி அவனைப் பார்த்து முறுவல் செய்தான்.

புதிய மனிதனைப் பார்ப்பது போல சாமந்தனின் பார்வையிருக்க, அதற்காகச் சங்கடப்பட்டு அவன் அண்மையில் சென்ற திருவரங்கன், “என்னைத் தெரியவில்லையா?” என்றான் மிடுக்காகவே.

ஒருமுறை மேலும் கீழும் பார்த்துவிட்டு நினைவு வந்தவன் போல, “ஓ! நீயா?” என்றான் மிகச் சாதாரணமாக.

திருவரங்கனுக்குக் கொல்லன் உலைக் களத்திலிருக்கும் பெரிய சம்மட்டியால் தன்னைத் தாக்கியது போல் இருந்தது. ‘இதற்குள்ளா மறந்துவிட்டான்’ என்பதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் சில மனிதர்களின் குணங்கள் இப்படித்தானிருக்கும் என தனக்குச் சமாதானம் கூறிக் கொண்டு, ‘இவன் நமக்கு முக்கியமல்ல! நமக்கு முக்கியம் கடார இளவரசிதான்!’ என்று அறைக்குள் நுழைய முயற்சித்தான்.

“எங்கே போகின்றீர்?” - கைகளைக் குறுக்கே நீட்டினான் சாமந்தன்.

அந்தக் கைகளை வேகமாகவே விலக்கி, “கடார இளவரசியைப் பார்க்க வேண்டும்!” என்றான் கோபத்துடனே.

சாமந்தனுக்கு நகைப்பு மேலிட்டது. “கடார இளவரசி ஒன்றும் அங்காடியில் விற்கும் சரக்கல்ல!” அதைக் கேட்டுத் திருவரங்கனுக்கும் ஆத்திரம் மிகுந்தது.

“நான் ஒன்றும் அங்காடிச் சரக்கை வாங்கும் சாதாரண மனிதன் அல்ல!”

“ஓ!” என அப்பதிலால் நெற்றியைச் சுருக்கி, இகழ்ச்சியுடன் அவனைப் பார்த்த சாமந்தன், “உள்ளே போக அனுமதியில்லை!” என்றான் உறுதியான குரலில்.

“உன்னைப் போன்ற ஒரு முழுக்குருடனை இப்போதுதான் முதல் தடவையாகப் பார்க்கின்றேன். என்னைத் தெரிந்தும் தெரியாதது போல் இருக்கும் நீயெல்லாம்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மனிதத்தன்மை கொண்ட மனிதன் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை" என்று நீட்டிய அவன் கரத்தை வேகத்துடன் தள்ளினான்.

அதே வேகத்துடன் சாமந்தனின் கைகள் அவன் தோள்களைப் பற்றின. அதை மீண்டும் உதறிவிட்டு உள்ளே போக திருவரங்கன் முயற்சிக்க, இடையிலிருந்த வாளை உருவிக் கொண்டான் சாமந்தன்.

இரத்தினாதேவியின் அறைக்குத்தான் செல்லப் போகிறோமே! எதற்கு வாள் என்று தன் அறையிலே வைத்துவிட்டு வந்திருந்த திருவரங்கன், வாளை உருவிக் கொண்டதைக் கண்டு அதற்காகப் பயப்படாமல், "என்னைப் பயமுறுத்துகிறாயா சாமந்தா?" என வினவினான்.

"உன்னை ஏன் பயமுறுத்த வேண்டும்? நீ அறைக்குள் போகக் கூடாது என்று சொன்னேன்! ஆனால் கேட்பதாக இல்லை. அதனால் வேறு வழியில்லாமல் வாளை உருவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது."

"இந்நேரம் இரத்தினாதேவி இதைக் கண்ணுற்றால் உனக்குத்தான் தண்டனை கிடைக்கும். அவளின் அன்புக்குரிய என்னை இவ்விதம் அவமானப்படுத்துவது நல்லதல்ல."

இகழ்ச்சியான சிரிப்பு ஒன்று சாமந்தனிடமிருந்து வெளிப்பட்டது.

"என்ன சொன்னாய்?"

அந்தக் கேள்வியால் கோபத்தின் எல்லைக்கே சென்றுவிட்ட திருவரங்கன், "நான் கடார இளவரசியின் அன்புக்குரியவன் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை! என் கையில் வாள் ஒன்று இருந்திருந்தால் சந்தேகப்பட்ட உன்னை இந்நேரம் மேல் உலகம் அனுப்பியிருப்பேன்!" என்றான் உரத்த குரலில்.

அதற்கு மறுமொழி தருவது போல் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. இருவரும் திரும்பினர்.

நெஞ்சையள்ளும் கொஞ்சும் விழி கொண்ட இரத்தினாதேவி அங்கே வான் மண்டலத்திலிருந்து இறங்கிய தேவதையென நின்று கொண்டு இருந்தாள். அவளைக் கண்டு திருவரங்கன் புன்முறுவலித்தான். "இரத்தினாதேவி!" என்று அன்புடன் அழைத்தான்.

அவ்விதம் கூப்பிட்டதை விரும்பவில்லையென்பது போல, அவளின் அழகிய வதனம் சட்டென்று மாறியது.

"ஏன் வீணாய்க் குழப்பத்தை உண்டு பண்ணுகின்றீர்?"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

திருவரங்கனுக்குத் திகைப்பு ஏற்பட்டது.

"என்ன சொல்லுகின்றாய் இரத்தினா?" - அவளை நோக்கி இரண்டடி வைத்தான்.

"அப்படியே நில்!" - அவளிடமிருந்து கோபக்குரல் வெளிப்பட்டது.

திருவரங்கனுக்கு உலகமே தலைகீழாகி ஒரு நொடியில் ஒன்றுமே புரியாமல் போய்விட்டது.

"நில் என்று சொல்வது நீதானா?"

"ஆமாம்!" என்றாள் அழுத்தமுடன்.

வானம் இடிந்து அவன் மீது வீழ்ந்தது போலிருந்தது. பொய்யான அவளை மெய்யென்று எண்ணி அவளுக்காக எல்லாவற்றையும் இழக்கத் தயாராயிருந்த அந்த இளைஞனுக்கு இந்த உலகமே அக்கணத்திலிருந்து வெறுத்துப் போய்விட்டது. இனி அவனுக்கு என்ன இருக்கிறது? இருந்தாலும் இன்னும் ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்று விரும்பி, "நீ இறந்த பிறகு உனக்காக ஒரு கல்லறை எழுப்பி அதில் திருவரங்கன் காதலி இங்கே உறங்குகின்றாள்! என எழுதச் சொன்னாயே. நினைவிருக்கிறதா இரத்தினாதேவி?" என்றான்.

அதைக் கேட்டுப் பெரியதாக உணர்ச்சி வயப்பட்டு விட்டதாகத் தெரியவில்லை. மாறாக, "வைகையில் அடிக்கடி வெள்ளம் வரும் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். அம்மாதிரி இந்த வார்த்தைகளும் என் காதலும் அவ்வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய்விட்டதாக நினைத்துக் கொள்ளேன்!" என்றாள்.

"போதும் நிறுத்து. அந்த வைகை வெள்ளம் இந்த அறைக்குள் ஒரு நாள் வராமல் போய்விடாது. இது நிச்சயம்" என்று உரக்கக் கூறிய அவன் தலை குனிந்தபடி வெளியேறத் துவங்கினான்.

அவ்விதம் போகும் போது...

"அன்பிற்குரியவளைப் பிரிந்து செல்லும் இன்பக் காதலனே!" என்ற குரல் கேட்டது.

தலைகுனிந்தபடி சென்று கொண்டிருந்த திருவரங்கன் நின்று நிமிர்ந்தான்.

"என்ன சொன்னாய் சாமந்தா?"

"மீண்டும் அதைக் கேட்க உனக்குப் பெரும் ஆசை போலும்!" என்று இகழ்ச்சியுடன் கூற...

அடுத்த நொடியே சாமந்தன் கையிலிருந்த வாள் தரையில் விழுந்தது; மறுபக்கம் அவனும் துள்ளி விழுந்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அத்தகைய ஒரு பலம் வாய்ந்த அடியை எதிர்பார்க்காததால் அவன் தட்டுத் தடுமாறி எழுந்தான். அதற்குள் இன்னொரு அடி பிடரியில் விழுந்தது.

சுருண்டு தலைகுப்புற ‘பொதுக்’கென்று விழுந்தான்.

அருகே சென்று அவனை அலட்சியமாய் எட்டி உதைத்துத் தரையில் உருட்டியபடி “இன்பக் காதலனின் அடி எப்படியிருக்கிறது அப்பனே?” என்றான் திருவரங்கன்.

“நில்... அவனை அடிக்காதே!” என்று அலறியபடி இரத்தினாதேவி கையில் குறுவாளுடன் ஓடி வந்தாள்.

“நெருங்காதே வஞ்சகி!” என்று கூறிய திருவரங்கன் தரையிலிருந்த வாளை எடுத்துக் கொண்டான்.

“வைகையாற்று வெள்ளம் நம் காதலை அடித்து கொண்டு போய்விட்டது என்று சொன்னாயே, இப்போது அந்த வெள்ளம் உன்னையே அடித்துக் கொண்டு போக திரும்பியிருக்கிறது பார்!” பற்களைக் கடித்த வண்ணம் அவளை நோக்கி நெருங்கினான்.

வாளுடன் தன்னை நோக்கி வரும் திருவரங்கனைப் பார்த்த இரத்தினாதேவி, “அங்கேயே நில். என்ன நெருங்காதே” என்றாள் பதறி.

“இது வைகைப் புது வெள்ளம். உன்னை அடித்துக் கொண்டு போகும் வரை நீ இதைக் கட்டுப்படுத்த முடியாது” என்று சீற்றம் மிகுந்த குரலில் கூறிய அவன், மேலும் இரண்டடி எடுத்து வைத்தான்.

தரையில் சுருண்டு விழுந்த சாமந்தன், சமாளித்து எழுந்து, “ஆபத்து! ஆபத்து!” என்று உரக்கக் கூவலானான்.

விருந்தினர் மாளிகையைக் காவல் செய்து கொண்டிருந்த வீரர்கள் செவியில் அக்குரல் விழுந்தது. இரத்தினாதேவி தங்கியிருக்கும் அறை நோக்கி ஓடி வந்தனர்.

எதையும் செய்யத் தயாராகும் நிலையில் கையில் வாளுடன் கண்களில் கொலை வெறி மிளிர கோபத்துடன் இரத்தினாதேவியைப் பார்த்தவாறு திருவரங்கன் நிற்பதையும், அவள் கையிலும் குறுவாள் ஒன்று இருப்பதும், ஆனால் அந்த அழகிய கண்கள் அச்சத்தை உமிழ்ந்தபடி, காப்பாற்றுங்கள் என்ற நோக்கில் இவர்களைப் பார்ப்பதையும் அறிந்து, திருவரங்கனை நெருங்கினர்.

“இன்று இவளை முடிக்கப் போகின்றேன். அதாவது பொய்யான இவளின் அழகை முடிக்கப் போகின்றேன். என்னைத் தடுக்காதீர்!” என்று கூறி உரக்கச் சிரிக்கலானான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வீரர்களில் ஒருவன் சோழத்தளபதியிடம் தெரிவிக்க அங்கிருந்து ஓடினான். செய்தியறிந்து வீரசோழன் அவனைப் பழிவாங்க இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று எண்ணியபடி வீரர்களுடன் விருந்தினர் மாளிகை நோக்கி ஓடிவந்தான்.

அதற்குள் செய்தி காட்டுத் தீயென அரண்மனை முழுவதும் பரவியது.

இரத்தினாதேவி பற்றிப் பெண்களுக்கே உரிய பொறாமைக் குணத்தில் அரண்மனைப் பெண்டிர் அவளின் அழகு பற்றியும், மேனியின் நிறம் பற்றியும், அவளைச் சுற்றி அரசகுல இளைஞர்கள் சுற்றிவருவது பற்றியும், குறிப்பாக மதுராந்தகன் அவள் நினைவாகவே இருப்பது பற்றியும், மெல்லிய பேச்சாய் இதுநாள்வரை அவர்களிடையே புகைந்து கொண்டு வந்த விஷயம், இன்று வெளிப்படையாகப் பேசும் முக்கிய விஷயமாய்ப் போய்விட்டது.

சோழ நாட்டின் முன்னாளைய தளபதியின் மகள் மலர்விழி இதைக் கேட்டுத் துடித்தாள்.

அம்மாதிரி அவள் உணர்ச்சி வயப்படுவதற்கும் காரணமிருந்தது. ஏற்கனவே திருவரங்கனிடம் அவள் மனதைப் பறிகொடுத்திருந்தாள். அத்தகையவரா இரத்தினாதேவியிடம் காதல் கொண்டிருந்தார் என்பதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதனால் அரண்மனையின் முதல் அடுக்கில் பதட்டத்துடன் நின்றபடி, விருந்தினர் மாளிகையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரத்தினாதேவியின் அறையையடைந்த சோழத்தளபதி, திருவரங்கனை அங்கிருந்து போகும்படி எச்சரித்தார்.

ஆனால் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாது இன்னும் ஓரடி எடுத்து வைத்து அவளின் அருகே சென்றுவிட்டான்.

தான் தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் ஆபத்தில் முடியும் என்பதையுணர்ந்த வேளான், சற்றும் யோசிக்காது வாளுடன் அவளின் பக்கம் சென்றான். சட்டென்று இரத்தினாதேவியை அவ்விடத்திலிருந்து விலக்கித் தள்ளி, திருவரங்கன் வாள்முனை முன் தன் நெஞ்சை நிமிர்த்தி, இரு கைகளையும் இடுப்பில் ஊன்றியவாறு நின்று கொண்டான்.

உணர்ச்சி வேகத்தில் இவ்வளவும் இமைக்கும் பொழுதிற்குள் நடக்கும் என்று எதிர்பார்க்காத அவன் “நீங்கள் தேவையில்லாது என்னுடைய விஷயத்தில் குறுக்கிட்டுவிட்டீர்கள்” என்றான் ஆத்திரமாக.

“சோழத்தளபதிக்கு எது தேவையில்லை என்பது தெரியும்” என்று கூறி, பின்னால் வாளுடன் இருந்த வீரர்களைப் பார்த்துச் சாடை காட்டினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதைப் பார்த்து திருவரங்கன், தளபதி என்ன சாடை காட்டுகின்றார் என்று பின்னால் திரும்ப, இந்தச் சூழலைப் பயன்படுத்த விரும்பி, வீரசோழ வேளான் அவன் கையிலிருந்த வாளைத் தன் வாளினால் தாக்கி, அது தரையில் விழும்படிச் செய்தார்.

"இது பேடித்தனம்!" என்று கத்தினான். அதற்குள் வீரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். ஒருவன் கைகளில் விலங்கிட முயல, திருவரங்கன் விட்ட குத்தினால் "அப்பா!" எனத் தரையில் வீழ்ந்தான்.

சோழத்தளபதி ஆத்திரமுற்றுத் தன் கால்களில் முழு பலத்தையும் ஒன்று திரட்டி அவன் அடிவயிற்றுக்குக் கீழே உதைத்தான்.

இந்த அதிரடித் தாக்குதலால் நிலைகுலைந்துவிட்ட திருவரங்கன் மண்டியிட்ட நிலையில் தரையில் சாய்ந்தான்.

உடனே வாளை அவன் முதுகில் அழுத்தியபடி "சீக்கிரம்!" என்று வீரர்களை அவசரப்படுத்தினான்.

வெகு விரைவில் திருவரங்கன் கையில் விலங்கிடப்பட்டது. அடியின் பலத்தினால் சற்றே முனகியபடி எழுந்த திருவரங்கன் மிகக் கோபத்துடன் தளபதியை எரித்துவிடுவது போல் முறைத்தான்.

"ஒரு பெண்ணிடம் வீரத்தைக் காண்பிக்க முயல்பவனுக்கு இது போதும்!" என்று அவன் முதுகில் கை வைத்து வீரசோழ இளங்கோ வேளான், "போ" என வேகமுடன் தள்ள, கை விலங்குடன் தளபதியை அடிக்கப் பாய்ந்தான் அவன். இந்த அமளியில் சற்றே குழப்பம் நிலவியது. இறுதியில் வீரர்கள் திருவரங்கனை விலங்குடன் இழுத்துச் சென்றனர்.

முதலடுக்கிலிருந்தபடி இதைக் கண்ட மலர்விழி, என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து, இறுதியில் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தாள்.

பக்கத்திலிருந்த மதுராந்தகி சேடியிடம் நீர் கொண்டு வரச்சொல்லி அவள் வதனத்தில் தெளித்தாள். சிறிது நேரம் கழிந்து விழிப்புற்று, "அவரைச் சிறையிலிடாதீர்கள்! அவரைச் சிறையிலிடாதீர்கள்!" என்று உரத்தக் குரலில் கூறத் தொடங்கினாள்.

உடனே மதுராந்தகி "பதட்டம் வேண்டாம்!" என்று கூறியபடி அவளைத் தன் அறைக்கு அழைத்துச் செல்லலானாள்.

கூடியிருந்த பெண்டிர், "இதென்ன விசித்திரம்?" என்ற கேள்விக் குறியுடனே ஒருவரையருவர் பார்த்துக் கொண்டனர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் - 46

முதன்மந்திரி பிரமாதிராசரும், வெள்ளை முக்காடிட்ட உருவமும், சேதி நாட்டுக் குறுநில மன்னன் முத்தன்காமனும், அவர்களின் நம்பிக்கைக்குகந்த படைத்தலைவர்கள் இருவரும் அந்த இருட்டு அறையில் குழுமியிருந்தனர்.

அவர்கள் முகத்தில் சற்றே பதட்டம் நிலவியிருந்தது.

முதன்மந்திரி தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசலுற்றார்.

"கோட்டையின் பொறுப்பு சாளுக்கிய நாட்டைச் சேர்ந்த கங்கனுக்குத் தரப்பட்டுவிட்டது. முக்கிய இடங்களில் சாளுக்கிய வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். என்னைப் பதவி நீக்கம் செய்ய சக்கரவர்த்தி சம்மதித்துவிட்டதாகத் தெரிகிறது. வழி வழியாக இந்த மண்ணிற்குக் குருதி சிந்தி, தியாகங்கள் புரிந்த படைத்தலைவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்... முக்கியமாய் தன்மபாலரிடமிருந்து தளபதி பதவி பறிக்கப்பட்டு, அவசரக்காரனான வீரசோழ இளங்கோ வேளானுக்குத் தரப்பட்டுவிட்டது. இனி நமக்கு என்ன இருக்கிறது? என்பது போல நம்மாலும், நம்முடைய முன்னோர்களாலும் கட்டிக் காக்கப்பட்ட இந்தச் சோழப் பேரரசு எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. சோழச் சக்கரவர்த்தி சுயசிந்தனையற்று, ஆட வைத்தால் ஆடுபாவை போல் பதட்டத்துடன் நிதானமின்றி செயல்படுகின்றார். இதன் விளைவாய்ச் சோழர் படையில் வலங்கை, இடங்கை என்ற பிரிவெண்ணம் தலைதூக்கி அது முற்றி, எப்படி ஆகுமோ என்ற நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் எவ்விதம் செயல்பட வேண்டும் என்பதற்காகவே இங்கே நாம் கூடியிருக்கின்றோம்" என்று அனைவரையும் ஒருமுறை பார்த்தார் முதன்மந்திரி.

அனைவரும் அவர் சொல்வதை ஆமோதித்து அடுத்து என்ன சொல்லப் போகின்றார் என்பதற்காக ஆவலுடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் வீரன் ஒருவன் உள்ளே வந்து வெள்ளை முக்காடிட்ட உருவத்தின் காதில் எதையோ இரகசியமாக கூறினான்.

உடனே உருவம் சடாரென எழுந்து கோபத்துடன் பற்களைக் கடித்தது. கைகள் துடிக்க கண்கள் தீப்பிழம்பாய் ஜொலிக்கத் தொடங்கின.

எல்லோரும் பதட்டத்துடன் "என்ன... என்ன?" என்று வினவினர்.

"திருவரங்கனைச் சிறையிலடைந்துவிட்டார்களாம். அவனுக்கு மரணதண்டனை தர ஆலோசிக்கின்றார்களாம்!"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

முதன்மந்திரியின் முகத்தில் அதிர்ச்சி நிலவியது.

"அந்தப் பிள்ளை என்ன அப்படிக் குற்றம் செய்துவிட்டான்?"

"நம் அணியைச் சேர்ந்தவன் என்பதுதான் அவன் செய்த குற்றம்."

"இந்த அநியாயத்தை எதிர்த்தே ஆக வேண்டும்" என்று சேதி நாட்டு மன்னனான முத்தன்காமன் உரக்கக் கூற, "இனி அமைதியாய் இருக்க முடியாது. நாமும் நம் கைவரிசையைக் காண்பிக்க வேண்டியதுதான்" என்று உருவம் ஆத்திரத்துடன் கூறியது. பிரமாதிராசர் இடைமறித்தார்.

"அதைச் செய்ய நமக்கு நீண்ட நாழிகை தேவையில்லை. நம்மை ஆதரிக்கும் சோழ வீரர்களை அவர்களுக்கு எதிராய்த் திருப்பினாலே போதும். ஆனால் நம்மால் வளர்க்கப்பட்ட சோழப் பேரரசை நாமே அழிக்கக்கூடாது என்பதினால்தான் மௌனமாயிருக்கிறோம்!"

"மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. திடீரென மேலைச்சாளுக்கிய நாட்டிலிருந்து அவசரமாய் ஒற்றன் ஒருவன் வந்துவிட்டதால், பட்டம் கட்டும் நாளை தள்ளிப் போட்டுவிட்டு விக்கிரமாதித்தனும், இராஜசுந்தரியும் குந்தள நாட்டிற்குப் புறப்பட்டுவிட்டனர்" என்று குறுக்கிட்டுக் கூறியது உருவம்.

"அப்படி அவசரமாய்ப் புறப்பட என்ன விஷயம்?" என்றார் முதன்மந்திரி.

"நீண்ட நாளாய் விக்கிரமாதித்தன் இங்கே தங்கிவிட்டதால், குந்தள நாட்டின் மற்றொரு பகுதியை ஆண்டு வந்த அவன் தமையனான சோமேசுவரன் விக்கிரமாதித்தன் ஆட்சி செய்யும் பகுதியைத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றான் என்பதை ஒற்றன் மூலம் அறிந்தே புறப்பட்டுவிட்டான்."

"இதுவும் நல்லதுதான். மீண்டும் அவன் இங்கே திரும்பி வருவதற்குள், நாம் பழையாறையிலிருந்து இராசேந்திரனை தருவித்து அவனுக்கும் மதுராந்தகிக்கும் இரகசியமாய்த் திருமணத்தை நடத்திவிட வேண்டும்!" என்றார் முதன்மந்திரி.

"ஏன் இளவரசுப் பட்டத்தையே இராசேந்திரனுக்குக் கட்டிவிட்டால் என்ன?" - சேதிநாட்டுக் குறுநில மன்னன் குறுக்கிட்டுக் கேட்டான்.

பிரமாதிராசர் சற்று உரக்கவே சிரித்து, "முத்தன்காமன் மிகவும் அவசரம் காட்டுகின்றார்; இப்போதுள்ள சூழலில் அது வேண்டாம்! சமயம் வரும். அதுவரை நாம் பொறுத்திருக்க வேண்டியதுதான்" என்றார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“நீங்கள் பொறுத்திருந்து காரியம் ஆற்றும் வரை உங்களைவிட்டு வைக்க நாங்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல” - என்ற குரல் கேட்டுத் திகைத்து அனைவரும் திரும்பினர்.

அந்த இருட்டு அறைக்கும், கங்கைகொண்ட சோழபுர மாளிகையிலுள்ள பட்டத்தரசி உலகமுழுதுடையாளின் அந்தப்புர அறைக்கும் ஒரு இரகசிய வழி இருக்கிறது. இந்த வழியை உபயோகித்துத்தான் வெள்ளை முக்காடிட்ட உருவம், அரண்மனைக்கும் இதற்குமாக இதுவரை நடமாடிக் கொண்டு வந்தது. அந்த உருவத்தின் கையாளாக இருந்த வீரர்களில் ஒருவனை வலங்கைப் பிரிவைச் சேர்ந்த சோழ ஒற்றன் பொற்காசுகள் நிறையத் தந்து, தன் பக்கம் ஈர்த்துக் கொண்டான். அதன் விளைவு... வெள்ளை முக்காடிட்ட உருவத்தின் இரகசியங்கள் ஒற்றனுக்குத் தெரிந்துவிட்டது. தனக்குத் தெரிந்த விஷயத்தை ஒற்றன் சோழத்தளபதிக்குத் தெரிவிக்க, இந்தச் சந்தர்ப்பத்திற்காகவே இதுவரை காத்திருந்த அவர் இருட்டு அறையில் முதன்மந்திரி மற்றவர்களுடன் ஆலோசிப்பதையறிந்து சக்கரவர்த்தியிடம் இதுபற்றிக் கூறி அனைவரையும் கைது செய்ய உத்தரவு பெற்றுக் கொண்டு உருவத்தின் கையாளோடு ஐம்பது வீரர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு அங்கே வந்து சேர்ந்தார்.

அந்தச் சமயத்தில்தான் முதன்மந்திரி, இராசேந்திரனை இளவரசனாக்கும் விஷயத்தில் நாம் பொறுமையுடன் செயல்பட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

திரும்பிய அனைவரும் சோழத்தளபதி வீரசோழ இளங்கோ வேளான் இடுப்பில் கையூன்றியபடி மிடுக்காக நிற்பதைப் பார்த்துத் திகைத்துவிட்டனர்.

படைத்தலைவர் இருவரும் முத்தன்காமனும் வாட்களின் மீது கைகளை வைக்க, “நீங்கள் இருப்பது ஐந்து பேர். நாங்கள் ஐம்பது பேர்களுடன் இங்கே வந்திருக்கின்றோம்” என தளபதி கூறிக் கொண்டிருக்கும் போது வீரர்கள் வரிசையாய் சுரங்க வழியிலிருந்து வெளிப்பட்டு அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். அத்துடன் உருவிய வாளுடன் வந்த வீரர்களில் ஐவர் ஒவ்வொருவர் மார்பிலும் தங்களின் வாட்களது முனையைப் பதித்து நின்றனர்.

இந்த வழி இவர்களுக்கு எப்படித் தெரிந்தது? - குழப்பத்திலாழ்ந்த உருவம், வீரர்களின் நடுவே தன்னுடைய நம்பிக்கைக்குகந்தவனாயிருந்த சோழகங்கன் இருப்பதைக் கண்ணுற்று, இந்தத் துரோகியை அடையாளம் கண்டு கொள்ளாமல், தன்னுடன் சேர்த்துக் கொண்டதின் விளைவுதான் இவை என்று புரிந்து கொண்டு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கோபத்துடன் பற்களைக் கடித்தபடி, “சோழகங்கா! இப்போது திருப்திதானே உனக்கு?” என்று ஆத்திரத்துடன் கேட்டது.

கைகளைக் கட்டியபடி நின்று கொண்டிருந்த அந்தத் துரோகி தலை குனிந்து கொண்டான்.

“ஏன் நிற்கிறீர்கள்? அனைவருக்கும் விலங்கிடுங்கள்!” என்ற சீற்றம் மிகுந்த குரலில் உத்தரவிட்டான் சோழத்தளபதி.

உடனே பிரமாதிராசர் குறுக்கிட்டு, “எங்களை விலங்கிடும் அளவுக்கு நாங்கள் ஒரு குற்றம் செய்ததாகத் தெரியவில்லையே?” என்று அமைதியுடனே கூறினார்.

“இதற்குப் பதில் நான் கூறத் தேவையில்லை. உங்கள் மனசாட்சியே கூறும். ஒரு அரசுக்கு எதிராகப் போட்டி இளவரசனை உருவாக்க நினைக்கும் உங்கள் சிந்தனைக்கு என்ன பெயர் வைப்பது?” என்று கேட்ட சோழத்தளபதி, “சீக்கிரம். அரசர் நமக்காகக் காத்துக் கொண்டிருப்பார்” என்றான்.

அனைவர் கையிலும் விலங்கிடப்பட்டது.

“இது என்ன உனக்குத் தலைக்கு மேல் முக்காட்டுச் சீலை?” என்று கோபத்துடன் அதை விலக்க விலங்கிட்ட வீரன் திகைத்துவிட்டான்.

சோழத்தளபதிக்கும் அதிர்ச்சிதான். இருந்தாலும் அட்டகாசமாகச் சிரித்தபடி, “பல போர்களைக் கண்டு, பல பகைவர்களைப் பேடி போல் ஓட ஓட விரட்டிய சோழ நாட்டின் முன்னாளைய தளபதிக்கு ஏன் இப்படி ஒரு கோலம்?” என்று கேட்டான்.

“நாட்டிற்காக எடுத்த கோலமடா அற்பனே” - கர்ஜித்தார் பெரிய தன்மபாலர்.

“அப்படியா? நன்றாகவே இந்த உருவத்தில் நீங்கள் நடித்துள்ளீர்கள்! அதற்காக உங்களுக்கு ஒரு ஊரையே தரும்படி நான் சக்கரவர்த்தியிடம் கூறப் போகின்றேன்!”

“இதைக் கூறுவதைவிட நாட்டில் நிலவும் குழப்பத்தை நீக்க, நல்ல உறுதியான நடவடிக்கை எடுக்கும்படி கூறுவது நல்லது!”

“வாயை மூடுங்கள்! வயதிற் பெரியவர் என்று மரியாதை கொடுக்கின்றேன்!”

“வீரசோழ இளங்கோ வேளா! உனக்குத் தளபதி பதவி கிடைத்துவிட்டது என்ற மமதையில் பேசாதே! இதற்கெல்லாம் நீ...” என்று கூறிக் கொண்டிருக்கும் போது, “ஏன் நிற்கின்றீர்கள். ம்... இழுத்துச் செல்லுங்கள்” என்று உத்தரவிட்டான் சோழத்தளபதி.

மதுராந்தக வடவாற்றின் மெல்லிய ஓட்டத்தைப் பார்த்து, இரசித்தபடி உட்கார்ந்திருந்த அம்மையப்பன் பின்னாலிருந்து பெண்குரல் ஒன்று கேட்பதையறிந்து திரும்பிப் பார்த்தான்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

‘அட இவர்களா! அப்படி என்ன முக்கியம் பேச அரசமர மேடையை நோக்கி வருகின்றார்கள். ஒருவேளை இப்படியிருக்குமோ? எதுவாயிருந்தாலும் இதை ஒட்டுக் கேட்டேயாக வேண்டும்’ என்ற எண்ணத்தில் மேடையையட்டியிருந்த கருங்கல் மண்டபத்திற்குள் மறைந்து கொண்டான்.

அந்த மேடைக்கு அரசமரமும், வேம்பும் நடுநாயகமாயிருந்தது. மரத்திற்கு அப்புறமாக அம்மையப்பன் உட்கார்ந்திருந்ததால், கடார இளவரசியின் கண்களுக்கு அவன் புலப்படவில்லை. அதை நெருங்கிய இளவரசியும், சாமந்தனும் சுற்று முற்றும் பார்த்துவிட்டு யாரும் இல்லையென உறுதி செய்து மேடையில் உட்கார்ந்தனர்.

ஆற்று ஓட்டத்தின் இதமான சலசலப்புச் சப்தம் மாலை நேரத் தென்றலுடன் சேர்ந்து கொண்டதால், கேட்பதற்கு இனிமையாயிருந்தது. அத்துடன் மதுராந்தக வடவாற்றின் கரைப்பக்கமிருந்த பூஞ்சோலையிலுள்ள மலர்களின் நறுமணம் நாசிற்கு அருமையாயிருந்தது.

“ஆ... என்ன அற்புதமான இடம்!” - தன்னை மீறிய உணர்ச்சிப் பெருக்குடன் பாராட்டினாள் இரத்தினாதேவி.

சாமந்தன் குறுக்கிட்டான்.

“இப்படியேயிருந்தால் நாம் எப்போது தாயகம் திரும்புவது?”- அவன் பேச்சில் கடுமையிழைந்திருந்தது.

“இன்னும் பகை முடியவில்லையே? இராசேந்திரன் ஒவ்வொரு முறையும் நம்மிடமிருந்து தப்பித்துவிடுகிறானே!”

“அதற்காக எத்தனை நாள் இங்கேயிருக்க முடியும்? இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் கூடிய சீக்கிரம் இங்கே பெருங்கலகம் தோன்றும் போல் இருக்கிறது!”

இரத்தினாதேவி யோசனையிலாழ்ந்தாள். சிறிது கழிந்து சிந்தனை கலைந்தது. “அப்படியென்றால் இப்போதே ஊருக்குப் புறப்பட்டுவிடலாமா?” என்று கோபமாகவே கேட்டாள்.

“அதற்குச் சொல்லவில்லை. இராசேந்திரன் வேங்கி எல்லைக்குப் போயிருப்பதாகச் செய்தி கிடைத்துள்ளது. அங்கே போய் அவனைத் தீர்த்துவிட்டு, அப்படியே நம் நாட்டிற்குத் திரும்பிவிட்டால் என்ன?”

‘களுக்’கென்று கடார இளவரசி இகழ்ச்சியுடன் நகைத்தாள். “நல்ல வேலைதான் இது!” என்று சலிப்புடனே கூறிக் கொள்ளவும் செய்தாள்.

“இல்லையென்றால் நீயாவது ஒரு வழி சொல்லேன்!”



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இளவரசி அதற்கு மறுமொழி தராது ஆற்றின் பக்கம் பார்வையைத் திருப்பி சலசலவென்ற நீரின் ஓட்டத்தை இரசிக்கத் தொடங்கினாள்.

"கண்மணி இரத்தினா!" அன்புடன் யாரோ தன்னை அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பினாள். அங்கே... சோழ இளவரசனாக முடிசூடப் போகும் மதுராந்தகன், உதட்டில் குறுநகையோடு நின்று கொண்டிருந்தான். அவனைச் சுற்றி ஐந்தாறு வீரர்கள் இருந்தனர்.

'இவன் என் இங்கே வரவேண்டும்?' - திகைப்புடன் எழுந்து கொண்டாள்.

"நல்ல மாலை நேரம். சிலுசிலுக்கும் மெல்லிய பூங்காற்று. நிசப்தமான சூழ்நிலை. இவற்றை அனுபவிக்க ஒரு துணை வேண்டும் என்பதை நீ அறிந்து கொள்ளவில்லையா?"

உள்ளடங்கியிருந்த அவன் கண்களில் காமவெறி நிழலாடிக் கொண்டிருந்தது. அதைக் கண்டு, மனம் படபடவென அடிக்க, சாமந்தனைப் பார்த்தாள் கடார இளவரசி. அவன் ஆத்திரத்தோடு வாளின் மேல் கைவைத்தவாறு அவள் முன் நின்று கொண்டான்.

மதுராந்தகனுக்கு அதைப் பார்த்துச் சிரிப்பு தோன்றியது. "ஹோ... ஹோ"வென பெருங்குரலில் நகைக்கலானான்.

"என்னைச் சுற்றியுள்ள வீரர்களை உன்னால் சமாளிக்க முடியுமா?" - இடுப்பில் கையூன்றியபடியே சாமந்தனைப் பார்த்துக் கேட்டான்.

"ஒரு நாட்டின் இளவரசராகப் போகும் நீங்கள் இப்படிக் கீழ்த்தரமான முறையில் நடக்கலாமா?" - கோபத்துடன் வினவினாள் இரத்தினாதேவி.

"எது கீழ்த்தரம் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். வா இரத்தினா! உன் வாழ்க்கையில் எத்தனையோ ஆடவர்களைச் சந்தித்திருப்பாய். ஆனால் என் போன்ற அனுபவமிக்கவனின் கைகள் உன் மேனியில் பட்டிருக்க முடியாது என்பதை இந்த மதுராந்தகனை அணைப்பதின் மூலமே உணர்ந்து கொள்வாய்."

சாமந்தனுக்குக் கோபம் கொப்பளித்தது. பற்களைச் சப்தத்துடன் கடித்தான். விழிகளும் இரத்தச் சிவப்பாய் மாற வாளினை உருவிக் கொண்டான்.

"இன்னும் ஏன் நிற்கிறீர்கள். ம்..." - மதுராந்தகன் தன்னைச் சுற்றியுள்ள வீரர்களை அதட்ட அவர்கள் சாமந்தனை நெருங்கினர். எதற்கும் தயாரானாற் போல் அவனும் வீரர்களை எதிர்க்க வாட்போர் மூண்டது.

பதற்றமுற்ற இரத்தினாதேவி தனிமையில் நின்றவாறு சண்டையைக் கவனிக்கலானாள். இதுதான் நல்ல சமயமென்று எண்ணிய வருங்கால சோழ இளவரசன், அழகுச் சிலையாய் ஒய்யாரமாய் மெல்லிய பூங்கொடியாய் நின்று கொண்டிருந்த அவளின் மென் கைகளைப் பற்றினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“சீ, விடு கையை!”

“இத்தனை மென்மையான கைகளை இதுவரை அனுபவிக்காமல்விட்டது பெரிய தவறென்றே படுகிறது” - புன்னகையோடு கூறினான் மதுராந்தகன்.

பலங்கொண்ட மட்டும் கைகளே உதறி, அவனிடமிருந்து விடுபட்ட இரத்தினாதேவி, “நெருங்காதே!” என்று இடையிலிருந்த குறுவாளை எடுத்துக் கொண்டாள்.

மென்மையின் இலக்கணமான இவளால் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்ற அசாதாரண தைரியத்தில் “கோபம் கொள்வது கூட உனக்கு அழகையே தருகிறது” எனக் கூறியவாறு அவளை நோக்கி நெருங்கினான்.

“அரசகுமாரா! என்னைப் பற்றி உனக்குத் தெரியாது. நான் மான் அல்ல. பாயும் புலி!” என்று கூறிக் கொண்டிருக்கும் போதே, அவளை நெருங்கிய மதுராந்தகன், குறுவாளைப் பிடுங்கி எறியும் எண்ணத்தில் கரங்களைப் பற்ற முயன்றான். ஆனால் கைகள் வழுக்கிவிட, திரும்பவும் இன்னும் கொஞ்சம் பக்கமாய்ச் சென்று, கைகளைப் பற்ற முயன்றான்.

‘இந்தக் காமுகன் தன்னை அனுபவித்துத்தான் விடுவான். அதற்குள் எதையாவது செய்து, காப்பாற்றி கொள்ள வேண்டும்’ என்ற கட்டாயத்தின் பேரில் எழு உணர்ச்சி வேகத்தில், தான் என்ன செய்கின்றோம் என்ற சிந்தனையில்லாது, நீட்டிய அவன் கைகளில் சிக்காமலிருக்கச் சற்றுப் பின் வாங்கி, அதே வேகத்தில் குறுவாளை மதுராந்தான் வயிற்றில் பாய்ச்சினாள்.

“அம்மா!” -அலறியவாறு கொப்பளிக்கும் குருதி தரையில் ஓட, வயிற்றைப் பிடித்தபடிக் கீழே சாய்ந்தான்.

அப்போதுதான் அவளுக்கும், தான் என்ன செய்துவிட்டோம் என்று தெரிந்தது. முகம் வியர்க்க நெஞ்சு அச்சத்தின் காரணமாய்ப் படபடக்க கைகளும், கால்களும் இயங்காத நிலையில் ஓடத் துவங்கினாள். வீரர்களில் ஒருவன் இதைக் கவனித்துவிட்டான்.

“இளவரசர் கொல்லப்பட்டார்!” என்று உரக்கக் கூவினான். அதே ஆத்திரத்தில் வீரர்களுடன் போரிட்டுக் கொண்டிருந்த சாமந்தனின் விலாவில் தனது வாளைப் பாய்ச்சினான்.

சாமந்தனும், “ஹா!” என மரண ஓலமிட்டுக் கீழே விழுந்தான். அனைத்து வீரர்களும் ஓடும் இரத்தினாதேவியைத் துரத்த முயன்றனர். மண்டபத்திற்குள் மறைந்து கொண்டிருந்த



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அம்மையப்பன் இத்துர்ப்பாக்கிய நிகழ்ச்சி நடந்துவிட்டதற்காக மனம் வருந்தியவாறு மதுராந்தகனுக்கு உயிர் இருக்கிறதா என்பதை அறிவதற்கு அவனருகில் வந்தான்.

மதுராந்தகனுடன் கூட வந்த வீரர்களில் ஒருவன் வழியில் தன்னுடைய சுற்றத்தினரைப் பார்த்துவிட்டதால், "நீங்கள் போய்க் கொண்டிருங்கள்; பின்னால் வருகின்றேன்! என்று சக வீரர்களிடம் இரகசியமாய்ச் சொல்லிவிட்டுப் பின் தங்கிவிட்டான். சுற்றத்தினரை ஒரு வழியாய்ப் பேசி, அனுப்பிவிட்டு, "இளவரசர் அங்கே காத்துக் கொண்டிருப்பார்; விரைந்து செல்ல வேண்டும்!" என்ற எண்ணத்துடனே, வேகமாய் ஆற்றை நோக்கி ஓடிவந்தான்.

அவன் வந்த சமயம், இரத்தினாதேவியைத் துரத்திச் சென்ற வீரர்களும், அவளும் வெகு தூரம் சென்றுவிட்டதால், ஓடிவந்த வீரன் கண்களுக்கு அவர்கள் புலனாகவில்லை. அதனால் மதுராந்தகனின் உயிரற்ற உடலின் அருகில் அம்மையப்பன் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான். அடுத்து நொடியே அவன் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது.

'இடங்கை வகுப்பினரான இவன் முதலமைச்சரின் ஆள். மதுராந்தகனைக் கொன்றுவிட்டால், இராசேந்திரனுக்குச் சுலபமாய் இளவரசுப் பட்டம் கட்டிவிடலாம் என்ற எண்ணத்தின் காரணமாய், வருங்கால சோழ இளவரசரைக் கொன்றிருக்க வேண்டும்.' இவ்விதம் அவன் கணக்குப் போட்டு, வாளை உருவியவாறு, "இராஜத் துரோகியே, என்ன காரியம் செய்துவிட்டாய்?" என்று அம்மையப்பன் மேல் பாய்ந்தான்.

ஏற்கனவே மதுராந்தகன் கொலையால் மன சஞ்சலமுற்றிருந்த அம்மையப்பன், தன்னை நோக்கி ஓடி வந்த வீரன், கொலைக் குற்றத்தைத் தன் மீது சுமத்தும் நோக்கில் வாளுடன் பாய்வதையறிந்து, தற்சமயத்திற்கு இவனிடமிருந்து தப்பிப்பதுதான் சாலச் சிறந்தது என எண்ணி, சிறிது குனிந்து அதே போக்கில் வீரனையும் கீழே தள்ளிவிட்டான்.

வாள் ஒரு பக்கமும், அவன் மற்றொரு பக்கமுமாக விழ, இனிமேல் இங்கிருப்பது அவ்வளவு புத்திசாலித்தனமான விஷயமல்ல என்று கருதி, மண்டபத்திற்குள் புகுந்து இரகசிய வழி மூலம் இருட்டு அறையை நோக்கி நடக்கலானான் அம்மையப்பன்.

கீழே விழுந்த வீரன், சமாளித்து எழுந்தான். அம்மையப்பன் எங்கேயென சுற்றுமுற்றும் பார்த்தான். ஆளைக் காணாததால், 'நிச்சயம் இவன்தான் கொலையைச் செய்திருக்க வேண்டும்' என ஊர்ஜிதம் செய்து கொண்டு "இடங்கைப் பிரிவினரை இன்று ஒரு கை பார்க்க வேண்டியதுதான்" என்று ஆத்திரத்துடன் கூறியபடி, உயிரற்ற மதுராந்தகன் உடலைத் தோளில் சுமந்தவாறு "கொலை... கொலை!" என்று கூவியவாறு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கங்கைகொண்ட சோழபுரக் கோட்டையை நோக்கி வெறிபிடித்தவன் போல் ஓடத் தொடங்கினான்.

## அத்தியாயம் - 48

இரகசிய வழி மூலம் இருட்டு அறையையடைந்த அம்மையப்பன், அங்கே யாரும் இல்லாததைக் கண்டு, பெரியவர் எங்கே போயிருப்பார்? என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

சப்தமின்றி இருந்தது அவ்வறை. ஒன்றும் புரியாமல் அவன் திகைத்து நிற்கும் போது, சுரங்க வழியிலிருந்து ஒரு உருவம் வெளிப்பட்டு இவனை நோக்கி ஓடி வந்தது.

அது யார் என புரிந்து கொள்வதற்குள் அவனையும் இழுத்துக் கொண்டு, இரகசிய வழி மூலம் ஓடத் தலைப்பட்டது.

சோழ நாட்டின் தளபதியாயிருந்த தன்மபாலர் ஏன் இப்படி என்னை இழுத்துக் கொண்டு ஓட வேண்டும்? இது எதற்கு? - என்பதற்குள், அவர்கள் பின்னால் பத்துப் பேருக்கு மேல், "விடாதே பிடி!" என்று கூக்குரலிட்டபடி ஓடிவரும் சப்தம் கேட்டது.

"வீரர்கள் தளபதியைத் துரத்துகின்றனர் - அதிலிருந்து தப்பிக்க ஓடிவருகின்றார் என்று புரிந்து கொண்ட அம்மையப்பன் தளபதியின் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓடலானான்.

இருவரும் மண்டபத்திலிருந்து வெளிப்பட்டு, அரசமர மேடைக்கு வந்து சேர்ந்தனர். "இனி எந்தப் பக்கம் ஓடுவது?" என்று கேட்டான் அம்மையப்பன். பெரிய தன்மபாலர் சுற்று முற்றும் பார்த்து ஆற்றின் கரையோரமாயிருந்த அடர்ந்த புதரின் பக்கம் தற்சமயத்திற்கு ஒளிந்து கொள்ளலாம் என அங்கே சென்று மறைந்து கொண்டனர்.

பின்னால் துரத்திக் கொண்டு வந்த வீரர்களும், கருங்கல் மண்டபத்திலிருந்து வெளிப்பட்டு நான்கு பக்கமும் பார்வையைச் சுழலவிட்டனர்.

சோழத்தளபதி வீரசோழ இளங்கோ வேளானால் கைது செய்யப்பட்டு, இருட்டு அறையிலிருந்து சுரங்க வழி மூலம் அழைத்துச் செல்லப்பட்ட பெரிய தன்மபாலர் எப்படித் தப்பினார்? அதை நினைக்கும் போது அவருக்கே பிரமிப்பாக இருக்கிறது.

குறுகலான அச்சிறிய வழியில் காற்றும் இல்லாமல் வெளிச்சமுமின்றி தட்டுத் தடுமாறி அனைவரும் செல்லும் போது, பெரிய தன்மபாலர் வேண்டுமென்றே மயங்கி விழ வீரசோழ இளங்கோ வேளான் பத்து வீரர்களை அவரைச் சுற்றி நிறுத்திவிட்டு, "மயக்கம் தெளிவித்து அழைத்து வாருங்கள்" என்று போய்விட்டான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நீர் கொண்டு வர ஒரு வீரன் சென்றுவிட, இன்னும் ஒன்பது பேர் அவரைச் சூழ்ந்து கொண்டனர். "விலங்கைத் தளர்த்துப்பா. பாவம் முன்னாள் தளபதிக்கு அதிர்ச்சியின் விளைவால் மயக்கம் ஏற்பட்டிருக்கும்!" என்றான் ஒரு வீரன்.

அவன் கூறியது போல விலங்கு தளர்த்தப்பட்டது. நான்கு வீரர்கள் சற்றுத் தள்ளி கூட்டமாய் நிற்க, இருவர் "பெரிய தொல்லையாய்ப் போய்விட்டது" என சலிப்புற்று தரையில் அமர்ந்து கொண்டனர். பாக்கி மூவர் பெரிய தன்மபாலரைச் சுற்றி நின்று கொண்டனர். இதுதான் சந்தர்ப்பம் என தளர்த்தப்பட்ட விலங்கால் ஒருவன் முகத்தில் ஓங்கி அடிக்க, 'பளக்'கென்று விலங்கு முறிந்தது. அவன் "ஐயோ!" என்று அலறவும் ஒரு நொடியையும் வீணாக்க விரும்பாமல் அருகிலிருந்த வீரன் கையிலிருந்த வாளை அதிரடித் தாக்குதல் மூலம் கைப்பற்றி அவ்வாளினைக் கொண்டு, இரு வீரர்களைக் காயப்படுத்திவிட்டு, இருட்டு அறையை நோக்கி ஓடினார்.

*****

**அ**தன் பிறகு நடந்த நிகழ்ச்சிகள் அனைவருக்கும் தெரிந்த ஒன்றே - "ஓடி வந்தவர்கள் எங்கே போயிருப்பார்கள்?" ஒருவன் வினவினான்.

"இங்கேதான் எங்கேயாவது புதர். செடி, கொடி என மறைந்திருக்கலாம். நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்தால் தெரிந்து போகிறது!" என்றான் அவர்களில் ஒருவன். அவன் சொன்னதை ஆமோதித்து தன்மபாலரைத் தேடும் பணியில் அனைவரும் இறங்க, புதர் மறைவில் ஒளிந்திருந்த இருவருக்கும் 'தட்... தட்' என்று இதயம் அடித்துக் கொண்டது.

"இவர்களை எதிர்த்துத்தான் ஆக வேண்டும் போலிருக்கிறதே!" என்று கூறியபடி அம்மையப்பன் பக்கம் திரும்பினார் தன்மபாலர்.

அதற்குள் கங்காபுரிக் கோட்டைக்குள்ளிருந்து பெரும் கூச்சல் கேட்டது.

பெரிய தன்மபலரைத் தேடிக் கொண்டிருந்த வீரர்கள், "அது என்ன கூச்சல்?" என்று திரும்பினர்.

"ஒருவேளை. முன்னாளைய தளபதி அவரின் ஆதரவு வீரர்களுடன் கோட்டையைக் கைப்பற்ற முயற்சி செய்திருக்கலாம்" - வீரன் ஒருவன் சொன்னதை உண்மையென்று நம்பிய மற்ற வீரர்கள், "ஆமாம். ஆமாம்! வாருங்கள் கோட்டையைக் காப்பாற்றுவோம்!" என தேடுவதை நிறுத்திவிட்டு அனைவரும் கங்காபுரிக் கோட்டையை நோக்கி ஓடினர்.

ஏறக்குறைய ஐம்பது பேர்களுக்கு மேல் ஓடுவதைக் கண்ட பெரிய தன்மபாலர் அம்மையப்பனிடம், "அது என்ன திடீரென்று கோட்டையில் கூச்சல்?" என்றார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சற்று முன்பு அங்கே நடந்த நிகழ்ச்சி முழுவதையும் ஒன்றுவிடாமல் கூறினான் அம்மையப்பன். அதைக் கேட்ட பெரிய தன்மபாலர் மதுராந்தகன் கொலை செய்யப்பட்டதற்காக வருந்தினார்; அதன் விளைவுதான் தற்சமயம் கோட்டைக்குள் கூச்சல் கிளம்பியிருக்கிறது! இன்னும் சிறிது நாழிகைக்குள் அது கலவரமாய் கூட உருவெடுக்கலாம். 'என்ன செய்வது?' என்று உதட்டைக் கடித்தபடியிருக்க இரத்தினாதேவியின் கைகளைக் கயிற்றால் பிணைத்து அவளை இழுத்துக் கொண்டு ஐந்து வீரர்கள் அப்பொழுது வந்து சேர்ந்தனர்.

"இவளையும் பிடித்துவிட்டார்கள் போலிருக்கிறதே!"- மெல்லிய குரலில் அம்மையப்பனிடம் கூறினார் தன்மபாலர்.

"பாவம். இவளின் நிலை இப்படியா ஆக வேண்டும்?" - வருத்தப்பட்டான் சிவபக்தன்.

வீரர்களுடன் வந்து கொண்டிருந்த இரத்தினாதேவி "எனக்குத் தாகமாயிருக்கிறது!" என்றாள்.

கைக்கட்டை அவிழ்த்து வீரன் ஒருவன் உருவிய வாளுடன் காவலுக்கு வர, நீர் குடிப்பதற்காக ஆற்றை நோக்கி நடந்தாள்.

அவள் கண்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்த சாமந்தனின் உடலைப் பார்த்தன. துயரம் அதிகமாக, விழிகளில் நீர் பெருக முகத்தை மூடிக்கொண்டு விம்மத் தொடங்கினாள். எனக்காக துணை வந்தவன் இன்று என் நிமித்தமாய் உயிரைவிட்டுவிட்டான். நெஞ்சம் அடைக்க சொல்லமாட்டாத வேதனையின் காரணமாய் 'ஓ'வென அழ ஆரம்பித்தாள்.

"தண்ணீர் குடிக்கப் போகிறாயா? இல்லை..." என்று வீரன் அதட்ட அழுவதை நிறுத்தித் திரும்பினாள். அவன் கையிலிருந்த வாள் பளபளவென்று பிரகாசித்தது. இமைப்போதில் அவ்வாளைப் பற்றிய இரத்தினாதேவி தன் வயிற்றுக்குள் அதைச் செலுத்திக் கொண்டாள்.

"அம்மா!" -வீரிட்ட அவள் குரல் அப்பகுதியையே அதிர வைக்க அந்தக் குரலை அடக்குவது போல், கங்கைகொண்ட சோழபுரக் கோட்டையிலிருந்து பேரிரைச்சல் கிளம்பியது. என்ன என்பது போல் ஐந்து வீரர்களும் திரும்பினர். கோட்டையின் உச்சியில் வீரர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடும் சப்தமும், தீப்பந்தங்களுடன் ஆங்காங்கே 'வெட்டுங்கள்! குத்துங்கள்!' என்ற கூச்சலும் அதைத் தொடர்ந்து பெண்கள் ஓலமிடும் ஓசையும் கேட்டது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"என்ன குழப்பம்?" என்று ஒருவரையருவர் கேட்டுக் கொள்ள...

"முந்தையத் தளபதி கோட்டையைக் கைப்பற்றியிருப்பாரோ?" -ஒருவன் ஐயத்தைக் கிளப்பினான்.

"இருக்கலாம். இருக்கலாம். வாருங்கள் கோட்டையைக் காக்க முயல்வோம்!"

ஐந்து வீரர்களும் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் இரத்தினாதேவியைப் பற்றிக் கவலைப்படாது, கங்காபுரியை நோக்கி, "வெட்டுங்கள்; கொல்லுங்கள்!" என்று முழக்கமிட்டபடி வேகமாய் ஓடினர்.

புதரிலிருந்து வெளிப்பட்ட தன்மபாலர் சிரித்துக் கொண்டே, "வீரர்களிடையே இவ்வளவு பயம் என்னைப் பற்றி இருப்பது சந்தோஷம்" என்றார் மெல்லிய குரலில். பிறகு குற்றுயிராயிருக்கும் இரத்தினாதேவியை நோக்கிச் சென்றார். அவருடன் அம்மையப்பனும் சென்றான்.

அவனைப் பார்த்த இளவரசி மெல்ல புன்முறுவலித்தாள் "இனி... நான்..." -அவள் கண்கள் மேல் நோக்கி செருகின. "என் பகைவன் இராசேந்திரனைக் கொன்று..." அதற்கு மேல் வார்த்தை வராமல் உயிர்த்துடிப்பு பொட்டென அடங்கியது. ஆனால் கோட்டையிலிருந்து தொடர்ச்சியாய்க் கிளம்பிக் கொண்டிருந்த பேரிரைச்சல் இரத்தினாதேவியின் உயிரில்லாத உடலைக் கவனிக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவில்லையே!

"என்ன அது கூச்சலும் குழப்பமும். ஒருவேளை கலகம் தோன்றிவிட்டதோ?"-அம்மையப்பன் பதட்டத்துடன் வினவினான்.

"அப்படித்தானிருக்கும். இல்லையென்றால் இவ்வளவு பெருங்கூச்சல் தோன்ற வழியில்லை!" என்ற அவர் அம்மையப்பனிடம், "வா, கோட்டைக்குள் செல்வோம். முதன்மந்திரியையும், பட்டத்தரசியையும் நாம் காப்பாற்றியாக வேண்டும்!" என்றார். இருவரும் மிக வேகமாய் இரகசிய வழி மூலம் இருட்டு அறையை அடைந்தனர்.

## அத்தியாயம் - 49

**ப**ழையாறை மாநகரின் தெருக்கள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தன. அங்காடிகள் மூடப்பட்டு ஆள் அரவமின்றி இருந்தன. மேலை இராஜவீதியான அத்தெருவில், திருவிழாவிற்குக் கூடினது போன்று எப்போதும் மக்கட்கூட்டம் 'ஜே! ஜே!' என இருக்கும். ஆனால் இப்போதோ... சொல்வதற்கே வார்த்தைகள் கிடைக்கவில்லை.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வீதியின் ஓரமாய் மனித உடல்கள் பல சிதைந்து கிடக்க அதற்குப் பக்கத்தில் நாயும், காகமும் சுற்றித் திரிந்து கொண்டிருந்தன.

இருபது பேர் கையில் ஆயுதங்களுடன் ஒரு நடுத்தர வயது மனிதனைத் துரத்திக் கொண்டு வந்தனர். அவன் காதில் குண்டலமும் கையில் பொன்னாலான வளையமும் அணிந்திருந்தான்.

இடுப்பிலிருந்த ஆடை நழுவ அதை ஒரு கையால் பிடித்தபடி, உயிர்தப்பினால் போதுமென, மேலாடையைப் பற்றிய கவலையின்றி வேகமாய் ஓடி வந்து கொண்டிருந்தான். ஒரு திருப்பத்தில் அவன் கால் இடற அதன் காரணமாய்ப் பின்னால் வந்த கலகக்காரர்கள் கையில் சிக்கிக் கொண்டான். ஒருவன் காதிலிருந்த குண்டலத்தைப் பிடுங்க முயல, “ஒன்றும் செய்யாதீர்! வேண்டுமானால் கழற்றி தருகின்றேன்!” என்றான் நடுத்தர வயது மனிதன்.

வெறியர்களின் “ஓ” என்ற பேரிரைச்சலின் நடுவில் அவன் கெஞ்சியது எடுபடவில்லை. இரத்தம் சொட்ட சொட்ட பாதிச் சதையோடு இரு குண்டலங்களையும் ஒருவன் அறுத்துக் கொண்டான்.

“ஐயோ!” என அறுந்த காதினைப் பிடித்தபடி தரையில் அவன் உட்கார்ந்து அலற, “ஆகா! இந்தப் பொன் வளையம்!” என்றான் ஒருவன். “இது வேண்டுமா?” என்று கேட்ட இன்னொருவன், தன் கையிலிருந்த கத்தியால் அந்த மனிதனின் கைகளை...

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியை முதலடுக்கிலிருந்த சாளரத்தின் மூலம் பார்த்துக் கொண்டிருந்த காரனை விழுப்பரையனின் இரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. கைகளைப் பிசைந்தபடி பற்களைக் கடித்து, “நிறுத்துங்கடா வெறி நாய்களே!” என்றான் உரக்க.

அந்த அறையிலேயிருந்த சிறிய தன்மபாலரும் இராசேந்திரனும், “என்ன விழுப்பரையா, என்ன நடந்துவிட்டது?” என்று வினவினர்.

நடந்ததை விவரித்தான்.

“அப்படியென்றால் கங்கைகொண்ட சோழபுரத்தில் தோன்றிய கலகம் இங்கேயும் பரவிவிட்டதா?”

வீரன் ஒருவன் பரக்கப் பரக்க ஓடி வந்தான்.

“சோழப் பேரரசர் கொலை செய்யப்பட்டாராம்!” - துக்க மிகுதியால் வார்த்தைகள் அடங்கிப் போக, “ஓ” என அழலானான்.

"சக்கரவர்த்தியா?" - பட் பட் என்று தலையிலடித்துக் கொண்ட இராசேந்திரன், சுவரின் மீது சாய்ந்து கொண்டான். சிறிய தன்மபாலருக்குக் கண்கள் கலங்கின. குனிந்து துடைத்துக் கொண்டார்.

படபடவென்று கதவிடிக்கும் ஓசை-

"யாரோ இடிக்கிறார்கள்!" சாளரத்திலிருந்து வீரன் கீழே பார்க்க நடுத்தர வயது மனிதனைக் கொன்று, அவனது உடமைகளைக் கைப்பற்றிய கொள்ளைக்காரக் கும்பல் மாளிகையின் கதவை உடைத்தெறியும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

"என்ன சப்தம் கீழே?" - சிறிய தன்மபாலர் வீரனைக் கேட்டார்.

"ஏறக்குறைய இருபது பேர் கனமான பெரிய மரத் துண்டைத் தோளில் சுமந்தபடி, உடைக்க முயல்கின்றனர்."

"என்னது?" - ஆத்திரத்துடன் ஓடி வந்தான் இராசேந்திரன்.

அனைவரின் செவிப்பறையையும் கிழிப்பது போல் சப்தம் பெரியதாகக் கேட்டது.

"இவர்கள் தலையெழுத்து இன்றோடு முடியப் போகிறது."

ஆத்திரத்துடன் கூறிய விழுப்பரையன் வாளினை உருவிக் கொண்டான்.

என்ன செய்வதென சிறிய தன்மபாலருடன் ஆலோசனை கலந்தான் இராசேந்திரன்.

"நாம் இங்கே தங்கியிருப்பது இவர்களுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. சோழச் சக்கரவர்த்தி கொலையுண்ட விஷயம் இக்கலகக்காரர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதற்குக் காரணம் நாம்தானென்று எண்ணி, நம்மைத் தீர்த்துக் கட்டவே கதவை இடிக்கின்றார்கள்! இந்த இருபது பேரைச் சமாளிப்பது பெரிய விஷயமில்லை. சில காரணங்களை முன்னிட்டுப் பின்பக்க வழியாக வெளியேறிவிடுவதே நல்லதென நினைக்கிறேன்!" என்றார் சிறிய தன்மபாலர்.

இராசேந்திரன் வாய்விட்டுச் சிரித்தான்.

"துணைத்தளபதியாயிருந்தவருக்குத் திடீரென என் கோழை எண்ணம் தோன்றிவிட்டது?"

"பின்பக்கமாய்ச் செல்வது கோழைத்தனமல்ல; விவேகமான காரியமே. சக்கரவர்த்தியும், மதுராந்தகனும் இறந்துபட்ட நிலையில், மாபெரும் இச்சோழப் பேரரசுக்கு நீங்கள்தான் எல்லாம்! அதனால் உங்களுக்கு ஏதும் நேராமல் பார்த்துக் கொள்ளுவது என்னுடைய கடமை!"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சிறிய தன்மபாலரின் வார்த்தைகளைக் கேட்ட இராசேந்திரன், மேல்விட்டத்தைப் பார்த்தவாறு சிந்தனையில் மூழ்கினான்.

அதைக் கலைக்கும் விதத்தில் மாளிகைக் கதவு ‘பளக்’கென முறிந்தது.

“இனி தாமதிப்பது ஆபத்தைத் தரும். விழுப்பரையா! உள்ளே நுழைபவர்களை எதிர்த்துப் போரிடு. நானும் வருகின்றேன்” - இடையிலிருந்து வாளை எடுத்த இராசேந்திரன், இன்னொரு கையில் வேலினையும் ஏந்திக் கொண்டான்.

“நீங்கள் இங்கேயே இருங்கள். நாங்கள் சமாளித்துக் கொள்கிறோம்!” - சிறிய தன்மபாலர் இரு கைகளிலும் வாளைப் பற்றியபடி கூறினார்.

மாளிகைக் கதவு படாரென்ற சப்தத்துடன் கீழே விழுந்தது. உள்ளே நுழைந்த அனைவரும், “அரசர் கொலை செய்யப்படுவதற்குக் காரணமான அயோக்கியர்கள் எங்கே?” என்று கேட்டபடி முன்கூடமெங்கும் தேடத் துவங்கினர். விழுப்பரையன் அவர்களுக்குத் தெரியும்படிச் சற்று முன்னால் வந்து நின்றான்.

“அதோ!”-அவர்களிலொருவன் இவனைக் கவனித்துவிட அனைவரும் முதலடுக்கிலிருந்த விழுப்பரையனைக் கொல்வதற்கு மரப்படியேறினர். அது மிகவும் குறுகலாயிருந்ததால், ஒரே சமயத்தில் ஐந்து பேருக்கு மேல் மேலே வர முடியவில்லை. இதைப் பயன்படுத்திய காரனை விழுப்பரையன் வேலை எடுத்து அவர்களின் மீது வீசினான். முன்னால் வந்தவனின் மார்பில் அது பாய, “ஹா!” என சாய்ந்தான். பின்னால் வந்தவன் ஆத்திரமுற்று வாளுடன் விழுப்பரையனை நோக்கி வர, சிறிது ஒதுங்கி அதே வேகத்தில் அவனது விலாவில் தன் வாளினைப் பாய்ச்சினான்.

சிறிய தன்மபாலர் வாளினைச் சுழற்றியபடி கலகக்காரர்கள் மத்தியில் பாய்ந்தார். ‘சட் சட்’ என்று ஐந்து பேர்கள் உயிரிழந்துவிடவே, பின்னாலிருந்தவர்கள் “இன்னும் அதிக பேருடன் வருவோம்! வாருங்கள்” என அங்கிருந்து திரும்பத் தொடங்கினர். அவர்களை வெளியில்விட்டால் ஆபத்து என்று உணர்ந்த இராசேந்திரன், தன் கையிலிருந்த வேலினால் வாயிலை நோக்கிச் சென்றவனைப் பார்த்து வீசினான். அது குறிதவறாது அவனது மார்பில் தைக்க, மரண ஓலமிட்டபடி கீழே சாய்ந்தான். தொடர்ந்து இன்னும் இரு வேல்களை இராசேந்திரன் அவர்களின் மீது வீசினான். அம்பெனப் பறந்த அவ்வேற்களும், அடுத்தடுத்து இருவரைக் கீழே வீழ்த்தியது. காரனை விழுப்பரையனும் சிறிய தன்மபாலரும் மரப்படியில் ஏறியவர்களைத் தள்ளிக் கொண்டு போய் முன்கூடத்தையடைந்து யாரும் வெளியேறாதவாறு வாயிலை அடைத்து நின்றனர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இராசேந்திரன் வாளினைச் சுழற்றிய வண்ணம் எஞ்சியிருந்தவர்களை மூர்க்கத்தனத்துடன் தாக்கத் துவங்கினான். அத்தாக்குதலின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத கலகக்காரர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுச் சரணடையும் நிலையில் கைகளை மேலே தூக்கிக் கொண்டனர். அனைவரும் விழுப்பரையனால் சுற்றி வளைக்கப்பட்டனர்.

இராசேந்திரனும் மற்றவர்களும் புரவியிலேறி, பழையாறை நகரத் தெருக்களில் வலம் வந்து கொந்தளிப்பிற்குக் காரணமானவர்களைத் துரத்திவிட, ஆங்காங்கே பரவியிருந்த கலகம் மெல்ல அடங்கத் தொடங்கியது.

ஏறக்குறைய ஒரு நாட் பொழுது உள்ளேயே அடைபட்டுக் கிடந்த மக்கள் சிறிது சிறிதாக வெளியே வரத் தொடங்கினர்.

இராசேந்தினும் சிறிய தன்மபாலரும் புரவியில் வருவதைக் கவனித்த அவர்கள் கலகம் ஒழிந்துவிட்டதென்ற நம்பிக்கையில் “இராசேந்திரர் வாழ்க! சிறிய தன்மபாலர் வாழ்க!” என்று முழக்கம் செய்தனர். அரசுக்கு விசுவாசமிக்க வீரர்கள் நூற்றுக் கணக்கில் சேர, மக்களும் ஆயிரக்கணக்கில் கூட ஆரம்பித்தனர்.

காரனை விழுப்பரையனை நாடுகாவல் அதிகாரியாக நியமித்த இராசேந்திரன், அவனுக்குத் துணையாக இருபது வீரர்களை அமர்த்தி, பழையாறையின் அமைதியைக் காக்கும்படி உத்தரவிட்டான்.

அப்பொழுது மிகவேகமாய் ஒரு குதிரை பழையாறை மாநகரை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தது. அதன் மேல் அம்மையப்பனிருந்தான். தூரத்தில் தெரிந்த மாளிகைக் கிடையில் எழுந்த புகை மண்டலம் வானை நோக்கிப் பரவியிருந்தது. அதைப் பார்த்து இங்கேயும் கலகத்தின் தீவிரம் அதிகமாகத்தானிருக்கிறதென்று எண்ணியபடி புரவியை நிறுத்தினான் அவன். ஆனால் அவசியம் இராசேந்திரனைப் பார்த்துத்தான் தீர வேண்டும்! அதற்கு என்ன செய்வது? சிந்தித்தபடி வருவது வரட்டுமென்று புரவியை மீண்டும் வேகமாய் ஓட்டத் துவங்கினான்.

நகரின் நுழைவாயிலேயே குதிரை நிறுத்தப்பட்டது.

கலக வீரர்கள்தான் இவர்களோ? என அவர்களைப் பார்த்தவாறு யோசனையிலாழ்ந்த அம்மையப்பன், தூரத்தில் காரனை விழுப்பரையன் புரவியில் வருவதைக் கண்டு சந்தோஷம் கொண்டான்.

பரவாயில்லையே! பழையாறை இன்னும் நம்மவர் கையில்தானிருக்கிறது - என்ற எண்ணத்துடனே, “விழுப்பரையா!” என்றான் உரக்க.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அருகில் வந்த அவன், "யார் அம்மையப்பனா? என்ன விஷயம்?" என வினவி, உள்ளே விடும்படி வீரர்களுக்கு உத்தரவிட்டான்.

இருவரும் ஒருவரையருவர் நலம் விசாரித்தவாறு இராசேந்திரன் தங்கியிருக்கும் மாளிகை நோக்கிச் சென்றனர். கலகத்தின் விளைவாய் நகரம் பெரும் அழிவிற்குள்ளாயிருக்குமென்று கணக்குப் போட்டிருந்த அம்மையப்பனுக்கு மக்கள் பயமின்றி வீதியில் நடமாடுவதையும், பூரண அமைதி நிலவுவதையும் கண்டு, சோழப் பேரரசின் எதிர்காலம் இனி அவ்வளவுதான் என்று எண்ணியிருந்த அவன் உள்ளத்தில் இப்போது நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியது. அவ்வுணர்வோடு இராசேந்திரனைச் சந்தித்து வணங்கி நின்றான்.

"என்ன சிவபக்தரே! எப்படியிருக்கின்றீர்? கங்கைகொண்ட சோழபுரத்தின் நிலை எவ்விதமிருக்கிறது?"

"நிலமை சீர்பட்டுவிட்டது என்று சொல்வதற்கில்லை. தங்களைப் பட்டத்தரசியாரும் முதன்மந்திரியும் உடனே புறப்பட்டு வரச் சொன்னார்கள்!"

"சோழச் சக்கரவர்த்தியைப் பற்றி செய்தி ஒன்று கேள்விப்பட்டேன். அது...?" என்று அவனைப் பார்க்க,

"உண்மைதான்!" என்றான் வருத்தமான குரலில்.

"எப்படி நேர்ந்தது?"- துயரம் மிகுந்த குரலில் கேட்டான் இராசேந்திரன்.

"ஆற்றங்கரையில் என்னையும், பெரிய தன்மபாலரையும் துரத்தி வந்த வீரசோழ இளங்கோ வேளானின் ஆட்களிடம் சிக்காமலிருக்க புதரில் மறைந்து கொண்டோம். அச்சமயம் கடார இளவரசியைச் சிறைபிடித்து வந்த வீரர்கள் கோட்டையில் கலகம் தோன்றிவிட்டதையறிந்து, தற்கொலை செய்து கொண்ட இரத்தினாதேவியைக் கூட கவனிக்காமல், கங்காபுரியை நோக்கி ஓடிவிட்டனர். நாங்கள் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு அவளிடம் சென்றோம். அதற்குள் குழப்பம் பெரிதாகி, அதன் விளைவாய்ப் பெருங்கூச்சல் தோன்றிவிடவே, உயிர் போய்விட்ட அவளைப் பற்றிக் கவலைப்படாமல் ரகசிய வழி மூலம் அரண்மனையை அடைந்தோம். அங்கே சோழர் படை இரு பிரிவுகளாகப் பிரிந்து வீரசோழ இளங்கோ வேளானின் ஆட்கள் எதிர்ப்பட்டவர்களையெல்லாம் மூர்க்கத்தனமாகக் கொலை செய்து கொண்டிருந்தனர். பட்டத்தரசியாரையும் முதன்மந்திரியையும் காப்பாற்ற வேண்டுமென்று முடிவு செய்து நானும் தன்மபாலரும் ஒளிந்து ஒளிந்து அரசியின் மாளிகை நோக்கிச் செல்ல ஆரம்பித்தோம். ஆங்காங்கே மாளிகைகள் தீயில் எரிந்து கொண்டிருந்தன. பலமிகுந்தவன்,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பலமற்றவனைத் தாக்கிக் கொள்ளையடிக்கத் துவங்கிவிட்டான். கேட்பார் யாருமின்றி கத்தியை ஏந்தியவன் சக்கரவர்த்தி என்ற நிலையில் அங்கே வன்முறை பரவிக் கொண்டிருந்தது. மதுராந்தகன் கொலையை வைத்து வலங்கை வகுப்பார், இடங்கைப் பிரிவினர் மீது குற்றம் சாட்டியபடி அவர்களையழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். வீரசோழ இளங்கோ வேளானும், அவனது ஆட்களும் அதற்கு ஆதரவு தர, இதனால் வெறுப்புற்ற இடங்கைப் பிரிவினர் வலங்கை வகுப்பாருடன் வாள் ஏந்திப் போர் புரியலாயினர். அதனால் கோட்டையில் பெருங்குழப்பம் தோன்றியது. முதன்மந்திரியையும், பட்டத்தரசியையும் காப்பாற்ற வேண்டும் என்ற முனைப்பிலிருந்த நாங்கள் இருவரும், பரவிவிட்ட கலகத்தைப் பற்றிக் கவலைப்படாமல், அரண்மனையினுள் மறைந்து சென்று இருவரையும் காப்பாற்றி, அவர்களை இருட்டு அறையில் பாதுகாப்பாகத் தங்கச் செய்தோம். சிறைப்பட்ட திருவரங்கனை விடுவிக்கவும், மதுராந்தகியையும், தன்மபாலரின் மகளான மலர்விழியைக் காப்பாற்றவும் நாங்கள் மீண்டும் மாளிகைக்குள் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போதுதான் சோழச் சக்கரவர்த்தி கொலை செய்யப்படுவதைக் கண்களால் பார்க்க நேரிட்டது” என்று நிறுத்தினான் அம்மையப்பன்.

“எப்படிக் கொல்லப்பட்டார்? கொன்றது யார்?” - பதட்டத்துடன் வினவினான் இராசேந்திரன்.

துயர மிகுதியால் சற்று நேரம் மௌனமாயிருந்த அவன் தொண்டையைக் கனைத்துவிட்டுப் பேசலானான்:

“சோழச் சக்கரவர்த்தி பாதாளச் சிறைக்குப் போகும் வழியில் நின்று கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் இளங்கோ வேளானும், இருக்குவேளுமிருந்தனர். நான்கு புறமும் வீரர்களை ஏவியபடி கலகத்தை அடிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, எங்கிருந்தோ பறந்து வந்த குறுங்கத்தி அவரின் உயிரைக் குடித்துவிட்டது. எறிந்தவர் யார் என்று கவனிப்பதற்குள், தீப்பந்தங்களுடன் அங்கே கலகக்காரர்கள் கூடிவிட்டனர். இருக்குவேள் தப்பித்தால் போதும் என்று அங்கிருந்து ஓடிவிட்டார். வீரசோழ இளங்கோ வேளான் பக்கத்திலிருந்த வீரர்களுடன் அவர்களை எதிர்க்க முயன்றான். ஆனால் கலகக்காரர்களின் கை ஓங்கும் போல் தெரியவே, மறைந்திருந்த நாங்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு கலகக்காரர்களை விரட்டியடித்தோம். இதற்குள் இளங்கோ வேளானை ஆதரிக்கும் வீரர்கள் நிறைய பேர் அங்கே வந்து சேரவே, “சக்கரவர்த்தியைக் கொன்றது அவர்கள்தான். கைது செய்யுங்கள்!”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என்ற அவன் எங்களைச் சுட்டி வீரர்களுக்கு உத்தரவிட்டான். இது என்ன? பாம்பிற்குப் பால்வார்த்த கதையாய்விட்டதே! என எண்ணிய நாங்கள் இருவரும் கைது செய்ய வந்த வீரர்களைத் தாக்கிக் கீழே தள்ளிவிட்டு, இமைக்கும் நேரத்தில் அங்கிருந்து மறைந்துவிட்டோம். எங்களைப் பின் தொடர்ந்த வீரர்கள் அரண்மனைச் செல்வத்தைக் கொள்ளையடிக்க நுழைந்த கும்பலை விரட்ட வேண்டிய கட்டாயத்திற்குள்ளானதால், அவர்களிடமிருந்து தப்பிப்பது எங்களுக்குக் கடினமான காரியமாகப்படவில்லை. மதுராந்தகியையும், மலர்விழியையும் அழைத்துக் கொண்டு மீண்டும் நாங்கள் இருட்டு அறையை அடைந்தோம். முதன்மந்திரியிடம் அரசர் கொலையுண்டதைப் பற்றித் தெரிவித்தோம். துயரத்துடன் பட்டத்தரசியாரிடம் இதைக் கூறினார். அவரும் வேதனை தாளாமல் விம்மி அழலானார். இங்கேயிருப்பது நல்லதல்ல என்று உணர்ந்த பிரமாதிராசர், அங்கேயிருந்து கங்கைகொண்ட சோழேச்சுரத்திற்குச் செல்லும் சுரங்கவழி மூலம், கோயில் மூலஸ்தானத்தையடைந்து, அதற்குள் சில நாட்கள் மறைந்திருப்பதே சாலச் சிறந்ததென முடிவு செய்து, அவ்விதமே அனைவருடன் சென்றுவிட்டார். இன்னும் ஓரிரு தினங்களில் கங்கைகொண்ட சோழபுரம் நாசமாகிவிடும் என்று உணர்ந்து முதன்மந்திரி இந்த இக்கட்டான சூழ்நிலையில் தங்களை அழைத்து வர என்னை அனுப்பினார்" என்று நிறுத்தினான்.

அதைக் கேட்ட இராசேந்திரன் யோசித்தபடியிருக்க, அம்மையப்பன் மிகவும் பணிவுடனே, "அங்கே சோழநாடு அரசரின்றி அல்லலில் ஆழ்ந்திருக்கிறது. தாங்கள் என்னுடன் கட்டாயமாய்ப் புறப்பட வேண்டும்!" என்றான்.

காரனை விழுப்பரையனிடம் நகரில் மீண்டும் கலகமூளாமல் விழிப்புடன் செயலாற்றும்படிப் பணித்து, சிறிய தன்மபாலருடன் கங்கைகொண்ட சோழபுரத்திற்குப் புறப்பட ஆயத்தமானான். அச்செய்தி பழையாறையெங்கும் பரவிவிட்டது.

"நாங்களும் உங்களோடு துணைக்கு வருகின்றோம்!" என்று மக்கள் கடலென அவன் பின்னே திரண்டு நின்றனர். அத்துடன், "கங்கைகொண்ட சோழபுரத்தைக் காப்போம். பட்டத்தரசியார் வாழ்க! மன்னரைக் கொன்ற வஞ்சகர்களை ஒழிப்போம்!" என்று முழக்கமிடத் தொடங்கினர்.

இராசேந்திரனும், சிறிய தன்மபாலரும், அம்மையப்பனும் முன்னே புரவியில் செல்ல, பின்னால் விசுவாசமிக்க அரச வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர். அதற்கு அப்பால் சமுத்திரம் போன்று திரண்டிருந்த மக்கள் நடக்கலாயினர். வழியெங்கும் போர் வீரர்களும், மக்களும் அந்த ஊர்வலத்துடன் சேர்ந்து கொண்டனர். பெரிய



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

படைபோலிருந்த அது, கங்கைகொண்ட சோழபுரக் கோட்டையை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தது.

இச்செய்தி கோட்டைக்குள் கலகத்தை அடக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த வீரசோழ இளங்கோ வேளாளின் செவியில் விழுந்தது. இனிமேல் அங்கேயிருப்பது வீண் என்று உணர்ந்த அவன் தன்னை ஆதரிக்கும் வீரர்களுடன் கங்கைகொண்ட சோழபுரக் கோட்டையைவிட்டு இரகசியமாய் வெளியேறினான்.

“எல்லாம் முடிந்துவிட்டது. இறந்துவிட்ட அரசர் உடலையும் அடக்கம் செய்துவிட்டேன் இனி எனக்கு...” என்று நிறுத்திய அவன் “குந்தள நாடுதான்!” என அழுத்திக் கூறினான் தன்னுடைய வீரர்களிடம். ஏறக்குறைய ஐம்பது புரவிகள் அந்த நாட்டை நோக்கி மிக வேகமாய்ச் செல்லத் தொடங்கின.

பகற்பொழுதிருக்கும் போது இராசேந்திரன் தலைமையில் மக்கள் கங்கைகொண்ட சோழபுரத்தை அடைந்துவிட்டனர். உள்ளிருந்த கலகக்காரர்கள் அதைக் கண்டு திகைத்து என்ன செய்வதென ஆலோசித்து, இறுதியில் இராசேந்திரனிடம் சரணடைய முடிவு செய்தனர்.

வெள்ளைக் கொடியையேந்தியபடி சுமார் ஐம்பது பேர் கோட்டையின் கதவுகளைத் திறக்க, ஆத்திரத்துடனிருந்த மக்கள் அவர்கள் மீது பாய்ந்து துவம்சம் செய்துவிட்டனர்.

ஆங்காங்கே ஒளிந்து கொண்டு அழிவு வேலையிலீடுபட்டுக் கொண்டிருந்த கலகக்காரர்களைச் சுற்றி வளைத்துச் சிறை செய்யும்படி சிறிய தன்மபாலருக்கு உத்தரவிட்டான் இராசேந்திரன். அவர் தன்னுடன் ஐம்பது வீரர்களை அழைத்துக் கொண்டு, ஒளிந்து கொண்டிருந்த கலகக்காரர்களைத் தேடிப் பிடித்து சிறை செய்யலானார்.

இராசேந்திரன் கோட்டைக்குள் நுழைந்துவிட்டதையறிந்த மக்கள், இனி தங்களுக்குப் பயமில்லை என்ற எண்ணத்துடன், இல்லங்களிலிருந்து வெளியே வந்து அவனை வாழ்த்தத் தொடங்கினர்.

இராசேந்திரனைக் கங்கைகொண்ட சோழேச்சுரத்திற்குள் அழைத்துச் சென்ற அம்மையப்பன், அவனைக் கர்ப்பக்கிரகத்தின் முன் நிறுத்திவிட்டு உள்ளே சென்றான்.

இதற்குள் அவன் வந்துவிட்ட செய்தியும் கட்டுமீறிப் போயிருந்த கலகம் அடங்கும் நிலைக்கு வந்துவிட்டதையும் உணர்ந்த முதன்மந்திரி பட்டத்தரசியிடம் “இராசேந்திரர் வந்துவிட்டார்!” என்றார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இராசேந்திரர் என்று ஏன் பெயரிட்டு அழைகின்றீர்? ‘சோழச் சக்கரவர்த்தி’ என்று கூறுங்கள்!” என்றார் அழுத்தமுடன்.

முதன்மந்திரியின் முகத்தில் மலர்ச்சி தோன்றியது. சோழச் சக்கரவர்த்தியாகப் போகும் அவரை வரவேற்க என்ன செய்வதென சுற்றும் முற்றும் பார்த்தார். இலிங்கத்தின் மேலிருந்த மாலை அவர் கண்ணில்பட்டது. அதை எடுத்துக் கொண்டார். “ஈசன் கூட அங்கீகரித்துவிட்டார்!” என்று புன்முறுவலுடன் கூறியபடி கர்ப்பக்கிருகத்தின் முன்னால் நின்று கொண்டிருந்த இராசேந்திரனை நோக்கி வர, அவர் பின்னால் பெரிய தன்மபாலரும், பட்டத்தரசியும், மதுராந்தகியும், மலர்விழியுமிருந்தனர். மதுராந்தகி இராசேந்திரனை பார்க்க, அவன் மென்மையாய் ஒரு புன்முறுவலை அவளைப் பார்த்து வெளிப்படுத்தினான். அதனால் நாணமுற்ற அவள் முகம் சிவக்கத் தலைகுனிந்தாள்.

பிரமாதிராசர் தன் கையிலிருந்த மாலையை அவன் கழுதிலிட்டார். பின்னாலிருந்த பெரிய தன்மபாலர் “சோழச் சக்கரவர்த்தி!” என்று குரலெழுப்ப, வெளியே கூடியிருந்த மக்களும், வீரர்களும், “வாழ்க!” என முழக்கம் செய்தனர்.

அது கங்கைகொண்ட சோழேச்சுரமெங்கும் பரவி கங்காபுரியெங்கும் நிறைந்து, சோழ நாடெங்கும் எதிரொலித்தது.

முற்றும்

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in